தமிழர் வரலாறு

புலவர்.கா.கோவிந்தன்

கழக வெளியீடு

பி. டி. சீனிவாச அய்யங்காரின்

தமிழர் வரலாறு

தமிழாக்கமும் திறனாய்வும் :

புலவர் கா. கோவிந்தன், எம். ஏ.

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்
154, டி. டி. கே. சாலை, சென்னை - 600 018.

நூல் விவர அட்டவணை

நூலின் பெயர்	: தமிழர் வரலாறு
பொருள்	: வரலாறு
ஆசிரியர் பெயர்	: பி. டி. சீனிவாச அய்யங்கார்
தமிழாக்கம்	: புலவர் கா. கோவிந்தன்
வெளியீட்டு எண்	: 2047
பதிப்பாண்டு	: 2000
பதிப்பாளர்	: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 18
உரிமை	: கழகம்
மொழி	: தமிழ்
நூலின் அளவு	: கிரௌன்
தாள்	: 11.6 கிகி
கட்டமைப்பு	: அட்டைக்கட்டு
அச்செழுத்து	: 10 புள்ளி
மொத்தப் பக்கங்கள்	: 5 + 487 = 492
விலை	: ரூ. 120/-
கணிப்பொறி அச்சு	: திருவள்ளுவர் வரைகலையகம், சூளைமேடு நெடுஞ்சாலை, சென்னை - 94. ✆ 483 86 69
அச்சிட்டோர்	: அப்பர் அச்சகம், சென்னை - 600 108.

பதிப்புரை

மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இடையறாத வரலாற்றுச் சிறப்புடைய தமிழ் இனத்தின் வரலாற்றை முதன்முதலாக விரிவாக ஆங்கிலத்தில் எழுதிய வரலாற்று அறிஞர்களில் பேராசிரியர். பி. டி. சீனிவாச அய்யங்கார் அவர்களும் ஒருவர். தமிழ் இன வரலாற்றை, தமிழ் மொழியின் சிறப்பை, தமிழ் இலக்கியத்தின் பெருமையை, தமிழ்ப் பண்பாட்டின் மேன்மையை, தமிழரல்லாத பிற இந்தியக் குடிமக்களுக்கும் மேனாட்டாருக்கும் எடுத்துரைத்த பெருமை அவரைச்சாரும்.

தங்கத்தமிழ் இலக்கியமான சங்கத் தமிழ்நூல்கள் வெறும் பாட்டிலக்கியமே என்று பலர் எண்ணிவந்த சூழ்நிலையில், சங்க இலக்கியம், சங்கப் பாடல்கள், எடுத்துரைக்கும் தமிழ் இன வரலாற்றை விரிவாக அவர் எழுதினார். சென்ற நூற்றாண்டின் இறுதி வரை ஆங்கிலத்தில் மட்டுமே கிடைத்து வந்த வரலாற்றைத் தமிழில் மொழியாக்கம் செய்து, தமிழ் மக்களுக்கு முழுவதுமாக அறிமுகப்படுத்தியவர் பெரும் நூலாசிரியர், தமிழறிஞர் புலவர் கா. கோவிந்தன், எம். ஏ. ஆவர்.

தமிழ் வரலாறு என்னும் தலைப்பில் இரண்டு தொகுதிகளில் வெளிவந்த இந்நூல் மக்கள் எளிதில் வாங்கிப் படிக்கும் வகையில் **தமிழர் இலக்கியம், தமிழர் பண்பாடு, தமிழர் வரலாறு** என்று மூன்று நூல்களாகப் பிரிக்கப்பெற்று இப்போது வெளிவந்துள்ளது.

அய்யங்கார் மூலநூலை எழுதும் போது கிடைத்த வரலாற்றுச் சான்றுகளான கல்வெட்டுச் செய்திகள், பிற ஆய்வு நூல்கள் போன்றவற்றைவிடப் பிற்காலத்தில் அவை கூடுதலாகக் கிடைக்கலாயின. எனவே, அவற்றை

அடிப்படையாகக் கொண்டு மூல நூலை மொழியாக்கம் செய்தபோது, அதில் கண்ட சில செய்திகளைப் புலவர் அவர்கள் மறுத்தும் விளக்கியும் மூலநூலுக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

சங்கப் பாடல்களில் கிடைக்கும் செய்திகளைக் கொண்டு, அக்காலத்தில் தமிழகத்தை ஆண்ட சோழ, சேர, பாண்டிய மன்னர்களின் வரலாற்றை இந்நூலில் அய்யங்கார் ஆங்கிலத்தில் தந்ததைத் தமிழில் புலவர் தந்துள்ளார். சங்கப் பாடல்கள் பலவற்றை ஆசிரியர் மேற்கோளாகக் காட்டி அவற்றுக்குச் சரியான விளக்கமும் தந்துள்ளார்.

தமிழ் மக்களுக்குப் பயன்படும் வகையில் இந்நூல் வெளிவருகின்றது. தமிழன்பர்கள் வாங்கிப் படித்துப் பயன்பெறுவார்களாக.

- சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

அதிகாரம்		பக்கம்
1.	பண்டைக் காலத்தில் வட இந்தியத் தொடர்பு	1
2.	தொடக்க காலத்தில் வெளிநாட்டு வாணிகம்	21
3.	இராமனும் தென் இந்தியாவும்	32
4.	பாரதப் போர்	66
5.	வட இந்தியாவும் தென் இந்தியாவும்	79
6.	வெளி நாட்டு வாணிகம் (கி. பி. 1000 - 500)	96
7.	வடக்கும் தெற்கும்	104
8.	வெளி நாட்டு வாணிகம் (கி. பி. 600 - 700)	121
9.	கி. பி. முதல் ஐந்நூறு ஆண்டுகளில் வெளிநாட்டு வாணிகம்	140
10.	காஞ்சீபுரம் மாவட்டம்	167
11.	கரிகாலன்	212
12.	இளந்திரையன்	299
13.	கரிகாலனுக்குப் பிற்பட்ட சோழ அரசர்கள்	321
14.	பாண்டிய அரசர்கள்	370
15.	சேர அரசர்கள்	404
16.	பழைய அரச இனங்கள் ஒளிகுன்றல்	476

1. பண்டைக்காலத்தில் (ஏறத்தாழ, கி. மு. 3000-2000) வட இந்தியத் தொடர்பு

தென்னிந்தியா வெளி உலகோடு தொடர்பற்றது :- இது ஒரு பொய்க்கோட்பாடு

திருவாளர் வீ. ஏ., சிமித் அவர்கள், "நில இயல் நிலை மைகள், பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை, இந்திய வரலாற்றை, நன்கு வரையறுக்கப்பட்ட, மூன்று அரசியல் நிலப்பிரிவுகளாகப் பிரித்திருந்தன : 1) சிந்து கங்கை பாயும் பள்ளத்தாக்குகளை உள்ளடக்கிய வட இந்தியச் சமவெளிகள், 2) நர்மதா ஆற்றுக்குத் தெற்கும், கிருட்டிணா துங்கபத்திரை ஆறுகளுக்கு வடக்கிலும் உள்ள தென்னிந்திய மேட்டு நிலம். 3) அவ்விரு ஆறுகளுக்கு அப்பால், தமிழ்நாடுகள் பலவற்றை உள்ளடக்கிய தென்கோடி. பொதுவாக நில இயல் சார்ந்த இம்மூன்று பிரிவுகளும் ஒவ்வொன்றும், தனக்கே உரிய தெளிவான, நனிமிகச் சிக்கல்வாய்ந்த கதைகளைக் கொண்டுள்ளது. இம்மூன்று வரலாற்றுப் பிரிவுகளுக்கு மிடைய, நிலவிய தொடர்புபற்றிய குறிப்புகள், மிக அதிகமன்று" எனக் கூறுகிறார். இவ்வகையில், இவ்வாசிரியர், தம்முடைய இந்தியா பற்றிய ஆக்ஸ்போர்டு வரலாற்று நூலில் தக்கண பீடபூமி, மற்றும் தென்கோடி நிலப்பரப்புகளின் கதைகளுக்கு இரண்டாந்தர இடமே கொடுத்திருப்பதற்கு நியாயப் படுத்துகிறார்! இம் மனப்போக்கை விளக்க, "தென்னாடு நர்மதா, விந்தியம், சாத்புரா மலைகளாலும், மலைக்காடுகளாலும் பரந்த, அறவே உட்புகமாட்டாத் தடையரண்களால் மூடப்பட்டுக் கிடந்தது. வடக்கிற்கும்

தெற்கிற்கும் இடையே, இன்று காணலாகும், பிரிவினைக்கான மூலவேர், கடந்த காலத்தின், எந்த அளவுக்கும் அகழ்ந்து அடையலாகா ஆழத்திற்கும் சென்று ஊடுருவிக் கிடக்குமாதலின், வடக்கிற்கும்-தெற்கிற்கும் இடையே, அந்நனி மிகப் பழங்காலத்தில் நிலவியிருந்த, இயற்கை விளைவித்த, பிரிவினை குறித்த ஆய்வு மேற்கொள்ளுவது, பயன் அளிக்கக்கூடியதே" என்றெல்லாம், மேலும் மேலும் கூறிச் செல்கிறார். "இந்தோ-ஆரிய முன்னோடிகள், தென்னாட்டுக்கு ஊடுருவிச் சென்றது அமைதியான முறையில் ஆகும். அவர்கள் தொடர்பு கொண்ட முக்கியவழி, எக்காலத்தும், கிழக்குக் கடற்கரை வழியே" என்று மேலும் கூறுகிறார். போக்குவரத்து வழித்தடம் பற்றிய திருவாளர் சிமித் அவர்கள் கூறிய கருத்தின் பொருத்தம் குறித்து, திருவாளர். டி. ஆர். பந்தர்கார் அவர்கள் எதிர்வாதம் செய்துள்ளார். "பாவரீ" என்ற பிராமண ஆசிரியரின் மாணவர்கள் மேற்கொண்ட பயண நெறிகளை விளக்கிக்கூறும் "சுத்தனி பாதம்" என்ற நூலிலிருந்து, ஒரு கதையை, அவர், சான்றாக எடுத்தாளுகிறார். "தக்கண பாதத்தில், அசகா அஸ்மகா நாட்டில், கோதாவரிக் கரையில் உள்ள ஒரு சிற்றூரில், "பாவரீ", குடியேறி வாழ்ந்திருந்தார். அவர், தம்முடைய பதினாறு மாணவர் களைப் புத்தபெருமானுக்குத் தங்கள் வழிபாட்டினைச் செலுத்தி வருமாறு பணித்து அனுப்பிவைத்தார். அவர்கள் வடக்கில், "முளகா" நாட்டைச் சேர்ந்த (நைசாம் அரசின் ஆட்சி எல்லைக்கு உட்பட்டதான இன்றைய "பைதான்") படித்தானத்திற்கும், அடுத்து "மாகிஸ்மதீ" க்கும் (இது இந்தோர் நாட்டெல்லையில், நர்மதாக் கரையில் உள்ள "மாந்தாதம்" ஆக அடையாளம் காட்டப்படுகிறது) உச்சயினிக்கும், சாகேதத்திற்கும் அவற்றிற்கு அப்பாலும் பயணம் செய்தனர்.

இதிலிருந்து அம்மாணவர்கள், மாகிஸ் மதீயிலிருந்து, விந்திய மலையின் அப்பால் பகுதிக்கு, விதர்ப்ப நாட்டின் மூலமாகவே சென்றிருக்கவேண்டும் எனப், பொருத்தமுறக் கொள்கிறார் திரு. பந்தர்கார் அவர்கள். ஆரியர்கள்,

தென்னிந்தியாவுக்குச் சென்றபோது மேற்கொண்ட வழித்தடம் அவ்வாரியர்கள், விந்தியத்தைக் கடந்து, தென்னிந்தியாவுள் புகுவதற்குப் புறப்பட்ட இடமாம், நர்மதா ஆற்றங்கரையில் உள்ள மாகிஸ்மதீ அல்லது மாந்தாத நகரைத், தென்கோடி நகரமாகக் கொண்ட, அவந்தி நாட்டின் ஊடே அமைக்கப்பட்டிருந்ததாம் என அறுதியாக முடிவு செய்கிறார்.

திருவாளர் பந்தர்கார் அவர்கள், ஆரியர்கள், தென்னிந்தியாவுக்குச் சென்றிருக்கக்கூடிய பிறிதொரு வழித்தடமாம் கடல் வழியையும் குறிப்பிட்டுள்ளார். "அவர்கள், சிந்து வெளியிலிருந்து, கலங்களில் அல்லது கட்டுமரங்களில் கச்சத்திற்குச் சென்று, அங்கிருந்து கடற்கரை வழியாகச் சௌராட்டிரம் அல்லது கத்தியவாருக்குச் சென்று, கத்தியவாரிலிருந்து பகருகச்சம் அல்லது இன்றைய ப்ரோச்சுக்கும், பகரு கச்சசத்திலிருந்து பம்பாய் மாநிலம், தானா மாவட்டம், சுப்பாரகம் அல்லது கொபாராவுக்குச் சென்றிருப்பதாகத் தெரிகிறது.

மேற்கூறிய வகையால், விந்தியமலையும், தண்டகாரண்யக் காடும், வடஇந்தியாவுக்கும், தென் இந்தியாவுக்குமிடையில் கடக்கலாகாத் தடைகளாக இருந்தன என்ற கூற்று உண்மையற்றதாகிறது. வேத மந்திரங்களோடு இணைந்துள்ள சில உண்மைகளைக் கருத்தில் கொண்டால், வேதகாலத் தொடக்கத்திலிருந்தே, ஆரிய வர்த்தத்திற்கும், தக்கண பாகத்திற்கும் இடையில், பரந்த அளவிலான வாணிகப் போக்குவரத்து இருந்து வந்திருக்க வேண்டும். விந்தியத்திற்குத் தெற்கே உள்ள இந்தியாவைத் தனிமைப்படுத்தும், திருவாளர் சிமித் அவர்களின் கூற்று அடிப்படையற்றது என்ற முடிவினை நாம் கொள்ளலாம்.

வேதங்களில் தென்னிந்தியா :

சமஸ்கிருத இலக்கியங்களில், தென்னிந்தியா பற்றிய மிகப் பழைய குறிப்பு, இருக் வேதத்தைச் சேர்ந்த, (X61.8) "சரத்பதா ந தக்கணா பராவர்ன் நதாநுமெ ப்ர்ஸன்யொ ஜக்ர்பரே"

எனவரும் பொருள் விளங்காப் பாட்டில் இடம் பெற்றிருப்பதாகக் கூறப்படும் ஒன்று. திருவாளர் சாயனா அவர்கள், "அய்த்ரேய பிராமணாவில்" வரும் ஒரு புராணக் கதையைப் பின்பற்றி, "தக்கிணா" என்ற சொல்லுக்கு ஆடு மாடு போலும் கால்நடைகளாகக் கொடுக்கப்படும் ஒரு வகை வரி எனும் பொருள்கொண்டுள்ளார். ஆனால் ஐரோப்பிய அறிஞர்கள், அச்சொல்லைத் "தெற்கு" என மொழி பெயர்த்துள்ளனர். திருவாளர்கள் மேக்டொனெல், கெய்த் ஆகிய இருவரும் "தக்கணாபதா" (தென்னாடு நோக்கி வைத்த கால்), நாடு கடத்தப்பட்ட குற்றவாளிகளை (பராவர்ன்) நாடு கடத்தும் இடத்தைக் குறிக்கும் என்கின்றனர்.

அத்தொடருக்குத் திருவாளர்கள் மேக்டொனெல் அவர்களும் கெய்த் அவர்களும் அளிக்கும் பொருள் விளக்கம் சரியானதே. ஆரிய நாகரிகம் விந்தியத்துக்கு அப்பால் தெற்கில் நுழையாத, மிகப் பழைய வேதகாலத்தில், தக்கண பாதம், நாடு கடத்தப்பட்டவர்களின் இடமாகக் கருதப்பட்டது என்பது, விஸ்வாமித்திரர், மற்றும் அவர் மகன்களின் கதையால் உறுதி செய்யப்படுகிறது. இக் கதை அய்த்ரேய பிராமணத்தில் கூறப்பட்டுளது. ஆனால், அதனாலேயே அக்கதையில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள், அய்த்ரேய பிராமணா காலத்தைச் சேர்ந்தனவாகக் கொள்வதுகூடாது. அது, ஏறத்தாழ கி. மு. 2000 இல் வாழ்ந்திருந்த, காயத்திரி மந்திர ரிஷியாகிய, முதல் விசுவாமித்திரர், காலத்தைச் சேர்ந்த ஒரு பழங்கதை. இந்த விசுவாமித்திரர், அரிச்சந்திரன் மகன், ரோகிதாசுவின் வேண்டுகோளின்படி, நடைபெற்ற நரபலி வேள்வியில், பலியாகக் கொல்லப்பட இருந்த, தன் உடன் பிறந்தார் மகனாகிய சுனக்சேபனைப், பலியிடு வதிலிருந்து காப்பாற்றியபோது, கொலையிலிருந்து விடுபட்ட அவனைத் தன் மகனாகத் தத்து எடுத்துக்கொண்டு, அவனுக்குத் தேவராதன் எனப் பெயரும் சூட்டினார். விஸ்வாமித்திர ருக்குப் பிறந்த ஐம்பது மகன்களும் சுனக்சேபன் தங்கள் குடும்பத்தின் தலைவனாக உயர்த்தப்பட்டதை எதிர்த்தனர். சின அடக்கம் உடைமைக்காக எக்காலத்தும் பாராட்டப் படாதவராகிய விசுவாமித்திரர் "அவன்தான் வஹ் ப்ரஜா

பக்ஸ்ஸிட்" எனக் கூறிச் சபித்தார். இத் தொடர்க்குத் திரு. கெய்த் அவர்களால் "உங்கள் கால்வழியினர், நில மகளின் கடைகோடிப் பகுதிகளைக் குடியுரிமையாகக் கொள்வார் களாக" என்பது பொருளாகக் கொள்ளப்பட்டது. ஆனால், சாயனா அவர்கள், "அன்தான் பக்ஸிஸ்ட்" என்ற தொடரை, "சண்டாளாதி ரூபம் நீச ஜாதி விஸேஸம் பஜதாம்" என, அதாவது "ஆரியரல்லாத தஸ்யூக்கள் ஆவார்களாக" எனும் பொருள் உணர்த்துவதாகக் கொண்டார். அய்த்ரேய பிராமணா, "த எதென்ந்த் ஹ்ராஹ்ற புண்ட்ராஹ்ற ஸபராஹ்ற, புளிந்தா, மூதிபா, இத்யூதந்தியா பஹவோலவோ வைஸ்வரா மித்ரா தஸ்யூநாம் ப்ஹூயிஸ்ட் ஹா" அதாவது, "எல்லைக்கப்பால் வாழும் மக்கள் ஆந்திரர், புண்டரர், சபரர், புளிந்தர், மற்றும் மூதிபர் ஆகியோர் ஆவர். இந்த தஸ்யூக்களில் பலர், விசுவாமித்திரர் வழியில் வந்தவராவர்" என்பதையும் கூறுகிறது. ஆதலின், சாயனா அவர்களின் பொருள் விளக்கம் மிகவும் நல்ல பொருள் விளக்கமாம்.

புண்ணிய பூமியாம் ஆரிய வர்க்கத்தின் தென் எல்லையாக, விந்தியம் இருந்து வந்தமையாலும், ஆரிய வழிபாட்டுப் பயன்கள் பறிக்கப்பட்டவர்கள் கட்டாயமாக, விந்தியத்திற்குத் தெற்கேதான் செல்ல வேண்டும் ஆதலாலும், சாதி நீக்கம் செய்யப்பட்டவர்கள், தெற்கே சென்றனர். "வடக்கு தெற்கு மலைகள், அதாவது, இமயமும், விந்தியமும், ஒருவனை அழித்துவிடுவான் வேண்டி, தமக்குத்தாமே சுழன்று கொண்டிருந்தாலும் "பிராண் (நில உலகும் தனியொரு பொருளும்) மெய்ப் பொருளாம் உயிர் ஆற்றல் ஆகிய இரண்டுக்கும் உள்ள வேறுபாடுகளை உணர்ந்து கொண்ட வனை அவற்றால் அழிக்க இயலாது" எனக் கூறுகிறது கௌஸீதகீ உபநிஷத். ஆகவே, வேத மந்திரங்கள் இயற்றப் படுவது கைவிடப்பட்ட காலத்துக்கு மிகப் பிற்பட்ட காலத்திலும், விந்தியமலைகள், ஆரிய நாட்டைப், பிற உலகிற்கு மறைத்து வைத்திருப்பதாகவே கொள்ளப்பட்டது.

அறிவுடையோர், "இவ்விரு மலைகளுக்கிடையே உள்ள ஒருவகை, மான்இனக் கருப்பு ஆடு திரியும் நிலப்பரப்பை,

ஆரியவர்த்தம் (அதாவது அது ஒரு பண்டைய மரபு) என்றும் இதனின் வேறுபட்ட நிலப்பரப்பை இரு பிறப்பாளர் வாழ் தற்குமட்டுமே உரியதான மிலேச்சம் என்றும் அழைத்தனர். ("தயொர் எவாந்தரொ கிர்யொர் ஆர்யவிர்த்தம் விதுர் புத்ஹாஹ்ற கிர்ஷ்ணா ஸாரஸ்து சாரதி ம்ரிகொ யத்ர, ஸ்வப்ஹாவத்ஹா-எதானி த்விஜாதயொ தெஸானி"

இவ்வகையில், இப்போது நாம் பெற்றிருக்கும் மனுஸ்மிருதி இயற்றப்பட்ட காலத்திலும் (அது பிராமணர்கள், இந்தியா முழுமையும் வாழத் தொடங்கிய காலம்), தன் எல்லைக்குள் மட்டுமே ஆரியர்கள் வாழக்கூடிய தான, ஆரிய வர்த்தத்தின் எல்லை குறித்த பழங்கருத்து. அதன் பழமை காரணத்தால் அதிகாரம் வாய்ந்ததாகத் திரும்பத் திரும்பக் கூறப்பட்டு வந்துளது.

முத்துகள் :

வேதகாலத்தில் அலங்காரத்திற்காகப் பெரிய அளவில் பயன்படுத்தப்பட்ட பொருள், தென்கோடி விளைபெருளாம் முத்துக்குத் தென்னிந்தியாவையே வேண்டியிருந்தனர். ஆதலின், சமய காரணங்களுக்கு, முனிவர்கள் ஆரியர்களை ஆரிய வர்த்தத்திற்கு உள்ளாகவே வைத்திருந்த உண்மை நிலையிலுங்கூடப் பண்டைக் காலத்திலிருந்தே, ஆரியவர்த்தத் திற்கும், தக்கிண பாதத்திற்கும் இடையில், மிகப் பெரிய வாணிகப் போக்குவரத்து இருந்திருக்க வேண்டும்.

முத்துகள், வேதகாலத்தில் பெரு வழக்கில் பயன்படுத்தப் படுவது பற்றிக் குறிப்பிடும் சில மந்திரங்களிலிருந்து ஒரு சில பகுதிகள் இதோ:- "சவிதாவின் தேர், பன்னிற முத்துகளால் அணி செய்யப்பட்டது" ("அப்ஹீவிற்தம் க்ற்ஷனயிர் விஸ்வரூபம் ரதம்" (ரிக் வேதம் 1 ; 33.4.) "தெய்வத் தேர்களின் - அலங்காரம் முத்துகளால் அழகு செய்யப்பட்ட அரசுத் தேர்களின் அலங்காரம் போன்றது", அவற்றை ஈர்த்துச் சென்ற குதிரைகளும் முத்துகளால் - ("க்ஹ்ஷனெப் ஹிரஸ்வன்") அழகு செய்யப்பட்டன" (ரிக் வேதம் : 68 : 11), குதிரைகள்தாமும் "க்ற்ஷனதஹ்" (ரிக் வேதம் : 1.126:4)

"கிற்ஷனின்ஹ்" (ரிக்வேதம் : 18 : 23) அழகு செய்யப்பட்டன. கங்கைச்சமவெளியிலிருந்து, சிறிய அளவில் கொண்டுவரப் பட்ட தரம் குறைந்த முத்துகள், தேவையை மிக அருகியே நிறைவேற்ற, அதனால், முத்துகள் தென்னிந்தியாவிலிருந்து, வடக்கிற்குத் தூக்கிச்செல்ல வேண்டுமளவு, முத்தையும், அதன் தாய் முத்தையும் பயன்படுத்துவது மிகப் பெரிய அளவினதாக இருந்தது. தாய் முத்தினாலான தாயத்தை அணிந்து கொள்ளும்போது ஓதப்படுவதான, அதர்வ வேதத்தின், "சங்கு மணி ஆக்கம்" என்ற ஒரு முழு ஆக்கம், முத்துகளைப் பின்வருமாறு புகழ்கிறது, "இப் பொன்முத்துச் சிப்பி, காற்று மண்டலத்திலிருந்து மின்னலின் ஒளியிலிருந்து, பிறந்து, எங்களைக் காப்பாற்றுமாக" ("வாதாஜ்ஜாதொ அந்தரிக்ஸாத் வித்யுதொ ஜ்யொதிஸஸ்பரி ஸ நொ ஹிரண்யயா கங்ஹஹ்ஹ் கிர்ஷனஹ்ற பாத்வம்ஹஸஹ்ற" (அதர்வ வேதம் : 10 : 1) "நீ, தேர்மீது தெளிவாக, முனைப்பாகக் கிடக்கின்றாய்; அம்பறாத்தூணி மீது புத்தொளி காட்டித் திகழ்கின்றாய்" (ரதெ த்வமஸி தர்ஷத இஸுத்ஹவு ரொகனஸ் த்வம்" (அதர்வ வேதம் : 6 : 10 : 6) "மின்னலோடு கூடிய பர்ஜன்யத்திற்கு எதிராகக் கடல் முழங்கும்போது, அக்கடலிலிருந்து பிறக்கிறது, இப் பொன் துளி" (யத் சமுத்ரொ, அப் ஹ்யக்கரன்தத் பர்ஜன்யொ வித்யதா சஹ்ததொ ஹிரண்யயொ பிந்துஸ்ததெ. ஆர்ப்ஹொ அஜாவத" (அதர்வ வேதம் IX 30 : 5) சத்விம்ஸ பிராமண; (V : 6) முதலில் கூறிய சங்குமணி ஆக்கத்தைப் போலவே எடுத்துக் காட்டிய கடைசி மந்திரமும், கடலில் விழும் மழைத்துளிகளின் உருமாற்றத்தினாலேயே முத்துகள் பிறக்கின்றன என்ற நம்பிக்கையைக் குறிப்பாகச் சுட்டுகிறது எனத் திருவாளர் வெயிட் நெய் (Whit Ney) அவர்கள் குறிப்பிடுகிறார்கள். எல்லைகாண மாட்டாக் காலத்தி லிருந்தே, கடலடியில் கிடக்கும் முத்துச் சிப்பிகளை மூழ்கிக்கொண்டு வரும், தென்கோடித் தமிழகத்தில் கட்டிவிடப்பட்ட பாமர மக்களின், உயிரியல் சார்ந்த கருத்து அது, ஆடவர் பெண்டிர்களை மட்டுமல்லாமல், அவர்களு டைய தேர்கள், குதிரைகள், அம்பறாத்தூணிகள், மற்றும் பிற பொருட்களையும் அணிசெய்வதற்குத் தேவைப்பட்ட

பெருங்குவியலான முத்துகளைக் கொண்டு செல்வதற்கு ஏற்பவும், மக்களிடையே நிலவிய அதன் பிறப்புப் பற்றிய பழங்கருத்து ரிஷி நாடாம் வடநாட்டிற்கு, அப்பண்டத்தைத் தொடர்ந்து உடன் செல்வதற்கு ஏற்பவும், தேவையான மிகப்பெரிய போக்குவரத்து, வட இந்தியாவுக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையில் இருந்திருக்க வேண்டும் என்பதை, நாம் எளிதில் உணர்ந்து கொள்ளலாம்.

"க்ரட்னா" என்ற சொல்லின் பிறப்பியல், ஆராய்வதற்குரியது. அது மெலிந்து சிறுத்துப்போன எனும் பொருளுடையதான "க்ர்ஷ்" என்ற மூலத்திலிருந்து பிறந்ததாகத் தெரிகிறது. அது காற்றுக்கும், ஞாயிற்றுக்கும், ஞாயிற்று ஒளிக்கும் நீண்டகாலம் திறந்து போடப்படின், மற்ற நவரத்தினங்கள் போலல்லாமல், கெட்டுவிடும் காரணத்தால், அதற்கு, அப்பெயர் இடப்பட்டது போலும். இதுதான் அச்சொல்லின் சரியான பிறப்பியல் என்றால் "கிருஷ்ணா" என்ற பெயர் முத்துக்குப் பொருத்தமான கவிதைப் பெயராகும். அதன் பயனை நீண்டகாலம் உணர்ந்ததன் விளைவாக, அதற்கு, அப்பெயர் இடப்பட்டிருக்க வேண்டும். அதன் மற்றொரு சமஸ்கிருதப் பெயர் "முக்தா". இச்சொல் வேத இலக்கியங்களில் "விமுக்தா" என்ற வடிவில், ஒரு முறை இடம் பெற்றறுளது. ("யத்சமுத்ரொ அப்யக்ரன்தத் பர்ஜன்யொ வித்யுதா ஸஹ்ததொ ஹிரண்யயொ பின்துஸ்த தொகர்ப்ஹெர அஜாயத") (ரிக்வேதம் xix; 30 : 5 : சத்விம்ஸ பிராமணா v : 6). திருவாளர்கள் மெக்டொனெல், கெய்த் ஆகியோர் "அது, சிப்பியுள் மறைக்கப்படுகிறது" என விளக்கம் அளிக்கின்றனர். (வேதங்களின் அட்டவணை II ‖ 304). தம்முடைய சம்ஸ்கிருதச் சொற்களின் அகர முதல சொற்பொருள் பட்டியலில், திருவாளர் மோனியர் வில்லியம்ஸ் அவர்களால் "முக்தா" சிப்பியிலிருந்து "விடுவிக்கப்படுகிறது" எனும் பொருளுடையதாக்கப் படுகிறது. ஆனால், முத்து எனும் பொருள் உடையதான "முத்தம்" என்ற தமிழ்ச் சொல்லைக் கடனாகப்பெற்றுச் சமஸ்கிருத வடிவம் கொடுக்கப்பட்டதே, முக்தா என்ற இச்சொல் என்பதில் நான் உறுதியாக உள்ளேன்.

அணி செய்யத் துணைபுரியும் ஒரு பொருளாக மட்டுமே, முத்தைப் பார்த்தவரும், சிப்பிகளுள் விழும் மழைத்துளிகளே முத்துக்களாக மாறுகின்றன என்ற அடிப்படையில்லாத கதைகளைக் கேட்டவரும் ஆகிய மக்கள், வேதங்களில், முத்துகுறித்து எழுதி வைத்திருக்கும் குறிப்புகளைச் சிப்பியுள் கிடக்கும் முத்தை, அது பிறக்கும் நாட்டில் அறிந்த ஒரு புலவர் பாடிய பாட்டில், காணப்படும். "முதிர்வார் இப்பி முத்த வார்மணல் கதிர்விடும் மணி" - (புறம் : 53 : 1 - 2) என்ற பகுதியை (முதிர்ந்த நீண்ட சிப்பியில், விளையும் முத்துகள் போலும், அறலிட்டுக் கிடக்கும் மணல் மீது ஒளி வீசும் நவமணிகள் கிடக்கின்றன) ஒப்பிடுவது சுவையானது. புறம் : 377, "கடல் பயந்த கதிர் முத்தம்" குறித்துப் பேசுகிறது. பெரும்பாணாற்றுப் படை (335) "முத்தவார் மணல்" (முத்துகள் பரந்து கிடக்கு மணல்) குறித்துப் பேசுகிறது.

பொன்னும் வைரமும் :

முத்துகள் மட்டுமல்லாமல், வேறுபல தென்னிந்தியப் பொருட்களும், ஆரியவர்த்தத்தில், மிகவும் வேண்டப்பட்டன. அவை, வேறு பல பொருள்களோடு, பொன்னும், வைரமும் ஆம். வேத காலத்தில், அணிகள் செய்வதற்கும், நாணயங்கள் செய்வதற்கும் ஏராளமான பொன் பயன்படுத்தப்பட்டது. திருவாளர்கள், மெக்டொனெல், மற்றும் கெய்த் அவர்களின் வேத அட்டவணையில், பின் வருமாறு கூறப்பட்டுள்ளது: "வேதகால இந்தியர், பொன்னுக்கு நிர்ணயித்த விலையை மிகைப்படுத்துவது, எளிதில் முடியக்கூடியதன்று ...புரவலர் களால் வழங்கப்பட்ட பொற்களஞ்சியங்கள் (ஹிரண்யாநி) குறிப்பிடப்பட்டுள்ளன. ...கழுத்து அணிகளுக்காகவும், மார்புஅணிகளுக்காகவும் ("நிஷ்க") காதணிகளுக்காகவும், (கர்ண ஸோபன) மற்றும் குடிகலனாம் கிண்ணங்களுக் காகவும், பொன் பயன்படுத்தப்பட்டது. பொன்னின் தெளிவான எடையளவுகள் குறிப்பிடப் பட்டுள்ளமையால், பொன் நாணயச்செலாவணி, உறுதியாக அறியத் தலைப்பட்டிருக்கவேண்டும். அவ்வாறே "அஷ்டாப்ரூட்" என்ற ஓர் எடை, சமிதாக்களில் இடம் பெற்றுள்ளது; நூறு

"கிருஷ்ணலம்" எடை பொன் கொண்டதான. "சதமானம்" என்ற எடைச்சொல், அதே மூலத்தில் காணப்படுகிறது.

ரிஷிகள் காலத்தில், "ஹிரண்யபிண்டம்", "நிஸ்க்" என்ற, முறையே, முத்திரையிட்ட, முத்திரையிடாத, இரண்டு வகை உலோக நாணயங்கள் இருந்தன என்பதைத், திருவாளர், டி. ஆர். பண்டார்கர் அவர்கள், ஐயத்திற்கு இடமின்றி உறுதி செய்துள்ளார். ஆகவே, வட இந்தியர்களால், சிந்து நதியின் மணலைக் கழுவிப்பெற்ற பொன்தூள்கள், இக்காரியங் களுக்குப் போதுமானவை ஆகா. இவ்வகைப் பொன், அப்பொன் தூள்களின் வடிவளவிலிருந்து கொள்ளப்பட்ட, எறும்பு போன்றவை எனும் பொருள் உடையதான "பிபீலிகம்" என அழைக்கப்பட்டது. ஆகவே, வட இந்தியர்கள், அதைப் பொன் சுரங்கங்களிலிருந்தும் இறக்குமதி செய்ய வேண்டியதாயிற்று. நாம் அறிந்த வகையில், நமக்குத்தெரிந்த முக்கியமான பொன்னெடுக்கும் பழைய (சுரங்கங்கள்) இடங்கள், தென் இந்தியாவைச் சேர்ந்தனவே; ஆகவே, தென்னிந்தியப் பொன்னே, ஆரிய வார்த்தத்தில் பயன்பட்டது என்பது, இயல்பாக நிகழக்கூடியதே. தக்ஷிணாபதத்தில் பெருமளவில் கிடைத்த முத்தின் தாய் உட்பட, அனைத்து வகைச் சங்குகள், நவமணிகள், மற்றும் விலையுயர்ந்த மணிக்கற்கள், முத்து, பொன் போலும் பொருள்களினாலான வாணிகம், கி. மு. நான்காம் நூற்றாண்டில், தென்னிந்தியாவுக்கும், வட இந்தியாவுக்கும் இடையில், வளமாக நடைபெற்றிருந்தது என்ற உண்மை நிகழ்ச்சிக்குக் கௌடல்யரின் அர்த்தசாஸ்திரத்தில், அகச்சான்றுகள் உள்ளன.

மௌரிய காலத்துக்கு முந்திய காலத்து மக்கள் இப் பொருட்களை, உலகின் பிற பகுதிகளிலிருந்து முதன் முதலாகப் பெற்றிருக்க இயலாது; ஆகவே, இது வேதகாலத்து வாணிகத்தின் வளர்ச்சியும், தொடர்ச்சியுமேயல்லது, மௌரிய காலத்துத், திடுமெனத் தோன்றிவிட்ட வாணிக வளர்ச்சியா காது என்பதை, நாம் எளிதில் நம்பலாம்.

மற்றப் பண்டங்கள் :

அதர்வ வேதத்தில் அடிக்கடி குறிப்பிடப்படும் நறுமணத் தைலங்கள், மருந்துகளில், தென்னிந்தியப் பெயர் கொண்ட பண்டங்களும், தக்கிணாபதத்திலிருந்து சென்றனவே யாதல் வேண்டும். இவையல்லாமல் "லாகஷா" என்ற மரவகைப் பெயரும், "மயூரா" என்ற பறவையினப் பெயரும், தமிழ் மொழியிலிருந்து பெறப்பட்டனவாகவே நான் ஐயுறு கின்றேன். இவை போலும் சொல்லியல் ஊகங்கள் இல்லாமல், வடஇந்திய ஆரியர்களுக்கும், தென்னிந்திய தஸ்யூக்களுக்கும் இடையில், இருடிகள் காலத்தில், மிகப்பெரிய வாணிகத்தொடர்புகள் இருந்தன என்பதற்கும் எண்ணற்ற வேறு அகச்சான்றுகளும் உள்ளன. கையுடைய ஒரு விலங்கு என, யானை வேதங்களில், அடிக்கடி குறிப்பிடப்படுகிறது. விந்திய மலைப்பகுதி அல்லது அதற்கு அப்பாலும் தெற்கில் உள்ள பகுதிகளிலிருந்து, அவை பிடிக்கப்பட்டிருக்க வேண்டும். எனக்குத் தெரிந்தவரை, தந்தத்தில் செதுக்கு வேலை பற்றிய குறிப்பு, வேதங்களில் இல்லை. ஆனால், அலங்காரங்களில் ஒன்றாகப் "புதியதாகச் செலுத்திய கம்பத்தின் மீது உடையணியா இரு மகளிரின் மெல்லிய உருவங்கள் என்பது போலும்" சித்திரச்செதுக்கு வேலைப்பாடு குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த உருவங்கள், மரம் அல்லது பொன், அல்லது தந்தம் ஆகியவற்றால் செய்யப்பட்டனவாதல் வேண்டும். வடஇந்தியர்கள் தந்தச் செதுக்குக் கலையில் பயிற்சி பெறாதிருந்தால், அரசர்கள் கொண்டிருந்த, எண்ணற்ற யானைகளிலிருந்து பெறும் அவ்வளவு தந்தங்களையும் எவ்வாறு பயன்படுத்தினர் என்பதற்கு விடைகாண இயலாது போகும். தந்தச்செதுக்கு வேலை வேதகாலத்துக்கு ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தியதாகப் பழங்கற்காலத்தில் இருந்தது. நாகரிக வளர்ச்சி உற்றதும், அது, அழிந்து போயிருக்க இயலாது. பிற்காலத்தில், சிலவ நாக - ஜாதகக் கதைகளில் (72), தந்தத்தை, வேறுபட்ட வடிவங்களாகவும் உருவங்களாகவும் செய்வது, பெனாரஸ் நகர மக்களின் தொழிலாகக் கூறப்படுகிறது. இக்கதை, ஜாதகக்

கதைகளும் இடம் பெறுவதற்கு முற்பட்டு, (கி. மு. ஐந்து அல்லது ஆறாம் நூற்றாண்டில்) அத்தொழில், உண்மையில், புதிய தொழிலே அன்று. ஆகவே, அக்காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து வடஇந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மற்றொரு பொருள் தந்தம்.

பணியர் :

வேதவழிபாட்டுப் பாடல்களில் பல இடங்களில் குறிப்பிடப்படும் பணிகள் என்ற சொல், இவ்வணிகப் பண்டங்களை, ஆரியர்களுக்குக் கொண்டு சென்ற வணிகர்களாவர் எனப் பல இடங்களில் வாதிட்டுள்ளேன். இதில் திருவாளர்கள் கிரிப்த் (Griffth) மெக்டொனெல் (Macdonell) போன்ற ஐரோப்பிய ஆசிரியர்களால் தப்புவழி காட்டப்பட்டுத் தவறு செய்துவிட்டதாக அறிகிறேன். பணி எனும் அச்சொல் இடம் பெறும் மந்திரங்களை நுணுக்கமாக, விழிப்போடு, மறு ஆய்வு செய்தால், அவர்கள் வணிகர்களோ கார்மேகங்களைக் களவாடி, மழையினைத் தடுத்து விடுவதாகக் கூறப்படும் காற்றுப் பேய்களோ அல்லர்; மாறாக ஆரியர்களை எதிர்த்து வந்த, பல்வேறு தஸ்யு இனத்தவருள் ஒருவராவர் என்பதைக் கண்டுகொண்டேன். அவர்கள், வணிகரும் அல்லர்; பேயும் அல்லர்; குதிரைகளும், ஆனிரைகளுமாகக் கால்நடைச் செல்வங்களைக் குவித்து வைத்திருக்கும் உழவர்களாவர்.

அவர்களின் செல்வமாம் கால்நடைகள், மலைக்குகைகளில் வைக்கப்பட்டிருக்கும். அச்சொல், தீக்கொழுந்துகளைக் கக்கும் கொள்ளிவாய்ப் பேய்கள் எனப் பிழையாகக் கொள்ளப்பட்டது. ஆரியர், திராவிடர் ஆகிய இருவரிடையேயும், பலரும் அறிய இருந்த, பழைய பழக்கவழக்கங்களை அறியாத காரணத்தால் நேர்ந்த, தவறான பொருள்கோள் அது. மிகப் பழைய இந்தியப் பழக்கவழக்கங்கள் பற்றிய குறிப்புகளைக் கொண்டிருக்கும் தொல்காப்பியத்திலிருந்து, பகைவரின் ஆனிரைகளைக் கவர்ந்துகொள்வது, போர் தொடக்கத்திற்கான மிகப்பழைய முறையாகும்; அது வெட்சி எனப்படும்; போர்ப் பாடல்களில், வெட்சி ஏன் ஒழுக்கத்

திற்குரிய நிலமாக மலைநாட்டைக் கொண்டிருந்தது என அறிகிறோம்.

மலைக்குகைகளில் வைத்திருக்கும் கால்நடைச் செல்வத்தால், சிறந்த ஒரு பழங்குடியினராவர், பாணிகள் என்பவர். அவர்கள், ஆரியருள் ஒரு பிரிவினரின் பகைவ ராவர். அவ்விரு இனத்தவரும், ஒருவரோடொருவர், பழங் காலப் புகழ்வாய்ந்த முறையாம் ஆனிரை கவர்தல் மூலம் போர் மேற்கொண்டனர். அத்தகைய போர் ஒன்றில், ஐரோப்பியப் பேராசிரியர்கள் கருதுவதுபோலும், ஒரு நாட்டின் மீது படைகளை அணிவகுத்து எடுத்துச் செல்லும் போர் அல்லாத போர் ஒன்றில், தங்கள் துணைக்கு, அக்னி, சோமன் ஆகிய கடவுள்களை நம்பியிருக்கும் கடவுள் வழிபாட்டாளர்களாகிய அக்னி, சோமன் என்ற இனத்தவர், பாணிகளிடமிருந்து கால்நடைகளைக் கவர்ந்துகொண்டனர்.

இந்திரன் அல்லது அவனுக்காகப் பணியாற்றும் பிரகஸ்பதி, பாணிகளின் கால்நடைகளைக் கவர்ந்து கொண்டான்.

இவ்வகையில், பாணிகள் என்பார் தஸ்யூக்களில், கால்நடைச் செல்வத்தால் சிறந்த ஓர் இனத்தவராவர்; அவர்கள் வணிகர்களே அல்லர் என்பது காணக்கிடக்கிறது. வேதகாலத்தில் தென்னிந்திய வாணிகம், கடலைச் சார்ந்து வாழ்ந்து, மிகப் பழைய காலத்திலிருந்தே, பரதவர் என அழைக்கப்பட்டு வரும் வணிகர்கள் கையில் இருந்தது.

சேர நாட்டில் ஆரியர் :

"மூன்று இனத்தவர் ஆணை மீறினர்"--ப்ரஜா ஹதிஸ்ரொ அத்யாயம் கியூஹ்" என்ற ஒரு தொடர், ரிக் வேதத்தில் (7 : 101 : 14) வருகிறது. இத் தொடர்க்கு விளக்கம் அளிக்கும் நிலையில், "தைத்திரீய ஆரண்யகம்" ஆணை மீறிய இம் மூன்று இனத்தவர், வாயசகர், வங்காகடர், சேரபாதகர்வயா வைதா இமாஹ்ற ப்ரஜாஸ் திஸ்ரொ அத்யாயம் ஆயன் தானி இமானி வாயம்ஸி வங்காவகடாஸ் செரபாதாஹ்ற" என்கிறது.

கடைசியில் வரும் மூன்று சொற்களுக்கும், திருவாளர் சாயனா (Sayana) அவர்கள், பறவைகள், மரங்கள், மரவகைகள், பாம்புகள் என்றும், திருவாளர் ஆனந்ததீர்த்தர் (Anandateerthar) அவர்கள், பிசாசுகள், இராக்கதர்கள், அசுரர்கள் என்றும் பொருள் கொண்டனர். திருவாளர் கெய்த் அவர்கள் வாயஸர்கள் என்பார், இனச் சின்னமாகப் பறவைகளைக் கொண்டவர் (மத்ஸியர்களும், ஆஜர்களும், வேறு வேறு விலங்குகளைத் தங்கள் இனச் சின்னங்களாகக் கொண்டிருப்பது போல) என்றும், வங்காவகடர் என்பார் பெரும்பாலும் வங்கர், மகதர் என்றும், சேரபாதர் என்பார், சேரர் என்றும் பொருள் கொண்டுள்ளார். கூறப்பட்டிருக்கும் சூழ்நிலையை நோக்க, அவர்கள் ஆணை மீறியது என்பது, தீவழிபாட்டைப் புறக்கணித்தலாம்; திரு. கெய்த் அவர்களின் பொருள்விளக்கம், முறையானது என நான் நினைக்கின்றேன். நான், பின்னர் விளக்க இருப்பது போல், ஆரிய நாகரிகம், சேர நாட்டைப் பண்டை நாட்களில், பரசுராமன் குடியேற்றத் தொடக்க நாட்களில் சென்று அடைந்திருக்க வேண்டும்.

விந்தியத்திற்குத் தெற்கில் ஆரிய அரசர்கள் :

வேத காலத் தொடக்கத்தில், விந்தியத்திற்குத் தெற்கில் உள்ள இந்தியாவில், ஆரிய அரசர்களின் ஆட்சியின் பரப்பளவு குறித்து இனி ஆய்கின்றேன். புராணங்களிலிருந்து, அரிச்சந்திரனுடைய பாட்டனார் திரய்யாருணனின் சம காலத்தவன், கார்த்தவீரியார்ச்சுனன் என அறிகிறோம். அவன், ஆரிய வம்சம் தொடங்கி, ஏறத்தாழ முப்பது தலைமுறைகள் பின்னரும், இராமச்சந்திரனுக்கு ஏறத்தாழ முப்பது தலைமுறைகள் முன்னரும், அதாவது வேதகாலத்தின் முக்கூறுகளில், முதல்கூற்றின் கடைசியில் வாழ்ந்தவன்; அர்ச்சுனன் ஒரு மகாவீரன்; அவன், சாம்ராட் மற்றும் சக்ரவர்த்தி என்ற இருபெயர்களும் சூட்டி அழைக்கப் பட்டவன். அவன் அய்அய (Haihaya) குலத்து ஆட்சியை, நீண்டகாலம் வரை உச்ச நிலையில் வைத்திருந்தான். அததுடன் வட இந்தியா முழுவதையும் தன் ஆட்சியின் கீழ்க் கொண்டு வருதல் பொருட்டுத் தக்கண பாதத்தைச் சேர்ந்த,

பெரிய தஸ்யூ இனத்துக் கார்க்கோடக நாகரிடமிருந்து மாகிஸ்மதீயைக் கைப்பற்றி, அதைத் தன்னுடைய படைக்கலத் தலைநகராக்கினான்.

அவனால் வெற்றி கொள்ளப்பட்ட ஏனையோரில், இலங்கை அரசன் இராவணனும் ஒருவன். அவனை மாகிஸ்மதீயில் சிறைவைத்தான் என்றெல்லாம் அறிகிறோம்.

இந்த இராவணன், குறைந்தது ஐந்நூறு ஆண்டுகள் கழித்து வாழ்ந்த, இராமச்சந்திரனின் பகைவனாகிய இராவணன் அல்லன் என்பது உறுதி. ஆகவே, கார்த்த வீரியனால் சிறை செய்யப்பட்ட இராவணன், அப்பெயரே கொண்ட இராமர் காலத்து இராவணனுக்குப் பல ஆண்டுகாலம் முன்னர் வாழ்ந்திருந்த ஓர் அரசனாக வேண்டும்; அல்லது, ராவணா என்பது, இறைவன் என்ற தமிழ்ச் சொல்லைச் சமஸ்கிருதப்படுத்தியதன் வடிவாம் அல்லது வேறு இல்லை. ஆகவே, அது ஒரு தமிழரசன் எனும் பொருள் உணர்த்தும், இறைவன் என்பதன் திரிபாம் என்று டாக்டர் ஸ்டென் கொனொவ் (Dr. Sten Konow) அவர்களின் யூகம் உண்மை யாதல் வேண்டும்.

இந்த அர்ச்சுனன், அல்லது அவனுடைய மகன்கள், பார்கவ முனிவர் சமதக்கினியின் ஆசிரமத்தைச் சூறையாடி, அவரையும் அவமானம் செய்து, அவருடைய பசுங்கன்றைக் கொண்டு சென்றனர். சமதக்கினியின் மகன், வெல்கரிய பேராற்றல் வாய்ந்த இராமன், அவர்கள் மீது போர் தொடுத்து, அவர்களில் பலரையும், ஹய்ஹய குலத்தவரையும் அழித்தான். இராமனும், பார்கவர்களும் அவர்களோடு திருமண முறையால் உறவினர்களான, அயோத்தியா மற்றும் காண்ய குப்ஜ சிற்றரசர்களால் ஆதரிக்கப்பட்டனர்.

தசரதராமனிலிருந்து வேறுபடுத்திக் காட்ட, பிற்காலத்தில் பரசுராமன் என அழைக்கப்பட்ட சமதக்கினி ராமன், அர்ச்சுனனையும், பல ஹய்ஹய குலத்தவரையும் கொன்றான். போர் வெற்றிகளுக்குப் பிறகு பரசுராமன் தவிக்காகக் கடல் ஒரு சிறு நிலப்பகுதியை ஒதுக்கிக் கொடுத்துவிட்டுச் சில

மைல் தொலைவு பின்னடைந்துவிட்ட இடமாம், மேற்குக் கடற்கரைக்கண் ஓய்வு கொண்டான்.

கொங்கணத்திற்கும், மலபாருக்கும், ராமன், வருகை தந்தது, பெரும்பாலும், மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கும், கடலுக்கும் இடையில், நீண்ட ஒரு சிறு நிலப்பகுதியை நீர்மட்டத்திற்கு மேலே கொணர்ந்து விட்டு, கடல், சில மைல் பின்னடைந்து விட்ட காலத்தில் நிகழ்ந்திருக்க வேண்டும். ஆகவேதான், எண்ணற்ற புராணங்களில், கொங்கணம், மற்றும் மலபார்களின் மீட்சியோடு, பரசுராமன் பெயர் தொடர்புபடுத்தப்படுவது எழுந்துளது. வேத வேள்வி வழிபாட்டு முறையினைத் தமிழ்நாட்டுக்குக் கொண்டு சென்ற முதல் இருடி பெரும்பாலும் பரசுராமன் ஆவன்.

கான்யகுப்ஜத்தைச் சேர்ந்த விசுவாமித்ரர், பரசுராமனின் சம காலத்தவர் ஆவர். இவர், தம்முடைய ஐம்பது மகன்களை, விந்தியத்திற்கு அப்பால் நாடு கடத்திய கதை முன்னரே கூறப்பட்டது. அந்த விசுவாமித்ரர்கள், ஆரிய வழிபாட்டு முறையினைத் தக்கண பாதத்தில் பரப்பினர். விசுவாமித்ரரின் நாடுகடத்தப்பட்ட மக்கள் குறித்து, திரு. டி. ஆர். பண்டார்கார் அவர்கள், வியத்தகு செய்தி ஒன்றைக் கொடுத்துள்ளார். "அவர்கள், ஆரிய நாகரிகத்தை, ஆதிப் பழங்குடியினரிடையே பரப்புவதற்காக அப் பழங்குடியினரை மணந்தனர்; அவர்களோடு தங்கு தடையின்றிப் பழகினர்" என அவர் கூறுகிறார்.

முன் கோபியாகிய தந்தையால் சபிக்கப்பட்டபோது, விசுவாமித்ரர்கள் மணமாகாதவர்களாதலின், அவர்கள் தஸ்யூ மனைவிமார்களை மணந்தனர் என்பது ஒருவேளை உண்மையாக இருக்கவும் கூடும். ஆனால், தஸ்யூக்களை, நாகரிக மக்களாக மாற்றுவதற்காகவே மணந்தனர் என்பது, அறவே தேவையற்ற ஒரு கூற்று ஆகும். தஸ்யூக்கள் நாகரிக மற்ற பழங்குடியினர் அல்லர். வரலாற்று ஆசிரியர்கள் பலரும், புதிய கற்காலத்தைச் சேர்ந்த, கலை நுணுக்கம் வாய்ந்த கைவினைப் பொருட்களிலும், பண்டைய

தமிழ்ச்சொற்களிலும், எண்ணற்ற சான்றுகள் காணக்கூடிய, பிற்காலத் தமிழிலக்கியங்களில் எதிரொலிக்கக் கூடிய ஆரிய காலத்திற்கு முந்திய காலங்களில், இந்தியர்கள் அடைந்திருந்த மிகச் சிறந்த நாகரிகத்தை உணராமையாலும், தஸ்யூக்களில் நாகரிகம் பற்றிய வேதக்குறிப்புகளை மதியாமையாலும், நாகரிகமற்ற தஸ்யூக்கள் பற்றிய புராணக் கதைகளைக் கட்டி விட்டனர். ஆரியவர்த்தத்தின் மரபு வழிப் புனிதத் தன்மையும், பழம் புராணக் கதைகளில் நிறையக் கிடைக்கும், இராக்கதர்களின் கொடுமைகளை மிகைப்படுத்திக் கூறும் கதைகளும், இத்தவறான கூற்றை உறுதி செய்யத் துணைபுரிந்தன. தஸ்யூக்கள் பற்றி இருடிகள் பேசும்போது, அவர்கள், அவர்களின் பகைவர் குறித்தும் பேசுகின்றனர், என்பதை நினைவில் கொண்டு உண்மையைக் கடும்வெறுப்புக் காரணமாக மிகைப்படுத்திக்கூறும் கூற்றிலிருந்து, கழித்தே பார்க்க வேண்டும். வேத மந்திரங்களிலும், வீரகாவியங் களிலும், புராணக் கட்டுக்கதைகளிலும், தஸ்யூக்கள், ராக்ஷதர் களின் காட்டுமிராண்டித் தனம் பற்றிய பழிப்புரைகளுக்கு இடையிடையே, அவர்களுடைய உயர்ந்த நாகரிகம், கோட்டை நிகர் மாளிகைகள், பொன் அணிகள், செல்வ வளங்கள், மற்றும் பிற நலங்கள் பற்றிய, ஏராளமான பகுதி களும் உள்ளன என்பதையும் நாம் மறத்தல் கூடாது. ஆக, அத்தஸ்யூக்கள் நாடு கடத்தப்பட்ட ஆரியர்களாலும், அவ்வப்போது வந்துசேரும் ஒரு சில ஆரிய வந்தேறிகளாலும், நாகரிகம் பெறக் காத்திருந்த நாகரிகம் கல்லாப் பழங்குடி யினர் அல்லர்.

தக்கண நாடு, வடநாட்டிலிருந்து கட்டுறுதியாகப் பிரிவுண்டு தனிமைப்படுத்தப்பட்டிருந்தது; பழங்கால ஆரிய அரசர்கள் வேதமந்திர இருடிகள் வளமுற வாழ்ந்திருந்த காலத்தில், அதாவது, இக்ஷ்வாகு காலம்முதல், மகாபாரதப் போர்வரை (என்னுடைய, பழைய இலக்கியக் காலவரிசைப் படி, கி. மு. 3000 முதல் 1400 வரை) விந்தியத்திற்கு வடக்கில் உள்ள நாடுகள் வரையிலேயே, தங்கள் நாட்டாசைகளை அடக்கிக் கொண்டனர் என்ற தப்பான முடிவுகளை,

வரலாற்று ஆசிரியர்கள் கொள்ள, ஆரியவர்த்தத்தின் புதினத் தன்மையும், தப்புவழி காட்டிவிட்டது. திருவாளர் டி. ஆர். பந்தர்கார் அவர்கள் இந்தியாவின் வடபாதியிலிருந்து தென் இந்தியாவைப் பிரிக்கும் விந்தியமலையை, ஆரியர்கள், அய்த்ரேயபிராமணா காலத்தில்தான் முதன் முதலாகக் கடந்தனர்; உதாரணத்திற்கு :- அய்த்ரேய பிராமணத்தில், பீமா என்ற இளவரசன், வைதர்ப்பா என்ற பெயரில், வைதர்ப்ப நாட்டின் இளவரசனாக முடிசூட்டப்பட்டுள்ளான். இது ஆரியர்கள், விந்தியத்தின் அடிவாரத்திற்கு வந்து, விதர்ப்பம் அல்லது விந்திய மலைத் தொடர்க்கு மிக அணித்தாகத், தெற்கில் உள்ள, மேற்குப் பேராறில் குடியேறினர் எனக் கூறுகிறார். வரலாறு பற்றிய ஆய்வில் திறனாய்வு முறையினைத் தவறாகப் பயன்படுத்துவதற்கான, ஒரு முன் மாதிரி, இது.

பீம வைதர்ப்ப என்ற பெயரை, அய்த்ரேய பிராமணா குறிப்பிட, இருக்குவேத மந்திரங்கள் குறிப்பிடாமையால், ஆரிய அரசர், அப்போது தான் விந்தியத்தைக் கடந்துள்ளனர்! அய்த்ரேய பிராமணா இயற்றப்படுவதற்கு ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், பீமா வாழ்ந்திருக்க வேண்டும்; ஆனால், அந்நூல் அவனைக் குறிப்பிடும் இப்போது தான், அவன் விந்தியத்தைக் கடந்துள்ளான்! இட்சுவாகுவும், புரூவர்களும் முறையே, சூரிய, சந்திர அரச குலங்களைக் கண்டுபிடித்த காலம்தொட்டு, தொண்ணூறு முதல், நூறு வரையான, அரசதலைமுறைகள் கழிந்து போகும் வரையான கால வெள்ளத்தில் மிதந்து வந்த, பழைய காதுவழிச் செய்திகளையெல்லாம் பதிவு செய்துளது, அய்த்ரேய பிராமணா; ஆகவே, அந்நூல்களில், ஒருவனைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருப்பதால், அவன், அந்நூலாசிரியர்களின் சமகாலத்தவன் என்பது பொருளாகிவிடாது. உண்மையில், விதர்ப்ப நாட்டு, பீமா அல்லது பீமரதன் என்பவன், இராமனுக்கு ஏறத்தாழ, பதினைந்து தலைமுறைகளுக்கும், மகாபாரத காலத்துப் பிரஹத்பாலனுக்கு நாற்பது தலைமுறைகளுக்கும் முற்பட்டவனான, அயோத்யா நாட்டு

அயுதாயுவின் சம காலத்தவன். அய்த்ரேயா மற்றும் பிற பிராமணாக்கள், மகாபாரதக் காலத்து வேதவியாசர், சமிதாக்களைத் தொகுத்ததன் மூலம், வேத மந்திரங்களுக்கு "முடிவுகட்டிவிட்ட காலத்திற்குச் சிறிது பிற்பட்ட காலத்தில் இயற்றப்பட்டனவாம். ஆக, பீமா, அய்த்ரேய பிராமணாக்களுக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு, முன்பே வாழ்ந்தவன்; அவனுக்குப் பத்துத் தலைமுறைகளுக்கு முன்னரே, விந்தியம் கடக்கப்பட்டு, விதர்ப்ப நாடு தோற்றுவிக்கப்பட்டுவிட்டது, ஜயாமகன் என்ற யாதவ குல இளவரசன் ஒருவன், அவனுடைய நாடுகடத்தப்பட்டு, நாகர்களும், பிற தஸ்யூக்களும் குடிவாழும், நர்மதாவின் மலைகள்செறிந்த, மேட்டுப் பகுதியில், தன் எதிர்கால வாழ்வைத் தெற்கு நோக்கித் தேடலாயினன்; அவன், அங்குக் கொள்ளையடித்து உண்ணும் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தான். அவன், அல்லது அவள் மகன், விதர்ப்பா என்பவன், தெற்கு நோக்கிச் சென்று, தபதி ஆற்றங்கரையில், தனக்கென ஒரு நாட்டைத் தோற்றுவித்துக் கொண்டான். அந்நாடும் அதன் தலைநகரும் அவன் பெயரால் விதர்ப்பம் என அழைக்கப்பட்டது. அவனுக்குப்பிறகு பலஆண்டு கழித்தே, பீமரதன் ஆட்சி மேற்கொண்டான்.

விந்தியப் பகுதியில், பண்டைக் காலத்தில் விதர்ப்பம் மட்டுமல்லாமல், வேறுபல ஆரிய நாடுகளும் நிறுவப் பட்டிருந்தன. விதர்ப்பம், அல்லாமல், தக்கண கோசலம், சேதி, தஸாரணம், நிடதம் ஆகியவைகள், விந்திய மலையடிவாரத்தில், வேதகாலத்து இடைப்பகுதியில் இருந்த ஆரியக் குடியிருப்புகளாம். சேதி நாட்டு ராஜா, கசு என்பான் ரிக்வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளான் சேதி, தஸாரணம், விதர்ப்பம், தெற்குக் கோசலம் மற்றும் பல நாட்டு அரசர்களைப் பற்றிய சுவையான விளக்கங்கள், மகாபாரத நளோபாக்கியானத்தில் கூறப்பட்டுள்ளன. புராணங்களில் சைதைய நாட்டு அரசர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர். முட்கல நாட்டு அரசன் மனைவி, இந்திரசேனை என்பாள், தன் கணவன், தஸ்யூக்களோடு நடத்திய போரில், அவன் தேரை ஓட்டினாள், அவள், தேரோட்டுவதில் புகழ் பெற்ற

நளனுடைய மகளாதலின், அவள், அது செய்ததில் வியப்பில்லை. (மகாபாரதம் : 3. 114 : 24) நளனுடைய நண்பன் ருதுபர்ணன், தக்கண கோசலத்து அரசனாவன், விதர்ப்பம், அதை ஒட்டியுள்ள நாடு. ஆகவே, தக்கண பாதத்தின் ஒரு பகுதி. இராமர் காலத்திற்கு வெகு காலத்திற்கு முன்பே, ஆரிய அரசர்களால் கைப்பற்றப்பட்டது. இக்கால அளவில், முந்திய அதிகாரத்தில் விளக்கிக் கூறியவாறு, தமிழ் இந்திய மக்கள். அவரவர்க்குரிய திணை நிலங்களில் வாழ்க்கையை வளர்த்துக் கொண்டிருந்தனர்; வடஇந்திய மக்களோடு வாணிகம் செய்து வந்தனர். ஆனால், ஆரிய வர்த்தத்தின் தீவழிபாட்டு நாகரிகம், இக்காலத்தில், விந்தியமலைக்கு அப்பாலும், மெல்ல, மெல்ல நுழையலாயிற்று என்றாலும், வடவர்களால், தஸ்யூ நாகரிகம் என அழைக்கப்பட்ட தமிழர் நாகரிகம், அவ்வாரிய வர்த்தத் தீவழிபாட்டினால் அடிமை கொள்ளப்படவில்லை.

♦ ♦ ♦

2. தொடக்க காலத்தில் வெளிநாட்டு வாணிகம்

தென் இந்தியாவும் சுமேரியாவும் :

நெய்தல் அல்லது கடல் சார்ந்த நிலத்தில், வாணிகம், தேவையை அடிப்படையாகக் கொண்டே தொடங்கப் பெற்றது என்பது, முதல் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டது. தமிழ்நாட்டின் பெரும்பகுதி கடலுக்கு அணித்தாக உளது. அக்கடற்கரை மாவட்டங்களில், குடிவாழ்வார், தொடக்க காலத்திலிருந்தே பரதவர், அல்லது கடலோடிகள் என அழைக்கப்பட்டனர். தென்னிந்தியக் கடற்கரையினரான பரதவர், பருவக்காற்றின் காலந்தவறாமையினைத் தொடக்கத்திலேயே கண்டு பிடித்திருப்பர். உண்மையில், பருவக்காற்றுக் காலந்தவறா இயற்கையின் இயல்பையும், அதிலிருந்து கடல் மேற்செலவு இயல்பாகிவிடும் உண்மையையும் புரிந்து கொள்ளாமல், மலையாள நாட்டில், ஓராண்டு காலம் வாழ்வதுகூட உண்மையில் இயலாது. பருவக் காற்றின் அனுகூலத்தைப் பயன்படுத்திக் கொள்ளாத போதும், மாலுமிகள், கரையோரமாகவே, ஆப்கனிஸ்தான் பர்ஷியக் கடற்கரை வரையும் செல்லக்கூடும். அண்மையில் உருவான ஒரு வரலாற்றுத் தத்துவப்படி, மெஸபடோமியப் பள்ளத்தாக்கில், பழைய சுமேரிய நாகரிகத்தைத் தோற்றுவித்ததாகக் கூறப்படும், அப்பள்ளத்தாக்கின் தமிழர் குடியேற்றத்திற்கு, நனி மிகப் பழைய காலத்தில், கடல்வழி, நில வழிகளில் நடைபெற்ற விரிவான பயணம் மட்டுமே வழி செய்திருக்க முடியும். திருவாளர் எச். ஆர். ஹால் என்ற வரலாற்றுப் பேராசிரியர் "சுமேரியர்களின் மொழி, செப்டிக், ஆரியம் மற்றும் பிற மொழிகளிலிருந்து வேறுபடுவது

போலவே, அவர்களின் உருவச்சிலை, மற்றும் படைப்பு ஓவியங்களில் அழுத்தமாகப் பதிக்கப் பெற்றிருக்கும், அவர்களின் இனச் சார்பு வாய்ந்த, மாதிரிப் படிவங்களும், அவர்களைச் சுற்றி வாழ்ந்திருந்த இனத்தவரின் மாதிரிப் படிவங்களிலிருந்து வேறுபடுகின்றன. ஐயத்திற்கு இடன் இன்றி, உறுதியாக மாதிரிப் படிவத்தில், அவை இந்திய இயல்புடையவே. இன்றைய சராசரி இந்தியன் ஒருவனுடைய முகஅமைப்பு ஒரு சிறிது ஐயத்திற்கும் இடமில்லாமல், முழுக்க முழுக்க ஆயிராமாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டவராய, அவனுடைய திராவிட முன்னோர்களின் முக அமைப்பேதான். திராவிடரை வெற்றிகொண்ட ஆரியர்களின் முகஅமைப்பு, இன்றைய கிரேக்கர் அல்லது இத்தாலியரிடையே உள்ளது போலவே, இன்றைய இந்தியர்களிடையேயும், நாகரிக வளர்ச்சிக்கு முற்பட்ட காலத்து முக அமைப்பின் இயல்பு போலவே, பண்டைய ஆரியருக்கு முந்தியதான முக அமைப்பு அழியாமல் அப்படியே உளது. பழைய சுமேரியரின் நினைவுச் சின்னங்களிலிருந்து நாம் மதிப்பிடுவது போலவே இந்தியாவின், இத்தகு திராவிட இனச் சார்பான உருவ அமைப்போடுதான், சுமேரியன், முழு ஒருமைப்பாட்டினைக் கொண்டுள்ளான். திராவிட மொழிகளை, இன்றும் வழங்கும் தென்னாட்டு இந்துவை, அவன் பெரிதும் ஒத்துள்ளான். நிலவழியாக, ஒருவேளை, கடல் வழியாகவும், பர்ஷியாவின் ஊடே, அந்த இரண்டு ஆறுகளும் ஓடும் பள்ளத்தாக்கிற்குச் சென்ற இந்தியப் பழங்குடியைச் சேர்ந்தவர்தாம், சுமேரியர் என்பது, எவ்வகையிலும், நம்பக்கூடாத ஒன்று அன்று. (இவ்வாக்கியத்தில் வரும் 'நிலம்' 'கடல்' என்ற சொற்கள் குறித்த அடிக்குறிப்பில், அவர் 'பலுஜிஸ்தானத்தில், பிராஹுகி என்ற திராவிட இனமக்களை இன்று நாம் பெற்றுள்ளோம். திராவிட இனத்தவர் போன்றவர், தென் பர்ஷியாவில் காணப்படுகின்றனர். பாபிலோனியாவையும் இந்தியாவையும் இணைக்கும் இணைப்பாகச் செயல்பட்ட, பழைய பர்ஷியாவின், ஆரியரல்லாத மக்கள் (கிரேக்க மக்கள் இனத்தைச் சேர்ந்த அனரியகோயி), அதே இனத்தைச்

போலவே, அவர்களின் உருவச்சிலை, மற்றும் படைப்பு ஓவியங்களில் அழுத்தமாகப் பதிக்கப் பெற்றிருக்கும், அவர்களின் இனச் சார்பு வாய்ந்த, மாதிரிப் படிவங்களும், அவர்களைச் சுற்றி வாழ்ந்திருந்த இனத்தவரின் மாதிரிப் படிவங்களிலிருந்து வேறுபடுகின்றன. ஐயத்திற்கு இடன் இன்றி, உறுதியாக மாதிரிப் படிவத்தில், அவை இந்திய இயல்புடையவே. இன்றைய சராசரி இந்தியன் ஒருவனுடைய முகஅமைப்பு ஒரு சிறிது ஐயத்திற்கும் இடமில்லாமல், முழுக்க முழுக்க ஆயிராமாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டவராய, அவனுடைய திராவிட முன்னோர்களின் முக அமைப்பேதான். திராவிடரை வெற்றிகொண்ட ஆரியர்களின் முகஅமைப்பு, இன்றைய கிரேக்கர் அல்லது இத்தாலியரிடையே உள்ளது போலவே, இன்றைய இந்தியர்களிடையேயும், நாகரிக வளர்ச்சிக்கு முற்பட்ட காலத்து முக அமைப்பின் இயல்பு போலவே, பண்டைய ஆரியருக்கு முந்தியதான முக அமைப்பு அழியாமல் அப்படியே உளது. பழைய சுமேரியரின் நினைவுச் சின்னங்களிலிருந்து நாம் மதிப்பிடுவது போலவே இந்தியாவின், இத்தகு திராவிட இனச் சார்பான உருவ அமைப்போடுதான், சுமேரியன், முழு ஒருமைப்பாட்டினைக் கொண்டுள்ளான். திராவிட மொழிகளை, இன்றும் வழங்கும் தென்னாட்டு இந்துவை, அவன் பெரிதும் ஒத்துள்ளான். நிலவழியாக, ஒருவேளை, கடல் வழியாகவும், பர்ஷியாவின் ஊடே, அந்த இரண்டு ஆறுகளும் ஓடும் பள்ளத்தாக்கிற்குச் சென்ற இந்தியப் பழங்குடியைச் சேர்ந்தவர்தாம், சுமேரியர் என்பது, எவ்வகையிலும், நம்பக்கூடாத ஒன்று அன்று. (இவ்வாக்கியத்தில் வரும் 'நிலம்' 'கடல்' என்ற சொற்கள் குறித்த அடிக்குறிப்பில், அவர் 'பலுஜிஸ்தானத்தில், பிராஹுகி என்ற திராவிட இனமக்களை இன்று நாம் பெற்றுள்ளோம். திராவிட இனத்தவர் போன்றவர், தென் பர்ஷியாவில் காணப்படுகின்றனர். பாபிலோனியாவையும் இந்தியாவையும் இணைக்கும் இணைப்பாகச் செயல்பட்ட, பழைய பர்ஷியாவின், ஆரியரல்லாத மக்கள் (கிரேக்க மக்கள் இனத்தைச் சேர்ந்த அனரியகோயி), அதே இனத்தைச்

சேர்ந்தவர்தாம் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை', 'திருவாளர் பெரோசுஸ் அவர்களால் எடுத்துக்காட்டப் பெற்ற மனித மீனாகிய "கேனெஸ்" பற்றிய பழங்கதை, கடலுக்கு அப்பாற்பட்ட, நாகரிகம் மிக்க ஒரு நாட்டோடு கடல்வழித் தொடர்பு இருந்தது பற்றி வாதிடுகிறது. கேனெஸ், நாகரிகக் கலையைத் தன் உடன் கொண்டு, பர்ஷியன் வளைகுடாவை நீந்திக் கடந்து, நனி மிகப் பழைய சுமேரிய நகரங்களை (எரிடு நகரும், பிற நகரும்) அடைந்தான் என்று கூறியுள்ளார். இந்தியாவாம், அவர்கள் தாயகத்தில் தான், (அது, சிந்துநதிப் பள்ளத்தாக்காதல் கூடும்), அவர்கள் நாகரிகம் வளர்ச்சி பெற்றதாக நாம் கூறுகிறோம். அவர்களின் எழுத்துக்கலை அங்குதான் முதன்முதலில் கண்டுபிடிக்கப் பட்டு, முழுக்க முழுக்க, படிவவடிவாம் நிலையிலிருந்து எளிமையும், சுருங்கிய வடிவும், உடையதாக வளர்ந்திருக்கக் கூடும். அது, பாபிலோனியாவில், பிற்காலத்தில் மென்மையான களிமண்மீது, நாற்சதுர வடிவிலான முனையினையுடைய எழுத்தாணிகொண்டு எழுதப்பட்டதால், தனிச்சிறப்பு வாய்ந்த ஆப்பு வடிவின் தோற்றத்தைக் கொண்டுவிட்டது. வழியில் தங்கள் நாகரிகத்தை "எலம்" (Elam) எனும் இடத்திலும் விட்டுச் சென்றனர். இதுவே, சுமேரிய நாகரிகத் தோற்றத்தின் நம்பத்தக்க தத்துவமாகத் தெரிகிறது. இன்றைய எழுத்தாளர்களால், உறுதிப்படுத்த, போதிய நேரான அகச்சான்று இல்லாத, ஆனால் நிகழக்கூடியதாகத் தெரியும் ஒரு தத்துவமாகவே அளிக்கப்படுகிறது என்பது தெளிவாகப் புரிகிறது" என்று கூறுகிறார்.

மொகஞ்சோ-தரோ :

திருவாளர் ஆல்ஸ் அவர்களின் நூல் வெளிவந்த பன்னிரண்டு ஆண்டுகளுக்குள், அரப்பா, மொகஞ்சோ-தரோ அகழாய்வின் பயனாக அவர் தத்துவத்தை அரண் செய்வதற்கான நேரிடை அகச்சான்று" - (Direct Evidence to back) தரப்பட்டு, அவர் கருத்துப்படி, எது "நடக்கக் கூடியதாகக்" கருதப்பட்டதோ, அது "நடந்ததாகவே" ஆகிவிட்டது. அவர் கூறிவந்த கையெழுத்துப் படிவங்களுக்

கான மாதிரிப் படிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. சிந்துவெளிப் பழம்பெரும் நாகரிகத்தை விளக்க வல்ல நினைவுச் சின்னப் பழம் பொருள்கள், போதிய அளவு அகழ்ந்து எடுக்கப்பட்டன. "வெட்டுக் குழிகள் செம் பொடுகள் இணைந்த கட்டுமான காலத்தைச் சேர்ந்த, இடையீடின்றித் தொடர்ந்த பல அடுக்குக் கட்டிடங்கள் இருந்ததை வெளிப்படுத்துகின்றன". கரடு முரடான திருந்தா வேலைப்பாடும், தொன்மையை வெளிப்படுத்தும் தோற்றமும் வாய்ந்த சில உருவங்கள் மொகஞ்சோ-தரோவில் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால், "எடுப்பான மூக்கு, கண் களுக்குக் களிமண்ணாலான தட்டிய சிறுகுண்டுகளைப் பொருத்துவது ஆகிய இவை, மெஸபடோமியாவில் மிகப் பழைய காலத்தைச் சேர்ந்த இவைபோலும் உருவங்களின் தனிச்சிறப்பு ஆகும்" சிந்துவெளிப் பழம் நாகரிகத்தின் வடிகாலே, சுமேரிய நாகரீகம் என்பதற்கான தெளிவான அகச் சான்றுகளாம். இக்கண்டுபிடிப்புகளே அல்லாமல் இவை போலும் பல கண்டுபிடிப்புகள் மொகஞ்சோதரோவில் கண்டுபிடிக்கப்பட்ட எழுத்துகள் முடிவாகப்படிக்கப்பட்டுப் பொருளுணரப்பட்டபோதே கிடைக்கும்.

பாபிலோனியாவுடன் பண்டை வாணிகம் :

சிந்துவெளிப் பள்ளத்தாக்கிற்கும், சுமேரியாவுக்கும் இடையில் போக்குவரவுத் தொடர்பு இருந்திருக்குமேயானால், அதைவிடப் பெரிய அளவிலான போக்குவரத்துத் தொடர்பு இவ்விரு நாடுகளுக்கும், தென் இந்தியாவுக்கும் இடையில் இருந்திருக்க வேண்டும். இதற்கான அகச்சான்றுகள் திருவாளர் சாய்ஸி அவர்கள் குறிப்பிடும் இரு உண்மைகளில் காணப்படுகின்றன. ஒன்று, கி. மு. 4000 ஆண்டில், சுமேரிய மன்னர்களின் தலைமை இடமாம் ஊர் (முகையீர்) நகரின் அழிபாடுகளில், இந்தியத் தேக்கு மரங்கள் காணப்பட்டன என்பது. மற்றொன்று, மெல்லிய ஆடையைக் குறிக்கும் "சிந்து" என்ற சொல், பழைய பாபிலோனியன், உடைப் பட்டியலில் இடம் பெற்றுள்ளது என்பது (Sayce: Hibbert

Lectures P. P. 136-138). இச்சொல்லில் "எஸ்" என்ற எழுத்து மறையாமல் இடம் பெற்றிருப்பது, சிந்து எனப்படும் அம் மெல்லிய ஆடை, மெஸபடோமியாவுக்குப் பர்ஷியா வழியாகச் செல்லவில்லை என்பதை உறுதி செய்கிறது. அது, பர்ஷியா வழியாகச் சென்றிருந்தால் "சிந்து" என்ற ஆற்றின் பெயரிலிருந்து வந்த இந்நாட்டின் பெயர் "ஹிந்து" என ஆனது போல, அச்சொல்லின் மொழி முதல் எழுத்தாகிய "எஸ்" பர்ஷிய வழக்காற்றில் "எச்" என ஆகியிருக்கும். ஆகவே, இம் மெல்லிய ஆடை, தமிழ்நாட்டுக் கடற்கரையி லிருந்து, பர்ஷியன் கடற்கரைக்குக் கடல் வழியாக, நேரிடையாகச் சென்றது என்றும், மெல்லிய ஆடையைக் குறிக்கும் பாபிலோனியச் சொல்லாகிய "சிந்து" இதுவரை கருதிவந்ததுபோல், ஆற்றின் பெயரிலிருந்து பெறப்பட்டது அன்று : மாறாக, துளு, கன்னட மொழிகளில் ஆடையின் ஒரு துண்டு எனும் பொருளில் இன்றும் வழங்கி வருவதும், கொடி எனும் பொருளில் "சிந்து" என்ற தமிழ்ச் சொல்லால் பிரதிநித்துவம் செய்யப்படுவதுமாகிய பழைய திராவிடச் சொல் "சிந்து" என்பதிலிருந்தே பெறப்பட்டது என்றும் நான் முடிவு செய்கின்றேன்.

எகிப்துடன் பண்டை வாணிகம் :

பெரு வாணிகத் தொடர்பு, தமிழ்நாட்டிற்கும், மெஸபடோமியப் பள்ளத்தாக்கிற்கும் இடையில் மட்டுமே இருந்துவிடவில்லை. தென்னிந்திய வாணிகம், கி. மு. 3000-இல், எகிப்து வரையும் பரவியிருந்தது என்பதற்கான சில அகச் சான்றுகளும் உள. திருவாளர் ஸ்காப் அவர்கள், "கிரேக்கர்கள், தங்கள் காட்டுமிராண்டித் தன்மையிலிருந்து விடுபட்டு வெளிப்படுவதற்கு ஆயிரமாயிரம் ஆண்டுகட்கு முன்னரே, எகிப்தும், பழைய இந்திய நாடுகள் பலவும் நிலைபேறுடையவாகிவிட்டன. தங்கள் தங்கள் நாட்டு விளை பொருள்களையும், செய்பொருள்களையும் கைம்மாற்றிக் கொள்ளும் ஒரு பெரு வணிக முறை, பொருள்களை மாற்றிக்கொள்ளும் மைய இடத்தைப் பர்ஷிய

வளைகுடாவின் தலைப்புக்கு அணித்தாகக் கொண்டு, வளர்ந்திருந்தது. அப்பகுதி மக்களாம், பல்வேறு அராபியப் பழங்குடியினர், குறிப்பாகப்புரிந்து கொள்ளமாட்டாப் புதிராக விளங்கும், சிவப்பு மனிதராம் பொயினீஷியப் பழங்குடியி னர்தாம், அப்பொருள்களைக் கொண்டு சென்றவர்; அல்லது பண்டமாற்றுச் செய்த இடைத் தரகராவர். இந்தியாவில் நாகரிக வளர்ச்சி, யூப்ரடஸ், ஆப்பிரிக்கா, மற்றும் இடம் விளங்காக் கீழை நாடுகளுக்குச் சென்று வாணிகம்புரிய, விரைந்து சுருசுருப்பாகச் செயல்படும் வாணிகக் கப்பற்படை ஒன்றை உருவாக்கிவிட்டது. அராபிய வாணிகர்கள், ஆப்பிரிக்காவில், இந்திய வணிகர்கள் இருப்பதை மேலெழுந்தவாரியாகப் பொறுத்துக் கொண்டனர். ஆனால், விலைமதிப்பற்ற நவமணிகள், இலவங்கம், மிளகு, சாதிக்காய் போலும் உணவுக்காம் மணப்பொருள்கள், மேலும் மேலும் பெருகிக்கொண்டே யிருக்கும் எகிப்தியக் கடவுள் வழிபாட்டிற்கான நறுமணப்புகை எழுப்பும் சாம்பிராணி போலும் மெழுக்குகள் பற்றிய, மிகுவருவாய் தரும் வாணிகத்தைச், செங்கடற் பகுதிக்கண் தங்கள் கையிலேயே வைத்துக் கொண்டனர். எகிப்திய அரசர்களின் செல்வ வளத்திற்குக் கூறப்படும் காரணப்படி, இதுவே, அவர்களின் பெரிதும் விழிப்போடு காத்துவந்த தனிச்சிறப்புரிமை. இதன் அடிப்படை மீதுதான் அவர்கள் வாழ்ந்தார்கள்; வளம் பெற்றார்கள். ஏடன் வளைகுடாவின் இருபக்கங்களிலும் உள்ள துறைமுகங்களில், இந்திய வணிகர்களிடமிருந்து, மஸ்லின் மணப் பொருள் களாம் இந்தியப் பண்டங்களை அவர்கள் விலை கொடுத்து வாங்கிக் கொண்டனர்; அல்லது பெற்றுக் கொண்டனர். அடுத்து, அப்பொருள்களைச் சுமந்து கொண்டு மேட்டு நிலங்களைக் கடந்து நைல் நதியின் தலைப்பிற்குச் சென்றனர்: அல்லது செங்கடல் வழியாகவும்; பாலைவனத்தைக் கடந்தும் "தேபெஸ்" (Thebes) அல்லது "மெம்பிஸ்" (Memphis) பகுதிக்குச் சென்றனர் என்று கூறுகிறார். அராபிய இடைத்தரகர்களால், எகிப்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட பொருள்கள் தென்னிந்தியப் பொருள்களாம் என்பதையும்,

தென்னிந்தியப் பரதவர்கள் அப்பண்டங்களைத் தம்முடைய படகுகளில் ஏடனுக்கும், கிழக்கு ஆப்பிரிக்கக் கடற்கரைக்கும் கொண்டு சென்றனர் என்பதையும் இணைத்துக் கொள்ளலாம்.

"கி. மு. 2600-இல் ஆட்சி புரிந்திருந்த, எகிப்திய அரச மரபில் நான்காவது மரபில் வந்த மெர்னெரே (Mernere) என்ற அரசரின்கீழ், உயர் குடிமகனாகச் சிறப்புற்றிருந்த, அசுவான் (Asswan) இனத்து அர்க்ஹூப் (Harkhwf) என்பானின், கல்வெட்டுகளில், கீழ்க்காணும் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன:- 'நறுமணப் புகை தரும் மெழுக்கு, கருங்காலிமரம், நவதானியம், சிறுத்தைப் புலி, தந்தம், தடிகள் மற்றும் சிறந்த பொருள்களைக் கொண்ட பொதி மூட்டைகள் ஏற்றப்பட்ட 300 கழுதைகளோடு தெற்கு நுபியாவில் (Southern Nubia) உள்ள 'யாம் (Yam) நாட்டிலிருந்து இறங்கி வந்தன' இதில் கூறப்படும் கருங்காலி, ஆப்பிரிக்கக் கருங்காலி ஆகலாம். ஆப்பிரிக்கக் கருங்காலியைவிட உயர்தரமானதும், தொன்மைக் காலத்தில் இந்தியாவிலிருந்து, பர்ஷியன் வளைகுடா விற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து, அராபியர்களால்' ஆப்பிரிக்கக் கடற்கரைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து கி. மு. 1500 போலும் பிற்காலத்தில், மேலை நைல் நதிமூலம் எகிப்துக்குக் கொண்டு செல்லப்பட்டதுமாகிய இந்தியக் கருங்காலியாகவும், இது இருக்கக்கூடும். இத் தேதிக்குப் பின்னர் (கி. மு. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த) திருவாளர் தியோபிரஸ்டஸ் (Theophrastus) என்பார், இம்மரத்தை இந்தியாவிற்கு மட்டுமே உரியதாக்குமளவும், திருவாளர் விர்ஜில் (Virgil) என்பவர், (Georgics II -166-117) இந்தியாவிற்கே உரிய தனிச்சிறப்பு வாய்ந்ததாகக் கூறுமளவும், இந்தியக் கருங்காலி, பெருஞ்சிறப்பு வாய்ந்ததாகிவிட்டது'. பின்வரும் அதிகாரம் ஒன்றில் நவதானியங்களும், சிறுத்தைப்புலியும், ஆப்பிரிக்காவுக்குப் பிற்பட்ட காலத்தில் ஏற்றுமதி செய்யப்பட்டன என்பது விளக்கப்படும். ஈண்டுக் குறிப்பிடப்பட்ட இவ்விரண்டும் தென்னிந்தியாவிலிருந்தே சென்றன ஆதலும் கூடும்.

கி. மு. 26 ஆம் நூற்றாண்டில், ஆறாவது அரச குலத்தைச் சேர்ந்த இரண்டாம் பெபி (Pepi) என்பானின் கீழ்ப் பணிபுரிந்திருந்த டைகிரே (Tigre) எனும் மேட்டு நில ஆட்சிப் பொறுப்புக்கு அனுப்பப்பட்ட அரசு குடும்பத்து அலுவலர் செப்னி (Sebni) என்பான், வாவெட் (Wawat) உத்தெக் (Uthek) பகுதிகளுக்கு எவ்வாறு இறங்கிச் சென்று இரி (Iri) என்ற அரச ஊழியனை மேலும் இரு ஊழியர்களோடு நறுமணப் புகைதரும் மெழுக்கு உடைகள் (பெரும்பாலும் பருத்தி உடைகள்) யானைத்தந்தம் விலங்கின் தோல் ஆகிய பொருள்களைச் சுமந்துவர அனுப்பி வைத்தான் என்பதைக் குறித்து வைத்துள்ளான். நனிமிகப் பழமை வாய்ந்த அந்நாட்களில் உலகில் தென்னிந்தியா ஒன்றில்தான் பருத்தி ஆடைகள் நெய்யப்பட்டன.

மேலே குறிப்பிட்ட தந்தம் ஆப்பிரிக்கத் தந்தமாம். ஆனால் அது இந்தியத் தந்தமாகவும் இருக்கக்கூடும். இந்தியத் தந்தம், வேறு எந் நாட்டுத் தந்தத்தினும் மிகச் சிறந்து விளங்கினமையால் தொடக்க சூலத்திலிருந்தே அது மிக அதிகமாக வேண்டப்பட்டு வந்துளது. மேலும் யானைகளைக் கொல்வது கொடுவிலங்குகள் நிறைந்து, பருமரங்களால் அடர்ந்த கொடுநோய்களின் நிலைக்களமாம் ஆப்பிரிக்கக் காடுகளினும் இந்தியக் காடுகளில் எளிது. எகிப்திய அரசர்களுக்கு ஆப்பிரிக்கத் தந்தங்களைக் கொடுத்துவந்த அபிசீனிய சோமாலிலாந்து யானை வேட்டையாளர், வாய்ச்சி, கோடரி, வாள் முதலாம் படைக்கலங்களையும் பயன்படுத்தினர். அந்நாட்களில் இரும்புத் தொழிற்கருவிகளை ஏற்றுமதி செய்யக்கூடிய நாடு இந்தியா ஒன்றுதான்; அவற்றிற்குப் பதிலாக இந்தியா ஆப்பிரிக்காவிலிருந்து இந்நாட்டில் வேதகாலத்தில் பெரிதும் பயன்படுத்தப்பட்டு நறுமணம் புகைதரும் பொருள்கள், இனிய மணம் கமழும் மரப்பிசின்களை இறங்குமதி செய்து கொண்டது. அடுத்துவந்த காலங்களில் இந்தியாவிலிருந்து இரும்பு ஏற்றுமதி செய்யப்பட்டதற்கான எழுத்தாவணம் இருக்கிறது. அவ்வாணிகம் அந்நாட்களிலும் முந்திய

தொடக்க நாட்களிலும் இருந்து வந்தது என உறுதியாக நம்பலாம்.

பண்டமாற்றிற்காகத் தொலை நாடுகளுக்குச் சென்று வந்த மக்களை வேதமந்திரங்கள் குறிப்பிடுகின்றன. பொருளீட்ட விரும்பிக் கப்பல்களைக் கடலில் போக்கினர். "வணிகக் குழுக்கள் விற்பனைக்காகவும் பண்டமாற்றிற்காகவும் நூறு துடுப்புகளைக் கொண்ட கப்பல்களில் கடல்மேல் சென்றனர். இது தமிழர் வாணிகத்தைக் குறிக்கவில்லை என்பது உண்மையாகலாம். ஆனால் தமிழர்கள் தொடக்க காலத்திலிருந்தே மிகப் பெரிய கடல் வாணிகத்தை வளர்த்து வந்திருந்தனர் ஆதலாலும், வட நாட்டு ஆரியர் இத்தொடக்க காலத்தில் மாலுமித் தொழில் தெரிந்தவரல்லர் ஆதலாலும், அவ்வடநாட்டு ஆரியர் தொலை நாடுகளுக்குச் சென்று வாணிகம் புரிந்து வந்தனர் என்றால் தென்னிந்திய மாலுமிகளே அவர்களுக்கு அத் துறையில் ஆசிரியர்களாதல் வேண்டும்.

பண்டை வாணிகம் குறித்துத் திருவாளர் கென்னடி :

சில வரலாற்று ஆசிரியர்கள் இவ்வாணிகம் இருந்தமைக்கு எதிராக வாதிடவும் செய்துள்ளனர். அவர்களுள் தலை யாயவர் திருவாளர் கென்னடி. அப்பொருள் பற்றிய தம்முடைய கட்டுரை ஒன்றில் எகிப்துடனோ அஸிரியா வுடனோ, கி. மு. ஏழாம் நூற்றாண்டிற்கு முன்னர் இந்திய வாணிகம் இருந்தது என்பதை மறுப்பதற்காகத் , தம்முடைய பரந்த கல்வியால் பெற்ற அத்துணை ஆதாரங்களையும் செலவிட்டுள்ளார். வணிகர்கள் கடல் பயணம் கடலில் கலம் கவிழந்து போதல் ஆகியனவற்றைக் குறிப்பிடும் ரிக்வேத அதர்வவேத மந்திரப் பகுதிகளை அவர் அறவே புறக் கணித்துள்ளார். ஆனால் இந்தியமக்கள் சிறப்பாகக் கடற்கரையை அடுத்து வாழ்மக்கள் கடல் வாழ்க்கையில் பழகிவிட்டவர்கள் என்பதை அவர் ஒப்புக் கொள்கிறார். கட்டிடப்பணிக்குத் தேவைப்படும் உறுதிவாய்ந்த மரங்களையும், பழங்காலத்தில் தெய்வ வழிபாடுகளின் போது

மிகப்பெரிய அளவில் பயன்படுத்தப்பட்ட நறுமணத் தைலங்களை வடிக்க உதவும் இனிய மணம் கமழும் மரங்களையும் இந்தியா பெருமளவில் உற்பத்தி செய்தது என்பதை அவரால் மறுக்க இயலாது. எகிப்தியர்களும், அஸ்ரியர்களும், இந்தியா பெருமளவில் கொடுத்து உதவக்கூடிய லவங்கம் மிளகுபோலும் மணம் தரும் உணவுப் பொருள்களுக்காகவும், முத்து மற்றும் நவரத்தினங் களுக்காவும் ஆர்வத்தோடு காத்திருந்தனர் என்பது நன்கு தெரிந்த ஒன்று. புதிய கற்காலம் முதலாகவே இந்தியர்கள் பருத்தியாலான ஆடைகளைப் பெருமளவில் நெய்தனர்; அவற்றிற்கு வண்ணமும் ஊட்டினர். நெய்யவும் மெருகு ஏற்றவும் துணை செய்யவும் கல்லால் ஆன மழமழப்பாகும் கல் உட்படப் பல்வேறு தொழிற்கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டிருப்பது இதை உறுதி செய்யும். இவ்வளவு இருந்தும் திருவாளர் கென்னடி அவர்கள், ஒரு பக்கம் இந்தியா மறுபக்கம் எகிப்து அஸிரிய நாடுகள் ஆகிய இவற்றிற்கிடையில் நடைபெற்றிருந்த பழங்கால வாணிகத் தொடர்புக்கான, இவ்வகச் சான்றுகளைக் காண மறுத்துக் கண்களை மூடிக்கொள்கிறார். பாபிலோனிய ஆரிய மக்கள் வழங்கிய ஆப்பு வடிவ எழுத்து முறை கொண்ட அக்கேடிய மொழியும் (Accadian) எபிரேய மொழியும் (Hebrew) அராபிய மொழியும் சமஸ்கிருத தமிழ் மொழிகளிலிருந்து கடன் வாங்கிய வாணிகப் பொருள்களைக் குறிக்க வழங்கும் சொற்கள் அளிக்கும் அகச்சான்றுகளின் மதிப்பை அவர் புறக்கணிக்க முயல்கிறார். ஜெர்மானிய வரலாற்றுப் பேராசிரியர்களால் சான்றுகாட்டி நிறுவப்பட்ட அஸிரிய மக்களோடு ஆரியர்கள் கொண்டிருந்த தொடர்பினை உறுதிசெய்யும் வேத அகச் சான்றுகளைச் சிறிது சிறிதாக இல்லையாக்க முயலுகிறார். இடைத் தரகர்களால், கடல் வாணிகம் பரந்த அளவில் வளர்ச்சி பெறுவதற்குத் தடையாக நிற்கக்கூடிய சில இடையூறுகளைப் பெரிதுபடுத்துகிறார். இறுதியாக அதற்கான போதிய வலுவான அகச் சான்று இல்லை என முடிக்கிறார்.

திருவாளர் ஸ்காப் அவர்களின் மறுப்புரை :

பெரிபுளூஸ் நூலின் அமெரிக்கப் பதிப்பாசிரியராகிய திருவாளர் ஸ்காப் அவர்கள், திருவாளர் கென்னடி அவர்களின் வாதங்களைப் பின்வருமாறு முடிந்த முடிவாக மறுத்துள்ளார். "எகிப்தியர்களின் கடல் வாணிகப் பயணத்தை, முழுக்க முழுக்க உள்நாட்டு வாணிகமாகக் கருதியும், எபிரேய சமய வழிபாட்டு நூல்களில் அவர் காணும் பழம் பெரும் வாணிகத்தில் இடம் பெற்ற பண்டங்கள், அவ்வாணிகம் நடைபெற்ற வழிகள் பற்றிய எண்ணற்ற குறிப்புகளை, ஏழராவின் (Ezra) வருகையைத் தொடர்ந்து மேற்கொண்ட மறு பதிப்பின் விளைவாம் என முடிவு கட்டியும் எகிப்தியர்களின் பண்டைய கடல் வாணிகப் பயணத்தின் முக்கியத்துவத்தைக் குறைத்துவிட்டார். ஏழரா அவர்களின் எபிரேய சமய வழிபாட்டு நூல்களின் மறுபதிப்பு என்ன கூறினும், ஒத்த காலத்தைச் சேர்ந்த எகிப்திய ஆவணங்களில் ஏறத்தாழ அதே வாணிகப் பண்டங்கள்தாம் விளக்கப்பட்டுள்ளன. இந்த உண்மைகள் ஏழராவின் காலத்திற்குப் பலநூறு ஆண்டுகளுக்கு முன்னர், இந்திய மூலம் வாய்ந்த வணிகப் பண்டங்கள் சோமாலி கடற்கரைக்கும் நைல்நதிக்கு அப்பாற்பட்ட மேட்டு நிலங்களுக்கும் கொண்டு சென்று விற்கப்பட்ட ஒரு வாணிகம் நடைபெற்றதை உணர்த்துகின்றன. இவைபோலும் கருத்துகள் இடைவழியில் பொதுவான சந்திப்புகளில் வணிகப் பண்டங்கள் கைம்மாறுவது நடைபெறாமலே இடையீடின்றித் தொடர்ந்து நடைபெற்ற வணிகப் பயணத்தை யூகிக்கின்றன. ஆனால், நாகரிகவளர்ச்சிபெறா, நனிமிகப் பழைய காலத்திய வாணிகம் ஒரு பழங்குடியினரிடமிருந்து மற்றொரு பழங்குடியினர்க்கும், ஒரு கடல் துறை நகரிலிருந்து பிறிதொரு கடல்துறை நகருக்குமாகவே நடைபெற்றது."

♦ ♦ ♦

3. இராமனும் தென் இந்தியாவும்
(கி. மு. 2000)

இராமாயண வளர்ச்சி :

தென்னிந்தியா முழுவதையும், மக்கள் கவனத்திற்கு, நிச்சயமாக, இராமகாதைதான் முதன் முதலில் கொண்டு வந்தது. மகாபாரதம், இரகு வம்சம், மற்றும் பிற நூல்களில், இராமகாதை பற்றிய, பெரும்பாலும் ஒன்றற்கொன்று தொடர்பில்லாத நிகழ்ச்சிக் குறிப்புகள் பல இடம் பெற்றிருந்தாலும், இராமாயணத்தில்தான், அக்கதை, முழுமையாக, விளங்க உரைக்கப்பட்டுள்ளது. இராமாயணம் அளிக்கும் அகச்சான்றுகள், பல்வேறு காரணங்களால் மிகவும் விழிப்போடு ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும். இராமன் சம காலத்தவரான ஒரு முனிவரும், மருட்சியுள்ள மன நிலையில், கணவனால் துரத்தப்பட்ட சீதைக்குப் புகலிடம் அளித்து அவள் மகன்களுக்குக் கல்வி அறிவு புகட்டி, தாங்கள் கல்வி பெற்று வளர்ந்து வந்த ஆசிரமத்திற்குத் தங்கள் தந்தை வந்தபோது, அத்தந்தைக்கு எந்தப் பாக்களிலிருந்து சில பாடிக் காட்டினார்களோ, அந்தப் பாடல்களை அவர்களுக்குக் கற்பித்துக் கொடுத்த வருமாகிய வால்மீகியின் நூலாக, அது உரிமை கொண்டாடு கிறது. ஒரு வகையில், அறிந்த நிகழ்ச்சிகளிலிருந்து பெறலாகும் உண்மைகளால் உறுதிப்படுத்தப் படுவதல்லது, வேறு வகையில் உறுதி செய்ய இயலாதனவாய இராமாயணம் அளிக்கும் செய்திகளை, நம்ப மறுக்குமாறு நம்மை வற்புறுத்தும் தனிக்காரணம் எதுவும் இல்லை. அதற்கு மாறாக நாம் இப்போது பெற்றிருக்கும் இராமாயணம், முழுக்க முழுக்க வால்மீகி இயற்றிய அதே இராமாயணந்தான்

என்பதை நம்பவும் இயலாது. அதற்கு ஒரு காரணம், இராமன் வேத காலத்தின் முக்கூற்றில், இரண்டாம் கூற்றின் இறுதிக்காலத்தில் வாழ்ந்திருந்தான். அக்காலத்தில் இயற்றப் பட்ட தோத்திரப் பாடல்கள், அவற்றிற்கு முற்பட்டனவும், பிற்பட்டனவும் ஆகிய காலத்திய பாடல்களைப் போலவே, வேத வழக்கு மொழியில் உள்ளன. ஆகவே இராமர் காலத்து இராமாயணமும் அதே வேத வழக்கு மொழியில் "சந்தாஸ்" எனப் பாணினி பெயரிட்டழைக்கும் மொழியில், அல்லது அக்காலத்தில் வழக்கில் இருந்த "பிராக்கிருத" மொழியில் இருந்திருக்க வேண்டும். ஆனால் நாம் பெற்றிருக்கும் இராமாயணம் கி. மு. பத்தாம் நூற்றாண்டிற்கு முன்னர், நிச்சயமாக வழக்கில் இல்லாத "பாஷா" எனப் பாணினி பெயர் சூட்டி அழைக்கும் இலக்கிய மொழி நடையில் உளது. மந்திரப் புனைவார்களின் வழிமுறை எந்தக் காலத்திற்குப் பிறகு அழிந்து விட்டதோ, பாரதப் போர் நிகழ்ந்த அந்தக்காலத்தில் கிளை மொழியாம் சந்தா மொழியும் மறைந்துவிட்டது. பிராமணாக்களிலும், ஆரண்யாக்களிலும் மேற்கொள்ளப்பட்ட சந்தா மொழிக்கும், பாஷா மொழிக்கும் இடைப்பட்டதான, வேறொரு கிளை மொழி, சந்தா மொழியைத் தொடர்ந்து வந்தது. நாம் பெற்றிருக்கும் இராமாயணத்தை, இராமன் காலத்தவரான வால்மீகி எழுதிய இராமாயணமாக ஏன் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதற்கான மற்றொரு காரணம், அதில், இராமன், உயர்பெரும் கடவுளாம் விஷ்ணுவின் திருவவதாரமாவன் என்ற கருத்து இடம் பெற்றிருப்பதாம். வேத வழிபாட்டு நெறியில் விஷ்ணு ஒப்புயவர்வற்ற கடவுள் அல்லன்; அவனுடைய அவதாரங்கள் பற்றிய கொள்கை வேதசமயக் கோட்பாடுகளுக்குப் புறம்பானது. இராமனுடைய பெயர் "ராமர்", ரிக் வேதத்தில் (10 : 92 : 14), வேள்விகளை நிறுவிச், சமய கருமார்களுக்குப் பெரிய பெரிய தக்ஷிணைகளைத் தந்த மகவான்களின் பெயர்ப் பட்டியலின் இடம் பெற்றுள்ளது. இங்குத் தெய்வத் தன்மை குறித்த உரிமை எதுவும் ஏற்றப்படுவதின்றி, வெறும் மானிடனாகவே அவன், குறிப்பிடப்பட்டுள்ளான். இராமனுக்குத் தெய்வத்தன்மையை

இராமன் வாழ்ந்திருந்த காலத்தில் ஏற்றிக் கூறியிருப்பார் வால்மீகி என்பது ஒப்புதற்கு இயலாதது. மேலும் வைணவ ஆகமங்கள் வேதங்களைப் போலவே வைணவர்களுக்கு அதிகாரம் பெற்றனவாம் என்பதை உறுதி செய்ய ஆகமப் பிராமண்யம் என்ற நூலை, யாமுனாச்சாரியார் கி. பி. பத்தாம் நூற்றாண்டில் எழுத வேண்டுமளவு தொடக்க காலத்தில் வேதச்சமயக் கொள்கைகளோடு முரண்பட்டதான, ஆகமச் சமய நெறியில் உருப்பெற்றவை, தெய்வத் திருவவதாரக் கருத்துகள். மகாபாரதப் போருக்குப் பின்னர், வேத வேள்வி வழிபாட்டு நெறிகள் குன்றத் தொடங்கிய நிலையில், வட இந்தியாவில் ஆகம வழிபாட்டு நெறிகள் முக்கியத்துவம் அடைந்தன. ஆகவே, விஷ்ணுவின் அவதாரங்களில், இராமாவதாரமும் ஒன்று என்ற கொள்கை, இராமகாதையில், கி. மு. பத்தாம் நூற்றாண்டிற்குப் பின்னரே இடம் பெற்றிருக்க இயலும், ஆகவே, வால்மீகியால் இராமன் வாழ்ந்த காலத்தில் எழுதப்பட்ட, இராமகாதை, கி. மு. பத்தாம் நூற்றாண்டிற்குப் பின்னர், "பாஷா" எனப் பாணினி பெயரிட்டழைக்கும் ஒரு மொழியில் திரும்ப எழுதப்பட்டது. வேறு பல புறம்பான நிகழ்ச்சிகள் அல்லாமல் இராமன் ஒரு அவதாரம் என்ற கொள்கையும், அக்கதையுள் அப்பொழுது நுழைந்து விட்டது என நான் முடிவு செய்கிறேன். பௌதாயன தர்மசூத்திரத்தின் கிரந்த எழுத்துகளிலான தென்னிந்தியப் பதிப்பு ஒன்றில் கொடுக்கப்பட்டிருக்கும், கோத்திரம் படைத்தவர்களின் பெயர்ப் பட்டியலில், கோத்திரம் படைத்தவர்களாக வால்மீகி, பாணினி ஆகியோரின் பெயர்கள் ஒரு சேர இடம் பெற்றுள்ளன. இது யாரோ ஒரு வால்மீகியும், பாணினியும் சம காலத்தவர் என்ற கருத்தைக் கொடுக்கும். கி. மு. ஏழாம் நூற்றாண்டினராகிய இந்த வால்மீகி, "ப்ராசெதஸ்" வால்மீகியின் இராமாயணத்தை இலக்கியச் சமஸ்கிருத நடையில் திருப்பி எழுதி, அதில் இராமன் விட்ணுவின் திருவவதாரம் என்ற கொள்கையையும் இணைத்திருக்க வேண்டும். இராமாயண மகாபாரதங்களை மிக நுணுக்கமாக ஆராய்ந்த பின்னர், திரு "லாஸன்" அவர்கள் "வீரகாவியங்களில் இராமனும், கிருட்டிணனும்,

விட்ணுவின் அவதாரங்களாகக் காணப்படுகின்றனர் என்பது உண்மைதான் என்றாலும், அதே சமயம் அவ்விருவரும் மானிட வீரர்களாகவே, நம்முள் வருகின்றனர்; அவ்விரு வீரர்களும், தெய்வத் தலைமையினைச் சிறிதும் பயன்கொள்ளாமல், மானிடக் கோட்பாடுகள்படியே நடந்து காட்டும், சிறந்த வாய்ப்பினைப் பெற்ற மனிதர்களாகவே, பெரும்பகுதி காட்டப்படும் வகையில், அவ்விரு நிலைகளும் (தெய்வநிலை, மானிட நிலை) வேறு பிரிக்க இயலாவாறு இரண்டற இணைக்கப்பட்டுள்ளன. தெய்வத் தன்மையை வற்புறுத்த வேண்டி இணைக்கப்பட்ட, இன்றியமையா ஒரு சில இடங்களில் மட்டுமே, அவர்கள், விட்ணுவின் இயல்புகளை மேற்கொள்கின்றனர். இவை போலும் பிற்காலத்தில் இடைச் செருகல்களையும் இப்பகுதிகள் பல்வேறு இடங்களில் அறிவுக்குப் பொருந்தா நிலையில் நுழைக்கப்பட்டிருப்பதையும் நினைவுகோடல் இன்றி, அவை எவ்வாறு ஏனைய விளக்கங்களோடு தொடர்பு இன்றி இணைக்கப்பட்டுள்ளன என்பதையும், அதன் வளர்ச்சிக்கு, அவை, எவ்வாறு தேவையற்றன என்பதையும் உற்று உணராமல், இவ்விரு நூல்களையும் கருத்தோடு படிப்பது இயலாது" எனக் குறிப்பிடுகிறார்.

இராமாயணத்தின் மொழி நடை, அப்பாடல்கள் இரு வேறு ஆசிரியர்களால் இயற்றப்பட்டவை என்ற எண்ணத்தை அளிப்பதாக இல்லை. ஆனால், இக்கருத்து இரண்டாவது வால்மீகி அவர் காலத்தில் வழக்கிலிருந்த மொழி நடையில் எழுத விரும்பியிருந்தால், அப்பாடல்களைத் தொடக்கத் திலிருந்து புதிதாகவே பாடியிருக்க முடியும் என்பதை நினைவில் கொண்டால் மறுக்க முடியாத தடையாக நிற்காது.

மற்றொரு இராமகாதை :

இராமகாதை, பெரும்பாலும் அனைத்துச் சிற்றூர்களிலும் நாள்தோறும், பண்டிதர்களாலும், இசையொடு கலந்து கதை கூறுவோர்களாலும் விரித்துரைக்கப்படுவதால் அக்கதை அதன் முழு விளக்கங்களோடு, இன்றைய, இந்தியாவின்

இந்துக்களில் பெரும்பகுதியினர்க்குத் தெரியும்; ஆனால், கி. மு. ஏழாம் நூற்றாண்டில், நிலைமை அவ்வாறு இல்லை, வால்மீகி இராமாயணத்தின் முக்கிய நிகழ்ச்சிகளிலிருந்து வேறுப்பட்டதான இராமகாதை, நாடோடிப் பாடல்களாக, அன்று வழக்கில் இருந்தது என்பது பௌத்த ஜாதகக் கதைகளில், 461 வது காதையான தசரத ஜாதகக் கதையால் உறுதியாகிறது.

அக்கட்டுக் கதை வருமாறு : பனாரஸ் அரசன் தசரதனுக்குப் பதினாறாயிரம் மனைவியர் உள்ளனர்; அவனுடைய மூத்த ராணிக்கு, இராம பண்டிதன், அதாவது அறிவாளி ராமன், லக்கண குமாரன், சீதாதேவி ஆகியோர் பிறந்தனர். இந்த ராணி இறந்ததும், தசரதன், மற் றொருத்தியை மூத்த ராணியாகக் கொண்டான். அவளுக்குப் பரதன் பிறந்தான். இந்த ராணி, தன் மகனுக்கு அரசைக் கொடுக்குமாறு அவனைத் தொல்லைப்படுத்தினாள். தசரதன் அவ்வாறு செய்ய மறுத்துவிட்டு, நாட்டில் இருந்தால் அவர்கள் அழிவிற்கு மூத்தராணி சூழ்ச்சி செய்துவிடுவாள் ஆதலின், இராமனையும், லக்கணனையும், சீதாதேவியையும், காட்டில் பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்ந்துவிட்டு நிமித்திகன் கூறியவாறு, தான் இறந்துவிடும் பன்னிரண்டாம் ஆண்டு இறுதியில் திரும்பி வந்து அரசுரிமையைக் கேட்குமாறு பணித்தான். அவர்கள் இமயத்திற்குச் சென்று ஒரு பர்ணக சாலையில் வாழ்ந்து வந்தனர். ஒன்பதாண்டுகளுக்குப் பிறகு துயரத்தால் அரசன் இறந்துவிட்டான். பரதன், இராமன் தங்கியிருந்த ஆசிரமத்தை நாடி அடைந்து திரும்பிவந்து நாடாளுமாறு இராமனை வேண்டிக்கொண்டான். தந்தை ஆணையிட்ட பன்னிரண்டு ஆண்டுகள் கழிவதற்கு முன்னர் வர முடியாது என மறுத்துவிட்டுப், பரதனிடம் தன்னுடைய பாதுகைகளைக் கொடுத்து, அவை மூன்றாண்டு காலம் நாட்டை ஆளும் எனக் கூறி அனுப்பினான். பின்னர்ப் பரதன், லக்கணன், சீதாதேவி ஆகிய மூவரும் பாதுகைகளோடு தலைநகர் திரும்பினார். மூன்று ஆண்டுகள் கழிந்ததும், இராமன் பனாரஸுக்குச் சென்று, சீதா, தன் மனைவியாக,

அவளோடு அரசனாக முடிசூட்டிக்கொண்டு பதினாறாயிரம் ஆண்டுகள் நேர்மையாக அரசு புரிந்து (த்ஹம்மென ரஜ்ஜன் கரெத்ப) ஸ்வர்க்கம் புகுந்தான்.

இக் கட்டுக்கதை, பொதுமக்களிடையே பெருவழக்காய் இருந்தது. பல பிறவிகளுக்குப் பிறகு கௌதமராகப் பிறந்த போதி சத்தராக, இராமரை மாற்றிய பௌத்தர்களால் வழிபடு பொருளாக ஆக்கப்பட்டது என்ற உண்மை, வால்மீகி கூறும் கதையமைப்பு, அக்காலப் பொதுமக்களில் ஒரு பிரிவினர்க்குத் தெரியவில்லை என்பதை உறுதி செய்கிறது. பாணினியின் சம காலத்தவரான வால்மீகியால், இனிமையோடு கலந்த அழகிய, அதே நிலையில் எளிய சமஸ்கிருதத்தில், இராமன் விட்ணுவின் அவதாரமாம் என்ற ஆகமக் கோட்பாட்டையும், இரண்டற இணைத்து ஆக்கப்பட்ட அவ்வீர காவியத்தின் மறு ஆக்கம், அப்பாட்டை விட இந்தியாவில் பக்தி மார்க்கம், பெருவழக்காய் ஆகிவிட்ட கி. மு. ஏழாம் நூற்றாண்டிற்குப் பிறகு, பலரும் அறிந்த ஒன்றாக ஆக்கிவிட்டது. இது, வெறும் தத்துவந்தான். ஆனால், இஃது ஒன்றுதான் உண்மை நிகழ்ச்சிகளோடு ஒத்த தத்துவம்.

இராமாயணத்தில் தென்னிந்தியா பற்றிய குறிப்பீடுகள் :

மேலே கூறியனவற்றை ஓரளவு ஏற்றுக்கொள்ளக்கூடிய புனைந்துரைகளாகக் கொண்டால், இராமர் காலத்தைச் சேர்ந்த கதையின், உயிர்நிலை போலும் முக்கியப் பகுதிகளாகி, இராமாயணத்தில் இடம் பெற்றிருக்கும் தென்னிந்தியா பற்றிய குறிப்புகளைத், தம் காலத்திய தென்னிந்தியா பற்றிய சில செய்திகளை அறிந்தவரும் அறிந்தவற்றைக், கால முறையைக் கருத்தில் கொள்ளாது, முற்பட்ட நிகழ்ச்சிகளைப் பிற்பட்டனவாகவும், பிற்பட்ட நிகழ்ச்சிகளை முற்பட்டன வாகவும், தம் பாக்களிடையே நுழைத்து விட்டவரும்மாகிய, பிற்கால வால்மீகியால் கி. மு. முதலாயிரத்தாண்டில் நுழைக்கப்பட்ட நிகழ்ச்சிகளிலிருந்து வேறு பிரித்துக் காண நமக்கு வழிவகைகள் உள்ளன. இராமர் காலத்தில், அரக்கரின்

ஆட்சி, அவர்களின் புறக்காவல் நிலையமாம், ஜனஸ்தானம் இடம் பெற்றிருந்த, கோதாவரித் தென்கரை வரை பரவியிருந்தது எனக் கொள்ளலாம். கோதாவரிக்கு வடக்கில் எண்ணற்ற ஆரிய அரசுகள் நிறுவப்பட்டிருந்தன. ஆனால், விந்தியத்திற்கு அப்பாலும் சென்று, இயக்கர்களும், அரக்கர்களும் மேற்கொள்ளும் திடீர்த் தாக்குதல்களைத் தடுக்கவல்ல பலம் வாய்ந்தவர்களாக, அவர்கள் இல்லை. விசுவாமித்திரரோடு அவர் நடத்தும் வேள்விகளை, அரக்கர்களால் கலைக்கப்படுவதினின்றும் காத்தற் பொருட்டு, இராமன் அப்பகுதிகளுக்கு வருகை தந்த போது, விந்தியத்திற்கு வடபகுதியில் திரிந்து கொண்டிருந்த அரக்கி தாடகை, அவள் மகன் அரக்கனாகிவிட்ட மாரீசன் மற்றும் சுபாகு ஆகியோரோடு அவன் போரிட நேர்ந்தது. இராமர் காலத்தில் இருடிகளின் குடியிருப்புகள், எந்த ஆறு வரை பரவியிருந்தனவோ, அந்தக் கோதாவரி ஆற்றங்கரைக்கு அணித்தாக உள்ள இடங்களில், அவை, இராவணனின் ஆட்சி எல்லைக்கு அணித்தாக இருந்தமையாலும், அவன் துணையைப் பெறலாம் என்பதாலும், எண்ணற்ற அரக்கர்கள் திரிந்துகொண்டிருந்தனர். ஆங்கு, இராவணனின் உடன்பிறப்பாளன், நெடிதுருவம் வாய்ந்த கரன் என்பான், ஆங்கு ஜனஸ்தானத்தில் வாழ்ந்திருந்த ஆரியர்களை வாட்டி வதைத்தான். இராமனைத் தமக்கு அணித்தாக இருந்த காட்டில் சந்தித்த முனிவர்கள், அரக்கர்கள் செய்யும் அட்டூழியங்கள் குறித்துக் கடுந்துயரோடு முறையிட்டுக் கொண்டனர். "ஆரியரல்லாதார், முனிவர்களின் முன் வந்து நிற்கின்றனர். அவர்களின் வழிபாட்டினைப் புனிதம் இழந்த அழுக்குப் பண்டங்களால் கெடுக்கின்றனர்; சிற்றறிவு படைத்த அவர்கள், ஆசிரமங்களில் கடுந்துறவு மேற்கொண்டிருக்கும் முனிவர்களைப் பின்னாலிருந்து தாக்கி அழிப்பதில் மகிழ்ச்சி கொள்கின்றனர். தெய்வத் தன்மை வாய்ந்த வேள்வித் தீயில் பலி உணவுகளைப் படைக்கும் நிலையில், அந்த யாககலசத்தைத் தூக்கி எறிகின்றனர். தண்ணீர் ஊற்றி வேள்வித் தீயை அணைக்கின்றனர்; பானைகளையும் உடைத்து எறிகின்றனர்."

இராமாயணத்தின் இப்பகுதி, இராமர் காலத்தில் ஆரிய வழிபாட்டு முறைகளுக்கு, ஆரியரல்லாதாரின் கடும் வெறுப்பை நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது. இந்த ஆரியல்லாதார், சமஸ்கிருதம் பேசமாட்டார். வேதத்தில், அவர்கள் "மரித்ஹர வா" - நலங்கெட்ட பேச்சாளர் என்றும், "அனாஸ" வாயற்றவர் அல்லது நல்ல பேச்சு அற்றவர் என்றும் அழைக்கப்பட்டுள்ளனர். "அனாஸ" என்ற சொற் றொடர் ஐரோப்பிய ஆசிரியர்களால் மூக்கற்றவர் எனத் தவறாகப் பொருள் கொள்ளப்பட்டு, தஸ்யூக்களின் தட்டை மூக்கைக் குறிப்பதாகவும் கொள்ளப்பட்டது. இச்சொற்கள் அரக்கர்கள், ஆரியர் பேசிய மொழியிலிருந்து வேறுபட்ட ஒரு மொழி பேசினர் என்ற உண்மையை உணர்த்துகின்றன. இல்வலன் என்பான் ஓர் அரக்கன் பிராமணன் போல மாறுவேடம் கொண்டு உண்மையில், தன்மொழி அல்லாததான சமஸ்கிருதம் பேசிப் பிராமணர்களை ஏமாற்ற முயன்றான் எனக்கூறுவதன் மூலம் இராமாயணம், இதை மேலும் உறுதி செய்கிறது. இப்பாட்டில் வரும் இதுபோலும் குறிப்பிடத்தக்க பிறதொரு குறிப்பு, ஆரியர்களுக்கும் தஸ்யூக்களுக்கும் இடையில், ஈமச்சடங்கு முறையிலான குறிப்பிடத்தக்க வேறுபாட்டினை உணர்த்துகிற, ஆரியரின் தீ ஓம்பல் வழக்கம் தோன்றுவதற்கு முன்னர்ப் பிணங்களை இயற்கையின் செயலாண்மையின் அழிக்கும் ஆற்றலுக்கு ஆளாக்கிடும் நனிமிகப்பழைய வழக்கம் நிலைபெற்றிருக்கும் இடங்கள் தவிர்த்து, உலகம் முழுவதிலும் புதைப்பதே, இறந்தவர் உடலுக்கு முடிவுகாணும் சாதாரண முறையாகும். தீவழிபாட்டு முறை, எரியூட்டல் வழக்கத்திற்கு - அதாவது இறந்தவரைத் தீ மூலம் கடவுள்களுக்கு அர்ப்பணிக்கும் வழக்கத்திற்கு வழிவகுத்தது. இந்தியாவிலும், வேறு இடங்களிலும் எரியூட்டல் முறையின் நுழைவு, ஆரிய வழிபாட்டு முறை பரவியதன் உறுதியான அறிகுறியாம். அரக்கர்கள் ஆரியரல்லாதாராதலின் தங்களுடைய இறந்தவர்கள் உடல்களைப் புதைத்தனர். ஆகவே விராதன் இராமனால் கொல்லப்பட்ட போது புதைப்பது இராக்கதரின் பண்டைய வழக்கமாதலின் தன் பிணத்தைப் புதைத்து

விடுமாறு இராமனிடம் வற்புறுத்தினான். ஆரியரல்லாதாரின் பழக்கவழக்கங்கள் பற்றிய, இங்கொன்றும் அங்கொன்றுமான இவை போலும் குறிப்பீடுகளைப் பிற்கால இடைச் செருகல்களாக மதிப்பிடல் கூடவே கூடாது; அவை, ஆரிய பழக்கவழக்கங்கள், கோதாவரிக்குத் தெற்கில், இராமர்காலத்தில் பரவத்தொடங்கின; ஆனால் மெல்ல மெல்லப் பரவத்தொடங்கின என்ற உண்மைக்கு விளக்கம் காணத் துணைபுரிகின்றன. ஆரிய நாகரிகத்தின் கட்டாய மேலாதிக்கம் ஒரு சில இராக்கதர்களைச், சமஸ்கிருதம் கற்கச் செய்தது. சமற்கிருதம் அறிந்தவன் இல்வலன் ஒருவன் மட்டும் அல்லன். சமற்கிருதத்தில் வல்லவன் என இராவணன் புகழப்படுகிறான். அதற்கேற்ப, சீதையுடன் எம்மொழியில் உரையாடுவது என்பது குறித்துத் தனக்குத்தானே ஆராய்ந்துகொள்ளும் போது, அனுமன் "சமற்கிருத்தில் பேசினால், அவள், என்னை இராவணனாகத் தப்பாகக் கருத நேரிடுமே எனக் குறிப்பிடுகிறான்" ("யதி வாகம் ப்ரதாஸ்யாமி த்விஜாதிரிவ சமஸ்க்ரதாம்" ராவனம் மன்யமானாமாம் சீதா ப்ஹீத ப்ஹவிஷ்யதி "வானரஸ்ய விஸெஷெண சத்ஹம் ஸ்யாட் அப்ஹிப்ஹாஷனம் அவஸ்யிம்எவ வக்தவ்யம் மானுஷம் வாக்யம் அர்த்ஹவத்" ராமாயணம் 5 : 20 : 19) அனுமான் தானும் சமற்கிருத மொழியின் எட்டாவது இலக்கணப்பெரும் பேராசிரியன் எனக் கூறப்படுகிறான். ஆனால் இது பிற்கால அனுமான் ஒருவனைக் குறிப்பதாகக் கூடும். மேலும், இராக்கதர் பலர், சிறந்த பிராமண்யர் களாயினர்; வேதங்களில் சிறந்த மாணவர்களாயினர்; தவம் மேற்கொள்ளலாயினர், அத்தகையோர் பிரம்மராக்கதர் என அழைக்கப்பட்டனர்; அகத்தியர்களும், விசுவாமித்ரர்களும், இவ்வினத்தைச் சேர்ந்தவர்களாவர். நம்முள் ஒருவனாக இராவணனையும் கொண்ட "பௌலஸ்த்யர்"களும் "நைற்றகர்" களும் கூடப் பிரம்மராக்கதர்கள் தாம். (பர்கிதர் அவர்கள் நூல் : பக்கம் : 242 காண்க).

அயோத்திக்குத் திரும்புமாறு இராமனைத்தூண்ட விரும்பியதைத் தொடர்ந்து, பரதன், படையொடு சென்றபோது, தன்னுடைய வீரர்கள், கார்மேகங்கள் போல்

கறுத்த கேடயங்களை ஏந்தித் தென்னவர்களைப் போலத் தலையில் மலர்களைச் சூட்டிக்கொண்டனர். என அவன் கூறுகின்றான். ("குர்வன்தி குஸுமாபிடான் கிரஸ்ஸுஸுரப்ஹீனமி மெக்ஹப் ரகாஸயிஹ்ற பலகயிர் தாக்ஷினாத்யாஷஹ்ற யத்ஹானராஹ்ற" (அயோத்யா காண்டம் 93 : 13) அம்பட்டரைக் குறிக்கும், உண்மையான தமிழ்ச்சொல் இல்லை; இப்போதுள்ள சொல் ஒன்று, சமற்கிருதத்திலிருந்து கடன் பெற்றது, அல்லது பிற்காலத்துத் தொகைச் சொல் ஆகும் என்ற உண்மை நிலையிலிருந்து அம்பட்டர் செய்யும் முடிதிருத்தும் தொழில், பண்டைய தென்னிந்திய மக்களுக்குத் தெரியாத ஒன்று ஆதலின், அவர்கள், தலை முழுவதும், முடி வளர்த்தனர். தாங்கள் வாழும் நிலங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு மலர் தங்களின் காதல் போர்க் கடமைகள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொருமலர் என எல்லாவகை மலர்களாலும், தங்கள் தலைமுடியினை ஒப்பனை செய்துகொள்வதில் தமிழர்கள் காதல் கொண்டிருந்தனர். உண்மையில் மலர்கள் பற்றிய விஞ்ஞான அறிவு, அவர்களிடையே மிகச் சிறந்து வளர்ந்திருந்தது. ஆகவே, இப்பழக்கம் வடவர்களுக்குப் பண்டைக் காலத்திலேயே தெரிந்திருப்பதில் பொருந்தாமை எதுவும் இல்லை.

உண்மைக்கு மாறான சில தகவல்கள் :

மேலே கொடுக்கப்பட்ட, தென்னிந்தியா பற்றி இராமாயணத்தால் அளிக்கப்பட்ட தகவல்கள் அப்பாக்களின் தொடக்கநிலை வருகையைச் சேர்ந்தனவே ஆகும்: ஆனால் தமிழரசுகள் குறித்துக் கருத்துக் கூறப்பட இருப்பன அதற்கு ஒப்பான நிலையினை உடையன இல்லை. எல்லாத் திசைகளிலும், சீதையைத் தேடத் திட்டமிட்டபோது, சுக்ரீவன் தன்னுடைய தொண்டர் ஒருவரைத் தெற்கே அனுப்பினான். இதுபற்றிய விளக்கத்தைத்தரும்போது நூலாசிரியரின் கிஷ்கிந்தாவுக்கு மட்டும் தெற்கில் உள்ளதாக அல்லாமல், விந்தியமலைக்கும் தெற்கில் கிடந்த அரசுகளின் பட்டியல் ஒன்றைத் தருகிறார். அதில் "ஆந்திரர், புண்டார், சோழர், பாண்டியர், கோவில்களையும், சேர்த்துள்ளார்

("தனைவ் ஆன்த் ராம்ஸ்க, புண்ட்ராம்ஸ்க, சொலான், பாண்டயான், ககொலான்" (கிஷ்கிந்தா காண்டம் 41 : 2) மேற்கே அனுப்பிய படைக்குக் கட்டளைகள் இடும்போது மலபார்க்கடற்கரையைச் சேர்ந்த மிகப் பழைய பெரிய துறைமுகமான முசிரியாம், முரசிபட்டணத்தைக் குறிப்பிட்டுள்ளார் (கிஷ்கிந்தாகாண்டம் : 42 : 13.) இப்பகுதிகளையும் மேலே கூறிய பகுதியையும் திருவாளர் கிரிப்த் (Griffth) அவர்களின் இராமாயணத்தில் மொழி பெயர்க்கப்படவில்லை. (ஆகவே வடஇந்திய, திருத்தப்பட்ட பதிப்பில் அவை காணப்படவில்லை என்று எண்ணுகிறேன்) இவ்விரு குறியீடுகளும், உண்மையில், இராமாயணத்தைச் சேர்ந்தவையாயின், அவை அப்பாடலின் தொடக்ககால வரைவைச் சேர்ந்தனவாக இருக்க முடியாது. "முத்தாலும் பொன்னாலும் அணிசெய்யப்பட்ட, பாண்டியர் பொன் வாயில்களைப் பெருங்கடலின் கரைக்கண் காண்பீர்" எனத், தன்னுடைய வானரக் கூட்டத்திற்குச் சுக்கிரீவன் ஆணையிடுவது இடம் பெற்றிருக்கும், திருத்தப்பட்ட எல்லா மறுபதிப்புகளிலும் காணப்படும். பாண்டியர் பற்றிய குறிப்புகளும் இத்தகையவே. ("ததொ ஹெமமயம் திவ்யம முக்தா மணி விப்ஹூஷிதம் / யுக்தம் கவாடம் பாண்டியனாம் கதாத்ரக்ஷியத வானராஹ்) திருவாளர் கோவிந்தராசன் என்ற ஒரு தமிழர் இப்பகுதிக்கு உரை கூறும்போது, கவாடம் என்பது, அப்பெயர் தாங்கிய ஒரு நகரத்தைக் குறிப்பதாக விளக்கம் அளித்துள்ளார். திருவாளர் கோவிந்தராசன் அவர்கள், கவாடபுரம், பாண்டியரின் பண்டைத் தலைநகராகும் என்ற காதுவழித் தமிழ்க் கதை கேட்டு, அவ்வாறு கேட்டு அறிந்ததைத் தம் உரையுள் கொண்டு வந்து இருக்க வேண்டும். அத்தமிழ்க் கதைதானும், தமிழ் இலக்கியங்களில் மிகவும் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்தது. இராமாயணத்து இப்பகுதியைத் தவறாகப் பொருள் கொண்டதன் விளைவாகக் கட்டிவிடப்பட்ட கதையாகவும் இருக்கக் கூடும்) இராமாயணக் கதையின் பொதுவான கதைப் போக்கு, கோதாவரிக்குத் தெற்கில், தங்கள் தங்களுக்கெனத் தனித் தனி தலைவர்களைக் கொண்ட வானரங்களுக்கு

உரியதான, தண்டகாரண்யத்தின், அடர்ந்த பருமரக் காடுகள் நிறைந்த உட்பகுதியாம் சில மாவட்டங்கள் தவிர்த்து, தென் இந்தியா முழுவதும், இராவணனின் ஆட்சிக்கீழ் இருந்தது என உய்த்துணர அமைந்துள்ளது. பிறர் வாழப் பொறாத வனும் அனைத்து வகையாலும் ஆற்றல் வாய்ந்தவனுமான இராவணன், தன் வாயிலுக்கு அணித்தாகப் பாண்டியர் பெருஞ் செல்வாக்கோடிருப்பதை ஒருகணப் போதும் பொறுத்துக்கொள்ளமாட்டான், மேலும் அந்நாட்களில், பாண்டியர், ஆட்சியாளர்களாக இருந்திருப்பின், இராவணனுக்கும், இராமனுக்கும் நடைபெற்ற பெரும் போரில், அவர்கள், எந்தப் பக்கமும் சேர்ந்துகொள்ளாதிருப்பது, நம்புதற்கு அரியதாகும். மேலும், இந்த மாவட்டங்களும், எந்த நாட்டின் கடற்கரையிலிருந்து, இராமன் கடல் கடந்து இலங்கைக்குச் சென்றானோ அந்தப் பாண்டிய நாடும், இந்தியாவின் தென்கோடியில் நடைபெற்ற இராமனுடைய பாதயாத்திரையை விளக்கிக் கூறும் பகுதியில் குறிப்பிடப் படவில்லை. இராமன், தன்னுடைய புகழ்பெற்ற பாலத்தைப் பாண்டிய நாட்டிலிருந்தே கட்டத் தொடங்கினான். பாண்டியர்கள், அவன் காலத்தில் இருந்திருப்பா ராயின், அது, அப்பாட்டில், இதுபற்றிக் கூறும் பகுதியில் குறிப்பிடப் பட்டிருக்கக் கூடும்.

ஆகவே, இராமாயண காலத்திற்குப் பிறகு, இராவணனுடைய ஆட்சி மறைவின் பயனாகச் சோழ, சேர, பாண்டியப் பழம்பபேரரசுகள் எழுந்தன என நான் சொல்கின்றேன். இராமாயணத்தில், பாண்டியர், அல்லது மூன்று அரசுகளுடன் அனைத்தும் பற்றிய குறிப்பீடுகள், அக்கதையில் அப்பாட்டின் இரண்டாம் வரைவில் கி. மு. முதலாம் ஆயிரத்தாண்டில் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

அகத்தியர் :

இராமாயணம் குறித்து மற்றுமொரு கருத்து ஈண்டு ஆராய்தற்குரியது. விதர்ப்ப நாட்டு இளவரசி லோபா முத்திரையின் கணவராகிய முதல் அகத்தியர், இராமனுக்கு

இருபது தலைமுறைகளுக்குச் சிறிது அதிக காலம் முன் வாழ்ந்திருந்த காசி நாட்டு அரசன், அலர்கா என்பவனின் சமகாலத்தவராவர். ஆக, நனிமிகப் பழங்காலத்து அகத்தியர், விந்தியத்திற்கு மிக மிக அணித்தான பகுதியில் வாழ்ந்திருந்தார். இது, அகத்தியர், விந்தியத்தின் முடியை நசுக்கித், தாம் தெற்கிலிருந்து திரும்பும் வரை தாழ்ந்தே இருக்குமாறு ஆணையிட்டார் என்ற கட்டுக்கதையின் பொருளாதல் காட்டும். அவருடைய ஆஸ்ரமம், சாத்புரா மலைத்தொடரின் மேற்குப் பகுதியாகிய வைடூரிய மலைக்கு அருகில் இருந்ததாகத் தெரிகிறது. அவர், தென்பால் நாடுகளைத், தம்முடைய தவநெறியால், முழுக்க முழுக்கக் காப்புடையதாக ஆக்கினார். ஆனால், பஞ்சவடியிலிருந்து இரண்டு யோசனை தொலைவில் இராமன் சந்தித்த அகத்தியர், இராமனுக்கு நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த முதல் அகத்தியராக இருக்க முடியாது. பிற்பட்ட அகத்தியர்களில் ஒருவராகவே இருக்க வேண்டும், இராமர் காலத்தவராகிய இந்த அகத்தியர் தெற்கு நோக்கிச் செல்லும் இராமன் தங்கியிருந்த தவக்குடில் அருகில் இருந்த கோதாவரிக்கு அருகில் வாழ்ந்திருந்தார். அவன் தன் மனைவி சீதையோடு, தன்னுடைய புஷ்பகத் தேரில் திரும்பி வரும், வடக்கு நோக்கிய பயணத்தின் போதும் அவர் தவக்குடிலாக, அது, தொடர்ந்து இருந்தது. ஆகவே அகத்தியர் தவக்குடில், இராமன் காட்டில் அலைந்து கொண்டிருந்த காலம் முழுவதும் பஞ்சவடிக்கு, இரண்டு யோசனை தொலைவிலேயே இருந்தது. என்றாலும் கூடத் சீதையைத் தேடுமாறு, தன் வானரங்களைத் தெற்கே அனுப்பியபோது, சுக்ரீவன், "தெய்வத்தன்மை வாய்ந்த, நோய் தவிர்க்கவல்ல, தெளிந்து ஒளிவீசும், பெருமை வாய்ந்ததும், அப்ஸர மகளிர் அடிக்கடி வந்து நீராடிச்செல்வதும், ஆகிய நீரினை உடைய காவிரி ஆற்றைக் காண்பீர்கள்" எனக் கூறி அனுப்பினான் ("ததஸ்தாம் ஆபகாம் திவ்யாம் ப்ரஸன்ன ஸலிலாம் ஸ்வாம்) ததர த்ரக்ஷ்யத்ஹ காவெரீம் விஹிதாம் அப்ஸலோசண இஹ திஸ்யாஸீனாம் நகஸ்யாக்ரெ மலயஸ்ய, மஹ ஹெளஜஸாம் / த்ரக்ஷத்ஹாதித்யசங்காஸம் அகஸ்த்யாம்ர்ஷித்தமம்" இராமாயணம் வி. 41 : 15 : 16) ஈண்டு,

சீதை, இராவணனால் மாயமாகக் கவர்ந்து செல்லப்பட்டது போல, அகத்தியர், நூலாசிரியரால், மாயமாகக் கொண்டு செல்லப்பட்டு, மலையமலை உச்சியில் போடப்பட்டுள்ளார் : ஆகவே, இராமர்காலத்து அகத்தியரை விட அதிக தூரம் தெற்கே சென்று, தமிழ்நாட்டில் வாழத் தொடங்கிவிட்ட அகத்தியர்களுக்குப் பிறகு வாழ்ந்த பிற்காலப் புலவர் ஒருவரால், இது, நுழைக்கப்பட்டிருக்க வேண்டும்.

தென்னிந்தியாவில் ஆரிய வழிபாட்டு முறை பரவுதல் :

இராமன் வெற்றி, இராவணன் அழிவுகளின் விளைவு, தென்னிந்தியாவில் மிகவும் பெரியது. இராமர் காலத்திற்கு முன்பே, ஜனத்தானத்திற்குத் தெற்கே நெருக்கிப் புகுந்து கொண்டிருந்த ஆரியர்கள், பெரும் எண்ணிக்கையில் மேலும் தெற்கில் பரவி வாழலாயினர். பிரமராக்கதரின் எண்ணிக்கை பெருகிற்று. பிரம்மராக்கதர் என்ற சொல் பிற்கால வழக்கில் விரும்பத்தகாத கசப்பான பொருளைப் பெற்றுவிட்டது. அவர்களுடைய செயல்பாடுகள் குறித்துப் பொருத்தமற்ற கட்டுக்கதைகள் கட்டிவிடப்பட்டன. ஆனால், அச்சொல் தொடக்கத்தில் விசுவாமித்ரரின் மகன்களைப் போலத் தஸ்யூக்கள், இராக்கதர்களோடு மண உறவு கொண்டு, அந்நிலையால் பிராமணர்களாகவே இருந்து, விசுவாமித்ர, கௌசிகக் கோத்திரங்களைக் கண்ட பிராமணர்களின் மரபு வழியில் வந்தவர்கள் அல்லது அகத்தியர்களின் மாணவர் களாக அவர் கோத்திரத்தோடு கலந்துவிட்டவர்கள் என்றும் பொருளுடையதாகும். (விசுவாமித்திரர் ஆணைக்கு அடங்கியிருந்த மத்துவச்சந்தன் மற்றும் இளைய மகன்கள் கௌசிக மரபினர் ஆயினர். அவர் ஆணையை மறுத்த மூத்த மகன்கள், விஸ்வாமித்திர கோத்திரத்தைச் சேர்ந்தவராயினர் என்கிறது. பாகவதபுராணம்". [I x : 16 : 29-37 பர்கிதர் : பக்கம் : 235] (இவர்களுக்கு முன்பே, பார்க்கவர்களும் அவர்களின் ஆன்மநெறிவழிவந்தவர்களும், தென் னிந்தியாவில், பரவலாகச் சென்று வரலாயினர். இக்குடும்பங்கள் தென்னிந்திய பிராமண மேலாதிக்கத்திற்கு

மையக் கருவை உருவாக்கிவிட்டன. நாட்டின் இப்பகுதியைச் சேர்ந்த பிராமணர்கள், சில வகையில், வேதகாலத்துப் பழக்க வழக்கங்களை அப்படியே காப்பாற்றிக் கொண்டு பிற வகைகளில் ஆரிய வர்த்தத்திற்குத் தெரியாத, தென்னிந்தியப் பழக்க வழக்கங்களை மேற்கொள்ளும் சிறப்பியல்பினைக் கொண்டுள்ளனர். நடுநிலையில், முனைப்பாக, பண்டைய வாஸிட்டர்களைப் போல, உச்சிக் குடுமியின் முடிநன்கு தெரியும் வகையில், தலை மயிரை வழித்துக் கொள்கின்றனர். (ரிக்வேதம் : 7 : 33 : 1) பண்டு, "பவஸ்த" மற்றும் "வவ்ரி" என்றும், அல்லது "பரொத் ஹானம்" மற்றும் "நீவி" என்றும் அழைக்கப்பட்ட இரண்டு ஆடைகளை அணிந்தனர். (அதர்வ வேதம். 4.7.6 : 9.10.7;8.2.16) இயலும் போதெல்லாம் தைத்த ஆடை அணிவதைத் தவிர்த்தனர். பிற்கூறிய பழக்கத்தில் ஆடவரினும், மகளிர் மிகவும் குறியாக இருந்தனர். ஆனால், பிறிதொரு வகையில், திருமணச்சடங்குகளில் நனிமிகு இன்றியமையா நிகழ்ச்சியாகத், தாலி அணிந்துகொள்வது, மஞ்சள் பூசப்பட்ட சிறு கயிற்றைக் கழுத்தில் அணிந்து கொள்வது போலும், ஆரியமல்லா வழக்கங்கள் தென்னிந்தியப் பெண்டிர்க்கு மிகவும் விருப்பம் தருவனவாய் அமைந்தன. (இது திருமணச் சடங்கைப் புனிதமாக்கத் தேவைப்படும் உயிர்நாடியான சடங்குகளாகக் கைப்பிடித்தல் (பாணிகிரகணம்) ஏழு அடி எடுத்து வைத்தல் (சப்தபதி) ஆகிய நிகழ்ச்சிகளைக் கருதும் "க்ஹ்ருஹ்ய சூத்ரங்களுக்கு, அறவே தெரியாத, தனித் தமிழ் வழக்கங்களாம்) மேலும், கணவனாக வரப்போகிறவனை, மணப்பெண்களின் தாயும், மணப் பெண்ணின் தோழிகளும் வரவேற்கும் முறையும், தஸ்யூக்களின் பழைய மணச்சடங்குகளின் சின்னங்களே ஆகும். மணமகனையும் மணமகளையும் திருமணப்பந்தற்கீழ் நிற்கவைத்து, அவர் கால்களைக் கழுவுதல் அடையாளமாகப் பால் வார்த்துக்கழுவி, செந்நிறம் ஊட்டப்பட்ட சோற்று உருண்டைகள் நான்கு திக்கிலும் வீசப்படும். (மணமக்களைத் திருமணப்பந்தற்கீழ் வரவேற்றல், அகநானூற்றில் (86) விளங்க உரைக்கப்பட்டுள்ளது. "நிரைகால்தண் பெரும் பந்தல்". முருகனை வழிபடும்போது, அவனுக்கு அளிக்கும் பலியாக,

திருமுருகாற்றுப் படையில் (233-34) உரைக்கப்பட்டிருக்கும் இரத்தத்தோடு கலந்த சோற்றிற்கு "குருதியோடு விரஇய தூவெள்ளரிசி, சில்பலிச்செய்து" - பார்ப்பனர்கள் கொண்ட மாற்றுப் பொருள், செந்நிறம் ஊட்டிய சோற்று உருண்டை) இப்பழக்க வழக்கங்கள் பழைய ஆரிய வந்தேறிகள் மணந்து கொண்ட தஸ்யூக்களின் பெண்களால், ஆரிய விவாகச் சடங்குகளில் நுழைக்கப்பட்டிருக்க வேண்டும். தென்னிந்திய ஆரியர்களின் வாழ்க்கை நெறிச் சட்டங்களை வகுத்தளித்து வரும், பிற்காலச் சூத்ரகாரர்களில் ஒருவரும் ஆகிய ஆபஸ்தம்பர், "சூத்திரர்களும், பெண்டிரும் கொண்டிருக்கும், இவ்வறிவு அனைத்தும், கற்று முடித்துப் பெற்ற ஒன்று" எனக் கூறுமளவு, இவை போலும் மிகப் பழைய தஸ்யூ மணச்சடங்குகள், அத்துணைப் புனிதம் வாய்ந்தவையாக மதிக்கப்பட்டன. (சானிஷ்டஹா யாவத்யா ஸ்த்ரீஸு த்ரொஷ்ரக." (தரும் சாத்திரம்) தென்னிந்திய மகளிர், தங்களுடைய வடக்கத்திய உடன் பிறப்புகளுக்குத் தெரியாத பிறிதொரு வழக்கத்தையும்-சேலையைக் கால்களுக்கு இடையே நுழைத்துக் கட்டும், அதாவது கச்சம் கட்டும் வழக்கத்தைச் சமய நெறியாகவே கொண்டு பின்பற்றி வருகின்றனர். இது பிராமண இனத்து மகளிர் தவிர்த்து, வேறு இனத்து மகளிர்களால் பின்பற்றப் படுவதில்லை. ஆகவே, இஃது ஒரு தஸ்யூ வழக்கமன்று. உறுதியாக-தம்முடைய ஆரியக் கணவன்மார், கச்சத்திற்குச் சிறப்பான புனிதத் தனித்தன்மை சேர்த்திருப்பதால், அவர்களுடைய மனைவி மார், தொடக்க காலத்தில், மணமாகாத, மறுபிறவியினராகாத தஸ்யூ சகோதரி களிலிருந்து தங்களை வேறு பிரித்துக் காட்டக் கணவர் செய்ததையே செய்துகாட்ட இது வந்தது போலும்.

ஓர் அறிவார்ந்த விளக்கம் :

விசாகப் பட்டினம் ஜமீன் மேலாளர், திருவாளர். ஜெய்ப்பூர் ஜி. ராமதாஸ் பந்துலு என்பவர், இராவணன் வழிவந்தவர், திராவிடப் பழங்குடியினராவர் என்ற கொள்கையை எண்பிப்பதற்குத் தேவையான அகச்

சான்றுகளைத் தரவல்ல ஒரு குறிப்பீட்டினை எனக்கு அனுப்பியுள்ளார். நமக்குக் கிடைக்கும் நனிமிகப் பழைய திராவிடக்கிளைமொழி, மத்திய மாநிலத்திற்கும், வடசர்க்கார் மாநிலத்திற்கும் இடையில், மலைப்பகுதியில் பேசப்படுவதும், சில சமயம் "கோந்த்" எனத் தவறாக அழைக்கப்படுவதும் ஆகிய "கூயி" மொழி ஆகும். இம்மொழி பேசுவோர் திராவிடர்களில் மிகவும், நாகரிகம் பெற்றவர்கள். நாளடைவில் விட்டொழிந்த பழைய பழக்க வழக்கங்களைக் கைவிடாமல் அப்படியே காத்து வருகின்றனர். குறிப்பீடு தந்த ஆசிரியர், "அக் கூயி" மக்களிடையே பல ஆண்டுகள் வாழ்ந்தவர். ஆகவே, அவர் தரும் செய்தி முதல் தரமானவை. அவர் கூறுகிறார் : "ஒவ்வொரு கூயி" இனத்துச் சிற்றூரும் ஊர் முகப்பில "நிஷான் பெண்ணு" எனும் பெயர் தாங்கிய பெண் தெய்வத்தைக் கொண்டுள்ளது. அது ஆறு அல்லது ஒன்பது அங்குல உயரம் உள்ள நீண்ட உருளைக் கல்வடிவில் ஊர் நுழைவாயிலில் ஒரு மரத்தடியில் நிறுவப்பட்டுள்ளது. அதை மனிதர்களோ மிருகங்களோ தொட்டுப் பழுதாக்கி விடக்கூடாது என்பதற்காக அது கற்குவியல்களால் சூழப்பட்டிருக்கும். அக்கல் உடைந்துவிட்டாலோ இருந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டாலோ வேறுவகையில் பழுதுபட்டாலோ அவ்வூருக்குச் சில கேடுகள் வந்துறும் என நம்பப்படுகிறது. கிராமத்தவர் ஒவ்வொரு விழாவின் போதும் கோழி ஆடு எருமை பசு பன்றி ஆகியவற்றை அப்பெண் தெய்வத்திற்குப் பலி கொடுத்து வருகின்றனர். "இராவணன் தலைநகரின் காவல் தெய்வமாம் "லங்கா" என்பவள், தன்னால் அழிக்கப்பட்டபோது அவளோடு அனுமான் நடத்திய போர் பற்றிக் கூறும் வால்மீகியின் கவிதைக் கூற்றின் பின்னணியில் இந்நிகழ்ச்சி நுண்ணியதாக உய்த்துணரப்படும். அவள் அந்நகரைக் காத்து நிற்கும் கட்புலனாகாகக் கன்னித் தெய்வம். முழுமுதற்கடவுள், அவளை நோக்கி, "வானர வீரன் ஒருவனால், நீ அழிவுறும்போது இராக்கதர்களை, அழிவுகாலம், அணுகிவிடும் என்பதை அறிந்து கொள்வாயாக" எனக் கூறியிருந்தது. (அஹம் து நகரீ லங்கா ஸ்வயமெவ ப்லவங்கம / நிர்ஜிதாஹம் த்வயா வீர விக்ரமெண ம ஹா பல / இதம் க தத்ஹ்யம் ஸ்குனு மெ ப்ருவான்த்யா

வை ஹரீஸ்வர / ஸ்வ்யம் ஸ்வயம்ப் ஹூனா தத்த வரதானம் ய்த்ஹா மம /

யதா த்வாம்வானரஹ்ற் கஸிசித் விக்ரமாத் வஸம் ஆனயெத் / ததா த்வயா விஜ்ஜெயம் ரக்ஸஸாம் ப்ஹயமாகதம். ராமாயணம் : 5 : 3 : 45-47) தென் இந்தியச் சிற்றூர்கள் ஒவ்வொன்றும், குறிப்பாகக், கல்வி செல்வ நிலைகளில் தாழ்ந்திருப்போரால் வழிபடப்படுவதும், உயர்சாதியினரால், சிறந்த தாய்க்கடவுளாம் துர்க்கையின் பல்வேறு உருவெளிப்பாடுகளாகக் கருதப்படுவதும் ஆகிய எல்லை யம்மன் என்ற எல்லைக்காவல் தெய்வம் ஒன்றை இன்றும் கொண்டுள்ளன.

தலைநகருள் நுழையும் அனுமான், களிப்பூட்டும் காட்சி அரங்குகளுக்கிடையே "தாருபர்வத்ம்" அல்லது பட்டுப் போன மரத்துண்டுகளின் குன்று நிகர் குவியல்களைக் கண்டான். திரு. ராமதாஸ் பந்துலு அவர்கள், "விசாகப்பட்டிணம் மாவட்டத்தின் சமஸ்தானச் சிறு நிலப்பரப்புகளில், தாரு என்ற சொல், எரிபொருள் எனும் பொருள் தருவதாக உணரப்படுகிறது. எரிபொருள்கள், சிறு குன்றுகள் போலவும் கோயில் கோபுரங்கள் போலவும் சேர்த்து வைக்கப்படுவன, எங்கும் காணக்கூடியவை. இம் மலைப்பகுதிகளில், மழை, மிகப் பெருமளவில் பெய்யு மாதலால், காய்ந்த சிறு மரத்துண்டும் கிடைக்காத போது, அப் பருவவிளைவுக்கு எதிராக, அவைபோலும் பெரும் போர்கள் தேவையாகிவிட்டன. அனுமான் இலங்கைக்கு மாரிக்காலம் கழித்துச் சென்றான், ஆதலின், வானரத் தூதுவன், இராவணன் வாழிடத்திற்கு அணித்தாக, இவை போலும், மரக்குவியல்களைக் கண்ணுற்றதில், வியப்பேதும் இல்லை. *(இராமாயணம் 5 : 6 : 36)*

திரு. ராமதாஸ் பந்துலு அவர்கள் குறிப்பிடும் மற்றொரு கூற்றும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது, "இராவணன் போருக்குச் சென்றபோது, புலி, குதிரை, ஒட்டகம், கலைமான் போலும் முகங்களையுடைய சிலவும் உடன் சென்றன. *(யஸ்னகவ நா நா வித்ஹக்ஹொர நலிபர் வ்யாக்ஹறொ ஹ்ஹ்ர நாகெந்த்ர*

மற்காஸ்வ, வக்த்ரஹ் / ப்ஹூதனதர்வ்ஹதொ ப்ஹாதி, விவற்ப்த்த நெத்ரைஹ் கொஸென சுரானாமபி தர்பஹன்தா / (இராமாயணம் : 6 : 59 : 24). இந்தப் பூதங்கள், மேலே கூறிய விலங்குகளின் முகம் போலும் முகமூடிகளை அணிந்த ராக்ஷதர்களாவர். தண்டகாரண்யத்தில் அமைதி வாழ்வு நடத்தி வருபவர்களையும், போரில், தங்கள் பகைவர்களையும் அச்சுறுத்த ராக்ஷதர்கள் கையாளும் பல்வேறு முறைகளில் இதுவும் ஒன்று. ஆரியர்களோடு போராடிய வடஇந்திய தஸ்யூக்களும், இவை போலும் முறைகளைக் கையாண்டனர். மாயாஜால முறைகளைக் கையாளுவதில் புகழ் பெற்றவர் என்பது பொய்யன்று : மெய்யே, (ப்ர மாயினாம் அமினாத் வர்பனிதிஹ்) 'மாந்திரிகரின் சூதுவாது நிரம்பிய தலைவனை எளியோர் வளர்க்கின்றனர். ரிக்வேதம் (திரு. கிரிப்த் பதிப்பு) III : 34 : 3.

"மாயாவான் அப்ரஹ்மா தஸ்யுஹ்" - 'மந்திரவாதி, வழிபாடு இல்லாத தஸ்யூ' (ரிக்வேதம் : 4 : 16-9) ஸுஸ்னஸ்ய மாயா - சுஸ்ஸனன் "மாயாஜாலம்" - (ரிக்வேதம் 5 : 31-7) 'அஹிர்மாயஸ்ய' - பாம்புகளின் இழி தன்மையினை உணர்ந்த ஒருவன் 6 : 20 - 7. "அதெவீஹ்" மாயாஹ் மாயாஜாலத்தின் கடவுள் அற்ற கலை". (ரிக்வேதம் - 1-10) கூயி இனத்துப் பழங்குடியினரும் கொடு விலங்குகளின் முகங்கள் போலும் முகமூடிகளை அணிந்து கொள்வது காட்டெருமை, கலைமான்களின் கொம்புகளைத் தலையில் அணிந்து கொள்வது ஆகிய வழக்கங்களைக் கொண்டுள்ளனர். தொடக்கத்தில், போருக்குப் பயன்படுத்தப்பட்ட இவ்வழக்கங்கள் இப்போது ஆடல் பாடல் போலும் இன்பக் கேளிக்கைகளுக்கும் மேற்கொள்ளப்படுகின்றன. கோந்து இனத்தவரின் போருடை, காண்பவர் உள்ளத்தில் அச்சத்தை ஊட்ட எண்ணிக், காட்டெருமைகளின் கொம்புகள், கான மயில்களின் இறகுகளைக் கொண்டு வகை செய்யப்பட்டு மடிப்புக் கலையாமல் அலையலையாகத் தொங்கும் சிவப்பு மேலங்கி, தோலால் ஆன மெய்யுறைகளைக் கொண்டு நுட்பமாகச் செய்யப்பட்டவையாம். (Thurston's Castes and Tribes. 3 : பக்கம். 364) நடனத்தின்போது, மான், காட்டெரு

மைகளின் கொம்புகளையும் சிலர் தலையில் அணிந்து கொள்கின்றனர். (Central Provinces Gazeteers, Chatisganu Fenudatory States. Page : 51.)

இராவணனின் பத்துத் தலைகள் பற்றிய ஐயம் தீர்த்துக் தெளிவளிக்கும் குறிப்பீடு ஒன்றையும் திருவாளர் பந்துலு அவர்கள் கொண்டுள்ளார். "தஸாஸ்ய" "தஸக்ரீவ" என்ற சொற்களின் தவறான பொருள்கோளே, இராவணனுடைய பத்துத்தலைகளுக்குக் காரணம் என நீண்ட நாட்களாக யூகிக்கப்பட்டு வருகிறது. இவ்விரு சொற்களின் பிறப்பியல்பு குறித்து ஏற்கக் கூடிய விளக்கத்தைப் பந்துலு அவர்கள் தருகிறார்.

"தஸாஸ்ய" என்பது இராவணனுக்குச் சூட்டப்பட்ட ஒரு பெயர். அதுவும் அதனோடு இனத் தொடர்புடைய "த்ஸக்ரீவ" "த்ஸானன" என்ற சொல் வடிவங்களும் பத்துத் தலைகளைக் குறிப்பனவாகப் பொருள் கொள்ளப் பட்டுள்ளன. அதன் விளைவாக இராவணன் எப்போதும் பத்துத் தலைகளையுடைய கொடுமை செய்யும் பேயாகவே உருவம் செய்யப்பட்டு வந்துள்ளான். ஆனால் வால்மீகி தம்முடைய நூலில் எங்கும் அவ்வாறு விளக்கவில்லை. ஒவ்வொரு இடத்திலும் ஒரு தலையும் இரு கைகளும் உடையவனாகவே அவனைக் காட்டியுள்ளார். அங்ஙன மாகவும் அரக்கர் தலைவனுடைய இந்தப் பெயர்களுக்கு உரையாசிரியர்கள் கொடுக்கும் விளக்கம் எவ்வகையில் முறையாகும்? இவ்விரு சொற்கள் குறிக்கும் சிறப்புப் பொருள் முற்றிலும் வேறாகவே இருக்கவேண்டும். அவ்வாறே "தஸாஸ்ய" "தஸக்ரீவ என்ற இவ்விரு சொற்களும் வீரகாவியத்தில் ஆளப்பட்டிருக்கும் இடங்களை நோக்க, அவை யாருக்குச் சூட்டப்படுகின்றனவோ அவர்களின் குறிப்பிட்ட ஓர் ஒழுக்க நிலையை உணர்த்துபவையாகத் தெரிகின்றது. "ராவணோனம ப்ஹத்ரந்தெ தஸக்ரீவஹ்ம் ப்ரதாபவான்" (III-48-2) "ஸெதெயாஹ்ம் வாசம் ஸ்ருத்வ தஸக்ரீவஹ்ம் ப்ரதாபாவான்" என்ற தொடர்களில் "ப்ரதா பவான்" என்ற சொல்லை இணைத்திருக்கும் முறை

"ராக்ஷஸென்த்ஹ்ற ப்ரதாபவான்" என்ற தொடரில் இணைத்திருப்பது போன்றதே ஆகும். இந்த மூன்று எடுத்துக்காட்டுகளிலும் இராவணன் "ப்ரதாபம்" அல்லது புகழ் அச்சொல்லின் முன் இணைக்கப்படும் சொற்களாலேயே உணர்த்தப்படுகிறது. கடைசித் தொடரின் பொருள் : "ராக்ஷதர்களுக்கு அரசன் என்ற புகழை இராவணன் பெற்றுளான்" எனும் பொருளுணர்த்துகிறது. ஆகவே, அத்தொடரின் பொருள் தெளிவாகவே உளது. ஆனால், இராவணன் எந்தெந்த வகையில் புகழ்பெற்றவன் என்பதை உணர்ந்து கொண்டாலல்லது, முதல் இரு தொடர்களின் பொருளை அறிவது இயலாது. அரக்கர் தலைவனின் புகழ்.

ராவணொ - லொக - ராவஹஹ்ற.

ராவணொ - ஸத்ரு - ராவன்அஹ்ற.

யென வித்ரஸித-லொக-ஸ்ஸதெவ் ஆஸுர-பற்றக்அஹ்ற லொக க்ஷொப் ஹயிதாரம்க நாதை ர்ப்ஹூதவிராவினம்" என்ற தொடர்களில் வெளிப்படுகின்றன. அவன் உலகங்களைத் தொல்லைக்கு உள்ளாக்கினான். பகைவர்களைத் தொல்லைக்கு உள்ளாக்கினான். கடவுள் உலகிற்கும் அசுரர்களுக்கும் பன்னர்களுக்கும் பேரச்சம் ஊட்டினான். உலகைத் துன்புறுத்தி ஆங்கு வாழ்பவரைத் தன் குரலால் அச்சுறுத்தினான்.

இராவணனுடைய சிறந்த புகழெல்லாம் ஒவ்வொரு வருக்கும் தொல்லை விளைவிப்பதிலேயே அடங்கியிருந்தது என்பதை இவை காட்டுகின்றன. "தஸக்ரீவஹ ப்ரதாபவன்" என்பதன் பொருள் தொடக்கத்தில் தொல்லை தரும் அல்லது இன்னல் தரும் புகழுடையான் என்பதாம். "தாஸஸ்ய" என்பதும் நிச்சயமாக அதே பொருளையுடையதுதான். 'ஸ' அல்லது 'அஸி' என்பது, கூயி மொழியில் இடம்பெயர் விகுதி ஆகும். மூலச் சொல்லாகிய "தஸாஸி" அல்லது "தஸாஸ" சமஸ்கிருதத்தில் "தஸாஸ்ய" என எளிதில் ஆகிவிடும். இராவணன் ஒரு "தஸாஸி" அதாவது அல்லல் உறுத்தும் ஒரு மனிதன்.

கூயி மொழியில் 'கிவ' என்பது ஒரு விளைச் சொல் விகுதி; தஸ-கிவ என்பது அல்லல் உறுத்துவதற்கு; திய-கிவ என்பது சினமூட்டுவதற்கு; 'வேப-கிவ' என்பது கொல்லுவதற்கு அல்லது மோதுவதற்கு; 'ஒப-கிவ' என்பது எடுத்துக் கொள்வதற்கு. 'பண்டி-கிவ' என்பது ஏமாற்றுவதற்கு ஆகிய இவை, பெயர்களோடு 'கிவ' என்பதை இணைப்பதால் உருவாகும் 'கூயி' மொழி வினையெச்சங்களுக்கான எடுத்துக்காட்டுகள். 'தஸ-கிவ' என்பது 'தஸக்ரீவ' என எளிதில் ஆகிவிடும். 'தஸ-க்ரீவஹ்ற ப்ரதாபவான்' என்ற சொற் றொடர் அவன் பெருமை அல்லது புகழெல்லாம் பிறரைத் துன்புறுத்துவதே என்பதை அறிவுறுத்துகிறது. இராவணன் தோள்மீது பத்துத்தலைகளை வைக்கும் பொருள் கோளினும், இப்பொருள்கோள், இராவணன் இயல்போடு மிகவும் பொருந்துவதாம்.

I

சேர, சோழ, பாண்டிய அரசுகள், இராவணன் ஆட்சி அழிவின் விளைவாகப், பெரும்பாலும் இராமாயண காலத்திற்குப், பின்னரே தோன்றியிருக்க வேண்டும்?

(மறுப்பு)

தமிழர் வரலாற்று நூலாசிரியர், திருவாளர், பி. டி. சீனிவாச அய்யங்கார் அவர்கள் கொண்ட முடிவு இது. "The three ancient powers of sola, sera, pandya rose, probably, as a result of the extinction of Ravana's rule, after the age of Ramayana". (History of the Tamils; (Page : 54) என அவர் கூறுவது காண்க.

இதே கருத்துப்பட, வேறு சில இடங்களிலும் அவர் பின்வருமாறு கூறியுள்ளார். சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூன்று பெரும் அரச இனங்களின் தோற்றம், தென்னிந்தியா, இராமனால் அமைதிப்படுத்தியதன் அரசியல் விளைவே என நாம் யூகிக்கலாம். இம் மூன்று பெயர்களும் இராமாயணத்தில் இடம் பெற்றிருந்தாலும், புராணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் மூன்று இராவணன்களின் ஆட்சிக் காலத்தில், அச் சேர, சோழ, பாண்டிய அரச இனங்கள்

செல்வாக்குப் பெற்றிருக்க மாட்டா, என்பது உறுதி. இந்த இராவணன்கள், தென்னிந்தியா முழுமையும் தன்னேரில்லா அரசியல் செல்வாக்குப் பெற்றிருந்தனர். கோதாவரி ஆற்றங்கரையிலானதான ஜானஸ்தானம், மூன்றாவது இராவணன் காலத்தில், அவன் ஆட்சியின் எல்லைக் காவல் நிலையமாக இருந்தது. அவன் குடிமக்களாம் அரக்கர்கள், விந்தியத்தின் தென்பால் உள்ள இந்தியா முழுவதும் திரண்டு கிடந்தனர். ஒரு சிலர், அவ்வப்போது ஆரிய வர்த்தத்துள்ளும் புகுந்து வாழ்ந்தனர். அவன் ஆட்சி நிலவும் எல்லைக்குள், வேறு அரச இனங்கள், ஆட்சி மேற்கொண்டிருந்தன என்பது நடந்திருக்க இயலாத ஒன்று. அக் காலத்தில், சேர, சோழ, பாண்டியப் பழங்குடியினர் இருந்திருக்க இயலும். ஆனால், அக் குடிகளிலிருந்து தோன்றிய அரச இனங்கள் இருந்திருக்க இயலாது. "A probably political, consequence of the pacification of South India by Rama was, we may presume, the rise of the three great royal dynasties fo sola, sera, and pandya. Though these names occur in the Ramayana, it is certain, that the dynasties could not have flourished in the ages, when the three Ravana's that are mentioned in the, Puranas ruled. These Ravanas apparently wielded unresticted sway all over South India. Janasthana, on the bank of the Godavari, was one of the outposts of the latest Ravana. His subject swarmed all south of the Vindhyas and stray bodies of them, frequently entered Aryavartha, within the boundaries of this realm, it was not possible for other dynasties to rule. The three tribes, solas, seras, Pandyas perhaps existed at time; but the royal dynasties that rose out of them did not" (History fo the Tamils; Page : 85)

தமிழ் அரச இனங்கள் மூன்றும், தென்னிந்தியா, ஸ்ரீ ராமனால் அமைதியுறப் பெற்ற பின்னர், ஆட்சிக்கு வந்திருக்க வேண்டும் என நான் கருதுகின்றேன்.

("I have assumed that the three Tamil dynasties rose to power after the pacification of South India by Sri. Rama" Page : 150)

இதற்கு ஆதாரமாக அவர் காட்டும் காரணங்கள் பின் வருவன :

1. கோதவரிக்குத் தெற்கே உள்ள அனைத்து இந்தியாவும், இராவணன் ஆட்சியின் கீழ் இருந்தது.

2. பொறாமையும் பேராற்றலும் வாய்ந்த, இராவணன், தன் நாட்டின் வாயிற்புறத்தே பாண்டிய அரசு இடப் பெற்றிருப்பதை ஒரு கணமேனும் தாங்கிக் கொண்டி ருந்திருக்க மாட்டான்.

The jealous and all powerful Ravana would not have brooked for a moment the prevalance of the Pandyas near his own doors: (Page : 53)

3. இராமாயணம் நடைபெற்ற அந்த நாட்களில், பாண்டியர்கள், ஆட்சியாளர்களாக இருந்திருப்பின், அவர்கள், இராமனுக்கும், இராவணனுக்கும் நடைபெற்ற பெரும் போரில் எந்தப் பக்கத்திலும் சேர்ந்திருந்தாரல்லர் என்பது நம்பக்கூடாத ஒன்று.

"If the Pandyas had been rulers at that time, it is impossible to believe, that they joined neither side in the great war between Rama and Ravana." (Page : 53).

4. மேலும், இந்தியாவின் தென்கோடிப் பகுதியில் நிகழ்ந்த இராமனின் படைச் செலவினைக் குறிப்பிடும் பகுதியில், இம் மாவட்டங்கள் குறிப்பிடப்படவில்லை. ஏன்? இராமன் எந்தக் கரையிலிருந்து கடலைக் கடந்து இலங்கை அடைந்தானோ "அந்தக் கடற்கரையினைக் கொண்ட பாண்டிய மாவட்டங் கூடக் குறிப்பிடப்படவில்லை. தன்னுடைய புகழ்மிக்க பாலத்தைப் பாண்டி நாட்டிலிருந்தே தொடங்கினான். பாண்டியர்கள், அந்தக் காலத்தில் இருந்திருப்பாராயின், பாட்டின் அப்பகுதியில் அது குறிப்பிடப்பட்டிருக்கும்".

"Moreover, these districts not even, that of the Pandyas, from whose coast, Rama, crossed to Ceylon, are not mentioned when describing Rama's march in the southern most part of India. He started his famous bridge from the Pandya country and if the Pandyas had existed in his time it would have been mentioned in this part of the poem" (Page : 53, 54)

இனி இக்காரணங்களின் வன்மைமென்மைகளைக் காண்போம்.

கோதாவரிக்குத் தென்பால் உள்ள அனைத்து இந்தியாவும் இராவணன் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது எனக் கூறும் திருவாளர் பி. டி. எஸ். அவர்கள், தம்முடைய இம் முடிவினை உறுதி செய்யவல்ல ஒரு சான்றினையேனும் காட்டினாரல்லர். மேலும், அரக்கர் நடமாட்டம் கோதாவரிக்கும் தென்பால் மட்டும் அன்று, அதற்கு வடக்கிலும், ஏன்? விந்தியத்திற்கு வடக்கிலும் கூட இருந்தது. இதைப் பி. டி. எஸ். அவர்களும் ஒப்புக் கொண்டுள்ளார். "கோதாவரிக்கு வடக்கில் எண்ணற்ற ஆரிய அரசுகள் நிறுவப்பெற்றிருந்தன. ஆனால், விந்தியத் திற்கு அப்பாலும் வந்து தொல்லை தரும் அரக்கர்களை அடக்க, அவர்களால் முடியவில்லை. விசுவாமித்திரரோடு, அப்பகுதிக்கு வந்த இராமன், விந்தியத்திற்கு வடக்கிலும், நுழைந்து தொல்லை கொடுத்த தாடகை, அவள் மகன் மாரீசன் சுபாகு ஆகியோருடன் போரிட வேண்டியிருந்தது" என அவர் கூறுவது காண்க.

"North of the Godavari a number of Aryan Kingdoms had been established. But they were not powerful enough to check the incursions of Yakkas and Raksasas into the regions, beyond the Vindhyas. For when Rama visited these regions along with Viswamitra to guard the latter's sacrifices from being disturbed by Raksasas, he had to fight with the yaksini Tataka, Marica her sow and Subahu, who three had stayed north of the Vindhyas" (Page : 49)

இங்கெல்லாம் அரக்கர் நடமாட்டம் இருந்தது என்றால், அங்கெல்லாம் அவர் ஆட்சி அல்லது அவர்கள் தலைவனாம் இராவணன் ஆட்சி இருந்தது எனக் கொண்டுவிடக் கூடாது. தங்கள் நாடாம் இலங்கை விடுத்து, அவ்வப்போது வெளியேறித் தாம் விரும்பும் அவ்விடங்களில் சில காலம் தங்கி, ஆங்கிருந்த முனிவர்களுக்கும் அவர் தம் வேள்விகளுக்கும் தொல்லை கொடுத்து வந்தனர் எனக் கொள்ள வேண்டுமே ஒழிய, அவர்கள் அங்கேயே நிலைத்த குடியினராய் வாழ்ந்திருந்தனர் எனல் பொருந்தாது.

மேலும், அவர்கள் விந்தியத்திற்கு வடக்கிலும் சென்று திரிந்து வந்தாலும் குமரிமுதல், விந்திய வடபால் வரையான நாடுகளில் இருந்த எந்த அரசோடும் மோதிக் கொண்டாரல்லர். ஒருமுறை, கிட்கிந்தைக் காவலன், வாலியோடு மோத, அதற்கான பலனை அனுபவித்து விட்டான் இராவணன். தன்னோடு மோதிய இராவணனை, வாலி, தன் வாலில் வலித்துக்கொண்டவாறே வழக்கம் போல் எட்டு மலைகளுக்கும் தாவித் தாவிச் சென்று வழிபாடாற்றினான். "இராவணன் என்பான் தன்னைச் சுந்திரத்தோள்களோடும், வாலிடைத் தூங்கச் சுற்றிச், சிந்துரக் கிரிகள் தாவித் திரிந்தனன்" எனக், கம்பரும் அது கூறுவது காண்க. (அங்கதன் தூது : 24)

அவ்வகையால் வாலியிடம் பட்ட அடி, அரக்கர்குலக் காவலன் உடலிலும், உள்ளத்திலும் ஆழமாகப்பட்டு விட்டமையால், நாடாளும் காவலர் எவரோடும் மோதிக்கொள்ளும் எண்ணத்தை, அதன் பின்னர், அவனோ, அவன் குலத்தவரோ கனவிலும் கருதினாரல்லர் போலும். ஆகவே, கோதாவரிக்குத் தெற்கே உள்ள அனைத்து இந்தியாவும் இராவணன் ஆட்சியின் கீழ் இருந்தது என்ற கூற்றில் உண்மை இல்லை என உணர்க.

2. பொறாமையும், பேராற்றலும் வாய்ந்த, இராவணன், தன் நாட்டின் வாயிற்புறத்தே பாண்டிய அரசு இடப் பெற்றிருப்பதை ஒரு கணமேனும் தாங்கிக் கொண்டிருந்திருக்க மாட்டான் என்ற காரணமும் ஏற்புடையதாகாது. இராவணன் வாழ்க்கை வரலாறு இதற்குத் துணை புரிவதாக இல்லை. மேலே கூறியவாறு, அரக்கர் நடமாட்டம், குமரி முதல் விந்தியத்திற்கு வடக்கில் உள்ள நாடுகள் வரையும் இருந்துவந்தது. திருவாளர் பி. டி. எஸ். அவர்கள் கூற்றுப்படி, இங்கெல்லாம் அவர் செல்வாக்குப் பெருகவே இருந்தது. ஆனால், அரக்கர்களின் செல்வாக்குப் பெருகியிருந்த அப்பெருநிலப்பரப்பின் இடையேதான் கிட்கிந்தை என்ற நாடும் இருந்தது. அரக்கர்கோன் இராவணன், கிட்கிந்தை என்ற நாடு இருந்ததைத் தாங்கிக் கொண்டது மட்டும் அன்று; அதனுள் நுழையவும் அஞ்சி ஒதுங்கியே வாழ்ந்தான்.

மலைக்கல்லும், மரக்கிளையும் தவிர்த்து வேறு படைக்கலமோ, வானரக் கூட்டம் தவிர்த்து வேறு படைப்பிரிவோ பெறாத, ஒரு வானரத் தலைவன் நாடு இருந்ததைத் தாங்கிக் கொண்டவன், வில், வாள், வேல் போலும் படைக்கலன்களும், தேர், யானை, குதிரை, வீரர் என்ற நாற்படையும் கொண்ட பாண்டியர் நாடு இருந்ததைத் தாங்கிக் கொண்டிருந்திருக்க மாட்டான் என்பது ஏற்கக் கூடிய வாதம் அன்று.

3. இராமாயணம் நடைபெற்ற அந்நாட்களில் பாண்டியர்கள் ஆட்சியாளராக இருந்திருப்பின், அவர்கள் இராமனுக்கும் இராவணனுக்கும் நடைபெற்ற போரில் எந்தப் பக்கத்திலும் சேர்ந்திருந்தாரல்லர் என்பது நம்பக் கூடாத ஒன்று என்ற வாதத்திலும் வலுவில்லை.

இந்தியாவின் தென்கோடி நாட்டவராம் சேர சோழ பாண்டியர் வடகோடிக்குச் சென்று குருச்சேத்திரப் பெரும் போரில் பாண்டவர்க்குத் துணை நின்று போரிட்டனர். சேரர் குலக் காவலன் ஒருவன் இருபக்கத்துப் படையினர்க்கும் போர் முடியுங்காறும் உணவு படைத்தான் என்னும்போது தன் காலடிக்கண்ணதாகிய இலங்கையில் இராமாயணப் போர் நடைபெற்றிருக்கும்போது, பாண்டியர் இருந்திருந்தால், அப்போரில் பங்கு கொள்ளாது இருந்திருப்பாரா என்பது முறையான கேள்விதான்.

பாரதப் போரில் பாண்டவர் துரியோதனாதியர் ஆகிய இருவருமே தங்களுக்குப் படைத்துணை அளிக்குமாறு அரசர் பலரையும் அணுகினர். அதனால், சேர சோழ பாண்டியர்கள் மட்டுமல்லாமல் வேறு பல தென்னிந்தியப் பேரரசுகளும் வட இந்திய அனைத்து அரசுகளும் அப்போரில் பங்கு கொண்டன. ஆனால், இராமாயணப் போரின் நிலையே முற்றிலும் வேறுபட்டது. உறங்கிக் கிடந்த உடன்பிறப்பு கும்பகர்ணனைத்தான் எழுப்பிவரப் பணித்தானே அல்லது பிறர் எவர்பாலும் படைத்துணை வேண்டினான் அல்லன் இராவணனும்; அதே போல் இராமனும் யார் மாட்டும் தனக்குப் படைத்துணை வேண்டினானல்லன்; படைத்துணை

வேண்டாதது மட்டும் அன்று; மனையாளை மாற்றான் கவர்ந்து சென்றுவிட்டதைக்கூடக் குரங்கினம் தவிர்த்து வேறு யாருக்கும் அறிவித்தான் அல்லன்; அறிவித்திருந்தால் பாண்டியர் மட்டும் அன்று பன்னாட்டுக் காவலரும் அவன் அழைக்காமலே அவனுக்குப் படைத்துணையாகச் சென்றிருப்பர். செய்தி அறிந்திருந்தால் "ஏழைமை வேடன் இறந்திலன்" எனச் செம்மாந்து கூறும் குகன் துணைக்கு வாராது இருந்திருப்பானா? அயோத்தி நாட்டுப் பெரும்படையோடு பரத சத்ருக்கனர் சென்றிருக்க மாட்டாரா? கோசல நாட்டுக் கோமகன் சென்றிருக்க மாட்டானா? கேகய நாட்டுக் காவலன் தான் கேளாக் காதனாக இருந்திருப்பானா? ஆனால், இராமாயணப் போரில் பாண்டியர் மட்டுமே பங்கு கொள்ளத் தவறிவிட்டவர் அல்லர். மேலே கூறிய இவர்களில் யாரும் பங்குகொள்ள வில்லை. என்ன காரணம்? இராமன், "கூட்டு ஒருவரையும் வேண்டாக் கொற்றவன்" மேலும் தன் மனையாளைக் கவர்ந்து சென்றானைக் கொன்று தன் மனையாளை மீட்கும் முயற்சி முழுக்க முழுக்க தன்னுடையதாகவே இருத்தல் வேண்டும்; பிறர் துணை நாடுவது பேடித்தனம் என்ற உரம் வாய்ந்த உள்ளம் உடையவன். அதனால் தனித்தே நின்று போரிட்டான்.

ஆக, இராமாயணப் போரில் பாண்டி நாட்டவரல்லாத பிற நாட்டவர் அனைவரும் பங்கு கொண்டது போலவும் பாண்டியர் மட்டுமே பங்கு கொள்ளவில்லை என்பது போலவும் கொண்டு அது காரணம் காட்டி அப்போது பாண்டியரே இல்லை எனக் கொள்ளும் முடிவு தருக்க நெறியோடு பொருந்தாப் போலி முடிவாகும்.

4. இராமன், இலங்கை மீது படையெடுக்கத் தொடங்கியது பாண்டி நாட்டுக் கடற்கரையிலிருந்து, கடலைக் கடக்கக் கட்டிய பாலத்தின் தொடக்கம் பாண்டி நாட்டுக் கடற்கரையிலிருந்து, அந்நாட்களில் அப்பகுதியில் பாண்டிய ஆட்சி நடைபெற்றிருந்திருக்குமாயின், அப்பகுதி பாண்டி நாட்டுக்கு உரியதாக வால்மிகத்தில் குறிப்பிடப்

பட்டிருக்கும். ஆனால், அவ்வாறு குறிப்பிடப்படவில்லை. ஆகவே, அக்காலத்தில் ஆங்குப் பாண்டிய அரச இனமே தோன்றவில்லை என்பதும் ஏற்புடையதாகாது.

ஓரிடத்தில் "அ" என்ற இனத்தவர் இல்லை என்பதை உறுதி செய்யும் போது, அந்த இடத்தில் வேறு யாரோ ஓர் இனத்தவர் இருந்திருக்க வேண்டுமல்லவா? அந்த இனத்தவர் "ஆ" என்ற இனத்தவர் எனக் கொண்டு அந்த இடத்தில் "ஆ" என்ற இனத்தவரே இருந்தனர்; "அ" என்ற இனத்தவர் அல்லர்" என்பதை உறுதி செய்யவல்ல வலுவான அகப்புறச் சான்றுகளைக் காட்டிய பின்னரே அது செய்ய வேண்டுட அது செய்யாது ஓர் அரச இனத்தவர்க்குரிய ஓர் இடத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுவிட்டு, அவ்விடத்தை ஆண்டிருந்த அரச இனத்தவரைக் குறிப்பிடாத ஒரே காரணத்தைக் காட்டி, அந்த நிகழ்ச்சி நடைபெற்ற போது, அந்த இடத்தில் அந்த அரச இனத்தவரே இல்லை என வாதிடுவது வாத முறையாகாது.

இராமன் தமிழகத்தின் தென்கோடி முனையில் பாலம் அமைத்துக் கடலைக்கடந்தபோது அத்தென்கோடி நிலப்பரப்பில் பாண்டியரே இல்லை என வாதாடும் திருவாளர் பி. டி. எஸ். அவர்கள், பாண்டியர் இல்லை ஆயின் ஆங்கு வேறு யாரோ ஓர் இனத்தவர் இருந்திருக்க வேண்டுமல்லவா? அந்த இனத்தவர் இன்னார் என்பதைச் சான்று காட்டி உறுதி செய்த பின்னரே, பாண்டியர் ஆங்கு இல்லை என்ற முடிவிற்கு வந்திருக்க வேண்டும். அது செய்யாது, இராமன் பாலம் அமைத்த அந்நிலத்துக்கு உரியவர் பாண்டியர் என வால்மீகி கூறவில்லை. ஆகவே, பாண்டியர் அப்போது ஆங்கு இல்லை எனக் கொண்ட முடிவு உண்மையொடு பட்ட முடிவு ஆகாது.

ஒரு நூலில், ஒரு பொருள் குறிப்பிடப்படவில்லை என்பதினாலேயே அப்பொருள் அந்நூல் எழுதிய காலத்தில் இல்லவே இல்லை என்ற வாதம், இருக்கு வேதத்தில் ஆலமரம் குறிப்பிடப்படவில்லை என்பதினாலேயே, இருக்கு வேத காலத்தில் ஆலமரமே இல்லை என்பது போலும்

பொருளற்ற வாதமாம். திருவாளர் பி. டி. எஸ். அவர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட வாத முறை இது.

கி. மு. ஏழாம் நூற்றாண்டினராய பாணினி, தம்முடைய இலக்கண நூலில் சேர, சோழ, பாண்டியர் பெயர்களைக் குறிப்பிடவில்லை. ஆகவே, அவர் காலத்தில் அப்பெயர் களைப் பாணினி அறிந்திருக்கவில்லை எனத் திருவாளர் பந்தர்கார் கொண்ட முடிவினை மறுக்கும் நிலையில், திரு. பந்தர்கார் அவர்களின் வாதம், வாய் மூடி இருப்பது விடுத்துப் பெரு நகைப்பிற்கு உரிய ஒன்றாகத் தள்ளிவிடுவதாம் எனக் கூறித் தம் வாதத்திற்கு ஆதாரமாக வேதத்தில் "ஆல்" குறிப்பிடப்படவில்லை என்பதால் வேதகாலத்தில் "ஆலே", இல்லை என்பது போலாம் எனக் கூறும் திரு. பர்கிதர் அவர்களின் வாதத்தைத், திருவாளர் பி. டி. எஸ். அவர்களே ஆண்டுள்ளார். To say that he did not know the names of the countries (Pandya, Cola, and Kerala) he does not mention in his grammar, is to push the arangement from silence to the most absurd lengths. Speaking of the argument from silence Pargiter remarks, one might argue with more force that, because the banyan is not mentioned in the Rig Veda, there were none in India, when the hymns were composed" (History of the Tamils : Page -124)

ஆகச் சேரர், சோழ, பாண்டிய அரச இனங்கள், இராமாயண காலத்தில் தோன்றவில்லை. இராவணன் வீழ்ச்சிக்குப் பின்னரே தோன்றியிருக்க வேண்டும் என்பதற்குத் திருவாளர் பி. டி. எஸ். அவர்கள் காட்டிய காரணங்கள் பொருத்தமானவையோ, போதுமானவையோ அல்ல என்பது தெளிவு. மேலும், வால்மீகி தம்முடைய இராமாயணத்தில் பாண்டியரைப் பெயர் கூறிக் குறிப்பிடவில்லை என்பதும் உண்மை அன்று. மாறாக, இராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில், இரண்டு சுலோகங்களில் பாண்டி நாட்டைப் பெயர் சுட்டியே அவர் கூறியுள்ளார்.

தென்திக்கில் அனுமாரை அனுப்புவது என்ற 41வது சருக்கத்தில், சீதையைத் தேடவேண்டிய நாடுகளின் பட்டியலைக் கூறும் சுக்கிரீவன், விதர்ப்பம் தொடங்கிப்

பல்வேறு நாடுகளைக் குறிப்பிட்டுவிட்டு இறுதியாக "கேரள தேசங்களையும், சோழ தேசங்களையும் உள்ளிட்ட பாண்டிய நாடுகளையும் எல்லாவற்றையும் கவனமாய்த் தேடிப் பாருங்கள்" என ஆறாவது சுலோகத்திலும், கடக்க வேண்டிய கடலைக் குறிப்பிடும்போது, அதற்கு முன்பாகப் "பொன் மயமானதும், அழகானதும் ஏற்றதும், முத்துகளாலும், ரத்தினங்களாலும் இழைக்கப்பெற்றதுமான, பாண்டிய நாடுகளின் உட்புகு வாயில் கதவுகளைக் காண்பீர்கள்" எனப் பதின்மூன்றாவது சுலோகத்திலும் கூறியிருப்பது காண்க.

அதுமட்டுமன்று; இராமயணப்போர் முடித்துச் சீதையைச் சிறை மீட்டு விமானம் மூலம் அயோத்தி திரும்பும் இராமன், இடைவழியில் உள்ள இடங்களைச் சீதைக்குக் காட்டியது கூறும், யுத்த காண்டம், இரண்டாம் பகுதி, 126வது சருக்கத்தில், "தடங்கண்ணாய்! உன் காரணமாய், நீர் நிறைந்த பெருங்கடலில் கட்டுவதற்கு அரிய நளசேது என்ற இந்த அணை, என்னால் கட்டப்பட்டது" எனச் சேதுவைக் காட்டிவிட்டு, அடுத்ததான 16வது சுலோகத்தில் "கரையில் லாததும், முழங்குவதும், சங்குகளாலும், முத்துச்சிப்பி களாலும் நிறைந்ததுமான இச்சமுத்திரத்தைப் பாராய்" எனப் பாண்டி நாட்டுக் கடல் எனப் பெயரால் இல்லை எனினும், "அப்பாண்டியக்கடற்கரைக்கே" உரிய செல்வமான முத்தைக் குறிப்பிட்டுக் காட்டினார் என்றும் கூறியுள்ளார் வால்மீகி.

ஆக, வால்மீகியார், பாண்டிய நாட்டையும் குறிப்பிட் டுள்ளார். அப்பாண்டிய நாட்டுக் பெருநகரத்து வாயில் களையும், அப்பாண்டி நாட்டுக்கே உரிய வளமாம் முத்து வளத்தையும் குறிப்பிட்டுள்ளது உள்ளங்கை நெல்லிக்கனி என உறுதிப்பட்டிருக்கவும், "வால்மீகி பாண்டியரைப் பெயர்சுட்டிக் கூறவில்லை" என்பதிலும் உண்மை இல்லை.

ஆகச் சேர, சோழ, பாண்டிய அரசு இனங்கள், இராமாயண காலத்தில் தோன்றவில்லை. இராவணன் வீழச்சிக்குப் பின்னரே, தோன்றின என்பதற்குத் திருவாளர் பி. டி. எஸ். சீனிவாச அய்யங்கார் அவர்கள் எடுத்து வைத்த வாதம் எடுபடவில்லை. ஆகவே, அவரின் அக்கூற்று, இந்திய

வரலாற்று உண்மையோடு பட்ட முடிவன்று என்பது உறுதி செய்யப்பட்டது.

சேதுவைக் குறிப்பிடும் வால்மீகி, அச்சேதுக் கரைக்கு உரியராம் பாண்டியரைப் பெயர் கூட்டிக் கூறாமையைக் காரணம் காட்டி, இராமயண காலத்தில், பாண்டியர், அப்பகுதியை ஆண்டிருந்தால், வால்மீகி அப்பாண்டியரைக் குறிப்பிட்டிருப்பார்; வால்மீகி அவர்களைக் குறிப்பிட வில்லை; ஆகவே, இராமாயண காலத்தில், பாண்டியர் அரசு அங்குத் தோன்றவில்லை; இராமர் சேது அணை கட்டியபோது, அச்சேதுக் கடற்கரைப் பகுதியில் பாண்டியர் அரசு தோன்றவில்லை.

(Moreover, these districts not even, that of the Pandyas, from whose coast Rama crossed to ceylon are not mentioned when describing Rama's march in the sourthern most part of India. He started his famous bridge from the Pandya country and if the Pandyas had existed in his time, it would have been mentioned in this part of the poem. (Page : 54)

எனக் கூறுமுகத்தால், இன்ன ஒரு பொருள் அல்லது இன்ன ஒரு செய்தி அல்லது இன்ன ஓர் அரச இனம், இராமர் காலத்தில் இல்லை என்பதற்கு, அக்காலத்திய நிகழ்ச்சிகளைக் கூறும் வால்மீகியால், அக்காலத்திய நிகழ்ச்சிகளோடு இணைத்து இராமாயணத்தில் கூறப்படாதிருப்பதைச் சான்றாகக் கொள்ளும் திருவாளர் பி. டி. சீனிவாச அய்யங்கார் அவர்கள், ஒரு பொருளை அல்லது ஒரு செய்தியை, அல்லது ஓர் இனத்தை, வால்மீகி தம்முடைய இராமாயணத்தில் குறிப்பிட்டுவிட்டதினாலேயே, அவை, வால்மீகி காலத்தில், இராமாயண காலத்தில் இருந்தன என்பதை ஏற்றுக் கொள்கிறாரா என்றால் இல்லை. வால்மீகி இராமாயணத்தில் அவை குறிப்பிடப்பட்டுவிட்ட நிலையில், அவை அக்காலத்தில் இடம் பெற்றிருந்தன என்பதை ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக, வால்மீகத்தில், அவை, இடம் பெற்றுவிட்டமையினாலேயே, அவை இராமர் காலத்தவை ஆகிவிடா. அவை, இராமாயணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன

என்றாலும், அவற்றைக் குறிப்பிட்டவர் இராமர் காலத்து வால்மீகி அல்லர்; அவருக்குப் பலநூறு ஆண்டுக் காலம் கழித்து வாழ்ந்த, வேறு ஒரு வால்மீகி ஆவர். ஆகவே, அவை இராமர் காலத்தைச் சேர்ந்தன ஆகா" எனத் தம் வாதத்தை வேறு கோணத்தில் எடுத்து வைத்து விடுவர்.

சீதையைத் தேடித் தென்னாடு செல்லும் வானரத் தலைவனுக்கு, அத்திக்கில் அவன் காணலாகும் இடங்களை நிரலே எடுத்துக் கூறும் சுக்ரீவன், காவிரிப் பேராற்றையடுத்து மலையக் குன்றின் முகட்டில் வீற்றிருக்கும் அகஸ்தியரைக் காண்பீர்கள் எனக் கூறியதாக, இராமயாணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவும், "இராமர் காலத்தில், அகஸ்தியர் காவிரிக்கரைப் பொதிகை மலையை அடையவில்லை. அவர் கோதாவரிக்கரை பஞ்சவடியிலேதான் நிலைகொண்டிருந்தார். அவரை, எப்படி இராவணன், சீதையை வான வீதி வழியே கொண்டு சென்று இலங்கையில் சிறை வைத்துவிட்டானோ, அதேபோல், பஞ்சவடியில் இருக்கும் அகஸ்தியரைப் பொதிகைக்குன்றின் முகட்டில் கொண்டு வந்து இறக்கியிருக்கும் நிகழ்ச்சி இராமர் காலத்து வால்மீகியார் செயல் அன்று, இராமர் காலத்து அகஸ்தியருக்குப் பின்னர், தென்னாட்டில் மேலும் தொடர்ந்து பயணம் மேற்கொண்டு, தமிழ்நாட்டிலும் ஆஸ்ரமம் அமைத்துக் கொண்டுவிட்ட வேறு ஒரு அகஸ்தியர் காலத்துப் பாவலன் யாரோ ஒருவனால் நுழைத்துவிடப்பட்ட இடைச்செருகலாம்". என்று கூறிவிடுவார் திருவாளர். பி. டி. எஸ். அவர்கள். (Agastyas asramam during the whole period of the wanderings of Rama was two yojanas from Panchavadi; yet, when Sugriva, sent his vanaras to the South to search for Sita, he told them, that they would see Kaveri's stream whose waters were holy, benign and bright; Nearby they would see seated on the top of Malaya Hill, brilliant as the sun Agastya, the excellent Rishi. Here we see Agastya spirited away by the poet, as Sita was by Ravana, from Panchavadi, and dropped on the top of the Malaya Hill. Hence this must have been inserted by the later poet who lived after the Agastyas had proceded further South than the Agastya of Rama's time and

settled in the Tamil Country". Page : 55) *என அவர் கூறுவது காண்க.*

பாண்டிய அரச இனம் இராமாயணத்தில் குறிப்பிடப் படவில்லை. ஆகவே, பாண்டிய அரச இனம் இராமாயண காலத்தில் உருப்பெறவில்லை என ஓரிடத்தில் கூறிவிட்ட திருவாளர் பி. டி. எஸ். அவர்கள், பிறிதோரிடத்தில் வால்மீகி இராமாயணப் பிரதி ஒன்றில் சேர, சோழ, பாண்டியப் பேரரசுகள் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணும் நிலையில், அக்கருத்துப்பீடு, அக்கதையில் கி. மு. முதலாம் ஆயிரத் தாண்டில் எழுதப்பட்ட இராமாயணத்து இரண்டாம் பிரதியில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

(The reference to the Pandyas or all the three in the Ramayana must have been put into the story in the second draft of the poem in the first millennium B.C. Page - 54) *எனக் கூறுவதும் காண்க.*

♦ ♦ ♦

4. பாரதப் போர்

தமிழ் அரசு இனங்களின் தோற்றம் :

தென் இந்தியாவை, இராமன் அமைதிப்படுத்தியதன் அரசியல் விளைவு, சோழ, சேர, பாண்டியப் பேரரசு இனங்களின் தோற்றமாம் எனக் கொள்ளலாம். இராமாயணத்தில், இவ்வரசு இனப் பெயர்கள் இடம் பெற்றிருந்தன என்றாலும், புராணங்களில் குறிப்பிடப்படும் மூன்று இராவணர்கள் ஆண்ட காலத்தில், இவ்வரசு இனங்கள் பெருவாழ்வு வாழ்ந்திருக்க முடியாது. இது பற்றிய மொழி பெயர்ப்பு ஆசிரியர் கருத்து பின் இணைப்பில் தனியே ஆராயப்பட்டுள்ளது. இந்த இராவணர்கள், தென்னிந்தியா முழுவதும், கட்டுப்பாடற்ற அரசியல் செல்வாக்கினை நாடறியச் செலுத்தி வந்தனர். கோதாவரிக்கரையில் உள்ள ஜனஸ்தானம் கடைசி இராவணனின் புறக்காவல் அரண்களில் ஒன்றாக இருந்தது. அவனுடைய மக்கள் விந்தியத்துக்குத் தெற்கில் உள்ள பகுதிகளில் பெருந்திரளாகக் காணப்பட்டனர். அவர்களில் சிறுசிறு கூட்டத்தவர், ஆரிய வர்த்தத்துள்ளும் அடிக்கடி நுழைந்தனர். அவன் ஆட்சி நிலவும் எல்லைக்குள், பிற அரச இனங்கள் ஆட்சி செலுத்துவது இயலாது. அந்நாட்களில் சோழ, சேர, பாண்டிய பழங்குடிகள் இருந்திருக்கக்கூடும். ஆனால், அவற்றிலிருந்து எழுந்த அரச இனங்கள் இருந்திருக்கா. பிற்காலத்திய தென் இந்திய மரபு வழிச் செய்திகள் அவர்களை உலகம் தோன்றிய நாள் தொட்டு ஆள்வோராக ஆக்குகின்றன. "கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே, மூன் தோன்றி மூத்த குடி" என்கிறது அது "நினைவுக்கு எட்டாப் பழங்காலத்திலிருந்தது" என்பதே இத்தொடரின் உண்மைப் பொருள். வேறுவகையில் கூறுவதானால், இம் மூவேந்தர்

குடியின் தோற்றமூலம் குறித்து எதுவும் தெரியவில்லை என்பதாம். புதிதாக எழுந்த, இந்தச் சோழ, சேர, பாண்டிய அரசர்கள், வடஇந்தியாவோடு, தென் இந்தியா கொண்டிருந்த, ஆண்டாண்டு, காலத்தொடர்பை விடாது கட்டிக் காத்தனர். இராமன் இறப்பிற்குப் பின்னர், ஆரியவர்த்த அரசியலில், அயோத்தியா கொண்டிருந்த ஆதிக்கம் முடிவுக்கு வந்துவிட்டது. சில தலைமுறைகள் கழித்து, குரு, பௌரவ ஆட்சியைப் புகழ் சிறக்க உயர்த்தினார். குருஷேத்திரம், இந்தியாவின் தலைநகராய் உயர்ந்தது. இராமன் காலத்திற்குப் பின்னர்ப் பதினைந்து தலைமுறைகள்*. கழித்துக், குருவின் வழி வந்தவர்களிடையே, பகையும், இந்தியச் சிற்றரசர்களிடையே பொறாமையும் வளர்ந்தன. இறுதியில் பாரதப் போரில் கொண்டுபோய் விட்டது. இக்கால கட்டத்தில், மகாபாரதக் கூற்றுக்களால் உறுதிப் படுத்தப்படுவது போலத் தென்னிந்திய அரச இனங்கள் மூன்றும், வடஇந்திய அரசர்களோடு, அமைதி அல்லது வேறு முறையிலான உறவினை வளர்த்து வந்தனர்.

மகாபாரதப் படைப்பு :

அப்பெருங்காப்பிய அகச்சான்றுகளைப் பயன்கொள்ளும் முன், அந்நூல், பல்வகைப் பொருட்பாடலாம் என்பதை நினைவில் கொள்ளுதல் வேண்டும். அதன் உள்ளடக்கம். கீழ்க்காணும் மூன்று வகைகளில் பிரிக்கப்படலாம்.

1. பாரதப் போர்வீரர்களின் வாழ்க்கை, மற்றும் அப்போர் பற்றிய கட்டுக்கதைகள் இவை, அப்பாட்டில் கருப் பொருளாக அமைந்து, அப்போர் நிகழ்ந்த காலந்தொட்டுப் பெரும்பாலும், நாட்டுப்புறப் பாடலாக உயிர் பெற்றி ருந்து. பௌரவ அரசமரபில், அர்ச்சுனனுக்கு ஆறாவது

* சேதாநாத் ப்ரதான் அவர்களின் பண்டை இந்தியாவின் கால வரிசைப்பட்டி (Chronology of ancient India) பக்கம் : 109. பர்கிதர் அவர்கள் 20 தலைமுறையாகக் கணக்கிடுகிறார். பழைய இந்தியா வரலாறும், மரபுகளும் (Ancient India. History and Tradition) பக்கம் : 148-149.

தலைமுறையில் வந்த அதிசீமகிருஷ்ணன் ஆட்சிக்காலத்தில், நைமி சாரணயத்தில் நடைபெற்ற பெரிய வேள்வியின் போது, நெடும் பாட்டாகத் தொகுத்துப் பாடப்பட்டதாக நான் கொள்கிறேன். பழைய அரசியல் நாட்டுப் பாடல்கள், வேள்விகள் நிகழும்போது பாடப்படும் வழக்கத்தால், மக்கள் நினைவில் அழியாமல் வைக்கப்பட்டன. பாரதப்போர் வீரர்களின் வாழ்க்கையைக் கூறும் பாரதத்தின் பகுதி, அப்போர் நிகழ்ந்த காலத்தில் (கி. மு. 1400) அதில் கூறப்பட்டிருக்கும் மக்களும், நிகழ்ச்சிகளின் செயல்பாடும் இருந்தமைக்கான அகச்சான்றாகக் கொள்ளப்படும்.

2. கி. மு. 3000இல் நிகழ்ந்திருக்கும் என நான் மதிப்பிடும், சூரிய, சந்திர அரசமரபுகளின் கால்கோள் ஆண்டு முதல், அப்பாரதப் பெரும்போர் நடைபெற்ற ஆண்டு வரையான காலத்தில் அரசர்கள், அவ்வரசர்களின் குடிவழிப் பட்டியல் குறித்த புராணக்கட்டுக் கதைகள், மற்றும் கவிதைகள் இடம் பெற்றுவிட்டன. அப்பாரதப் பெரும்போர் வரையான காலத்தில், ஹெரோடொட்டஸ் (Herodotos) க்கும் விதிவிலக்கு இல்லாமல் மிகப் பழைய வரலாற்று அகச்சான்றுகள அனைத்தும் குறித்துச் செய்ய வேண்டுவது போல, வரலாற்று நிகழ்ச்சிகளிலிருந்து, எளிதில் வேறு பிரித்துக் காணக் கூடிய புராண நிகழ்ச்சிகள் சிலவற்றின் இடைச்செருகல்கள் சிலவும் இப்பழங்கதைகளில் உள்ளன. இவ்வரலாற்றுச் செய்திகள், வேதங்களிலும், இராமாயணத்திலும், புராணங்களிலும் காணக்கூடிய வரலாற்றுச் செய்திகளோடு ஒப்புக் காணப்பட வேண்டும். இவை, அரசவைப் பாடகர்களால், நனிமிகப் பழைய காலம் தொட்டுப் பாடப்பட்டு வந்த அரசியல், நாட்டுப் பாடல்களிலிருந்து பெறப்பட்டவை. பர்கிதர் மற்றும், சீதநாத் ப்ரதான் ஆகியோர் வெற்றிகரமாகச் செய்தது போல், இவை நுணுக்கமாக ஆராயப்பட்டால், பண்டைய இந்திய வரலாற்றை மீண்டும் வரைவதற்குப் பெருந்துணை அளிக்கவல்லன. மகாபாரதத்தில் இடம்பெற்று உள்ள இவைபோலும் புராணக்கதைகள், மகாபாரதப்போருக்கு

முந்தைய காலத்து நிகழ்ச்சிகள் குறித்த அகச்சான்றுகளாகக் கொள்ளப்படும். அவை, அப்போருக்குப் பின்னர் நெடுங் காலம் கழித்து, அப்பாக்களுள் வழிகண்டு நுழைந்துவிட்டன.

3. விஷ்ணு, சிவன் குறித்து, வேதங்களில் கூறப்படும் கதைகள் அல்லாத வேறு கதைகள்; இவை பாரதப்போரை அடுத்து வந்த காலங்களில், முக்கியத்துவம் பெற்று ஆகமநெறிகள், அந்நாட்களில், பாகவதநெறி, மகேஸ்வர நெறி என இரண்டே இருந்தன. முன்னது விஷ்ணு வழிபாட்டையும், பின்னது சிவ வழிபாட்டையும் குறிப்பன. விஷ்ணுவை, சிவனை, அவர்களின் சின்னங்களை வழிபடும் வழிபாட்டு முறைகள் விஷ்ணுவின் அவதாரங்கள், சிவன் மக்களிடையே தோன்றும் திருவிளையாடல்கள் குறித்த கவிதைகள், ஏகாந்திகளும், சிவயோகிகளும் பின்பற்றிய குறிப்பிடத்தக்க சிறப்பியல்வு வாய்ந்த யோகப்பயிற்சிகள், மனிதன் பேரின்பத்தின் நுண்ணிய பிண்டமாம் மனித உயிர், உலகப்பெரும்படைப்பு, பேரண்டம் ஆகியன குறித்து சாங்கியத் தத்துவப் பிரிவுகளிலிருந்து வளர்ந்த பல்வேறு கொள்கைகளாகக் காணும் தத்துவ ஞான ஆய்வுகள் ஆகியன அல்வாகம நெறியில் வளர்ந்து உருப்பெற்றன.

இந்த ஆகம நெறிகள், ஏறத்தாழ கி. மு. 1000க்குப் பின் சில நூற்றாண்டுகள் கழித்து, மகாபாரதத்தில் முறைப்படுத்தா நிலையில் இணைக்கப் பெற்றன.

4. அர்த்த சாத்திரங்கள் தர்மசாத்திரங்கள், மோட்ச சாத்திரங்கள், இப்பொருள்கள் குறித்த பழைய கொள்கை ஆய்வுகள் இவை மறைந்துபோகும் அபாயத்தில் இருந்து பாரத வீரகாவியத்தில் பற்றுற இணைக்கப்பட்டு, அதன் நாடகப் பாத்திரங்களின் உரையாடல்கள் என்ற வகையில், அக்கவிதையில் பின்னப்பட்டுப் புதிய வாழ்வுரிமை பெற்றவை. ஆய்வு செய்து முழுவடிவம் பெற்ற பிற்காலக் கொள்கை விளக்கம் போலல்லாமல், இச்சாத்திர முடிவுகளெல்லாம், ஏறத்தாழ உருவம் அற்றவை.

5. வேதாந்தம் போன்ற பல்வேறு தத்துவ ஞான முறைகளின் கொள்கை விளக்கங்கள் அதாவது, வேதங்களின் கடைசி அத்தியாயங்களின் போதனைகள் பொருந்துற அழைப்பதானால் "வேதாசிரம்" அதாவது, உபநிஷதம், நியாயம், வைகேசிகம், எல்லாவற்றிற்கும் மேலாகச், சாங்கியம், யோகம், மற்றும் ஆகமங்களின் இறுதி முறைகளின் இரண்டின் கொள்கை வளர்ச்சி, கடைசியில் கூறப்பட்ட சமய முறையில், மிகப்பெரிய முன்மாதிரி எடுத்துக்காட்டு பாகவதர்கள் வழிச் சமயதத்துவம் ஆனதும், ஏனைய சமயாசிரியர்களெல்லாம், உலகை உணர்ந்து, உளத்தால் பற்றிக்கொள்ள முயற்சிப்பதற்கு இடமான, ஒருவரின் ஆற்றல் எல்லைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட பெருநோக்கு நிலையில் இடம்கொண்ட உலகம் கண்ட மிகப்பெரிய சமயாசிரியன், வேதாந்த காலத்திய சமய நெறிகளின் முரண்பட்ட உபதேசங்களை ஒருமுகப்படுத்தி; சரியாகச் சொல்வதானால், அறிவெல்லைக்கெல்லாம் அப்பாற்பட உயர்த்தியதுமான, பகவத்கீதை ஆகும்.

6. நிலஇயல் சார்ந்த பகுதிகள்; இவை, இந்தியாவின் பல்வேறு இடங்களைக் குறிப்பாகத் தெய்வத் திருமேனிகளை நாடிச் சமய யாத்திரிகர்கள் சென்ற இடங்களைக் குறிப்பிடுகின்றன.

மகாபாரதத்தின், இக்கடைசிப் பகுதிகள், கி. மு. 1000க்கும் 500-க்கும் இடைப்பட்ட காலத்தில், பாக்களில் இடம்பெற்று, அந்த வீரகாவியத்தை, ஐந்தாம் வேதமாக மதிக்குமாறு உயர்த்திவிட்டன.

தென்னிந்தியாவும் பாரதப் போரும் :

மகாபாரத்தின் உயிர்நிலையாகிய, போர்க்காதையில், தென்னிந்தியாவுக்கும், வடஇந்தியாவுக்கும் இடையில் அரசியல் உறவுகள் இருந்தன, என்பதற்கான அகச்சான்று உளது. திரௌபதியின் சுயம்வரத்திற்கு வந்திருந்தவர்களில் பாண்டிய அரசனும் ஒருவன், (மகாபாரதம் : 189 : 7020) யுதிஷ்டிரர் விளக்கிக் கூறிய கிருஷ்ணனின் தெய்வத்தன்மை

வாய்ந்த வெற்றிச் செயல்களில் (திவ்யாணி கர்மானி), பாண்டியர் வாயில்கள் உடைக்கப்பட்டு, [மகாபாரதம், 7 : 11; 398 : 8 : 23 : 1016 இரண்டாவது குறிப்பில், "பின்ன கபாடே பாண்டியனாம்" என்ற தொடர் வந்துளது. ஈண்டு, "கபாடே" என்பது, உறுதியாக "வாயில்" என்றுதான் பொருள்படும். ஆகவே பக்கம் 53 இல் ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருக்கும் இராமாயணக் "கபாடம்" என்பதும் வாயிலைத் தான் குறிக்கும். தென் இந்திய உரையாசிரியர்கள் விளக்கம் அளிப்பது போல், கபாடபுரத்தைக் குறிக்காது]. பின்னர்ப் பாரதப் போரில், பாண்டியர் பக்கம் இருந்து போரிட்ட சாரங்கத்வஜன் (இது மான் கொடியன் என்பதன் மொழி பெயர்ப்பாதல் ஆகும்) தந்தை கொல்லப்பட்ட நிகழ்ச்சியில், கிருஷ்ணன், பாண்டி ராஜாவைத் தோற்கடித்த நிகழ்ச்சி இடம் பெற்றுளது. கிருஷ்ணன் சோழர்களோடும் போரிட்டுள்ளான். (மகாபாரதம் 7 : 11. 321), யுதிஷ்டிரர் ராஜசூய வேள்வி கொண்டாடியபோது, முதல் நடவடிக்கையாகப் போர் அல்லது சமாதானம் மூலம் இந்தியா முழுவதும் தம் மேலாட்சி நிலையை உறுதி செய்துகொள்வது தேவைப்பட்டது. சகாதேவன், திக்விஜயமாகத், தென்னாடு புகுந்து, திராவிடர்களையும், சோழர்களையும், சேரர்களையும் பாண்டியர்களையும் வெற்றி கொண்டான். சோழர்களும் திராவிடர்களும், ஆந்திரர் களைப் போலவே ராஜசூயத்திற்கு வந்திருந்தனர். (மகாபாரதம் : 2 : 52 : 1888). சோழர்களும், பாண்டியர்களும், யுதிஷ்டிரருக்குப் பரிசுகள் கொண்டு வந்தனர் (மகாபாரதம் : 2 : 52 : 1893). பாரதப் பெரும்போர் தொடங்கியபோது, கிருஷ்ணனால் தோற்கடிக்கப்பட்ட பாண்டியராஜாவின் மகன், சாரங்கத்வஜன், படையோடு, யுதிஷ்டிரனுக்குத் துணை வந்தான். [மகாபாரதம் : 19 : 1576, 4 : 50 : 2084. பாடபேதம், இப்பெயரை, சாகர்த்வஜன் எனக் குறிப்பிடுகிறது] கேரளர்களும், சோழர்களும் கூட, பாண்டவர் பக்கம் நின்று போரிட்டனர். [மகாபாரதம் : 22 : 455 : 1893 பாண்டிய அரசன் துரோணர்க்கு எதிராகப் போரிட்டு, அசுவத்தாமானல் கொல்லப்பட்டான் (மகாபாரதம் : 4 : 23 : 1019 : 8 : 21 : 81].

புதிதாக மணம் கொண்ட பாண்டவர்களின் மனைவி, திரௌபதி, யுதிஷ்டிரர் தொடங்கி, ஆண்டுக்கு ஒருவரோடு வாழவேண்டும் என்ற முறை ஏற்பட்டவுடனே, அர்ஜுனன் தீர்த்தயாத்திரை மேற்கொண்டான். அத்தீர்த்தயாத்திரையின் போது, மணிபுர மன்னன் சித்ரவாகனன் மகள், சித்ராங்கதாவை மணம் செய்து கொண்டான். [மகாபாரதம் : 7 : 11 : 3986. 1 : 215 : 7826.] மணி என்ற சொல், தமிழில் நீலமணியைக் குறிக்கும். பழைய சமஸ்கிருத இலக்கியங்களும், பழைய கரலவேலக் கல்வெட்டுகளும், பாண்டிய நாட்டு நீலமணியைப் பேசக் கேட்டுள்ளோம். ஆகவே, மணிப்பூர் என்ற பெயர், அம் மணி கிடைக்கும் பாண்டியர் தலைநகர்க்குப் பொருந்திய பெயரே). அப்பெருங் காப்பியத்தின் தென் இந்தியப் பதிப்புகளில், அப்பெயர் "மணலூர்" எனக் குறிப்பிடப்பட்டுளது. ஆக, மணலூர் என்பது உண்மையில் தமிழ்ப்பெயரே, பிறிதோர் இடத்தில் (ஆதிபர்வம் : 6 : 1 : 64). அர்ச்சுனனின் இம்மனைவி பாண்டவ அரசகுமாரியாகக் கூறப்பட்டுளது. சித்ராங்கதாவை மணம் செய்துகொள்ளுமுன், அர்ச்சுனன், உலூபி என்ற நாகக் கன்னிகையை மணந்து கொண்டான். (மகாபராதம் : 1 : 214 : 7810) தன்னுடைய தீர்த்தயாத்திரையின் போது, அர்ச்சுனன் சென்ற இடங்கள், சீதையைத் தேடிவருமாறு தன் வானர வீரர்களைச் சுக்கிரீவன், பெரிய குழப்ப நிலையில் பணித்தது போன்ற குழப்பநிலையில், நிலவியல் சார்ந்த நிலைமகளுக்கு மதிப்பளிக்காமலே குறிப்பிடப்பட்டுள்ளன. அவன் மணந்துகொண்ட உலூபி, கங்கைக்கரையில் அர்ச்சுனன் முன் திடுமென வந்து நிற்குமாறு செய்யப் பட்டாலும், அவள் பாண்டி நாட்டிற்கு அணித்தாக உள்ள ஒரு நாட்டைச் சேர்ந்தவனே ஆவள்.

நாகர்கள் குறித்த மற்றொன்று விரித்தல் :

புராணங்கள், நாகர்களைப் "பாதாள" த்தில் வாழவைக் கின்றன. ஆரியவர்த்தத்தின் மையப் பகுதியிலிருந்து வெகு தொலைவில் உள்ள நாடு எதுவும் பாதாளம்தான். இன்று,

நாகர்கள், வடகிழக்கு இந்தியாவில் உள்ளனர். வடமேற்கில் உள்ள தக்ஷசீலத்தில் உள்ள நாகர்கள், பரீக்ஷித்தின் மரணத்திற்குப் பொறுப்பாளர். நாகப்பட்டினம், நாகூர் என்ற பெயர்கள் சான்று கூறுவது போல், தென் இந்தியாவில் நாகர்கள் இருந்தனர். பாம்புகளை மட்டுமே வழிபடும் நாக வழிபாடு, வாழ்க்கை வளர்ச்சி நிலையில், மனிதன், தொடக்க காலத்தில் வாழ்ந்த, மலைநாட்டில்தான் முதன்முதலில் முகிழ்த்தது. உலகம் முழுவதிலும், அது, பரவலாக இருந்து வந்தது. நாகர்கள், பண்டைக்காலத்தில் இந்தியா முழுவதும் வாழ்ந்திருந்தனர். தங்கள் இனச்சின்னங்களாகப் பல்வேறு பொருட்களை மேற்கொள்ள, ஆதிப்பழங்குடி இனத்தவரைத் தூண்டிய காரணங்கள், நமக்குத் தெரியவில்லை. ஆனால், விரைந்து உயிர் போக்கவல்ல நாகம், உலகம் முழுவதும் ஏன் வழிபடப்பட்டது என்பதை, நாம் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம். நாகரிகமற்ற காட்டுமக்களின் வாழ்க்கை பற்றிய ஆராய்ச்சி மானவர்களுக்குத் தங்கள் இனச் சின்னமாம் கடவுள்களின் பழக்க வழக்கங்களை, அக்கடவுள்களை வழிபடுவாரும், அப்படியே பின்பற்றுவதன் உண்மை நன்கு தெரியும், பழைய குகைவாழ்மக்கள், பாதுகாப்பு நாடிக் குகையுள் தவழ்ந்து செல்வதும், பாம்பு, தன் புற்றினுள் ஊர்ந்து செல்வதும் ஆகிய இரண்டிற்கும் உள்ள ஒற்றுமை, அவன் திருந்தா உள்ளத்தில், அவனுடைய கடவுள் மீது வழிபாட்டுணர்வை நிறைவித்துவிட்டது. (சிவனின் முதல் பக்தனாகிய காளை செய்வது போலவே செய்து காட்டுவதன் மூலம், நந்தியை மகிழ்விக்கலாம். தமக்கும், சிவனுக்கும் இடையில், நல்ல வலுவான தூதுவனைப் பெறலாம் என்ற நம்பிக்கையில், சிவ வழிபாட்டாளர், இன்றும் காளை போலப் பொருளற்ற குரல் எழுப்புகின்றனர்).

சிவ, விஷ்ணு வழிபாட்டு முறைகள் எழுந்த பிறகும் பலர் அவ்வழிபாட்டு மறைகளில் இணைந்துவிடாமல் நாக வழிபாட்டாளர்களாகவே இருந்துவிட்டனர். ஆனால், நாகர் எனக் குறிப்பிட்டு அழைக்கப்பட்டு ஏனைய மக்கள்

கூட்டத்திலிருந்து வேறுபடுத்தி வைக்கப்பட்டனர். தென்னிந்தியாவில், மலபார் நாகர்களின் தலைமையிடமாக இருந்தது. இதுவே அந்நிலைமை என்பதை உணர்ந்த, புத்த ஜாதகாவிலிருந்து இரண்டு குறிப்புகளைக் கீழே கொடுக்கின்றேன். கிறித்துவுக்குப் பிறகு, முதல் ஆயிரத் தாண்டின் முற்பாதியின் பிற்பாதி காலத்தைச் சேர்ந்த, பத்துப்பாட்டில், கரைக்குக் கடல் அலைகள் கொண்டு வந்து சேர்த்ததால் திரையன் எனப் பெயர் சூட்டிப் பாராட்டப்பட்ட ஓர் இளவரசன் குறிப்பிடப்பட்டுள்ளான். "அந்நீர்த் திரைதரு மரபின் உரவோன்" (பெரும்பாணாற்றுப் படை 30-31). இப்பாட்டின் உரையாசிரியர், நாகப் பட்டினத்துச் சோழ அரசன் ஒருவன் பாதாளம் சென்று, அங்கு ஒரு கன்னிகைபால் காதல் கொண்டான். அங்கு அவர்க்குப் பிறந்த மகளை அவள், அவன்பால் திரைவழியாக அனுப்பி வைத்தாள் என்ற ஒரு கட்டுக்கதையைக் கூறி இத்தொடர்க்குப் பொருள் கூறியுள்ளார். "நாகப் பட்டினத்துச் சோழன் பிலத்துவாரத்தால் நாகலோகத்தே சென்று, நாகக்கன்னிகையைப் புணர்ந்த காலத்து, அவள், யான் பெற்ற புதல்வனை என்செய்வேன் என்றபொழுது, தொண்டையை அடையாளமாகக் கட்டிக் கடலிலேவிட அவன் வந்து கரையேறின், அவற்கு யான் அரசவுரிமை செய்வித்து நாடாட்சி கொடுப்பன் என்று அவன் கூற, அவளும் புதல்வனை அங்ஙனம் வரவிடத் திரைதருதலின் திரையன் என்று பெயர் பெற்றதைக்கூறினார்". (மேற்படி உரை) இது தமிழர்கள், இந்தியாவின் தெற்குக் கடற்கரைகள் வழியே நாகர் உலகோடு தொடர்பு கொண்டிருந்தனர் என்பதை உணர்த்துகிறது. பத்துப் பாட்டுக்காலத்திலும் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்த மணிமேகலையில், மற்றொரு சோழன், ஈங்குக் காவிரிப்பூம்பட்டினத்துக் காவலன் நெடுமுடிக்கிள்ளி என்பான் தன் தலைநகரைச் சார்ந்த ஒரு சோலையில் ஒரு நாகக்கன்னிகையைக் கண்டு காதல் கொண்டான். ஒரு திங்கள் கழித்து அவள் மறைந்து விட்டாள். சிலகாலம் கழித்து அவள் அவர்களுக்குப் பிறந்த

மகனைச் கம்பளச்செட்டி என்ற வணிகனின் கலம் வழி அனுப்பி வைத்தாள். ஆனால் கலம் கடலில் கரை அருகே கவிழ்ந்துவிட்டது. அது கேட்டு அரசன் மகனைத்தேடி அலைந்தான். அதனால், ஆண்டுதோறும் நிகழும் இந்திர விழாவை மறந்தான். அதன் விளைவால், தலைநகரைக் கடல் கொண்டது என்ற கதை கூறப்பட்டுளது. (மணிமேகலை : 24 : 29-43 : 25 : 178 - 192 பூரி தத்த ஜாதகக் கதைகள்படி, கம்பளர், அஸ்ஸதரர் இருவரும் பழங்குடியினராவர். எண் : 543) இக்கதைகள், கிழக்குக் கடற்கரையிலிருந்த நாகர் உலகத்திற்குக் கடல் வழித் தொடர்பு இருந்தது என்பதை உணர்த்துகின்றன.

நாகர் மொழி, தமிழ் அன்று ; ஆனால், ஒரு தமிழனால், அம்மொழியைக் கற்றுக்கொள்வது இயலாத ஒன்றன்று. அம்மொழி கற்றவன், சாதுவன் என்ற செட்டி, வங்கத்தொடு, கடல் வாணிகம் செய்யச் சென்று, சென்ற காலம் கவிழ்ந்து போக, நிர்வாண நாடோடிகளாம் நாகர் வாழும் கடற்கரையை அடைந்து, அவர்கள் மொழியைக் கற்றிருந்ததானால் உயிர் பிழைத்து, அவர்கள் அளித்த சந்தனக் கட்டை, மெல்லிய நூலாடை, அணிகளோடு திரும்பினான். (மணிமேகலை : 16 : 60 :- 61. அவர் பாடை மயக்கறு மரபின் கற்றனன் ஆதலின்) இச்செய்திகளிலிருந்து நாம் பெறக்கூடிய இயல்பான முடிவு, இன்று மலபார் என அழைக்கப்படுவதே, தென்னிந்தியாவில் நாகர் நாடாம் என்பதே. நாகர் வழிபாடு பெருமளவில் இருக்கும் இந்தியாவின் ஒரு பகுதியாக, இன்றும் இருப்பது மலபார். மலபார் நாட்டின் முக்கிய இனத்தவரின் பெயராகும் "நாயர்" என்ற சொல், "நாகர்" என்ற சொல்லிலிருந்து பிறந்ததாதல் கூடும். மேலும், ஏனைய, தென்னிந்தியப் பழங்குடியினரைப் போலவே, நாகர் பழங்குடியினரும், தலைமுழுவதும் மயிர் வளர்த்தனர், என நாம் கொள்ளலாம். கடவுளைப் போலவே கோலம் கொள்வதும், ஒருவகை உள்ளார்ந்த வழிபாடாகும். ஆதலின், வழிபடுவாரின் முகம், படம் விரித்தாடும் பாம்பு போல் காட்சி தரும் வகையில், நாக வழிபாட்டாளர்கள்,

தங்கள் தலைமயிரைக் கோதி, தலை உச்சியில் ஒன்று சேர்த்து, முடி நிமிர்ந்து நிற்குமாறு முடி போட்டுக் கொள்வர் என நான் நம்புகிறேன். இந்த முறையில் அழகு செய்யப்பட்ட தலைமயில் கொண்ட, தென்னிந்தியர்களை நான் பார்த்ததிலிருந்து, பண்டைய நாகர்கள் தங்கள் தலைகள், தாங்கள் வழிபடும் நாகம் போலச் செய்து கொள்ள முயன்றனர் என உய்த்துணர்கின்றேன். இத்தகு மக்களிடையே, மயிர்வழுக்கை வழக்கம் புகுத்தப்பட்ட போதும் கைவிட முடியாத அளவு, மிகமிகப் பழமையானது, அதனால் மிகவும் புனிதமானது என்பதால், தலை உச்சியில், சிறுமுடி எடுக்கப்படாமல், இன்றும் விடப்படுவதற்கு இதுவே விளக்கமாகக் கூடும். இந்நாகரிக முறையை, நாயர்கள், இன்றும் கொண்டிருப்பதால், அவர்கள், பெரும்பாலும், பழைய நாகர்களின், இன்றைய பிரதிநிதிகளாவர். பரசுராமனின், குடி அல்லது ஆன்மீக வழியில் வந்தவர் களிடமிருந்து ஆரிய நாகரிகத்தை, முதன்முதலில் ஏற்றுக் கொண்ட நாகர்கள், நம்பூதிரிகள் என்றும் நான் முடிவு செய்கின்றேன்.

மலபாரைச் சேர்ந்த நம்பூதிரிகள், தென்னிந்தியப் பிராமணர்களின், மிகப்பழைய சமுதாயப் பிரிவினராவர் என்பது, திருவாளர், கே. ராமவர்மராஜா அவர்களின் கட்டுரையில் காணும் பின்வரும் உண்மைகளாலும், உறுதி செய்யப்படுகிறது.

1. நம்பூதிரிகளில் பெரும்பாலான யஜூர்வேதிகள் பௌதாயன, மற்றும், பாதூலக வழியைச் சேர்ந்த மிகப் பழைய சூத்திரர்கள்.

2. முதல் மூன்று வேதங்கள் மட்டுமே, அவர்களிடையே பழக்கத்தில் உள்ளன. ஆகவே, அவர்கள், வேதவரிசையில், அதர்வவேத சமிதா இணைவதற்கு முன்பு, அதாவது வேதவியாசர் காலத்திற்கு நெடுங்காலத்திற்கு முன்பு தோன்றியவர்களாதல் வேண்டும்.

3. ஒரேசமயம், ஒன்றுக்கு மேற்பட்ட பூணூல் என்றும் அணிந்ததில்லை. இரண்டு, அல்லது மூன்று புரிகள் அணிவது பிற்கால வழக்கமாம்.

4. வேதகால வழக்கங்களாம், பூப்பு நாள் கழித்துத் திருமணம் கொள்வது, நான்காம் நாளன்று, மணச்சடங்கை நிறைவு கொள்வது போன்றவற்றை விடாது காப்பாற்றி வருகின்றனர்.

5. ஸ்ராார்த்தம், ஒருவன் இறந்த நட்சத்திரத்தில் செய்யப்படுகிறது. இறந்த திதியில் செய்யப்படுவதில்லை.

இந்த விவாதங்களிலிருந்து, தன் மனைவியாக, அர்ச்சுனன் ஏற்றுக் கொண்ட உலூபி, ஒரு மலபார் கன்னியாம் என நாம் முடிவுகொள்ளலாம்.

அகஸ்தியர்கள் :

மகாபாரத காலத்திற்கு முன்பே, இந்தியத் தீபகற்பத்தின் தென்கோடி வரை அகஸ்தியர்கள் பரவி வாழ்ந்திருந்தனர். பல்வேறு அகஸ்தியர்கள், பல்வேறு இடங்களில், பல்வேறு காலங்களில் வாழ்ந்திருந்தாலும் புராணங்களில் உள்ளது போலவே, பாரத வீரகாவியத்திலும், எல்லா அகஸ்தியர் களையும் ஓர் அகஸ்திய முனியாகவே கொண்டு பேசப்பட்டுளது. மகாபாரதம், பஞ்சவடியில், பழைய அகஸ்திய ஆஸ்ரமம் ஒன்றைக் குறிப்பிடுகிறது. (மகாபாரதம் : 3 : 99 : 8632) கடல் இடையே சவுபத்ரா எனுமிடத்தில், அகஸ்திய துறவி மடம் ஒன்றையும் அது குறிப்பிடுகிறது. ஐந்து நாரீ தீர்த்தங்களில் ஒன்றாகப், பாண்டிய நாட்டைச் சேர்ந்த அகஸ்திய தீர்த்தம் ஒன்றையும் குறிப்பிடுகிறது. (மகாபாரதம் : 1 : 21646, 217, 78-77) இவற்றில் இறுதியாகக் குறிப்பிடுவது, தமிழ்மரபுவழிச் செய்திகளின்படி தமிழ் நாட்டிற்கு வந்த பிறகு, அகஸ்தியர் தம்முடைய நிலையான உறைவிடமாக வகுத்துக்கொண்ட பொதியமலையிலிருந்து வரும் அருவியாலாம், நெல்லை மாவட்டம் பாபநாசம் நீர் வீழ்ச்சியாதல் கூடும்.

நாரீதீர்த்தங்களின் பட்டியலில், பாண்டிய நாட்டுக்குமரி தீர்த்தம் என அழைக்கப்படும், குமரிக்கடல் புனித நீராடுமிடம், முதற்கண் குறிப்பிடப்பட்டுளது.

இத்தீர்த்தம், கன்யாதீர்ததம் என்றும் அழைக்கப்படும். ஆக, இந்தியாவில் தென்கோடிமுனையில், குமரி ஒருத்தி, சிவனை எதிர்நோக்கித் தவம் கிடக்கிறாள் என்ற இப்புராணக் கதை, இக்காலத்தில் உருப்பெற்றதாதல் வேண்டும். நிலக்கோடியைக் குறிப்பிடும் சொல் எதுவும் தமிழில் இல்லை. ஆகவே, இப்புராணக்கதை அல்லது, குமரிமுனை ஒரு புனித இடம் என்பதற்கும் தமிழர்க்கும் இடையில் எவ்விதத் தொடர்பும் இல்லை. ஆக, அப்பெருங்காப்பியம் அளிக்கும் அகச்சான்றுகளிலிருந்து, வட இந்திய ஆரியர்களுக்கும், தமிழர்க்கும் இடையில், மகாபாரதப் போர்க்காலத்தில் நெருக்கமான போக்குவரத்து இருந்து வந்தது என உறுதியாகக் கொள்ளலாம்.

♦ ♦ ♦

5. வடஇந்தியாவும் தென் இந்தியாவும் (கி.மு. 1000 முதல் கி.மு. 500 வரை)

ஆபஸ்தம்பரும் பௌத்தாயனரும் :

சூத்திரகாரர்களில் (உரையாசிரியர்களில்) பெரும்பாலும், கடைசிச் சூத்திரகாரராகிய ஆபஸ்தம்பர், கோதாவரி ஆற்றின் வேலைப் பள்ளத்தாக்கில் வாழ்ந்து, கற்பித்து வந்தார். யஜுர் வேத தாக்ஷினாத்ய பிராமணர்களுக்கு வாழ்க்கை முறைகளை வகுத்து அளித்தார். திருவாளர் பூலர் அவர்களின் கூற்றுப்படி, அவர் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிற்குப் பின்னர்க் கொண்டு போகப்படுவாரல்லர். (Sacred Text Books of the East II, page : XXXVII-XLIII) அவரைக், குறைந்தது, மேலும் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர்க் கொண்டு போய் நிறுத்த விரும்புகிறேன். காரணம் பாரதப் பெரும்போருக்கு ஐந்து தலைமுறைக்குப் பிற்பட்ட அதாவது, கி.மு. 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த, ஸ்வேதகேதுவை, "அவர்" அதாவது அண்மையில் வாழ்ந்தவராக, அவர் பேசுகிறார். (Pargiter : Ancient Indian Historical Tradition, Page : 330) மேலும், "ஆப்ஸ்தம்பர், பாணினியின் இலக்கண நெறியைப் பின்பற்ற வில்லை". "அவர் அதை அறிந்திருப்பதும் நடைபெறாத ஒன்றாம் என்றும் திருவாளர் பூலர் கூறுகிறார். (Sacret Text Book of the East. II, page : XLIII) பெரும்பாலும், அவர், பாணினிக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்திருந்தவராவர். கி.மு. நான்காம் நூற்றாண்டு வாழ்ந்தவர் பாணினி என்பதற்கு ஆதரவாகக் கூறப்படும் வாதங்கள் அனைத்தையும், திருவாளர்கள் "கோல்டுஸ்டக்கர்" அவர்களும் பி.ஆர்.

பந்தர்கார் அவர்களும், தகர்த்துவிட்டு, அவருடைய காலம், கி.மு. ஏழாம் நூற்றாண்டுதான் என்பதை வலுவாக உறுதி செய்யும் எண்ணற்ற சான்றுகளைக் கொடுத்துள்ளனராகவும், ஐரோப்பிய வரலாற்று ஆசிரியர்களில் பெரும்பாலோர், பாணினி கி.மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்ற தவறான முடிவிலிருந்து, தங்களை, இன்னமும் விடுவித்துக் கொண்டாரல்லர். ஆபஸ்தம்பர், பாணினிக்கு முற்பட்ட வராயின், அவருடைய காலம், நான் மேலே கருத்துத் தெரிவித்த காலத்திலும் முற்பட்ட காலமாதல் வேண்டும். ஆபஸ்தம்பரைப் போலவே, "சாகா" என்ற வேதக் கொள்கையின் விளக்கவுரைகாரராகிய பௌதாயனர், அவரைவிட இருநூறாண்டு மூத்தவராவர். இவ்விரு சூத்ரகாரர்களும் (Soothrkaaras) கிருஷ்ணயஜுர் வேதத்தின் "தைத்திரிய" சாகா பிரிவைச் சேர்ந்தவராவர்.

இக்கொள்கை, விந்தியத்திற்குத் தெற்கிலேயே சிறப்பாகப் பரவியிருந்தது. வடஇந்தியாவில், இந்நெறியைப் பின்பற்று பவர், கடந்த ஆயிரம் ஆண்டுகால எல்லைக்குள் வட நாட்டிற்குக் குடிபெயர்ந்த தென் இந்தியப் பிராமணர்களின் வழிவந்தவராவர். ஒரு பிரிவு "சாகா"வைப் (வேதக் கொள்கை ஒன்றை) பின்பற்றுவோர் அனைவரும், தாங்கள் வாழ்ந்திருந்த இடத்தில் வாழ்ந்திருந்தமைக்கான சிறு அடையாளந் தன்னையும் விட்டுவைக்காமல், வடக்கிலிருந்து தெற்கே குடிபெயர்ந்துவிட்டனர் என்பதைக், கற்பனை செய்து பார்க்கவும் நம்மால் இயலாது ஆதலின், "தைத்திரீய" சாகா, தனி சாகாவாகப் பிரிந்து வழங்கிய காலந்தொட்டு, அதாவது வைசம்பாயனரின் மாணவராகிய வியாசர் காலந்தொட்டு, அதாவது பாரதப் பெரும்போர் காலந்தொட்டு, அத்"தைத்திரீய" சாகா, தென்னிந்திய சாகாவாக ஆகியிருத்தல் வேண்டும் (பாண்டவர் பக்கம் இருந்து போரிட்ட தென்னாட்டவருள் "தித்திரி" என்பார்களும் இருந்தனர். அவர்களின் சாகா, "தைத்ரேயம்" என அழைக் கப்பட்டது என்றும், வைசம்பாயனர், யாக்ஞவல்கியரின் எச்சிலை விழுங்கியது குறித்த கட்டுக்கதை, ஒரு பறவையின்

பெயர், சாகா என வழங்கப்படுவதற்கான பிற்காலக் கற்பனை என்றும் எண்ணுகின்றேன்). இது போலும் பேரழிவு சார்ந்த நிகழ்ச்சிக்கான சிறுகுறிப்புதானும் புராணங்களிலோ, மரபு வழிச் செய்திகளிலோ காணப்படவில்லை. ஆகவே, கிருஷ்ண யஜுர் வேதம், தஷிண பிராமணர்களின் "சாகா"வாக ஆதற்குப் போதுமான போக்குவரத்து, கி.மு. 14, கி.மு.13 நூற்றாண்டு காலத்தில், தென்னிந்தியாவுக்கும், வட இந்தியாவுக்கும் இடையில் இருந்துவந்தது. இச்சமய நெறிக்கான விதிமுறைகளை, முதன்முதலில் வகுத்த ஒருவர், பௌதாயனர் ஆதலின் அவரை, கி.மு.900இல் கொண்டு நிறுத்த விரும்புகின்றேன். இக்காலம், பாரத்தாயனார்க்குப் பொருத்தம் அற்ற பழங்காலமாகத் தோன்றக்கூடும். ஆனால், கோதாவரி ஆற்றங்கரையில், இராமர் காலத்திற்கு முன்பிருந்தே ஆரியர் இருந்து வந்தனர் என்பதையும், தென்னிந்தியாவை, இராமன் அமைதி நிலவும் இடமாக மாற்றியது, ஆங்கு ஆரியர்கள் மேலும் பரவுவதற்கு வழி செய்தது என்பதையும், வேதவியாசர் மற்றும் வைசம்பாயனர் காலத்தில், கிருஷ்ண யஜுர் வேத மாணவர்கள், அந்த ஆற்றை அடுத்திருந்த மாவட்டங்களுக்கு உள்ளாகவே இருந்தனர் என்பதையும், அச் சாகாவின், முதுபெரும் சூத்ரகாரர் பௌதாயனர் ஆவர் என்பதையும் நினைவில் கொண்டால், மேலும், பாணினி கி.மு. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பதையும், ஆபஸ்தம்பர், பாணினியின் சமகாலத்தவர் அல்லது சில ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் என்பதையும், பௌதாயனர், ஆபஸ்தம்பரை விடக், குறைந்தது இரண்டு நூற்றாண்டுகாலம் முற்பட்டவர் என்பதையும் ஏற்றுக் கொண்டால், பௌதாயனர் காலம் பற்றிய என்னுடைய மதிப்பீடு எவ்வாறு மறுக்கப்படும் என்பதைக் காண முடியவில்லை. ஆனால், பௌதாயனர், அத்துணைப் பழங்காலத்தைச் சேர்ந்தவராயினும், அவர் பெயரால் வழங்கப்படும் சூத்திரங்களுக்கு அப்பழங் காலத்தைக் கொடுக்க இயலாது; ஆபஸ்தம்பரின் சூத்திரங்களைப் போல் அல்லாமல், பௌதாயரின் சூத்திரங்கள், அவரைப் பின்பற்றுவோர்களில், மிகமிகப் பிற்பட்ட காலத்தவரால்,

பெரும் அளவில் புதியன புகுத்தலுக்கும் திருத்தங்களுக்கும் ஆளாகிவிட்டதாகத் தெரிகிறது. காரணம் : அவற்றில் விதிக்கப்பட்டுள்ள சில வழிபாட்டு நெறிகள், அவை மிகமிகப் பிற்பட்டன ஆதல் கூடுமோ என்ற ஐயுணர்வை எழுப்புமளவு அத்துணை விரிவாக உள்ளன. வான்கோள்களை, அவை ஆட்சி புரியும் வார நாட்களின் வரிசையில் குறிப்பிட்டிருப்பது, அச்சூத்திரங்கள், பிற்காலத்தில், வரன்முறையின்றித் திருத்தப்பட்டுள்ளன என்பதைக் காட்டுகிறது.

வடஆரியப்பழக்க வழக்கங்களுக்கு எதிரான தென்னாட்டவர் பழக்க வழக்கங்கள் :

தென்னாட்டுப் பிராமணர்களின் வாழ்க்கை முறைகளுக்கான விதிகளை வகுக்கும்போது, பௌதாயனர், ஆரிய வர்த்தத்து ஆரியர்களுக்கு, ஒருவகையில் வெறுப்பூட்டுவனவும், தென்னாட்டவர்களுக்கே உரியனவுமாய வழக்கங்களை இயல்பாகவே விவாதிக்கிறார். தென்னிந்தியர்கள், ஆரிய வழிபாட்டு நெறியை ஏற்றுக் கொண்டு, ஆரிய வாழ்க்கை முறைகளுக்குக் கட்டுப்பட்டுவிட்ட பின்னரும், கைவிட்டுவிடாது, மேற்கொண்டிருந்த பழைய, தஸ்யூ வழக்கங்கள் ஐந்து, பௌதாயனரால் குறிப்பிடப் பட்டுள்ளன. "அவையாவன : சமயதீக்கை பெறாதவரோடு உடன் இருந்து உண்ணல்; மகளிரோடு இருந்து உண்ணல்; பழைய உணவை உண்ணல்; ஒருவன், தன் தாய்வழி அம்மான் மகளோடும், தந்தையோடு உடன் பிறந்தாள் மகளோடும், காதல் உறவு கொள்ளுதல்; ... கூறிய இவ்வழக்கங்கள் ஒவ்வொன்றிற்கும், அந்நாட்டு நடைமுறை விதியே, அதிகார உரிமையுடையதாகக் கருதப்பட வேண்டும். (யததத் அனுபதென ஸஹபோஜனம்; ஸ்திரியா ஸஹபோஜனம்; பர்யுஷித போஜனம்; மாதுல பித்ருஸ்வஸ்ற்துஹ்ரிர் கமநம்; இதி... தத்ர தேசப்ராமாண்யம் எவஸ்யாத் - Baudhayana Dharma Sutras. 1 : 1, 2, 3, 6) வடநாட்டு, வாழ்க்கைச் சட்ட வல்லுநராகிய கௌதமர், உள்நாட்டு வழக்கங்களை, அடிப்படை ஆதாரமாக ஏற்றுக் கொள்ளவில்லை என்பதைப்

பௌதாயனர் அறிந்திருந்தார். (Mithyaitaditi Gawtamah. 1: 1,2,7) அவரால் முடிந்திருந்தால், இப்பழக்க வழக்கங்களைப் பௌதாயனர் அகற்றி இருப்பார் என்பதை இது காட்டுகிறது.

ஆனால், நர்மதை ஆற்றுக்குத் தெற்கில் உள்ள ஆரியர்களை, அவர்களின் பழைய பழக்க வழக்கங்களைக் கைவிடத் தூண்டுவதற்கான வலுவற்றவராக அவர் இருந்தார். பண்டைய பழக்கவழக்கங்கள், அத்துணை எளிதில் அழிந்துவிடுவதில்லை. உண்மையைக் கூறுவதாயின், அவை என்றுமே அழிவதில்லை. மாறாக, ஆயிரம் ஆயிரம் ஆண்டுவரையும், ஒன்று, இருந்தது இருந்தவாறே, அல்லது சிறிதே திரிந்த நிலையில் இறவாது இடம் பெற்றிருக்கும்.

"பௌதாயன தர்ம சூத்திரங்கள் (Sacred Text Book of the East. பகுதி : 14) என்ற தம்முடைய மொழி பெயர்ப்பு நூலில், திருவாளர் பூலர் (Buhler) அவர்கள், அண்ணன் மகனுக்கும், தங்கை மகளுக்கும் போலும் உடன் பிறந்தார் இருவரின் மக்களுக்கு இடையிலான திருமணமாக, "மாவல பித்ர்ஸ்வரர் துஹித்ற் கமனம" என்ற திருமணத்தைத் தவறான நிலையில் பொருள் கொண்டுள்ளார். இவைபோலும் திருமணங்கள், தென்னிந்தியாவில் முறையானவையே ஆகும். இற்றைய நாளில், தெலுங்கு பிராமணர்களிடையே, உண்மையில், இது கட்டாயமாம்; ஏனைய தென்னிந்திய பிராமணர்களிடையேயும் இதுவே பெரும்பாலான வழக்கமாம். தெலுங்கு பிராமணரல்லாதாரிடையே, தென்னாட்டுப் பிராமணரிடையே நன்கு தெரிந்த வழக்கமாம், ஒருவன் தன் உடன்பிறந்தாள் மகனை மணங்கொள்வது பொதுவான வழக்கமாம். அதனால், பிராமணரல்லாதாரால் பேசப்படும். தெலுங்குக் கிளைமொழியல், "கோடலு" என்ற சொல், உடன்பிறந்தார் மகள் என்றும் பொருள்படும், மனைவி என்றும் பொருள்படும்). உடன் பிறந்தான் மகனுக்கும், உடன் பிறந்தாள் மகளுக்குமிடையேயான திருமணமே, வழக்கமான திருமணமாம்; ஆதலின், அவைபோலும் திருமணம் நிகழாத போது, அவ்வுடன்பிறந்தாள் மக்கள், இழந்த அந் நல்வாய்ப்பினுக்கு ஈடுசெய்துகொள்ள முயல்வர். அது,

வேறுபிற சூழ்நிலைகளில், நனிமிகக் கொடிய ஒழுக்கக் கேடோடு கூடிய கயமையாகக் கருதப்படுவதுபோல், கருதப்படுவதில்லை. உடன்பிறந்தான் மகனும் உடன் பிறந்தாள் மகளும், ஒருவரையொருவர் மணந்து கொள்ளா நிலையிலும், சமுதாயப் பெரும்பழிக்கு ஆளாகா நிலையில், ஒழுக்க நலனைப் புண்படுத்தவல்ல, கேலியொடு கூடிய இன்ப விளையாட்டு, அவர்களிடையே பரிமாறிக் கொள்ளப் படுவதும் உண்டு. உடன் பிறந்தார் மக்களிடையேயான திருமண வழக்கத்தில் மற்றொரு விளைவு, தமிழில் "அத்தான்" என்ற ஒரே சொல், தந்தையொடு உடன் பிறந்தாள் மகனையும், மனைவியொடு உடன் பிறந்தவனையும், தமக்கையின் கணவனையும் ஒரு சேரக்குறிப்பதாம்."

"பர்யுஷித போஜனம்" என்பது, பழையது உண்பதாம். ஆக்கிய சோற்றை, ஓர் இரவு, நீரில் இட்டுவைத்து உண்பது; உயிர்ச்சத்தும், ஊட்டச்சத்தும், அரைபட்டுப் போகாப் புழுங்கல் அரிசியாயின், அது ஓர் உடல் நலம் காக்கும் நல்ல வழக்கமாம். இவ்வழக்கம், வடநாட்டு ஆரியர்களால், அருவருப்போடு மதிக்கப்பட்டு, புனிதமற்ற செயலாகக் கருதப்பட்டது. ஆனால், ஆரிய எதிர்ப்பு இருந்தாலும், தமிழர்களால், அது விடாது கடைப்படிக்கப்பட்டது. ஆனால், வாழ்க்கைச் சட்டம் வகுப்போர், ஏதும் செய்யமாட்டா செயல் இழந்து போனதைப் பர்யுஷித அன்னத்திற்கு அதாவது பழைய உணவிற்குப் பதிலாக உடல் உணர்வுகளுக்கு ஊக்கம் ஊட்டுவனவாய, காபி, சூட்டோடு புதிதாகப் பண்ணப்படும் அரிசி ஆப்பம் ஆகியவற்றை, மாற்றுப் பொருளாக்கித் தரும் நவநாகரிகம் செயல்படுத்தி விட்டது.

பண்டைய பிராமணர்கள் இறைச்சி உண்ணல் :

இக்காலத்தைச் சேர்ந்த, தென்னிந்திய பிராமணர், வட இந்திய பிராமணர்களைப் போலவே இறைச்சி உண் பவர்களாம். "புலால் உண்ணும் விலங்குகள், பழகிய பறவைகள், பழகிய சேவற்கோழி, மற்றும் பன்றி ஆகியவை உண்ணப்படாதவை. ஆடுகள், ஐந்து ஐந்து கால்விரல்களைக்

கொண்ட விலங்குகள் (பஞ்ச பஞ்ச நகஹாற) முள்ளம்பன்றி, உடும்பு, முயல், முள்ளெலி, ஆமை, பிளவுபட்ட குளம்புகளைக் கொண்ட ஐந்து விலங்குகள், (த்விகுரிஹை), "நீல்காய்", புள்ளி இல்லா மான், புள்ளிமான், எருமை, காட்டுப்பன்றி, கால்களால் கிளறித் தின்னும் ஐவகைப் பறவைகள், கௌதாரி, பாறைகளில் கூடுகட்டி வாழும் புறா, "கபிஞ்சா", "வார்த்ஹராணஸ", மயில், "கஹஸ்ரதம்ஷ்ட்ரீ", "சிலிசிம", "வர்மி", "ப்ரஹச்சிரஸ்", "மஷகரி", "ரொஹிக" மற்றும் "ராஜி" போலும் மீன்வகைகள், ஆகிய இவை உண்ணப்படலாம் எனப் பௌதாயனர் கூறுகிறார். இந்நீண்ட பட்டியலோடு, காண்டாமிருகமும், கருப்பு மறிமானும் எதிர்ப்புக்களிடையே சேர்க்கப்பட்டன (Baudhayana Dharma Sutras. 1 : 5, 12 : 1 : 8) ஆபஸ்தம்பர், தின்னக்கூடாத விலங்கு களின் பட்டியல் ஒன்றைத் தருகிறார். ஆனால், இறைச்சி உண்பது பற்றிய அவர் கொள்கைகள், பால் தரும் பசுக்கள், காளைகள் ஆகியனவும் தின்னப்படலாம் எனக்கூறும் தனியான ஒரு சூத்திரத்தைக் கொண்டிருப்பதோடு, மற்ற வகையில், பௌதாயனர் கொள்கையோடு ஒத்துள்ளன. (Apasthamba Dharma Sutras 1,3,17,30)

"வாஜகனேயர்" அவர்கள், "காளை மாட்டின் இறைச்சி படையலுக்கு உரியது" எனப் பலர் அறிய வெளிப்படுத்திய கருத்தைத் தாம் கூறியதோடு இணைத்துக் கொள்வது பொருந்தும் என ஆபஸ்தம் பாயனர் கருதினார் என்பதிலிருந்து, மாட்டிறைச்சி உண்பதற்கு எதிரான, உணர்வுபூர்வக் கருத்து தென்னாட்டில், தானாகவே கைவிடப்பட்டது என்பதை அறிந்து கொள்ளலாம். (யாக்ஞவல்கியர், "பசு, காளைகளின் இறைச்சி முதிரா இளமையவாயின், அவற்றை உண்போரில் நானும் ஒருவன்" (Sat. Brah. 3 : 1,2,21) எனக் கூறுகிறார்.

ஆபஸ்தம்பர் கூற்றுப்படி, இறந்த முன்னோர்களை மகிழ்விக்கவும், செய்வோர்க்குப் பல்வேறு வகையான பலன்களை ஈட்டுவதற்கும், ஸ்ரார்த்ததங்கள் ஒவ்வொரு மாதத்திலும் பிற்பகுதியில் செய்யப்படுதல் வேண்டும்.

அவர்கள் மனநிறைவு கொள்ளும் காலஅளவு, படைக்கும் இறைச்சியின் வகைக்கேற்ப அமையும். அவ்வகையில், மாட்டிறைச்சி, அவர்களை ஓராண்டு காலத்திற்கு மனநிறைவு கொள்ளச் செய்யும். எருமை இறைச்சி, மேலும் நீண்ட காலத்திற்கும், காண்டாமிருகத்தின் இறைச்சி, அவற்றினும் நீண்ட காலத்திற்கும் மன நிறைவினைத் தரும். "சதபலி" என்ற மீன் வகையும், "வார்த்ரானஸ" எனப்படும் நாரை இனமும் நீண்ட காலத்திற்கு மனநிறைவைத் தரும். (Yajanavalkia's Sat. Brah. 2 : 7, 16 : 4, 7 26-28, 17 : 1-3).

தென்னிந்தியப் பிராமணர்கள், எப்போது, ஏன், இறைச்சி உண்ணலைக் கைவிட்டனர் என்பது ஒரு சுவையூட்டும் நிகழ்ச்சியாம். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராக நான் கருதும் தமிழ்ப்புலவர் கபிலர், "புலால் நாறும் கொழுத்த கறி இறைச்சித் துண்டங்களைப் பூமணம் நாறும் புகை எழுத் தீ கொளுத்திச் சமைத்த ஊனையும், துவையலையும், கறியையும், சோற்றையும் உண்டு வருந்தும் செயல் அல்லது, வேறு செயல் அறியாவாதலின், பாடுவார் கைகள் மென்மையுடையவாயின எனக்கூறியுள்ளார். பிறிதோரிடத்தில், தம்பாடற்காம் பரிசிற் பொருளாக, மது இருந்த சாடி வாய்திறப்பவும், ஆட்டுக் கிடாய் வீழ்ப்பவும், சமைக்கப்பட்டுக் குவிந்து கிடக்கும் கொழுவிய துவையலையும், ஊனையும் உடைய சோற்றையுமே" விரும்பியுள்ளார்.

"புலவு நாற்றத்த பைந்தடி
பூ நாற்றத்த புகைகொளீஇ, ஊன்துவை
கறிசோறு உண்டுவருந்து தொழில் அல்லது
பிறிது தொழில் அறியா வாகலின், நன்றும்
மெல்லிய பெருமை! ... ...
... ... பாடுநர் கையே,"

"மட்டுவாய் திறப்பவும், மை விடை வீழ்ப்பவும்,
அட்டுஆன்று ஆனாக் கொழுந்துவை ஊன் சோறும்
பெட்டாங்கு"

- புறம் - 14 : 12 - 19; 1113 - 1.3

கி.பி. ஐந்து, ஆறாம் நூற்றாண்டுகளில், விஷ்ணு, சிவன் மீதான பக்திப் பெருவெள்ளம், தமிழ்நாட்டில் பெருக்கெடுத்து ஓடிற்று. இவ்வழிபாட்டு நெறிகள், சமணர் வழிபாட்டு நெறியோடு போரிட வேண்டியதாயிற்று. சமணத்துறவிகளாம் ஆசிரியர்கள்தாம், சமய உணர்வு வாய்க்கப்பெறாத் தம் மாணவர்களுக்கு, இறைச்சி உணவினைக் கைவிடுமாறு முதன்முதலில் வற்புறுத்தினர். வைஷ்ணவ, சைவ வழிபாட்டு நெறிகள், இறைச்சி உணவு உண்டலைக் கைவிடாது போனால், சமணவழிபாட்டு நெறிக்கு எதிராக இருந்து, வெற்றி பெறல் இயலாது. ஆகவே, இறைச்சி உண்ணல், கள் உண்ணல் ஆகியவற்றிலிருந்து ஒதுங்கி நிற்பதைத் தங்களின் அடிப்படைத் தத்துவங்களில் ஒன்றாக மேற்கொண்டனர். தென் இந்தியாவில் வைஷ்ணவ, சைவ ஆகமங்களின் முதல் ஆசிரியர்களாக விளங்கிய பிராமணர்கள், இறைச்சி உணவினைக் கைவிட்டமைக்கு இதுவே காரணம் என யூகிக்கின்றேன்.

வருணங்கள் :

தென்னிந்திய சூத்ரகாரர்கள் வகுத்த வாழ்க்கைச் சட்டங்களெல்லாம், முக்கியமாக, அக்கால அளவில், தமிழ்நாட்டில் மிகச் சிலராகவும், கோதாவரிப் பள்ளத்தாக்கின் தலைப்பில், மிகப் பலராகவும் வாழ்ந்திருந்த பிராமணர்களைக் குறித்தனவே. அச் சூத்திரங்கள், நான்கு பெருஞ்சாதிகளையும், எண்ணற்ற கலப்புச் சாதிகளையும் குறித்துப் பேசுகின்றன என்றாலும், அவை கூறும் சட்டங்களில், ஏனையோரிலும், பிராமணர் குறித்தே, அவை தாமும் அக்கறை கொண்டுள்ளன ஆதலின், அவை கூறும் அச்சாதிக் கூறுபாடுகள், வெறும் தத்துவ அளவினவே ஆம். ஆரியர்களின் நால்ஜாதி அமைப்பு (சாதுர் வர்ண்யம்) வேதகாலத்தில், ஆரிய வர்த்தத்தில் மட்டுமே நடைமுறையில் இருந்த ஒன்று. மகாபாரதப் போருக்குப் பின்னர் அர்ஜுனன் எதிர்பார்த்தது போல், வட இந்தியாவில் பெரும் சாதிக்குழப்பம் (வர்ணசங்கரம்) நிலை கொண்டுவிட்டது (பகவத் கீதை : 1. 41-43). தென் இந்தியாவில் சாதுர்வர்ணயம்,

எக்காலத்தும் கொள்கை அளவில் இருந்ததே அல்லது, என்றும் நடைமுறையில் இருந்தது இல்லை. காரணம் : கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு வரையும் பிராமணர்களின் வாழ்க்கை முறை, பெரும்பாலான தமிழ் மக்களின் வாழ்க்கை முறையிலிருந்து முழுமையாக வேறுபட்டே இருந்தது. ஆரியச் சமயநெறிகள், தமிழ்நாட்டில் பரவுவதற்கு நெடுங்காலத்திற்கு முன்னர்த் தமிழ்நாட்டு மக்கள் சுற்கால அளவில், பாலை, மலை, கடல், காடு, ஆறு ஆகிய நிலங்களில் அவர்கள் மேற்கொண்ட வாழ்க்கை நிலைக்கு ஏற்ப, முறையே, நாடோடும் மறவர், வேட்டுவர், மீனவர், ஆயர், உழவர் என ஐவகையினராகப் பிரிக்கப்பட்டிருந்தனர். இப்படிப்பழங்குடியினர் ஐவரும், ஆரியப் பழக்கவழக்கங்கள் பண்பாடுகளிலிருந்து, பல நிலைகளிலும் வேறுபட்ட, தங்களுக்கே உரிய பழக்க வழக்கங்களையும் பண்பாடுகளையும் வளர்த்துக் கொண்டனர். ஆரிய வாழ்க்கை நெறிகள், தமிழர் வாழ்க்கை நெறிகளைப் பாதிக்க இயலவில்லை. ஆகவே, தமிழரின், அம்மண்ணுக்கே உரிய நாகரிகப் பெருவெள்ளமும், வந்து புகுந்த ஆரிய நாகரிகச் சிற்றருவியும், யமுனையும், கங்கையும், பிரயாகை தொடங்கிப் பலகாவதம் இரண்டின் வெள்ளமும், ஒன்றொடொன்று கலக்கப் பெறாமலே, ஓடி வருவது போல், அடுத்தடுத்து ஓடுவவாயின, நமக்கு இப்போது கிடைத்துள்ள தமிழ்ப் பாக்களில், நனிமிகப் பழைய பாக்கள், பலநூறு ஆண்டுக்காலம் வரையும், தமிழ்ப் பிராமணர்கள், தமிழரின் தேசியப் பெருவாழ்வாம், வெள்ளப் பெருக்கிலிருந்து பெருந்தொலைவு ஒதுங்கியே வாழ்ந்து வந்தனர்; தமிழ்ப்பாக்களின் போக்கை ஆட்கொண்டிலர் என்பதை உணர்த்துகின்றன.

பாணினியும், தென் இந்தியாவும் :

மகாபாரதப் போர் முடிவிற்கும், நந்த அரசு இனம் ஆட்சியமைப்பிற்கும் இடைப்பட்ட காலத்தில் குரு - பாஞ்சாலம், மகதம், அவந்தி மற்றும் பிற வட இந்திய நாடுகளில், அரச இனங்கள், வண்ணம்மாற்றிக் காட்டும்

கண்காட்சி போல், மாறிமாறி ஆட்சி ஏறிய நிகழ்ச்சியில் தமிழரசர் பங்கு சிறிதே அல்லது அறவே இல்லை எனலாம். ஆகவே, பாணினி போலும், முதலாம் ஆயிரத்தாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த, வடஇந்திய சமஸ்கிருத நூலாசிரியர்கள், தென்னாட்டவரை, அறவே குறிப்பிடவில்லை. நான் எண்ணுவதுபோல், கி.மு. ஏழாம் நூற்றாண்டில் சிறப்புற்று விளங்கிய பாணினி, "அஷ்மகம்" ஒன்று தவிர்த்து, நர்மதை ஆற்றுக்குத் தெற்கில் இருந்த எந்த ஒரு நாட்டையும் குறிப்பிட்டாரல்லர்.

இதிலிருந்து, திருவாளர் டி.ஆர். பந்தர்க்கார் அவர்கள் "தென்னிந்திய நாடுகளின் பெயர்களே பாணினிக்குத் தெரியாது" என உய்த்துணர்கிறார். "அஷ்டாத்தியாயி" யைக் கற்ற, அறிவார்ந்த ஆசிரியன் எவனும், பாணினி, ஒரு பொறுப்பற்ற, அல்லது ஏதும் அறியாத இலக்கண ஆசிரியன் ஆவன் எனக் கூறுமளவு துணிவு பெற்றவனாக மாட்டான். ஆனால், நாம் பெற்றிருப்பது ஒரு சொல் அன்று. பாண்டியா, சோழா, கேரளா என்ற மூன்று சொற்கள். ஆழமாகவும், முழுமையாகவும் ஆய்ந்து காணும் இலக்கண ஆசிரியன் எவனும், அச்சொற்களை அறிந்திருந்தால், தவறாமல் செய்திருக்க வேண்டிய, அச்சொற்களின் அமைப்பு பற்றிய விளக்கம் பாணினியால் அளிக்கப்படவில்லை. ஆகவே, தென்னிந்திய நாடுகளின் பெயர்கள் பாணினிக்குத் தெரிந்திருக்கவில்லை. அல்லது, வேறு வகையில் கூறுவதாயின், கி.மு. ஏழாம் நூற்றாண்டில் ஆரியர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை என்பது ஒன்றே முறையான முடிவு ஆகும்" எனக் கூறுகிறார் பந்தர்க்கார் (Carmichael Lectures: 1918. page:4-7) இக்காரணகாரியங்களின் பொருத்தத்தை என்னால் ஏற்றுப் பாராட்ட இயலாமைக்கு வருந்துகின்றேன். பாணினி, அச் சொற்களை அறிந்திருக்க முடியும்; ஆனால், அவற்றைச் சமஸ்கிருதச் சொற்களாக மதித்திருக்க முடியாது. (உண்மையில் அவை தமிழ்ச் சொற்கள்). நாம், இப்போது பஞ்சாப் என்றும், ஆப்கானிஸ்தான் என்றும் பெயரிட்டு அழைப்பனவும், அவற்றிற்குத் தெற்கில் உள்ள மேலும்

சிலவுமான, அவர் நேரிடையாகத் தெரிந்திருந்த அண்டை மாவட்டங்களில் உள்ள இடங்கள், ஆறுகளின் பெயர்களை அவர் குறிப்பிட்டு ஆய்வு செய்திருப்பது நடைபெற்றுளது. இவ்வுண்மையை அடிப்படையாகக் கொண்டு, அவருடைய அஷ்டாத்தியாயியை, அவருக்குத் தெரிந்திருந்த இந்திய நிலப்பரப்பில், முழுமையான நில இயல் நூலாக மதிப்பது சரியாகாது. தம்முடைய இலக்கண நூலில் குறிப்பிடாத நாடுகளின் பெயர்கள் அவருக்குத் தெரியாது என்று கூறுவதும், மேலும் ஒருபடி சென்று, அவர் காலத்து ஆரியர்கள், அப்பெயர்களை அறிந்திருக்கவில்லை என நிலைநாட்டுவதும், இவ்வாதம் குறித்து ஏதும் பேசாமல் இருப்பது விடுத்து அதைப் பெரும் நகைப்பிற்குரிய ஒன்றாகத் தள்ளிவிடுவனவாம்.

["இந்தியாவின் நனிமிகச் சிறப்பியல்பு வாய்ந்த மரமாம் ஆல், ரிக் வேதத்தில் குறிப்பிடப்படவில்லை. ஆகவே, ரிக் வேதப் பாராயணப் பாடல்கள் பாடப் பெற்றபோது, ஆல் போலும் ஒரு மரம் இந்தியாவில் இல்லை என ஒருவன் மிகவும் ஆணித்தரமாக வாதிடவும் கூடும்" எனக் கூறுவதன் மூலம், இவ்வாதத்தை எள்ளி நகையாடியுள்ளார் திருவாளர் பர்கிதர் அவர்கள்: (Pargiter's Ancient Indian Historical Traditions : Page: 125). "அது, ஆல் குறித்தும் உப்பு குறித்தும், இன்றைய ஆய்வாளர் முடிவுப்படி, ஆரியர்கள் சென்று தங்கியிருந்த பாரியாத்திரா மலைக்குன்றுகள் (ஆரவல்லி மலைத் தொடர்) குறித்தும் ரிக்வேதம் ஊமையாகவே இருப்பதை ஒருவன் கருத்தில் கொண்டவழி, விந்தியமலை, மற்றும் பிற நிலஇயல் கூறுகள் குறித்து அவை ஏதும் கூறாதிருப்பது, அது, அவற்றை ரிக்வேதம் அறிந்திலது என்பதை உணர்த்துவதாகாது", என்று, மேலும் அவர் கூறியுள்ளார். (Pargiter's Ancient Indian Historical Traditions : Page : 299). இருவரில், ஒருவர், பெரும்பாலும், பாணினியின் சமகாலத்தவரும், பிறிதொருவர், அவர் காலத்திற்கு முற்பட்ட காலத்தில் சிறப்புற வாழ்ந்தவரும் ஆகிய பௌதாயனரும், ஆபஸ்தம்பரும், தென்னிந்தியாவில் வாழ்ந்து, வாழ்க்கைச் சட்ட திட்டங்களை வரைந்தனர்.

அவர்கள், ஆரியர்கள்தாம் உறுதியாக; மேலும், பாணினி, எடுத்துக்காட்டாகக் காட்டவல்ல பெருமை சார்ந்த, முழுமையான பல்பொருள் அறிவு நிரம்பியவராயின், தங்களுடைய வார்த்திகத்திலும், மகாபாஷ்யத்திலும், பாணினியின் இலக்கணக் கொள்கைகளை, மேலும் விரிவுபடுத்த வேண்டிய தேவை, முறையே காத்தியாயனர்க்கும், பதஞ்சலிக்கும் நேர்ந்திருக்காது.

ஜாதகா கட்டுக்கதைகளும் தென் இந்தியாவும் :

பிற்காலத்தில் கௌதம புத்திரராக உயர்ந்துவிட்ட போதிசத்தரின் எண்ணற்ற பிறப்புகள் குறித்த கட்டுக்கதைகளின் தொகுப்பாகிய ஜாதகா கட்டுக்கதைகள் என்ற நூல், வடஇந்தியரிடையே, ஐந்தாம் நூற்றாண்டிலும் அதற்கு முந்திய நூற்றாண்டுகளிலும் வழக்கில் இருந்த, தர்மவிரோத பௌத்த வழிபாட்டு நெறியின் நாட்டுப்புறக் கட்டுக்கதைகளின் ஆவணம் ஆகும். இக்கதைகள், கி.மு. நான்காம் நூற்றாண்டு அளவில் எழுதப்பட்டன. ஆனால், அவை, புத்தர் காலத்திற்கு நெடுங்காலத்திற்கு முன்பிருந்தே, நாட்டுப்புறக் கட்டுக்கதைகளாக இருந்திருக்க வேண்டும். அக்கதைகளில் ஒரு சில, வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையிலான போக்குவரத்து, அக்காலத்திற்கு முன்னரும் பின்னரும் போலவே, நெருக்கமாக இருந்தது என்பதை உணர்த்துகின்றன. அக்கதைகள், தம் இனத்தைத் தாமே கொன்று தின்னுபவராக நம்பப்படும் பழங்குடியினர் என்றும் பெண் பூதங்கள் என்றும் அழைக்கப்படும் "யக்கினீஸ்"கள் "ஸ்ரிஸவத்து" நகரில் வாழும் "தம்பபண்ணி" தீபத்தோடு (இலங்கை) நடைபெற்ற வணிகர்களின் கடற்பிரயாணங்கள் பற்றிப் பேசுகின்றன. அவ்விடத்திற்கு அண்மையில் வணிகர்களின் கலங்கள் உடைந்துவிடும்போது, யக்கினீஸ் என்ற அவர்கள், அவ்வணிகர்களுக்கு உணவும், மதுவும் அளித்து அவரைக் காத்து மணந்து கொள்வதும் செய்து, இறுதியில் அவர்களைத் தின்றுவிடுவதும் செய்வர். இந்த யக்கினீக்கள், இரைதேடிக் கல்யாணி ஆறு முதல் நாகதீபம்

வரை கடற்கரையில் அலைந்து திரிவர். [Valahassa Jataka No.196. நாகதீபம் என்பது, ஈழம் மலபார் கடற்கரை களைக் குறிக்க வழங்கப்படும்] அத்தீவு யக்கனீக்களால் இலங்கையின் நெருக்கமாக அகப்படுத்தப்பட்டிருந்தது. பழங்குடியினர் பற்றிய பழைய இராமாயணக் கட்டுக்கதை களின் நினைவுச் சின்னம் இவை என்ற உண்மை ஒருபால் இருக்க, ஒரு பிரிவு மக்கள், இலங்கைக்குப் பயணம் செய்து, ஆங்குச் சந்நியாசிகள் ஆயினர். (Hatripala Jataka. 509: Mugapakka Jataka - 538). சிறிய வில்லாளனாகப் பிறந்த புத்தர்தாமும், தக்கசீலத்தில் வேதங்களைக் கற்றுத் தம் கல்வியை நிறைவு செய்துகொண்டு, வாழ்க்கை அனுபவங்களைப் பெற ஆந்திரநாட்டிற்குச் சென்றார். (Bhima Sena Jataka. 80) அவர் ஆங்குப் பெற்ற அனுபவம் குறித்து நாம் பொருட்படுத்தவில்லை; அவருடைய பிறவிகளில் பிறிது ஒன்றில், "சேரி" என்ற நாட்டில் அவர், ஒரு மன்பாண்ட வணிகர்; அவர் "சேரிவன்" என அழைக்ப்பட்டார். இச் சேரி, பெரும்பாலும் சேரநாடு ஆம். விலை கூவி விற்கும் வணிகனாக, ஊர் ஊராகச் செல்லும் அவர் பயணத்தில், அவர் "தெலவாஹ" ஆற்றைக் கடந்து "அந்தபுராவை" அடைந்தார். அதாவது ஆந்திரநாடு, சேர நாட்டிலிருந்து வெகுதொலைவில் இல்லை: (சேரிவாண்ய ஜாடகா எண் : 3)

போதிசத்தரின் பிறிதொரு அவதாரத்தில், அவர் பிராமண "மகாகால"ரின் மகன் "அகித்தி" ஆகப் பிறந்தார். அவர் துறவியாக மாறி உடன் பிறந்தவளான "யசவதி" என்பாளுடன் பெனாரஸிலிருந்து பத்துக்கல் தொலைவில் உள்ள ஓரிடத்திற்குப் போய்விட்டார், ஆனால், அவர் மீது அன்புகாட்டுவாரின் அன்புத் தொல்லைகளிலிருந்து விடுபட, அவ்விடத்தை அவராகவே விடுத்து, "தமிலா" நாட்டை அடைந்து, காவேர பட்டணத்திற்கு அருகில் இருந்த, ஒரு மலர்த்தோட்டத்தில் (உய்யானம்) தங்கியிருந்தார். இதிலிருந்து இந் நாட்டுப்புறக்கதைகள் வழக்கில் இருந்த போது, காவேரிப்பட்டணம், சோழர்களின் தலைநகர்களில் ஒன்று (அக்கதையில் சோழர்கள் பெயர்சுட்டிக் கூறப்படவில்லை

என்றாலும்) என்பதும், வடஇந்தியக் கிளைமொழிகளில், அது, "காவெரபட்டன்" மாக மாறி வழங்கப்பட்டது என்பதும், ஆற்றுப் பெண்தெய்வத்தின் தந்தை பெயர் "கவெரரிஷி" என்றும், கட்டுக்கதை பெரும்பாலும் வழக்கத்தில் இருந்தது என்பதும் உய்த்துணரப்படும். ஈண்டும், "அகித்தி", அன்பு செலுத்துவோரால், அன்புத்தொல்லைக்கு உள்ளாக்கப்பட்டார். அதனால், "அஹிதீபு" என அழைக்கப்படுவதும், பெரும்பாலும், "நாகதீபம்" போன்றதே ஆனதும், "தம்பபண்ணி" (ஈழம்) என்ற தீவிற்கு அண்மையில் இருப்பதும், அதனால், நான், முன்னரே கூறியது போல, நாகர்களின் நாடாம் மலபார்க் கடற்கரையான "காரதீபம்" என்ற இடத்திற்குச் சென்றுவிட்டார். அங்கு, "அகித்தி", அதாவது போதிசத்தர் நிறைபேரறிவு பெற்றுவிட்டார். "அகித்தி", ஒருசிலரால், நிலபேறுடைய காரணம் ஏதும் இன்றி, அகஸ்தியராகக் கருதப்பட்டார்.

ஸுஹபாஹு :

ஜாதகா கதைகளில் காணப்படும், தென்னிந்தியா பற்றிய இவைபோலும் குறிப்புகள், கி.மு. முதல் ஆயிரத்தாம் ஆண்டின் மத்தியில், தென் இந்தியா, வடஇந்தியாவிலிருந்து துண்டிக்கப்பட்டுவிடவில்லை; இந்தியாவின் அவ்விரு பிரிவுகளுக்கும் இடையில் அரசியல் அல்லாத பிற உறவுகள், எப்போதும் போலவே சுறுசுறுப்பாகவே இருந்து வந்தன என்பதை உறுதி செய்கின்றன. புத்தர் இறந்த, பௌத்தர் சொல் நடையில் கூறுதாயின், உலகப் பேரிறைவன் "பரினிபான" படுக்கையில் படுத்துவிட்ட அன்று ("பரினிபான பஞ்சம்ஹி நிபன்னெ லொகநாயகெ - மகாவம்சம்:7:1) சிங்கப்படை கொண்ட ஸீஹபாஹுவின் மகன் விஜயன், தன்னைப் பின்பற்றுவோர் ஏழுநூறு பேருடன், "லாள" ("ராத" - கிழக்குவங்காளம்) நாட்டிலிருந்து அவனுடைய தீயொழுக் கத்திற்காக, அவனுடைய தந்தையால் நாடுகடத்தப்பட்டு, சிலோனில் அடியிட்டான். கலத்தில் ஏற்றிக் கடலில் விடப்பட்டான். அவன் கடற்பயணம்

பற்றிய நிலவியல், வழக்கம்போல் நம்புதற்கு இயலாத ஒன்றாம். அவன் வட பம்பாயைச் சேர்ந்த இன்றைய ஸோபராவாம் "ஸுப்பர காவில்" கரை இறங்கினான். சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர்ப் பெரிபுளூஸ் என்பவரால், ஸோபட்மா என்பது கீழ்க்கடலைச் சேர்ந்த துறைமுகமாகக் குறிப்பிடப்பட்டுளது. ஆதலின், இது பெரும்பாலும் ஒரு தவறு ஆகும். வங்காளக் கடற்கரையிலிருந்து புறப்பட்டுச் சிலோனுக்குச் செல்ல வேண்டிய ஒரு கலம், ஸோபாவுக்குச் செல்வது இயலாத ஒன்று. அங்கிருந்து, அவன் மீண்டும் கலம் ஏறிச் சிலோனுக்கு வடக்கில் இருந்த தம்பபண்ணியில் கரை இறங்கினான். ஆங்கு வாழ்ந்திருந்த மக்களாம் "யக்கர்"களை (யக்ஷ) வென்று அழித்து, அந்நாட்டின் அரசன் ஆகிவிட்டான். தனக்கும், தன் உடன் வந்தவர்க்கும் மனைவியர் வேண்டி, பண்டு அரசன் மகளை இசைவிப்ப தற்காகவும், ஏனையோர்க்கும் மனைவியர்களைப் பெறும் பொருட்டும், பரிசில் பொருள்களோடு, ஆன்றோர் சிலரை தக்சின (தென் இந்தியா) நாட்டில் உள்ள மதுரைக்கு அனுப்பிவைத்தான். (மதுரை அரசன "பண்டவ" என அழைக்கப்பட்டான். பதஞ்சலி, பாண்டு என்ற சொல்லி லிருந்து பாண்டிய என்ற சொல்லைத் தோற்றுவிப்பது போல, பாலி மொழி எழுத்தாளர்கள், "பாண்டியா" என்ற சொல்லை, அவர்களுக்கு நன்கு தெரிந்த "பாண்டவா" என்ற சொல்லாகக் கருதுவர்). எண்ணற்ற தமிழ்ப் பெண்கள், அணிகளால் ஒப்பனை செய்யப்பெற்று, யானைகளும், குதிரைகளும், பொதிநிறை வண்டிகளும் பின்தொடரச் சிலோன் சென்றனர். இந்தக் கதை, வட இந்தியாவுக்கும் தென் இந்தியாவுக்கும் இடையிலான மிகப்பழைய போக்குவரத்து, தொடர்ந்து இருந்தமைக்குச் சான்று பகர்கிறது. இது பாண்டியர்களும், வடநாட்டவரும் ஒருவருக்கொருவர் அறிமுகம் ஆகா அந்நியர் அல்லர், மாறாக வழக்கமான நிகழ்ச்சிபோலப் பாண்டியர் மகள் ஒருத்தி, விஜயனுடைய கைப்பிடிக்க, ஆணையிட்டுப் பெறுமளவு ஒருவருக்கு ஒருவர் அறிமுகமானவர் என்பதையும் உறுதி செய்கிறது. அர்ச்சுனன்,

சித்ராங்கதாவையும் மணந்துகொண்டு, நாகர் மகள் உலூபியோடு, தற்காலிக உறவுக்கும் வழி செய்திருந்தது போலவே, விஜயனும், இடையில் கைவிடக்கூடிய ஒரு திருமணத்தை ஒரு யக்கினியாம் "குவண்ண" என்பவளோடு அவன் கொண்ட உறவு, பாண்டிய அரசிளங்குமரியோடு கொண்ட திருமண உறவு போன்றதன்று. மாறாகப் புதியாள் ஒருத்தியோடு, மேற்கொண்ட நிலையிலாக் காதல் திருவிளையாட்டே.

ததொ ஸோ விஜயொ ராஜ பண்டுராஜஸ்ஸ துஹிதரம்
மஹதா பரிஹாரெண மஹேசித்தே ப்ஹிஸேசயி

- மகாவம்ஸோ - 7 : 72.

♦ ♦ ♦

6. வெளிநாட்டு வாணிகம்: கி.மு. 1000-500

பாலஸ்தீனமும் இந்தியாவும் :

கி.மு. பத்தாம் நூற்றாண்டில், ஷீபாவின் அரசி (Queen of Sheba) சாலமன் அரசனுக்கு (King of Solomon) "மிளகு போலும், உணவுக்கு மணமூட்டும் பொருள்களின் மிகப்பெரிய குவியலையும், கிடைத்தற்கரிய மதிப்பு மிக்க இரத்தினக் கற்களையும் கொடுத்தாள். ஷீபா அரசி,சாலமன் அரசனுக்குக் கொடுத்த, மணப்பொருளின் இக்குவியல் போலும் ஒரு மணப்பொருள்குவியல் மீண்டும் வரவேயில்லை." (I Kings.x:10). அந்நாட்களில், இப் பண்டங்கள், இந்தியாவிலிருந்துதான் மேற்கு நாடுகளுக்குச் சென்றன. இம்மணப்பொருள்களும் நவரத்தினங்களும், அரசியின் கைகளை அடைவதற்கு முன்னர், அவை இந்தியப் படகுகளில், ஆப்பிரிக்கக் கடற்கரையை அடைந்தன என உறுதியாகக் கூறலாம். "ஒப்ஹியரிலிருந்து ஒப்ஹியர் (Ophir) பொன்னை ஏற்றி வந்த ஹிராம் (Hiram) கப்பல் படையும், அங்கிருந்து ஏராளமான அகில் மரங்களையும், நவரத்தினங்களையும் கொண்டுவந்தது. அரசன், அகில் மரம் கொண்டு, இறைவன் திருக்கோயில், அரசன் பெருங் கோயில்களுக்கான தூண்களையும், இசைவாணர்களுக்கு வில்யாழ், விரல் தெறித்து இசையெழுப்பும் நரப்புக் கருவிகளைச் செய்தான். அதன்பின்னர், அத்துணைப் பெருமளவிலான அகில் மரங்கள் இந்நாள் வரை வரவில்லை. காணப்படவும் இல்லை," (I Kings : x :11-12). இந்த அகில் மரங்கள், சந்தன மரங்களாக அடையாளம் காணப்பட்டன.

அல்முக் (Almug) என்ற அதன் ஆங்கிலப் பெயர், சமஸ்கிருத "வலகு" என்பதன் திரிபாகக் கருதப்பட்டது. தென் இந்தியாவின், சிறப்பாக, மைசூர் கோயமுத்தூர், சேலம் மாவட்டங்களின் உள்நாட்டுப் பொருளாம் இச்சந்தன மரம், குஜராத் மாநிலத் துறைமுகங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து, அரேபியா வழியாகச் சிரியாவுக்கு ஏற்றி அனுப்பப்பட்டிருக்க வேண்டும். ஓபீரிடமிருந்து (Ophir) எடுத்துக்கொண்ட பொன்னில், முழுமையும் இந்திய நாட்டுப் பொன்தானா, அல்லது ஒரு பகுதிதானா என்பது ஓபீர் பற்றிய வாதத்தின் முடிவாம். விளக்கத்தைப் பொறுத்துளது. ஆனால், சாலமன் மிகப் பெரிய அளவிலான பொன் பெற்றிருந்த மையால், அவனுடைய அப்பொற்களஞ்சியத்தின் ஒரு பகுதி, இந்தியாவிலிருந்து பெறப்பட்டதாதல் கூடும் (1. Kings. x : 14-17 and 21). "ஹிராம் (Hiram) கப்பற்படையோடு தார்ஷிஷ் (Tharshish) கப்பற் படையொன்றையும், அரசன் கடலில் பெற்றிருந்தமையால், தார்ஷிஷ் கப்பற்படை மூன்றாண்டுக் கொருமுறை பொன், வெள்ளி, தந்தம், வாலில்லாக்குரங்கு, மயில்களோடு, வந்து சென்றது என மேலும் அறிகிறோம்." (I Kings. x .22). "அரசன், தந்தத்தினால் ஒரு பெரிய அரியணை செய்து, அதன் மேற்பரப்பைச் சிறந்த பொன் கொண்டு பூசி மெருகிட்டான்." (1. Kings. x.18). எபிரேய மொழி "ஹபின்", எகிப்திய மொழி "எபு" ஆகிய இரு சொற்களுமே, சமஸ்கிருத "இப்ஹ" என்ற சொல்லி லிருந்து பிறந்தன வாதலையடுத்துத் தந்தத்தைக் குறிக்கும் "ஈஷன் ஹபின்" என்ற எபிரேய மொழிச் சொல், யானையின் பல் எனும் பொருள் தருவதான "இப்ஹ தந்த" என்ற சமஸ்கிருதச் சொல்லின் மொழி பெயர்ப்பாகக் கொள்ளப்படுமாதலின், அவ்வாறு வந்த தந்தங்களில் ஒரு பகுதி, இந்தியாவால் கொடுக்கப்பட்டது என்பது உண்மையாதல் கூடும். ["எல்" (el) என்பது, அராபிய மொழியில், சொற்களின் முன் இணைக்கப்படும் இடைச் சொல்லாதலின் "எல்-எபாஸ்" (El-ephas) என்ற கிரேக்கச் சொல் "எபு" (ebu) என்பதிலிருந்து பிறந்ததாம்.)] பிற்காலத்தில் நிகழ்ந்தது போலவே, வாலில்லாக் குரங்குகளும், மயில்களும்,

ஆசைக்கு வளர்க்கும் உயிரினங்களாக, இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்டன. எபிரேய மொழி "கோப்"(Koph) சமஸ்கிருத. 'கபி' (Kabi) ஆகும். 'ஏப்' (ape) எனும் சொல், எகிப்தியரால் 'கபு' (Kabu)என்ற வடிவில் கடன் வாங்கப் பட்டது. மயிலைக் குறிக்கும் எபிரேய மொழியின் 'துக்கி' (Thukki), மயில், பேரழகு வாய்ந்த வால் உடையவாதல் கருதி, தமிழில் வால் எனும் பொருளில் வழங்கும் 'தோகை' என்பதன் திரிபாம். எபிரேய மக்கள், இந்தியாவிலிருந்து அவற்றின் பெயர்களோடு பெற்ற பிற பொருள்களாவன: "சடின்" (Sadin) பருத்தி உடைகள். திராவிடச் "சிந்து" விலிருந்து பிறந்தது. (முன்பும் குறிப்பிடப்பட்டுள்ளது) "கற்பஸ்" (Karpas)பருத்தி. சமஸ்கிருத "கற்பாஸ" (Karpasa) என்பதிலிருந்து பிறந்தது. கடைசியாக, "அஹல்" (ahal)தமிழ் அகில், சமஸ்கிருத "அகரு" கிரேக்க "அகலோச்சும்" (agallochum)ஆங்கிலத்தில் "ஈகில்உட்" (Eagle-Wood) அலோஸ்உட் (Aloes-Wood) அல்லது "லின்-அலோஸ்" (lign-alloes) ("நறுமணச் செடிகள், காழகில், நிலவாகை ஆகியவற்றலான தங்கள் எல்லா ஆடைகளும்" என்கிறது "வழிபாட்டுப்பாடல்" ["All thy garments of myrrah and aloes and cassia"] Psalun xlv:8)]. பாலஸ்தீனத்திற்குச் சென்ற மற்றொரு இந்திய வணிகப்பண்டம், "கருங்காலி". திருவாளர் ஸ்காப் அவர்கள், "நனிமிகப் பழைய, தெளிவான பழைய கட்டளையின் (Old Testament) குறிப்பு, எழெக்கில் (Ezekiel) அதிகாரம் 27; பிரிவு 13ல் வருகிறது. அதில், அது, டயரின் (Tyre) வாணிகப் பண்டங்களுள் ஒன்றாகப் புலப்படுகிறது. "டேடன்" (Dedan) நாட்டு மக்கள், தங்கள் வணிகர்கள் ஆவர். பல தீவுகள், அவர்களின் வாணிக நிலையங்களாம், தந்தத்தாலும் கருங்காலியாலும் ஆன ஊதுகொம்புகளைப் பாத காணிக்கையாகத், தங்களுக்காக, அவர்கள் கொண்டு வந்தனர்." [The men of Dedan were thy merchants; many isles were the merchandise of thy hand; they through thee, fora present, horns of ivory and ebony] டேடன் என்பது பர்ஷிய வளை குடாவின் தென்கரையாகும் என, ஆக்ஸ்போர்டு

பதிப்பாசிரியர் கூறும் விளக்கம் சரியான தாயின், மேலே கூறிய இப்பகுதி, கி.மு. ஏழாம் நூற்றாண்டிற்கு முன்னர், இந்தியாவிலிருந்து வரும் கருங்காலி மரத்தின் நிலையான வாணிக நிகழ்வைக் குறிப்பிடுகிறது. கருங்காலி, பாரிகாஸாவிலிருந்து (Barygaza) ஓம்மனா (Ommana) அப்லோகஸ் (Apologws) பகுதிகளுக்குக் கடலில் அனுப்பப் பட்டது எனக் கூறும் பெரிபுளூஸ் கூற்றை உறுதி செய்கிறது. [Scoff's Periplus. P.153]. பிற்பட்ட காலத்து ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு, குறிப்பிட்ட வாணிகம், பழங்காலத்திலும் இருந்துள்ளது என வாதிடுவதில் உள்ள நியாயத்தின் வலுவை உறுதி செய்வதுமாம்.

இந்தியாவும் அஸ்ரியாவும் :

கி.மு. 860 ஆம் ஆண்டைச் சேர்ந்த மூன்றாம் ஷால்மெனெஸர் (Shalmenaser) அவர்களின் ஒற்றைக் கல்லாலான சதுரத் தூபியில், வாலில்லாக் குரங்குகள், இந்திய யானைகளின் உருவங்கள் உள்ளன. "அஸிரியப் பேரரசன், மூன்றாம் திக்லத் பிலேசரின் (Tiglats Pilesar) நிம்நட் (Nimrwd) கல்வெட்டுக்கள், 'அஷுரின் (Ashur) பேரறிவு கண்டு கொண்ட காரணத்தால் எங்கள் இறைவா! கடல் நாட்டு அரசன், யாகினை (Yakin) மெரோடக் பலடன் (Merodach-baladan) எவ்வாறு வெற்றி கொண்டான் என்பதைக் கூறுகிறது. அவன், தன் நாட்டு அளவிறந்த பொன் தூள்கள், பொற்கலங்கள், பொன்னாலான கழுத்தணி, விலையுயர்ந்த ரத்தினக் கற்கள், கடல்படு பொருள் (முத்து), நீர் வளர்பிரம்பு ஒரு பால் வண்ணமும், ஒருபால் பிறிதொரு வண்ணமுமாக வண்ணம் ஊட்டப்பெற்ற ஆடைகள், எல்லாவகையிலுமான மணம்தரும் உணவுப் பொருள்கள் ஆகியவற்றைத் திறைப் பொருளாகக் கொண்டு வந்து கொடுத்து எவ்வாறு பணிந்து போனான்" என்பதையும் கூறுகிறது. இங்கே எடுத்துக் கூறிய எல்லாமே, அந்நாளைய, இந்திய ஏற்றுமதிப் பொருள்களாம். பாரசீக வளைகுடாத் துறைமுகங்களைப் பர்ஷிய நாட்டிற்குக் கிழக்கில் வெகு தொலைவில் சார்மணியம், இமயம் போலும்

இடங்களாக ஆக்குவதையும் அவன் செய்தான். (Scoff's Periplus, Page:160)

கடலின் நுழைவிடத்தில் இடம்பெற்ற 'டைரஸ்' என்ற வாணிக நிலையத்தில், (Ezekil. XVII.19) பளிச்சிடும் இரும்பு, தரம் தாழ்ந்த லவங்கப்பட்டை, மருந்தாகப் பயன்படும் மணம் தரும் ஒருவகைப்புல் ஆகிய பொருள்கள் இருந்தன. [இந்திய இரும்பைக் காய்ச்சிப் பக்குவப்படுத்துவது குறித்த, கிரேக்க நாட்டுத் தனி ஒப்பந்தம், பிற்காலத்தில் உருவாயிற்று என்கிறது, திருவாளர் வார்மிங்டனின், "இந்தியாவுக்கும், உரோமப் பேரரசுக்குமிடையிலான வாணிகம்" என்ற நூல்: ["Commerce between the Roman Empire and India" by Warmington. page:258]. பளிச்சிடும் இந்திய எஃகு, பழைய காலத்தில், பல்வேறு நாடுகளால், போர்வாட்கள் பண்ணுவதற்காக இறக்குமதி செய்யப்பட்டது. இலவங்கப்பட்டையின் பழைய பெயர் "காஸியா" (Cassia) என்பதாம். நறுமணம் கமழும் ஒரு வகைப் புல்லின் பெயர் "கலமஸ்" (Calamus) என்பதாம்.

நறுமணப் பொருள்கள், ரத்தினக் கற்கள், பொன் ஆகிய பொருட்களைப் போலவே, இப்பொருட்களும் "ஷீபா" (Sheba)அரசியாரின் வணிகர்களால் இந்தியாவிலிருந்து டயரஸுக்கு (Tyrus) எடுத்துச் செல்லப்பட்டன. [ஏழெகில் : 17 : 22)

கி.மு. 704-681-இல் ஆட்சி புரிந்திருந்த சென்னசெரிப் (Sennacherib) என்ற அரசன், நினவே (Ninevch) என்ற நகரை விரிவுபடுத்தி, அதில் தனக்காக ஓர் அரண்மனையைக் கட்டி, ஓர் பெரிய மலர்த் தோட்டத்தையும் எழுப்பி, அத் தோட்டத்தில் ஏனைய மரங்களோடு, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்த, "ஆட்டுமயிர் விளையும் மரங்களையும்" (250 ஆண்டுகட்டுப் பிறகு, ஹிரோடோடஸ் (Herodotous) அவர்களால் பருத்திச் செடியைக் குறிக்க வழங்கப்பட்ட ஒரு தொடர்) பயிரு இட்டான். [Journal of the Royal Asiatic Society. 1910 page: 403 Pinches.]

"இந்திய முன்னோர்கள், உயிரினங்களைக் கடல் வழியாகப் பாரசீக வளைகுடாப் பகுதிக்கும், ஆப்பிரிக்க, சீன நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்தனர். [J.R.A.S. 1920. Page: 147] வண்டிகளை ஈர்க்கவும், பொதிகளைச் சுமக்கவும், ஊர்ந்து செல்லவும் பயன்படுத்தப்பட்ட, முதுகில் திமில் உடைய இந்தியக் கால் நடைகள், பர்ஷியா, சிரியா, ஆப்பிரிக்க நாடுகளின், வீட்டுவளர்ப்புக் கால்நடைகளின் ஒரு பகுதியாம் வண்ணம், நிலவழியாக, மேற்குநோக்கிப் பரவியது இயற்கையே. இவ்வகையால், அஸிரியா, மற்றும் அதற்குப் பிற்பட்ட காலக்கலைகளில், அவற்றின் உருவமைப்புகளை நாம் காண்கிறோம்" எனத் திருவாளர் வார்மிங்டன் குறிப்பிடுகிறார். [J.R.A.S. 1910. Page: 149-150] இந்தியர்களால் மேற்குநோக்கி அனுப்பப்பட்ட விலங்குதரு பொருள்களில், சிங்கம், புலி, சிறுத்தைகளின் நேர்த்தியான தோல்களும் இருந்தன என்றும் நாம் நம்பலாம். [J.R.A.S. 1910 Page: 159]. குறைந்த அளவான எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டுத் தேவை மிகுதியாகிவிடுவது இயல்பாகிவிட்ட கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளுக்கு நெய்யும், எள் எண்ணெய்யும் பிற்காலத்தில் அனுப்பப்பட்டன. கி.பி. முதல் ஆண்டைய உண்மை நிலை இது. பழங்காலத்து நிலையும் இதுவாகவே இருந்திருக்கும் [Periplus: page: 41].

பிற பண்டங்கள் :

இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டனவற்றுள், நறுஞ்சுவை மண மருந்துப் பொருள்கள், உணவிற்கு மணம் காரம் ஊட்டும் பொருள்கள் ஆகிய இரண்டும், மிகுந்த மதிப்புடைய விளை பொருள்கள். திருவாளர் வார்மிங்டன் கூறுவதுபோல, அரேபியர், இப்பொருள்களைத் தங்கள் தீபகற்பத்தின் ஒரு கரையிலிருந்து மறு கரைக்குக் கொண்டு செல்வது, பல நூற்றாண்டுக்காலம் நடைபெற்றது. பழைய பொயினிஷியன் கப்பல்களில், மிளகே, மிக முக்கியமான வணிகப் பண்டம். நனிமிகப் பழங்காலத்திலிருந்தே, லவங்கப்பட்டை, இந்தியக் கப்பல்களில், சோமாலி

கடற்கரைக்கு நேரே கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து அரேபியாவுக்கும், எகிப்துக்கும், சிரியாவுக்கும் கை மாறிற்று. [J.R.A.S. 1910. Page: 180-187]

இந்தியாவுக்கும் பழைய எகிப்துக்கும் இடையில், நீலம், மற்றும் பிற வண்ணக் கலவைப் பொருள்களில், நீண்ட கால வாணிகம் இருந்து வந்தது என்பது நன்கு தெரிந்த ஒன்று. [J.R.A.S. 1910 ; Page: 204]. கிறிஸ்து ஆண்டுத் தொடக்கத் திற்குப் பின்னர், இந்தியத் துறைமுகங்களிலிருந்து நேராகவோ, அல்லது அரேபிய, எகிப்திய இடைத் தரகர்கள் வழியாகவோ, உரோமானியர் பெற்றுக் கொண்ட வேறுபிற எண்ணற்ற இந்தியப் பண்டங்கள் பற்றிய ஆவணங்கள் நம்மிடையே உள்ளன. இப்பொருள்களின் வணிகப் போக்குவரத்து, மேலும் பழமைவாய்ந்த காலத்திலிருந்தே வழக்காற்றில் இருந்திருக்க வேண்டும். ஆனால், அக்காலத்தைச் சேர்ந்த அகச்சான்று எதுவும் நம்மிடையே இல்லை. இந்திய வாணிகம், அப்பழங்காலத்தில் நடைபெற்றது அரேபியாவுடனும், கிழக்காப்பிரிக்கா வுடனுமாம். அது பண்டமாற்று முறையிலேயே நடை பெற்றது. தங்கள் பண்டங்களுக்கு மாற்றுப் பொருள்களாக, இந்தியர்கள், பொன், சாம்பிராணி, குங்கிலியம், நறுமணப் பொருளுக்குப் பயன்படும் பிசின், ஒட்டு மரப்பிசின் ஆகியவற்றைப் பெற்றனர். இந்திய வணிகப் பண்டங்கள், சோமாலிக்கண்ணதான, ஆப்பிரிக்கச் சந்தைகளுக்கும், ஸொகொத்ர (Socotra) தீவுக்கும், அனைத்திலும் மேலாக, அராபிய இந்திய வணிகர்களின் சந்திப்பு இடமாகவும், பிற்காலத்தில், கிரேக்க வணிகர்களும் வந்து சந்திக்கும் இடமாகவும், வளம்மிக்க, செல்வச் சிறப்பு வாய்ந்த இடமாகவும் அமைந்த அராபிய நாட்டு ஏடனுக்கும் எடுத்துச் செல்லப்பட்டன. திருவாளர் வார்மிங்டன் குறிப்பிடுவது போல், சோமாலிச் சந்தை வணிகர்களாம் அராபிய ஆப்பிரிக்க மக்கள், 'ஸ்பீசெஸ்' (Spices) முனையை மையமாகக் கொண்ட, இந்திய, அராபிய, ஆப்பிரிக்கக் கப்பல் போக்குவரத்து மூலம், கேம்பே (Cambay) இந்தியர்களோடு,

நெடிது, நீண்ட வணிகப் போக்குவரத்தினை மேற் கொண்டிருந்தனர் [J.R.A.S. 1910; Page: 13].

ஏலமும், மற்றும் பிற சீனநாட்டுப் பண்டங்களும் இந்தியக் கப்பல்களில் மேற்காசியாவுக்கும், கிழக்கு ஆப்பிரிக்காவிற்கும் தொடர்ந்து சென்று கொண்டு இருந்தனவாகவே, இக்கால கட்டத்தில், கொரமண்டல, மலபார் கடற்கரைகள், சீனாவுடன் கொண்டிருந்த வாணிகம், வழக்கற்றுப் போகவில்லை என உறுதியாகக் கூறலாம்.

♦ ♦ ♦

7. வடக்கும் தெற்கும்
கி.மு.500 முதல் கி.மு.1 வரை

காத்யாயனரும் பதஞ்சலியும் :

பாணினியின் "அஷ்டாத்யாயீ" குறையுடையது எனக் கண்டு, பாணினியின் விதிமுறைகளுக்குத் துணையாக வாத்திகம் அதாவது உரைவிளக்கம் எழுதிய காத்யாயனர், பாணினிக்குச் சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர்ப் பெரும்பாலும் கி.மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்தார். தமிழ் லெக்ஸிகன் துணை ஆசிரியர் திருவாளர். பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரியார் அவர்கள் தந்த ஒரு குறிப்பின்படி காத்யாயனர், ஒரு தென்னிந்தியர் ஆவர். அக்குறிப்பு பின்வருமாறு: "பாணினி அவர்களின் அஷ்டாத்யாயின் வார்த்திக ஆசிரியரான வரருசி (காத்யாயனரின் இயற்பெயர்), ஒரு தென்னாட்டவர் என்ற உண்மை, தென்னாட்டவர், வியாகரண பாஷ்யகாரர் ஆகிய பதஞ்சலியின் தந்திர வடிவங்களில் விருப்புடையவராவர்: (பிரியதத்தித தாக்ஷிணாத்யாஹ) சொல்லும் அதன் பொருளும், அவற்றின் தொடர்பும் நிலை பேறுடையவாயின்,அச்சொல், அப்போது உலக வழக்கில் உள்ள பொருளில் வழங்கப்படுமாயின், இலக்கண அறிவு, "லொகவெவதெக" என்பதை ஆள்வதற்குப் பதிலாகத் "தத்திதப்ரத்யய" த்தைப் பயன் கொண்டு வரருசி, "லௌசிகெ : வதிகெசு" என்பதை ஆண்டுள்ளார் எனக் கூறும் மஹாபாஷ்யத்தின் முதல் ஆனிகாவில், அபூர்வதர்மம், தியாகதர்மம் குறித்த சரியான சொற்களை ஆளுவதில் விதிமுறை வகுக்கிறது (சிந்த்ஹே சப்தார்த்ஹ சம்பந்திஹே லொகதொ ரத்ஹப்ரயுக்தெ சப்தப்ரயொகெ சாஸ்த்ரென தர்ம நியமஹ யத்ஹா லௌகிகவைதிகெசு) என்ற அறிவிப்பி

லிருந்து உண்மையாகிறது. ஒரு சமஸ்கிருத இலக்கண ஆசிரியர் மரபே, தென்னிந்தியாவில் உருவாகிவிட்டது. பாணினி நனிமிகச் சேயதான காந்தார நாட்டில், எழுதிய இலக்கணத்தை அவர்கள் கற்றுத் தெரிந்தனர். அந்நூலின் பொருளுக்கு மேலும் விளக்கம் ஊட்டும் உரைகளை எழுதுமளவு தேர்ந்திருந்தனர் என்பதை உறுதி செய்ய இதுவே போதுமானது.

காத்யாயனர், ஒரு தென்னாட்டவராகவே, சமஸ்கிருத இலக்கியங்களில், "பாண்ட்ய", "சொட", "கெரள" என முறையே திரிந்து வழங்கப்படும் "பாண்டிய", "சோழ", "சேர" என்ற சொற்கள், பாணினியால் ஆராயப்படவில்லை என்பதை உணர்ந்து, அவற்றின் சொல் அமைப்பு குறித்து, விதிமுறைகளை வகுக்க முனைந்தார். "வழிவழி மரபில் வந்தவர் எனும் பொருள் உடையதான "அஞ்" என்ற விகுதி, ஒரு சொல்லின் ஈற்றில் வந்து, அவ்வாறு வருவதால் ஒரு நாட்டினைக் குறிப்பிடும் அதே நிலையில், சத்திரிய இனத்தைச் சேர்ந்த, ஓர் அரசமரபையும் குறிப்பிடும்" எனக் கூறும் ஒரு விதியினைப் பாணினி அவர்கள் இயற்றினார்கள், [ஜனபத சப்தாத் சத்திரியாத் "அஞ்" (அஷ்டாத்யாயீ : 4 : 168)] இவ்விதி, போதுமான பொருள்விளக்கம் உடையதல்ல தாகவே, காத்தியாயனர், பல துணைவிதிகளை இணைத்தார்; அவற்றுள் மூன்றாவது விதி, "சத்திரிய அரச இனங்களையும், நாடுகளையும் ஒரு சேர உணர்த்தும் சொற்களைப் பொறுத்த மட்டில், அச்சொற்களை, அவற்றுள் அரசனை உணர்த்தவும் செய்யவேண்டுமாயின், "மகன்" என்னும் பொருள் உணர்த்துவதான ஒரு விகுதி இணைக்கப்பட வேண்டும்" எனக் கூறுகிறது. [சத்திரிய சமான சப்தாஜ் ஜனபதாத்ஸ்ய ராஜ நியபத்யவத்"] அவ்வகையில், பாஞ்சாலர்களின் அரசன் "பாஞ்சாலஹ்" எனவரும். இவ்விதியும், பாண்டிய என்ற சொல் தோன்றுவதற்கான விளக்கம் தரவல்லதாகாது. ஆகவே, "பாண்டு" என்ற சொல்லைப் பொறுத்தமட்டில், "ட்யன்" என்ற விகுதி ஆளப்படும். அவ்வகையில் பெறப்படும் சொல் "பாண்ட்ய" என்பதாம் எனக்கூறும் வேறு ஒரு விதியினைக், காத்யாயனர் வகுத்தார். (பாண்டொர் ட்யன் வக்தவ்யஹ்"

[பதஞ்சலியின் வியாக்கரண மகாபாஷ்யத்தின் திரு. கெயி லார்ன்ஸ் அவர்களின் பதிப்பு. பகுதி : 2. பக்கம் 269] "சொட" மற்றும் வேறு சொற்களின் தோற்றம் குறித்துப் பாணினியின் வேறு ஒரு விதியினை மேற்கொண்டுள்ளார் காத்யாயனர்.

"காம்போஜ என்ற சொல்லுக்குப் பின்னர் ஈற்றுவிகுதி எதுவும் இல்லை" என்பதே அவ்விதி. இவ்வகையில், ஒரு நாட்டைக்குறிக்கும் "காம்போஜ" என்ற சொல்லிலிருந்து அதன் அரசன் பெயராம் "காம்போஜஹ" என்ற சொல் பெறப்படும். காத்யாயனர், இவ்விதியை, "காம்போஜ மற்றும் பிற சொற்களுக்கு இணைக்கும் "லுக்" என்ற விகுதி "சொட" மற்றும் பிற சொல்லாக்கத்திற்கும் பயன்படுத்தப்படும்" என மேலும் விரிவுபடுத்தினார். [கம்பொஜா திப்யொலுக் வகனம் சொடாத்யர்த்தம்".] இவ்வாத்திகம் (விதி) சொடஹ், கதொஹ், கெரளஹ் என்ற சொற்களின் தோற்றத்திற்கு வழி செய்வதாகப் பதஞ்சலி கூறுகிறார். இவ்வகையில், இவ்விரு சொற்களும் அந்நாடுகளைக் குறிக்கும் சொற்களிலிருந்து பெறப்பட்டன. ஆனால், பாண்ட்ய என்ற சொல் மட்டும்,ஒரு நாட்டின் பெயராகவும் ஒரு நாட்டின் பெயராகவும் ஓர் அரச இனத்தின் பெயராகவும் ஒருசேர வழங்கப்பெறும் பாண்டு என்ற சொல்லிலிருந்து பெறப்பட்டது என்ற கருத்துடையவர் காத்யாயனரும், பதஞ்சலியும் எனத் தெரிகிறது.

மதுரை சூழ்ந்த நாட்டிற்கு அரசு வழங்கிய பழங்குடி இனம், "பாண்டியர்" என அழைக்கப்பட்டனரே அல்லது "பாண்டு" என அழைக்கப்படவில்லையாதலின், இச்சொற் பிறப்பு முறை ஏற்றுக் கொள்ளக்கூடியதன்று. உண்மை இயல்பு இதுவாகவும், இச்சொற்பிறப்பு முறைமீது, பாண்டு என அழைக்கப்படும் வடநாட்டுச் சத்திரிய இனம் ஒன்று தென்னாடு நோக்கிக் குடி பெயர்ந்து, தென்னாட்டிலும், இலங் கையிலும் பாண்டிய அரசுகளை நிறுவினர் என்ற மிகப் பெரிய கோட்பாட்டினைக் காட்டிவிட்டார் திருவாளர் டி.ஆர். பந்தர்க்கார் அவர்கள். [Carmichal Lectures : 1918 Page : 9-13)]

காத்யாயனரோ, பதஞ்சலியோ, பாண்டு என்ற சொல், ஒரு வடநாட்டு அரச இனத்தின் பெயர் என்று கூறவில்லை. அவர்களுடைய தேவைக்குப் பாண்டு என்ற அச்சொல், ஆளும் ஓர் அரச இனம், ஒரு நாடு இவற்றைக் குறிப்பதாதலே போதும். ஆளும் அரசர்கள் அனைவருமே சத்திரியர்களாகக் கருதப்பட்டனர் ஆதலின், பாலி மொழியில் "பண்டு" என வரும் "பாண்டு" என்ற சொல்லை, ஒரு சத்திரிய இனத்தைக் குறிக்கும் சொல்லாகக் கொண்டதில் பதஞ்சலி பெரியதொரு பிழையினைச் செய்துவிடவில்லை. ஆனால், அதையே அடிப்படையாகக் கொண்டு, தமிழ் இனம் அல்லாத ஒரு வெளிநாட்டு இனத்தவர் படையெடுப்பினைக் கட்டிவிடுவது, முற்றிலும் தவறானதாகும். திருவாளர். டி.ஆர். பந்தர்க்கார் அவர்கள், தம்முடைய கூற்றினை வலுப்படுத்துவதற்காக, மெகஸ்தனிஸ் அவர்களின் எழுத்திலிருந்து எடுத்துக்காட்டப் பட்டதாகக் கூறப்படும், பொருளற்ற, பொருத்தம் அற்ற ஒரு கட்டுக்கதையினை வலிந்து புகுத்தியுள்ளார். "எராக்லெஸ், இந்தியாவில் ஒரு மகளை ஈன்றெடுத்தார். அம்மகளை அவர், பண்டைய எனப் பெயரிட்டு அழைத்தார். அவளுக்குத், தெற்கு நோக்கி நீண்டு, கடல் வரையும் பரவியிருந்த நாட்டை அளித்தார். ஆங்கு, கப்பம் கட்டுவதில் தவறியவர்களை வற்புறுத்தித் திறை செலுத்தும் முறைமைப்பாடு உடையவரின் துணை அரசியார்க்கு எப்போதும் கிடைப்பதற்காக, ஒரு நாளைக்கு ஒரு சிற்றூர், அரண்மனைக் கருவூலத்திற்கான கப்பத்தைக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என்று ஆணையிட்டு, ஆங்கு, அவள் ஆட்சிக்குட்பட்ட மக்களை, 365 ஊர்களுக்குமாகப் பங்கிட்டு அளித்தான்" எனக் கூறுகிறது அக்கதை. [Macrindle. Ancient India as described by Megasthenes and Arrian. : Page : 159.]

இதைப் பண்டைக் காலத்திய மதுரை பற்றிய நாம் அறிந்தனவற்றோடு ஒன்றுபடுத்திக் காணும் முயற்சியில், வெற்றி காணமாட்டாதே, அறிவுத்திறன் பெருமளவில் பாழ்படுத்தப்பட்டது. முன்பே குறிப்பிடப்பட்ட எறும்பு மனிதர் பற்றிய, அவர் கட்டுக்கதை போல, அல்லது, பாண்டிய நாட்டில், ஆறு ஆண்டுகள் நிரம்பியதுமே கருவுறும்

பெண்கள் பற்றிய, அவருடைய வேறு ஒரு கட்டுக்கதைபோல [Macrindle. Ancient India as described by Megasthenes and Arrian. Page: 144] இது, மெகஸ்தனிஸ் அவர்களின், எதையும் நம்பும் ஏமாளித்தனத்தை உறுதி செய்யும் மற்றொரு கட்டுக்கதை யல்லது வேறு அன்று. வேறு உண்மையான வரலாற்று மூலங்கள் வழியாக அறியவந்த, கி.மு. நான்காம் நூற்றாண்டில், பாண்டிய நாட்டிற்கும் பாடலிபுத்ரத்திற்கும் இடையில், போக்குவரவு இருந்து வந்தது. மெகஸ்தனிஸ், அந்நாட்டைக் கேட்டறிந்திருந்தார், என்ற உண்மையை மட்டுமே, அக்கட்டுக் கதை உறுதி செய்யும். உண்மை நிலை இதுவாகவும், திருடி ஆர். பந்தர்க்கார் அவர்கள், எராக்லெஸ்ஸின் மகள் மதுரை ஆண்ட கட்டுக்கதையினை நம்புவது மட்டும் அல்லாமல், இந்தியக் கடவுள் இயல்புகளோடு முற்றிலும் மாறுபடும் "டியொனிஸொஸ்", "எராக்லெஸ்" போலும் கிரேக்கக் கடவுள்களுக்குச் சரிசமமாக, இந்தியக் கடவுள்களை, யூகத்தின் மூலம், எத்தகைய அகச்சான்றும் இல்லாமல், ஆக்க முயன்று தோற்றுப் போன ஆசிரியர் கூட்டத்தோடு சேர்ந்து கொள்வதும் செய்துள்ளார். கிருஷ்ணனின் குழலிலிருந்து எழும், உள்ளம் உருக்கும் இசை, எரக்லெஸின், பருத்த கைத்தடித் தத்துவத்திற்கு, எதிர்துருவம் போன்றதாகவும் திரு. பந்தர்க்கார், கிருஷ்ணனை எரெக்லெஸுக்குச் சரிசமம் ஆக்கிப் பார்க்கிறார். மெகஸ்தனிஸ், முட்டாள்தனத்தின் முடிவுக்கே சென்று, மத்ய தேசத்தில் இருந்தவனாக கி.பி. ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த வராஹமிஹிரரால் உறுதி செய்யப்பெறும் பாண்டஸ் என்பான் அவ்வராஹமிஹிரரின் காலத்திற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில், தமிழ்நாட்டின் மீது படையெடுத்துச் சென்று, ஆங்கு, ஒரு பேரரசர் மரபினையும், குறுநிலத் தலைவர் மரபினையும் நிறுவினான் என்பதை இன்னமும் நம்புகிறார், இது ஒரு வஞ்சனைக் கற்பனை.

தமிழர்களால் ஏப்போதும் மூவேந்தர் என அழைக்கப் படும் சோழ, சேர, பாண்டியர் ஆகிய தமிழ் அரசர் மூவரும் உலகம் தோன்றிய நாள்தொட்டு, அல்லது, சரியாகக்

கூறுவதாயின், தமிழ்ப்புலவர்கள் தமிழரசர்களைப் பாடிப் பாராட்டத் தொடங்கிய நாளிலிருந்தே, தமிழ்நாட்டில் அரசோச்சியிருந்தனர் என்பதே, வரலாற்றுக்கு முந்திய மரபு வழிச் செய்தியாம். பல்வேறு அரசகுலங்களைத் தோற்றுவித்த தாகக் கூறப்படும் ஞாயிறு, திங்கள்களிலிருந்து தாங்கள் வந்தவர்களாக உரிமை கொள்ளுமாறு மிகமிகப் பிற்பட்ட காலத்தில், தமிழரசர்களைப் பிராமணர்கள் தூண்டி விட்டனர். அந்நிலையிலும், அவர்கள் வேற்று மண்ணுக்கு உரியவர்களாகக் கருதப்படாமல், தமிழ்நாட்டு அரசர் களாகவே மதிக்கப்பட்டனர். மேலும், சோழர், சேர, பாண்டியர் என்ற சொற்கள், தமிழ்ப் பழங்குடிப் பெயர்களாம். காவிரிப் பள்ளத்தாக்கில் வாழ்ந்து, அந்நிலத்துக்குரியதாம் ஆத்திமலரைத் தங்கள் குலச்சின்னமாகக் கொண்ட சோழர் உழவர்களாம் வேளாளர் இனத்தைச் சேர்ந்தவராவர். காவிரிப் பேராற்றின் துணை நதிகளின் தோன்றுமிடம் தொடங்கித் தென்னிந்தியாவின் மேற்குக் கடற்கரை வரையான, தன் மண்ணுக்குரிய மரமாகப் பனையைக் கொண்டிருக்கும், மலைநாட்டு மக்களாம் குறவர் இனத்தைச் சேர்ந்தவர் சேரர், பனையைத்தங்கள் அடையாளமாகக் கொண்டிருந்தனர். பாண்டியர், வேம்பினைத் தன் மண்ணுக்குரிய மரமாகவும், மீன்பிடி தொழிலைக் குலத்தொழிலாகவும் கொண்ட, இந்தியாவின் தென்கோடி நிலப்பரப்பில் வாழ்ந்த மக்களாம் பரதவர் இனத்தவர் ஆவர். கயலும், வேம்பும் அவர்கள் குல அடையாளங்களாம். [இன்றைய குறவர், பண்டைக் குறவரினும், நிலையால் தாழ்ந்துவிட்ட வழிவந்தவராதல் வேண்டும்] [பழந்தமிழ் இலக்கியங்களில், பரதவர் என்ற சொல், கடலோடிகள் மற்றும் பாண்டி நாட்டுத் தலைவர்கள் என்ற இரு பொருளும் உடையதாகும். உம் : "தென்பரதவர் மிடல்சாய" (புறம் : 378-1) "தென் பரதவர் பேரேறே" (மதுரைக் காஞ்சி : 144) இப்பழங்குடி மக்களின் பழக்க வழக்கங்களும், தொழில்களும், அவர்கள் வாழ்ந்த சுற்றுச் சூழல், அவர்கள் மீது செலுத்திய ஆட்சியின் நேரிடைப் பயனாம். ஆகவே, அவர் தம் இயல்பான வாழ்க்கைச் சூழ்நிலைக்கு வெளியே உள்ள ஓர் இடத்திலிருந்து வந்தவர்களாக அவர்களைக்

கொண்டு வரக் காட்டும் கற்பனை மாடங்கள் அனைத்தும், நேர்மைக்கு மாறான காரணங்களின் எடுத்துக்காட்டுகளாம்.

மகதப் பேரரசு :

கி.மு. 400 அளவில், மகாபத்ம நந்தன், மகதத்தின் அரசன் ஆனான். அவன் சத்திரியர்கள் அனைவரையும் பூண்டோடு அழித்துவிட்டான். அவன் காலத்திற்குப் பிறகு சூத்திரர் வழிவந்தவரே, நாட்டில் சிறந்தோங்கியிருந்தனர். அவன் இந்தியா முழுமைக்குமான தனி அரசன் ஆனான். பேரரசின் ஒரே வெற்றிக் கொடைக்கு உரியவன் ஆனான். ["சர்வ சத்ராந்த கொன்பஹ்ற தஹ்ற ப்ரப்த்தி ராஜானொ, ப்ஹவிஷ்யஹ்ற சூத்ர யொனயஹ்ற எகராத் ச மகாபத்ம எக ச் ஹத்ரஹ்ற"] (Pargiter : Dynasties of Kali Age : Page : 25) அந்நாள் முதல், மகத அரசர்கள், ஆரிய நாகரிகத்திற்கு அந்நாள் வரை அடிமைப்பட்டாத மக்கள் வாழ்ந்திருந்த தமிழ்நாடு தவிர்த்த இந்தியப் பெருநிலப்பரப்பு முழுமைக்கும் தனிப்பேரரசர் களாக உரிமை கொண்டனர். தம் உரிமையை நிலைநாட்ட, தட்சிண பரதத்தின் மீது மேற்கொண்ட படையெடுப்பு எதையும் கேட்டிலம் ஆதலின், மகதப் பேரரசின் தனி ஆட்சி உண்மை, அசோகன் இறக்கும் காலம் வரை ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. கலிங்கத்தில், நந்தர்களால், ஒரு பாசனக்கால்வாய் வெட்டப்பட்டிருந்தது ஆதலின், ஏனைய மாநிலங்களோடு கலிங்கமும், மகத அரசின் கீழ் இருந்தது. ஆகவே, அசோகன், கலிங்கத்தின் மேற்கொண்ட போர், உள்நாட்டுக் கலவரம் காரணமாகவே ஆதல் வேண்டும். அசோகன் அரச ஆணையின் கல்வெட்டுப் படிகள், ஏனைய இடங்களோடு, மைசூர் நாட்டைச் சேர்ந்த சித்தபுரம், ஜதிங்க ராமேஸ்வரம், பிரம்மகிரியிலும், நைஸாம் மாநிலத்தில் உள்ள மஸ்கியிலும், நனிமிக அண்மைக் காலத்தில் கர்னூல் மாவட்டத்திலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இது, வடநாட்டுத் தலையாய உள்நாட்டுமொழி, கி.மு. மூன்றாம் நூற்றாண்டில், தமிழ்நாடு நீங்கிய தென்னிந்தியர்களால் பொருள் உணரப்பட்டிருந்தது என்பதையே உணர்த்துகிறது. (இன்று, அடிப்படையில் ஒன்றாகவே கருதப்படும்

இந்துஸ்தானி அல்லது இந்தி அல்லது உருது இந்தியாவின் பெரும்பகுதியில் பொருள் உணரப்படுகிறது. இது, வழக்கமாக நம்புவதுபோல் முகம்மதிய சுல்தான்களின் ஆட்சியால் நேர்ந்தது அன்று. மாறாக, வடக்கிற்கும், தெற்கிற்கும் இடையில், பலநூறு ஆண்டுகாலமாக இருந்து வந்த, வாணிகம், சமயம், இலக்கியம் ஆகிய துறைகளிலான தொடர்பே காரணமாம்) அவ்வரச ஆணைகள், புலமை சான்றவர்க்கு மட்டுமே மேற்கொள்ளப்பட்டவை அன்று. அதுவாயின், அவை சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டிக்கும். அதற்கு மாறாக, அவை பொதுமக்களைச் சென்று அடைவதற்காகவே மேற்கொள்ளப்பட்டவை. ஆகவே, வடநாட்டில் பேசப்பட்டு வந்த முக்கிய கிளைமொழி, அக்காலத்தில் வடபெண்ணையாற்றங்கரை வரையும் உணரப்பட்டிருந்தது என உய்த்துணர்ந்து கொள்ளலாம். எழுத்தைப் பொறுத்தமட்டில், அசோகன் எழுத்துகள் எனப்படும் அதே எழுத்துகள், கி.மு. மூன்றாம் நூற்றாண்டில், இந்தியா முழுவதும் பயன்படுத்தப்பட்டது. பண்டைக் காலத்தில் வடஇந்தியா, தென்னிந்தியாவுக்கிடையேயான போக்குவரவு பெரிதாம். அப்போக்குவரவு, மகாபத்மநந்தன் நாடு முழுமைக்குமான ஒரே அரசன் (ஏகராட்) ஆகிவிட்டான். மகதம் பெற்றிருந்த இவ்வாட்சி மேலாண்மை, மௌரியப் பேரரசர் காலத்தும் தொடர்ந்து இருந்து வந்தது என்ற உண்மை நிகழ்ச்சிகளால்,மேலும் பெருகிவிட்டது என்பதையே இது உணர்த்துகிறது.

மகதத்துடன் வாணிகம் :

கி.மு. நான்காம் நூற்றாண்டில், வட இந்தியாவுக்கும், தென்னிந்தியாவுக்கும் இடையிலான வாணிகம், எப்போதும் இருந்திராத அளவு மிகப்பெரிய அளவினை அடைந்திருந்தது. இது குறித்துக் கௌடில்யர் கூறியன அனைத்தையும், அப்படியே முழுமையாகத் தருகின்றேன். "நிலவழி நெடுஞ்சாலையைப் பொறுத்தமட்டில், இமாலயத்திற்குச் செல்லும் வழி, தட்சிண பரதத்திற்குச் செல்லும் வழியினும் மேலானது என்று கூறுகிறார் ஆசிரியர். வெகு தொலைவில்

உள்ள முன்னதிலிருந்து யானைகள், குதிரைகள், நறுமணப் பொருள் வகைகள், தந்தம், தோல் மிகமிக நேர்த்தியான பொன், வெள்ளி அணிகலன்கள் வந்தன. அப்படி இல்லாமல், ஆட்டு மயிர்க்கம்பளங்கள் நீங்கலாகத், தோல், குதிரை, சங்குகள், வைரம், நீலம் முதலாம் மாணிக்கங்கள், பொன்னாலான அணிகலகன்கள் தட்சிண பரதத்திலிருந்து பெருமளவில் வந்தன என்று கௌடில்யர் கூறுகிறார். தட்சிண பரதத்தில் பற்பல சுரங்கங்கள் வழியாக, மிகச் சிறந்த வாணிகப் பொருள்கள் பெருமளவில் கிடைக்கும் நகரங்கள் வழியாகப், பல்வேறு வகை மக்களை ஆங்காங்கே கொண்டுள்ள வழியாகச் செல்லும், நீண்ட வழிப்பயணம் செய்வதற்கு எளிமையானது ஏனைய வழிகளிலும் சிறப்பு வாய்ந்தது". ["ஸ்த்ஹல பாத பி ஹை மவதொ தக்ஷிணா பத்ஹாஎக்ரெயான்]

ஹய்த்யஸ்வ கந்த்ஹ தந்தாஜின ரூப்ய ஸ்வர்ன பன்யாஹ்ற சாரவத்தராங் இத்யாசார்யஹ்

நெதி கௌடில்யஹ்ற கம்பலாஜினாஸ்வபன்ய வர்ஜாஹ்ற சாங்ஹவஜ்ரமணிமுக்தாஹ்ற. சுவர்ணபண்யாஸ்கப்ரப்ஹுத்ரா. தக்ஷிணாபத்ஹே

தக்ஷிணாபத்ஹே பி பாஹுகனிஹ்ற சாரபண்யஹ்ற ப்ரசித்த கதிர் அல்பவ்யாயாமொ வா வணிக்பதஹ ஸ்ரெயான்" [அர்த்த சாஸ்திரம். ஜாலி மற்றும் ஸ்கிமித் வெளியீடு. பகுதி 2 : 12 பக்கம் 30-34].

இது பண்டங்களைக் கொண்டு செல்லும் பழைய முறையினைப் புகைவண்டித் தொடர்களும், சரக்குந்துகளும், அழித்து விடாமல் விட்டு வைத்திருக்கும் இடங்களில் இன்றும் நாம் காண்பதுபோல, "கிரீச்" எனும் ஒலி ஓயாது எழ, குமரி முதல் பாடலி வரையான, சீர்மிகு, சீர்கெட்ட நெடுஞ்சாலைகளில் செல்லும் கட்டை வண்டிகளாம் வணிகச் சாத்துக்கள் மூலம் நடைபெற்ற மிகப் பெரிய வாணிக நிலை பற்றிய காட்சியைக் காட்டுகிறது. வேறு ஓர் இடத்தில் அரசன் கருவூலத்திற்குச் செல்லும் அரும் பொருட்கள் பற்றிக்

குறிப்பிடும்போது, கௌடல்லியர், தாம்பரபரணி, பாண்டியகாவடகா, மற்றும் சூர்ணா (இது, பிற்காலத்தே உரையாசிரியரால், "முரசி" அதாவது கேரள நாட்டில் உள்ள முசிறிக்கு அணித்தாக ஓடும் ஆறு என விளக்கம் அளிக்கப்பட்டுளது) ஆகிய இடங்களிலிருந்து வந்த இரத்தினங்கள் [அர்த்தசாஸ்திரம் : 11 26 : 2] பல்வேறு வண்ணங்களில் ஆன வைடூரியங்கள் [மேற்படி 26 : 30] (ஓர் உரையாசிரியர் இது, ஸ்திரீராஜ்யத்திலிருந்து அதாவது மலபாரிலிருந்து வந்ததாகக் கொள்வர்) பட்டை தீட்டப் பெற்ற மாணிக்கக்கல்லின் மேனி போல் மெத்தென்றிருக்கும். கருமை நிறம் வாய்ந்த பௌண்ட் ரகக் கம்பளங்கள், [அர்த்த சாஸ்திர மொழி பெயர்ப்பாளராகிய காமா சாஸ்திரி யார் இவை பாண்டி நாட்டுச் செய்பொருள்கள் என்கிறார்) [பக் : 90]. மற்றும் மதுரையில் இருந்து வந்த பருத்தி ஆடைகள் ஆகியவற்றைக் குறிப்பிட்டுள்ளார். [Arthasastra : Jolly and Schmidt. ii. 26. 119]

சந்திரகுப்தனும் தென் இந்தியாவும் :

கி.மு. நான்காம் நூற்றாண்டின் கடைசி கால் நூற்றாண்டில் உலகம் அறிந்த நனிமிகு புகழ்வாய்ந்த சந்திரகுப்தன், ஒரு நூற்றாண்டின் கால்கூறு காலத்திய ஒளிமயமான ஆட்சிக்குப் பின்னர், இந்தியப் பேரரசர் பலரையும் போலவே, வைராக்கிய மாகிய நோயால் திடுமெனப் பற்றிக் கொள்ளப்பட்டு, ஒரே இரவில் வாளையும் முடியையும் துறந்து சமணத்துறவியாகி பத்ரபாகுவின் 12,000 மாணவர்களில் ஒருவராகிவிட்டான். தன் குருவோடும், நன்னொத்த மாணவர்களோடும், மைசூர் மாநிலம், ஹாசன் மாவட்டத்தில் உள்ள சரவண பெல்கோலா வைக் கால்கடுக்க நடந்து அடைந்தான். ஏனையோர் ஆங்கிருந்து பாண்டிய, சோழ நாடுகளுக்குச் சென்றனராக, பத்ரபாகுவும், சந்திரகுப்தனும் ஆங்கேயே தங்கிவிட்டனர். ஆங்குப் பிச்சைக்காரனாக மாறிவிட்ட அப்பேரரசன், தன் குரு இறக்கும் வரை, அவருக்குத் தேவையானவற்றை அளித்துப் பணிவிடை செய்து கொண்டிருந்தார். சந்திர

குப்தன், தன் ஆசிரியருக்குப் பின்னர்ப் பன்னிரண்டு ஆண்டுகள் உயிர் வாழ்ந்திருந்தான். பின்னர்த், தான் உயிர் வாழ்ந்த பயன் கிட்டிவிட்டது : தன் உடல் தனக்கு இனிப் பயன் இல்லை என உணர்ந்ததும், சமண சமயமுறையாம், பசியோடிருந்து வடக்கிருந்து உயிர் துறத்தலாம் "சல்லெக்ஹனம்" மேற்கொண்டு உயிர் துறந்தான். ஒரு பேரரசின் வாழ்க்கை, மறைவுகள் குறித்து நாம் கருத்தில் கொள்ளத் தேவையில்லை. ஆனால், இப்போது சாதுக்கள் என அழைக்கப்படும் ஆயிரக்கணக்கானவர், இன்று வழிபாட்டிடங்களுக்குச் சென்று திரும்பும் பல்லாயிரவர் போல வடநாடு விடுத்துத் தென்னாடு வந்தது பற்றியே கருத்தில் கொள்ளுதல் வேண்டும். இச்சமண முனிவர்கள் தமிழ்நாடு மலைச்சரிவுகளில் உள்ள இயற்கையான குகைகளில் வாழ்ந்து, படித்துப் பொருள் காண்பதன் மூலம், தமிழ் இலக்கிய வரலாற்றிற்கு ஒளிகாட்டும், கல்வெட்டுக் களை அக்குகைகளில் விட்டுச் சென்றுள்ளனர்.

பௌத்த நாடோடிகள் :

சமணர்களைப் போலவே, பௌத்தர்களும், தம் யோக நெறியை அமைதி குலையாமல் பயில்வதற்கு ஏற்ற தனிமை இடங்களைத் தேடித் தென்னிந்தியாவுக்கு அலைந்து திரிந்து வந்து சேர்ந்தனர். அவர்களும், இயற்கைக்குகைகளில் வாழ்ந்து கல்வெட்டுகளை விட்டுச் சென்றனர். பல இடங்களில், குறிப்பிட்ட ஒரு குகை, சமணர் வாழ்ந்ததா, பௌத்தர் வாழ்ந்ததா என்பதை அறிந்துகொள்வதில் சிறிது சிரமமே. அதுபோலும் குகைகள், பாண்டிய, சேர நாட்டுப் பல்வேறு மலைகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பௌத்த சந்நியாசிகளின், தொடக்ககால இக் குடிபெயர்ச்சிக்கு அரசியலோ, சமயம் பரப்பும் ஆர்வமோ, காரணங்களாகா. பண்டைக்கால ரிஷிகளைப் போலவே, கி.மு. ஐந்து மற்றும் நான்காம் நூற்றாண்டு புத்த பிக்குகளும், அரசர்களின் நிறைமனத்தோடு படாத ஆதரவிலிருந்தும், துறவறச் சந்நியாசிகளை வரையறையின்றி மகிழ்விப்பதன்மூலம் மிகப்

பலவாய புண்ணியத்தையும், மலிவான தகுதிப்பாட்டையும் பெறத் துடிக்கும், பொறுப்பற்ற மாணவர்களின், பொறுக்கவொண்ணாப் போலிப் புகழ்ப்பாட்டிலிருந்தும் தப்பித்துக் கொள்ளவே, தங்கள் சொந்த மாநிலங்களை விட்டு வெளியேறினர். சமணர்களும், பௌத்தர்களும் முறையான மனப்பயிற்சியினை யோக முறை மூலம், மேற்கொள்ளுதல் வேண்டும்; அதன் வெற்றிப் பயிற்சிக்குத் தனிமை தேவை. சமணர்களுக்கு, இவற்றிற்கு மேலாகச் "சல்லெகனம்" என அழைக்கப்படும் ஒருவகைத் தனிச்சிறப்பு வாய்ந்த முறையாம் வடக்கிருந்து அமைதியாக உயிர் விடுதற்கு ஏற்புடைய, மக்கள் நடமாட்டத்திற்கு அப்பாற்பட்ட உறைவிடமும் தேவைப் பட்டது. பண்டைக்காலத்தைச் சேர்ந்த இம்முனிவர்களுக்கு, உயிரைக் காக்கத் துடிக்கும் பேராசை எதுவும் இல்லை. மகாவீரரும், புத்தரும், மக்களைப் பெருங்கூட்டமாக வானுலகிற்கு அனுப்புவனவாகச் சமயங்களைக் கருதவில்லை. கட்டாயமாக்கப்பட்ட பிறப்பு, மறுபிறப்பு எனும் வாழ்க்கைச் சக்கரத்திலிருந்து தனிமனிதனைக் காக்கும் மனப்பயிற்சி முறைகளைச் சந்நியாசிகளுக்குக் கற்பித்தலே சமயமாம் எனக் கொண்டனர். இவ்வறவுரையாளர்கள், உலகத்தவர்க்கு உலக வாழ்க்கைக்கு வேண்டுகோள் விடுக்கவில்லை. துறவிகளுக்குத் துறவற நெறிக்கே விடுத்தனர். அவர்கள் தொழுகை இடங்களை நிறுவினார் அல்லர். நோன்பிடங்களையே கண்டனர். அவர்கள், மாணவர்களின் மனத்தைச் சமயக் கருத்துகளால் நிரப்பினாரல்லர். மாறாக அவர் உள்ளங் களை, உயிர் உணர்ச்சிகளைத் தூண்டவல்ல அறவுரைகளால் கிளர்ச்சி பெறச் செய்தனர். எப்பொழுதும், ஓயாது இயங்கிக் கொண்டு இருக்கும் அலையலையான அகக்கிளர்ச்சிகள் அடங்கிப் போக, அவற்றின் இடத்தைத் தன்னை மட்டுமே உணரும் நிலைபேறுடைய மனவுணர்வுக்குவியல் வெற்றி கொண்டுவிட்டதோ, எப்பொழுது, கடுமையான புலனடக்க நெறி மேற்கொண்டு, தன் உயிரின் வீடுபெற்றிற்காம் விருப்பம், உலகத்தவர்க்குச், சமயக் கொள்கைகளை அவர் உள்ளம் ஈர்க்கும் சொற்களால் விளக்கி, அவ்வுலகத்து உயிர் அனைத்தையும் காக்க வேண்டும் என்ற விருப்பத்தால்

குப்புறத் தள்ளப்பட்டதோ, எப்பொழுது, உணர்ச்சிக்கு உள்ளாகி, ஓயாது துடித்துக் கொண்டிருக்கும் உயிர், மாறா நியதிகளாம், வலிய இரும்புச் சங்கிலிகொண்டு சிறை செய்யப்பட்டுவிட்டதோ, எப்பொழுது, புத்தர் கூறுவது போல, மனத்தொடுபடும் கோட்பாடு, கண்ணொடுபடும் கோட்பாட்டால் கெட்டு மங்கிப் போய்விட்டதோ, எப்பொழுது, சாங்கியர் கூறுவதுபோல், புத்தியின் "அத்யவசாயம்" மனத்தின் "சங்கல்பவிகல்ப"ங்களால், ஒளிகெட்டு மங்கிப் போய்விட்டதோ, அப்பொழுதே, ஜீனர், புத்தர்களின் போதனைகள் சமணமாகவும், பௌத்தமாகவும் தாழ்நிலை உற்றுவிட்டன: உற்றன; இந்திய மக்களுக்குப் பெருங்கேடாக, மனிதனின், தன்னை மட்டுமே மதிக்கும் அகவுணர்வு, மேலும், இரு சமயப் பிரிவுகளை உருவாக்கி விட்டது. அந்நிலையே பௌத்தர்களின் பேரவைகள் கூடலாயின; ஏனைய மக்களின் உயிர்களைக் காக்கும், சமயத்தின் பெயரால், வெறுப்புணர்ச்சியைத் தூண்டும் வேட்கையால் உந்தப்பட்ட, புத்தத்துறவிகள், நாட்டை அலைக்கழிக்கத் தொடங்கிவிட்டனர். முந்திய தலைமுறை களைச் சேர்ந்த புத்த பிக்குகள் போல் அல்லாமல், போர்க் குணம் வாய்ந்த இப்புத்தத் துறவிகள் தங்கள் சமயப் பிரசாரத் திற்கு மகதப் பேரரசின் துணையையும் பயன் கொண்டனர்.

அசோகனும் தமிழ்நாடும் :

ஆனால், அசோக வர்த்தனன் காலத்திலும், தமிழ்நாடு, மகத ஆட்சி எல்லைக்கு வெளியிலேயே இருந்துவந்துள்ளது. மக்களின் நோய் தீர்க்கவும், மாவினங்களின் நோய் தீர்க்கவும், அவன் நிறுவிய இரு நிறுவனங்கள் குறித்துப் பேசும், அவனுடைய இரண்டாவது பாறைக்கல்வெட்டில், சோழ, பாண்டிய, சத்திரிய புத்திர, மற்றும் கேரள புத்ரர்களை "அந்த" அதாவது அண்டை நாட்டவர் அல்லது, எல்லைப் புறத்தில் உள்ளார், என்றே குறிப்பிட்டுள்ளான். அவனுடைய 13வது கல்வெட்டில், தெற்கில் தம்பண்ணி அதாவது தாம்பரபரணி வரையான சோழ பாண்டிய நாடுகளில் தர்ம

விஜயத்தில் வெற்றி கொண்டதாகக் கூறுகிறான். உலகிற்கு உபதேசிப்பதில் அவன் பெருமகிழ்வு கண்ட, பிராமண, சமண, பௌத்த சமயப் பேராசிரியர்கள் வழங்கும் அறிவுரைகளின் ஒன்றுபட்ட தொகுப்புத் தர்மமாம் பல்வேறு வகையான நன்னெறிகளை, மக்களுக்குப் போதிக்கும் சமயத் தூதுவர் களைப் பல்வேறு நாடுகளுக்கு அனுப்பி வைப்பதுதான், தர்மவிஜயம் என்பது. இது பண்டைக்கால, இன்றைய வரலாற்றுத் திறனாய்வாளர் இருதிறத்தவராலும், பல்வேறு நாடுகளுக்குப் பௌத்த சமய போதனையாளர்களை அனுப்பியதாகத் தவறாகக் கொள்ளப்பட்டுள்ளது. ஒன்று, அசோகன், ஒருவர் விடாமல் மக்கள் அனைவர்க்குமான தன் உபதேசங்களைப் "பௌத்தசத்யானி" என்று எக்காலத்தும் பெயரிட்டு அழைத்ததில்லை. மாறாக, எச்சமயத்தோடும் சாராததான "தர்மம்" என்றே எப்போதும் பெயரிட்டு அழைத்துள்ளான். இரண்டாவது, பௌத்த மதம் பரப்பும் புத்த சந்நியாசிகளைப், பல நாடுகளுக்கும் அனுப்பிய தன் செயலைப், பலரும் அறியச் செய்ய விரும்பியிருந்தால், உஜ்ஜைனியில் தான் ஆளுநராக இருந்த போது மணந்து கொண்ட தேவி வழிப்பிறந்த தன் மகன் மகிந்தனைப், புத்தமதம் பரப்ப ஈழ நாட்டிற்கு அனுப்பியதைக் கல்வெட்டில் பொறித்து இருப்பான். ஆனால், இச்செய்தியை மகாவம்சந் தான் நமக்கு அறிவிக்கிறது. அசோகன், தூதுவர்களைத் தர்ம விஜயத்திற்கே அனுப்பினனாக, பல்வேறு நாடுகளுக்குப் புத்தசமயப் பிரசாரகர்களை, மூன்றாவது புத்தப் பேரவை தான் அனுப்பியது. அசோகன், பிராமண இல்லறத்தார், துறவறத்தார், சமண முனிவர்களை மதித்தது போலவே, பௌத்த முனிவர்களையும், மதித்தான் என்பதில் ஐயம் இல்லை. ஆனால், இது பௌத்த சந்நியாசிகளைச் சமயப் பிரசாரகர்களாக அனுப்பியதாகப் பொருளாகாது. இப்பொருள் குறித்தவரை, பௌத்த வரலாற்று அட்டவணை யாகிய மகாவம்சம், ஒருதலைப்பட்ட சான்றே ஆகும். ஆனால், நம்முடைய ஆய்வு அப்பொருள் பற்றியதன்று. அசோகன் கல்வெட்டுகளிலிருந்து, அசோகன் காலத்தில், அவனுடைய

முந்தையோர் காலத்தைப் போலவே, தமிழ்நாடு, வட இந்தியாவோடு சுறுசுறுப்பான மிகப் பெரிய போக்கு வரவினைக் கொண்டிருந்தது என்பதை அறிந்து கொள்வது ஒன்றே போதும்.

இன்றைய வரலாற்றுத் திறனாய்வாளர்கள், மௌரியப் பேரரசு பற்றியும், பிற்காலத்தே குப்தர்களில் முடியாட்சி பற்றியும் பரவலாகப் பேசுகின்றனர். பேரரசு, பேரரசைச் சார்ந்த எனப் பொருள்படும் [Empire : Imperial] என்ற இவ்வாங்கிலச் சொற்கள், பண்டைக்காலத்தில், இந்திய நாடுகள் ஒன்றோடொன்று கொண்டிருந்த அரசியல் உறவு பற்றி மிகப் பெரிய தவறான கருத்தினையே உணர்த்துகின்றன. இந்திய வரலாற்றில், இவ்வரலாற்றின் போக்கில், தவறான கொள்கையினை ஏற்படுத்தாமல், "எம்பயர்"(Empire) என்ற சொல்லை ஆள்வது இயலாது. பேரரசு (Empire) என்ற அச்சொல் உணர்த்தும் உள்ளார்ந்த பொருள் அத்தகைத்து. தன் ஆட்சிக்கு உட்பட்ட நாடுகளில் அமைதி நிலைநாட்டல், உரோம் நாட்டுக் குடியுரிமை உரோம் நாட்டுச் சட்டம் ஒழுங்கு முறைகளை மெல்ல மெல்ல விரிவாக்கல், இலத்தீன் மொழியைப் பரப்புதல் ஆகிய இவையே உரோமப் பேரரசு என்பதன் பொருளாம். சட்டம் ஒழுங்கு நிலையில் பிரித்தானியர் முறைகளை நிறுவுதல், நிர்வாகத்தில் ஆங்கிலத்தைப் பயன் கொள்ளுதல், ஆங்கிலமுறைப் பள்ளிகளையும், பல்கலைக்கழகங்களையும் பரப்புதல், ஆங்கிலேயர் வர்த்தக முறையின் மிகப் பெரிய விரிவாக்கம், கிறித்துவ சமயப் போதனைகளை மெல்ல மெல்லத் தொடங்கல், பிரித்தானிய நாட்டு மக்களாட்சி முறையின் மெதுவான வளர்ச்சி ஆகிய இவையே பிரித்தானியப் பேரரசு என்பதன் பொருளாம். பண்டை நாட்களில், இந்தியாவில் பேரரசு நிறுவல் என்பது, இவற்றில் எதுவும் அன்று. மரபு வழிபட்ட 56 இந்திய சிறுநாடுகளும், பிராமண ஆசிரியர்கள், அவ்வப்போது எடுத்து விளக்கிக் கூறும் தர்ம சாஸ்திரப்படியே, பெரும் பாலும் ஆளப்பட்டு வந்தன. பேராற்றல் வாய்ந்த பேரரசன் ஒருவன், "ஒருதனி ஆழி உருட்டுவோன்", "உலகெலாம் ஒரு குடைக்கீழ் ஆள்வோன்", "உலகெலாம் ஆள்வோன்" எனக்

கூறப்படும் நிலையிலும், அவன் ஆட்சிக் கீழ் அடங்கிய நாடுகளில் ஆட்சி நிர்வாக முறைகளில், அமைச்சர் புரோகிதர் உள்ளிட்ட அரசவை ஐம்பெருங்குழுக்களில் எவ்வித மாற்றமும் நிகழ்வதில்லை. போர்க்காலனிகள் எதுவும் ஆங்கு ஏற்படுத்தப்படுவதில்லை. வெற்றி கொண்ட பேரரசனின் சிறுபடைப் பிரிவும் ஆங்கு நிறுத்தப்படுவதில்லை. பெருவீரன் ஒருவன், எண்ணற்ற நாடுகளுக்கும், தன்னைத் தலைவனாகக் கூறிக் கொள்வதும், ஆண்டுதோறும் அல்லது அவ்வப்போது, திறை செலுத்துவதன்மூலம், அவ்வரசனின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொள்வது, ஆகிய இவையே, அச்சொற்றொடர் களுக்குப் பொருளாம். தன்மேலாதிக்கத்தை, நிலைநாட்டிக் கொள்வது, அசுவமேதயாகம் இயற்றுவதன் மூலமே பொதுவாக மேற்கொள்ளப்படும். பொதுவாக, யாகத்திற்கு முன்பாகப் படையெடுப்பு எதுவும் நிகழ்வதில்லை. ஆனால், யாகத்தில் பலி கொள்ள இருக்கும் குதிரையை, அவ்வரசனின் மகன், அல்லது மகள் வயிற்று மகன் பொறுப்பில் கட்ட விழ்த்து விடுவதும், அவ்வேள்வி செய்யும் அரசனின் மேலா திக்கத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கும் அரசன் நாட்டிற்குச் சென்ற அக்குதிரை ஆங்கு அவனால் கட்டப்பட்டு விடுமாயின், அது மீட்பதற்குப் போர் நிகழ்வதும் மட்டுமே வேள்விக்கு முன்பாக நிகழும். ஆனால், பேரரசு ஆட்சி என்பது தனி அரசன் ஒருவனின் தனிப்பட்ட இயல்புகளைப் பொறுத்ததே அல்லது, ஓர் அரச இனத்தின் செயலே அன்று. ஆகவே, இந்தியப் பேரரசுகள் குறித்துக் கூறப்படும் பொதுவான கருத்துகள் எல்லாம், குறுகிய காலகட்டத்தில் நிற்பன; பொருள் அற்றன.

அசோகனுக்குப் பின்னர் அரியணை ஏறியவரெல்லாம், அரசியல் நெறியாலும், ஒழுக்க நெறியாலும் வலுவிழந் தவர்கள்! ஆகவே, அவன் மறைவினை, மகதம் போன்ற பிற நாட்டு மன்னர்களின் புகழேற்றம் இடங் கொண்டுவிட்டது. அத்தகைய அரசர்களுள் ஒருவன், கலிங்க நாட்டுக் காரவேலன். அவனுடைய கல்வெட்டுகள், அவன் நாட்டிற்கும் மதுரைக் கும் இடையில் நடைபெற்ற வாணிகத்திற்குச் சான்று பகர்கின்றன.

கலிங்கமும் தென் இந்தியாவும் :

விதி, எப்போதும்போல விளையாடிவிடவே, அசோகன் கடைப்பிடித்த தர்மம், அவன் இறப்பிற்குப் பின்னர், அவன் பேரரசைச் சிதறுறச் செய்துவிட்டது. அவ்வகையில் தன்னாட்சி பெற்ற நாடுகளில் கலிங்கமும் ஒன்று. அதன் அரசன் காரவேலன் (கி.மு. 200) பாண்டி நாடுவரையும் சென்று பரவிய பெரும் புகழ்ச்சிக்கு உரியவனாகிவிட்டான். அங்கிருந்து குதிரைகள், இரத்தினங்கள், முத்துகள், நீலக்கல் மட்டுமல்லாமல்,அவற்றைச் சுமந்துவந்த யானைகளும் கப்பல்களும் அவனுக்குப் பரிசுப் பொருட்களாகக் கிடைத்தன. குதிரைகளையும், யானைகளையும், மாணிக்கங்களையும் ஏற்றிக் கொண்டு, வியத்தகு யானைக் கப்பல்களும் கொண்டு வரப்பட்டன. முத்துகள், நீலமணிகளோடு இவற்றையும் பாண்டிய அரசன் அனுப்பிவைத்தான். [அப்ஹ¯த அசரியம் அத்தினாவன் பாரிபுரம் யு(ப) தென்ஹ ஹய ஹதி ரத்ன (மா) நிகம் பண்டராஜா எதானி அனெகானி முதமணிரத்னாளி ஹராபயதி இத்ஹ சத ச) (ஹதிகும்பா கல்வெட்டுகள்; J. B. O. R. S. iv. 401]

♦ ♦ ♦

8. வெளிநாட்டு வாணிகம்
கி.மு. 600 முதல் கி.பி. 14 வரை

தாரியஸ் ஆட்சியில் :

கி.மு. 606-இல் அஸ்ஸிரியப் பேரரசு கவிழ்க்கப்பட்டது. அது நிகழ்ந்ததும், பாபிலோன், ஆசிய வாணிகத் தலைமை யிடமாக ஆகிவிட்டது. யவனர், யூதர் பொய்னீஷியர், இந்தியர், சீனர் என்ற உலக வணிக இனங்கள், தங்கள் வணிகப் பண்டங் களைப், பாபிலோனிய சந்தைகளுக்கு எடுத்துச் சென்றன. 'அயெஸ்செய்லஸ் (Aeschylus) என்பார் "எல்லா வகை மக்களும் வேறறக் கலந்துவிட்ட ஒரு பெருங்கூட்டம்" (Painminikton hoclon) என அழைக்குமளவு, பாபிலோன் நகரத்து மக்கள் கலந்துவிட்டனர். கி.பி. ஏழாம் நூற்றாண்டு வரை தொடர்ந்து வளம் பெற்றிருந்த தென்னிந்திய வணிகர் களின் குடியிருப்பு ஒன்று, அந்நகரில் இடம் பெற்றுவிட்டது. கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில், நிப்பூரில் (Nippur) இருந்த, முராஷுவுக்கும், (Murushu), அவர் மகனுக்கும் உரிமை யுடையதான பெரிய வர்த்தக நிறுவனத்தின் வணிகத் தொடர்புடைய பட்டயங்களில், வணிகர் தொடர்பான குறிப்புகளைக் காண்கிறோம். [J.R.A.S. 1917, P. 237 Kennedy] கி.மு. 538-இல் ஸைரஸ் (Cyrus), பாபிலோனியப் பேரரசை அழித்துவிட்டான். அவன் வழிவந்த மதிப்பார்ந்த தாரியஸ் (Dariws) கி.மு. 20-ஆம் நூற்றாண்டு போலும் காலத்தில் ஸெஸோஸ்-டிரியெஸ் (Sesostrises) என்ற ஒருவனால் முதன் முதலாக வெட்டப்பட்டு, கி.மு. 15-ஆம் நூற்றாண்டில் 18வது அரச மரபினர் ஆட்சியின் கீழ், மீண்டும் திறக்கப்பட்ட சூயஸ் கால்வாயைக் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில், ஒரு பகுதியைத் திறப்பதன் மூலம், கடல் வணிக வளர்ச்சிக்குத் துணை

புரிந்தான். அவன், வடமேற்கு இந்தியாவைத் தன் பேரரசோடு இணைத்துக் கொண்டான். அது, இந்துகுஷ் மலையின் குறுக்காகப் பால்க் (Balkh) பகுதிக்கும், அங்கிருந்து எக்ஸைன் (Ewxine) பகுதிக்கும் சென்ற, பாலைவனத்தைக் கூட்டமாகக் கடக்கும் வணிகச் சாத்துமுறை புத்துயிர் பெற வழிவகுத்து விட்டது. அது, கார்மேனியன் (Karmanian) பாலையைத் தொட்டுச் செல்வதாகி, அங்கிருந்து மெஸபடோமியா வழியாக அன்டியோக் (Antioch) நகருக்கும் சென்றது. இதன் முக்கிய விளைவு, பட்டு, முதன்முதலாக, மேற்கு நாடுகளைச் சென்றடைந்தது. "கிரேக்கர்கள், பட்டை அலெக்ஸாண்டரின் படையெடுப்பு மூலம் அறிந்து கொண்டனர் எனக் கருதப்பட்டது. ஆனால், அது அதற்குமுன்பே, பர்ஷியா மூலம், அவர்களை அடைந்திருக்கக் கூடும்." [Schoff's Periplus. P. 264.] இந்நிலவழி வாணிகம், தாரியஸுக்குப் பிறகு, படிப்படியாகக் குறைந்துவிட்டது. எகிப்தை வெற்றி கொண்ட பின்னர், அலெக்ஸாண்டர், இந்தியாவுக்கும் ஐரோப்பியாவுக்கும் இடையில், பெரிய வாணிக நிலையமாக விரைவாக வளர்ந்து விட்ட அலெக்ஸாண்டிரியாப் பெருநகரை உருவாக்கினான். பின்னர், அம்மாவீரன் டயர் நகரைச் சூறையாடி அழித்து, அதன் பண்டை வாணிகத்தையும் பாழ்படுத்தி விட்டான். இது மேற்கு நோக்கிப் பெருகிக் கொண்டிருந்த இந்திய வணிகப்பெருக்கை, ஓரளவு அணைபோட்டுத் தடுத்து விட்டது. அலெக்ஸாண்டர் இறப்பிற்குப் பிறகு, அஸிரியாவைச் சட்ட திட்டங்கள் அற்றுப்போன குழப்பநிலை, ஆட்சிபுரியத் தொடங்கி விட்டது. பார்த்தியாவில், ஒரு புதிய பேரரசு எழுந்தது. சித்தியப் பழங்குடியினர், பாக்ட்ரியா (Bactria) மீதான, தம் திடீர்த்தாக்குதல்களைத் தொடங்கி விட்டனர். இந்நிகழ்ச்சிகள், நிலவழி வாணிகத்தில் அழிவுக்கு வழிவகுத்து விட்டன. இந்த விளைவுகளைப் பயன்படுத்திக் கொண்டு, எகிப்தின் நலனுக்காகச் செங்கடல் வாணிக வளர்ச்சிக்கு, அருமுயற்சி எடுத்துக் கொள்ளுமாறு பிலடெல்பிஸுக்கு (Philadelphus) கி.பி. 285-246ல், அழைப்பு விடுத்தார். முதல் தாலமி, சூயஸ்கால்வாய், ஓரளவு திறக்கப்பட்டு, வாணிகப்போக்கு

வரவிற்கு வழி செய்யப்பட்டது. வணிகச் சாத்து செல்லும், தங்கும் இடங்களுக்கும், குடிநீர்க் கிணறுகளுக்கும் வசதி செய்து தரப்பட்ட, பல்வேறு வழித்தடங்கள், கடலுக்கும், நைல் நதிக்கும் இடையே திறக்கப்பட்டன. அவ்வழித்தடங்கள் முடியும் இடங்களிலெல்லாம், துறைமுகங்கள் நிறுவப்பட்டுச் சுங்கவரி விதிக்கும் அரசு அலுவலர்களால் கண்காணிக்கப்பட்டன. தன் முந்தைய செல்வவளத்தையும் புகழையும், எகிப்து, ஓரளவு திரும்பப் பெற்றுவிட்டது. தாலமியின் நகர்வலத்தில் பிலெடெல்பஸ் நகரில் இந்திய மகளிர், இந்திய வேட்டை நாய்கள், இந்தியக் காக்கைகள், ஓட்டகங்கள் மீது ஏற்றப்பட்ட, இந்திய மணப்பொருள்கள் காணப்பட்டன.

கிரேக்க இடைத்தரகர்களும், நடுவர் இருவர் குழு ஆட்சிக்கு உட்பட்ட ரோமும் :

கிறித்துவ ஆண்டு பிறப்பதற்கு முந்திய 500 ஆண்டுகளில், ஐரோப்பாவுடனான, இந்த இந்திய வணிகத்தில், கிரேக்கர்கள், பெரும் இடைத்தரகர்களாக இருந்தனர். உலகப் பெருநாடுகளுக்கு இடையிலான, இந்த விரிவான வாணிகப் போக்குவரத்தின் ஒருவிளைவு, தென்னாட்டு வணிகப் பண்டங்களின் தமிழ்ப்பெயர்கள், கிரேக்கப் பழங்குடியினரின் தூய கிரேக்க எல்லெனெஸ் மொழியால் (Hellenes) கடன் வாங்கப்பட்டன. திருவாளர்கள் ஸோப்ஹோக்கில்ஸ், (Sophocles) அரிஸ்டோபன்ஸ் (Aristophanes) ஆகியோர் எழுத்துக்களில், அவை இடம் பெறத் தொடங்கின. அவையாவன: தமிழ் அரிசியிலிருந்து "ஓரைஸ்" (Oryza) இலவங்கப்பட்டையாம் கருவாவிலிருந்து, "கர்பியொன்" (Karpion) தமிழ் இஞ்சிவேர், சமஸ்கிருத ஸ்ரிங்கிவொரா விலிருந்து (Sringivera) "ஜிக்கி பெரொஸ்" (Ziggiberos) வால்மிளகைக் குறிக்கும் தமிழ் திப்பிலியிலிருந்து "பெப்பெரி," (Peperi). இது இப்போது, ஐரோப்பிய மொழிகளில், கருப்பு மிளகைக் குறிக்கவும் ஆகிவிட்டது. பண்டைக்காலத்தில் கோவை மாவட்டத்தில் தோண்டி எடுக்கப்பட்ட தமிழ் வைடூரியத்திலிருந்து 'பெரில்லோஸ்'

(Beryllos) இந்த நூற்றாண்டின் தொடக்க காலத்து உரோமானியர், அவர்களுடைய, பண்டைய எளிய வாழ்க்கை முறையையே கடைப்பிடித்தனர். பகட்டு வாழ்க்கையில் அவா கொண்டிலர். ஆகவே, நடுவர் இருவர் குழு (Consular) ஆட்சியின் தொடக்ககாலத்தில், இந்தியப் பண்டங்கள், உரோமாபுரியை அடையவில்லை. அந்நாட்களில், இந்தியா இறக்குமதி செய்தனவற்றில் உரோம நாணயம் இடம் பெறவில்லையாகவே, அக்காலை நடைபெற்ற சிறு வாணிகத்திலும், வாங்கிய பண்டங்கள், உரோம நாட்டுப் பணம் கொடுத்து வாங்கப்படவில்ல. பல நூறு ஆண்டு காலமாக இருந்துவந்த பழைய தடத்திலேயே வாணிகம் நடைபெற்றிருக்கக் கூடும். நடைபெற்றிருந்தது. ஆனால், நடுவர் இருவர் குழு ஆட்சியின் பிற்பகுதிவரை, உரோமஅரசு, கிழக்கு நோக்கி விரிவடையவில்லை. துணிவுமிக்க உரோம வணிகர்களுக்குப் பல்மைரா (Palmyra) தன்னுடைய கதவு களைத் திறக்கவில்லை. ஜூலியஸ் சீசரால், அலெக்ஸாண் டிரியா, கி.மு. 47இல், கைக்கொள்ளப்பட்டது என்றாலும், கடல் வாணிகம் அராபியப் படகுகளில், கடற்கொள்ளைக் காரர்களின் பிடியில் சிக்குண்டிருந்த கடற்கரையை ஒட்டிநடைபெற்று வந்தமையால், அக்காலை வாணிகம், சிறிய அளவில், நிலையற்ற தன்மையிலேயே நடைபெற்று வந்தது. அக்காலத்தில், ஐரோப்பாவுக்கு, இந்தியாவிலிருந்து, என்னென்ன ஏற்றுமதி செய்யப்பட்டாலும், அவை, பெரும்பாலும் உரோமுக்குச் செல்வதில்லை. கிரேக்கத்திற்கே சென்றன. [J. R. A. S. 1904. page : 593 - 94. Sewell] திருவாளர் ஸ்வெவல் அவர் ஆட்சிக்காலத்து நாணயங்களில், இதுவரை ஒருசில நாணயங்களே இந்தியாவில் கண்டெடுக்கப்பட்டன என்ற உண்மை நிலையை அடிப்படையாகக் கொண்டு எழுந்தனவாம்.

இக்கால கட்டத்தின் இறுதியில், மத்திய தரைக்கடல் மக்கள் மீது, அடுத்தடுத்துக் கொண்ட வெற்றியும், நடத்திய கொள்ளையும், உரோமப்பேரரசின் கருவூலத்திற்கு ஒப்புக்காட்ட இயலாப் பெருஞ்செல்வத்தைக் கொண்டு வந்து சேர்த்தன. கீழ்நாடுகளைச் சேர்ந்த, மதிப்புமிக்க வணிகப்

பண்டங்கள் மீதான சுவை, ஒரே இரவில் வளர்ந்துவிட்டது. சிற்றாசியா, சிரியா நாடுகளை வென்றுகொண்டாரைச், சிறப்பித்து மக்கள் எடுத்த விழாக்கள், மக்கள் ஆர்ப்பரிப்புக் குக் காரணமாகிவிட்ட பெருஞ்செல்வத்தால் சுடரொளி வீசிச் சிறப்புற்ற". [Scoffs Periplus. page : 5] பழைய சிக்கன, எளிய வாழ்க்கைமுறை, பகட்டு வாழ்வின் கவர்ச்சி முன் நிற்கமாட்டாது, நெடுங்காலத்திற்கு முன்பே விடைபெற்றுக் கொண்டது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில், தூரக்கிழக்கு வணிகப் பண்டங்கள், கணிசமான அளவு, உரோமை வந்தடையலாயின". [Warminston J. R. A. S., 1940. page .4 sweli.]

உரோமப் பேரரசின் தொடக்கத்தில் :

அகஸ்டஸ் (Augustus) எகிப்தை, கி.மு. 30இல் வெற்றி கொண்டு, இந்தியாவுக்கும், உரோமப் பேரரசுக்கும் இடையில், ஒரு நேரிடைக் கடல் வாணிக வளர்ச்சிக்கு முயன்றான். கி.மு. 25இல், ஏறத்தாழ 120 கப்பல்கள், ஹோர்மஸ்ஸிலிருந்து (Hormus), இந்தியாவுக்குப் பயணம் செய்ததைத் தாம் பார்த்ததாகத் திரு. ஸ்டிராபோ (Strabo) கூறுகிறார். [Mcrindle Ancient India, page. 6] "இந்தியாவின் பல்வேறு நாடுகளிலிருந்து அரசியல் தூதுவர்கள் அகஸ்டஸ் பால் சென்றனர். இந்தியத் தூதுவர்கள், அடிக்கடி வந்ததாக அவனே கூறுகிறான்" [Warmington Commerce between the Roman Empire and India. page : 35] அக்காலச் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள், தனித்தனித் தூதுவர்களை அனுப்பியதாக, திருவாளர் வார்மிங்டன் கூறுகிறார். [Warmington Commerce between the Roman Empire and India. p. 37] இது. அகஸ்டஸ் காலத்தில் இந்தியா, உரோமுடன் நடத்திய வாணிக அளவு மிகப்பெரிய அளவினதாய்ப் பெருக வழி செய்தது. இவ்வாணிகம் குறித்துத் திருவாளர் வார்மிங்டன் அவர்கள், "உரோமுக்கும் இந்தியாவுக்குமிடையிலான வாணிக அளவை மதிப்பிட்டுப் பார்த்தால், அகஸ்டஸின் உண்மையான தொடக்கநிலை ஆட்சிக் காலத்தின் போதே, அது, இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான வாணிகம் எப்போதும்

இயல்பாக இருக்கும், அந்த அளவு அடைந்துவிட்ட, குறிப்பிடத்தக்க அப் பெருநிலையை நாம் கண்ணெதிராகக் காணக்கூடும். தொடக்க நாளிலிருந்தே, இந்தியப் பண்டங்களின் வருகைப் பெருக்கத்திற்குப் பேரரசின் பண்டங்களைக் கொடுத்துச் சரிஈடு செய்ய முடியாது போயிற்று. அதன் விளைவு பண்டங்களுக்குப் பதிலாக, உரோமானியர், சென்றால் திரும்பி வராத, அடித்த நாணயப் பணங்களை வெளியேற்றினர். [Warmington. Page : 38] நாணயப் பணங்களை ஏற்றுமதி செய்வதில், தொடக்கத்தில் ஒரு மோசடி வெளிப்படையாகவே செய்ய முயலப்பட்டது. அகஸ்டஸ் நாணயத்திற்குப் பதிலாக, அவனுடைய தத்துப் பிள்ளைகளாம், கையஸ் (Gaius) லூசியஸ் (Lucius) என்பார் உருவங்கள் பொறிக்கப்பட்ட பொன்னுக்குப் பதில் முற்றிலும் பொன் முலாம் பூசப்பட்ட நாணயங்கள் பெரும் எண்ணிக்கையில் இந்தியாவில் கைம்மாறின. உள்நாட்டு மக்கள், போலி நாணயங்களிலிருந்து, உண்மையான உரோம நாணயங்களை, இன்னமும் வேறு பிரித்து உணரமாட்டா, தென் இந்தியாவோடு நடத்தும் வாணிகத்திற்காகவே அத்தகைய நாணயங்கள், தனியாக அடிக்கப்பட்டனவாக எர்னஸ்ட் (Ernst) எண்ணுகிறார்" எனக் கூறுகிறார் திருவாளர் வார்மிங்டன் [Warmington p. 139]. ஆனால், தமிழர்கள் கூர்மதிவாய்ந்தவர் என்பதை உறுதி செய்து விட்டனர். காரணம், அற்பத்தனமான அச்சோதனை மீண்டும் முயலப்படவில்லை. இந்நூற்றாண்டு கால அளவில், மேலைநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட வணிகப் பொருள்கள் யாவை?

உயிர்விலங்குகளின் ஏற்றுமதி :

பண்டைக்காலத்து இந்தியர்கள், உயிர்விலங்குகளைக் கடல்வழியாகப் பர்ஷிய வளைகுடாவிற்கும், ஆப்பிரிக்காவிற்கும், சீனாவுக்கும் அனுப்பி வைத்தனர். இரண்டாம் தாலமியின் மயில்களையும், கிளிகளையும், அனுப்பி வைத்தமைக்கும் அவர்களே, பெரும்பாலும் பொறுப்பாவர். ஏதன்ஸுக்குச் செல்யூகஸ் (Seleucus) நன்கொடையாக

வழங்கிய புலி, சுல்லாவும் (Sulla) பாம்பெயும் (Pampey) காட்சிப் பொருளாகக் காட்டிய சிங்கங்கள், பாம்பெய், காட்சிப் பொருளாகக் காட்டிய, ஒற்றைக் கொம்புக் காண்டாமிருகம், மெர்ஸலஸ் (Mercllws) நகரின் ஆடரங்கு அர்ப்பணிக்கப்பட்டபோது, கூண்டிலோ குகையிலோ அடைத்துக் காட்டப்பட்ட புலி ஆகிய விலங்குகள், சில வட இந்தியாவையும் சில தென்னிந்தியாவையும் சேர்ந்தவை, நிலவழியாக அனுப்பப்பட்டனவாம். ஆனால், கிரேக்க எழுத்தாளர்கள் பலரும், தங்கள் நூல்களில் குறிப்பிட்டிருக்கும் குரங்குகள், கடல்வழியாகவே சென்றிருக்க வேண்டும் (Warmington 147, 148, 151). அலெக்ஸாண்டர் வெற்றிக்குப் பின்னர்ச் சண்டைகளில் பெருமளவில் பயன்படுத்தப்பட்ட இந்திய யானை, பயரஸ் (Pyrrhus) என்பான், சில யானைகளைக் கி.மு. 28-இல், ஐரோப்பாவிலிருந்து இத்தாலிக்கு, இடமாற்றி அனுப்பப்பட்டபோது உரோமானியர்களுக்கு முதன்முதலாக அறிமுகமாக்கப்பட்டது. கார்த்தகினியர்கள் (Carthaginiars) அவற்றை, ஆப்பிரிக்க யானைகளோடு பயன் கொண்டு அவ்விரு இனங்களையும் பழக்க, இந்திய யானைப் பாகர்களை நியமித்தனரா என்பதை, என்னால் உறுதியாகச் சொல்ல இயலாது. ஆனால், கி.மு. 25-இல் பனோர்மோஸ் (Panormos) எனும் இடத்தில் ஹாஸ்ட்ருபால் (Hasdrubai) இந்தியர்களால் செலுத்தப்பட்ட யானைகளைப் பயன்படுத்தினான் என்பது குறிப்பிடத்தக்கது. உரோமப் பேரரசோடு நடத்திய இரண்டாம் புனிக் (Punic) போரில், ஹனிபால், ஹாஸ்ட்ருபால் (Hannibal, Hasdrubal) இருவரும் அதுவே செய்தனர். ரபியா (Rapia) எனுமிடத்தில் நடைபெற்ற போரில் தாலமியின் லிபியா நாட்டு விலங்குகள், ஆண்டியோ சொஸ் (Antiochos) என்பானின் இந்தியப்படைகள் முன் நிற்க முடியவில்லை (Warmington, Page : 151).

இந்திய வேட்டை நாய்கள், வெளிநாட்டவரால், மிகுவிலைக்குரியவாக மதிக்கப்பட்டன. "ஹெரோ டோடஸ் கூற்றுப்படி, தம் காலத்தைச் சேர்ந்த பர்ஷியர், பாபிலோனியாவைச் சுற்றியிருந்த நான்கு பெரிய சிற்றூர்களின் வருவாய்களை, இந்திய வேட்டை நாய்களின் உணவிற்கு

என்றே நிதிஒதுக்கம் செய்து வைத்தனர். பர்ஷியாவைச் சேர்ந்த இந்திய வேட்டை நாய்களும், அவைபோலும் வேறு நாய்களும், தாலமி, பிலடெல்பாஸ் வெற்றி ஊர்வலத்தில் காணப்பட்டதாக, திரு. ஸ்டெசியாஸ் (Ctesias) குறிப்பிடு கிறார். கொடிய கரடியோடு நடத்திய போராட்டத்தில், தன் தலைவனைக் காப்பதற்காகத் தன் உயிரைக் கொடுத்த 'டவ்ரான்' (Tawron) என்ற வேட்டைநாய் குறித்துப் பாடிய இரண்டு கையறு நிலைச் செய்யுள்கள் எழுதப்பட்ட கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த, நாணற்புல் தாளினாலான கையெழுத்துப்படி ஒன்றும் கிடைத்துள்ளது". (Warmington. Page : 149). தென் இந்திய வேட்டை நாய்கள், அவற்றின் முரட்டுத்தனத்திற்காகவே நன்கு தெரிந்திருந்தன. பொதுவாக அவை, "கதநாய்" (கடுஞ்சின நாய், விரைந்தோடும் நாய்) என்றே அழைக்கப்படும். ("கத நாய்வடுகர்" அகம் : 107 : 11) அவை, சங்கிலியால் கட்டப்பட்டிருக்கும். அவ்வாறு நாய் கட்டப்பட்டிருக்கும் வீட்டினுள் எவரும் எளிதில் புக இயலாது. காவலில் அத்துணைக் கடுமையானது நாய். ("தொடர்படு ஞமலி" புறம் : 743) "தொடர் நாயாத்த துன்னரும் கடிநகர்" (பெரும்பாணாற்றுப்படை - 125) தாம் குறித்துச் சென்ற பகைவர்களைத் தப்பாது வெற்றி கொள்ளவல்ல வீரர்களுக்குத் தான் குறித்த விலங்குகளைத் தப்பாது கொள்ளும் வேட்டை நாயை உவமை கூறுமளவு தென்னாட்டு வேட்டை நாய்கள் சிறந்தனவாக மதிக்கப் பட்டன. "செல்நா அன்ன கடுவிறல் சுற்றமொடு கேளாமன்னர் கடிபுலம் புக்கு". (பெரும்பாண் : 139-140). கரடி வேட்டையில் வேட்டை நாய்கள் பயன்படுத்தப் படுதலை, "உயர்ந்த நாகமரங்கள் அடர்ந்து, கடந்து செல்வதற்கு அரிதாகி விட்ட கவர்த்த காட்டு வழியில், சிறிய கண்ணும் பெரிய சினமும் உடைய ஆண் பன்றி, சேற்றில் வீழ்ந்து புரண்டதனால் சேறு பூசப் பெற்ற முதுகில் புழுதியும் படிந்திருக்க அக்கோலத்தோடு விரைந்து ஓடிச் சுருக்கவலை விரித்த பிளப்பில் வீழ்ந்து பட்டதாக, அது கண்ட அளவே, வேட்டை நாய்கள், கூட்டமாக விரைந்து, வலையை அழித்து, பன்றி மீது பாய்ந்து கொன்று கொண்ட இறைச்சிபோக,

எஞ்சிய இறைச்சியைக் கானவர் கொண்டு செல்வர்" என்ற நற்றிணை, விளக்கமாகக் கூறியுளது :

"போகிய நாகப் போக்கரும் கவலைச்
சிறுகண் பன்றிப் பெருஞ்சின ஒறுத்தல்
சேறாடு இரும்புறம் நீறொடு சிவண,
வெள்பசிப் படஇயர், மொய்த்த வன்பு அழீஇக்
கோணாய் கொண்ட கொள்ளைக்
கானவர் பெயர்க்கும் சிறுகுடி.

- நற்றிணை : 82 : 6-11.

வேட்டுவர், காட்டில் வாழ்பவராகவும், விரைந்தோடும் மான் கூட்டத்தையும், துரத்தித் தொலைக்க வல்ல விரை வினையுடைய கடுஞ்சின நாய்களை உடையவராகவும் கூறப்பட்டு உள்ளனர். "கானுறை வாழ்க்கைக் கத நாய் வேட்டுவன்" (புறநானூறு : 33 : 1) "மான்கணம் தொலைச்சிய கடுவிசைக் கத நாய்...வேட்டுவன்". (புறம் : 205 : 8-9). வேட்டைக்குச் சென்ற தலைவன், வேட்டை முடிவுற்றதும், வேட்டை மேற்கொண்டு மூங்கிற்காட்டினுள் நுழைந்து பரவிக் கிடக்கும் தன் வேட்டுவத் துணைவர்களையும் வேட்டை நாய்களையும், வேட்டை முடிவுற்றது, வாருங்கள் என அழைக்கும் குறிப்போடு, கொம்பு எனும் ஊது கருவியை ஊதி ஒலி எழுப்புவன் :

"ஊதல் வேண்டுமால் சிறிதே, வேட்டொடு
வேய்பயில் அழுவத்துப் பிரிந்தநின்
நாய் புயிர் குறிநிலை கொண்ட கோடே"

- அகம் : 318 : 13 - 15.

முந்தைய நூற்றாண்டுகளில் தொடங்கப்பட்டுவிட்ட கிளிகள், மயில்களின் ஏற்றுமதி இந்த நூற்றாண்டிலும் தொடர்ந்தது. அதில் ஐயமில்லை, கிரேக்கர்களால் 'அஸ்பிஸ்' (Aspis) என அழைக்கப்படும் நாகப்பாம்புகள், மலைப்பாம்பு

கள், உள்ளிட்ட பாம்புகள், ஏற்றுமதி செய்யப்பட்ட பிற உயிரினங்களாம். இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட ஒன்பது அடி நீளம் பாம்பு ஒன்றை ஸ்ட்ராபோ எகிப்தில் பார்த்துள்ளார் (Warmington. Page : 157).

விலங்குதரு பொருள்கள் :

இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட மிகமிக முக்கியமான பொருள்களுள் ஒன்று தந்தம். கிரேக்கர்கள், தங்கள் நாகரிகத்தின் முதிர்ந்த நிலையில், உருவச்சிலைகளில், ஆடையால் மறைக்கப்படாத புறத்தோற்றப் பகுதிகளுக்கு, அதைப் பயன்படுத்தினர். முத்துகள், முதன்முதலில், ஜூகுர்தைன் (Jugurthine) போரின்போது, உரோமுக்கு அறிமுகம் செய்யப்பட்டுப் பாம்பே (Pompey) என்பவரால், இத்தாலியிலிருந்து கொண்டுவரப்பட்ட பெருங்குவியலால், மக்கள் நன்கு அறிந்த ஒரு பொருளாக ஆக்கப்பட்டது. "தாலமிகளின்" கருவூலங்கள், அகஸ்டஸால், திரும்பக் கொண்டுவரப்பட்டபோது, அப்பேரரசின் வீழ்ச்சியில், அவை, எல்லோர்க்கும் கிடைக்கும் எளிய பொருளாயின. முத்துகள் கிடைப்பது அரிதாகிவிட்ட சிசிரோவின் (Cicero) காலத்தில், இன்றைய நாணயம் எட்டாயிரம் பவுன் மதிப்புள்ள ஒரு முத்து 'ஹெஸோப்னன் (Aesopws) மகனால், மெதெல்லா (Metella) காதிலிருந்து கழற்றப்பட்டு, வறட்சிக் காலத்தில் ஒரு பெரும்பணத்தொகையை விழுங்கினோம் என்ற மனநிறைவு கொள்வான் வேண்டி, வேண்டுமென்றே திட்டமிட்டு விழுங்கப்பட்டது (Warmington. Page : 163 ; 168-169). கிளியோபாட்ரா, தன் மதுவில், பருகுவதற்கு முன்னர், முத்துகளைக் கரைப்பாள் என்பது நன்கு தெரிந்த ஒன்று. அரக்குவண்ணம் ஊட்டப்பெற்ற பருத்திகள் பர்ஷியாவுக்கு அனுப்பப்பட்டன. தன்னுடைய காலத்தில் பாரசீக அரசனுக்கு, இந்தியர்களால் செவ்வண்டிலிருந்து பெற்ற ஒரு வண்ணக் கலவையால் வண்ணம் ஊட்டப்பட்ட பருத்தி நூல் அனுப்பப்பட்டதாக, ஸ்தேசியாஸ் (Ctesias) குறித்து வைத்துள்ளார் (Warmington Page : 178).

எகிப்திய ஆவணங்கள், பட்டைக் குறிப்பிடவில்லை. ஆகவே, பட்டு, தாரியஸ் (Dariws), ஜெர்ஸெஸ் (Xerxes) களின் பேரரசின் மூலமாகவே, மத்திய தரைக்கடல் பகுதியை அடைந்தது. அதன் உற்பத்தி பற்றிய சரியான விளக்கத்தை அரிஸ்டாட்டில் கொடுத்துள்ளார். பட்டு தார்களில் சுற்றப்பட்டு, அரிஸ்டாட்டில் காலத்திற்கு முன்பே இறக்குமதி செய்யப்பட்டது. டயரிலும் (Tyre) மற்ற இடங்களிலும், உடைகளாகத் தைக்கப்பட்ட நிலையில் பிளைனியின் கூற்றுப்படி, "ஒரு பெண்ணின் உடலை மூடும் அதே நிலையில், அவளுடைய இயற்கை அழகை வெளிப்படுத்தவல்லதான, உள்ளிருப்பதை வெளிக்காட்டும் மெல்லிய வலைநிகர் ஆடைகள் நெய்யப்பட்டன. (Schoffi Periplus, Page : 264-265) கிரேக்க உரோமானிய எழுத்தாளர்களிடையே, பருத்திக்கும் பட்டுக்குமிடையே சிறிது கருத்துக்குழப்பம் இருந்தது. அவர்கள், அவ்விரண்டையுமே, "மரம் தரு விலங்குமயிர்", (Tree wool) என அழைத்துள்ளனர்.

மரவினம்தரு பொருள்கள் :

இந்திய ஆடைகள், பாலஸ்தீனியரால், பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்டதற்கிடையில், இந்தியப் பஞ்சு, அரசு நூற்பு ஆலைகளையும், சாயத் தொழிற்சாலைகளையும், பேரரசுகள், நிறுவியிருந்த ஒரு சில மதகுருக்களாலும் செயல்பட்டு வந்த, எகிப்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. எகிப்தியர், பருத்தியையும், நார் இழைகளையும் ஒன்று கலந்து பருத்தி ஊடிழையாகவும், நார், பாவு இழையாகவும், கொண்ட ஆடைகளை நெய்தனர். இந்தியப் பஞ்சு, எகிப்தில், பல்வேறு புனிதப் பணிகளுக்கும் பயன்படுத்தப்பட்டது. பல்வண்ணம் ஊட்டப்பட்ட பருத்தி நூல்கள் பனோபிலிஸில் உள்ள (Panoplis) மெம்பிஸ் (Memphis) அருகே காணப்பட்டன. அந்நூல்களில் ஒரு சில, அவற்றின் வடிவமைப்பில், இந்தியக் கூறுகளைக் கொண்டுள்ளன (Warmington Page : 212).

இலவங்கம், எகிப்திற்காக என்றே, சிறப்பாக ஒதுக்கப் பட்டது போலவே, மிளகு, பாபிலோனியா, பாரசீக

வளைகுடா, வாணிகங்களில், வழக்கத்திற்கு மேலான தேவைப்படுபொருளாக இருந்தது. அதனுடைய விறு விறுப்பான பெருந்தேவை, "தாரியஸ்" (Darius) ஆட்சியின் கீழ்ப் பாரசீகப் பேரரசு விரிவடைந்தபோது ஏற்பட்டது எனக் கருதுவதற்குக் காரணம் உளது. இந்த வாணிகம், தென் இந்தியக் கப்பல்களில், கடல் வழியாக நடைபெற்றது. நில வழியாக அன்று, எதோப்பியரின் (Aethopians) மேனி நிறத்தைப் பெரிதும் ஒத்த நிறம் வாய்ந்தவர்; தெற்கில், பாரசீகத்திலிருந்து வெகுதொலைவுக்கு அப்பால் குடிவாழ்பவர், தாரியஸுக்கு என்றும் பணியாதவர் என்ற அளவிலேயே ஹெரோடட்டஸ், (Herodotas) திராவிடர் களைப் பற்றி அறிந்துள்ளார். (Scoff's Periplus. Page 213) பார்த்தியா (Parthia) வின் குறுக்காக நடைபெற்ற நில வாணிகமும், தாலமிகளால் ஊக்கம் ஊட்டப்பட்ட கடல் வாணிகமும், அறுதியிட்டுக் கூறமாட்டா. ஆண்டாண்டு காலமாக, ஏற்கனவே, நடைபெற்றுவந்த இலவங்கம், மற்றும் மணப்பொருள்களின் வாணிகத்தின், பெருமளவிலான பெருக்கிற்கு வழிசெய்து விட்டன. உரோமுக்குத். தேவைப் படும் மிளகை, இக்கால கட்டத்தில், பொயினீஷியர்களும், கார்த்திகினியர்களும் வழங்கி வந்தனர். கி.மு. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவரும், இந்திய மருத்தியல் முறைகளைக் கையாண்டவருமான 'இப்போ கிராட்ஸ்' (Hippocrates) என்பார், மிளகை, "இந்திய நிவாரணி"- (Indian remedy) என அழைக்கிறார். (Warmington. Page 182) அது, குளிர்காய்ச்சலுக்கும், வெப்பக்காய்ச்சலுக்கும், பயன் படுத்தப்பட்டது. மக்கள், மரபுவழிப் பழக்க வழக்கம் குறித்த ஆராய்ச்சியில், 'ஹெரோடோடஸ்' (Herodotus) அவர்களுக்கு, இது பற்றிக் குறிப்பிடுவதற்கு எதுவும் இல்லை. என்றாலும், கி.மு. நான்காம் நூற்றாண்டில், 'தியோப் ரஸ்டஸ்' (Theophrastus) அதை ஒரு மருந்தாக அறிந்துள்ளார். டியோஸ்கோரிடஸ் (Dioscorides) கருப்பு, வெள்ளை, வால்மிளகுகளுக்கிடையிலான வேறு பாட்டை உணர்ந்துள்ளார். (Scoff's Periplus. Page 213). இஞ்சியும் மேலைநாடுகளை அடைந்து மருந்தாகப் பயன்படுத்தப்

பட்டது. ஆனால், அது ஓர் இந்திய உற்பத்திப் பொருள் என்பதை, மேலைநாட்டவர் உணர்ந்து கொள்ளா வகையில், வெற்றிகரமாக மறைத்துவிட்ட அராபிய இடைத் தரகர்களால் கொண்டு செல்லப்பட்டது. (Warmington Page: 184). கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில், ஏன், அதற்கு முன்பேயும் எள்ளெண்ணெய், கிரேக்கர்களுக்கு நன்கு தெரிந்திருந்தது. அது இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்டது. தாலமிகள் காலத்தில், அது மதிக்கத்தக்க முக்கியத்துவம் உடையதாகி விட்டது (Warmington Page : 206). கிரேக்கக் கோயில்களில் தேங்காய்கள், அதிசயக் காட்சிப் பொருளாக வைக்கப் பட்டிருந்தனவாதலின், கிரேக்கத்திற்குத் தேங்காய்களும் அனுப்பப்பட்டதாகத் தெரிகிறது (Warmington Page : 217). ஸோபோக்கெல்ஸ் (Sophocells). அரிசி அடைகள் பற்றிப் பேசுகிறார். ஆகவே, கிரேக்கர், அரிசியையும், அதன் பெயரை யும் தமிழ்நாட்டிலிருந்து பெற்றனர். பல்வேறு பயன் கருதி மரங்களும் ஏற்றுமதி செய்யப்பட்டன. மித்ரிடேட்ஸ் மீது (Mithridates) கொண்ட வெற்றி குறித்து எடுத்த விழாவில் இந்தியக் கருங்காலி மரத்தைக் காட்சிப் பொருளாகக் காட்டினான் பாம்பே (Pompey). இந்தியக் கருங்காலி மர வாணிகம் நெடிது நிலைபெற்றிருந்த ஒன்று. இதுவும், மற்ற மரங்களும் பாரசீக வளைகுடாப் பகுதிக்கு, இந்திய வணிகர்களால், கொண்டு செல்லப்பட்டன. கருங்காலி, நாற்காலி, மேசை போலும் தட்டுமுட்டுப் பொருள் களுக்காகவும் உருவச்சிலைகளுக்காகவும் பயன்படுத்தப் பட்டது. இந்தியாவிலிருந்து, குறிப்பாக மலபார், கர்னாடகம், திருவாங்கூர் மற்றும் வேறு சில இடங்களிலிருந்து வந்த, தேக்கு மரங்களைக் கொண்டு, பாரசீக வளைகுடாவில் ஆட்கள் கப்பல்கள் கட்டுவதைத் தியோப்ரஸ்டஸ் காட்டு கிறார். (Warmington Page : 213 -214) "மடரடா" (Madarata) என அறியப்பட்ட, தைத்த படகுகள் என அழைக்கப்பட்ட, அராபியரின் படகுகள், தென்னை நாரினால், அதாவது தேங்காய் மட்டைகளிலிருந்து எடுத்த நாரினால் கட்டப்பட்டன (Scoff's Periplus Page : 154). இக்கால கட்டத்தில் பல்வேறு வகையனவான இந்தியக் கற்கள், மேலை

நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன என்றாலும் இந்த வாணிகம், அடுத்த கால கட்டத்திலேயே பெரிய அளவைப் பெற்றது.

அர்மினியாவில் ஓர் இந்திய வழிபாட்டு முறை :

மேற்கு ஆசியாவுடனான இந்த வாணிகத்தின் ஒரு வியத்தகு விளைவு இங்கே விளக்கப்படும். அது, அர்மீனியாவில், ஓர் இந்திய வழிபாட்டு முறையின் நுழைவாகும். அர்மீனியாவைச் சேர்ந்த "அரஸசிடே" (Arsacide) மரபின் முதல் மன்னனாகிய, முதலாம் வளர்ஷக் (Valarshak) (கி.மு. 149-127) காலத்தில், இரு இந்தியத் தலைவர்கள், இயூப்ரட்ஸ் ஆற்றின் மேற்குக்கரையில், வான் (Van) என்ற ஏரிக்குத் தெற்கில், ஒரு புதிய குடியிருப்பை நிறுவிக் கிருஷ்ணன் பலதேவன் (அர்மீனிய மொழியில் முறையே கிசனி (Gisani), தெமெதெர் (Demeter) வழிபாட்டிற்காகக் கோயில்களைக் கட்டினர். இது, வட இந்தியாவிலிருந்து வந்த, ஆரிய வழிபாட்டு முறையின் பெருக்காகுமா? மிக உறுதியாக இல்லை. கிருஷ்ண பலதேவர்கள், திருமாலின் அவதாரங்களாம் எனப் புராணங்கள் கூறினாலும், இவ்விரு கடவுள்களையும் ஒருசேர வழிபடும் தனிவழிபாட்டுமுறை, வட இந்தியாவில் எக்காலத்திலும் இருந்ததில்லை. ஆனால், பழந்தமிழ் இலக்கியங்கள், இதற்கான எண்ணற்ற அகச்சான்றுகளை அளிக்கின்றன. இவர்களில், முன்னவன் மாயோன் என்ற பெயரால், முல்லைநிலக்கடவுளாவன் கலப்பையைப் படைக்கலனாகவும், பனையைக் கொடியாகவும், கொண்ட, வெண்ணிறக் கடவுள் எனும் பொருளில் வாலியோன் அல்லது வெள்ளையோன் எனப்படும் பின்னவன் தொடக்கத்தில் உழவுத்தொழில் முதலில் தொடங்கப்பட்ட முல்லைக்கும், மருதத்துக்கும் இடைப்பட்ட நிலத்தின் கடவுளாவன். முன்னவன் கருப்பு வண்ணமும், பின்னவன், வெள்ளை வண்ணமும், தமிழ்ப் புலவர்களின் விருப்பத்திற்குரிய அணிநலங்களாம். "கடலில் வளரும் வலம்புரிச் சங்கை ஒக்கும் நிறம் வாய்ந்த, கொலை விரும்பும் கலப்பையையும் பனைக்கொடியையும் உடையவன்" என்றும்,

"மாசு போகக் கழுவப்பட்ட அழகிய நீலமணி போலும் நிறம் வாய்ந்த, வானுற உயர்ந்த கருடக்கொடி உடைய, என்றும் வெற்றியே விரும்புவோன்" என்றும், அவர்கள் முறையே பாராட்டப் பெற்றுள்ளனர்.

"கடல்வளர் புரிவளை புரையும் மேனி,
அடல்வெம் நாஞ்சில் பனைக்கொடி யோனும்,
மண்ணுறு திருமணி புரையும் மேனி,
விண்உயர் புட்கொடி விறல்வெய் யோனும்."

- புறநானூறு : 56 : 3 - 6.

"பால்போலும் வெண்ணிறம் வாய்ந்தவன்; பனைக் கொடியுடையான்" என்றும், "நீலமணியின் நிறம் வாய்ந்த திருமேனியுடையான்; ஆரியப்படையுடையான்" என்றும் அவர்கள் மேலும் பாராட்டப் பெற்றுள்ளனர்.

"பால் நிற உருவின் பனைக்கொடி யோனும்,
நீல்நிற உருவின் நேமி யோனும்"

- புறநானூறு : 58 : 14 - 15.

இவ்விருவர்களின் மேனி நிறங்களுக்கிடையிலான மாறுபாடு, உவமை அணிகளாகப் பரவலாக ஆளப் பட்டுளது. எடுத்துக்காட்டுக்கு : "மாயோன் அன்ன மால் வரைக் கவாஅன்; வாலியோன் அன்ன வயங்குவெள் ளருவி, (நற்றிணை : 32: 1-2). இராமாவதாரம் தவிர்த்து, திருமாலின் அவதாரங்களில், வேறு எதுவும் பழந்தமிழ் இலக்கியங்களால் குறிப்பிடப்படவில்லையாதலின், இவ்விருவரும், தென் இந்தியாவில், திருமாலின் அவதாரங்களாக அறிமுகம் ஆனவரல்லர்). பலதேவன், எப்போதும் பனஞ்சாறு பருகி வெறிகொண்டு கிடப்பன். பனைமலிந்த பகுதியில், அவன் வளர்ச்சிக்கு அது பொருந்தும், பனை, கங்கை வெளியில் வளர்வதில்லையாகவே, பலதேவ வழிபாடு கங்கைக் கரையில் உருவாகியிருத்தல் இயலாது. கடலுக்கு வெகு தொலைவில் அல்லாத, தென்னாட்டு ஆற்றுப் பள்ளத்தாக்குப் பகுதியிலே யே அவ்வழிபாட்டுமுறை தோன்றியிருக்க வேண்டும்.

பலதேவனுக்கு எனக் கட்டப்பட்ட கோயில்கள் வடநாட்டில் இருப்பதாக நாம் கேள்விப்பட்டது இல்லை. ஆனால், காவிரிப்பூம்பட்டினத்திலும், மதுரையிலும் அவனுக்கான கோயில்கள், கிருஷ்ணன் கோயிலை அடுத்தடுத்துக் கட்டப்பட்டுள்ளன.

"வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன்கோயிலும்"

- சிலப்பதிகாரம் : 5 : 71 - 72.

"புகர் வெள்ளை நாகர்தம் கோட்டம்"

- சிலப்பதிகாரம் : 9 : 10.

பலதேவன் திருமாலின் படுக்கையாம் அரவின், மறுஅவதாரம் என்ப. அவ்வரவு நாகர்களைத் தம்மோடு இரண்டறக் கொண்டு நாகராகி விடவே, அதுவும் திருமால் வழிபாட்டு நெறியில் இடம் பெற்றுவிட்டது. இவை புகார் நகரத்துக் கோயில்கள், மதுரையில் "மேழி வலன் உயர்த்த வெள்ளை நகரமும்" (சிலப்பதிகாரம் : 14 : 9). இவ்வெடுத்துக் காட்டுக்கள் எல்லாம், பிற்கால இலக்கியங்களிலிருந்தது என்றாலும், அக்கால கட்டத்திலும், வடநாட்டில் பலதேவனுக்குக் கோயில் இல்லை. இவ்வெள்ளைக் கடவுள், தெற்கில்தான் முதன்முதலில் எழுந்தான் என்ற முடிவிற்கு வலிவூட்டுகிறது. தமிழ்நாட்டின் சில, சாதியரிடையே "வெள்ளையன்", "வெள்ளான்" என்ற பெயர்கள், இன்றும் பரவலாக இடம் பெற்றுள்ளன. வெள்ளைக் கடவுள் வழிபடப்பெற்று, அவன் பெயர், அவனை வழிபடுவார் மக்களுக்கு இடப்பட்ட காலம் தொட்டு வழக்கில் வந்திருக்க வேண்டும்). இக்கோயில்களே அல்லாமல் கிருஷ்ணன், பலதேவன் ஆகிய இருவரின் தெய்வத் திருமேனிகள் அடுத்தடுத்து இடம் பெற்றிருக்கும் கோயில்களும் உள. அத்தகைய கோயில்களுள் ஒன்றாகிய, மதுரைக்கு வெகு தொலைவில் இல்லாத திருமாலிருஞ் சோலைக்கோயில், பரிபாடலில், பதினைந்தாவது பாட்டில் மிக விரிவாக விளக்கப்பட்டுளது. அது, எடுத்துக்காட்டுவதற்கு இயலா, நெடும்பாட்டு, மேலும் நாம் ஆராய்ந்து கொண்

டிருக்கும் காலத்திற்குப் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்தது. அப்பாட்டில் விளக்கப்பட்டிருக்கும் பலதேவன் தெய்வத்திருமேனி, இப்போது காணாமல் போய்விட்டது. திருமால் வழிபாட்டாளரின் மதிப்பீட்டில், பலதேவன், குறைந்த நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்ட காலத்தில், அக்கோயில் இடித்துப் புதிதாகக் கட்டப்பட்டிருக்கக் கூடும். இன்றும் அழியாமல் இருக்கும் ஒருசில கோயில்களில், பலதேவன் திருமேனி, இன்றும் நிற்கிறது. அவை, பிற்காலச் சமய வெறியர்களின் அழிவிலிருந்து தப்பிவிட்டன போலும்.

அந்த இணைந்த வழிபாட்டு முறை, அர்மீனியாவுக்கு வடநாட்டிலிருந்து சென்றதா, தென்னாட்டிலிருந்து சென்றதா என்பது விடையிறுக்க முடியாத நிலை இருக்கும்போது, அது, கொடிய வன்முறைச் செயல் ஒன்றுமூலம் அழிவுற்றுப் போய்விட்டது. கிறித்துவச் சமயப் பிரசாரகர், முனிவர் கிரிகோரி என்பவர் (St. Gregory) கி.பி. நான்காவது நூற்றாண்டில், புறச்சமயத்திற்கு எதிரான தம்முடைய கொடிய வெறுப்பு காரணமாக, விஷப் (Vishap) எனும் இடத்திலிருந்த இந்தியர் குடியிருப்பிற்கு எதிராகக் கிறித்துவப் பெருங்கூட்டம் ஒன்றிற்குத் தலைமை தாங்கிச் சென்றார். அதன் விளைவாக நிகழ்ந்த சண்டையில், தலைமை அர்ச்சகர்கள் வெட்டித் தள்ளப்பட்டனர். தெய்வத் திருமேனிகள் உடைத்து நொறுக்கப்பட்டன. கோயில்கள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. அவை நின்ற இடங்களில் மாதாகோயில்கள், கட்டப்பட்டு, சிலுவைகள் நிறுவப்பட்டன. ஆங்குக் குடிவாழ்ந்தவர்களில், ஐயாயிரத்துக் கும் மேற்பட்டவர் கிறிஸ்தவராக மதம் மாறிவிட்டனர். தம் சமயக் கோட்பாட்டைக் கைவிடாமல் விடாப்பிடியாக இருந்த, அர்ச்சகர்களின் மக்கள் நானூற்று முப்பத்தெட்டுப் பேரும், கோயில் பணியாளர்களும், மொட்டை அடிக்கப் பட்டு, தொலைநாடுகளுக்குத் துரத்தப்பட்டு விட்டனர். [J. R. A. S. 1904 ; Page : 309 - 314. Kennedy]

தூரக்கிழக்கு நாடுகள் உடனான தென்னிந்தியக் கடல் வாணிகம், இன்றும் தொடர்ந்து நடைபெற்றுவரும் மக்கள்

குடிபெயர்ச்சியின் தொடக்கத்திற்கு வழிவகுத்தது. படைத்துணைத்தலைவர், திருவாளர் கெரினி (Gerine) அவர்கள், கிறித்துவ ஆண்டு தொடக்கத்திற்குப் பல, நூற்றாண்டுகளுக்கு முன்பே, வடஇந்தியாவிலிருந்தும், தென் இந்தியாவிலிருந்தும், வணிகர்களும் புதிது காணும் உள்ளஆர்வம் மிக்கவர்களுமான இப்பெரும் வெள்ளம், இந்தோ சீனாவுள் பாயத் தொடங்கி, நிலவழியாகப் பர்மா மூலம், அத்தீவகற்பத்தின் வடபகுதியையும், கடல்வழியாக, அதன் தென் கடற்பகுதியையும் அடைந்து, ஆங்கே, தங்கள் குடியிருப்புகளையும், வணிகநிலையங்களையும் நிறுவின" என்று கூறியுள்ளார். (J. R. A. S. 1904. p. 234-37) பழைய இந்தியர்களின் இந்நடமாட்டம் குறித்த விரிவான விளக்கத்திற்கு, மேலே கூறியதைக் காண்க.) பிராமணர்களும் பௌத்தர்களுமாகிய ஆரியர், பண்டைய இந்திய நாகரிகத்தையும், தமிழர், வாணிகத்தையும் இங்குக் கொண்டு சென்றனர். சுவர்ண பூமியின் எல்லைக்கு அப்பால், பண்டைக்காலத்தில் பெரிய வணிக மையமாக விளங்கிய மார்தபன் (Martaban) எனும் இடத்திற்கு அணித்தாகத் "தக்கோலம்" என்ற இடத்தை, மிலிந்தா பன்ஹ (Milindapanha) குறிப்பிடுகிறது. அவ்விடத்தின் பெயர், சென்னைக்கு அணித்தாகக் கி.பி. பத்தாம் நூற்றாண்டில் ஒரு பெரிய போர் நடைபெற்ற தக்கோலம் என்ற ஊரின் பெயரை நினை வூட்டுவதாக உளது.

சீனாவின் ஆன் மரபுப் பேரரசர் (Han Emperor) ஹு-தி (Wo-ti) என்பான், இன்றைய துருக்கர்களின் முன்னோர் களாகிய ஹியுங்-நு (Hiung-Nu) என்பாரைக் கோபி (Gobi) பாலைவனத்திற்கு அப்பால் துரத்திவிட்டான். அதன்பின்னர், ஐரோப்பாவுடனான சீனப் பட்டுவாணிகம், பெரிய அளவினை எட்டிவிட்டது. இவ்வாணிகம் மேற்கொண்ட வழிகளில் ஒன்று, சூயஸ் வளைகுடாவிலிருந்து வந்த யவன வணிகர்கள், சீனப்பட்டைத் தமிழ் இடைத்தரகர் களிடமிருந்து பெற்றுக்கொள்ளும், தமிழ்நாட்டுக் கடற்கரையை ஒட்டிய வழியாம். பர்மா, மலேயா, சீனக்

கடற்கரை நாடுகளுடனான கடல் வாணிகம், இக்கால கட்டத்தில் வளர்ந்து பெருகிற்று. "கிழக்கிற்கு அனுப்பப் பட்ட மிக முக்கியமான பண்டம், மிளகு. மிளகு குறித்த தொடர்ந்த தேவை, உரோமில் எழுவதற்கு முன்பே, சீனாவில் இடங்கொண்டிருந்தது என்பது ஊகிக்கக் கூடியதே. மலபார் கடற்கரைக்குக் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில், ஏன், அதற்கும் முன்பாக, 'ஜங்' (Jwnk) எனப்படும் தட்டையான அடிப்பாகம் உடைய சீனக் கப்பல்கள் சென்று வந்ததற்கு இதுவும் ஒரு காரணம். (Scoff's Periplus. Page 213-14) தூரக்கிழக்கிற்கு, மிளகு மட்டுமல்லாமல் நறுமணப் புகைதரு பொருள்களும் அனுப்பப்பட்டுப், பட்டிற்கும், சர்க்கரைக்கு மாகக் கைமாற்றப்பட்டன.

♦ ♦ ♦

9. கி.பி. முதல் ஐந்நூறு ஆண்டுகளில் வெளிநாட்டு வாணிகம்

அகஸ்டஸ் காலம் :

பேரரசர் அகஸ்டஸ் காலத்தில், ரோம் உடனான இந்திய வாணிகத்தில் மிகப்பெரு வளர்ச்சி இருந்தது. பல்மைரா (Palmyra) வில், உரோமானியரின் செல்வாக்கு உயர்வும், கிழக்கு மேற்கு நாடுகளுக்கிடையிலான வாணிகத்தின் முக்கிய வாணிக மையமாம் அலெக்ஸாண்டிரியாவில், உரோமானிய ஆட்சியின் உறுதிப்பாடும், இவ்வாணிகத்தின் விளைவான வளர்ச்சிக்குக் காரணங்களாயின. பேரரசுகள் நிலைகுலைந்து போவதற்கு, முந்த முடிவாக வழிகாட்டும், தங்களுக்குள்ளே எழும் உட்பூசல், இன்னமும் தோன்றவில்லை. ஆகவே, உரோமானிய ஆடவர், மகளிர்களில், புதுநடைப்பாணித் தலைவர்களிடையே, கீழ்நாட்டு நாகரிக அரும்பெறல் இன்பப் பொருட்கள்பால், கட்டுப்பாடற்ற இன்ப வேட்கை, தலைவிரித்து ஆடலாயிற்று.

உயிர்வாழ் விலங்குகளில் வாணிகம் :

இந்தியாவிலிருந்து, உரோமப் பேரரசுக்குள் இறக்குமதி செய்யப்பட்ட வாணிகப் பண்டங்கள் பற்றி, ஏராளமான செய்திகள், அக்காலத்திய, கிரேக்க இலத்தீன் நூல்களில் உள்ளன. பாலூட்டி உயிர் வளர்க்கும் விலங்குகள், பறவைகளிலான வாணிகம், நேரிடையாக, நில வழித்தடங்கள் மூலமாக நடைபெற்றது. நவநாகரிக நங்கையர், மதராஸ் மலபார், மற்றும் நீலகிரி வாழ், இந்திய நீண்ட வால்குரங்குகளாம் அனுமான்களை, அன்பு காட்டி வளர்க்கும் ஆசைப் பொருள்களாகக் கொண்டிருந்தனர்.

லாம்ப்ஸாகோஸ் (Lampsacos) எனும் இடத்தில் கண்டெடுக்கப்பட்ட ஒரு வட்டத் தட்டில், ஒரு கிளி, வெள்ளைப் புள்ளிகளைக் கொண்ட சாம்பல்நிற ஒரு காட்டுக் கோழி, ஒரு புலி, ஒரு சிறுத்தை, அனுமான் குரங்குகள் புடைசூழ நிற்கும் ஒரு பெண்ணாக, இந்தியா உருவகம் செய்யப்பட்டுளது. இவற்றில், காட்டுக்கோழி, உண்மையில் ஆப்பிரிக்காவைச் சேர்ந்ததுதான் (Warmington Page : 147). பிற அனைத்தும் இந்திய இனங்களே. கிளாடியஸ், காட்சிப் பொருளாகக் காட்டிய இந்தியப் புலிகளின் நான்கு வகை மாதிரிவடிவங்கள், பெரிய கருத்துருவைத் தோற்றுவித்து விட்டன. கேலினஸ் (Gallienws) நினைவாக எழுப்பிய வளைவுக்கு அருகில் காணப்பட்ட, பல் வண்ணப் பட்டையொட்டு வழுவழுப்பான பகுதியில், தங்கள் விலங்கிரையைத் தின்னும் நான்கு புலிகளின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. பெட்ரோனியஸ் (Petroniws) அவர்கள் நூலின் ஒரு பகுதி, நீரோவின் ஆட்சின்போது, பொன்கம்பிகள் கொண்டு காப்புச் செய்யப்பட்ட கூண்டில் இட்டுத் தூக்கிச் செல்லப்பட்டு, அகப்பட்டுக் கொண்ட மனிதர்களின் குருதியால் தெவிட்டுமளவு ஊட்டப்பட்ட ஒரு புலியைக் குறிப்பிடுகிறது (Warmington Page : 148). டொமிடியன் (Domitian) அவர்களால் மேலும் பல காட்டப்பட்டுள்ளன. உரோமப் பேரரசுக்குள் இறக்குமதி செய்யப்பட்ட பிற இந்திய விலங்குகள், எருமையும், யானையும், ஆம். கொல்லப்பட்ட யானைகள் பல கொண்டோனாகிய அகஸ்டஸ் காலத்தில் உரோமில், வெள்ளை யானை தனிக் கவர்ச்சி உடையதாய் இருந்தது. அப்பேரரசின் ஆட்சியில், பேரரசர்களின் தேர்களை ஈர்த்துச் செல்ல யானைகள் பயன் படுத்தப்பட்டன (Warmington Page : 152).

கிளிகளின் பல்வேறு வகைகள், உரோமானிய மகளிரின், அன்பிற்குரிய கூண்டுப் பறவைகளாயின. விலை உயர்ந்த மாணிக்கக் கற்கள் மீது பெருமளவில் செதுக்கப்பட்டன. "அகஸ்டஸ் காலத்தில், அவை பிரம்புக் கூண்டுகளில் வைக்கப்பட்டன. ஆனால் மார்த்தியால் (Martial), ஸ்டேடியஸ்

(Statius) ஆகியோர் காலத்தில், தந்தத்தாலான கூண்டுகளில், அல்லது தூரக்கிழக்கு நாட்டவரால் அளிக்கப்பட்ட உரோமானிய நாகரிகத்தின் உண்மையான படப்பிடிப்பை உணர்த்தவல்லதான, தந்தத்தால் அணி செய்யப்பட்ட, வெள்ளிக் கம்பிகள் துணை கொண்டு ஆமை ஓட்டினாலான கூண்டுகளில் வைக்கப்பட்டன. இரண்டாம் நூற்றாண்டில் இவற்றின் வருகை பெருகி விட்டது. பௌஸனியாஸ் (Pawsanias) என்பவர், இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட கிளிகள் பற்றியும், இயல்பில் திரிந்த வியத்தகு விந்தை உயிரினங்கள் பற்றியும் கூறியுள்ளார். எல்கபாலுஸ் (Elgabalws) என்பார், கிளிகளின் தலைகளைக் கொண்டே, ஆடம்பர விருந்து மேசையை உருவாக்கக் கூடுமளவும், தம்முடைய சிங்கம் மற்றும் பிற விலங்குகளுக்கு உணவு அளிக்கக் கூடுமளவும், கிளிகளைப் பெரும் எண்ணிக்கையில், பெற்றிருக்கும்போது, அரையன் (Arriyan) என்பார் அப்பறவைகள் பற்றி விரித்துக் கூற மறுத்துள்ளார்." (Warmington. Page : 154). இந்தியாவிலிருந்து சென்ற பிற பறவைகளாவன; கிரேக்க புராணத்தில் கூறப்படும், பல நூறாண்டுக் காலம் வாழ்ந்து, தன்னைத்தானே எரித்துக் கொண்ட சாம்பலிலிருந்து மீண்டும் புத்துயிர் பெற்று வாழும் பெறற்கரிய பறவை போன்றதாக கி. பி. 47 இல், கிலாடியஸ் என்பவரால் மதிக்கத்தக்க, பகட்டுவண்ண நெடுவால் பறவையாம் மயிலும், குறுங்கோழியுமாம், ஹட்ரியன் களாலும் (Hadrian) மற்றவர்களாலும், இந்தியாவிலிருந்து பாம்புகளும், பெறப்பட்டன (Warmington Page : 155-157).

விலங்கு தரும் பொருட்களில் வாணிகம் :

விலங்குதருபொருட்கள், கடல்வழியாகக் கொண்டு செல்லப்பட்டன. தோல்களும், மெல்லிய மயிர் அடர்ந்த தோலாடைகளும் அவற்றுள் தலையாயவை. "பிளைனி அவர்கள், சீனப் பொருட்களாகக் குறிப்பிடும் இரும்பு, நுண்ணிய மெல்லாடை, தோல்கள் ஆகியவை சீனாவிலிருந்து பெறப்பட்ட பொருட்களாகக் கொள்ளப்படல் கூடாது. மாறாகக் கிளாடியஸ் ஆட்சிக் காலத்திலிருந்து கிரேக்க

வணிகர்களால் பரவலாக, வருகை தரப்பெற்ற, தென் னிந்தியாவில் உள்ள சேரநாட்டிலிருந்து பெறப் பட்டவையாகவே கொள்ளப்படல் வேண்டும்" (Warmington. Page : 157, 158). இப்பண்டங்களின் வழி மூலம் சீனாவுக்கு உரியதாக எந்த அளவு கூறப்பட்டதோ, அந்த அளவு சேரர்க்கும் உரியதாகக் கூறப்பட்டது. ஆகவே, இப்பண்டங்கள் "சேர்ஸ்" எனப் பெயரிடப்பட்டன. இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட மற்றொரு பண்டம், எருமைப் பாலிலிருந்து எடுக்கப்படும் நெய், "கி. பி. 1672-81 காலத்தவராய 'ப்ரையர்' (Fryer) என்பார், தெக்கணத்தில் இருந்த, 400 ஆண்டுப் பழமையும், மருந்தாகிப் பயன்படும் நன்கு மதிக்கற்பாடும், மிக உயர்ந்த விலையும் வாய்ந்த நெய்நிறைந்த தொட்டிகள் குறித்துக் கூறுகிறார் (Scoff's Periplws, 41, 177).

இந்தியாவிலிருந்து, உரோமுக்கு அனுப்பப்பட்ட விலங்கு தரு பொருட்களுள் மிக முக்கியமான பொருள், தந்தம், "உரோமப் பேரரசு உருப்பெற்ற அந்நாள் தொட்டு, இந்தியத் தந்தம், பரவலாகப் பேசப்பட்டது. உரோமானியர் நடத்திய தந்த வாணிகம் மிகப் பெரிய அளவிலானது என்பது, அது கொண்டு பண்ணப்பட்ட, பேரெண்ணிக்கையிலான பொருள்களாலும், பழைய எழுத்தாளர்களின் நூல்களில், அது பற்றிய குறிப்புகள், பெரு வழக்காகிவிட்ட நிலையாலும், தந்தத்திலான, இன்றும் அழியாமலிருக்கும் பொருள்களின், எண்ணிக்கையை முடிவுகாண மாட்டாமையாலும் தெளிவாகும். இலக்கியத்தில் மட்டும், அது, உருவச் சிலைகள், நாற்காலிகள், படுக்கைகள், மன்னர்கைச் செங்கோல்கள், வாளின் கைப்பிடிகள், வாளுறைகள், தேர்கள், வண்டிகள், பட்டயத்தகடுகள், புத்தக மேலட்டைகள், மேசைக்கால்கள், கதவுகள், புல்லாங்குழல்கள், யாழ்கள், சீப்புகள், அணி ஊக்குகள், ஊசிகள், துடைப்பான்கள், பெட்டிகள், பறவைக் கூண்டுகள், வீட்டின் அடித்தளங்கள் ஆகியவற்றிற்குப் பயன்பட்டதாகக் காண்கிறோம். வழக்கிறந்துபோன, ஆனால், ஆவணங்களில், பெயரளவில் இடம் பெற்றிருப்பனவற்றின், ஒன்று பலவான மாதிரிப்படிவங்களும், ஏற்கெனவே உள்ள,

குறிப்பிடத்தக்க பட்டியலோடு சேர்த்து எண்ணப்பட வேண்டும். (Warmington, Page:163). தென் இந்தியா அனுப்பிய இப்பண்டங்கள், முசிறி, நெல்கியந்தா (Nelcynda) ஆகிய இடங்களிலிருந்து அனுப்பப்பட்டன (Periplws : Page : 56). உரோமப் பேரரசின் தொடக்கத்திலிருந்தே, இந்திய ஆமை ஓடுகள் அடிக்கடி பேசப்படும் விலை உயர்ந்த தட்டுமுட்டுப் பொருட்களின், மேலாடைப் பகட்டு மெல்லொட்டுகளாகிப் பயன்படுத்தப்பட்டது. இதில் ஒரு பகுதி, இந்தியக் கடற் கரைகளைச் சேர்ந்த கடலாமைகளிலிருந்து பெறப்பட்டது. மலேயா தீபகற்பத்தைச் சூழ உள்ள கடலிலிருந்தும் பெறப்பட்டுளது (Warmington. Page : 166, 167).

உரோமப் பேரரசால், இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விலையுயர்ந்த விலங்குதருபொருள்கள், மன்னார் வளைகுடாவில் கிடைக்கும் முத்து. உரோம வணிகர், அதை வாங்கும் மதுரையும், உறையூரும் முக்கிய முத்து அங்காடிகளாம். அலெக்ஸாண்டிரியாவைச் சேர்ந்த யூத தத்துவஞானி, பிலோன் (Philon), முனிவர் பால் (St. Paul) ஆகியோர் உள்ளிட்ட, மக்களுக்கு நல்லற வாழ்வு போதிக்கும் அறவோர்கள் பலரும், பெண்டிரும், மகளிரும் முத்து அணிவது குறித்து, வெறுத்துப் புலம்புமளவு, முத்து அணிவது, மகளிரிடையே நவநாகரிகமாக ஆகிவிட்டது.

உரோமப் பொன் அழிவு :

"ஒரு சீர்திருத்தம் உண்மையில் தேவை என்றால், அது எங்கிருந்து தொடங்கப்படவேண்டும்? பெண்களின் ஆடம்பரப் பொருளாகிவிட்ட, அவ்வியத்தகு பொருளைக், குறிப்பாக நம் பேரரசின் செல்வவளம் அனைத்தையும் அறவே வற்றச் செய்யும் பயனிலாப் பகட்டுப் பொருள்களுக்கு விலையாக, வெளி நாடுகளுக்கு, நம் குடியரசின் வாரி வழங்கப் பண்ணும் - பேரணிகள், மற்றும் விலைமதிக்க ஒண்ணாச் சிற்றணிகள் பால், நம்மகளிர் கொண்டிருக்கும் மட்டுமீறிய வேட்கையை நாம் எவ்வாறு சந்திக்கப் போகிறோம்?" எனப் பேரரசர் திபெரியஸ் (Tiberiws) அவர்கள் (கி. பி. 14 - 37),

உரோமானியக் குடியரசின் ஆட்சிப் பேரவைக்குப் பொது நலன் கருதி எழுதவேண்டுவது தேவை எனக், கி. பி. 22 இல் உணர்ந்தார், (Tacitws Annals III 53). செங்கடல்மீதான அராபியர் ஆதிக்கம், பேரரசர் கிளாடியஸ் காலத்தில் (கி.பி. 41-54) முழுமையாகக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப் பட்டுவிட்டது. அவன் ஆட்சிமுடிவுப் பருவத்தில், நவரத்தினங் களுள், முத்துக் களிலான நேரிடைக்கடல் வாணிகம் பெரிதும் வளர்ந்து விட்டது. "இந்தியா, தன்னுடைய பண்டங்களைத் தொடக்க நிலை விலையைப் போல, முழுமையாக நூறு மடங்கு விலைக்கு, நம்மிடையே விற்றுவிட்டு, ஆண்டு தோறும், பத்து நூறு ஆயிரம் மதிப்புள்ள பொன்னை, நம் நாட்டிலிருந்து வற்றச் செய்துவிடுகின்றனர் என கி. பி. 70இல், பிளைனி குறைபட்டுக் கொள்வதற்கேற்ப, கிளாடியஸ், நீரோ அவர்கள் காலத்தில், இந்த வாணிகம் மிகப்பெரிய அளவிற்கு வளர்ந்துவிட்டது (Pilny Natural Histroy VI Page : 26). தமிழ்நாட்டின் அன்றைய முக்கிய இறக்குமதிப் பொருள் களாக இருந்தவை, பொன், வெள்ளி, உரோம நாணயங்கள், (அக்காலத்தில், நாணயம் அடிக்கும் கலையைத், தென் னிந்தியா வளர்த்துக் கொண்டதாகத் தெரியவில்லை). மற்றும் மது ஆகிய இவைகளாகவே இருந்தன ஆதலின், தன் நாட்டுப் பொன் அழிவு குறித்துப் பிளைனி, குறைபட்டுக் கொள்வதற்கு நல்ல காரணங்கள் இருந்தன. மலபார் கடற்கரை முதல், கிழக்குக் கடற்கரை வரையான, தமிழ்நாட்டின், அகன்று நீண்ட நிலப்பரப்பில், பல்வேறு இடங்களில், ரோம நாணயங்கள், மண்ணுள் புதைக்கப்பட்டிருந்தன.

மரவினம்தரு பொருள்களில் வாணிகம் :

தென்னிந்தியாவிலிருந்து உரோமுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மரவினம்தரு பண்டங்களில் தலையாயவை, மருந்துப் பொருள்களும், மணப்பொருள்களுமாம். பேரரசு ஆட்சிக் காலத் தொடக்க நிலையில், இந்தியாவோடு நடைபெற்ற உரோமின் கடல் வாணிகத்தில் மிளகு, வணிகப் பண்டமாக அமைந்தது. முக்கியமாக, மலபாரிலிருந்தும், திருவாங்கூரிலிருந்தும் மிளகு சென்றது. உரோமர்கள் விரும்பு

வது எனும் பொருளிலான "யவனப் பிரியா" என்றபெயர், மிளகிற்கு இடப்படுமளவிற்கு, இந்த நூற்றாண்டில், மிளகு உரோமர்களால் ஆர்வத்தோடு தேடப்பட்டது. (யவனர் என்ற சொல், இக்காலை, தமிழ், சமஸ்கிருதம் இரண்டிலும், உரோமரையும் குறிக்கும் வகையில் விரிவடைந்துவிட்டது) கருப்பு மிளகைவிட, காரம் குறைவாகவும், சுவை மிகுதியாகவும் தருவது கருதி, வெள்ளைமிளகுக்குத் தனிவிலை தரப்பட்டது. அக்காலைய சமயற்கலை நூல்களில், உப்பு, சர்க்கரைகளை விட, மிளகே முக்கியப் பொருளாகக் கூறப்பட்டது. ஆகவே, மேற்கே நோக்கிச் செல்லும் பல கப்பல்களில், பாதிப்பண்டம் மிளகாய் அமைந்தது எனக் கூறப்பட்டது (Warmington. Page : 182). இந்தியாவிலிருந்து இஞ்சியும் இறக்குமதி செய்யப்பட்டது. ஆனால், அது உணவுக்காகப் பயன்பட்டதைக் காட்டிலும் மருந்தாகப் பயன்பட்டதே அதிகம்.

மருந்து, மணப்பொருள் ஆகிய இரண்டிலும் ஏலம் பயன்படுத்தப்பட்டது. லவங்கமும் அவ்வாறே. "மலபத்திரம்" என அழைக்கப்படும் லவங்க இலையை, இந்தியப்பண்டம் என அறிந்திருந்த உரோமானியர் அதன் வேரும், அதன் பட்டையும், அந்த மரமும் ஆப்பிரிக்காவில் விளைவனவாக எண்ணியது விந்தைக்குரியது. அதன் பிறப்பின் உண்மையை, அராபிய வணிகர்கள், உரோமானியரிடம், அத்துணைத் திறமையாக மறைத்து வைத்திருந்தனர். இலாமிச்சை எண்ணெய், உயர்ந்த விலை தரப்பட்ட மற்றொரு பண்டம். இஞ்சிவேர், எலுமிச்சை வேர் ஆகியன கொண்டு இறக்கிய எண்ணெய்களும், இலாமிச்சை எண்ணெய் என்ற பட்டியலில் சேர்க்கப்பட்டு விட்டன. ரோமப் பேரரசின் வீட்சிப் பருவத்தில், சாதிக்காய், கிராம்புகளும் இறக்குமதி செய்யப்பட்டன. எள்ளெண்ணெய், ஸ்ட்ராபோ (Strabo) அவர்களால், 'தேனீக்களின் துணை இல்லாமலே, இந்திய மரங்களிலிருந்து பெற்ற தேனடை' என அழைக்கப்பட்ட வெல்லம் ஆகியவை சிறு வணிகப் பொருள்களாம் (Warmington. Page : 209).

தென்னிந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பண்டங்களில், பருத்தி உடைகள் பெரிய இனமாம். பெரிபுளுஸ் அவர்களால் "அர்கரு" (Argarw) என அழைக்கப் படும் உறையூரிலிருந்து, இன்றைய திருச்சிராப்பள்ளியிலிருந்து அனுப்பப்பட்ட "அர்கரிடிக்" (Argaritic) மென்துணி, அவற்றுள் சிறப்பானது (Warmington. Page : 59). தென் னிந்தியாவிலிருந்து பருத்தியும் ஏற்றுமதி செய்யப்பட்டது. "டையோக்லெடியன்" (Diocletion) அவர்களின் ஆணை, திணிக்கப்பட்ட மெத்தை, தலையணைகள், இந்தியப் பருத்தியிலிருந்து செய்யப்பட்டனவாகக் காட்டுகிறது. இந்திய உடைகள் பலவற்றைப் பாலஸ்தீனமும் வரவழைத்தது" (Warmington. Page : 212).

இந்தியாவிலிருந்து உரோமர்கள் இறக்குமதி செய்த மரங்களில் சில, அழகு பொருட்களாவன; சில கட்டிடங் களுக்காவன; மற்றவை, நறுமணத்தைலம், மருந்துகள் செய்யப் பயன்படும் மணம்தரு மரங்கள். முன்னதில் சிறப்பானவை, கருங்காலி, செம்மரம், தேக்குகள் (Periplws : Page : 36). பின்னவற்றில் சிறந்தன, சந்தனமரம், செஞ்சந்தன மரம், அகில், தெல்லச்சேரி மரப்பட்டை, முதலியன (Warmington. Page : 215-216). தேங்காய் எண்ணெய் ஏற்றுமதி க்குப் பெரிபுளுஸ் அவர்களும், வாழை, அரிசி, தினை, சாதிக்காய் போலும் மருந்தாகப் பயன்படும் மரம் தரு பொருள்கள், புள் ஆகியவற்றின் ஏற்றுமதிக்குப் பிளைனி அவர்களும் சான்று பகர்கின்றனர். வெற்றிலையும் பாக்கும் கூடப் பல்வேறு எழுத்தாளர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது.

கனிப்பொருள்களிலான வாணிகம் :

முசிறி, நெல்கியந்தா (Nelcynda) ஆகிய இடங்களிலிருந்து, உரோமுக்கு அனுப்பப்பட்ட, கனிப்பொருள் வகை உற்பத்திப் பொருட்களில், வைரம்தான், மிக மிக விலை வாய்ந்த பண்டம், பெரிய வைரங்கள் ஏற்றுமதி செய்யப்படுவதைப், பண்டைத் தமிழர் தடுத்து நிறுத்தினர் என்றாலும், உரோமானியர் இந்திய மாதிரி தாயத்துக்கள் என்ற வடிவில்,

பெரிய பெரிய புகழ் வாய்ந்த வைரங்களைக் கொண்டு சென்றனர் (Warmington : Page : 236). வைரம் அல்லாமல், வைடூரியம், மாணிக்கம், படிகக்கல், கோமேதகம், செந்தடங்கல் உடைய மணிக்கல் ஆகிய இவ்வினங்களும், இந்தியாவிலிருந்து பெருமளவில் ஏற்றுமதி செய்யப்பட்டன. இவை போலும் சிறந்த கற்களிலிருந்து, அகழ்ந்து செய்யப்பட்ட கிண்ணங்களுக்கு மிக்க விலை கொடுக்கப் பட்டன. ரோமானிய எழுத்தாளர்களால் இந்திய வைடூரியம் என அழைக்கப்படும் மரகதக் கல்லிலான ஒரு சின்னத்திற்கு நீரோ, பத்து லட்சம் 'செஸ்டெர்செஸ்' (Sesterces) அதாவது வெள்ளி நாணயம் கொடுத்தான் என்பதைப் பிளைனி அவர்களிடமிருந்து அறிகிறோம் (Natural History VI Page : 26). விலை மிகுந்த ரத்தினக் கற்கள் போல் தோற்றமளிக்கும், வண்ணம் ஊட்டப்பெற்ற படிகப் பாறைக் கண்ணாடிகளும், கிரேக்கர்களாலும், உரோமானியர் களாலும், இந்தியாவி லிருந்து பெறப்பட்டன. (Warmington. Page : 246.) செம்பு, மாணிக்கம், நீலங்களும் தென்னிந்தியா விலிருந்து அனுப்பப்பட்டன. அவ்வாறே, கோமேதகமும் அனுப்பப் பட்டது (Periplws : Page : 56).

"இந்திய இரும்பு எஃகுகளில், உரோமானியர் நடத்திய வாணிகம், மிகவும் முக்கியமானது. நேர்த்தியான பண்டைய மேற்கு ஆசிய நாடாம் பார்த்தியாவில் பயன்படுத்தப்பட்ட உலோகம் (Parthian Metal), உண்மையில், இந்திய உலோகமே. திரு. சௌமையஸ் (Sawmaise) என்பார், இந்திய எஃகைப் பக்குவம் படுத்துவது குறித்த, கிரேக்கரின் தனி ஒப்பந்தம் ஒன்றைக் குறிப்பிடுகிறார். ஆகவே, எஃகு செய்யும் தொழில் ரகசியத்தைக் கிரேக்கர் அறிந்திருக்க வேண்டும். உரோமானியர் இறக்குமதி செய்த மொத்த இரும்பு, இரும்பாலும், எஃகாலும் ஆன செப்பொருட்களே; செப்பம் செய்யப்படா உலோகக் கரு அன்று. திரு. கிளிமென்ஸ் (Clemens) அவர்கள் உணர்த்துவது போல், உரோமானியர், இரும்பை, அழகிய மாதிரிக் காட்சிப் பொருளாக இருக்கத்தக்க சிறப்பு வாய்ந்த பல்வகைக் கருவிகளாகப் பண்ணினர். இந்திய உலோகம் அனுப்பப்பட்ட டமாஸ்கஸ்

நகரில், அது, போர்க் கவசமாகவும் பண்ணப்பட்டது (Warmington. Page : 257, 58).

உரோமிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் :

இப்பண்டங்களுக்கு மாற்றுப் பண்டங்களாக, உரோமானியர், முக்கியமாக நாணயங்களை அனுப்பினர். பவழம், மது, ஈயம், தகரம் ஆகியவற்றையும் அனுப்பினர் (Periplus : Page : 56). ஆனால் அனுப்பியது போக, உரோம் கொடுக்க வேண்டி நின்ற பாக்கி, இந்திய வாணிகம், உரோமன் நாணயச் செலாவணியை மிகக் கடுமையாகப் பாதிக்கக்கூடிய அளவு அத்துணைப் பெரிதாகிவிட்டது. பேரரசுத் தலைநகரின் எதிர்கால வாழ்வின் மீது இவ்வாணிகம் செலுத்திய செல்வாக்கு. திரு. பெரிபுளூஸ் அவர்களால் பின்வருமாறு விளக்கப்பட்டுளது." மாற்றுப் பண்டமாகத் தருவதற்குத் தேவைப்படும் போதிய பண்டங்களை உற்பத்தி செய்யாமலே, கீழ் நாடுகளிலிருந்து செய்த, ஆடம்பரப் பொருள்களின், இந்த வரம்புக்கு மீறிய, ஊதாரித்தனமான இறக்குமதிதான், உரோம நாணயச் செலாவணியின் அடுத்தடுத்து ஏற்பட்ட மதிப்பிறக்கத்திற்கும், நிலை இறக்கத்திற்கும், இறுதியாக அதனுடைய முழு அழிவுக்கே கொண்டு சென்றதற்கும் தலையாய காரணமாம். நாட்டு உற்பத்திப் பொருள்களை விற்றுப் பெற்ற பொன், வெள்ளிபோலும் விலை மதிக்கத்தக்க உலோகங்களின் சேமிப்பு மூல்மே, உரோமின் நாணயச் செலாவணியின் தரம் நிலை நாட்டப்பட்டது. கி. பி. 272 ல் செல்வப் பெருநகராம் "தாரென்டம்" (Tarentum) நகரைச் சூறையாடிக் கொள்ளை அடித்தது: தன்னுடைய நாணயத்தைச் செம்பிலிருந்து வெள்ளிக்கு மாற்றிக் கொள்ள வழி செய்தது. கி. பி. 146 இல் கார்த்தே, (Carthage) 'கோரின்த்' (Corinth) நகரங்களின் அழிவுக்குப் பிறகு, பொன் நாணயம் பரவலான வழக்கத்திற்கு வந்தது, சீஸர் மேற்கொண்ட போர்கள் மூலம் கி. பி. 47 இல் வெள்ளிக்கும் பொன்னுக்கும் உள்ள விகிதாசாரம், இதற்கு முன் எப்போதும் இல்லாத, 1க்கு 8.9 என்ற அளவு உயர்வதற்கு ஏற்ப, பொன்வளம் பெருத்துவிட்டது. அகஸ்டஸ் காலத்தில்,

அந்த விகிதாசாரம் 1க்கு 9.3 ஆயிற்று. ஒரு பொன் நாணயம், (Awrews) 25 வெள்ளி நாணய (Denari) மதிப்புடையதாயிற்று. கிளாடியஸ் காலத்தில் இந்தியாவுக்கான கடல் வழி திறக்கப்பட்டது. ஊதாரித்தனம், பாழடித்தல்களின் ஒவ் வொரு நிலையாலும் புகழ்பெற்ற, வெள்ளி நாணயத்தில், நூற்றுக்கு 20 பங்கு செப்பு சேர்க்கப்பட்டு, அதன் மதிப்பு, ஒரு பொன் நாணயத்துக்கு 84 வெள்ளி நாணயம் என்ற நிலையிலிருந்து, 1க்கு 94 என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு விட்ட, நீரோவின் ஆட்சிக்காலம் அதன் பின் வந்தது. செப்புக் கலவை, 'ட்ராஜன்' (Trajaun) ஆட்சிக் காலத்தில் நூற்றுக்கு 30 பங்கும், செப்டிமஸ் (Septimus) 'செவெரஸ்' (Severus) ஆட்சிக் காலத்தில், 100க்கு 50 பங்காக உயர்ந்து விட்டது. இறுதியாக, கி. பி. 218-இல் 'எல்கபாலுஸ்' (Elagabalus) ஆட்சியில், அது முழுவதும் செப்பாகவே ஆக்கப் பட்டு அதன் பயனாய் ஏற்க மறுக்கும் நிலையினை அடைந்து அழிவு நிலைக்கு ஆளாகிவிட்டது. பொன் நாணயங்களும் கலப்படத்திற்கு உள்ளாயின. வாங்கிய பொருள்களுக்கு மாற்றுப் பொருள்களாக, இந்தியாவுக்குக் கொடுக்க வேண்டியப் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்பட்டுவிடவே, உள் நாட்டில், அது வழக்கற்றுப் போகலாயிற்று. அகஸ்டஸ் ஆட்சியில், உரோமப் பொன் நாணயம், ஒரு பவுண்டு பொன்னின் 40 இல் ஒரு பங்கு எடையுடையதாக இருந்தது 'டையோக்லெதியன்' (Diocletian) காலத்தில் 60இல் ஒரு பங்கு எடைக்குக் குறைந்துவிட்டது. நாணயம், அதன் நிறையள விலேயே மதிக்கப்பட்ட, 'கான்ஸ்டன்டைன்' (Constantine) காலத்தில் அது, 72இல் ஒரு பங்கு என மேலும் குறைந்து விட்டது. இழப்பை ஈடு செய்வதற்குப் புதிய பொருட்கள் உற்பத்தி செய்யப்படாத, நாட்டு முதலீட்டின் இச்சீரான வீழ்ச்சிதான், மூன்றாவது நூற்றாண்டில், ரோம் நகரை விடுத்து, தலைநகரை, நிகோமீடியா (Nicomedia) வுக்கும், சிறிது நாளைக்கெல்லாம் பைஸான்டிம்" (Byzantium) நகருக்கும் மாற்றுவதற்கு வழிவகுத்துவிட்டது. (Scoff's Periplus : Page : 219 - 220).

தென்னிந்திய துறைமுகங்கள் பற்றிப் பெரிப்ளூஸ் :

"இந்தியப் பெருங்கடலுக்கு வழிகாட்டு நூல்" (Periplus of the Eythrean Sea) என்ற நூலின் ஆசிரியர், அதை எழுதிய கி. பி. 60ல், வட இந்தியத் துறைமுகங்களே அல்லாமல், தமிழ் நாட்டுத் துறைமுகங்களையும் விளக்கியுள்ளார். மற்ற துறைமுகங்களோடு, தொண்டி, முசிறித் துறைமுகங்களையும் ஒரு காலத்தில் ஒரு பெண் தெய்வம், ஆங்கு வாழ்ந்து நீராடியதாகக் கூறப்படுதலின், தங்களுடைய எஞ்சிய வாழ் நாட்களில், அறப்பணிக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொள்ள விரும்பி, நீராடித் துறவு வாழ்க்கை வாழ்வதற்காக ஆடவர்களும், அது செய்ய விரும்பிய மகளிர்களும் வந்து வாழும் கொமரித் (ஆங்கிலத்தில் கேப்காமொரின் (Cape Comorin) தமிழில் குமரித் துறையையும் குறிப்பிட்டுள்ளார் (Periplus : Page : 58). பல்வேறு ஆகம வழிபாட்டு நெறிகளும், துறவு வாழ்க்கை முறைகளும் தோன்றியதிலிருந்து பிக்ஷுக்களும், பிக்ஷுனிக்களும், உலகத் துன்பத்திலிருந்து விடுதலை பெறுவான் வேண்டித் தென்னிந்தியக் காடுகளில், எளிதில் புகமாட்டா ஒரு கோடியில் தவம் மேற்கொண்டனர் என்பது ஏற்கனவே குறிப்பிடப்பட்டது. இன்று நிகழ்வது போலவே, கி. பி. முதல் நூற்றாண்டிலும், சாதுக்களும், சந்நியாசிகளும், குமரி முனைக்குக் கடலில் நீராடச் சென்றனர். ஒரு கன்னிப்பெண், தன்னைச் சிவன் மணந்து கொள்வதை எதிர்பார்த்து, அவளுடைய தெய்வத்திருமேனி, இன்றும் அமைதியாக நிற்கும், குமரி முனையில் காத்திருந்தாள் என்ற பழங்கதை, அத்துணைப் பழங்காலத்தில் கூறப் பட்டு வந்துளது என்பதைப் பெரிபுளூஸிலிருந்து அறிகிறோம். இப்பழங்கதை, மகாபாரதக் காலத்திலிருந்தே இருந்து வருகிறது என்றாலும், தமிழர்களில் பெரும்பகுதியினர், கி. பி. முதல் நூற்றாண்டிலும், சிவ வழிபாடு மூலம் உடலறு துன்பத்திலிருந்து விடுபடத் துடிக்கும், ஆரியர்களின் மூர்க்கத் தனமான பேராசை நெறிக்கு அடிமையாகாமல் வாழ்ந்திருந்தனராதலின், வடநாட்டுச் சிவ வழிபாட்டாளர், ஆரிய முறையிலான சிவ வழிபாட்டு நெறியைத் தமிழ்

நாட்டில் பரப்ப, இன்னமும் தீவிரமாக முயலவில்லை எனத் தெரிகிறது.

கொமரிக்குப் பிறகு, பெரிபுளூஸ் "முத்து மீன்கள் வாழும், தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளைக் கொண்டு முத்து எடுக்கப்படும், பாண்டிய அரசுக்குச் சொந்தமான கொல்ச்சி (Colchi) நகரைக் (கொற்கை நகரைக்) குறிப்பிடுகிறார் (Periplus Page : 59). கொற்கைக்கு அப்பால் உளது கடற்கரை நாடு (Coast Country) என்கிறார். அவ்வாறு கூறுவதன் மூலம், பெரிபுளூஸ், சோழ நாட்டுக் கடற்கரையைக் குறிப்பிடுகிறார். "ஆங்குள்ள கடற்கரைகளில் திரட்டப்பட்ட முத்துகளை, வேறெங்குமில்லாமல் தன்னிடத்தில் குவித்து வைத்திருக்கும் அர்காரிடிக் (Argaritic) என அழைக்கப்படும் மென்துணியை ஏற்றுமதி செய்யும், சமஸ்கிருத "உரகபுரா" என்பதன் திரிபான "அர்கரு" (Argaru) (உறையூர்) அழைக்கப்படும் உள்நாடு ஒன்றும் உளது" (Periplus Page : 59). உறையூருக்கு வடக்கில், இன்று போலவே, அன்றும் பருத்தி ஆடை உற்பத்திக்குப் புகழ்வாய்ந்த, சேலம், கடப்பை மாவட்டங்கள் உள்ளன".

பெரிபுளூஸ் ஆசிரியர், கொற்கைக்கு அப்பால் பயணம் செய்யவில்லை. கிழக்குக் கடற்கரைபற்றி, அவர் கூறுவன எல்லாம், காதுவழிச் செய்திகளே; தாலமி கூற்றுப்போல, அத்துணை ஆய்வுக்கு உட்படாத அவை, ஏற்புடையன அல்ல; கமரா, (Comera) பொதுகா, (Podwka) சோபட்மா (Sopatma) இவை, அவர் குறிப்பிடும் சோணாட்டுத் துறைமுகங்கள்; கோடிக்கரை, நெகபடாம், மற்றும் காவிரி கடலொடு கலக்குமிடம் ஆகியன, அக்காலத்தில் சோணாட்டின் சிறந்த துறைமுகங்களாக இருந்தன. கிழக்குக் கடற்கரையின் தென்பகுதித் துறைமுகங்களிலிருந்து "சொலந்தியா" (Colandia) எனப்படும் பெரிய கப்பல்கள், கங்கை, மற்றும் 'செர்ய்செ' (Cherse) அக்காலை, சுவண்ண பூமி என அழைக்கப்படும் பர்மா ஆகிய இடங்களுக்குச் சென்றதாகப் பெரிபுளூஸ் கூறுகிறார். "தமிரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்ட ஒவ்வொரு பொருளும், எகிப்திலிருந்து கொண்டுவரப்பட்ட பொருள்களின் பெரும்பகுதியும்

தமிரிக்காவிலிருந்து கொண்டு வரப்பட்ட பொருள் அனைத்திலுமான எல்லா இனங்களும், இன்றைய திருவாங்கூடரான, பரலியா (Paralia) வழியாகக் கொண்டுவரப்பட்டனவும், அந்நாடுகளில் இறக்குமதி செய்யப்பட்டன (Periplus Page : 30).

மதுரையில் ஓர் உரோமானியர் குடியிருப்பு :

இந்தக் கால கட்டத்தில் மதுரையில், உரோமானியக் குடியிருப்பு ஒன்று இருந்தது. தென்னிந்தியாவின் பல இடங்களில், பொன், வெள்ளிகள் மட்டுமல்லாமல், உரோம நாணயங்களும் காணப்பட்டதால் "மதுரையில் நகருக்கு அணித்தாக உள்ள வெற்றிடங்களிலும், வெள்ளம் வற்றிப்போகும் காலத்தில், ஆற்றுமணல் மேடுகளிலும், எண்ணற்ற செப்பு நாணயங்களும் காணப்பட்டன, அந்நகரின் பல்வேறு இடங்களில், மண் மீதும், ஆற்று மணல் மேடுகளிலும் உரோமச் செப்பு நாணயங்கள் சிதறிக்கிடப்பது, இந்நாணயங்கள், ஆங்கு, அன்றாடப் பழக்கத்தில் இருந்து வந்தன, ஆங்குக் குடிவாழ்ந்திருந்த மக்களால், கவனக் குறைவால், போடப்பட்டன அல்லது தொலைக்கப்பட்டு விட்டன என்பதை அறிவுறுத்துவதாகத் தெரிகிறது (Journal of the Royal Asiatic Society 1906 Page : 610).

இச்செப்பு நாணயங்கள், இவ்விடங்களுக்கு, உரோமானியர்களால், தங்களுடைய சொந்த உபயோகத் திற்காகவே கொண்டுவரப் பெற்றிருக்க வேண்டும், அவை, பொன், வெள்ளி நாணயங்களைப் போல, இந்தியக் கடைவீதிகளில், பொருளுக்கு விலையாகக் கொடுக்கும் நாணயமாகப் பயன்படுவதற்குக் கொண்டு வரப்பட்டிருக் காது. காரணம், அந்நாணயக்குவியலுக்குக் கப்பல்களில் இடம் காண்பது இயலாதாகிவிடும். மேலும், அக்காலத்தில், இந்தியா, தனக்கு வேண்டிய செப்பு முழுவதையும், தன் நாட்டுச் சுரங்கங்களிலிருந்தே பெற்றுக்கொண்டது; ஆகவே, இச்செப்பு நாணயங்கள், பாண்டங்களும், பிற பயனுள்ள பொருள்களும் செய்வதற்கு உருக்குவதற்காக, இறக்குமதி

செய்யப்பட்டிருக்கும் என்பதும், முன்னதைப் போலவே பொருளில் கூற்றாம். தாலமி காலத்துக்கு ஏறத்தாழச், சிறிது முந்திய காலத்தில், ரோம் நகரில் இருந்த சுவர் வண்ண ஓவியங்களிலிருந்து படி எடுத்த நிலப்படங்களாகிய 'பெயுதிங்கோரியன்' (Pewthingorian) கல்வெட்டுக்கள், மேற்குக் கடற்கரையில், முசிறிக்கு அருகில், அகஸ்டஸ் கோயில் ஒன்றை இடம் சுட்டுகிறது. தம்முடைய நில இயல் நூலை கி. பி. 150 இல் தொகுத்த தாலமி, தாம் அறிந்த செய்திகளில் ஒரு பகுதியை, இந்தியாவில் நெடுநாட்கள் வாழ்ந்திருந்த வரிடமிருந்து பெற்றதாகக் கூறியுள்ளார், இவைபோலும் உண்மைகள், உரோம வணிகர்களின் குடியிருப்புகள், தமிழ்நாட்டின் பல்வேறு வணிக மையங்களில் இருந்தன என்பதை உறுதி செய்கின்றன.

தென்னிந்தியாவில் உரோமர்கள் :

உரோம வணிகர்கள், உரோம வீரர்கள், உரோமக் கைவினைஞர்கள், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்திருந்தனர் என்பதை உறுதி செய்யவல்ல ஏராளமான அகச்சான்றுகள் அக்காலத்திய தமிழ் இலக்கியங்களில் உள்ளன. உரோம வணிகர்கள், மது, பொற்காசு ஆகியவற்றைத் தென்னிந்தியாவுக்குக் கொண்டு வந்தனர். கிரேக்கர், அந்நாட்களில், உலக நாடுகளுக்கிடையில் கொண்டிருந்த உறவு நிலையில், புறக்கணிக்குமளவு தாழ்ந்து விட்டனராதலின், தொடக்கத்தில், கிரேக்தரைக் குறிக்க வழங்கிய, யவனர் என்ற சொல், இக்காலத்தில் உரோமரையும் குறிக்கும் வகையில் விரிவு பெற்றுவிட்டது. ஒரு பாட்டு, யவனர், நல்ல குப்பிகளில் கொண்டுவந்த குளிர்ந்த, இனிய மணம் உடைய மதுவை, ஒள்ளிய வளை அணிந்த மகளிர், பொன்னால் செய்த அழகிய கலங்களில் ஏந்தி வந்து நாள்தோறும் ஊட்டிய நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறது.

"யவனர், நன்கலம் தந்த தண் கமழ் தேறல்,
பொன்செய் புனைகலத்து ஏந்தி, நாளும்
ஒண்தொடி மகளிர் மடுப்ப" புறநானூறு : 56; 18-20

இன்னொரு பாட்டு, பொன் நாணயங்கள் இறக்குமதியைக் குறிப்பிடுகிறது. அது, "சேர அரசர்க்குரிய, சுள்ளி ஆகிய, அழகிய பேரியாற்றின் வெண்ணுரைகள் சிதறி அகலுமாறு, யவனர்கள் கொண்டு வந்த, தொழிலால் மாட்சிமைப்பட்ட நல்ல கப்பல்கள், பொற்காசுகளோடு வந்து, மிளகுப் பொதிகளோடு மீண்டு செல்லும், வாணிகவளம் மிக்க முசிறித்துறை ஆராவாரத்தை"க் குறிப்பிடுகிறது.

"சேரலர்,
சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க,
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி ஆர்ப்பு" அகநானூறு 149 : 7-11

ஒரு புறநானூற்றுப்பாட்டு, "மனையில் குவிந்து கிடக்கும் மிளகுப் பொதிகளால் ஆரவாரம் மிக்க கடற்கரை கலக்கம் உறும்; கப்பல்கள் கொண்டு வந்த பொற்காசுகள், உப்பங்கழிகளில் உள்ள தோணிகளால் கரை சேரும், முழவொலி போல் கடல் முழங்கும் முசிறி" என, இவ்வாணிக வளத்தை யவனர் பெயர் குறிக்காமல் குறிப்பிடுகிறது.

"மனைக்குவைஇய கறி மூடையால்
கலிச் சுமைய கரை கலக்குறுந்து;
கலம் தந்த பொற்பரிசம்
கழித் தோணியால் கரைசேர்க்குந்து;
.....
முழங்குகடல் முசுறி" - புறநானூறு 343 : 3-10.

உரோம வீரர்கள், தமிழ்நாட்டில் நிலைபெற்ற குடியினராய்த் தமிழரசர்களின் மெய்க்காவலர்களாய்ப் பணி புரிந்து வந்தனர். அவர்கள் பின்வருமாறு விளக்கப் பட்டுள்ளனர். "இயல்பாகவே வலிகூடி, முறுக்கேறிய உடலும், அதற்கேற்ப படைக்கஞ்சாப் பேராண்மையும் வாய்ந்த யவனர், குதிரைகளை விரைந்தோட்டவல்ல, சவுக்கை,

இடையில் சுற்றிக் கொண்டு, அது புடைத்துக் காணுமாறு அதன்மேல், மகளிராடையாம் சேலை போலும் நீண்ட உடையை இடைச்சுற்றளவே இருக்குமாறு, மடித்து மடித்துப் பாவாடை போல் சுருக்கித் தைத்து உடுத்துக்கொண்டு, அதன் மேல், மெய்ம்மறைய சட்டையும் அணிந்து, கண்ட அளவே அச்சம் ஊட்டும் தோற்றம் உடைய யவனர்" என்கிறது அப்பாட்டு.

"மத்திகை வளைஇய மறிந்து வீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவரும் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவணர்"

- முல்லைப்பாட்டு : 59-61.

ஆகவே, அவர்கள் அரண்மனைகளின் வாயில் காப்போ ராகவும் பணிபுரிந்தனர். "இயல்பாகவே அகன்று உயர்ந்து காவல் உடையதான மதில் வாயிலைக் காத்து நிற்கும் காவல் தொழிலில் சிறந்த, பகைவரைத் தப்பாது கொல்லும் வாளை ஏந்திய யவனர்" என்கிறது சிலப்பதிகாரம்.

"கடிமதில் வாயில் காவலிற் சிறந்த
அடல்வாள் யவனர்" - சிலப்பதிகாரம் : 14 : 66-67

தென்னிந்தியாவில் உரோமர் இராணுவப் பொறிகள் :

வணிகர்கள், வீரர்கள் மட்டுமல்லாமல், எண்ணற்ற உரோமப் பொறியாளர்களும், கைவினைஞர்களும் தமிழ்நாட்டில் நிலைத்த குடியினராய் வாழ்ந்திருந்தனர். உரோமப் பொறியாளர்கள், தமிழ் அரசர்களுக்காகக், கோட்டை மதில்களைத் தகர்த்து அழிக்கவல்ல, உலோகப் பூணிட்ட பெருந்தூலங்களையும், மதில் வாயிற்கண் பொறித்து வைக்கப்படும், பல்வேறு தற்காப்புப் பொறிப்படைகளையும் செய்து தந்தனர். தொல்காப்பியர், போரின் ஒரு நிலையாம் உழிஞைப் போரை விளக்குங்கால், கோட்டையை முற்றுகை செய்வதும், முடிவாகக் கைப்பற்றிக் கொள்வதும் எனக் கூறியுள்ளார்.

"முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்
அனைநெறி மரபிற்று ஆகும் என்ப".

- தொல் : பொருள் : புறம் : 10.

உரையாசிரியர் நச்சினார்க்கினியர், "யவனர் இயற்றிய பலபொறிகளும், ஏனைய பொறிகளும்" என, யவனர், அக்கால அரசர்களுக்குப் படைக்கலப் பொறிகள் பண்ணித் தந்ததைக் குறிப்பிட்டுள்ளார். கோட்டை மதில்கள் பல்வேறு பொறிப்படைகள் பொருத்தப்பெற்றுப் பகைவர் எளிதில் நுழையாவாறு காக்கப்பட்டிருக்கும் என்பதைத், "திங்களும் நுழையா எந்திரப் படுபுழை" என்ற புறநானூற்றுப் பாடல் வரியும், (177 : 5) தெளிவாக்குகிறது. மதுரையில் அரசன் பெருங்கோயிலைச் சூழ இருந்த மதில் வாயிற்கண் பொருத்தப் பெற்றிருந்த பொறிப்படைகளின் பட்டியலைச் சிலப்பதிகாரம் வெளியிட்டுளது. "1) வளைந்து தானே எய்யும் எந்திர வில், 2) கரிய விரல்களை உடைய கரங்கு போலிருந்து சேர்ந்தாரைக் கடிக்கும் பொறி, 3) கற்களை உமிழும் கவண் பொறி, 4) கொதிக்கும் எண்ணெயை வாரி இறைக்கும் பொறி, 5) உருக்கிய செம்பை உமிழும் பொறி, 6) உருக்கிய எஃகை உமிழும் பொறி, 7) கல்லுமிழ் கவணுக்கு வேண்டும் கற்களைக் கொடுத்து உதவும் பொறிக் கூடை, 8) தூண்டில் வடிவில் பண்ணப்பட்டு, மதிலைப் பற்றுவாரைக் கோத்து வலிக்கும் தூண்டிற் பொறி, 9) கழுத்தில் பூட்டி முறுக்கும் சங்கிலி, 10) ஆடவர் தலை போலும் தலையுடையதான ஆண்டலைப் புள் வடிவில் இருந்து வருவார் தலையைக் கொத்தி மூளையைக் கடிக்கும் பொறி, 11) கிடங்கில் ஏறின் மறித்துத் தள்ளும் இருப்புக் கலை, 12) கழுக்கோல், 13) அம்புக்கட்டு, 14) அம்புகளை எய்யும் ஏவறைகள், 15) ஐயவித்துலாம், 16) மதிலைப் பற்றுவார் கைகளைக் குத்திப் பொதுக்கும் ஊசிகள், 17) கிச்சிலிப் பறலை போல், பாய்ந்து சென்று பகைவர் கண்களைக் கொத்தி மீளும் பொறி, 18) மதில் மீது ஏறினார் உடலைக் கொம்பால் குத்திக் கிழிக்கும் பன்றி வடிவில் நிற்கும் பொறி, 19) மூங்கில் வடிவில் நின்று அடித்து நொறுக்கும் பொறி 20) கதவுக்கு அரணாக, உள்வாயிற் படியில் நிலத்தில்

நால விடப்படும் மரங்களாம் எழு, சீப்பு, 21) கதவுக்குக் குறுக்கே பாய்ச்சப்படும் கணைய மரம், 22) ஏவுகணைகள், 23) குந்தம், 24) வேல்,

"வளைவிற் பொறியும்,
கருவிரல் ஊகமும், கல் உமிழ் கவணும்,
பரிவுறு வெந்நெயும், பாகடு குழிசியும்,
காய்பொன் உலையும், கல் இடு கூடையும்,
தூண்டிலும், தொடக்கும், ஆண்தலைப் புள்ளும்,
கவையும், கழுவும், புதையும் புழையும்,
ஐயவித் துலாமும், கைபெயர் ஊசியும்,
சென்றெறி சிரலும், பன்றியும், பணையும்,
எழுவும் சீப்பும், முழுவிறல் கணையமும்,
கோலும், குந்தமும், வேலும், பிறவும்".

- சிலப்பதிகாரம் : 5 : 207 - 217.

சீவக சிந்தாமணி சில நூறு ஆண்டுகள் கழித்து எழுதப்பட்ட நூலாயினும், அவற்றின் சில பாக்கள் ஈங்கு எடுத்துக் காட்டும் தகுதியுடையவாம். அதில் கூறப்பட்டிருக்கும் படைப் பொறிகளாவன; நூற்றுவரைக் கொல்லி; பகை வீரர்களைத் தூக்கி எறியும் பொறி, காணத் தெரியும் பேய்ப்பொறி, யானைப்பொறி, பாம்புப்பொறி, கூற்றுநிகர் கழுகுப்பொறி, சங்கிலிப்பொறி, குந்தம், புலிப்பொறி, விற்பொறிகள், கொடிய குதிரைப்பொறி, பகைவரைத் தொடர்ந்து சென்று வெட்டும் வாள், கல் உமிழ் கவண்கள், பாவை உருவிலான பொறிகள், செந்தீப்பொறிகள், செந்தழல் கொப்புளிக்க, கொல்லன் காய்ச்சிய இருப்புக் குண்டுகள், கொக்குப் பொறி, கூகைப் பொறி, தலை நெருக்குத் தூலம், உருக்கிய செப்பு, உருக்கிய இரும்புக் கொதிக்கும் எண்ணெய் இவைகளை வாரி இறைக்குப் பொறிகள், அம்பு, வேல், கற்களைத் தாமே ஏவும் பொறிகள், பன்றிப்பொறி, பாம்புப் பொறி, தானே இயங்கும் தேர்ப்படை, குரங்குப்பொறி

ஆட்டுப்பொறி, கழுத்துறுக்கும் கயறு ஆகிய இவை, யவனர்களின் பொறியியல் அறிவு துணை கொண்டு பண்ணப்பட்டன என்கின்றன அப்பாக்கள்;

"மற்றவர் மறப்படை மலைந்து மதில் பற்றின்
நூற்றவரைக் கொல்லியொடு, தூக்கு எறி பொறியும்,
தோற்றமுறு பேய், களிறு, துற்று பெரும் பாம்பும்
கூற்றமன கழுகு, தொடர் குந்தமொடு கோண்மா",

"விற்பொறிகள், செய்ய விடுகுதிரை, தொடர் அயில்வாள்,
கற்பொறிகள், பாவையன, மாடம் அடு செந்தீக்
கொற்புனை செய் கொள்ளி பெரும் கொக்கு எழில் செய்கூகை
நற்றலைகள் திருக்கும் வலிநெருக்கு மரநிலயே".

"செம்புருகு வெங்களிகள் உமிழ்வ, திரிந்த எங்கும்
வெம்புருகு வட்டுமிழ்வ வெந்நெய் முகந்து உமிழ்வ,
வம்புமிழ்வ, வேல் உமிழ்வ, கல் உமிழ்வ வாகித்
தம்புலங்களால் யவனர் தாள் படுத்த பொறியே".

"கரும்பொன் இயல் பன்றி, கதநாகம், விடுசகடம்,
குரங்கு, பொருதகரினொடு, கூர்ந்து அரிவ நுண்நூல்
பரந்த பசும்பொற்கொடி, பதாகையொடு கொதிக்கும்,
திருந்து மதில் தெவ்வர் தலை பனிப்பத் திருந்தின்றே".

- சீவக சிந்தாமணி : 101 - 104.

யவனப் போர்ப் பொறியாளர்கள் மட்டுமல்லாமல், யவனக் கைவினைஞர் பலரும் தமிழ்நாட்டில் குடி வாழ்ந்திருந்தனர். யவனத் தச்சரின் உரோமக் கைவினைஞர் வேலைப்பாடு பழந்தமிழ் இலக்கியங்களில் பரவலாகப் பாராட்டப்பட்டுளது. யவனர் இயற்றிய பாவை விளக்கின் நலம் ஊரிடத்தில் பாராட்டப்பட்டுளது.

"யவனர் இயற்றிய வினைமாண் பாவை
கையேந்து ஐயகல்".

மகத வினைஞர், மராட்டக் கம்மர், அவந்திக் கொல்லர், தண்டமிழ் வினைஞர்களோடு கூடிப் பணிபுரியும் யவனத் தச்சரை மணிமேகலை பாராட்டுகிறது.

"மகத வினைஞரும், மராட்டக் கம்மரும்
அவந்திக் கொல்லரும், யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடி".

- மணிமேகலை : 19 : 107 - 109.

கி. பி. 500க்கும் 1000க்கும் இடையில் எழுதப்பட்ட உதயணன் பெருங்கதை என்ற நூல் யவனர்களைப் பல இடங்களில் குறிப்பிடுகிறது. அது, யவனர் இயற்றிய அணிமணி, "யவன மஞ்சிகை", (காதை : 32 : 76) பாவை விளக்கு, "யவனப் பாவை அணிவிளக்கு (17 : 175) யவனர் களின் கைவேலைப்பாடு சிறக்கப் பண்ணப்பட்டமகர வீணை "யவனக் கைவினை மாணப் புனர்ந்தோர் மகரவீணை" (16 : 22 - 23) பெட்டி, "யவனப் போழை" (22 : 213) பொன்னால் ஆன தாமரை போலும் வடிவும் வனப்பும் உடையதான யவன ஆரியர் பண்ணிய வண்டி." யவனக் கைவினை ஆரியர் புனைந்தது, தமனியத்து இயன்ற தாமரை போல வையம்". (38 : 233 - 234, 239) யவனச்சேரி ஒன்று குறிப்பிடப்படுவதால், யவனர்கள் பெருந்திரளாக வந்து வாழ்ந்திருக்க வேண்டும். "ஐம்பதினிரட்டி யவனச்சேரி" (4 : 1, 8) "பயனறவு அறியா யவனர் இருக்கையும், கலந்தருதிருவின் புலம் பெயர் மாக்கள் கலந்திருந்து உலையும் இலங்குநீர் வரைப்பு : (சிலம்பு : 5 : 10 - 12).

தாலமியின் நில நூலும் தென்னிந்தியாவும் :

தாலமி, கி. பி. 150 இல் எழுதிய நில நூல் பற்றிய தம்முடைய ஆய்வுக் கட்டுரையில், தமிழ்நாடு பற்றிய விளக்கமான செய்திகளைப் பெரிபுளூஸ் கொடுத்திருப்

பதைவிட, அதிகமாக அளித்துள்ளார். தென்னாடு பற்றிய தம்முடைய அறிவினை, அவர், தென்னாடு சென்று வாழ்ந்திருந்தவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார். தென்னிந்தியா, வழி வழி சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவேந்தரிடையே மட்டுமல்லாமல், வேறு, எண்ணற்ற குறுநிலத்தலைவர்களுக்குகிடையேயும், பங்கிடப்பட்டுக் கிடந்தது; அம்மூவேந்தர்களும், ஏறத்தாழ, ஒத்த நிலையினராகவே இருந்தனர். கரிகாலனைப் போலும் சோழ அரசர்கள், தென்னிந்தியா முழுமைக்கும் தாமே ஒப்பற்ற பேரரசர் எனக் கூறிக்கொள்ளும் நிலமை அதுவரை தொடங்கப்படவில்லை என்பது, அவருடைய மதிப்பீட்டிலிருந்து நம் மனதில் இடம்பெறும் பொதுவான கருத்துகளாம். தாலமியின் கருத்துப்படி, சோழர்கள், ஓரளவு நாடோடிகளாவர். அவர்களுடைய தலைநகர், ஆர்க்காடாக இருக்குமோ என எண்ணத்தகும் நிலையினராகிய அவர்களுடைய பெயர், "சொரைடே" (Sorietae) "சொரிங்கோய்" (Soringoi) "சொரே" (Sorae) என்பதிலும், உரையூரின் மற்றொரு பெயராம் உறந்தை என்பதின் திரிபாம் "ஓரத்தொரா" (Orthora) வைத் தலைநகராகக் கொண்ட, இனப்பெயராம் என மதிக்கத்தக்க "சொர்நாஸ்" (Sornas) என்பதிலும் மறைந்துளது. தாலமி காலத்தில், பாண்டியர்களும், குறிப்பிட்ட ஒரு சிறு எல்லைக்குள்ளாகவே இருந்தனர் (Warmington Page : 114 - 115). இது ஒன்றே, மூன்று அரச இனங்களில் எந்த ஓர் அரச இனமும், ஏனைய அரச இனங்கள் மீது பேரரசு உரிமை கொள்ளும் காலம் இன்னமும் உருவாகவில்லை என்பதைத் தன்னளவிலேயே உணர்த்துவதாகும். மேலும் வடஇந்தியா பற்றி ஆராயும்போது பரவலாக, "இந்தோ-சித்தியா" (Indo - Scythia) "அபிரியா" (Ahiria) "அர்சா" (Arsa) என்பன போலும் அரசுகள் பற்றியே பேசும் தாலமி, தென்னிந்தியா பற்றிய செய்திகளில், "ஐஓயி" (Aioi) "கரெஓயி" (Kareoi) "பண்டியோனொயி" (Pandionoi) "சொரெடொயி" (Soretoi) "பட்டோயி" (Batoi) "அருவர்னொயி" (Arwvarnoi) "தொரிங்கோயி" (Thoringoi) என்பன போலும் பழங்குடியினர் பற்றியே பேசுகிறார். இது,

கரிகாலன் மற்றும் நெடுஞ்செழியன் காலங்களைப் போல, அரசர்களின் ஆட்சித்திறன் உறுதி செய்யப்படவில்லை என்பதையே உணர்த்துகிறது. வடக்கிலிருந்து வரிசைப்படுத்துங்கால் இடம்பெறும் முதல் தமிழ்நாட்டின் பெயரை, "லிமிரிக்கே" (Limyrice) அல்லது "டிமிரிக்கே" (Dymirike) என, அவர் அழைக்கிறார். இப்பெயர், தமிழகம் முழுமையும் குறிப்பதாகத் தவறாக எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆனால், பெரிபுளூஸ், தாலமி ஆகிய இரு ஆசிரியர்களுமே, சேர நாட்டை மட்டும் குறிக்கும் பெயராகவே, அதைக் கொண்டுள்ளனர். அதற்கு வடக்கே உள்ள நாடு, அவர்கள் கருத்துப்படி, பழந்தமிழ் இலக்கியங்களின் பல்வேறு இடங்களிலும், மராத்தியர் என்ற வரையறுக்கப்பட்ட பொருள் நிலையில் வரும் ஆரியர்க்கு உரித்தான "அரியகே" (Ariake) என்ற நாடு ஆகும். தமிழர்களுக்கு உரியதான "டிமிரிகே" (Dymirike) என்ற பெயர், ஆரிய நாட்டை அடுத்திருக்கும் தமிழ் மாநிலத்தை, அதாவது சேர நாட்டைக் குறிப்பதாக, வெளி நாட்டு வணிகர்களால், மேலெழுந்தவாரியாக, எடுத்துக் கொள்ளப்பட்டது. தாலமி குறிப்பிடும் இனங்களில் பெரும்பாலானவை அடையாளம் கண்டு கொள்ளக் கூடியனவே, "ஐயோயி" (Aioi) எனப் படுவார், ஆயர் ஆவர், "காரஒஇ" (Kareoi) எனப்படுவார், கரையர் ஆவர். "பண்டியோநோயி" (Pandinoui) எனப் படுவார், பாண்டியர் ஆவர். "சொரெடோயி" (Soretoi) யும், அதைத் தொடர்ந்து வருவனவும் சோழர் ஆவர். "படோயி" (Batoi) எனப்படுவார், தென்கிழக்குக் கடற்கரையைச் சேர்ந்த பரதவர் ஆவர். "அருவர்னோயி" (Arwvarnoi) எனப்படுவார், கிழக்குக்கரை மாவட்டங்களாம், தென்னார்க்காடு, செங்கற்பட்டு, வடார்க்காடு மற்றும் நெல்லூர் மாவட்டங்களைக் கொண்டு அருவா நாட்டினராக அருவாளர் ஆவர். "சொரெடோயி" (Soretoi) என்பதன் மற்றொரு பெயராகத் தாலமி அவர்கள் குறிப்பிடும் "தொரிங்கோயி" (Thoringoi) என்பது சோழர் அல்லது சோழியர் என்பதன் திரிபுச் சொல்லாம். "டிமிரிக்கே" (Dymirike) "பண்டியோநோயி" (Pandionoi) "சோரெடோயி" (Soretoi) "அருவர்னோயி"

(Arwvarnoi) என்ற நாடுகளை முறையே ஆளும், "கெரபோத்ரோஸ்" (Kerabothros) (அசோன் கல்வெட்டில் வரும் கேரள புத்ரர்), பாண்டியன் (Pandion) "சொர்னகோஸ்", (Sornagos), "பஸர்னகோஸ்" (Basarnagos) என்ற நான்கு அரச இனங்களைத் தாலமி குறிப்பிடுகிறார். கடைசி இரு பெயர்களின் ஈற்றில் வரும் "னகோஸ்" (Naguos) என்பதை "ராஜா" என்பதன் பிழைவடிவாகக் கொண்டாலல்லது அதன் பொருளை உணர்ந்து கொள்வது அறவே இயலாது. கடைசியில் வரும் அரச இனத்தைக் குறிக்கும், "பஸர்னகோஸ்" என்ற பெயர், ஒரு தமிழ் அரச இனத்தின் பெயராவது அறவே பொருந்தாது. தாலமியின் காலத்தில், "அருவார்நோயி" நாட்டைப், பல்லவர் ஆளத் தொடங்கி யிருக்கக் கூடும். அங்ஙனமாயின், "பஸர்னகோஸ்" என்பது, "பல்லவராஜா" என்ற சொல்லின் திரிபு வடிவாதல் கூடும். இவ்வரச இனங்களின் தலைநகர்கள், தாலமியால் கூடுமானவரை சரியாகவே கொடுக்கப்பட்டுள்ளன. உள்நாட்டு நகரங்களான அவை வருமாறு : கரூரைக் குறிக்கும் "கரௌரா", (Karoura) மதுரையைக் குறிக்கும் "மொதௌரா" (Modowra) உறையூர், அல்லது உறந்தை அல்லது சமஸ் கிருதத்தில் உறகபுராவைக் குறிக்கும் "ஓர்தொரா", (Orthowra) காஞ்சிபுரம், அல்லது காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள மாநிலங்கையைக் குறிக்கும் "மலங்கா", (Malanga) கடலைக் சார்ந்தனவும் உள்நாடுகளில் இருப்பனவுமாகிய எண்ணற்ற ஊர்ப் பெயர்களையும் தாலமி குறிப்பிட்டுள்ளார். அவற்றுள் சில வருமாறு : "திண்டிஸ்" (Tyndis) தொண்டி ஆகும். "மௌஸிரிஸ்" (Mowziris) முசிறி ஆகும். மரகதமும், வைடூரியமும் கிடைக்கும் "பௌனட" (lownta)புன்னாடாகும். சேர நாடாம் "டிமிரிக்கே" வில் இருக்கும் "கரௌரா" (Karoura) கரூர் ஆகும். ஐயோயி நாட்டில் இருக்கும் கொட்டியரா, கொமரியா (Kotiara; Komaria) என்பன முறையே, கோட்டாரும், குமரியும் ஆம், "கோரி" (Kory) தனுஷ்கோடி, இராமேஸ்வரம் இரண்டையும் குறிக்கும். மதுரை மட்டுமல்லாமல், பாண்டி நாட்டில் இருக்கும் "பெரிங்கரை" (Beringkarai) பெருங்கரையைக் குறிக்கும். "நிகம" (Nikama)

நாகைப்பட்டினம் அல்லது நியமத்தைக் குறிக்கும். "படொயி" (Batoi) நாட்டில் உள்ள "கல்லிகிகொன்" (Kalligikon) "கலிமிர்முனை" அல்லது தலைமன்னார் முனையைக் குறிக்கும் 'கபெரிஸ்' (Khaweris) காவிரிப் பூம்பட்டினத்தையும், "மகௌர்" (Magour) மோகூரையும் குறிக்கும். "தொரிங்கோயி" அல்லது "சொரெடோயி" நாட்டில் உள்ள "ஓர்தௌரா" குறிப்பது மட்டுமல்லாமல்" "அருவர்னோயி" நாட்டில் உள்ள, காஞ்சீபுர நாட்டின் கடல் துறையாம், மல்லை, இன்றைய மகாபலிபுரம், அல்லது காஞ்சியைக் குறிக்கும் மாவிலங்கையாம், "மலங்கா" (Malanga) வையும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் உள்ள பல ஆறுகளின் பெயர்களையும் தாலமி, குறிப்பிட்டுள்ளார். அவரால் "திமிரிகே" என அழைக்கப்படும் சேர நாட்டில், இன்று போலவே அன்றும் தலையாய ஆறாக இருந்த, முதல் ஆற்றின் பெயர், "பொய்வாய்" எனும் பொருள்படுவதாய "ஸெவுதோஸ்தோ மோஸ்" (Psewdostomos) என்பதாம் பேரியாறு, கடலோடு நேரே கலப்பதில்லை; அது, கிராங்கனூருக்கு அருகில், கழிநீரோடு கலந்து, தன் போக்கை இழந்துவிடுகிறது என்ற உண்மையை இப்பெயர் சுட்டுகிறது. அடுத்த கூறப்பட்டி ருப்பது, திமிரிக்கேவுக்குத் தெற்கில் உள்ள "பரீஸ்" (Baris) என்பதாம். இது, உறுதியாகப் பருவூர் ஆறே. அடுத்தது, "கொல்கோஹி"க்கு வெகு தொலைவில் இல்லாத "சோலென்" (Solen) என்பதாம். இது, கொற்கைக்கு அருகில் ஓடும், தாம்பிரபரணி ஆற்றின் தமிழ்ப் பெயராம் பொருநை என்பதன் பிழை வடிவேயாம். தாலமி குறிப்பிடும் அடுத்த ஆறு, காவேரியைக் குறிக்கும் "கபெரோஸ்" என்பதாம். அந்த ஆற்றின் தமிழ்ப் பெயராம் காவிரி என்பதில் இருப்பது போலல்லாமல், அதன் சமஸ்கிருதப் பெயராம் காவேரி என்பதில் இருப்பது போலவே, இச்சொல்லில் நெடில் ஏகாரத்தைக் கொடுத்திருப்பது குறிப்பிடத்தக்கதாம். காரணம். டியோன் செரிஸோஸ்டம் (Dion - Chrysostum) அவர்கள் கூற்றுப்படி, கி. பி. 100 இல் அலெக்ஸான்டிரியாவில் இருந்த பிராமணக் குடியிருப்பைச் சேர்ந்த பிராமணர்

கிடமிருந்து, அல்லது, அப்பிராமணர்கள் அறிவுரைப்படி வந்த வணிகர்களிடமிருந்து, காவிரி பற்றிய செய்தியைத், தாலமி அறிந்திருக்க வேண்டும். தென்னிந்தியாவில் அவர் குறிப்பிடும் ஆறு "டைரே" (Tyre) என்பதாம். கிரேக்க மொழியில் பகரத்திற்குப் பதில் மகரம் இடம் பெற்றுவிடுவது எளிதில் நிகழ்ந்துவிடும் பிழையாகும் ஆதலின் இது, பெண்ணையாறு என்பதன் வழக்காம் "பென்னெர்" என்பதன் திரிபே ஆகும். கடற்கரையிலும், உள்நாட்டிலும் இருந்த, பல நகரங்கள் பல வணிக நிலையங்களின் பெயர்கள், தாலமியால் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றின் இடங்களை அடையாளம் காண்பதில் ஏராளமான, தவறான கற்பனைக் கருத்துக்களெல்லாம் செலவழிக்கப்பட்டன என்றாலும், அம்முயற்சி அனைத்தும் பயனில என்பது உறுதியாகி விட்டது.

நீரோவின் இறப்பிற்குப் பின்னர் உரோம வாணிகம் :

அரியணை உரிமை குறித்து ஏற்பட்டுவிட்ட பகைமை, அது தொடர்ந்து ஏற்பட்டுவிட்ட உள்நாட்டுப் போர்கள் காரணத்தால், நீரோவின் இறப்பிற்குப் பிறகு, நவரத்தினங்கள், நனிமிகு, நேர்த்தியான மென்துணிகளிலான வாணிகம் குறையத் தொடங்கிவிட்டது. வெஸ்பாஸியன் (Uespasion) பேரரசன் ஆனதும், தேவைக்கு மேலிருந்த உயர் நாணயங்களைக் கட்டுப்படுத்தும் சட்டங்களை வெளியிட்டான். ஆடம்பர வாழ்வின் இடத்தைத் தன்னல மறுப்பு நிலை கைப்பற்றிக் கொண்டது. என்றாலும், இந்திய வாணிகம் அடியோடு அழிந்துவிடவில்லை, உரோமப் பேரரசின் புகழ் குன்றத் தொடங்கிய காலத்தைச் சேர்ந்த உரோம நாணயங்கள், தென்னிந்தியாவில் காணப் படாமையால், தமிழர், உரோமானியரோடு நடத்திய வாணிகம் கி. பி. மூன்றாம் நூற்றாண்டில், அடியோடு அழிந்துவிட்டதாகச், சில ஆசிரியர்கள் கற்பனை செய் துள்ளனர். மிளகு, பருத்தி நூல் இவைகளிலான வாணிகம் தொடர்ந்து நடைபெற்று வந்தது. ஆகவே, நிலைமை அவ்வாறு ஆகிவிடவில்லை. கி. பி. 408 இல் "அலரிக்" (Alaric), உரோம்

நகரை அழிக்காமல் விட்டபோது, 3000 பவுண்டு மிளகையும் 4000 பட்டு மேலங்கிளையும் பிணையப் பொருள்களாகக் கேட்டுப் பெற்றான் என்பதால், இது உறுதிப்படுகிறது. (J.R. A. S. 1904. Page:648). மேலும், உரோமநாணயங்கள் "கான்ஸ்டன்டைன் (Constantine)" காலத்திலிருந்து. வடநாட்டில் காணப்படுவது போலவே, தென்னிந்தியாவிலும் காணப்பட்டன. நான்கு, ஐந்தாம் நூற்றாண்டுகளில் அதன் வருகை அதிகரிக்கவும் ஆயிற்று. "ட்ராஜன்" (Trajan) போலும் கீழ்ப்பகுதியை வலிந்து கைக்கொண்ட "ஜூலியன்" (Julian) இந்திய அரச இனங்கள் உட்படப் பல்வேறு கீழ்நாட்டு மக்களிடமிருந்து தூதுவர்களை வரவேற்றிருக்கும்போது, கான்ஸ்டைன்டைன், தன்னுடைய வாழ்நாளின் இறுதி ஆண்டில், இந்தியத் தூதுவர் ஒருவரை வரவேற்றான் (Warmington. Page : 140).

கி. பி. 376 முதல் "பைசன்டைன்" (Byzantine) பேரரசர் களின் ஆட்சியின் கீழ்ப் பைசன்டைன் மக்களுக்குப் போதிய செல்வத்தைப் போலவே போதிய ஓய்வும் இருந்தது. கீழ் நாடுகளுக்கு அணித்தாக வைக்கப்பட்டமையால், இந்திய ஆடம்பரப் பொருள்களின் தேவை பெருகிவிட்டது. அதன் பயனாய்ப் பேரரசர்களின் நாணயங்கள், இந்தியாவில் காணப்படலாயின. ஏழாம் நூற்றாண்டில், அராபியர், சிரியா, எகிப்து, பர்ஷியா ஆகிய நாடுகளை வெற்றி கொண்டு மீண்டும், இந்திய வாணிகத்தின் இடைத்தரகராயினர். ஆகவே, யவனர் என்ற பெயர், மெல்ல மெல்ல, அராபியரை குறிக்கவும் வழங்கப்பட்டுப் பின்னர்ப் பொதுவாக, முகம் மதியரைக் குறிக்கவும் வழங்கப்பட்டுவிட்டது.

♦ ♦ ♦

10. காஞ்சீபுர மாவட்டம்

காஞ்சீபுர நகரம் :

கி. மு. 200 அளவில் வாழ்ந்திருந்த பதஞ்சலி, தமிழ்நாட்டில் உள்ள "காஞ்சீபுர" என்ற ஒரு நகரின் பெயரை மட்டும் எடுத்துக் கொண்டு, அந்நகரைக் குறிக்கும் சொல்லிலிருந்து, அந்நகரைச் சேர்ந்த ஒருவனைக் குறிக்கும் "காஞ்சீபுரக" என்ற பெயர்ச்சொல் தோன்றுவதற்கான இலக்கண விதிமுறைகளை விளக்கியுள்ளார். (வார்த்த பாஷ்யம் : 16 : on1 ஆண் : 4 : 11 : 104) ஒரு வட இந்தியராகிய பதஞ்சலி, "உரகபுரக" (உறையூரைச் சேர்ந்தவர்) "மதுராபுரக" (மதுரையைச் சேர்ந்தவர்) என்ற சொற்களுக்கு அல்லாமல், "காஞ்சீபுரக" என்ற சொல்லின் தோற்றத்தை விளக்குவது தேவை என ஏன் எண்ணினார்? பிற்கூறிய இரு சொற்களும் சமஸ்கிருத இலக்கியங்களில், தங்களை நிலை பெறச் செய்து கொள்ளவில்லை; ஆனால், காஞ்சீபுரத்திலிருந்து வருபவர்கள், வட இந்தியக் கல்வியாளர்களுக்கு நன்கு தெரிந்திருந்தனர் என்பதை, அவர் மிகத் தெளிவாகக் கருத்தில் கொண்டார். வட இந்தியாவுக்கும், சோழ பாண்டிய நாடு களுக்கும் இடையில், வாணிகத் தொடர்பு இருந்தது என்பது உண்மை; ஆனால், காஞ்சீபுரத்திற்கும், பாடலிபுத்திரத்திற்கும் இடையில் இருந்த, அறிவாளர்களுக்கிடையிலான தொடர்பு போலும் தொடர்பு எதுவும், தெரிந்தவரையில் இல்லை. அந்நாட்களில், சமஸ்கிருத நாகரிகத்தின் தென்கோடி எல்லை காஞ்சீபுரம். "காஞ்சீபுர" என்பது, ஒரு சமஸ்கிருதச் சொல்; அந்நகர் தமிழ்நாட்டில் இடம் பெற்றிருந்தாலும், அதற்குத் தமிழ்ப்பெயர் இல்லை. "கச்சி" என்ற பெயர், கி. பி. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த, இளந்திரையன் புகழ்பாடும் பெரும்பாணாற்றுப்படையில் இடம் பெற்றுளது.

("கச்சியோனே" : வரி : 420) கச்சி என்ற அச்சொல், ஒட்டியாணம் எனப்படும் இடையணியால் பெயர் பெற்ற நகரம் எனும் உண்மையான பொருளுடையதான "காஞ்சிபுர" என்பதன் குறுகிய வடிவமாம், "காஞ்சி" என்பதைத், தமிழ்ப்படுத்தியதன் விளைவால் வந்ததாம். "காஞ்சியூர்" என்ற சொல், பழந்தமிழ்ப் பாக்களில் இடம் பெற்றுளது. ஆனால், "காஞ்சியூர்" என்பதில் வரும் "காஞ்சி" என்பது, ஒரு மரத்தின் பெயரைத் தெளிவாக உணர்த்துகிறது. அது, காஞ்சிபுரத்தைக் குறிப்பது என்பது அறவே இல்லை.

"காஞ்சியூர!" (காஞ்சி மரங்கள் சூழ்ந்த ஊரைச் சேர்ந்தவனே; (அகம் 96 : 8) இச்சிற்றூர், சோழநாட்டில் உளது. காஞ்சி, மருதத்திணை சார்ந்த செய்யுட்களில் இடம் பெற்றுளது. "காஞ்சி நீழல் குரவை அயரும்" அகம் : 336 : 9. "காஞ்சியூரன்" என்ற தொடர் குறுந்தொகையிலும் இடம் பெற்றுளது.

"பயறுபோல் இணர பைந்தாது படீஇயர்
உழவர் வாங்கிய கமழ்பூ மென்சினைக்
காஞ்சியூரன்" - குறுந்தொகை : 10 : 2-4.

(பயற்றங்காய்க் கொத்து போன்ற பூங்கொத்திலிருந்து, பசிய பூந்தாதுக்கள், தங்கள் மேல் படியுமாறு, உழவர்கள் வளைத்த, மணம் வீசும் மலர்களைக் கொண்ட மெல்லிய கிளைகளைக் கொண்ட காஞ்சி மரங்களையுடைய ஊரன்) மலர். "நீர்த்தாழ்ந்த குறும் காஞ்சி" (18 : 7) என்ற புற நானூற்றிலும், மரம், "காமருகாஞ்சி" (351 : 11) என்ற புற நானூற்றிலும் வந்துள்ளன).

தமிழரசர்களின் பழைய தலைநகர்கள், உறையூர், வஞ்சி, மதுரை, தமிழ் மரபு, காஞ்சிபுரத்தைத் தமிழரசர்களோடு இணைக்கவில்லை. அது, தமிழ்நாட்டின் எல்லைகளுக்கு அப்பாலுக்கு அப்பாலும் இடம்பெற்று, அந்நாட்டின் மையப்பகுதியிலிருந்து நெடுந்தொலைவில் அமைந்துளது. பண்டை நாட்களில் பதினொரு தமிழ் மாவட்டங்களும் தனித்தனிப் பெயர்களைப் பெற்றிருந்ததுபோல், காஞ்சி

மாவட்டம், தனக்கென ஒரு தனிப் பெயரைப் பெற்றிருக்கவில்லை; மாறாக, இன்று, தென்னார்க்காடு மாவட்டம் என அழைக்கப்படும் "அருவா" நாட்டிற்கு வடக்கே உள்ள நாடு எனும் பொருளில், "அருவா வடதலை" என்று மட்டுமே அழைக்கப்பட்டது. பிற்காலத்தில், அதாவது, பல்லவ அரச இனம், ஆங்கு, இறுதியாகத், தங்களை நிலைபெறச் செய்து கொண்டு, அம்மாவட்டம், தமிழ் நாகரிகத்தின் நடுநாயகமாகிவிட்டதற்கு நெடுங்காலத்திற்குப் பின்னரே, அது, "தொண்டி" என்ற கொடியால் பெயர் பெற்ற அரசர்கள், அல்லது இனத்தவர்களால் ஆளப்பட்ட மாவட்டம் எனும் பொருளில் தொண்டைமண்டலம் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப் பட்டது, அதன் பின்னர்த் தென்னார்க்காடு மாவட்டம் "நடுநாடு" ஆகிவிட்டது. ஆகப் பண்டை நாட்களில், காஞ்சீபுர மாவட்டம், உண்மையான தமிழ் நாட்டிற்கு வெளியில், அருவா என்ற தமிழ் மாவட்டத்தின் வடக்கில் இருந்ததாகவே தமிழர்களால் கருதப்பட்டது என்பதை, நாம் அறிகிறோம்.

ஆந்திரர் :

இந்நிலப் பகுதிக்கு அப்பால் அமைந்திருந்தது, ஆரிய நாகரிகம், விந்தியத்தை ஊடுருவித் தஷிணபாதத்தில் பரவிய போது, அதை முதன்முதலில் ஏற்றுக்கொண்டவர்களாகிய, விந்தியத்திற்கு அப்பாலான தஸ்யூக்களாம் ஆந்திரர் ஆட்சி புரிந்து வந்த மேட்டு நிலம். ஆந்திரரிடையே, பௌதாயனர், ஆபஸ்தம்பர் என்ற இரண்டு பிற்கால முனிவர்கள் தோன்றினர். ஆகவே, அவ்வாந்திரர், கி. மு. முதலாம் ஆயிரத் தாண்டின் தொடக்கத்தில், ஆரிய மயமாக்கப்பட்டனர். விந்தியத்திற்குத் தெற்கில், மிகப்பரந்த, ஆரிய மயமாக்கப்பட்ட ஒரு பேரரசை, ஆந்திரர்கள், நனிமிகப் பழங்காலத்தில் நிறுவி யிருக்க வேண்டும். அப்படியில்லையென்றால், அவர் களிடையே, அறங்கூறும் ஆன்றோர்களின் பிறப்பை விளக்குவது மிகவும் அரிதாம்; காரணம், அறம்கூறும் ஆன்றோர்கள், அரசர்களின் அரவணைப்பு இன்றித்

தோன்றுதல் இயலாது. அசோகன், ஆந்திரர் மீது, தெளிவில்லாத ஒரு வகை மேலாதிக்கத்தைக் குறிப்பாக உணர்த்துகிறான். இது, கி. மு. நான்கு மற்றும் மூன்றாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த ஆந்திர அரசர்கள், மகாபத்ம நந்தனிலிருந்து வரும், மகதப் பேரரசர்கள், வல்லமையில் தங்களிலும் சிறந்தவர்; மரியாதைக்காகத் தங்களிடமிருந்து நன்கொடை பெற உரிமையுடையவர் என்பதை ஏற்றுக் கொண்டார்கள் என்றுதான் பொருள் படுமேயல்லாது, ஆந்திரப் பகுதி, மகதப் பேரரசின் ஒரு பகுதியாகவே ஆகிவிட்டது என்பது பொருளாகாது. மேலும், பெரும்பாலும் மெகஸ்தனிஸின் கூற்றுக்களிலிருந்து மேற்கோள் காட்டி, ஆந்திர நாடு, எண்ணற்ற சிற்றூர்கள் அல்லாமல், மதில் சூழ்ந்த நகரங்கள் முப்பதையும் 1,00,000 வீரர்கள், 2000 குதிரைகள், 1000 யானைகள் கொண்ட ஒரு பெரிய படையையும் கொண்டிருந்ததாகத், திரு. பிளைனி அவர்கள் நமக்கு அறிவிப்பதை, வி. ஏ. சிமித் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார். இச்செய்திகள், உண்மையில், மெகஸ்தனிஸிடமிருந்தே வந்தனவாயின், அது, மௌரியர் காலத்தில், ஆந்திர அரசர்கள், பரந்த, ஆற்றல் மிக்க தன்னாட்சிப் பகுதியைப் பெற்றிருந்தனர் என்பதைக் காட்டுவதாகும். அசோகன் காலத்தில், ஆந்திரர்கள், தங்கள் அரசர்களின் ஆட்சியின் கீழ்ப் பெரிதும் மதிக்கத் தக்க தன்னாட்சி உரிமையை அனுபவித்திருந்தனர் என்றும் திரு. சிமித் அவர்கள் கருதுகிறார். [V. A. Smith Early History of India. Page 217-18 and Foot note].

புராணங்கள், தங்கள் ஆந்திர அரசர்களின் பட்டியலைக் கிழுகளைக் கொண்டு தொடங்குகின்றன. இன்றைய வரலாற்று அறிஞர்கள், அவன், கி. மு. மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் ஆட்சி புரிந்திருந்ததாக எண்ணுகின்றனர். அப்படியென்றால், கிழுகளுக்கு முன்னர், ஆந்திர அரசர்கள் இல்லை என்பது பொருளா? இல்லை; காரணம், மெகஸ்தனிஸ் கூறும் ஆந்திர நாடு, அதன் சொந்த அரசர்களாலேயே ஆளப்பட்டது. புராணங்களில் வரிசைப் படுத்திக் கூறப்பெறும் கலியுக அரச இனங்கள், ஆரிய

வர்த்தத்தால் உணரப்பட்ட செல்வாக்கினையுடைய அரசர்களை மட்டுமே குறிப்பிடுகின்றன. ஆந்திரர் செல்வாக்கு, ஆங்கு உணரத்தலைப்பட்ட பின்னர்ப் புராணங்கள், கி. மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த கிமுகள் தொடங்கி, ஆந்திர அரச இனத்து அரசர்களின் பெயர்களைக் குறிப்பிடத் தொடங்கின. கிமுகளுக்கு நெடுங்காலத்திற்கு முன்பே, அதாவது, ஆந்திர நாடு, ஆரிய மயமாக்கப்பட்டு, ஆரிய வாழ்க்கைச் சட்டங்களும், பழக்க வழக்கங்களும், கி. மு. முதல் ஆயிரத்தாண்டின் தொடக்கத்தில் பரவத் தொடங்கிய அந்நாள் தொட்டே, ஆந்திரப் பேரரசுகள் நிலைபேறு கொள்ளத் தொடங்கி விட்டன.

காஞ்சீபுரத்தில் ஆரியச் செல்வாக்கு :

காஞ்சீபுர மாவட்டம், ஆந்திரப் பேரரசின் கடைகோடி எல்லை விளிம்பில், உண்மையான தமிழ் மாநிலங்களுக்குச் சற்றே வெளியில் உள்ள ஒரு நிலப்பரப்பாக இருந்தமையால், பெரும்பாலும் அந்நாள் (கி. மு. முதல் ஆயிரத்தாண்டு) தொட்டே, ஆரியச் செல்வாக்கு, அம்மாவட்டத்தின் நுழைந்து இடம் பெற்றிருக்க வேண்டும்.

நனிமிகப் பழங்காலந்தொட்டே, காஞ்சீபுரம் ஆரிய நாகரிகத்தின் கருவிடமாம் என்பது, சந்திரகுப்தனின் சிறந்த அமைச்சராம் சாணக்கியன், திராவிடத்தின் அதாவது, காஞ்சியின் குடிமகனாம் என்ற காதுவழிச் செய்தியால், உறுதி செய்யப்படுகிறது. [Turnour, Mahawamso, Page, 21. J. A. S. B. V 2; Fowlkes J. R. A. S. p. 1985 P. 209]. சாணக்கியனுக்கு, வாத்ஸ்யாயனன், மல்ல நாகன், குடிலன், த்ரமிளன், பக்ஷிலஸ்வாமி, விஷ்ணுகுப்தன், அங்குலன் எனப் பல பெயர்கள் உண்டு. (Hemachandra quoted by law Anc. Hindu Polity Page. X.XVI. V ide also K. V. Rangasamy Iyengar's Anc. Ind. Polity. Page : 87, 88). மிகப் பெரிய அந்த அமைச்சன், சந்திர குப்தனைப் பேரரசின் அரியணையில் அமர்த்த மட்டும் துணை புரியவில்லை; அர்த்த சாஸ்திரம் மற்றும், காம சாஸ்திரம், தர்ம சாஸ்திரம், மோக்ஷ சாஸ்திரம் என்ற

தத்துவங்களின் முழு வட்டத்தையும் எழுதினான் என்ற இக் காதுவழிச் செய்தியை மதிக்க மறுப்பதற்கு எவ்விதக் காரணமும் இல்லை. மேலே கூறிய பல்வேறு தலைப்புகளில் ஆன நூல்கள் அனைத்தும், தனி ஒரு மனிதனால் இயற்றப்பட்டன என்பதில் பொருத்தம் இன்மை எதுவும் இல்லை; காரணம்; விஜய நகரப் பேரரசைத் தோற்றுவித்து ஒழுங்கு படுத்தியவரும், சாணக்கியனின் அமைச்சுப் பணிகளைக் காட்டிலும், மிகப்பெரும் வகையில் மாறுபட்டதான அமைச்சுப் பணிகளைப் புரிந்தவருமாகிய மத்வாச்சாரியர், அந்நிலையிலும் நான்கு புருஷார்த்தங்கள் பற்றிமட்டுமல்லாமல், வேறு பிற பொருள்கள் குறித்தும், விரிவான ஆராய்ச்சி விளக்கங்களை எழுதக் காலத்தைக் கண்டு கொள்ளவில்லையா? இந்தியாவில் குறிப்பாகப் பண்டைக் காலத்தில் நூல்கள், இன்றுபோல் வெளியிடப் படுவது எப்போதும் இல்லை; பல தலைமுறைகள், நூலாசிரியரின் மாணவர்களின் உடைமையாக, வழிவழியாக இருந்துவந்தன; மூல நூல்களில் பழைய கையெழுத்துப் படிகளில் அவ்வக்கால நிகழ்ச்சிகளிலிருந்து, விளக்கக் குறிப்புக்களை இடையிடையே நுழைக்கப்பட்டதற்குப் பிந்திய தலைமுறைகளைச் சார்ந்த ஆசிரியர்கள்பால் குற்றமாகக் கொள்ளவில்லை; ஆகவே, காம சாஸ்திரத்திற்கு ஒரு பிற்பட்ட காலத்தை வகுக்கும் வகையில், அதில் காணப்படும் "சாதகர்ணி" போலும், அங்கொன்றும் இங்கொன்றுமான குறிப்புகள், இந்நூல்களின், சாணக்கிய னுடைய ஆசிரிய உரிமையை மறுப்பதற்குப் போதிய சான்றுகள் ஆகா. ஆகவே, பிற்காலத்தே நுழைத்து விடப்பட்ட, அங்கொன்றும் இங்கொன்றுமான சில இடைச் செருகல்களின் வலுவைக் கொண்டு, பண்டைய சமஸ்கிருத நூல்களின் காலப் பழமையைக் கணிப்பது கூடாது. சாணக்கியன், அர்த்த நியாய, காம சாத்திரங்களை எழுதினார். இராமானுஜரால், அவருடைய ஸ்ரீபாஷ்யத்தில், குறிப்பிடப் படும் "த்ரமிலாசாரியரும்" கூட இவர்தாம் என்ற கூற்றுகளின் வன்மைமென்மை எவ்வாறாயினும், அவருடைய காலத்தில், முதுபெரும் அறிஞர்களில் அவரும் ஒருவர்; கிறித்துவுக்கு

முற்பட்ட காலத்திலிருந்தே, இந்தியா முழுமைக்கும் நாகரிகத்தின் ஒளிகாட்டிகளும், இந்தியச் சிந்தனையாளர் களின் தலைவர்களுமாகிய, "நாகார்ஜுனன்" "தின்னாகர்", "புத்ததத்தர்", "தர்மபாலர்", "ஸங்கரர்", "ராமானுஜர்", "ஆனந்ததீர்த்தர்", "மாதவர்", "ஸாயனர்" மற்றும் தென் னிந்திய அறிஞர் பெருமக்களில் தலையாய நிலை பெற்றவர் என்பதும், மறுக்கப்படக் கூடியதன்று. மற்று எல்லா வற்றிற்கும் மேலாக, இந்த உண்மை, இந்நாடு, பொது நிகழ்ச்சிகளின் நிர்வாகம் குறித்து, எப்பொழுதும் ஐம்பத்தாறு நாடுகளாகப் பிரிவுண்டிருந்தாலும், இந்தியாவின் ஒருமைப்பாடு, அதன் நாகரிகத்தின் இடைவிடாத் தொடர்பு ஆகியவைகளை உறுதி செய்கிறது.

காஞ்சீபுரத்தின் பல பெயர்களுள் ஒன்று, "சத்ய வரத க்ஷேத்ரம்" என்பது. பாகவத புராணம், சத்யவரதன் (திராவிட அதாவது காஞ்சியின் காவலன்) விவஸ்வானின் மகன், மனு ஆயினன் எனக் கூறுகிறது. (பாகவதம் : 9 : 2, 3 பர்கிதர் பதிப்பு). இந்நில வரலாற்றுத் தொடரில், ஆரியராக்கப்பட்ட அரசர்களின் குலமரபைப் புராணக் கடவுள்கள் அல்லது வீரர்களின் குலமரபில் காணும், குடிவழிப்பட்டியலை விடாது உருவாக்கி வரும் பிராமணாக்களால் சூரிய குலத்தில் இணைக்கப்பட்டான் சத்யவரதன் என்பதே இதன் பொருள் ஆகும். பல்லவர் காலத்துக்கு முன்பு, காஞ்சியை ஆண்ட அரசர்கள், பெரும்பாலும், சத்யவரதன் வழிவந்தவராய சத்யபுத்திரர் எனப் பேசப்பட்டனர் என்பதைப் போகிற போக்கில் குறிப்பிடல் கூடும். அசோகனின், "சத்தியபுத்தெர" என்பார், பெரும்பாலும், அவன் காலத்தில் காஞ்சி அரசர்கள் ஆவர் (As suggested by S. V. Venkatesvara in the Indian Antiquary for 1919).

சத்யவரதர்களின் வழிவந்தவர்கள், ஆந்திரர்களின் ஆட்சிக்கு அடங்கிய குறுநிலத் தலைவர்களா, அல்லவா என்பதை உறுதிசெய்வல்ல வழிமுறை எதுவும் இல்லை. ஆனால், ஆந்திரநாடு, ஆரியமயமாக்கப்பட்ட பின்னர்க் காஞ்சீபுரம், ஆரிய நாகரிகத்தின் தென்கோடிக் காவல்

நிலையமாக ஆகிவிட்டது. பண்டைக் காலத்தில், தமிழ் நாகரிகத்தின் இடமாக அது இருக்கவில்லை என்பது உண்மை.

தமிழ் என்ற சொல்லை, வடவர்கள், "த்ரவிட" என மாற்றிவிட்டாலும் நடைமுறை வழக்கில், "திராவிடர்" என்ற அச்சொல்லைச், சோழர், சேரர், பாண்டியர்களை நீக்கும் வகையில், காஞ்சீபுர மாவட்டத்து மக்களுக்கு மட்டுமேயாக வரையறுத்துக் கொண்டனர். சேர, சோழ, பாண்டியர் என்ற ஏனையோர்களிலிருந்து வேறுபட்டவராகவே திராவிடர் குறிப்பிடப்படுகின்றனர். யுதிஷ்டிரரின் ராஜசூயத்திற்கு வருகை தந்து, பாரதப் பெரும் போரில் பங்கு கொண்ட திராவிடர், சோழ, சேர, பாண்டியர்களின் வேறுபட்டவராகவே குறிப்பிடப்பட்டுள்ளனர், (மகாபாரதம் ; 2 : 34, 1271; 3 : 1988 ; 5 : 22, 656 ; 8 : 11, 434) திராவிடர் என்ற இப்பெயர், காஞ்சீபுர மாவட்டத்தைச் சேர்ந்த, ஆரிய மயமாக்கப்பட்ட தமிழர்களைக் குறிப்பாக உணர்த்துவதற்காகவே, ஆளப்படும் நிலைமை, கி.பி. ஏழாம் நூற்றாண்டிலும் இருந்து வந்துளது. யுவான் சுவாங், அம்மாவட்டத்தைத் திராவிட என்ற அச்சொல்லைச் சீனமொழி ஒலியியல் முறைக்கு ஏற்பத் திருத்தப்பட்ட வடிவாம் "த-லொ-பி-ல" எனப் பெயரிட்டு அழைக்கிறார்.

காஞ்சியில் ஆகம வழிபாட்டு நெறி :

கிறித்துவ ஆண்டுத் தொடக்கத்திற்கு மிகவும் அணித்தாக முந்தியிருந்த நூற்றாண்டுகளில், ஆகம, மற்றும் ஆன்மிக வழிபாட்டு நெறிகள், இந்தியாவில், ஓரளவு பரவலாக இடம் பெற்றிருந்தன. மிகப் பெரிய ஆன்மீக வழிபாட்டு மையங்கள் ஏழு (திருக்கோயில் நகரங்கள் ஏழு; சிவ பக்தி, அல்லது விஷ்ணு பக்திச் சுடர்களைக் கூறும், ஆன்மிகப் பேராற்றல் மைய இடங்களாக மதிக்கத் தக்க இடங்கள் ஏழு என அழைத்தால், பொருள் தெளிவுக்கு உதவுவதாய் இருக்கும்)-பண்டைக் காலத்தில் முக்கிய இடங்களாக இருந்தன; அவற்றுள் காஞ்சியும் ஒன்று.

"அயொத்யா, மதுரா, மாயா, காசி, காஞ்சீ, அவந்திகா, பூரீ, த்வாரவதீ சைவ சப்தைனா மொக்ஷதாயிகா".

சப்தகல்பத்ருமா என்பதில் எடுத்துக்காட்டப்பட்ட பூத சுத்தி தந்திரம். இத்தந்திரம், அண்மையில் எழுதப்பட்ட நூலாதல் கூடும். ஆனால், அச்சுலோகம், கால வெள்ளத்தில், தொல்லூழிக் காலமாக மிதந்து வந்த ஒன்று போலவே தோன்றுகிறது.) வட இந்திய நாகரிகத்தோடான, காஞ்சீபுரத்தின் தொடர்புண்மையை இது உறுதி செய்கிறது. இக்கால அளவில் உண்மையான வைதீக நெறி அறவே இறந்துவிட்டது; ஆகவே, காஞ்சீபுரமோ அல்லது ஏனைய ஆறு நகரங்களோ, வைதீக யஜ்ஞந்தோடு சிறப்பாகத் தொடர் புற்றிருக்கவில்லை; ஆனால், சிவ, விஷ்ணு, காளிகளை வழிபடும் மையங்களாக இருந்தன. காஞ்சி, தொடக்கத்தி லிருந்தே, ஆரிய நாகரீகத்தின் மையமாம் என்பதற்கு இது மேலும் ஒரு சான்றாம்.

ஆந்திர அரசு அழிவுநிலை நோக்கிச் சென்றுகொண்டி ருக்கும்போது, எண்ணற்ற பௌத்தப் பள்ளிகள் கட்டப் பட்டன. சாக பல்லவரின் நெருக்குதலால், ஆந்திர அரசு கீழ்க்கரைக்குத் தள்ளப்பட்டு, "தனகடகம்", அந்திர அரசின் தலைநகராக ஆனபோது, ஆங்கு அழகிய, மிகச்சிறந்த, யவனக் கலையின் அடிச்சுவடுண்மையை உணர்த்தவல்ல, அமராவதி தவப்பள்ளி சுட்டப்பட்டது. சைவ, வைஷ்ணவ சமயங்கள் அல்லாமல், பௌத்த சமயமும், அதனோடு சமண சமயமும் காஞ்சியில் நன்கு நிலைகொண்டுவிட்டன என்பதை முழுமையாக நம்பலாம். யவனக் கலையை மங்கலாக நினைவுக்குக் கொணரவல்லதான புத்த படிமங்களும், சமண நாகரிகத்தின் பழங்கால, கல்லாலான நினைவுச் சின்னங்களும், அந்நகரில், காணப்படுவதன் உண்மையை, இது விளக்குவதாகும்.

பல்லவர்கள் :

சாக பல்லவர்கள், கி. பி. முதலாம், இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டு காலங்களில், ஆந்திரப் பேரரசுக்குள்

படிப்படியாக முன்னேறிவிட்டனர். சௌராஷ்டிரம், மாளவம், தனகடகம், மற்றும் காஞ்சீபுர மாவட்டங்கள், ஒன்றன்பின் ஒன்றாகச் சாக பல்லவ அரச இனத்துப் பிரிவினரின் ஆட்சிக் கீழ் வீழ்ந்துவிட்டன. "தர்யவுஷ் விஷ்தஸ்பன்" தாரியஸ் ஹிஸ்தஸ்பெஸ் - (Darius Hystapes) காலம் முதலாக, கடல் வழியாகவும், நிலவழியாகவும், இந்தியாவுக்குள் பெருவாரியாகப் பாய்ந்துவந்து, நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் ஆட்சியுரிமையை நிலை நாட்டிக் கொண்ட இச் சாக பல்லவர், தொடக்க நிலையில், வெற்றிதேடி அலைந்தவராவர். இப்பழங்குடியினர், சைவ, வைஷ்ணவ, பௌத்த, சமண சமயங்களை ஏற்றுக்கொண்ட வராதலைக் காண்கிறோமாகவே, சமயம், இவர்கள் மீது மென்மையாகவே ஆட்சி செய்துளதாகத் தெரிகிறது. இந்தியாவின் சமய சமுதாய அமைப்புகள், இன்று வெறிபிடித்து அலையும் நிலையில், பத்தில் ஒரு பங்கு அளவைக்கூட அப்போது பெற்றிருக்கவில்லையாகவே, இந்தியச் சமுதாய ஆட்சி அமைப்பில் ஓரிடத்தை அவர்கள் பிடித்துக்கொண்டனர், அவர்கள், பிராகிருத மொழியில் ஏதேனும் ஒரு கிளை மொழியைத் தங்களுடைய அரசவை மொழியாகவும், சமஸ்கிருதத்தைத் தங்களுடைய கலை, கலாச்சார மொழியாகவும் ஏற்றுக் கொண்டனர். அவர்கள், அயல் நாட்டுத் தொடர்புடைய தங்கள் இயற்பெயர்களைப் படிப்படியாகக் கைவிட்டு, அவற்றிற்குப் பதிலாகச் சமஸ்கிருதம் அல்லது பிராகிருத மொழிப் பெயர்களை மேற்கொண்டுவிட்டனர். ஆந்திர அரசுக்கு அடி கொடுத்த தனகடகத்தின் ஆட்சியாளராகிவிட்ட சாக பல்லவர்களின் ஒரு பிரிவினர், பாரத்வாஜ கோத்திரத்து க்ஷத்திரியர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுத் தங்களைப் பல்லவர் என அழைத்துக்கொண்டனர்.

(பகலவ என்ற சொல், காந்தாரம் முதல் காஞ்சீபுரம் வரை வழக்கில் இருந்த, பிராகிருத மொழி வடிவமாம் பல்லவ, என்ற சொல்லின் சமஸ்கிருத வடிவமாகும்; அது, அருகியே வழங்கப்படும் என்ற உண்மையை அறியாத நிலையில், காஞ்சிப் பல்லவர்களை, ஏனைய இந்திய மாநிலங்கள்

அனைத்திலும் உள்ள பல்லவரின் வேறுபட்டவராகக் கொண்டு, அவர்களுக்கு, ஒரு தமிழர் மூலத்தைக் காணும் பயனில் முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டது. ஐரோப்பிய மொழிகளில், "பார்த்தியன்" என ஆகும், ஒரு பழங்குடி இனத்தவர் பெயராம், "பார்த்தவ" என்பதன், இந்தியத் தன்மையதா ஆக்கப்பட்ட பகலவ, பல்லவ இரண்டும் ஒரே சொல் ஆகும்.)

காஞ்சியின் பழைய பல்லவ அரச இனம் :

காஞ்சியில், தன்னை நிலைபெறச் செய்துகொண்ட முதல் பல்லவன், பெரும்பாலும், பப்பா. அவன், ஆத்ரேய, ஹாரித, பாரத்வாஜ, கௌஸிக, காஸ்யப, மற்றும் வத்ஸகோத்திரப் பார்ப்பனர்களுக்கு, நூறாயிரம் காளைப் கலப்பைகளை, ஆயிரமாயிரம் பொற்காசுகளை நன்கொடையாக அளித்தான் எனக் கூறப்படுகிறான். அவனுக்குப் பின் ஆட்சிக்கு வந்தவருள் ஒருவனும், தன் முன்னோன் பப்பாவின் அறப்பணிகளைக் குறிப்பிடுபவனுமாகிய சிவகந்தவம்மன்", "அக்னிஷ்டோமம், வாஜபெய, அஸ்வமேத யாகங்களைச் செய்தான், இவ்வுண்மைகள், பண்டை நாட்களில், காஞ்சீ மாநகரத்தில், பார்ப்பனர்களுக்குப் (தென்னிந்திய ஆரியர்) பஞ்சம் இல்லை. ஆகவே, அந்நகரம், பல்லவ ஆட்சி தொடங்குவதற்கு நெடுங்காலத்திற்கு முன்பே, ஆரிய மயமாக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதைக் காட்டுகின்றன, சிவகந்தவம்மனுடைய செப்பேடுகள், அவனுடைய மாநிலத்தின் ஆட்சி நிர்வாகம், அர்த்த சாஸ்திரத்தில் விளக்கியுள்ளவாறும், சாணக்கியனை அடுத்து வந்த அறம் கூறுவோரால் வளர்க்கப்பட்டவாறும் ஆரிய நெறியில் நடத்தப்பட்டது என்பதைக் காட்டுகிறன்றன. பேரரசின் உட் பிரிவுகள், அவற்றை ஆட்சிபுரிந்து வந்த அரசு அலுவலர்கள், வரிகள், நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட நிலமாயின், அதற்கான வரிவிலக்கு ஆகிய அனைத்தும், சமஸ்கிருதச் சொல்லமைப்பு முறையில் குறிப்பிடப் பட்டுள்ளன. அந்த மானியப்பட்டயம், அரசவை ஆலோசனைக் குழுவினர் ஒருவரால், அவர் கைப்பட எழுதப்பட்டது. பின்னர்ச் செப்புத் தகட்டில், செதுக்கப்பட்டது. இறுதியாக,

அரசனால் பார்வையிடப்பட்டுத் தன்னுடைய ஆணையாக அறிவிக்கப்பட்டுத் தாரைவார்த்தல் தொடர வழங்கப்பட்டது. இப்பழைய பல்லவர்களின் காலத்தில், பிராமணர்கள், காஞ்சிபுரம் மாவட்டத்து அக்ரஹாரங்களில் குடி வாழ்ந்திருந்தனர். அப்பட்டயங்கள் உறுதி செய்வது போல், சமயச் சார்பற்ற அலுவலகங்களில் வேலைக்கு அமர்த்தப் பட்டனர். முழுக்க முழுக்க ஆரியப் பழக்க வழக்கங்களான இவை அனைத்தும், தமிழ் நாட்டின் மையப்பகுதிக்குக் கி. பி. ஆறாம் நூற்றாண்டில், ஆரிய மயமாக்கப்படும்வரை, தெரியவே தெரியா.

சிவகந்தவம்மனுடைய பட்டயங்கள், ஆந்திர அரசர்களின் நாஸிக் கல்வெட்டுக்களைப் போலவே, இலக்கியப் பாலிமொழியிலிருந்து பல்லாற்றினும், வேறுபட்டுப் பிராகிருத மொழியில் அமைந்துள்ளன. இம்மொழி, காஞ்சியில், மதிக்கத்தக்க அளவான நீண்ட காலம் மக்களிடையே வழக்கத்தில் இருந்திருக்கவும், அம் மாவட்டத்து மக்களின் தாய் மொழியாம் தமிழால் ஓரளவு பாதிக்கப்பட்டிருக்கவும் வேண்டும் என்பதற்கான அறிகுறிகள் உள்ளன. ஹீரஹடக ஹள்ளி ஸாஸனத்தைப் பதிப்பிக்கும் போது, திருவாளர் பூலர் (Bwhler) அவர்கள் குறிப்பிட்டவாறு, "முன்னதாகக் கொடுக்கப்பட்ட" எனும் பொருள் தருவதான "புல்வதத்தம்" என்ற பால்உணர்த்தா அஃறிணைச் சொற்றொடர், "கொடுக்கப்பட்டுவிட்ட" எனும் பொருள் உடையதான, "சம்பத்தொ" என்ற உயர்திணை ஆண்பால் உணர்த்தும் சொற்றொடரோடு இணைத்தே பொருள் கொள்ள வேண்டியுளது. ஆகவே, அச்சாஸனத்தை ஆக்கியோன் பால், பால்வேறுபாடு குறித்த உணர்வு அறவே இல்லாமை காணப்படுகிறது. பால்வேறுபாடு குறித்த உணர்வு இல்லாமையாம் இந்நிலைமை, அதை ஆக்கியோன் வழங்கும் பிராகிருத மொழி, தமிழ் மொழியின் தனிச்சிறப்பு வாய்ந்ததான பால் இலக்கணம் இல்லாக் குறைபாடு, காஞ்சீபுர மாவட்டத்தில் பெருவழக்கில் இருந்த பிராகிருதக் கிளைமொழி மீது ஆதிக்கம் செலுத்துவதற்குத் தேவைப்படும் நிலையில், மதிக்கத்தக்க அளவு நீண்டகாலம், தமிழ்நாட்டில்

பேசப்பட்டு வந்துளது என்பதைக் காட்டுகிறது. சிவகந்த வம்மனின் சிலாஸாஸன மொழி மீது, ஆதிக்கம் செலுத்தும் தமிழ்ச் செல்வாக்குகள் வேறு சிலவும் உளவேனும், அவை ஈண்டு ஆராயப்பட மாட்டா.

இந்தியாவில் பதிப்பித்து வெளியிப்பட்ட முதல், சமஸ்கிருத மொழி கல் எழுத்துப் பொறிப்பு, கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் மையப்பகுதியைச் சேர்ந்த மால்வ நாட்டு ருத்திரதாமுடையதாகும். இக்காலம் தொடங்கிப் பிராகிருத மொழி கல் எழுத்துப் பொறிப்புகள், சமஸ்கிருத மொழி எழுத்துப் பொறிப்புக்களால், விரைவாக இடமாற்றிக் கொள்ளப்பட்டன. இவ்வுண்மை சிவகந்தவம்மன், பெரும் பாலும், கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்து முன்னே, இல்லையெனில், இன்னமும் சற்று முன்னே ஆண்டிருக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது. திருவாளர் பவுல்கெஸ் (Foulkes) அவர்கள், பல்லவர்களின் இப்பழைய சாஸனங்களெல்லாம், ஆண்டின் முப்பருவங்களில் ஒரு பருவத்து, ஞாயிறு முதலாம் இருவாரகாலத்துப் பதின்மைக் கூறுகளால் நாட்களைக் கணக்கிடுவதன் மூலம், தெக்கணத்தில் கண்டெடுக்கப்பட்ட, கி. பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆந்திர எழுத்துப் பொறிப்புக்களில் பரவலாக இடம் பெற்றிருக்கும் முறையில் நாட்கள் கணக்கிடப்பட்டுள்ளன" எனக் குறிப்பிட்டுள்ளார். இது பல்லவ அரசு, காஞ்சீபுர மாவட்டத்தில் இரண்டாம் நூற்றாண்டில் அல்லது அதற்கு முன்பு நிலவியிருந்தது என்ற கருத்திற்குக் கொண்டு செல்கிறது. இந்தத் தற்காலிகப் புனைவுக் கற்பனை, மகாவம்ஸத்தில் (அதிகாரம் : 29) காணப்படும் வட்டகாமணி, (வழிவழியான மரபுவழிக் கணக்கீட்டின்படி) கி.மு. 157-இல் அனுராதபுரத்தில் ஒரு கம்பத்தை நாட்டினான்; அது குறித்து எடுத்த புனித விழாவின்போது, பேரறிஞர் மகாதேவர், "பல்லவ பொக்கப்" புத்தப் பள்ளியிலிருந்து நானூற்று அறுபது ஆயிரம் பிக்குகளோடு வருகை தந்தார்" என்ற அறிவிப்பால் உறுதி செய்யப்படுகிறது. திருவாளர் பவுல்கெஸ் அவர்கள் பல்லவ பொக்காவைக் காஞ்சீபுர மாவட்டமாக அடையாளம் கண்டு,

ஆகவே பல்லவப் பேரரசு, கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் தோன்றியிருக்க வேண்டும் என முடிவு செய்கிறார். (J.R.A.S. 1885 art IX and 1889 art XIII.)

காஞ்சி மாநகரில், புத்தப் பள்ளிகளே மட்டுமல்லாமல் பிராமணாக்கள் ஒருசிலவும் இருந்திருக்க வேண்டும். இந்நகரைச் சேர்ந்த மிகச் சிறந்த பிராமணப் பேரறிஞர்கள், வடவர்களுக்குத் தெரிந்திருந்தனர் என்பது முன்பே குறிப்பிடப்பட்டுளது. பாணாவாசியில், கடம்ப அரச இனத்தைப் பிற்காலத்தே தோற்றுவித்த மயூரசர்மன் கல்வி கற்ற, வேதங்கள் மற்றும் சமஸ்கிருத அறிவு நூல்களைக் கற்றுத்தருவதற்கான கல்லூரி ஒன்று, கி.பி. நான்காம் நூற்றாண்டளவில் காஞ்சியில் நிலைப்பெற்றிருந்தது. இம்மயூரசர்மனின் கொள்ளுப் பெயரன், அதாவது பெயரனின் பிள்ளையாம் காகுஸ்தவர்மனின் தளகுண்டா எழுத்துப் பொறிப்பு, மயூரசர்மன், தன் ஆசிரியன் வீரசர்மனோடு, பல்லவ அரசர்களின் நகருக்குச் சென்று சமய அறிவுகளையெல்லாம் அறிந்து கொள்ளும் ஆர்வ மிகுதியால், ஆங்குள்ள கல்லூரியாம் கடிகத்துள் மாணவனாக இடம் கொண்டு விட்டான் எனக் கூறுகிறது. ("யஹ் ப்ரயாய பல்லவவெந்த்ர புரீம் குருனா சமம் வீர சர்மணா, அத்ஹீஜிக் ஹாம்சுஹ ப்ரவகனம் நிக்ஹிலம் விவேஸாய" தர்க்குகஹ Ep. and VIII p. 32 V. 10). இக்கடிதம், காஞ்சி முதற்பல்லவ அரச இனம் வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கும்போது, துவக்கப் பட்ட புதிய வொன்றன்று; மாறாகக் காஞ்சி, ஆரியக் கல்வியின் ஒரு மைய இடமாக, ஆகிக் கற்றுவல்ல பெரியவர்களை, வட இந்தியாவுக்கு, ஆங்குச் சமஸ்கிருதப் புலமை வளர்ச்சியில் பங்கு கொள்ளுமாறு அனுப்பிய அந்நாள் தொட்டே இருந்துவரும் நிறுவனமாம் என்றே நான் கருதுகின்றேன். (இதுவரை கிடைத்துள்ள செய்திகளின்படி காஞ்சிப் பழைய பல்லவ அரச இனத்து வரலாறு குறித்த முழு விளக்கங்களையும், பல்லவர் என்ற என் தமிழ் நூலில் (பகுதி : 1) கொடுத்துள்ளேன், பிற்பட்ட காலத்துப் பல்லவர்கள், தமிழர்களாக ஆகிவிட்டதுபோல், முற்பட்ட

காலத்துப் பல்லவர், தமிழரல்லர். ஆகவே, அதுபோலும் விளக்கம் இங்குத் தேவையில்லை.

காஞ்சி நகரமோ, அந்நகரைச் சேர்ந்த பழைய பல்லவ ஆட்சியாளரோ, இப்போது கிடைக்கும் பழைய தமிழ்ப் பாக்களில் குறிப்பிடப்படவே இல்லை. இதற்குக் காரணம், அந்நகரம், தமிழ்நாட்டின் எல்லைக்குள் இருந்தாலும், பண்டைக் காலத்தில் அது, சமஸ்கிருத நாகரிகத்தின் தாயகமாகவே இருந்தது; தமிழ் நாகரிகத்தின் தாயகமாக இருக்கவில்லை ; தமிழ் அரசர்களால் ஆளப்படவில்லை; ஆரிய அல்லது ஆரியராக ஆக்கப்பட்ட ராஜாக்களால் ஆளப்பட்டது. கி.பி. நான்காம் நூற்றாண்டளவில், (அடுத்த அதிகாரத்தில் காண இருப்பது போல்) அது, தற்காலிகமாகத் தமிழர் கைக்குச் சென்றது. இது, தமிழர் தனி நாகரிகம், ஆரிய நாகரிகத்திற்குக், கீழ்ப்படிந்து போனது, காஞ்சீபுர மாவட்டத்தில் தமிழிலக்கிய நாகரிகம் பரவியது ஆகிய இருவிளைவுகளை உடையாதாகிவிட்டது.

♦ ♦ ♦

I

காஞ்சீ மாநகர், தமிழ்நாட்டின் எல்லைக்குள் இடம் பெற்றிருந்தாலும், பண்டைக் காலத்தில், அது, தமிழர் நாகரிகத்தைக் கொண்டிருக்கவில்லை; மாறாகச் சமஸ்கிருத நாகரிகத்தின் நடுநாயகமாகவே இருந்தது; அது, தமிழ் அரசர்களாலும் ஆளப்படவில்லை; மாறாக ஆரிய ராஜாக்களாலேயே ஆளப்பட்டது? இக்கூற்று உண்மையா?

(மறுப்பு)

திருவாளர், பி. டி. சீனிவாச அய்யங்கார் அவர்கள், தம் முடைய "தமிழர் வரலாறு" நூலில், இவ்வாறு கூறியுள்ளார் (பக்கம் : 333-34). தம்முடைய இம்முடிவிற்கு அவர் காட்டும் தலையாய காரணம், பழந்தமிழ்ப் பாக்களில், காஞ்சி என்ற அதன் பெயரோ, அது ஆண்ட பழைய பல்லவ அரசர்களோ குறிப்பிடப்படவில்லை என்பது ஒன்றே. (பக்கம் : 333)

தமிழ்நாட்டின் எல்லைகளாகத் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாடிய மாங்குடி மருதனாரும், அச்செழியனால் சிறை பிடிக்கப்பட்டுப் பின்னர்ச் சிறைவீடு பெற்று அரியணை அமர்ந்த யானைக் கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையைப் பாடிய குறுங்கோழியூர் கிழாரும், "தென்குமரிவடபெருங்கல், குண, குட கடலா எல்லை" (மதுரைக்காஞ்சி : 70 - 71 ; புறம் : 17) எனத் தமிழகத்தின் வடவெல்லை, வடபேரிமயமாக இருந்திருக்கக் கூடுமோ என ஐயுறத்தக்க வகையில் கூறி யுள்ளனர். என்றாலும், அவர்களுக்கு அது கருத்தன்று. அவர்கள் "வடபெருங்கல்" என்ற தொடரால் குறிப்பிடும் மலை, வேங்கடமலையே.

இவர்கள் காலத்துப் புலவர்கள் பலரும், இமயமலையின் பல்வேறு சிறப்புகளையும், அம்மலைமுடியில், தமிழரசர்கள் தங்கள் கொடிகளை நாட்டியதையும், அவ்வரசர்களுள் சிலர், அவ்விமயம் குமரிகட்கு இடைப்பட்ட நாட்டில் அரசோச் சியிருந்த அத்தனை அரசர்களையும் வெற்றி கொண்டதையும் அறிந்திருந்தனர். ஆயினும், அவர்களுள் ஒருவரேனும், தமிழகத்தின் வட எல்லை இமயம் என ஓரிடத்தும் கூறினாரல்லர்.

இமயத்தை இத்துணைத் தெளிவாக உணர்ந்திருந்த புலவர்கள் வாழ்ந்த காலத்தே வாழ்ந்து, அப்புலவர்கள் பாராட்டிய அரசர்களையே பாராட்டிய, இவ்விருவரும்கூட, அப்புலவர்களைப் போலவே, இமயத்தைத் தெளிவாகத் தெரிந்தே வைத்திருப்பர். இந்நிலையில், தமிழகத்தின் வட எல்லை, இமயமாக இருந்திருப்பின், தமிழகத்தின் வடதென் எல்லைகளைக் குறிப்பிடும்போது, "தென் குமரி வடஇமயம்" என, இமயத்தின் பெயர் சுட்டியே கூறியிருப்பர். தென் எல்லையைத், "தென்குமரி" எனப் பெயர் சுட்டிக் கூறிய அவர்கள், வடவெல்லையைக் குறிப்பிடும்போது மட்டும், இமயத்தின் பெயர் கூட்டி, "வட இமயம்" எனக் கூறாமல், "வடபெருங்கல்" என வறிதே கூறியிருக்க மாட்டார்கள். ஆகவே, வடவெல்லை இமயம் என்பது, அவர் கருத்தன்று. அவர்கள் கூறாத ஒன்றைக் கூறியதாகக் கொள்ளவைத்த குற்றம், "வடபெருங்கல்" என்பதற்கு, "வட இமயம்" எனப் பொருள் கூறிய உரையாசிரியர்களையே சாரும்.

தொல்காப்பியப் பாயிரம் பாடிய பனம்பாரனார், "வடவேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்" எனத், தமிழகத்தின் வடவெல்லையாக வேங்கட மலையையே கொண்டுள்ளார்.

தென் குமரிதொட்டு, வேங்கடம் வரை, தமிழே வழங்கி வந்தது. தமிழ் அல்லாத வேற்றுமொழி, வேங்கடத்திற்கு அப்பால்தான் இடம் பெற்றிருந்தது, இதைப் "பனிபடு சோலை, வேங்கடத்து உம்பர் மொழி பெயர் தேஎம்"; "தமிழ் கெழு மூவர்காக்கும் மொழி பெயர் தேஎம்;" (அகம் ; 211, 31)

என்ற மாமூலனார் கூற்றுக்கள் உணர்த்துவது காண்க. அவ்வேங்கடத்துக்கு அப்பால் உள்ள நாட்டில் வாழ் வார் வடுகர் எனப்பட்டனர்; அவ்வடுகநாடு, புல்லி, கட்டி போல் வார் ஆட்சிக்கு உட்பட்ட சிறு சிறு நாடுகளாகப் பிளவுண் டிருந்தது; அன்று, தமிழின் வேறுபட்ட ஒரு மொழி பேசப் படுவது, அங்குதான் தொடங்கப்பட்டது. "புல்லி விழவுடை விழுச்சீர் வேங்கடம்" (அகம் : 61) "புல்லி தேன்தூங்கு உயர் வரை நன்னாட்டு உம்பர் வேங்கடம்" (அகம் : 393); "புல்லி காப்புடை நெடுநகர் வேங்கடம்" (அகம் : 209) "புல்லிக் குன்றத்து...மொழிபெயர் தேயம்". (அகம் : 295) "வடுகர் முனையது, பல்வேல் கட்டி, நன்னாட்டு உம்பர் மொழிபெயர் தேய்ம்" (குறுந் : 11) என்ற இவ்வரிகள், மேற்கூறிய கூற்றிற்குக் காட்டவல்ல எண்ணிலா அகச்சான்றுகளுள் ஒரு சில.

ஆக, வேங்கடம் வரையான தென்னாடு முழுவதிலும் தமிழே வழக்கில் இருந்து வந்தது என்பது ஐயம் திரிபு அற உறுதி செய்யப்படுவதாயிற்று.

தமிழ் வழங்கிய வடவேங்கடம் தென்குமரிகட்கு இடைப்பட்ட அப்பெருநிலப்பரப்பு முழுவதும், மூவேந்தர் ஆட்சியே நிலவியிருந்தது. இதை, "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு" என்ற தொல்காப்பியர் கூற்று (பொருள் : செய்யுள் : 74) உறுதி செய்வது காண்க.

தமிழகத்தின் தென் பகுதியைப் பாண்டியரும், அப்பாண்டி நாட்டிற்கு வடபால், வேங்கடம் வரையுள்ள எஞ்சிய தமிழகத்தை, இருகூறுகள் ஆக்கி, மேற்குப் பகுதியைச் சேரரும், கிழக்குப் பகுதியைச் சோழரும் உரிமை கொண்டு ஆண்டு வந்தனர். இதைக், "குடபுலம் காவலர் மருமான் சூட்டுவன்" (47-49) "தென்புலம் காவலர் பெருமான்... செழியன்" (63-65) "குணபுலம் காவலர் பெருமான்... செம்பியன்" (79-82) என்ற சிறுபாணாற்றுப்படை வரிகள் உறுதி செய்வது காண்க.

மூவேந்தர் ஆட்சிக்கு உட்பட்டது தமிழகம் எனக் கூறப்பட்டாலும், தமிழகத்தில், அம்மூவேந்தர் ஆட்சிக்கு

அடங்கியும் அடங்காமலும், எண்ணிலாக் குறுநில மன்னர்கள், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஆட்சி புரிந்து வந்துள்ளனர். அவர்களுள் சிலர், அம்மூவேந்தர்களும் ஒன்று பட்டு வந்து எதிர்த்துப் போரிட்டாலும், வெற்றி கொள்ள மாட்டாப் பேரரசர்களாய் விளங்கியுள்ளனர். சிலர், அம் மூவேந்தர்களுக்குத் தேவைப்படும் போதெல்லாம் படைத்துணை அளிக்கவல்ல பேராற்றல் வாய்ந்தவர் களாகவும் வாழ்ந்து வந்துள்ளனர். சிலர், அவ்வேந்தர்களின் பகைவர்களாகவோ, நண்பர்களாகவோ இல்லாமல், அவர்களோடு எவ்விதத் தொடர்பும் இல்லாமல் தனியரசு நடத்தும் தன்னேரில்லாக் குறுநிலத் தலைவர்களாகவும் வாழ்ந்துள்ளனர்.

தமிழக அரசியல் நிலை இதுவாகவே, மூவேந்தர்களைப் பாடிப் பாராட்டிய புலவர்களே, அக்குறுநில மன்னர் களையும் பாடிப் பாராட்டியுள்ளனர்.

அந்துவஞ்சேரல் இரும்பொறை முதல், யானைக்கண் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை ஈறாக, இருபத்து நான்கு சேரர்குல வேந்தர்களையும், இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி முதலாக, வேல்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி ஈறாக, இருபத்தொரு சோழ அரசர்களையும், அண்டர் மகன் குறுவழுதி முதலாக, வெற்றிவேற்செழியன் ஈறாக, இருபான் ஐந்து பாண்டிய அரசர்களையும் பாடிப் பாராட்டிய புலவர்களே, அதியமான் நெடுமான் அஞ்சி முதலாக, வையாவிக் கோப்பெரும்பேகன் ஈறாக வள்ளல்கள் எழுவரையும், வள்ளல்கள் என்ற பட்டியலில் இடம் பெற்றிலராயினும், அவ்வள்ளல்களிலும் மேலாக வாரி வழங்கிய அக்குரன் முதலாக, வாணன் ஈறாகப் பதின்மூன்று வள்ளியோர்களையும், அகுதை முதலாக வேங்கை மார்பன் ஈறாக ஐம்பத்தைந்து படை மறவர்களையும் பாடிப் பாராட்டியுள்ளனர். எடுத்துக்காட்டுக்கு இரண்டு.

வெண்ணிப் பறந்தலையில், இருபெருவேந்தரும், பதினொரு வேளிரும் ஒருங்கே அவிய வெற்றி கொண்டான் கரிகால் பெருவளத்தான், இதைப் பரணரும் (அகம் - 246)

மாமூலனாரும் (அகம் : 55), முடத்தாமக் கண்ணியாரும் (பொருநராற்றுப்படை : 143 - 48) கழாத்தலையாரும் (புறம் : 65) வெண்ணிக் குயத்தியாரும் (புறம் : 66) தங்கள் தங்கள் பாட்டிடை வைத்து அறிவித்துள்ளார்கள். வாகைப் பறந்தலையில் நடைபெற்ற பிறிதொரு போரில், ஒன்பது அரசர்களை வெற்றி கொண்டான் கரிகாலன், இதைப் பரணர் அறிந்து கூறியுள்ளார். (அகம் : 125)

இவ்விரு போர்க்கள நிகழ்ச்சிகளையும், தம் பாக்களிடையே குறிப்பிடும் அப்புலவர்கள் ஐவருள், பரணர், செங்குட்டுவன் அரசவைப் புலவராய் இருந்து அவனைப் பாராட்டியுள்ளார். (பதிற்றுப்பத்து : ஐந்தாம் பத்து) மனைவியைப் பிரிந்து பரத்தை ஒருத்தியொடு வாழ்ந்திருந்த பேகனுக்கு அறிவுரை கூறி, அவனை அவன் மனைவிபால் சேர்த்துள்ளார் (புறம் : 144). குடக்கோ நெடுஞ்சேரலாதனும், வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியும் போரிட்டு ஒரு சேர மாண்டுகிடந்த களக்காட்சியைக் கண்டு கலங்கிக் கண்ணீர் விட்டுள்ளார். (புறம் : 63) அது மட்டுமல்லாமல், 1) சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி (புறம் : 4) 2) மலையமான் திருமுடிக்காரி (நற் : 100) 3) ஆய் அண்டிரன் (அகம் : 152, 198) 4) அதியமான் நெடுமான் அஞ்சி (அகம் : 372) 5) கண்டீரக்கோப் பெருநள்ளி (அகம் : 152) 6) வல்வில் ஓரி (குறுந் : 199; நற் : 6, 265, அகம் : 208) 7) நன்னன் (அகம் : 142) 8) மிஞிலி, (அகம் : 142) 9) ஆஅய் எயினன் (அகம் : 142 : 148, 181, 208, 396) 10) அகுதை (அகம் : 76, 208) 11, 12) அன்னி மிஞிலியும், அருந்தூர்த் திதியனும் (அகம் : 262) 13) தித்தன் வெளியன் (அகம் : 6, 152, 226) 14, 15, 16, 17) பாணன், கட்டி, பொருநன், கணையன் (அகம் : 386) 18) மத்தி (அகம் : 6, 226) 19) கழுவுள் (அகம் : 135) 20) அழிசிமகன் சேந்தன் (குறுந் : 268) 21) தழும்பன் (புறம் : 348, குறுந் : 300) 22) விரான் (நற் : 250 ; 350) 23) விச்சிக் கோன் (குறுந் : 328) 24) பழையன் (பதிற்று : 44, 49) 25) வல்லங் கிழான் (அகம் : 356) என்ற இவர்களையும் பாராட்டியுள்ளார்.

கரிகாலனைப் பாடிய மாமூலனார், அவனுடைய வெண்ணிப்போர் வெற்றியையும், அப்போரில் புறப்புண் பெற்றுத் தோல்வியுற்ற சேரலாதன் அதற்காக வெட்கி வடக்கிருந்து உயிர் இழந்துபோக, அதுபொழுது, அவனே போல் வடக்கிருந்து உயிர் இழந்த சான்றோர் செயலையும் பாராட்டியுள்ளார் (அகம் : 55). கரிகாலன் வெண்ணிப்போர் நிகழ்ச்சியைக் கூறும் அவரே, இமய வரம்பன் நெடுஞ்சேரலாதனையும் பாராட்டியுள்ளார் (அகம் : 127, 347). அது மட்டுமல்லாமல், அதியமான் (அகம் : 115), அதியன் (அகம் : 325), ஆவி (அகம் : 1, 16), எருமை (அகம் : 115), எவ்வி (அகம் : 67), எழினி (அகம் : 211) திதியன் (அகம் : 331), நன்னன் (அகம் : 67), புல்லி (அகம் 61, 295, 311, 353, 393; நற் : 14) இவர்களையும் அறிந்து தம் பாட்டிடை வைத்துப் பாராட்டியுள்ளார்.

கரிகாலன் அவைக்களப் புலவராய் இருந்து, பொரு நராற்றுப்படை பாடி, அவன் புகழ் பரவும் முடத்தாமக் கண்ணியார், பனந்தோடும் வேப்பந்தாரும் அணிந்த இரு பெருவேந்தர்களும் ஒரு களத்தே அழிந்த வெண்ணிப்போர் நிகழ்ச்சியை விளக்கும் அதே பாட்டில் (146) கரிகாலன் பிறந்த சோழர்குலமும், அவனால் வெற்றி கொள்ளப்பட்ட சேர, பாண்டியர் குலமும் பகை ஒழிந்து நட்புப் பூண்டு ஒன்றுபட்டு, ஒருங்கே வீற்றிருக்கும் காட்சி நலத்தை அகக்கண்ணால் கண்டு களிப்புறவும் செய்துள்ளார் (53 - 56).

வெண்ணிப்போர் நிகழ்ச்சியை, அப்போர் நிகழ்ந்த வெண்ணி வாயிலில் வாழ்ந்திருந்தமையால், நேரில் காணும் வாய்ப்பினைப் பெற்ற வெண்ணிக்குயத்தியார், அப்போரில் கரிகாலன் பெற்ற வெற்றியைப் பாராட்டிய அதே வாயால், அவனோடு போரிட்ட பெருஞ்சேரலாதன் புறப்புண் நாணி வடக்கிருந்து உயிர் துறக்கக் காரணமாய், அவன் முதுகில் வேலெறிந்த, அவன் செயலைப் பழிப்பதும் செய்துள்ளார் (புறம் : 66).

வெண்ணிப்போர் நிகழ்ச்சியைப் பாடிய (புறம் : 65) கழாத்தலையார், அக்கரிகாலன் குலத்து வந்த வேல்

பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியும், குடக்கோ நெடுஞ்சேரலாதனும், போரிட்டு ஒரே களத்தில், ஒருசேர மாண்ட காட்சியைப் பரணர் போலவே, தம் பாக்களிடையே (புறம் : 62, 368) வைத்துக் கலங்குவதும் செய்துள்ளார்.

மூவேந்தருள், தான் பிறந்த சோழன் குலம் தவிர்த்த, சேர, பாண்டியர் குலத்து இரு வேந்தர்களையும், அம்மூவேந்தர் ஆட்சி நிலவும் தமிழகத்திலேயே இடை இடையே சிறுசிறு நாடுகளை ஆண்டுகொண்டிருந்த பதினொரு வேளிர் களையும், ஒருங்கே வெற்றிகொண்டு அழித்து விட்டான் கரிகாலன் என்றால், அங்கெல்லாம், நடை முறையில் இருந்த அரசுகளை அகற்றிவிட்டுத் தன் சோழ அரசினை நிலை நாட்டிவிட்டான் எனக்கொண்டு விடல் கூடாது. அது நடந்திருந்தால், வாகைப் பறந்தலையில் பிறிதொரு போரைச் சந்திக்கவேண்டிய நிலையோ, ஆங்கு ஒன்பது மன்னர்களை வெற்றிகொண்டு அவர்தம் ஒன்பது குடைகளையும் கைப்பற்ற வேண்டிய நிலையோ, கரிகாலனுக்கு வாய்த்திராது.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின், தலையாலங்கானப் போர் வெற்றியைப் பாராட்டிய ஆருலவிய நாட்டுப் பேரி சாத்தனார், இடைக்குன்றூர் கிழார், கல்லாடனார், குடபுலவியனார், பொதும்பில் கிழார் மகனார், நக்கீரர், மாங்குடிமருதன் ஆகிய புலவர்கள் எழுவரில், இடைக் குன்றூர்கிழார் (புறம் : 76), குடபுலவியனார் (புறம் : 18, 19) பொதும்பில் கிழார் மகனார் (நற் : 387) ஆகிய மூவரும் வேறு வேந்தர்களையோ, குறுநிலத்தலைவர்களையோ பாடினாரல்லர்.

ஆருலவியநாட்டு ஆலம் பேரி சாத்தனார், அவன் தலையாலங்கானப் போர் வெற்றியைப் பாடியதோடு (அகம் : 175) விளங்கில் எனும் ஊரைச் சார்ந்த கடலனையும் (அகம் : 81), சேரர்படைத் தலைவன் பிட்டனையும் (அகம் : 143) பாராட்டியுள்ளார்.

நக்கீரர், அவனைப் பாடிய நெடுநல்வாடையாம் நெடிய பாட்டில், தலையாலங்கானப் போர் பற்றிக் குறிப்பிடவில்லை

எனினும், அகநானூற்றுப் பாடல் ஒன்றில் (36) செழியன் வெற்றி கொண்ட, சேரன், செம்பியன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் என எழுவர் பெயரையும் கூறியே பாராட்டியுள்ளார்.

தலையாலங்கானத்துப் போரில் வெற்றிகொள்ளப் பட்டோருள் சேரனும் ஒருவன். அங்ஙனமாகவும், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், அச்சேரன் மீது மீண்டும் போர் தொடுத்துச் சென்று, அச்சேரர்க்கு உரிய முசிறியை முற்றி அழித்துள்ளான். தலையாலங்கானப் போர் வெற்றியைப் பாராட்டிய நக்கீரரே, முசிறி முற்றுகையையும் பாடியுள்ளார் (அகம் : 57).

தலையாலங்கானப் போர் பாடிய அவரே, அப்பாண்டியன் படைத்தலைவனாம் பழையன் மாறன், கூடல்புறந்தலையில், பிறிதோரு போர் மேற்கொண்டு, அதில், வெள்ளம் போல் பரந்த படையொடு வந்தெதிர்த்த கிள்ளிவளவனை வென்று, அவன் படைகளோடு, அவன் நாட்டையும் கைப்பற்றிக் கொள்ள அக்களத்தில், தன் குலப்பகைவனாம் கிள்ளிவளவன் கண்ட தோல்விகேட்டுக் கோதைமார்பன் என்ற சேரன் உவகை கொண்டதையும் பாராட்டியுள்ளார் (அகம் : 346).

செழியன் முன்னின்று நடத்திய தலையாலங்கானப் போரையும், அவன் படைத்தலைவன் பழையன் முன்னின்று நடத்திய கூடல் போரையும் பாடிய நக்கீரரே, தலையாலங் கானப்போரில் செழியன்பால் தோல்விகண்ட திதியனையும், (அகம் : 126), எருமையூரனையும் (அகம் : 253) பாடியுள்ளார்.

தலையாலங்கானப் போரில், சேரரைப் போலவே, சோழரும் தோல்வியுற்றதைப் பாடிய அவரே, அச்சோழர் குலத்துக் கரிகால் பெருவளத்தானையும் (அகம் : 141) கிள்ளிவளவனையும் (அகம் : 205) அச்சோழர் குலத்தோடு உறவுடையவனும், காஞ்சியை ஆண்டவனுமாகிய திரையனையும் (அகம் : 340) அறிந்து பாராட்டியுள்ளார்.

சேரர், சோழர்களை, இவ்வாறு தனித்தனிப் பாக்களில் வைத்துப் பாராட்டியதோடு நில்லாமல், பாண்டியர் தலைநகர்

கூடலைப் பாராட்டும் ஒரே பாட்டில் - "வழுதி கூடல்", சோழர் தலைநகர் உறந்தையையும், - "அறங்கெழு நல்லவை உறந்தை", சேரர் தலைநகர் கருவூரையும் "திருமாவியன்நகர் கருவூர்" (அகம் : 93) பாராட்டியுள்ளார்.

மேலே கூறிய இவர்களையே அல்லாமல், ஊணூர்த் தழும்பன் (அகம் : 227), வேள்பாரி (அகம் : 78), வேம்பி முசுண்டை (அகம் : 24), மூதில் அருமன் (நற் : 367), சிறுகுடிவாணன் (நற் : 340) ஆகிய குறுநிலத்தலைவர்களையும் சிறக்கப் பாராட்டியுள்ளார்.

தம்முடைய மதுரைக் காஞ்சியில், தலையாலங்கானப் போர் வெற்றியையும் (127-130) இருபெரு வேந்தர்களோடு, வேளிர்களையும் வெற்றி கொண்டதையும் (55-56) பாராட்டிய மாங்குடி மருதனார், அத் தலையாலங்கானப் போரில் வெற்றி கொள்ளப்படாத மிழலைக்கூற்றத்து எவ்வியை வெற்றி கொள்ள, செழியன் மேற்கொண்ட பிறிதொரு போரையும் குறிப்பிட்டுள்ளார் (புறம் : 24). செழியனால் வெற்றி கொள்ளப்பட்டாரைக் குறிப்பிட்ட அவர், அவனால், வெற்றி கொள்ளப்படாது சிறக்க வாழ்ந்த வாட்டாற்று எழினியாதனையும் பாடியுள்ளார். (புறம் : 396)

அதேபோல் ஆலங்கானத்தில் செழியன் பெற்ற வெற்றிச் சிறப்பைப் பாராட்டவே, அவன் அவை அடைந்து பாராட்டிய கல்லாடனார் (புறம் : 23, 25, அகம் : 209) அப் போரில் தோல்வி கண்டோர் வரிசையில் சேரரும் இடம் பெற்றிருக்கவும், அக்குலத்து வந்த களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல், நன்னன் என்பானைக், குடநாட்டில், வாகைப்பெருந்துறையில் நடைபெற்ற போரில் வெற்றி கொண்டதைப் பாராட்டியுள்ளார் (அகம் : 199). செழியனின் தலையாலங்கானப் போர் வெற்றியைப் பாராட்டிய அதே பாட்டில் (அகம் : 209) தமிழகத்து வடவெல்லை ஆண்ட புல்லி, கொல்லி ஆண்ட வல்வில் ஓரி, மலையமான் திருமுடிக்காரி ஆகியோரையும் பாராட்டியுள்ளார்.

பழந்தமிழ்ப் பாக்கள் உணர்த்தும், அன்றைய அரசியல் நிலைகளால் தெளிவாகும் உண்மைகள் இரண்டு. ஒன்று,

கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன், கரிகால் பெருவளத் தான், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் போன்ற பேரரசன் எவனாயினும், ஒரு போர்க்களத்தில், தன்னை ஒழிந்த இருவேந்தர்களையும், எண்ணிலாச் சிற்றரசர்களையும் வெற்றிகொண்டுவிட்டான் என்றால், அங்கெல்லாம், அதுவரை நடைமுறையில் இருந்து வந்த அரசுகளை, அரசியல் முறைகளை அகற்றிவிட்டு, தன னுடைய ஆட்சியை நிலைநாட்டிவிட்டான் எனக்கொண்டு விடல் கூடாது; அப்போரின் விளைவு, அப்போரில் தோல்வியுற்ற அரசர்களைக் காட்டிலும், தான் ஆற்றலால் மிக்கோன் என்பதை நிலைநாட்டியது மட்டுமே என்பதுதான்.

இதைத் திருவாளர், பி. டி. சீனிவாச அய்யங்கார் அவர்களும் உணர்ந்துள்ளார்! "பேராற்றல் வாய்ந்த பேரரசன் ஒருவன், "ஒருமொழி வைத்து உலகாள்வான்", "ஒருதனி ஆழி உருட்டுவோன்", "உலகெல்லாம் ஒரு குடைக்கீழ் வைத்து ஆள்வோன்". "உலகெலாம் ஆள்வோன்" எனக் கூறப்படும் நிலையிலும், அவன் ஆட்சிக்கீழ் அடங்கிய நாடுகளில், ஆட்சிநிர்வாக முறைகளில், அமைச்சர், புரோகிதர் உள்ளிட்ட ஐம்பெருங்குழுக்களில் எவ்வித மாற்றமும் நிகழ்ந்துவிடுவதில்லை, போர்க்காலனிகள் எவையும் ஆங்கு ஏற்படுத்தப்படுவது இல்லை. வெற்றி கொண்ட பேரரசர் களின் சிறுபடைப் பிரிவுதானும் ஆங்கு நிறுத்தப்படு வதில்லை. பெருவீரன் ஒருவன் எண்ணற்ற நாடுகளுக்குத் தன்னைத் தலைவனாகக் கூறிக்கொள்வதும், ஆண்டுதோறும், அல்லது, அவ்வப்போது, திறைசெலுத்துவதன் மூலம், அச்சிற்றரசுகள், அப்பேரரசனின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொள்வதும் ஆகிய இவைதாம். அச்சொற்றொடர்களுக்குப் பொருளாம்" என அவர் கூறுவது காண்க. (பக்கம் : 147)

பழந்தமிழ்ப் பாடல்கள் உணர்த்தும் இரண்டாவது உண்மை, தமிழகத்தின் தென் எல்லையாம் குமரியை உள்ளடக்கிய நாஞ்சில் நாடு, தமிழகத்தின் வடஎல்லையாம், வேங்கடத்தை உள்ளடக்கிய தொண்டை நாடு, தமிழகத்தின் வடமேற்கு எல்லைக்கு அணித்தான கொண்கானம், ஏழில்

குன்றம், எருமைநாடு, குடகடலைச் சார்ந்த, சேரநாட்டு எல்லைக்குட்பட்டனவாய, குதிரை, கொல்லி, கோடை மலைகள், பாழிப்பெருநகர், வாகைப்பறந்தலை, முசிறி, தொண்டிக் கடல்துறைகள், குணகடல் நாடாம் சோழ நாட்டைச் சேர்ந்த, இடைக்கழிநாடு, கடல்மல்லை, கழார், அழிசி, ஆர்க்காடு, புகார், பாண்டி நாட்டு எல்லைக்குட்பட்ட, தோட்டி, பறம்பு, பொதினி, பொதியம், முதிரம், சிறுமலை ஆகிய மலைகள், கொற்கைத்துறை, ஆகிய இடங்களில் எல்லாம், சுருங்கச் சொல்லின், வடவேங்கடம், தென்குமரி, குணகுட கடல்களை எல்லையாகக் கொண்ட, தமிழகம் முழுவதும், தமிழ்மொழி வழங்கியது போலவே, தமிழரசர்களே, நீக்கமற இடங்கொண்டு ஆட்சிபுரிந்து வந்தனர் என்பது.

குமரிமுதல் வேங்கடம் வரையான தமிழகம் முழுவதும், தமிழே வழங்கி வந்தது, தமிழரசர்களாலேயே ஆளப்பட்டு வந்தது என்பதை மெய்ப்பிக்கும் இத்தனை அகச்சான்றுகள் இருக்கவும், காஞ்சியும், அதைச் சூழ உள்ள நாடும் தமிழரசர் களால் ஆளப்படவில்லை ; மாறாகச் சமஸ்கிருத ராஜாக் களால் ஆளப்பட்டு வந்தது எனத் திருவாளர் பி. டி. சீனிவாச அய்யங்கார் அவர்கள் கூறுவதற்கு அவர் காட்டும் முதற் காரணம், காஞ்சி ஆண்ட பழைய அரசர்கள் பெயர்கள், பழந்தமிழ்ப் பாக்களில் குறிப்பிடப்படவில்லை என்பது.

இம்முடிவு உண்மைக்கு மாறானது; பகையரசர்களை வென்று அப்பகை நாட்டு மண் அளிக்கும் பயன் உண்டு வாழும் வீரவாழ்வும், போர்த்தொழில் வல்லமையால் தலையாய சிறப்புற்ற யானைப்படையும், வளமான தேர்ப்படையும் உடைய தொண்டையரை அறிந்துள்ளார், வேங்கட நாட்டவராய கல்லாடனார். "பொருவார் மண் எடுத்து உண்ணும், அண்ணல் யானை வண்தேர்த் தொண்டையர்" (குறுந் : 260). யானைப் படையால் பெருமையுற்ற அத்தொண்டையர் வேங்கடமலை நாடாண்டவர் என்கிறார் தாயங்கண்ணனார். "வினைநவில் யானை விறல்போர்த் தொண்டையர் இனமழை தவழும்

ஏற்றரும், நெடுங்கோட்டு ஓங்குவெள் ளருவி வேங்கடம்" (அகம் : 213). அவ்வேங்கட நாட்டு வெண்கோட்டுக்களிறுகள், பாண்டியர் படைக்குப் பெருமை சேர்க்கும் பேராண்மை வாய்ந்தவை என்கிறார், மதுரைக்கணக்காயர், "வேங்கடம் பயந்த வெண்கோட்டு யானை மறப்போர்ப் பாண்டியர்." (அகம் : 27) கன்று ஈன்ற பிடி, அது ஈன்ற கன்று ஆகியவற்றின் பசியினைப் போக்க மூங்கிலின் முற்றா இளந்தளிர்களைக் கொய்து கொணர்ந்து தரும் களிறுகள் நிறைந்த வேங்கடமலை, வெற்றி தரு வேலேந்திய திரையனுக்கு உரியது எனக்கூறித் தொண்டையர்க்கு உரியதான அவ்வேங் கடத்தைத் திரையனுக்கும் உரிமையாக்குவதன் மூலம் தொண்டையர்க்கும் திரையனுக்கும் உள்ள உறவினை நிலைநாட்டியுள்ளார், காட்டூர் கிழார் மகனார் கண்ணனார், "ஈன்று நாள் உலந்த மென்னடை மடப்பிடி, கன்றுபசி களைஇய, பைங்கண் யானை, முற்றா மூங்கில் முளை தருபு ஊட்டும் வென்வேல் திரையன் வேங்கட நெடுவரை" (அகம் : 85). திரையனைப் பாட்டுடைத் தலைவனாகாக் கொண்டு, பெரும்பாணாற்றுப்படை பாடும் புலவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார், திரையனுக்கு உரிய மலை, முத்தீ மூட்டி வேள்விவேட்க விரும்பிய முனிவர்கள், களிறுகள், தங்கள் வெண்கோடுகளில் சுமந்து கொண்டுவந்து கொட்டும் விறகு கொண்டு வேள்வித் தீ எழுப்பும் விழுப்புகழ் வாய்ந்தது எனக் கூறுவதன் மூலம், வேழங்கள் மலிந்த வேங்கடமலைக்கு உரியான் திரையன் எனக், காட்டூர்கிழார் கூறியதைத் தாமும் உறுதி செய்துள்ளார். "செந்தீப் பேணிய முனிவர், வெண் கோட்டுக் களிறுதரு விறகின் வேட்கும் ஒளிறு இலங்கு அருவிய மலைகிழ வோனே" (பெரும்பாண் : 498-500) இவ்வகையால், தொண்டையர்க்கு உரிய வேங்கடம் திரையனுக்கும் உரியது எனக் கூறியதன் மூலம், தொண்டையர்க்கும், திரையனுக்கும் உள்ள உறவினை மறைமுகமாக உணர்த்திய பெரும்பாணாற்றுப்படை ஆசிரியர், அப்பாட்டுடைத் தலைவன் பெயர் திரையன் என்பதைப் "பல்வேல் திரையன் படர்குவிராயின்" (37) எனக் கூறியதன் மூலமும், அவன் தொண்டையர் மரபில் வந்தவன்

என்பதைப், பகைவர் மண் தரும் வளம் உண்ணும் உரவோர் தொண்டையர் எனத் தொண்டையோர்க்குக் கல்லாடனார் ஏற்றிக் கூறிய சிறப்பைத் தாமும், அத்தொண்டையோர்க்கு ஏற்றி, அம்மரபில் வந்தவன் என்பதைக் "கொண்டி உண்டித் தொண்டையோர் மருக" எனக் கூறியதன் மூலமும் (454) வெளிப்படக் கூறி உறுதி செய்வதும் செய்துள்ளார். இத்திரை யனையும், அவனது அழியாப் பெரும்புகழையும் அறிந்து பாராட்டியுள்ளார் நக்கீரர் "செல்லா நல்லிசைப் பொலம்பூண் திரையன்" (அகம் : 340) இத்திரையன், கடல் திரை, கொண்டு வந்து கொடுத்த மரபில் வந்தவன் என, அவன் குலவழி மரபையும், "திரைதரு மரபின் உரவோன் உம்பல்" (31) அவன் அரசாள் நாட்டின் தலைநகர் சுச்சி ஆகும். "சுச்சியோனே கைவண் தோன்றல்" (420) என அவன் தலைநகரையும் தெளிவாக்கியுள்ளார் பெரும்பாணாற்றுப்படை ஆசிரியர்.

வேங்கடம் தொண்டையர்க்கு உரியது எனக் கூறிய புலவர் தாயங்கண்ணனார், அது கூறிய அதே பாட்டில் (அகம் : 213) வேங்கடத்துக்கு அப்பால் உள்ள வடுக நாட்டையும், "வேங்கடத்து உம்பர்...வடுகர் தேஎயம்" (3-8) போர்வல்ல சேரர்க்கு உரிய கொல்லிமலை சார்ந்த மேற்கு மலையையும், "வெல்போர் வானவன் கொல்லிக் குடவரை". (15), இரவலர்க்குப் பொன் அணிகளை வாரி வழங்குவதற்காகவே கவிழும் தொடி அணிந்த கையும், வெற்றிதரு வாட்படையும் உடைய சோழர்க்கு உரிய காவிரி ஆற்றையும், "கலம் பெயக் கவிழ்ந்த கழல் தொடித் தடக்கை வலம்படு வென்றி வாய்வாள் சோழர், இலங்குநீர்க் காவிரி" (20-22) கூறியிருப்பதன் மூலம், தொண்டையர் வழிவந்த திரையன் காலத்தே, அவ்வேங்கட நாடு, அதியமான் நெடுமான் அஞ்சியின் தகடூர், வேள்பாரியின் பறம்பு போலும் நாடுகளைப் போல, மூவேந்தர் ஆட்சிக்கு உட்படாத் தனியரசு நடத்திய தமிழ்நாடாகத் திகழ்ந்தது என்பதை உணர்த்தியுள்ளார்.

அது மட்டுமன்று, சோழர்க்குரிய காவிரிக்கு வடக்கே, பெண்ணையாற்றங்கரைத் திருக்கோவலூரைத் தலைநகராகக்

கொண்டு மலையமான் திருமுடிக்காரி ஆண்டுவந்ததைப் போலவும், பாலாற்றங்கரைக் கச்சியைத் தலைநகராகக் கொண்டு திரையன் ஆண்டுவந்ததைப் போலவும், சேயாற்றங்கரைச் செங்கண்மாவைத் தலைநகராகக் கொண்ட மலை நாட்டை நன்னன் சேய் நன்னன் என்பான் ஒரு தமிழ்க் குறுநில மன்னனும், அப்பழந்தமிழர் காலத்தே ஆண்டு வந்தான். அவன் புகழ்பாடும், பாண்டி நாட்டுப் புலவராம், இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார், தம்முடைய மலைபடு கடாம் என்ற பாட்டில், அவன் பெயர் "நன்னன் சேய் நன்னன்" என்பதையும் (64), அவன் தலைநகர், கிழக்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியாய், இன்று ஜவ்வாது மலை என அழைக்கப்படும் நவிரம் "பேரிசை நவிரம்" (82) என்பதையும், அவன் நாட்டில் பெருக்கெடுத் தோடும் ஆறு, திரையன் நாட்டுப் பாலாற்றோடு கலந்து ஓடிக் கடலில் விழும் இக்காலை செய்யாறு என அழைக்கப் பெறும் சேயாறு "கானுநர் வயாஅம் கட்சின் சேயாறு" (476); "கடுவரல் கலுழிக் கட்சின் சேயாறு" (555) என்பதையும் அறிவித்துள்ளார். நன்னன் சேய் நன்னன் நாட்டுப் பரப்பின் பெருமையும், வளச் செழுமையும், மக்கள் பண்பாடும், புலவர்க்கு 583 வரிகளைக் கொண்ட ஒரு நெடும்பாட்டைப் பாடத் தேவைப்படுமளவு படர்ந்து, நீண்டு, உயர்ந்து, சிறந்து விளங்கின.

ஆக, இதுகாறும் எடுத்து வைத்த விரிவான அகச்சான்று களால், கச்சியைத் தலைநகராகக் கொண்ட வேங்கட நாடு வரையான தமிழ் வழங்கிய நாடு, பழந்தமிழர் காலத்தில் தமிழரசர்களாலேயே ஆளப்பட்டு வந்தது என்பது உறுதி செய்யப்பட்டது. ஆகவே, காஞ்சியைத் தலைநகராகக் கொண்ட நாடு, தமிழரசர்களால் ஆளப்படவில்லை, மாறாகச், சமஸ்கிருத ராஜாக்களால் ஆளப்பட்டது என்ற, திருவாளர். பி. டி. சீனிவாச அய்யங்கார் அவர்கள் கூற்று, உண்மைக்கு மாறானது என்பது தெளிவாக்கப்பட்டது.

காஞ்சியும், அதைத் தலைநகராகக் கொண்ட நாடும் பழந்தமிழர் காலத்தில், தமிழரசர்களால் ஆளப்படவில்லை.

சமஸ்கிருத ராஜாக்களால் ஆளப்பட்டது என்பதற்குத் திருவாளர் அய்யங்கார் காட்டும் பிறிதொரு காரணம், "காஞ்சீபுரம்" என்ற ஊர்ப்பெயரைக், கி. மு. 200 ஆம் ஆண்டைச் சேர்த்த பதஞ்சலி என்ற வடமொழி இலக்கண ஆசிரியர் உணர்ந்திருக்கவும், "காஞ்சி" என்ற அவ்வூர்ப் பெயர் பழந்தமிழ்ப் பாக்களில் இடம் பெறவில்லை என்பது.

கி. மு. 200-இல் வாழ்ந்த பதஞ்சலி, மதுரையின் குடிமகன் எனும் பொருள் உடையதான "மதுராபுரக", உறையூரின் குடிமகன் எனும் பொருளுடையதான "உறகபுரக" என்ற சொற்களின் பிறப்பியல் முறைக்கு இலக்கணம் கூறாமல், காஞ்சீபுரத்தின் குடிமகன் எனும் பொருளுடையதான "காஞ்சீபுரக" என்ற சொல்லுக்கு மட்டுமே பிறப்பியல் இலக்கணம் வகுத்துள்ளார். காரணம், அந்நாட்களில், காஞ்சீபுரமே, சமஸ்கிருத நாகரிகத்தின் தென்கோடி எல்லைத் தளமாக அமைந்துவிட்டதுதான். அம்மாநகர், தமிழ் வழங்கும் நாட்டில் இடம் பெற்றிருப்பினும், அதற்கு என ஒரு தமிழ்ப் பெயர் இல்லை. "கச்சி" என்பது அதன் பெயராகக், கி. பி. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த பெரும்பாணாற்றுப் படையில் (420) முதன்முதலாக இடம் பெற்றுள்ளது. ஆனால், அதுவும், இடையில் அணியும், அரைஞாண் அல்லது ஒட்டியானம் எனும் பொருள் உடையதான "காஞ்சீபுரம்" என்ற தன் சுருங்கிய வடிவமாம் "காஞ்சி" என்ற சமஸ்கிருதச் சொல்லின் தமிழ்ப்படுத்தப்பட்ட வடிவமே ஆகும். "காஞ்சீயூர்" என்ற சொல், தமிழ்ப் பாக்களில், இடம் பெற்றுள்ளது என்றாலும், அது, காஞ்சி மரங்கள் நிறைந்த ஊர் என்ற பொதுப் பொருள் உடையதே அன்றி, காஞ்சீபுரத்தின் இயற்பெயரைக் குறிக்க வல்லதன்று" (பக்கம் : 322-23) என அவர் கூறியிருப்பது காண்க.

கி. மு. ஏழாம் நூற்றாண்டினராய பாணினி, நர்மதை ஆற்றிற்குத் தென்பால் உள்ள எந்த நாட்டையும் குறிப்பிடாமைக்குத் திருவாளர் பந்தர்கார் அவர்கள், "பாணினி, பாண்டிய, சோழ, கேரள நாடுகளை அறிந்திருப்பாராயின், அவற்றின் சொல்லமைப்பு இலக்கணத்தைக் கூறமறந்த,

பொறுப்பற்ற இலக்கண ஆசிரியராக இருந்திருக்க மாட்டார், அவற்றை அவர் அறிந்திருந்தால், அவற்றிற்கான இலக்கண அமைதி கூறியிருப்பார்; அவற்றை அவர் அறிந்தவர் அல்லர். அவர் மட்டுமன்று; அக்காலத்து ஆசிரியர் எவருமே அறிந்திருக்கமாட்டார்" எனக் கூறியதை ஏற்றுக்கொள்ளாத திருவாளர் பி. டி. எஸ். அவர்கள், "பாணினி, அப்பெயர்களை நன்கு அறிந்தவர்தாம். ஆனால், அப்பெயர்கள், சமஸ்கிருதச் சொற்களாக இல்லாமல், தமிழ்ச் சொற்களாகவே, அவை பற்றிய இலக்கணத்தை வகுக்கவில்லை எனக் கூறவேண்டுமே ஒழிய, அவர் அவற்றிற்கான இலக்கணம் வகுக்கவில்லை; ஆகவே அவர், அந்நாடுகளை அறிந்திருக்கவில்லை என்பது பொருந்தாது. திரு. பந்தர்காரின் இவ்வாதம், இருக்கு வேதத்தில் ஆலமரம் குறிப்பிடப்படவில்லை என்பது கொண்டு இருக்குவேத காலத்தில் ஆலமரமே இருக்கவில்லை என்பது போலும் பொருளற்ற வாதமாம்" (பக்கம் : 123, 124) என மறுத்துள்ளார்.

அங்கு அவ்வாறு வாதிட்ட திருவாளர் அய்யங்கார், கி. மு. 200இல் வாழ்ந்த பதஞ்சலி, "மதுராபுரக", "உறகபுரக" என்ற சொற்களுக்கான இலக்கண அமைதி கூறாது, "காஞ்சிபுரக" என்பதற்குமட்டும் இலக்கண அமைதி கூறிய தற்குப் பதஞ்சலி காலத்தில், வட இந்திய மொழி வல்லுநர்க் குத் தெரிந்திருக்குமளவு சிறப்புற்று விளங்கி இருந்தாலும், அது தனக்கென ஒரு தமிழ்ப் பெயரைக் கொண்டிருக்கவில் லை என வாதிடுவது எவ்வாறு பொருந்துமோ அறியோம்.

கி. மு. ஏழாம் நூற்றாண்டினராய பாணினியின் இலக்கண நூலாம் பாணினீயத்திற்குக் கி. மு. நான்காம் நூற்றாண்டில் விளக்க உரை அளிக்கவல்ல சமஸ்கிருதப் பேராசிரியர் காத்யாயனரையும், கி. மு. நான்காம் நூற்றாண்டில் மௌரியப் பேரரசனாகத் திகழ்ந்த சந்திரகுப்தனுக்கு அமைச்சனாக இருந்து அர்த்த சாஸ்திரம் எழுதிய சாணக்கியனையும் பெற்று அளித்த பெருமைக்கு உரியது காஞ்சிமாநகர் என்பது உண்மை. (தமிழர் வரலாறு : 123, 135, 142, 325 பக்கங்கள் காண்க).

காஞ்சிமாநகர், அத்துணைப் பழங்காலத்தில், பல்கலைக் கழகப் பெரு நிலையமாகத் திகழ்ந்தது என்றால், அது, அப்பெருநிலையைத் திடுமென, எடுத்த எடுப்பிலேயே அடைந்திருக்க இயலாது; அப்பெருநிலை, அம்மாநகரத்துக்கு வந்து குடியேறியவர்கள் காலத்திற்குப் பிறகே உருவாகியிருக்கவும் இயலாது. அந்நிலை, அம்மாநகரத்து நிலைத்த குடியினராய, மண்ணுக்குரிய மக்களின் பல தலைமுறை இடைவிடா முயற்சியின் விளைவாகவே உருவாகியிருக்க வேண்டும். மேலும், அறிஞர் பெருமக்கள் பலரின் பிறப்பிடமாக வளர்ந்த ஒரு பெருநகர், தனக்கென ஒரு பெயரை, அது தோன்றிய காலத்திலேயே பெறத் தவறிவிட்டு, ஆங்கு வந்து குடியேறிய வடநாட்டுச் சமஸ்கிருத மொழியாளர், அவர்களின் மொழிப்பெயரால் பெயர் சூட்டும் வரை காத்திருந்தது என்பது, நகரங்களின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிய வரலாற்று நெறியினை உணராதார் கூற்றே ஆம்.

இக்குற்றச்சாட்டு முறையான குற்றச்சாட்டு என்பதைத் திருவாளர் பி. டி. எஸ். அவர்களும் ஏற்றுக்கொள்வர். காவிரி வைகைக்கரைத் தமிழர்களாம் அம்மண்ணுக்குரிய மக்களை, இந்தியாவுக்கு வடக்கே இருந்து வந்த வெளிநாட்டினராக மதிக்கும் சில மதியிலா வரலாற்றாசிரியர்களின் கூற்றைத், திருவாளர் பி. டி. எஸ். அவர்கள், "சில வரலாற்று ஆசிரியர்கள் திராவிடர்களின் மூதாதையர்களை, இந்தியாவின் வடமேற்கு அல்லது வடகிழக்குக் கணவாய்கள் வழியாக, நம்பிக்கை மிக்க நல்ல வழிகாட்டிகளின் துணையோடு, கொண்டுவந்து எடுத்த எடுப்பிலேயே முழுமை பெற்ற வெளிநாட்டு நாகரிகத்தோடு, காவிரி வைகைக் கரைகளில் குடியமர்த்துகின்றனர்" (பக்கம் : 2) எனக் கூறி எள்ளி நகையாடுவதும், அதேபோல், வடஆரியர் வருகைக்கு முன்பே முதிர்ந்த நாகரிகம் பெற்று மூத்த குடியினராய தமிழர்களை, நாகரிகம் அற்ற காட்டுமிராண்டிகளாய் வாழ்ந்திருந்து, ஆரியர் வருகைக்குப் பின்னரே நாகரிகம் உலகத்தில் அடியிட்டவராகக் கருதும் வேத மந்திரங்கள், இராமாயண,

பாரதக் கதைகள், பழம்புராணங்களின் கூற்றை மறுத்து, "வடஆரியர்களால் தஸ்யூக்கள் என அழைக்கப்படும் தென்னாட்டுத் திராவிடப் பழங்குடியினர், நாடு கடத்தப் பட்டும், வாழ்விடம் தேடியும் அவ்வப்போது வந்து குடியேறிய, ஆரிய வந்தேறிகளால், நாகரிகம் பெறக் காத்திருந்த, நாகரிகம் கல்லாக் காட்டுமிராண்டிப் பழங்குடியினர் அல்லர்" (பக்கம் : 32) என, அவர் கூறி யிருப்பதும் காண்க.

கி.மு. நான்காம் நூற்றாண்டில் வடஇந்தியாவுக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையிலான வாணிகம், எப்போதும் இருந்திராத அளவு மிகப்பெரிய அளவினை அடைந்திருந்தது என்று கூறிவிட்டுத் "தக்ஷண பாரதத்தில் பெரிய கனிவளச் சுரங்கங்களையும், வழிநெடுகிலும் மக்கள் பெருக்கத்தையும் கடந்து செல்லும் பெருவழிகள், பாடலியை அடையும் ஏனைய பெருவழிகளிலும் நனிமிகச் சிறந்ததாம்" எனக் கௌடல்யர் கூறியதை மேற்கோள் காட்டிப் புகைவண்டித் தொடர்களும், உந்துவண்டிகளும் அழிந்துவிடாமல் விட்டு வைத்திருக்கும் இடங்களில், இக்காலத்தும் நாம் காண்பது போல், கிரீச் எனும் ஒலி ஓயாது தொடர்ந்து எழக் குமரிமுதல் பாடலி வரையான, சீர்மிகு, சீர்கெட்ட நெடுஞ்சாலைகளில் செல்லும் மாடு பூட்டிய கட்டை வண்டிகளாம் வணிகச் சாத்துக்கள் மூலம், பெரிய வணிகப்போக்குவரத்து நடைபெற்று வந்தது என்றும் கூறியுள்ளார் திருவாளர் பி. டி. சீனிவாச அய்யங்கார் அவர்கள் (தமிழர் வரலாறு : பக்கம் ; 141 - 142 காண்க).

கி.மு. நான்காம் நூற்றாண்டின் நிலை, கடைச்சங்க காலத்தில் பெருகியிருக்குமே அல்லது, குறைந்திருக்காது. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களை ஒருமுறை படிப்பவர்க்கும், பழந்தமிழகத்தில் பேரூர்களையும், சிற்றூர் களையும் இணைக்கும் பெருஞ்சாலைகள். தமிழ்நாடெங்கும் இடம் பெற்றிருந்தன என்பதும், அப்பெருஞ்சாலைகள் இருமருங்கிலும், நெடுகிலும், சிற்றூர்களும் பேரூர்களும் இடம் பெற்றிருந்தன என்பதும் தெற்றெனப் புலனாம்.

தொண்டைமான் இளந்திரையனைக் காணச் செல்லும் பெரும்பாணனுக்குச் செல்லும் வழியினைக் காட்டுவதாகக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பெரும்பாணாற்றுப் படையில், அரசுக்கு வரவேண்டிய வரியினைத் தண்டுவோர், விற்படையோடு வழிநெடுக வீற்றிருக்கும் காவல் நிலையங்களையும் (80 - 82) அதனால், வழிச்செல்லுவார், கொண்டு செல்லும் பொருட்களைக் கொள்ளை கொண்டு ஓடிவிடும் கொடியோர் இல்லா வழி நலத்தையும் (39 - 41) உமணர், உப்புப் பொதி ஏற்றிய வண்டிகளின் பெருஞ்சாத்துத் தொடர்ந்து சென்று கொண்டே இருப்பதால், பெருவழிகள், இரவிடைச் செல்வார்க்கும் ஏமமாக அமைவதையும் (60 - 66) வழிப்போவார் தம் வயிற்றுப்பசி தீரத் தேக்கிலையில் உணவு படைக்கும், ஈத்திலை வேய்ந்த குடியிருப்புக்களைக் கொண்ட சிற்றூர்களையும் (88 - 105) செல்லும் வழி நெடுகிலும், செவ்வரிசிச் சோற்றினை வழங்கும் எயினர் காட்டரண்களையும் (121 - 133) பசுந்தினை அரிசிச் சோற்றைப் பாலுடன் கலந்து பருகப்பண்ணிப் பசி தீர்க்கும் கோவலர் குடியிருப்புக்களையும் (166 - 168) அவரைப் பருப்பு கலந்து ஆக்கிய வரகரிசிச் சோற்றை வருவார்க்குப் படைக்கும், வரகுவைக்கோல் போர்த்து வரிசை வரிசையாக உள்ள குடில்களைக் கொண்ட சிற்றூர்களையும் (191 - 196) விருந்தினர்க்குக் கோழிப் பொரியலோடு வெண்சோறு படைக்கும் வளமிக்க பேரூர்களையும் (254 - 256) கொழியல் அரிசிக் கூழைச் சுட்ட மீனோடு கொடுக்கும் வலைஞர் குடியிருப்புக்களையும் (274 - 282) நெய்யில் பொரித்த மாதுளங்காயோடு, மாவடு கலந்த இனிய உணவினை அளிக்கும் மறைகாப்பாளர் உறை பதிகளையும், (301 - 310) பிணவொடு சேரவிடாமலும், அரிசிமா தவிர்த்து வேறு எதையும் உண்ணவிடாமலும் ஓம்பி வளர்த்ததனால் கொழுத்த பன்றிக் கறியொடு களிப்பு தரும் கள்ளும் வழங்கும், செல்வம் கொழிக்கும், வான்தோய் மாடங்கள் மலிந்த பட்டினங்களையும் (336 - 345) வாழை, பலா முதலான பழவகைகளையும், பனநுங்கையும் தெவிட்டுமளவு வழங்கி, நீர் வேட்கை தணிக்கத் தெங்கின் நீரையும் வழங்கும் உழவர்

குடியிருப்புகளையும் (355 - 362) வரிசையாகக் கூறி, நாடு பல கடக்கவேண்டிய பெருவழி நலம் விரிவாக எடுத்துக் கூறப்பட்டிருப்பது, அதை உறுதி செய்வது காண்க.

ஆகப் பழந்தமிழ்க் காலத்தே பெருவழிகள், தமிழகம் எங்கும் அமைந்திருந்தன என்பதும் அப்பெருவழிகள், இருமருங்கும் அழகிய சிற்றூர்களையும், பேரூர்களையும் கொண்டிருந்தன என்பதும் தெளிவாயின; இப்பெருவழி நலத்தை அணிலாடு முன்றிலாரும், குடவாயில் கீரநக்கனாரும், கல்லாடனாரும், "அத்தம் நண்ணிய அங்குடிச் சிறுரர்" என்ற அழகிய தொடரால் (குறுந் : 41, 79 அகம் : 9) பாராட்டியிருப்பது அறிக. இவ்வாறு செல்லும் வழி நெடுகிலும், சிறுசிறு குடியிருப்புக்களே எனினும், நனிமிகப் பலவாய் இருத்தலின், வழிச்செல்வார் அச்சம் கொள்ளாது, நிழல் கண்டவழி நெடும்பொழுது இருந்து இளைப்பாறியும் மணல் பரந்த இடங்கானும் தோறும் வண்டல் முதலாம் ஆடல் புரிந்து அகமகிழ்ந்தும் செல்லுமாறு அறிவுறுத்தவும் பட்டனர்.

"நிழல் காண்தோறும் நெடியவைகி, மணல் காண்தோறும் வண்டல் தைஇ வருந்தாது ஏகு....நறுந்தண பொழில கானம்; குறும்பல் ஊர யாம் செல்லும் ஆறே" (நற் : 9) எனப் பாலை பாடிய பெருங்கடுங்கோ, வழி காட்டுவது காண்க.

பத்துப்பாட்டு எட்டுத்தொகையாகிய பழந்தமிழ்ப் பாடல்களில், நூற்று இருபத்தைந்துக்கும் மேற்பட்ட சிற்றூர், பேரூர்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள், அள்ளூர், வேலூர் என்பன போல், ஊர் என முடிவன இருபத்தைந்து மட்டுமே. அவை ஒழிந்த நூற்றுக்கு மேற்பட்ட ஊர்களில், ஆர்க்காடு என்பதுபோல், காடு என முடிவன சில; ஆலங்குடி என்பதுபோல், குடி என முடிவன சில, இடையாறு என்பதுபோல், ஆறு என முடிவன சில. இவை போல்வன ஒருசில தவிர்த்து ஏனைய எல்லாம், அம்பர், உறந்தை, இருப்பை, குமரி, கூடல், கோழி, வஞ்சி, வேம்பி என்பன போலும், இடுகுறிப் பெயர்களாகவே அழைக்கப் பெற்றுள்ளன. இவ்வகையால் பெயர் பெற்ற ஊர்களில்,

ஆலங்கானம், ஆலமுற்றம் இருப்பை, காஞ்சி, வஞ்சி, வாகை போல்வன மரத்தால் பெயர் பெற்றவை; கரந்தை, காஞ்சி, தூசி, வஞ்சி, வாகை என்பனவற்றைப் புறத்திணை வகைகளால் பெயர் பெற்றனவாகவும் கொள்ளலாம்.

சமஸ்கிருதம் அல்லது, அது சார்ந்த மொழி வழங்கும் வட நாட்டில், ஊர்ப் பெயர்கள் "புரி" அல்லது "புரம்" என்பதை ஈற்றில் கொண்டனவாய், அயோத்தியாபுரி துவராகாபுரி, மதுராபுரி, அஸ்தினாபுரம் எனப் பெயர் சூட்டப்பட்டதை ஒட்டி, இச்சமஸ்கிருத மொழியாளர்கள், தமிழகத்தில் வேர் ஊன்றிய காலத்திற்குப் பின்னர்ப் "புரம்" என்பதை ஈற்றில் கொண்டுவிட்ட, இராமனாதபுரம், காஞ்சிபுரம், சோழலிங்காபுரம், திருவத்திபுரம், திருவனந்தபுரம், வாணாபுரம், விரிஞ்சீபுரம், விழுப்புரம் போலும் சில ஊர்ப் பெயர்கள் தமிழகத்திலும் இடம்பெற்று விட்டாலும், பண்டைத் தமிழகத்தில், எந்த ஒரு ஊர்ப் பெயரும் "புரம்" என்ற ஈற்றினைக் கொண்டதாக அமையவில்லை. அதுமட்டுமன்று, பழந்தமிழ்ப் புலவர்கள், "புரம்" என்ற ஈற்றுச் சொல் வடிவை அறவே வெறுப்பதும் செய்து வந்துள்ளனர். வடநாட்டுத் துவரகாபுரியைக் குறிப்பிட நேர்ந்த ஓரிடத்திலும், "புரி" என்ற அதன் ஈற்றையும், அதை, முதல் நிலையோடு இணைக்கும். இடைப்பகுதியையும் அறவே விடுத்து, "துவரை" என அழைப்பதிலேயே ஆர்வம் காட்டியுள்ளனர். "துவரை ஆண்டு நாற்பத்தொன்பது வழி முறை வந்த வேளிர்" (புறம் : 201) என்ற கபிலர் கூற்றினைக் காண்க. அதுபோலவே, கங்கைக்கரைப் பாடலிபுத்திரத்தைக் குறிப்பிட நேர்ந்த இரு இடங்களிலும் "புத்திரம்" என்ற அதன் ஈற்றுப் பகுதியைக் கழித்துவிட்டுப் "பாடலி" என்றே குறிப்பிட்டுள்ளனர். "பொன்மலி பாடலி" (குறுந் : 75) "நந்தர் சீர்மிகு பாடலிக் குழிஇக் கங்கைநீர் முதல் கரந்த நிதியம்" (அகம் : 262) என்ற தொடர்களைக் காண்க.

இவ்வாறு, வட இந்திய ஊர்ப் பெயர்களைக் குறிப்பிடும் போதும், சமஸ்கிருத மொழியாளர்கள், அப்பெயர்களோடு இணைத்து வழங்கும் "புரம், புத்திரம்" என்பனவற்றை

விடுத்தே எடுத்தாள்வதை மரபாகக் கொண்டுவிட்ட பழந்தமிழ்ப் புலவர்கள், தமிழகத்துத் தலையாய நகர்களுள் ஒன்றாகிய காஞ்சிக்கு, அவ்வட நாட்டுப் பெயர் ஈற்றுப் பகுதியாம் "புரம்" என்பதை இணைத்துக் "காஞ்சீபுரம்" என வழங்கினர் என்பது, வாத நெறியில் ஏற்றுக் கொள்ள இயலாத ஒன்று. ஆகவே, அந்நகர்க்குப் பழந்தமிழர் இட்டு வழங்கிய பெயர் "காஞ்சி" என்பதே; அம்மாநகரில் வந்து வாழத் தொடங்கிய சமஸ்கிருத மொழியாளர், தங்கள் வட நாட்டுப் பெயர் மரபை ஒட்டி, புரம் என்பதைக் காஞ்சியோடும் இணைத்துக் காஞ்சீபுரம் என மாற்றி அழைத்தனர் என்பதே, இயல்பாகப் பெறக்கூடிய முடிவாகும்.

காஞ்சி என்பதே அதன் இயல்பான பெயராயின், ஏறத்தாழ இருநூற்றுக்கும் மேற்பட்ட ஊர்ப் பெயர்களைக் குறிப்பிடும் பழந்தமிழ்ப் பாக்களில், "காஞ்சி" என்ற பெயரும் இடம் பெற்றிருக்க வேண்டும்; ஆனால், அது இடம் பெறவில்லை. "காஞ்சீஊர" "காஞ்சி ஊரன்" என்று தொடர்கள் (அகம் : 96 குறுந் : 10, 127) இடம் பெற்றுள்ளன என்றாலும், அவை, "காஞ்சி" என்னும் ஊர்ப்பெயர் உணர்த்துவனவல்ல. காஞ்சி மரங்கள் நிறைந்த ஊருக்கு உரியவன் எனும் பொருள் தந்து காஞ்சி என்ற மரத்தின் பெயரை உணர்த்துவனவே. அதுபோலவே, மகளிர், "காஞ்சி நீழல் குரவை அயரும்" (அகம் : 336), "நீர்த்தாழ்ந்த குறுங் காஞ்சிப் பூக்கதூஉம் இளவாழை" (புறம் : 18) "நாரை தேம்கொள் மருதின் பூஞ்சினை முனையின் காமரு காஞ்சித் துஞ்சும்" (புறம் : 351) என வேறு பல இடங்களிலும், "காஞ்சி" எனும்சொல் இடம் பெற்றிருந்தாலும், அங்கெல்லாம், அது, காஞ்சிமரம் எனும் பொருளில் வந்துள்ளதேயல்லது காஞ்சிநகர் எனும் பொருளில் வரவில்லை, என்ற வாதத்தையும் வைத்துள்ளார் திருவாளர். பி. டி. சீனிவாச அய்யங்கார் அவர்கள். (பக்கம் : 323)

திருவாளர் அய்யங்கார் அவர்கள் மேலே எடுத்துக் காட்டிய தொடர்களில் இடம்பெறும் "காஞ்சி" எனும் சொல், மரத்தின் பெயரையே குறிக்கிறது என்பது உண்மை.

ஆனால் "காஞ்சி" எனும் சொல், ஊர்ப் பெயரைக் குறிக்கும் வகையில் ஆளப்படுவதும் பழந்தமிழ்ப் பாடல்களில் இடம் பெற்றுளது. கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவனைப் பாடிய பரணர், தம்முடைய பதிற்றுப்பத்துப் பாடல் ஒன்றில், அவனை வாழ்த்துங்கால், "நின் பெயர் வாழியரோ... காஞ்சியம் பெருந்துறை மணலினும் பலவே" (பதிற்று : 48) என வாழ்த்தியுள்ளதும், அக்காஞ்சியாறு, கோவை மாவட்டம் பேரூர்க்கு அருகில் ஓடும் ஆறு எனும் பொருள் கொண்டு அதை உறுதி செய்ய, "மீகொங்கில் அணி காஞ்சி வாய்ப் பேரூர்ப் பெருமானை" என்ற நம்பியாரூரர் தேவாரப் பாடலை எடுத்துக் காட்டாகக் கொள்வதும் காண்க.

கொங்கு நாட்டில் ஓடும் ஓர் ஆறு, காஞ்சி எனும் பெயர் பெற்றுளது. அது ஓடும் இடம், தமிழகத்து மக்கள் ஒரு சிலரால் மட்டுமே அறியத்தக்கதாக, தமிழகத்தின் ஒரு கோடியாம் கொங்கு நாடே எனினும், காஞ்சி எனும் பெயரே, பழந்தமிழ் இலக்கியத்தில் இடம் பெறவில்லை என்ற கூற்றினை மறுக்கவல்ல, நல்ல வலுவான சான்றாக, அது அமைந்துவிட்டது.

மேலும், காஞ்சி எனும் பெயரைக் கொங்கு நாடு சென்றுதான் தேடி அலையவேண்டும் என்ற தேவையும் இல்லை. காஞ்சியிலேயே, அது, காணக்கிடக்கிறது. நற்றிணை 123 ஆம் பாடலைப் பாடிய புலவர் பெயர், காஞ்சிப் புலவர் என்பது. அதுபோலவே, குறுந்தொகை, 173 ஆம் பாடலைப் பாடிய புலவர், மதுரைக் காஞ்சிப்புலவர் என்பது, அதே குறுந்தொகையில் 213, 216 பாடல்களைக் பாடிய புலவர் பெயர், கச்சிப் பேட்டுக்காஞ்சிக் கொற்றனார் என்பது. இவர் பெயரில் காஞ்சியின் பிறிதொரு பெயரும், பெரும் பாணாற்றுப்படையால், திரையன் தலைநகராம் பெருமைப் படுத்தப்பட்டதுமான கச்சியும் இணைந்தே வழங்கப் பெறுவது கவனிக்கத்தக்கது. மேலும், அதே குறுந் தொகையில், 30, 172, 180, 192, 197, 287 பாடல்களைப் பாடிய ஒரு பெண்பாற்புலவர் பெயர், கச்சிப்பேட்டு நன்னாகையார் என்பது; கூறிய எடுத்துக்காட்டுக்களால், புலவர் பலரை

அளித்த பெருமைக்கு உரியது காஞ்சியும், கச்சியும் என்பதும், தத்தம் இயற்பெயர்களோடு, தாம் பிறந்த ஊர்ப்பெயரை இணைத்துக்கொள்வது, தமக்குப் பெருமை சேர்க்கும் என உணர்ந்து சேர்த்துக் கொள்ளப்படுமளவு பெருமை பெற்ற பெருநகராகக் காஞ்சியும், கச்சியும் திகழ்ந்தன என்பதும் தெளிவாயின.

புலவர்களை ஈன்று அளித்த பெருமை, காஞ்சிக்கும் கச்சிக்கும் மட்டுமே தனி உரிமையாய் அமைந்துவிடவில்லை. அப்பேரூர்களைத் தலைநகராகக் கொண்ட காஞ்சிக்கு அணித்தாக, மேற்கே உள்ள தாமலும், காஞ்சிக்குக் கிழக்கே, சற்றே தொலைவில் உள்ள உரோடகமும் கூடப் புலவர்களைப் பெற்றளித்த பெருமையினைப் பங்கிட்டுக் கொண்டுள்ளன. சோழன் நலங்கிள்ளி தம்பி, மாவளத் தானோடு, ஒரு நிகராக அமர்ந்து வட்டாடும் நெருக்கமும், அவ்வாட்டாடலை அவன் பிழை பட ஆடிய போது, அவனைக் கண்டிக்கும் உரிமையும், அவன், தன் பிழை உணர்ந்து வருந்தியபோது, அவனைப் பாராட்டிய பெருநட்பும் உடைய பெருந்தகைப்புலவர் பல்கண்ணனார் பிறந்த ஊர், காஞ்சி நாட்டுத் தாமலே, (புறம் : 447) நற்றிணை 306, குறுந்தொகை 155, நெடுந்தொகை 23, 95, 191 ஆகிய பாடல்களைப் பாடிய கந்தரத்தனார், பிறந்த ஊரும் காஞ்சி நாட்டு உரோடகமே.

ஆக, வேங்கடத்தை அடுத்த காஞ்சிமண்டலம் தமிழ் வழங்கிய மண், தன்மொழிப் பெயராம், காஞ்சி, கச்சி மாநகர்களை, இருபெரும் தலைநகர்களாகக் கொண்டிருந்த பழம் பெருமை வாய்ந்தது என்பது தெற்றெனத் தெளிவாக்கப் பட்டது.

காஞ்சியும், கச்சியும் தொண்டை நாட்டுத் தலைநகர்களாக இல்லையாயினும், பெருநகரங்களாக இருந்தன என்பது உண்மையாயின், அத்தொண்டை நாட்டுப் பல்வேறு பகுதிகளையும், பல்வளங்களையும் பாடிய பெரும் பாணாற்றுப் படை ஆசிரியர், தம்முடைய நெடிய பாட்டில், காஞ்சியைக் குறிப்பிடாமல், கச்சியை மட்டும் குறிப்பிட்டி

குப்பது ஏன்? அவர், அது குறிப்பிடாமை, காஞ்சி இன்மையை உறுதி செய்வதாகக் கோடல் கூடாதோ என்ற கேள்வி எழல் கூடும். கேள்வி, விடையிறுக்க வேண்டிய முக்கிய கேள்விதான்.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டுப் பாக்களால் அறியப்படும் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் உள்ளிட்ட பாண்டிய அரசர்களைப் புகழ்ந்து பாடும் புலவர்களுள், மாங்குடி மருதன் தவிர்த்த அனைத்துப் புலவர்களும், அப்பாண்டிய அரசர்களோடு, அப்பாண்டியர் தலைநகரை இணைத்துப் பாடும்போது, மதுரையைக் கூறாமல், கூடலையே கூறியுள்ளனர். பாண்டியர் தலைநகரைக் குறிப்பிடும் பாடல்கள், நற்றிணையில் இரண்டு (39, 298) அகத்தில் ஐந்து (93, 116, 253, 296, 315) புறத்தில் ஒன்று (88).

நெடுநல்வாடை மூலம், செழியன் புகழ்பாடும் நக்கீரரும், அப்பாட்டில், மதுரை கூடல் என்ற இரண்டில் எந்த ஒரு பெயரையும் குறிப்பிடவில்லை எனினும், அவன் புகழ் பாடும் அகநானூற்றுப்பாடல் ஒன்றில் "நாடுபல தந்த பசும்பூண் பாண்டியன் பொன்மலி நெடுநகர் கூடல்" (213) எனக் கூடலை மட்டுமே குறிப்பிட்டுள்ளார்.

மதுரைக்காஞ்சி மூலம், நெடுஞ்செழியன் புகழ்பாடும் மாங்குடி மருதனார், அப்பாட்டில் 699 ஆம் வரியில் மதுரையைக் குறிப்பிட்டுள்ளார் என்றாலும், அது குறிப்பிடுவதன் முன்னர், 429ஆம் வரியில், "மாடம்பிறங்கிய மலிபுகழ் கூடல்" எனக் கூறி, கூடலுக்கே முதல் இடம் தந்துள்ளார்.

பாண்டியர் தலைநகர்க்கு, மதுரை, கூடல் என்ற இரு பெயர்கள் இருக்கவும், பாண்டியர் புகழ்பாடும் புலவர் பலரும், கூடலுக்கே முதல் இடம் தந்து குறிப்பிடுவது போல் வேங்கடம் அடுத்த தொண்டைநாட்டுத் தலைநகர்க்கு காஞ்சி, கச்சி என்ற இரண்டு பெயர்கள் இருக்கவும், அக்காஞ்சி நாடு பாடிய புலவர், பெரும்பாணாற்றுப்படை ஆசிரியர், காஞ்சியைக் குறிப்பிடாமல், கச்சியை மட்டும் குறிப்பிட்

டுள்ளார் எனக் கொண்டால், அவ்வாறுதான் கொள்ள வேண்டும். அப்பகுதி, தமிழ் அரசர்களால் ஆளப்படவில்லை என்பதற்கு, அப்பகுதி தலைநகர்க்குத் தமிழ்ப் பெயர் இடப்படவில்லை என்பதைக் காரணமாக்க காட்டும் வாதம், பொருளற்ற வாதமாகப் போய்விடுவது காண்க.

வேதகாலம் கி. மு. 3000க்கும் கி. மு. 1500க்கும் இடைப்பட்டது என்பது, திருவாளர் அய்யங்கார் அவர்கள் முடிவு; தமிழர் வரலாறு ; முன்னுரை; பத்தி 7. காண்க. அவ் வேத காலத்தில், அணி நலம் குறித்து, வடஆரியர்கள், பயன் படுத்துப்பட்ட பொருள்களுள், தென்கோடி விளைபொருளாம் முத்து (பக்கம் : 22) வேத இலக்கியங்களில் "முக்தா" "விமுக்தா" என வழங்கப்படுவது கொண்டு, திருவாளர்கள், மெக்டோனால், கெய்த், மோனியர் வில்லியம்ஸ் ஆகிய வரலாற்றுப் பேராசிரியர்கள், சிப்பியிலிருந்து விடுவிக்கப்பட்டது எனப் பொருள் கூறி, அச்சொற்களுக்குச் சமஸ்கிருதப் பிறப்பியல் கூறவும், திருவாளர் அய்யங்கார் அவர்கள், அவர்களின் அம்முடிவை மறுத்துவிட்டு, வேதகால ரிஷிகள் தென்கோடி முத்தோடு, முத்து எனும் பொருள் உடையதான "முத்தம்" என்ற அதன் பெயரையும் கடனாகப் பெற்று, "முக்தா" என்ற சமஸ்கிருத வடிவமும் கொடுத்து விட்டனர் என உறுதி தொனிக்கும் குரலில் கூறியுள்ளார். (பக்கம் : 23, 24).

தமிழகத்தின் தென்கோடியில் வழங்கிய முத்து என்ற தமிழ்ச்சொல், கி. மு. 1500க்கு முன்னரே, வடஇந்தியாவுக்குச் சென்று, அவ்வடவர்களால், "முக்த" என்ற அவ்வடவர்களின் சமஸ்கிருத வடிவம் பெற்று வழங்கலாயிற்று என்றால், கி. மு. நான்காம் நூற்றாண்டில், அதாவது தமிழகத்து "முத்து" என்ற தமிழ்சொல், வடநாட்டிற்குச் சென்று, அவ்வடமொழி வடிவினதாக மாறி வழங்கப்பட்ட காலத்துக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிற்பட்ட காலத்தில், தமிழகத்தின் வடவெல்லை நாட்டு நகரின் பெயராம் காஞ்சி அவ்வடவரால், அப்பிற்பட்ட காலத்தே கொண்டு வரப்பட்ட "காஞ்சீபுரம்" என்ற சமஸ்கிருதச் சொல்லின், சுருங்கிய

வடிவமாம் எனல் எங்ஙனம் பொருந்தும். காஞ்சி என்பதே பழந்தமிழ்ப் பெயர்; தங்கள் ஊர்ப் பெயர்களோடு "புரம்" என்பதை இணைக்கும் வழக்கத்தை ஒட்டி, காஞ்சி வந்த ஆரியர்கள், அக்காஞ்சி என்பதன் பின்னர்ப் புரம் என்பதை இணைத்துக் காஞ்சீபுரம் என ஆக்கிவிட்டனர் என்பதே மொழி வளர்ச்சியின் இயல்பு நெறியாகும்.

ஆக, இதுகாறும் எடுத்து வைத்த விரிவான, விளக்கச் சான்றுகளால், "பழந்தமிழ்ப் பாக்களில், காஞ்சி நாடாண்ட பழந்தமிழரசர் பெயர் குறிப்பிடப்படவில்லை; அந்நாட்டுக் காஞ்சி, கச்சி என்ற பெயர்கள் தாமும் தமிழ்ச் சொற்கள் ஆகா; வடக்கிலிருந்து வந்து அங்கு வாழத் தொடங்கிய சமஸ்கிருத மொழியாளர்கள், அந்நகருக்கு இட்டு வழங்கிய சமஸ்கிருதப் பெயராக, "காஞ்சீபுர" என்பதன் சுருங்கிய வடிவமும், அதன் தமிழாக்க வடிவமுமே ஆம் என்ற, திருவாளர் அய்யங்கார் அவர்களின் கூற்றிற்கான அகச்சான்று எதுவும் இல்லை ; அது வெறும் கற்பனையே, என்பதும், மாறாக அந்நாடாண்ட பழந்தமிழ் அரசர் பெயர் குறிப்பிடப்பட்டுளது ; காஞ்சி என்பது, பழந்தமிழர் அறிந்த தனித்தமிழ்ப் பெயரே; கச்சி, அதன் தமிழாக்கம் அன்று, மாறாகக், காஞ்சியின் மற்றொரு பெயர் என்பதற்கான அகச்சான்றுகளே நிறைந்துள்ளன என்பதும் தெளிவாக்கப்படவே, "காஞ்சி மாநகர், தமிழ்நாட்டின் எல்லைக்குள் இடம் பெற்றிருந்தாலும், பண்டைக்காலத்தில், அது தமிழர் நாகரிகத்தைக் கொண்டிருக்கவில்லை; மாறாகச் சமஸ்கிருத நாகரிகத்தின் ஒரு நாயகமாகவே இருந்தது; அது, தமிழ் அரசர்களாலும் ஆளப்படவில்லை; மாறாக, ஆரிய ராஜாக்களால் ஆளப்பட்டது" என்ற அய்யங்கார் கூற்று, உண்மைக்கு அப்பாற்பட்டது என்பது உறுதிபடத் தெளிவாக்கப்பட்டது.

தொண்டை மண்டலத்துத் தலைசிறந்த நகரின் பெயர். கி. மு. இரண்டாவது நூற்றாண்டு தொட்டே, "காஞ்சி" என்ற தனித் தமிழ்ச் சொல்லினாலேயே பெயர் பெற்றிருந்தது என்பதை உறுதி செய்யும் வலுவான வரலாற்றுச் சான்று ஒன்றும் உளது.

திருவாளர், கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் தம்முடைய "தென்னிந்தியா பற்றிய வெளிநாட்டவர் குறிப்புகள்" (Foreign Notices of South India) என்ற ஆங்கில நூலின் நான்காம் பக்கத்தில், "திருவாளர் பால் பெல்லியோட் (Pawl Pelliot) என்பாரின் கண்டுபிடிப்பாம், கி. மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து தொடங்கும் "ஹன்" (Han) இனத்தவர் ஆட்சிக்காலத்தில், சீனாவுக்கும், தென்னிந்தியாவுக்கும் இடையில் மிகப்பெருமளவிலான போக்குவரத்து நிலவியதை உறுதி செய்யும், திருவாளர் "பான் கௌ" (Pan kaw) என்ற, நனிமிகப் பழம்பெரும் சீன எழுத்தாளரின் படைப்பின் ஒரு பகுதி, அண்மைக்கால வரலாற்று ஆய்வு அளித்த நனிமிகு வியத்தகு முடிவு" எனப் பால் பெல்லியோட் என்பாரை அறிமுகம் செய்துள்ளார்.

பின்னர், 44, 45 பக்கங்களில், "கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் காஞ்சியும் சீனாவும்" என்ற தலைப்புள்ள இரண்டாம் அதிகாரத்தில், முதல் பத்தியில், "கி. பி. முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த, "பான் கௌ" (Pan Kow) என்ற சீன எழுத்தாளர், தம்முடைய "இட்சின் ஹன் சௌ" (Tsein han chow) என்ற நூலின், "தொன்கின்" (Tonkin) வளைகுடாவின் உள் நாடாம், "மேல் அன்னம்" (Upper Annam) என இப்போது வழங்கப்படும் "ஜே-நன்" (Je-Nan) நுழைவாயிலிலிருந்து புறப்பட்டு, படகுவழியாக, ஐந்து திங்கள் பயணம் செய்து, "தொன்-யுவான்" (Ton-Ywan) நாட்டை அடைந்தோம். பின்னர்க் கடல் வழி நான்கு திங்கள் பயணத்திற்குப் பின்னர், 'யி-லௌ-மொ' (Yi-Low-Mo) என்ற நாட்டை அடைந்தோம். மேலும் இருபது நாட்களுக்கு மேற்பட்ட கடல் பயணம் மேற்கொண்ட பின்னர்ச் "சென்-லி" (Chen-Li) என்ற நாட்டை அடைந்தோம், அங்கிருந்து நீங்கள், பத்துநாட்களுக்கு மேற்பட்ட நிலவழிப் பயணம் மேற்கொண்டால், 'பவ்-கன்-தொள-லொ' (Fow-Kan-Tow-Low) என்ற நாட்டை அடைவீர்கள். அந்நாட்டிலிருந்து படகு வழியாக இரு திங்களுக்கு மேல் பயணம் செய்தால், 'ஹௌளங்-டெச்' (Howang teche) என்ற நாட்டை அடைவீர்கள். அந்நாட்டுப்

பழக்கவழக்கங்கள், 'தச்செளயை' (Tchow-yai) நாட்டுமக்கள் பழக்கவழக்கங்கள் போலவே உள்ளன. இந்நாடு பரந்து அகன்று, மக்கள் பெருக்கத்தால் மிகுந்து, அரும்பொருட்கள் பலவற்றை ஆக்குவதாக விளங்குகிறது. கி. மு. 140-86 காலத்தவரான, பேரரசர் 'வெள' (Wow) காலம் முதல், அரும் பொருட்களைச் சீனாவிற்கு அனுப்பி வைக்கிறது" என எழுதி வைத்திருப்பதை எடுத்துக் காட்டியுள்ளார்.

"பான்-கெள" என்ற சீன எழுத்தாளன் கூறியதை, முதல்பத்தியில் எடுத்துக் காட்டிய திருவாளர் நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள், இரண்டாவது பத்தியில், "டெளங்-பாவோ" (Towng-pao) என்ற நூலில், திருவாளர் 'பால்பெல்லி யோட்' அவர்கள், 'ஹெளஆங்-டெக்' (Hawang-teche) என்ற தொடருக்குப், பல்வேறு வரலாற்றுப் பேராசிரியர்கள் அளிக்கும் விளக்கங்களையெல்லாம் மறுத்துவிட்டு, 'ஹன்' (Han) காலத்துச் சீனமொழி ஒலியியல் கூற்றுப்படி, 'ஹெள ஆங்-டெக்' என்பதற்குக் "காஞ்சி" என்பதே ஏற்புடைய இணையாம்" எனத் திருவாளர் பெர்ரன்ட் (Ferrand) என்பார் கூறும் விளக்கத்தையும் எடுத்தாண்டுள்ளார்.

அதுமட்டுமல்லாமல், கிபி. 11ஆம் நூற்றாண்டில், சோழப் பேரரசு, சீனப்பேரரசுக்கு அனுப்பிய தூதுவர், சீனா சென்றடைய எட்டுத் திங்களை எடுத்துக் கொண்டுள்ளார் என்பதை எடுத்துக் காட்டுவதன் மூலம், கி. மு. இரண்டாம் நூற்றாண்டில், சீன யாத்திரிகன் ஒருவன், காஞ்சி வந்து சேர, 12 திங்களை எடுத்துக்கொள்ள நேர்ந்தது என்பது ஏற்கக் கூடியதே என்பதை வலியுறுத்தும், திருவாளர் பால் பெல்லியோட், அவர்களின் வாதத்தையும் எடுத்து வைத்துள்ளார், திருவாளர் நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் (பக்கம் : 45).

ஆக, மேலே கூறியிருப்பனவற்றையெல்லாம் எடுத்தாண்டி ருப்பதன் மூலம், கி.மு. இரண்டாம் நூற்றாண்டு காலத் திலேயே காஞ்சிநாடு, 'காஞ்சி' என்ற பெயரிலேயே இடம் பெற்றிருந்தது. சீன நாட்டிற்கு அரும்பொருட்களை அனுப்பும் வளம்மிக்க நாடாகவும் திகழ்ந்தது என்பதற்கான

தம்முடைய ஒப்புதலைத் திருவாளர் நீலகண்ட சாஸ்தியார் அவர்கள், தந்துள்ளார் என்பது தெளிவாகிறது.

மேலும், சென்னைப் பல்கலைக் கழகத்தில், பண்டை வரலாற்று மற்றும் தொல்பொருள் துறைப் பேராசிரியராகப் பணிபுரிந்த திருவாளர். தே. வை. மகாலிங்கம் அவர்கள் 1963-இல் ஆற்றிய ஆறு விரிவுரைகளின் தொகுப்பாக, 1968-இல் வெளியிடப்பட்ட, "தென்னிந்திய பண்டை வரலாற்றில் காஞ்சீபுரம்" (Kancheepuram in Early South Indian History) என்ற தம் நூலில், "காஞ்சீபுரம், அதன் தொடக்கம்" (Kancheepuram its Beginning) என்ற முதல் அதிகாரத்தில், பக்கம் 9-இல் கி. மு. இரண்டாம் நூற்றாண்டில், காஞ்சியின் நிலைகுறித்துத் திரு. பான்கொள என்ற சீன எழுத்தாளன் கூறிய இதே நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுள்ளார்.

1939 ஆம் ஆண்டில், அதாவது திருவாளர். பி. டி. சீனிவாச அய்யங்கார் அவர்கள், 'தமிழர் வரலாறு' என்ற தம்முடைய நூலை வெளியிட்ட பத்து ஆண்டுகள் கழித்து, வெளியிடப் பட்ட திருவாளர், நீலகண்ட சாஸ்திரியார் அவர்களின், "தென்னிந்தியா பற்றிய வெளிநாட்டவர் குறிப்புகள்" என்ற நூலையோ, திருவாளர். தே. வை. மகாலிங்கம் அவர்களின் நூலையோ திருவாளர் அய்யங்கார் அவர்கள் பார்த்திருக்க வாய்ப்பு இல்லை. ஆகவேதான் 'காஞ்சி' என்பது, தமிழ்ச் சொல் அன்று, "காஞ்சீபுரக" என்ற சமஸ்கிருதச் சொல்லின் சுருங்கிய வடிவம் : அதன் தமிழாக்கமே கச்சி என்றும், காஞ்சி மண்டலம் தமிழரசர்களால் ஆளப்படவில்லை; மாறாக, சமஸ்கிருத ராஜாக்களால் ஆளப்பட்டிருந்தது என்ற தவறான முடிவிற்குத் திருவாளர் அய்யங்கார் அவர்கள் தள்ளப் பட்டுள்ளார்.

♦ ♦ ♦

11. கரிகாலன்

வெண்ணிப் போர் :

பழந்தமிழ்ப் பாக்களில், பெயர் சுட்டிக் குறிப்பிடப் பட்டிருக்கும் முதல் தமிழ்ப் பேரரசன், கரிகாலன். சமகாலப் புலவர்களால் பாடப்பெற்று, அது காரணத்தால், அவன் வாழ்க்கையைத், திரும்பவும் அமைக்கப் பெருந்துணை புரியும், மூன்று குறும்பாடல்களாலும், இரு நெடும்பாடல்களாலும், அவன் பாராட்டப் பெற்றுள்ளான். அவற்றுள் ஒன்று, பெண்பாற் புலவர் வெண்ணிக் குயத்தியாரால் பாடப்பெற்றது. வெண்ணி எனவும் அழைக்கப்பெறும் அவ்வெண்ணி, தஞ்சை மாவட்டத்தில், தென்னிந்தியப் புகைவண்டித் தொடர் நிலையமாம், இன்றைய கோயில் வெண்ணி ஆகும். பண்டை நாட்களில், பாடற்கலை என்பது, உள்ளுணர்வின் இயல்பான எழுச்சி; கற்றுப்பெற்ற புலமையின் விளைவு அன்று; கவிதைக்கான அகத்தூண்டு தலின் பயன்; பண்டிதர்களின் திட்டமிட்ட படைப்பு அன்று; பழைய தொகை நூல்களால், சான்று காட்டல் போல், அனைத்து இனம், அனைத்து நிலைகளையும் சேர்ந்த ஆடவர், மகளிர் ஆகிய இருவரும் பாக்கள் புனைந்தனர். வெண்ணியைச் சேர்ந்த குயவர் மகள், வெண்ணிக்குயத்தியார் வெண்ணிப்பறந்தலைப் போரில், பகைவன் ஒருவன்பால், கரிகாலன் கொண்ட வெற்றிக் கொற்றத்தையும், தோற்று அவமானப்பட்ட அப்பகைவனின் தற்கொலைக் கொடு மையையும் பாடியுள்ளார். இவ்வாறு செல்கிறது, அப்பாட்டு :- "நீரால் நிறைந்த பெரிய கடலில் காற்றின் துணை இன்றிப் பெருங்கலங்கள் ஓடாதாக, ஆங்கு அக்காற்றினை ஏவல் கொண்டு நாவாய் ஓட்டிய வலியோன் மரபில் வந்தோனே! போர்மதம் மிக்க யானைப் படையுடைய

கரிகால் வளவ! படையெடுத்துச்சென்று, பகைவர் ஆற்றிய போர்த் தொழிலை அழித்து, உன் பேராண்மை வெளிப்பட வெற்றி கொண்டவனே! ஆரவாரம் மிக்க புதுப்புது வருவாய்களைக் கொண்ட வெண்ணி எனும் இடத்தில் நடைபெற்ற போர்க்களத்தில், பெரும்புகழை இப்பேருலகில் நிலைபெறப் பண்ணிப் போரில் புறப் புண் பெற்றமைக்கு நாணி, வடக்கிருந்து உயிர் நீத்த உன்பகைவன், நின்னினும் நல்லன் அல்லனோ?

"நளிஇரும் முந்நீர் நாவாய் ஓட்டி,
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக !
களிஇயல் யானைக் கரிகால் வளவ !
சென்று அமர்க்கடந்த நின் ஆற்றல் தோன்ற
வென்றோய் ! நின்னினும் நல்லன் அன்றே !
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப்புகழ் உலகம் எய்திப்
புறப்புண் நாணி வடக்கு இருந்தோனே".

புறநானூறு : 66.

மிகச் சிறந்த பெரும்பாட்டாம் பொருநராற்றுப் படையிலும் (பொருநனுக்குப் பொருள் கிடைக்கும் இடமும் வழியும் கூறும் பாட்டு) - இப்போர் குறிப்பிடப்பட்டுளது. கரிகாலன் சமகாலத்தவரும், யாதோ ஒருவகையில் முடம்பட்ட உடலுறுப்புடையாரும், தலைமாலை அணிந்தவரும் ஆகிய முடத்தாமக் கண்ணியாரால், கரிகாலனின் கொலை வளம் பாராட்டப் பெறும் அப்பாட்டு, கரிகாலனை இவ்வாறு சிறப்பிக்கிறது : "கரியபெரிய பனைமரத்தின் குருத்து ஓலையாலாம் மாலையும், கரிய அடிமரத்தினையும் கிளைகளையும் கொண்ட, மரம் அறுக்கும் வாளின் வாய்போன்ற வேம்பின் அழகிய தளிர்களால் ஆன மாலையும், புகழால் உயர்ந்த பெரிய தலையில், மேலும் புகழ்பெருக முறையே அணிந்து கொண்ட சேரனும், பாண்டியனும், ஒரே போர்க்களத்தில் இறந்து போமாறு,

வெண்ணி என்ற ஊரின்கண்ணே நடைபெற்ற போரில் அவரோடு போரிட்ட, பகைவர் அஞ்சத்தக்க பேராண்மை யினையும், அதற்கேற்ற பெருமுயற்சியினையும், கண்ணுக்கு அழகூட்டும், ஆத்திமாலையினையும் உடைய கரிகால் வளவ !"

"இரும் பனம் போந்தைத் தோடும், கரும்சினை
அரவாய் வேம்பின் அங்குழைத் தெரியலும்
ஓங்கிரும் சென்னி மேம்பட மிலைந்த,
இருபெரு வேந்தரும் ஒருகளத்து அவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்தாள்,
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவ!"

- பொருநராற்றுப்படை : 143 - 148.

போரில் புறப்புண் பெற்றுவிடும் அரசன், போர்க்களத்தில், தன் கழுத்தைத் தன் கைவாளால் தானே அறுத்துக்கொண்டு விடுதல், பழம்பாக்களில், "வாளொடு வடக்கிருத்தல்" என்ற மரபுத் தொடரால் அழைக்கப்படும். "வடக்கிருத்தல்" என்ற தொடர், வடக்கு நோக்கி இருந்து உயிரைப் போக்கிக் கொள்வது, அல்லது வடக்கே உள்ள ஓர் இடத்தை அடைந்து, உண்ணாது இருந்து உயிர்விடுவது என்னும் பொருள் உடையதாகும். கரிகாலனின் பகைவர், ஒரு பாண்டிய வேந்தனும், மற்றொரு சேர வேந்தனுமாவர். இவர்களுள், பின்னவன், வெண்ணிப்போரில் வடக்கிருந்து உயிர்விட்ட செய்தி, அந்நிகழ்ச்சியை இறந்தகால நிகழ்ச்சியாகக் கூறுவதால், காலத்தால் பிற்பட்டதான ஓர் அகப்பாட்டிலும் கூறப்பட்டுளது.

"கரிகால் வளவனொடு வெண்ணிப்பறந்தலை
பொருது புண் நாணிய சேரலாதன்
அழிகள மருங்கின் வாள் வடக்கு இருந்தென."

- அகம் : 55 : 10 - 12.

சேரலாதன், சோழ அரசன் கரிகால் வளவனோடு, வெண்ணிப்போர்க் களத்தில் போரிட்டுத் தோற்றுப் போரில்

புறப் புண் பெற்றமைக்கு நாணி, அப்போர்க்களத்திற்கு அணித்தாக வாளோடு வடக்கிருந்து உயிர்விட்டான். இப்பாட்டில் அச்சேரன், சேரலாதன் எனப்பட்டுள்ளான். இச்சேர வேந்தனின் இச்செயலைக் குறிப்பதாகச் செய்யுள் மூலத்தில் எதுவும் இல்லை ஆயினும் 65 ஆம் எண், புறநானூற்றுச் செய்யுளும், இப்போர் பற்றிக் கூறுவதாகக் கூறப்படுகிறது.

"தன்போல் வேந்தன் முன்பு குறித்து எறிந்த
புறப்புண் நாணி, மறத்தகை மன்னன்
வாள்வடக்கு இருந்தனன்."

-புறம் : 65 : 9 - 10

[மறம் மிக்க மன்னன், தன்போலும் மறம்மிக்க பேரரசன் தன் ஆண்மை குறித்து எறிந்த வேலால் முதுகில் புண் பெற்றுவிட்டமைக்கு வெட்கி, வாளோடு வடக்கிருந்து உயிர்விட்டான்.]

புறப்பாடல்களைத் தொகுத்துப் பதிப்பித்த ஆசிரியர், அகம் 55 ஆம் எண் செய்யுள், சேரலாதன் வடக்கிருந்ததைக் குறிப்பிடுவதால், இப்புறப்பாடலும் (65) அதே நிகழ்ச்சியைக் குறிப்பதாகவே கருதி, அச்செய்யுளின் கீழ்க் கொடுத்திருக்கும் கொளுவிளக்கத்தில் அவ்வாறே கூறியுள்ளார். அகம், அவன் பெயரைச் சேரலாதன் என்று குறிப்பிட்டிருக்க, இப்பாட்டின் கொளு, அவன் பெயரைப் பெருஞ்சேரலாதன் என்று அழைக்கிறது. இச்சேரனின் பெயர், இக்கொளுவில் அல்லாது, வேறு எந்தச் செய்யுளிலும் இடம்பெறவில்லை யாகவே, இவ்வேந்தன் குறித்து இது தவிர்த்து வேறு எதுவும் தெரியவில்லை.

கரிகாலன் இளமை வாழ்க்கை :

பொருநராற்றுப்படை, கரிகாலன், தலைநகரை, உறையூரிலிருந்து, காவிரி கடலோடு கலக்குமிடத்தில் உள்ள காவிரிப்பூம்பட்டினத்திற்கு மாற்றுவதற்கு முற்பட்டதான, அவனுடைய ஆட்சிக்காலத்து முற்பகுதியில் பாடப்

பட்டிருக்க வேண்டும். அது, அவனை இளையோன், தந்தையின் இறப்பிற்குப் பின்னர்ப் பிறந்தவனாகக் குறிப்பிடுகிறது. "வெல்லும் வேற்படையினையும், அழகிய பல தேர்ப்படைகளையும் உடைய இளஞ்சேட் சென்னியின் திருமகன்; முருகக் கடவுளின் சினம்போலும் கடுஞ்சினம் உடைமையால், பகைவர்களை உளம் நடுங்கப் பண்ணும் தலைமையுடையான், தாயின் வயிற்றில் கருவாக இருக்கும் போதே, அரச உரிமையைப் பெற்றவன். பண்டு அவன் வலியறியாது பகைத்து நின்ற பகைவர், பின்னர் அவன் வலியறிந்து வந்து அவன் ஏவல் கேட்டு நின்றனர். அவன் ஏவல் கேட்டு அதன்படி நடந்துகொள்ளாத பகை நாட்டவர், அவனால் வர இருக்கும் கேடுகளை எண்ணிக் கலக்கம் உற்றிருந்தனர். உலகத்து உயிர்கள் அனைத்தும் விரும்பும் வெம்மையுடையோனாகி இளஞாயிறு, பகற்போதைச் செய்யும் தன் கதிர்களைக் கடல்மீது பரப்பியவாறே எழுந்து, பின்னர், மெல்லமெல்ல விண்ணிடத்தே உயர்வது போலப் பிறந்து, மண்ணில் தவழக் கற்றுக் கொண்ட அந்நாள் தொடங்கி, நாடாளும் பெரும்பாரத்தைத் தன் தோள் மேற்கொண்டு, அதன் வளத்தை நாள்தோறும் பெருக்கினான். ஆளி என அழைக்கப்படும் நல்ல விலங்காம் சிங்கத்தின், எதிர்ப்படும் அனைத்து உயிர்களையும் வருத்தும் குட்டி, கூற்றுவன் ஆற்றலிலும் மிக்க ஆற்றல் உடைமையால் செருக்குற்றுப் பால் உண்டலைக் கைவிடமாட்டா அத் துணை இளம் பருவத்தில் இரைதேடிச் சென்ற முதல் வேட்டையில், களிற்று யானையைக் கொன்று வீழ்த்தியது போலக் கரிகாலன் வெண்ணியில் இருபெரு வேந்தரை அழித்தான். ஆகக் கரிகாலன் பாண்டிய, சேர அரசர் இருவரை வெற்றி கொண்டான்.

"வெல்வேல்
உருவப் பல்தேர் இளையோன் சிறுவன்,
முருகன் சீற்றத்து உருகெழு குருசில்,
தாய் வயிற்றிருந்து தாயம் எய்தி,
எய்யாத் தெவ்வர் ஏவல் கேட்பச்,

செய்யார் தேஎம் தெருமரல் கலிப்பப்,
பௌவம் மீமிசைப் பகல்கதிர் பரப்பி,
வெவ்வெம் செல்வன், விசும்பு படர்ந்தாங்குப்,
பிறந்து, தவழ்கற்றதன் தொட்டுச், சிறந்த நன்
நாடு செகின் கொண்டு நாள்தொறும் வளர்ப்ப,
ஆளிநன்மான், அணங்குஉடைக் குருளை,
மீளி மொய்ம்பின் மிகுவலி செருக்கி,
முலைக்கோள் விடாஅ மாத்திரை, ஞெரேர்எனத்
தலைக்கோள் வேட்டம் களிறு அட்டாங்கு"

- பொருநராற்றுப்படை (129-142).

வெண்ணிப்போர் பற்றிய பாடற்பகுதி, இவ்வாறு தொடர்கிறது. இப்பாட்டின் பிற்பகுதியில், அவன் இளமைப் பருவத்து நிகழ்ச்சி ஒன்று மறைமுகமாகக் குறிப்பிடப் பட்டுளது. (முதியோர் "அவை புகு பொழுதில் தம் பகைமுரண் செலவும்" பொருநராற்றுபடை. 187 - 188) முதியோர் இருவர் அவன் அறங்கூர் அவைக்குட் புகுந்து, தங்கள் இருவர்க்கிடையே எழுந்த வழக்கு ஒன்றை, அவன் முன் வைக்க, அவன் அவ்விருவரும் ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்ப்பை வழங்கினான். "அவைபுகு பொழுதில் தம் பகை முரண் செலவும்" - பொருநர் : 188. இலக்கிய வகையில், அத்துணை நிறைபயன் அளிக்காப் பாட்டு ஒன்றில், இந்நிகழ்ச்சியின் போது, தன்னுடைய தளி இளமைப் பருவத்தை மறைப்பதற்காக, நரைமயிர் கொண்டு - ஆக்கிய தலைமுடியை அணிந்து கொண்டான் என்பது குறிப் பிடப்பட்டுளது.

"உரைமுடிவு காணான் ; இளைமையோன்" என்ற
நரைமுது மக்கள் உவப்ப - நரைமுடித்துச்
சொல்லான் முறை செய்தான் ; சோழன், குலவிச்சை
கல்லாமல் பாகம் படும்.

- பழமொழி : 25.

"வழக்கில், இவன், நல்லதீர்ப்பு காண மாட்டான். காரணம்; ஆண்டால் இளையவன்" என்று கூறிய நரைத்து முதிர்ந்த பெருமக்கள், உவக்குமாறு, நரைமுடித்து முதியவன் போல் தோன்றி, நல்லதீர்ப்பு வழங்கினான் சோழன். ஆகவே, குலவித்தை யாவர்க்கும், கல்லாமலே, அதாவது இயல்பாகவே உண்டாகிவிடும். பொருநராற்றுப்படையின் பிறிதொரு பகுதியில், அவன் உலகனைத்தையும் ஒரு குடைக் கீழ்க் கொண்டுவந்து ஆண்டான் எனக் குறிப்பிடப்பட்டுளது.

"ஒரு குடையான் ஒன்று கூறப்
பெரிது ஆண்ட".

- பொருநராற்றுப்படை : 228 - 229.

வெண்ணிப் பறந்தலையில், தன் பகைவர்களாம், பாண்டிய சேர வேந்தர்களை வெற்றிகொண்ட பின்னர்த் தமிழ்நாடு முழுவதிலும் தன் அரசை நிலை பெறச் செய்தான் என்பது இதன் பொருளாதல் கூடும். ஆனால், இப்பாட்டின் இறுதியில், "காவிரி காக்கும் நாட்டின் தலைவனே !" "காவிரி புரக்கும் நாடு கிழவோனே! (248) எனக் குறிப்பிட்டு அழைக்கப்பட்டுள்ளான். ஆதலால், கரிகாலன், பாண்டிய சேர நாடுகளைச் சோழ நாட்டோடு இணைத்துக்கொண்டானல்லன். மாறாகத் தன்னைப் பணிந்து, தன் ஏவல்கேட்கும் சிற்றரசர்களாம் நிலைமையையே, அவர்களிடமிருந்து எதிர் பார்த்தான் எனக் கொள்ளலாம்.

தொடக்க நாட்களில் புலவர் புரவு :

கரிகாலன் உறையூரிலிருந்துகொண்டு, காவிரி நாட்டை ஆண்டிருந்தபோது, பிற்காலத்தில், போஜராசனைப் போல, அவன், புலவர்களைப் பேணும் பெரும் புரவலனாய் விளங்கினான். கரிகாலன் அரசவையில், தமக்கு அளிக்கப் பட்ட வரவேற்புச் சிறப்பு குறித்து, முடத்தாமக்கண்ணியார் கூறுவது, இது: "பழமரத்தை நினைத்து பறந்து விரையும் பறவைக்கூட்டம்போல, நானும், அவன் மாநகர் மதிலின் கண் அமைந்துள்ள, அவனை விரும்பி வருவார்க்கு என்றும்

அடையாதே திறந்து கிடக்கும் கோபுரவாயிலுள், அவ்வாயிற் காவலுக்குக் கூறாமலே புகுந்து. ஆரவாரப் பேரொலி எப்போதும் எழும், பரந்து அகன்ற இடம் உடையதான அரண்மனைக்குள் சென்றேன். வறுமையால் வாடியிருந்த என் மேனி, அவன் அரண்மனைக்கு வந்த விட்டோம் என்ற களிப்பு மிகுதியால் வாட்டம் தீர்ந்துவளம் பெற்றது. படம் விரித்து எழும் பாம்பின் படத்தில் காணப்படும், கவர்த்த கருங்கோடுபோல், கை விரல்களால் அடியுண்டு அடியுண்டு அமைந்துவிட்ட கரும் வடுவினைக் கொண்டு இருபக்கமும் அகன்று, இடைசிறுத்த உடுக்கை எழுப்பிய இரட்டை தாள இசைக்கு ஏற்ப, வாய்ப்பாட்டு ஒன்றினைப் பேரொளியுடைய தான வெள்ளியாகிய வான்மீன் தோன்றிவிட்ட, மிக்க இருள் செறிந்த விடியற்போதில், பாடத் தொடங்கினேன். நான், அவ்வாறு தொடங்குவதற்கு முன்னரே, தன்னுடைய நெருங்கிய உறவினரைப் போலவே, என்னுடன் உறவு கொள்ள விரும்பினான். வரையாது கொடுத்து வான்புகழ் ஈட்டுவதற்கு வாய்ப்பாக, எப்போதும், நான், அவனிடமே சென்று இரந்து நிற்பதற்கு ஏற்ற, இனிய முகமன் உரைகளை மொழிந்தான். நான் எப்போதும், அவன் கண்ணில் பட்டுக் கொண்டிருக்குமாறு, மிக அணித்தான ஓர் இடத்தை எனக்கு அளித்தான். தன் கண்களால், என்னை அப்படியே விழுங்கி விடுவதுபோலும் பார்வையால், என் உடலெலும்புக ளெல்லாம், அன்பின் மிகுதியால், வெண்ணெய்போல இளகிவிடும் வண்ணம், அன்புத் தண்ணருளைச் சொரிந்தான். ஈரும் பேனும் கூடியிருந்து ஆட்சிசெய்யும், வேர்வையால் நனைந்து நனைந்து நைந்துபோன, வேற்றுநூல் இடையே நுழைவதற்கு ஏற்பப் பெரிய அளவில் கிழிந்து, தைக்கப்பெற்ற என் கந்தல் ஆடையை அறவே அகற்றிவிட்டு, இது இழையோடிய வழி எனக் கண்ணால் கண்டுகொள்ளாவாறு நுண்ணிதாக நெய்யப் பெற்ற, பூத்தொழில்களால் புனையப்பட்ட, பாம்பின்தோல் போலும் மென்மையான ஆடைகளை அளித்தான். கார்மேகமோ எனக் கண்டவர் மருளுதற்கேற்பக் கறுத்து நீண்ட கூந்தலையுடையவரும், மகிழ்ச்சிதரும் மேனில மாடங்களில் உலாவருவாரும்,

அணிகள் பல அணிந்து அழகுற்றவரும், எப்போதும் இனிய புன்னகையே உடையாருமாகிய ஏவல் மகளிர், கள்ளைக் குற்றமற்ற பொன்னால் செய்யப்பட்ட கலங்கள் வழியுமாறு, பலகாலும் வார்த்து வார்த்துத் தர, வழிநடை வருத்தம் தீர நிறைய உண்டு, காண்டற்கினியகள் கிடைக்கப் பெற்றிலமே என, நெஞ்சிற்கிடந்த பழங்கவலையும் தீர்ந்து போகப்பெற்று மகிழ்ந்திருந்தேன். மாலை வந்துற்றதும், செல்வம் மலிந்து கிடக்கும், அம்மன்னவன் அரண்மனையில் ஒருபால் தங்கியிருந்தேன். தவஞ்செய்வார், அத்தவம் மேற்கொள்ளும் தம் உடம்பை அழித்துக் கொள்ளாமல் இருந்தே, அத்தவத்தாலாம் பயனை அடைவது போலவே, வழிநடை வருத்தத்தைச் சிறிதும் இல்லாவாறு போக்கிக் கள்ளை அளவிறந்து உண்டுவிட்டதன் விளைவாம் உடல் உறுப்புக்களின் நடுக்கமல்லது வேறு மனக் கலக்கம் ஏதும் இன்றி, மெய் மறந்து உறங்கிப் பின்னர்த் துயில் ஒழிந்து எழுந்தேன். நாம் பெற்றிருக்கும் இவ்வினிய வாழ்க்கை உண்மையானதாக இருக்குமோ என ஐயுற்றுக் கலங்கும் என் நெஞ்சம், இது கனவன்று; நனவுதான் என்று துணிந்து கொள்ளவும், கொடிய வறுமையால் உற்ற துன்பத்தால் நிறைந்திருந்த என் உள்ளம், பெற்றுள்ள பேரின்ப வாழ்க் கையை எண்ணி எண்ணி மகிழவும், கரிகாலனைக் கண்ட நாளைய முன்னாள் மாலையில், என்னிடத்தே குடி கொண்டிருந்த கொடிய வறுமைக்காட்சிகளையும் கரிகாலனைக் கண்டுவிட்ட அன்றைய காலைப்போதில், "நெடுநல் நாம் கண்ணுற்ற இரவலன் தானா இவன் !" எனப் பார்த்தவர் மருண்டு போவதற்குக் காரணமாம் வகையில், அகிலும் ஆரமும், மலரும் போலும் மணப்பொருள்களை மேனியெங்கும் கொண்டுவிட்டமையால் வண்டுகள் வந்து மொய்க்குமளவு பெற்றுவிட்ட வளமார் பெருவாழ்வினையும், உலகியல் கல்லா இளம் பருவத்தினராய சிறார்கள் சொல்லிச் சொல்லிக் காட்டுவாராயினர்".

"பழுமரம் உள்ளிய பறவையின், யானும், அவன்
இழும் என் சும்மை, இடனுடை வரைப்பின்

நசையுநர்த் தடையா நன்பெரு வாயில்,
இசையேன் புக்கு, என் இடும்பைதீர,
எய்த்த மெய்யேன், எய்யே னாகிப்,
பைத்த பாம்பின் துத்தி ஏய்ப்பக்,
கைக் கசடு இருந்த என் கண்ணகன் தடாரி
இருசீர்ப் பாணிக்கு ஏற்ப, விரிகதிர்
வெள்ளி முளைத்த நள்ளிருள் விடியல்
ஒன்றியான் பெட்டா அளவையின், ஒன்றிய
கேளிர் போலக் கேள்கொளல் வேண்டி
வேளாண் வாயில் வேட்பக் கூறிக்,
கண்ணிற் காண நண்ணுவழி இரீஇப்,
பருகு வன்ன அருகாம் நோக்கமொடு
உருகு பவைபோல் என்பு குளிர்கொளீஇ,
ஈரும் பேனும் இருந்து இறை கூடி
வேரொரு நனைந்து வேற்றிழை நுழைந்த
துன்னல் சிதாஅர் துவர நீக்கி,
நோக்குநுழை கல்லா நுண்மைய பூக்கனிந்து
அரவுரி அன்ன அறுவை நல்கி
மழையென மருளும் மகிழ்செய் மாடத்து
இழையணி வனப்பின் இன்னகை மகளிர்
போக்கில் பொலங்கலம் நிலையப் பல்கால்
வாக்குபு தரத்தர, வருத்தம் வீட,
ஆர வுண்டு பேரஞர் போக்கிச்
செருக்கொடு நின்ற காலை, மற்றவன்
திருக்கிளர் கோயில் ஒருசிறைத் தங்கித்,
தவம்செய் மாக்கள் தம் உடம்பு இடாஅது
அதன்பயம் எய்திய அளவை மான,
ஆறுசெல் வருத்தம் அகல நீக்கி,

அனந்தர் நடுக்கம் அல்லது யாவதும்
மனம்கவல்பு இன்றி மாழாந்து எழுந்து,
மாலை அன்னதோர் புன்மையும், காலைக்
கண்டோர் மருளும் வண்டுசூழ் நிலையும்
கனவென மருண்ட என் நெஞ்சம் ஏமாப்ப,
வல்லஞர் பொத்திய மன மகிழ் சிறப்பக்,
கல்லா இளைஞர் சொல்லிக் காட்ட,"

- பொருநராற்றுப்படை : 64 - 100.

இரவலர்க்கு, இவ்வாறு உண்ணவும் குடிக்கவும் கொடுத்த தோடு, அவர்களுக்கு, நெருங்க முடித்த முடிகளைக் கரையிலேயுடைய பட்டாடைகளைக் கொடுத்தான் ("கொட்டைக் கரைய பட்டுடை நல்கி" (பொருநர் : 155). தனக்கு என இதழ்களைப் பெறாத, பொன்னால் பண்ணப்பட்ட, தாமரை போலும் வடிவுடைய மலர்களைக் கொடுத்தான். ("ஏடுஇல் தாமரை" பொருநர் : 159). யானைத் தந்தத்தால் பண்ணப்பட்ட தாமரை மொட்டினைக் கொண்ட நெடிய தேரில், சாதிலிங்கம் ஊட்டப்பெற்ற தலையாட்டம் அணி செய்யக் கழுத்து மயிர் அழகு செய்ய, மேனி நிறத்தில் பாலை ஒத்த குதிரைகள் நான்கினைப் பூட்டிக் கொடுத்தான்.

"கோட்டிற் செய்த கொடிஞ்சி நெடுந்தேர்,
ஊட்டுளை துயல்வர, ஓரி நுடங்கப்
பால்புரை புரவி நால்கு உடன் பூட்டி"

- பொருநர் : 163 - 165.

பிற்கால வாழ்க்கை :

கரிகாலன் புகழ்பாடும் பிறிதொரு நெடும்பாட்டு, காவிரிப்பூம்பட்டினம் விரிவாக விளக்கிக் கூறப்படும், பாலைத்திணைப் பொருளாகக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடிய பட்டினப்பாலை ஆகும். அதில், அப்புலவர், கரிகாலனிடம் பரிசில் பெறுவான் வேண்டிக்

காவிரிப்பூம்பட்டினம் செல்லத்துடிக்கும் தன் நெஞ்சை நோக்கிக், "காதலியை விடுத்து, நெஞ்சே! நின்பின் வாரேன்" எனக் கூறியுள்ளார்.

"முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
வாரிரும் கூந்தல் வயங்கிழை ஒழிய
வாரேன்: வாழிய, நெஞ்சே!"

- பட்டினப்பாலை : 218 - 20.

(என்ற தொடருக்கு அவர் கூறும் இதுவன்று பொருள், "காவிரிப்பூம்பட்டினமே கிடைப்பதாயினும், என் காதலியைப் பிரிந்து, அப்பட்டினம் போலும் பெருஞ்செல்வம் தேட விரையும் நெஞ்சே! உன்பின் வாரேன்" என ஒரு காதலன் கூறினான் என்பதே இதன் பொருள் : பாடியவர், உருத்திரங்கண்ணனார் ஆயினும், இது அவர் கூற்று அன்று, ஒரு காதலன் கூற்று; அவன் கூற்றைப் புலவர் எடுத்துக் கூறினார் என்பதே பொருள்).

கரிகாலன், தன் ஆட்சிக் காலத்தில், தலைநகரை, உறையூரிலிருந்து, வளர்ந்து வரும் இக்கடற்கரை நகருக்கு மாற்றினான். பற்பல நிலைகளைக் கொண்ட மாளிகைகளைக் கொண்ட உறையூரில், திருக்கோயில்களோடு, மக்கள் குடியிருப்புக்களையும் நிறுவினான். பெரிய வாயில்களோடு, சிறுசிறு வாயில்களையும் அமைத்தான். அந்நகரைச் சூழ உள்ள மதில்கள் தோறும், அம்புக்கட்டுகள் போலும் படைக்கலப் பொறிகளையும் நிறுவினான்.

"பிறங்குநில மாடத்து உறந்தை போக்கிக்,
கோயிலொடு குடிநீறிஇ.
வாயிலொடு புழை அமைத்து
ஞாயில்தொறும் புதை நிறீஇ"

- பட்டினப்பாலை : 285-288.

இப்பாட்டு, இளமைப் பருவம் தொட்டு நடைபெற்ற கரிகாலன் வெற்றிச் செயல்களை விளக்கிக் கூறுகிறது. தந்தை

இறந்த பிறகு பிறந்த மகனாதலின், சோழ அரியணையை, அவன் இடையூறுகள் இல்லாமல் அடைந்து விட்டானல்லன்; இளையவனாய் இருக்கும்போது, அடாவழியில் ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டவரால், அவன் சிறை செய்யப்பட்டான். அச்சிறையினின்றும் விடுதலைபெற, அவன் போராடினான். புலவர் கூறுமாறு "கூரிய நகத்தினையும், வளைந்த வரிக்கோடுகளையும் உடைய புலிக்குட்டி, கூட்டிலே அடைபட்டிருந்து வளர்ந்தது போலப், பகைவர் இட்ட சிறையகத்தே இருந்து, தனக்குரிய அறிவு ஆண்மைக் குணங்களால் வயிரம் மரம் போல் முதிர்ந்து, குழியில் அகப்பட்டுக்கொண்ட நீண்ட கையினைக் கொண்ட ஓர் ஆண்யானை, அக்குழியின் ஏறுதற்கரிய கரைகளைத் தன் கோட்டால் குத்திச் சரித்துக் குழியைத் தூர்த்துவிட்டு ஏறித் தன் பிடியோடு சேர்ந்து கொண்டதுபோல், சிறையினின்றும் வெளியேறி, வெற்றி கொண்டு அரியணையில் அடையும் வழிமுறைகளைப் பலகாலும் ஆராய்ந்து, அப்பகைவரின் அழிக்கலாகாத் திண்மை வாய்ந்த காவற்சிறை மதிலைக் கடந்து வெளிப்போந்து, வாள்கொண்டு போர் செய்து வென்று, தன் அரச உரிமையை முறைப்படி அடைந்தான்."

"கூர் உகிர்க்
கொடுவரிக் குருளை, கூட்டுள் வளர்ந்தாங்குப்,
பிறர், பிணியகத்து இருந்து, பீடுகாழ் முற்றி,
அருங்கரை கவியக் குத்திக், குழிகொன்று,
பெருங்கை யானை, பிடி புக்காங்கு,
நுண்ணி தின் உணர நாடி, நண்ணார்
செறிவுடைத் திண்காப்பு ஏறி, வாள் கழித்து
உருகெழு தாயம் ஊழின் எய்தி".

- பட்டினப்பாலை : 220-227.

அரச உரிமையை இவ்வாறு பெற்றுக்கொண்டதோடு, மனநிறைவு கொள்ளாத அவன், பிறநாடுகள்மீது போர் தொடுத்துச் சென்றான். அவனுடைய நாற்படையைச் சேர்ந்த

யானைகள், தம் அரசனைப் பகைத்துக்கொண்ட பகை யரசர்களின் அரண்மதிலையும், வாயிற்கதவையும் தம் கோடுகளால் அழிக்கும்; அப்பகையரசர்களின் மணிமுடி அணிந்த தலைகளைக் கூரிய உகிர்களைக் கொண்ட முன் கால்களால் உதைக்கும்.

"பெற்றவை மகிழ்தல் செய்யான் : செற்றோர்
கடியரண் தொலைத்த கதவு கொள் மருப்பின்,
முடியுடைக் கருத்தலைப் புரட்டும் முன்தாள்
உகிருடையடிய, ஓங்கு எழில் யானை".

- பட்டினப்பாலை : 228 - 31.

அவன், தன் பேரரசை விரிவுபடுத்த உறுதி பூண்டான். ஒளியர் குலத்தலைவர் பலரை மறங்கெடப்பண்ணிப் பணி கொண்டான். பழம்பெரும் பெருமை வாய்ந்த அருவா நாட்டவர், தாங்கள் செய்யும் தொழில் எதுவேயாயினும், அதை, இவன் ஏவல் கேட்டுச் செய்யுமளவு பணிந்து போயினர். அவ்வருவா நாட்டிற்கும் வடக்கில் உள்ளார் எல்லாம் வலியிழந்து வாடினர். குடநாட்டு அரசர் மன வெழுச்சி குன்றி அடங்கிக் கிடந்தனர். பாண்டியர் வலியிழந்து போயினர். பகையரசர்களின் எளிதில் பாழற்றுப் போகாத் திண்மை வாய்ந்த அரண்மதிலைக் கைப்பற்றும் உள்ளச் செருக்கும், வலிய கால்களும் கொண்ட யானைப் படையும், மறத்தால் சிறந்த வலிமையும் உடைமையால், புல்லிய முல்லை நிலத்துக் குறுநிலத் தலைவர்களின் கால்வழி முழுவதும் கெட்டொழியவும், இருங்கோவேளின் பெருஞ்சுற்றம் பாழ்பட்டுப் போகவும், சினம் மிகுதலால் சிவந்து விட்ட கண்களால் வெகுண்டு நோக்கினான்.

"பல் ஒளியர் பணிபு ஒடுங்கத்,
தொல்அரு வாளர் தொழில் கேட்ப,
வடவர் வாடக், குடவர் கூம்பத்,
தென்னவன் திறல்கெடச் சீறி, மன்னர்,
மன்எயில் கதுவும் மகனுடை நோன்தாள்

மாத்தானை மற மொய்ம்பின்,
செங்கண்ணால் செயிர்த்து நோக்கிப்,
புன்பொதுவர் வழிபொன்ற,
இருங்கோவேள் மருங்கு சாய"

- பட்டினப்பாலை : 274 - 282.

இப்பட்டியலில் கூறப்பட்டவருள், இருங்கோவேள், என்ற குறுநிலத்தலைவன், புதுக்கோட்டை மாவட்டத்தில், திருச்சிராப்பள்ளி, மதுரை நெடுஞ்சாலைக்கண் உள்ள பழைய நகராம் கொடும்பாளூரைத் தலைநகராகக் கொண்டு சோழ நாட்டிற்குத் தெற்கில் உள்ள மாவட்டங்களை ஆண்டிருந்தான். அருவா நாட்டுக் குறுநிலத் தலைவனும், ஒளியர்குலத்தலைவனும், சோழ, பல்லவ நாடுகளுக்கு இடைப்பட்ட மாவட்டங்களை ஆண்டு வந்தனர். இவ்விரு நாடுகளையும் வெற்றி கொண்டுவிடவே, கரிகாலன், வடவர்களை, அதாவது, காஞ்சி ராஜாக்களாம் பல்லவர் களைப் பணி கொண்டான். அவன், மேலும் படையெடுத்துச் சென்று, கடப்பை, கர்னூல் மாவட்டங்களை ஆண்டு கொண்டிருந்த பொதுவர் குலத் தலைவர்களைத், தன் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தான். பொதுவர் என்ற சொல், ஆயர் தலைவர் எனும் பொருள் உடைத்து, ஆகவே, அது பல்லவ நாட்டின் மருத நிலப்பகுதிக்கு வடக்கில் உள்ள முல்லை நாட்டுப் பழங்குடியினர் தலைவர்களைக் குறிப்பதாகும். கரிகாலனால், தன் ஆட்சிக்கீழ்க் கொண்டுவரப் பட்ட அவ்வாயர்கள், அம்மாவட்டங்களில், இன்றும் வாழ்ந்து, அப்பகுதியில் புகழ் பெற்ற கம்பளி நெய்யும் குறும்பராவர்". பெரும்புகழ்க் குரியவனும், வெல்லும் போர் வல்லவனுமாகிய கரிகாலன், குன்றுகளில் ஆனிரை மேய்க்கும் குறும்பர் குடியைப் பேணிக்காத்தான்.

"குறும்பறை பயிற்றும்
செல்குடி நிறுத்த பெரும்பெயர்க் கரிகால்
வெல்போர்ச் சோழன்" - அகம் : 141 : 21-23.

இப்பாட்டிலிருந்து உய்த்துணரப்படும், கரிகாலன் ஆட்சி, வடக்கே, கடப்பை, கர்னூல் மாவட்டங்கள் வரையும் பரவியிருந்தது என்ற உண்மையை உறுதி செய்வதற்கு எண்ணற்ற கல்வெட்டுச் சான்றுகளும் உள. அவை, தனியே ஆராயப்படும்.

இப்பாட்டு, கரிகாலன், காடுகளை அழித்து அவற்றை யெல்லாம் வாழிடங்களாக மாற்றினான் என்றும் கூறுகிறது. ("காடுகொன்று நாடு ஆக்கி"- பட்டினம் : 283). அது, சோழ நாட்டில் நிகழ்ந்ததாக, உரையாசிரியர் விளக்கம் கூறுகிறார். ஆனால் சோழ நாடு முழுவதும், இம்மன்னனுக்கு நெடுங்காலத்துக்கு முன்பிருந்தே மக்களால் வாழப்பட்டு விட்டது; ஆகவே, இச்செயற்கரும் செயல், மிகமிகக் குறைவான மக்கள் தொகையினை உடையவாய கடப்பை, கர்னூல் மாவட்டங்களையே குறிப்பிடுவதாகும். (சோழநாடு, ஐந்திலம் என அழைக்கப்படாமல் நானிலம் என்று மட்டுமே அழைக்கப்படுவதற்கு ஏற்ப, ("நால்நாடு"- பொருநர் : 226) அந்நாட்டில் பெருமணல் பரந்த பாலை நிலம் அறவே இல்லை.) "உள்ளூர் ஆவணங்கள், பழைய "ரேனாடு" ஆகிய இன்றைய கடப்பை, கர்னூல் மாவட்டத்து மக்கள், கரிகாலன் படையெடுப்பை, இன்றும் நினைவில் கொண்டுள்ளனர் என்பதை வெளிப்படுத்துகின்றன. "கைம்யத்" ஆவணம் ஒன்றின்படி, சூரிய வம்சத்துக் கரிகால மகாராஜா, மேற்கை வெற்றி கொண்டுவிடவே, இந்நாட்டின் உரிமையை பெற்றுவிட்டான். "கரிகிரி" மலையின் தென்பால் சரிவில் காடுகளை அகற்றிப் "பொத்தப்பி" என்ற ஒரு சிற்றூரை நிறுவினான். அதைச் சூழ, எண்ணற்ற சிற்றூர்கள் தோன்ற ஊக்கம் ஊட்டினான். அச்சிற்றூர்களில், பொத்தப்பி, மிகவும் முக்கியமானதாக இருந்தமையால், அதைச் சூழ உள்ள சிற்றூர்கள், "பொத்தப்பி நாடு" என்ற பெயரைப் பெற்றன. (திரு. என். வெங்கட்ரமனய்யா அவர்கள், சென்னைக் கிறித்துவக் கல்லூரி மலர், 1929 சனவரி வெளியீட்டில் எடுத்தாண்டிருக்கும் L.R. Vol. 22. பக்கம் : 141ன் எடுத்தாட்சி) ஆவணத்திலிருந்து மேலே எடுத்துக் காட்டப்பட்ட பகுதியில் உள்ளடங்கியிருக்கும் அக்காதுவழிச் செய்தி, கரிகாலன்,

காடுகளை அழித்து, அவற்றை வாழிடங்களாக மாற்றினான் என்ற புலவர் கூற்றிற்குச் சரியான விளக்கமாம் என்பதில் ஐயம் இல்லை. ஆகவே, கரிகாலன் ஆட்சி, தமிழ்நாடு முழுவதிலும், தெலுங்கு நாட்டின் ஒரு பகுதியிலும் பரவியிருந்தது; அவன், மக்களின் விவசாயத் தொழில்களை வளர்த்தான். வாணிகத்திற்கு ஊக்கம் ஊட்டினான். ஆகவே, அவன் நாடு வளம் பெற்றிருந்தது என முடிவு கொள்ளலாம்.

புதிய தலைநகர் :

முதலாவது உரிமை கொண்ட தன் நாடுகளைத் தன்னுடைய கப்பற்படையால், தன் பிடியின் கீழ்க் கொண்டிருக்கலாம். இரண்டாவது, கடல் வாணிகத்திற்கு அங்கிருந்தவாறே ஊக்கம் ஊட்டி, இவ்வகையால், தன் அரசு வருவாயைப் பெருக்கலாம், என்பதற்காகவே தன் தலைநகரை, உறையூரிலிருந்து, பழைய கடற்கரை நகராம் காவிரிப் பூம்பட்டினத்திற்கு மாற்றியதாகத் தெரிகிறது. அந்நகரைச் சூழ, வெற்றித்திருமகள் வாழும் திண்ணிய மதில்களை எழுப்பி, அவற்றிற்குப் பெரிய மரக்கழிகளை இணைத்துப் புலிச்சின்னம் பொறித்துப் பண்ணப்பட்ட வாயிற்கதவுகளை அமைத்தான் என்கிறது பட்டினப்பாலை.

"புலிப்பொறிப் போர்க் கதவின்
திருத்துஞ்சும் திண் காப்பு" - 40 - 41.

இப்பாட்டு, அந்நகரையும், அதன் புறநகர்ப் பகுதிகளையும் விரிவாக விளக்குகிறது. தமிழகத்துப் பேரூர் ஒன்றின் சமஸ்கிருத இலக்கியங்களில் காணப்படும் விளக்கங்கள் போல் அல்லாமல், மிகைப்படுத்தப்படாத, உள்ளது உள்ளவாறேயான, மிகப்பழைய விளக்கம் இது ஆதலின், அது, அப்படியே தருவதற்குத் தகுதி வாய்ந்தது. "அன்று முழுமதி நாள்; செம்பட்டை மயிருடையராகிய பெரிய பரதவர், கருமை நிறம் காட்டிக் குளிர்ந்திருக்கும் பரந்த கடல் மீது மீன்பிடிக்கப் போகவில்லை. அப்பாக்கத்தின் இடையில், மீன்பிடிக்கும் நெடிய தூண்டிற்கோல் சார்த்தப்பட்டிருக்கும் தாழ்ந்த கூரைகளைக் கொண்ட குடில்களின் முற்றத்து

வெண்மணல் பரப்பில், நிலவொளியும், நிறை இருளும் மாறி மாறி, விட்டு விட்டுப் படிந்து கிடப்பதுபோல், மீன்பிடி வலைகள் விரித்துப் போட்டு உலர்த்தப்பட்டிருக்கும். பரதவர், தழையாடை உடுத்திருக்கும், மாமை நிற மேனியராம் மகளிரோடு, விழுதுகள் தொங்கும் தாழையின் அடியில் வளர்ந்திருக்கும் வெண்தாளி மலர் மாலை அணிந்து, கொடிய சினம் உடையதான சுறாமீனின் கொம்பை, அம்மணல் பரப்பில் நாட்டி அக்கொம்பில் குடிகொண்டிருக்கும் கொடிய தெய்வத்தை வழிபடல் கருதித் தலைமயிரில் தாழைமலர் அணிந்து, சருக்கை வாய்ந்த அடியினையுடைய பனைமரத்துக் கள்ளையும், தாம் விரும்பும் உணவு வகைகளையும், உண்டு, மகிழ்ந்து ஆடிக்களிப்பர். புலால் நாறும் மணற்பரப்பையும், மலர்களையும் உடைய கடற்கரைக்கண், கரிய மலையை அடைந்த, பொன்னிற மாலை முகில் போலவும், கரிய நிறமேனித் தாய் மடியில் பால் உண்ணத் தவழ்ந்து கிடக்கும், செம்பட்டை மயிரினரான மழலை போலவும், தெளிந்து நீல நிறம் காட்டும் கடல் நீரோடு, காவிரி ஆற்றுக் கலங்கள் செவ்வெள்ளம், கலக்கும் அலைகளின் ஒலிஓயா அப்புகார்ப் பகுதியில், பண்டைய பாவம் போகக் கடல் நீரில் ஆடியும், கடல் நீர் ஆடியதால் உடலில் படிந்துவிட்ட உப்பு மாசினைப் போக்க நறும்புனலில் மூழ்கி எழுவர், அடுத்து நண்டுகளைப் பிடித்து ஆட்டம் காட்டுவர்; உரங்கொண்டு பாயும் அலைகளைக் கால்களால் உழக்கி விளையாட்டயர்வர், மணலில் பாவை பண்ணுவர்; ஐம்பொறிகளாலும் நுகரும் இன்பங்களையெல்லாம் நுகர்ந்து தீர்ப்பர். இவ்வாறு ஆடி இன்பம் நுகர்ந்தும் மனநிறைவு காணாமல், மேலும் மேலும் நுகரவேண்டும் என்ற தீராக் காதலோடு பகலெல்லாம் ஆடி மகிழ்ந்துவிட்டு, இரவு வந்துற்றதும், அப்பெருங் காவிரி மணலிலேயே படுத்து உறங்கிவிடுவர்."

"எக்காலத்தும் பொய்த்துப்போகாது, ஆண்டு முழுவதும் நீரோடிக்கொண்டிருக்கும் அக்காவிரி ஆற்றின், மலர்கள் உதிர்ந்து மண்டிக்கிடக்கும் இருகரை மருங்கிலும், நெடிய தூண்கள் மீது வானளாவக் கட்டப்பட்டிருக்கும் மாளிகை களில் வாழ்வார், இசைப்பாடல் செவிமடுத்தும், நாடகங்

களை நயந்து கண்ணுற்றும் மகிழ்வர். (ஈண்டு ஆளப் பட்டிருக்கும் நாடகம் என்ற சொல், சமஸ்கிருத "நாடக" என்ற சொல்லாம், தமிழ்ப்பாக்களில் அச்சொல்லின் முதலாட்சி இது. இது, பெரும்பாலும், சமஸ்கிருத நாடகத் தோடு தொடர்பு கொள்வதற்கு முன்னர்த் தமிழ்நாட்டில் பெரு வழக்கில் இருந்த உரையிலா மெய்ப்பாட்டு நாடகம் ஆதல் கூடும்.) மகளிர், மேனிலை மாடங்களில், நிலவொளியின் இன்பம் காண்பர்; கள் உண்டல் விடுத்துக் காமரசம் பருகுவர். பட்டாடை அகற்றிப் பருத்தி ஆடை உடுப்பர்; அக்கோலத்தோடே, தம் கணவரைத் தழுவியவாறே உறங்கச் செல்வர். காதல் மயக்கத்தில், கணவர் அணிந்து கொள்ளும் தலைமாலையை மனைவியரும், மனைவியர் சூடிக்கொள்ளும் கழுத்து மாலையைக் கணவரும் மாறி அணிந்துகொள்வர். பகற்போதில், மீன்பிடி படகுகளில் கடல் மேல் சென்ற பரதவர், அந்நள்ளிரவில், கரைக்கண் மாடங்களில் வரிசை வரிசையாக ஏற்றப்பட்டிருக்கும் விளக்குகளில், அவிந்தனபோக, அவியாது பேரொளி காட்டி எரிந்துகொண்டிருக்கும் விளக்குகளை எண்ணியவாறே கரைநோக்கி மீள்வர்.

வெண்ணிற மலர்க் கொத்துக்களையும், மடல்களையும் கொண்ட தாழை மண்டிக்கிடக்கும் கடற்கரைக்கண், வணிகப் பெருமக்கள் வாழும், அகன்று நீண்ட தெருக்களில் அமைந்துள்ள, காவல் மிக்க பண்டக சாலைகளில், மேகம், கடலிடத்தே முகந்துகொண்ட நீரை மலையிடத்தே பொழிவதும், மலையிடத்தே பெய்த மழைநீர், கடலில் சென்று சேர்வதும் மாரிக்காலத்தில், மாறி மாறி நிகழ்வது போலக் கடல்வழி வந்து கலங்களிலிருந்து இறக்கப் படுவனவும், நானிலங்களிலிருந்து வந்து நாவாய்களில் ஏற்றப்பட இருப்பனவுமாய பண்டப்பொதிகள் எண்ணிக் காணமாட்டா அளவு குவிந்துகிடக்கும். அப்பண்டங்களுக் கான சுங்க வரியைக் கணக்கிட்டுத் தண்டிக்கொண்டு, அதற்கு அடையாளமாகச் சோழ அரசின் புலிச்சின்னம் பொறிக் கப்படும். அது செய்து அரசன் வருவாயைப் பெருக்கும் கடமையுணர்ச்சியால் புகழ் கொண்டவர்களாகிய சுங்க

அலுவலர், காயும் கதிர்களைக் கொண்டோனாகிய ஞாயிற்றின் தேரில் பூட்டப்பட்ட குதிரைகள், நாளும், நாழிகையும் தவறாது, நடைமெலிவு காணாது, ஈர்த்துச் செல்வதேபோல், இரவு பகல் ஓயாமல், ஒரு சிறிதும் தளர்வின்றிக் கடமை ஆற்றிக்கொண்டிருப்பர்.

முகில் உலாவும் முடியினையும், மூங்கில் வளரும் சாரலினையும் உடைய மலைகளில், துள்ளித்திரியும் எட்டுக் கால்களையுடைய வருடை என்ற கற்பனைப் பறவைபோலத் தோன்றும், கூரிய நகத்தினை உடைய மயிலும், வளைந்த கால்களையுடைய எருதும், ஆட்டுக்கிடாய்களும், வீடுகளின் முற்றத்தில் துள்ளிக்குதித்து இன்புறும். (மொழிபெயர்ப்பு ஆசிரியர் குறிப்பு : இப்பொருள் கொள்வதற்குக் காரணமாயிருப்பன. 137 முதல் 141 வரையான வரிகளாம். இவ்வரிகளுக்குப் பண்டக சாலையின் முற்றத்தில், புலிச் சின்னம் பொறித்து, மலைபோலக் குவியப் போடப் பட்டிருக்கும் பண்டப் பொதிகள் மீது, மலைமீது துள்ளி ஆடும் வருடை மான்போல், நாய்களும், ஆட்டுக் கிடாய்களும் துள்ளி ஆடும் எனப்பொருள் கொள்வதே நேரிதாம்). ஏறி மனைபுகுவதற்குத் துணைபுரியும் அடுத்தடுத்த பல படிகளையும், உயர்ந்த ஏணிகளையும் கொண்டு, பல கட்டுக்களையும், சிறுவாயில், பெருவாயில் எனப் பல வாயில்களையும், நீண்ட இடைகழிகளையும் உடைய, அம்மாட மாளிகையின், மேகம் தவழும் மேல் மாடியில், சிவந்த அடிகள், திரண்ட துடைகள், உயர்ந்த அணிகள், பெரிய அல்குல், மெல்லிய ஆடை, பவளம் போலும் மேனி, மயில்போலும் சாயல், மான்போலும் நோக்கு, கிளி போலும் மழலை, மென்மையான சாயல் ஆகிய நலமெலாம் பெற்ற நங்கை நல்லார் தென்றல் காற்று உள்நுழையும் பலகணி அருகே அமர்ந்து காட்சி இன்பத்தில் ஆழ்ந்து போவர்.

"நெடுந் தூண்டிலின் காழ் சேர்த்திய
குறும் கூரைக் குடிநாப்பண்,
நிலவு அடைந்த இருள்போல,
வலை வணங்கும் மணல் முன்றில்,

களை நயந்து கண்ணுற்றும் மகிழ்வர். (ஈண்டு ஆளப் பட்டிருக்கும் நாடகம் என்ற சொல், சமஸ்கிருத "நாடக" என்ற சொல்லாம், தமிழ்ப்பாக்களில் அச்சொல்லின் முதலாட்சி இது. இது, பெரும்பாலும், சமஸ்கிருத நாடகத் தோடு தொடர்பு கொள்வதற்கு முன்னர்த் தமிழ்நாட்டில் பெரு வழக்கில் இருந்த உரையிலா மெய்ப்பாட்டு நாடகம் ஆதல் கூடும்.) மகளிர், மேனிலை மாடங்களில், நிலவொளியின் இன்பம் காண்பர்; கள் உண்டல் விடுத்துக் காமரசம் பருகுவர். பட்டாடை அகற்றிப் பருத்தி ஆடை உடுப்பர்; அக்கோலத்தோடே, தம் கணவரைத் தழுவியவாறே உறங்கச் செல்வர். காதல் மயக்கத்தில், கணவர் அணிந்து கொள்ளும் தலைமாலையை மனைவியரும், மனைவியர் சூடிக்கொள்ளும் கழுத்து மாலையைக் கணவரும் மாறி அணிந்துகொள்வர். பகற்போதில், மீன்பிடி படகுகளில் கடல் மேல் சென்ற பரதவர், அந்நள்ளிரவில், கரைக்கண் மாடங்களில் வரிசை வரிசையாக ஏற்றப்பட்டிருக்கும் விளக்குகளில், அவிந்தனபோக, அவியாது பேரொளி காட்டி எரிந்துகொண்டிருக்கும் விளக்குகளை எண்ணியவாறே கரைநோக்கி மீள்வர்.

வெண்ணிற மலர்க் கொத்துக்களையும், மடல்களையும் கொண்ட தாழை மண்டிக்கிடக்கும் கடற்கரைக்கண், வணிகப் பெருமக்கள் வாழும், அகன்று நீண்ட தெருக்களில் அமைந்துள்ள, காவல் மிக்க பண்டக சாலைகளில், மேகம், கடலிடத்தே முகந்துகொண்ட நீரை மலையிடத்தே பொழிவதும், மலையிடத்தே பெய்த மழைநீர், கடலில் சென்று சேர்வதும் மாரிக்காலத்தில், மாறி மாறி நிகழ்வது போலக் கடல்வழி வந்து கலங்களிலிருந்து இறக்கப் படுவனவும், நானிலங்களிலிருந்து வந்து நாவாய்களில் ஏற்றப்பட இருப்பனவுமாய பண்டப்பொதிகள் எண்ணிக் காணமாட்டா அளவு குவிந்துகிடக்கும். அப்பண்டங்களுக் கான சுங்க வரியைக் கணக்கிட்டுத் தண்டிக்கொண்டு, அதற்கு அடையாளமாகச் சோழ அரசின் புலிச்சின்னம் பொறிக் கப்படும். அது செய்து அரசன் வருவாயைப் பெருக்கும் கடமையுணர்ச்சியால் புகழ் கொண்டவர்களாகிய சுங்க

வீழ்த்தாழைத் தாள் தாழ்ந்த
வெண்கூ தாளத்துத் தண்பூங் கோதையர்,
சினச் சுறவின் கோடுநட்டு
மனைச் சேர்த்திய வல்லணங்கினான்,
மடல் தாழை மலர் மலைந்தும்
பிணர்ப் பெண்ணைப் பிழிமாந்தியும்,
புன்தலை இரும்பரதவர்
பைந்தழை மாமகளிரொடு
பாயிரும், பனிக்கடல் வேட்டம் செல்லாது
உணவு மடிந்து உண்டாடியும்
புலருமணல் பூக்கானல்
மாமலை அணிந்த கொண்மூப் போலவும்,
தாய்முலை தழுவிய குழவி போலவும்,
தேறுநீர்ப் புணரியோடு யாறுதலை மணக்கும்
மணி ஓதத்து ஒலிகூடல்
தீது நீங்கக் கடல் ஆடியும்,
மாசு போகப் புனல் படிந்தும்,
அலவன் ஆட்டியும், உரவுத்திரை உழக்கியும்,
பாவை சூழ்ந்தும், பல்பொறி மருண்டும்,
அகலாக் காதலொடு பகல் விளையாடிப்,
பெறற்கரும் தொல்சீர்த் துறக்கம் ஏய்க்கும்,
பொய்யா மரபின் பூமலி பெருந்துறைத்,
துணைப்புணர்ந்த மடமங்கையர்,
பட்டு நீக்கித் துகில் உடுத்து,
மட்டு நீக்கி மது மகிழ்ந்து,
மைந்தர் கண்ணி மகளிர் சூடவும்,
மகளிர் கோதை மைந்தர் மலையவும்,
நெடுங்கால் மாடத்து ஒள்ளரி நோக்கிக்

கொடுந்திமில் பரதவர் குரூஉச் சுடர் எண்ணவும்,
பாடல் ஓர்த்தும், நாடகம் நயந்தும்,
வெண்நிலவின் பயன் துய்த்தும்
கண்ணடை இய கடைக் கங்குலான்,
மாகாவிரி மணம் கூட்டும்,
தூஉ எக்கர்த் துயில் மடிந்தும்,
வாலிணர் மடல் தாழை
வேலாழி வியல் தெருவில்
நல் இறைவன் பொருள்காக்கும்
தொல் இசைத் தொழில் மாக்கள்,
காய்சினத்த கதிர்ச் செல்வன்,
தேர் பூண்ட மாஅ போல,
வைகல் தோறும் அசைவின்றி,
உல்கு செயக் குறைபடாது
வான்முகந்த நீர் மலைப் பொழியவும்,
மலைபொழிந்த நீர் கடல் பரப்பவும்,
மாரி பெய்யும் பருவம் போல,
நீரினின்று நிலத்து ஏற்றவும்,
நிலத்தினின்று நீர்ப் பரப்பவும்,
அளந்தறியாப் பலபண்டம்,
வரம்பறியாமை வந்தீண்டி
அருங்கடிப் பெரும் காப்பின்
வலியுடை வல்லணங்கினோன்,
புலிப் பொறித்துப் புறம் போக்கி,
மதி நிறைந்த மலிபண்டம்
பொதி மூடைப் போர் ஏறி,
மழையாடு சிமைய மால்வரைக் கவாஅன்,
வரையாடு வருடைத் தோற்றம் போலக்

கூருகிர் ஞமலிக், கொடுந்தாள் ஏற்றை,
ஏழகத்தகரொடு உகளும் முன்றில்
குறுந்தொடை, நெடும்படிக்கால்,
கொடுந்திண்ணைப் பல்தகைப்பின்
புழைவாயில் போகுஇடை கழி,
மழைதோயும் உயர்மாடத்துக்
சேவடிச், செறி குறங்கின்,
பாசிழைப் பகட்டல்குல்,
தூசுடைத் துகிர் மேனி,
மயில் இயல், மான் நோக்கின்
கிளி மழலை, மென் சாயலோர்,
வளி நுழையும் வாய் பொருந்தி".

- பட்டினப்பாலை : 90 - 151.

அத்துறைமுகப் பட்டினத்துப் பெரும் சிறப்புகளாவன கடல்மீது கலங்களில் வந்த, நிமிர்ந்த செலவினை உடைய குதிரைகள் நிலமிசை வண்டிகளில் வந்த கரிய மிளகுப் பொதிகள்; வடநாட்டு மலைகளில் எடுக்கப்பட்ட மாணிக்கமும், சாம்பூநதம் என்னும் பொன்னும் ; மேற்கு மலையில் வளர்ந்த சந்தனமும், அகிலும் ; தென்பாற்கடலில் பிறந்த முத்து, கிழக்குக் கடலில் பிறந்த பவளம் ; கங்கைச் சமவெளியிலிருந்து வந்த பொருள்கள்; காவிரியாற்றுப் பாய்ச்சலால் பெற்ற பல பண்டங்கள்; ஈழத்திலிருந்து வந்த உணவுப் பொருட்கள் : கடாரத்திலிருந்து வந்த கற்பூரம், பன்னீர், குங்குமப்பூ; மற்றும் அரிய பெரிய பண்டங்களைக் கொண்டிருப்பதே ஆம் :

"நீரின் வந்த நிமிர் பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்,
குடமலைப் பிறந்த ஆரமும், அகிலும்,

தென்கடல் முத்தும், குணகடல் துகிரும்
கங்கை வாரியும், காவிரிப் பயனும்,
ஈழத்து உணவும், காழகத்து ஆக்கமும்,
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி".

- பட்டினப்பாலை : 185 - 192.

அந்நகரத்துத் தெருக்களில், பன்மொழி பேசும் மக்களைக் காணலாம் என்றும் பட்டினப்பாலை ஆசிரியர் கூறுகிறார். ("மொழிபல பெருகி பழிதீர் தேஎத்துப் புலம்பெயர் மாக்கள் கலந்து இனிய உறையும்" - 216, 1217). ஆகவே, காவிரிப் பூம்பட்டினம், கரிகாலன் காலத்தில், வளங் கொழிக்கும் துறைமுகப் பட்டினமாகத் திகழ்ந்தது என நம்பலாம்.

நகரத்தில் ஆரிய நாகரிகம் :

இவ்வாணிகத்தின் தலையாய காரணத்தால், தமிழகத்தின் இத்துறைமுக நகரத்திற்கும், வடஇந்தியாவுக்கும் இடையில் மிக நெருங்கிய போக்குவரத்து இருந்தது. ஆகவே, ஆரிய நாகரிகம், தமிழ்நாட்டின் பிற பகுதிகளில் பரவியதிலும் முன்னதாக, இந்நகரில் பரவத் தொடங்கிவிட்டது. பிற இடங்களில் பெறாத செல்வாக்கை ஆங்குப் பெற்றுவிட்டது. இப்பாட்டு அளிக்கும் சான்றுப்படி, காவிரிப்பூம் பட்டினத்தில், புத்த, சமணப்பள்ளிகளும், ஒளிவீசும் சடை முடியுடையராகிய முனிவர்கள் எடுக்கும் வேள்வித் தீயிலிருந்து எழும் வேள்விப் புகைக்கு அஞ்சிக் குயில், தன் கரியபெரிய பெடையோடு பறந்தோடிவிடும் பூம்பொழில் களும் இருந்தன.

"தவப் பள்ளி, தாழ்காவின்
அவிர்சடை முனிவர் அங்கி வேட்கும்
ஆவுதி நறும்புகை முனைஇக் குயில் தம்
மாயிரும் பெடையோடு இரியல் போகி".

- பட்டினப்பாலை : 53 - 56.

காஞ்சியைத் தவிர்த்துத், தமிழகத்துப் பிற நகரங்களில், பிராமணர்கள், புத்தர்கள் சமணர்களின் குடியிருப்புக்களைத் தமிழிலக்கியத்தில், இப்போதுதான் முதன்முதலில் கேள்விப்படுகிறோம். (ஆசிரியன் இக்கூற்று உண்மைக்கு மாறானது. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனின் புகழ்பாடும் மதுரைக் காஞ்சியில் மதுரை மாநகரைக் கவ்விக் கொண்டுவிட்ட ஆரிய நாகரிகக் குறிப்புக்கள் அடுக்கடுக்காகக் கூறப்பட்டுள்ளன. முதுகுடுமிப் பெருவழுதி உள்ளிட்ட பாண்டிய அரசர்கள் பற்றி ஆராயும் இதே நூலின், "பாண்டிய அரசர்கள்" என்ற தலைப்பிடப் பெற்றுள்ள 23 வது அதிகாரத்தில், இதே ஆசிரியர், மதுரை மாநகரத்தில் இடம் கொண்டுவிட்ட ஆரிய நாகரிகக் குறிப்புக்களை, மதுரைக் காஞ்சியிலிருந்தும், புறநானூற்றி லிருந்தும் அடுக்கடுக்கான எடுத்துக்காட்டுக்களை எடுத்து ஆண்டுள்ளார்.) பாட்டின் மற்றொரு பகுதியில், ஆரிய நாட்டு மாநிலங்களில் உள்ளது போலவே, காவிரிப்பூம்பட்டினத்தில், தாம் கற்ற பல்வேறு கல்வித் துறைகளிலும், முட்டறக்கற்ற மூதறிவாளராம் வாதிகள், தம்மோடு வாதிடவல்லார் வருக என அறைகூவி அழைப்பதை உணர்த்தும் கொடிகள் நாட்டப்பட்டிருப்பது கூறப்பட்டுளது, ஆகவே, இக்காலத்தில், காவிரிப்பூம்பட்டினம் ஆரிய நாகரிகத்தின் மிகப்பெரிய மையமாக ஆகியிருக்க வேண்டும்.

"பல்கேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்
உறழ் குறித்து எடுத்த உருகெழு கொடியும்".

- பட்டினப்பாலை : 169 - 171.

அந்நகரத்து வணிகப் பெருமக்கள், வேதக் கடவுள்களாம் அமரர்களை வழிபட்டனர்; அவர்களுக்கு வேள்விகள் செய்து ஆவுதி அளித்தனர். (வேள்விகளில் பலியிடுவான் வேண்டி) ஆக்களையும், ஆனேறுகளையும் வளர்த்தனர்; நான்கு வேதங்களிலும் வல்ல பிராமணர்களைப் புகழ்ந்து பாராட்டினர்; ஆகவே, பிராமண வழிபாட்டு முறை அந்நகர மக்களிடையே பரவியிருந்தது.

"அமரர்ப் பேணியும், ஆவுதி அருத்தியும்,
நல்ஆனொடு பகடு ஓம்பியும்
நான்மறையோர் புகழ் பரப்பும்"

- பட்டினப்பாலை : 200 - 202.

இறவாப் பெரும்புகழ் வாய்ந்த அவ்வமரர்கள், நகரின் காவலர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர் ("செல்லா நல்லிசை அமரர் காப்பின்" -பட்டினப்பாலை : 184). குற்றம் தீர்த்துப் புகழ் ஏற்றி நிறுவப்பட்ட கடவுள்களும், ஆரியக் கடவுளாகவே தெரிகின்றன. ("மையறு சிறப்பின் தெய்வம் சேர்ப்பிய" -பட்டினப்பாலை : 159)

பழந்தமிழ்க் கடவுள்களும் வழிபடப்பட்டனர் :

ஆரியக் கடவுள்களின் கடுந்தாக்குதலால், பழந்தமிழ்க் கடவுள்கள் கைவிடப்பட்டுவிடப்படவில்லை. நகரங்களில் அக்கடவுள்களும் சிறப்புற்றிருந்தனர். அகன்ற பெரிய அங்காடி வீதிகளில், வெறியாடு மகளிரின் ஆடல்பாடல் களுக்கேற்பச் குழலும், யாழும் இசைக்க, முழவும், முரசும் முழங்க நடைபெறும் முருகவேள் விழா இடையறவு படாது நிகழ்ந்து கொண்டிருக்கும்.

"செவ்வேள்
வெறியாடு மகளிரொடு செறியத் தாஅய்க்
குழல் அகவ, யாழ் முரல,
முழவு அதிர, முரசு இயம்ப,
விழவு அறா வியல் ஆவணம்".

- பட்டினப்பாலை : 154 - 158.

இக்கால அளவில், முருகன், மலைநாடாம் குறிஞ்சியிலிருந்து, ஆற்றுப்பள்ளமாம் மருதத்துக்குக் குடிபெயர்ந்து விட்டான். களத்தில் உயிர் நீத்துக் கடவுளாகிவிட்ட வீரர்களை அவர் நினைவாக நடப்படும் நடுகல்லில் இடம் கொளச் செய்து, அவர் கையாண்ட வேலையும் கேடயத்தையும் உடன் வைத்து வழிபடுவதும் தொடர்ந்து நடைபெற்றது.

"கிடுகு நிரைத்து எஃகு ஊன்றி
நடுகல்லின் அரண்போல"

- பட்டினப்பாலை : 78 - 79.

அதுபோலவே, முன்னரே கூறியவாறு, சுறாமீன் கொம் புருவில் கடற்கடவுள் வழிபாடும் தொடர்ந்து நடைபெற்றது. கம்பவடிவில் கடவுளும் வழிபடப்பட்டது. இது, போரில் சிறை பிடித்துக் கொண்டுவரப்பட்ட பகையரசர்களின் மனைவிமார்கள், ஊரார் நீர் உண்ணும் நீர்த்துறையில் நீராடி எழுந்து, அந்திப் போதில், மெழுகித் தூய்மை செய்து, அவியாத விளக்கேற்றிவைத்து, மலர்தூவி அணி செய்த, பலரும் வந்து தொழ, ஊர்ப் பொதுவிடத்தே நடப்பட்ட இலிங்கமாதல் கூடும்.

"கொண்டி மகளிர் உண்துறை மூழ்கி,
அந்தி மாட்டிய நந்தா விளக்கின்
மலரணி மெழுக்கம் ஏறிப் பலர் தொழு
வம்பலர் சேக்கும் கந்துடைப் பொதியில்"

- பட்டினப்பாலை : 246 - 249.

இக்கம்பம், கந்து என அழைக்கப்பட்டது. தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணை இயலில் (33), கடவுள் வாழ்த்துக்குரிய ஒன்றாகக் கூறப்படும் "கந்தழி" பெரும்பாலும் இக்கந்தின்மாற்றுருவமாகும். ஆனால், உரையாசிரியர் நச்சினார்க்கினியர், கந்தழி என்பது, "ஒரு பற்றுக் கோடின்றி அதுவாகித் தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருள்" என்று கூறியுள்ளார். இக்கருத்தால் உணரப்படும், கடவுள் நிலையில், மிக உயர்ந்த நிலையாம் அருவமாம் நிலை, பழந்தமிழ்ப் பாக்கள் எதிலும் இடம் பெறவில்லையாதலாலும், அத்தகைய வாழ்த்துப் பாவிற்கான எடுத்துக் காட்டு ஒன்றுகூட, அவரால் காட்ட இயலாத அளவு, உருவம் அற்று அருவமாம் ஒன்றைப் பாடி வழிபடும் கொள்கை, உண்மையான பழந்தமிழ்க் கொள்கைக்கு முற்றிலும் புறம்பானது ஆதலாலும், அவர் விளக்கம் அறவே, ஒப்புக்கொள்ளத் தக்கதன்று.

எரி ஓம்பல் நெறிக்குக் கரிகாலன் ஆதரவு :

கரிகாலன், தன்னுடைய புதிய தலைநகரில், ஆரிய நாகரிகத்தோடு கொண்டுவிட்ட நெருக்கமான தொடர்பின் விளைவு, அவனுடைய கற்பனை வளமெல்லாம், பிராமணர் களால் செய்து காட்டப்பட்ட ஒளிமயமான எரியோம்பல் நெறிகளால் கவரப்பட்டு, அவன், பொருட்செலவுமிக்க வேதயக்ஞங்களைப் பொருள் அளித்துப் பேணிக்காத்த முதல் தமிழரசன் ஆயினன் ; தமிழ்நாட்டில் செய்துகாட்டப்பட்ட மிகப்பெரிய ஸ்ரார்த்தச் சடங்கு முறையின் மிகப் பழைய விளக்கம், கரிகாலன் இறப்பை எண்ணிப், புலவர் கருங்குழல் ஆதனார் பாடிய கையறு நிலைச்செய்யுளில் காணப்படுகிறது. "அறத்தைத் தெளிய உணர்ந்த ஒழுக்கத்தால் மாட்சிமைப் பட்ட, அந்தணர்களின் அவையின்கண், வேள்விக்குரிய முறைகளை நன்றாக உணர்ந்த ஆறங்கங்களையும் உணர்ந்த சடங்கவிகள், வேள்விச் சடங்குகளை முன்னின்று காட்ட, பலராலும் புகழப்பட்ட, தூய இயல்பு வாய்ந்த கற்பு, ஒழுக்கமாம் உயர்ந்த கொள்கையினராய, குற்றம் தீர்ந்த குலமகளிரோடு இருந்து, வட்டவடிவில் பல படையாகக் கட்டப்பட்ட மதில்களால் சூழப்பட்ட வேள்விச்சாலையில், பருந்து வடிவமாகச் செய்யப்பட்ட, இடத்தில் நாட்டிய யூப மாகிய நெடிய கம்பத்தில் வேதத்தால் சொல்லப்பட்ட முறைப்படி வேள்வியினைச் செய்துமுடித்து".

"அறம் அறக்கண்ட நெறிமாண் அவையத்து
முறை நற்கு அறியுநர் முன்னுறப் புகழ்ந்த
தூவியற் கொள்கைத் துகளறு மகளிரொடு
பருதி உருவின் பல்படைப் புரிசை
எருவை நுகர்ச்சி யூப நெடுந்தூண்
வேத வேள்வித் தொழில்முடித் ததூஉம்".

- புறநானூறு : 224 : 4 - 9.

கரிகாலன் எரியோம்பலை ஆதரித்ததைப் பிற்கால அரசர்களும் பின்பற்றுதல் :

கரிகாலனால் தொடங்கப்பட்ட வேதயக்ஞங்களுக்கு

ஆதரவு தரும் பாணி, ஏனைய தமிழரசர்களாலும் விரைவில் பின்பற்றப்பட்டது. சேர அரசர்களில் பல்யானைச்செல் கெழுகுட்டுவன், பதிற்றுப்பத்து மூன்றாம் பத்தால் தன்னைப் பாடிய புலவர் பாலைக் கௌதமனாரும், அவர் மனைவியும், யாக முடிவில் நேரே சுவர்க்கம் புகுவதற்காம் யாகத்தைச் செய்யத் துணை புரிந்தான் எனப் பிற்காலக் காதுவழிச் செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளான். பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற பாண்டிய அரசன், பல யாகங் களைச் செய்தான். கி. பி. எட்டாம் நூற்றாண்டில் வழக்கிற்கு உரிய பொருளாகிப் பண்டு தானம் பெற்றவனின் வழிவந்தவர்க்கே, இம்முறை செப்புச்சாஸனம் தொடர மீண்டும் வழங்கப்பட்ட நிலங்களை இப் பல்யாக சாலை முதுகுடுமி, ஒரு பிராமண வேள்வியாசிரியனுக்குத் தானமாக அளித்தான். கரிகாலனின் வழிவந்த பெருநற்கிள்ளி என்பானொருவன், வேதமுறைகளின்படி முடி சூட்டிக் கொண்டதோடு, ராஜசூயம் என்ற யாகத்தைச் செய்து, ராஜசூயம் வேட்ட என்ற சிறப்புத் தொடரைத் தன் பெயரோடு இணைத்துக் கொள்வதும் செய்தான். இவ்வாறு வேத வேள்விகளைச் செய்திருக்கவும், அந்நிகழ்ச்சிக்குப் பிறகு, சோழர் குலம், விரைந்து நிலைகுலைந்து போய்த் தென்னிந்திய வரலாற்றில் சில நூற்றாண்டு காலம் பெரும்பாலும் மறைந்தே போய்விட்டது.

பார்ப்பனத் தமிழ்ப் புலவர்கள் :

கரிகாலனின் செயலும் சிந்தனையும், ஆரிய நாகரிகத்திற்கு முழுமையாக அடிமைப்பட்டுப் போனதன் மற்றொரு விளைவு, பல பார்ப்பனத் தமிழ்ப்புலவர்களின் தோற்றமாம். இது, ஆரியக் கருத்துகளுக்கு ஆட்பட்டுவிடாவாறு தமிழ்ப் புலவர்களைத் தடுத்துக் காத்துவந்த அணையை உடைத்து விட்டது. ஆரிய நம்பிக்கைகள், ஆரிய மூட நம்பிக்கைகள், ஆரியப் பழக்க வழக்கங்கள் (சமஸ்கிருதச் சொற்கள்) தமிழர் வாழ்க்கையில் நுழைந்து, தமிழ்ப் பாக்களில், தென்னிந்திய கருத்துகள், நம்பிக்கைகள், மூட நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் அடுத்தடுத்துக் கூறப்படவுமாயின. இவற்றை

வெளிப்படுத்தும் பாக்கள், ஆரிய மூலம் அறவே இடம் பெறாத பாக்களிலும் காலத்தால் பிற்பட்டவை என்பதை எளிதில் காணக்கூடும். தமிழ் அரசர்களும், புராண அரச மரபுகளாம் சூரிய, சந்திர மரபுகளோடு தங்களை இணைத்துக்கொள்வதைத் தேடி அலைந்தனர். இவற்றிற்கான எடுத்துக்காட்டுகள், பின்வரும் அதிகாரம் ஒன்றில் கொடுக்கப்படும்.

கரிகாலன் வாழ்க்கையில் கல்வெட்டுகள் அளிக்கும் விளக்கம் :

கரிகாலன் வாழ்க்கையை, இதுகாறும், சமகால இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் ஆராய்ந்தோம். கரிகாலன் வாழ்க்கையின் சில நிகழ்ச்சிகளுக்கான கல்வெட்டுச் சான்று உறுதிப்பாட்டினை, இச்சோழ மன்னன் காலத்துக்குப் பிற்பட்ட காலத்துக் கல்வெட்டுகளில் குறிப்பிடப் பட்டிருக்கும் காதுவழிச் செய்திகளிலிருந்து பெறக்கூடும். அவ்வகையில், பெரும்பாலும், பதிப்பித்து வெளியிடப் படாதனவாய ரேனாடு கல்வெட்டுக்கள். [அவற்றுள் ஒன்று முன்பே எடுத்துக் காட்டப்பட்டது.] அம் மாவட்டத்தைக், கரிகாலன் வெற்றி கொண்டது, அவன் காடுகளை அகற்றியது, நகரங்களைத் தோற்றுவித்தது, நீர்ப்பாசன முறை களை வகுத்தது, அவன் வழி வந்தவர்களாகிய, தெலுங்கு பேசும், சோழ அரச இனத்தைத் தோற்றுவித்தது ஆகியவற்றிற்குச் சான்று பகர்கின்றன. "கி. பி. 640-இல் சீன யாத்திரீகன் ஹியான் ஸ்வாங் காலத்தில், இத்தெலுங்கு ஆவணங்களை நாம் கண்டெடுத்த நிலப்பகுதியில், "சூ-லி-யெ" (Chw-li-ye) என்ற பெயருடைய நாடு இருந்திருப்பது, கி. பி. ஏழாம் நூற்றாண்டில், இந்நாடு இருந்தது என்பதற்குத் தெளிவான சான்று ஆகும்" (Ep. Ind. Vol. XI Page : 344). இவ்வரசு இனத்துச் செப்பேடுகளில், புண்ணிய குமாரனின் மாலேபாடு செப்பேடுகள், "இந்தியக் கல்வெட்டுகள்", பதினோராம் தொகுதியில் (Ep. Ind. Vol. XI) வெளியிடப்பட்டுள்ளன. கரிகாலன் ஆட்சிக்குப் பிற்பட்ட காலத்தில், இவ்வினத்து அரசர்கள், காஞ்சிப் பல்லவர்களுக்கு அடங்கியவராயினர்;

பின்னொரு காலத்தில், அவ்வரச இனம் மறைந்துவிட்டது. "அவர்களில் சிலர் பல்லவ நாட்டின் வட பகுதியை வென்று கைக்கொண்ட மேற்குச் சாளுக்கியர்களுக்கு அடங்கிய வராயினர். இவ்வினத்தோடு உறவுடைய ஒரு பிரிவினர், நாகவம்ஸ அரசன் ஜக்தேக பூஷணன் (கி. பி. 1060 - 1061) ஆட்சியின் கீழ்ச் சக்கர கோடத்தில், பணியினைத் தேட, மேலும் வடக்கு நோக்கிப் பயணம் மேற்கொண்ட தாகத் தெரிகிறது". (சென்னை கல்வெட்டு அறிக்கை : ஆண்டு : 1909 : பக்கம் : 112 (Madras Ep. Report for 1909 : Page : 112). மத்திய மாகாணத்துக் கோண்டு அரச இனம் இவர்களால் தோற்றுவிக்கப்பட்டது.) பன்னிரண்டு, பதின்மூன்றாம் நூற்றாண்டுகளில், குண்டூர், நெல்லூர், வட ஆர்க்காடு, கடப்பை, செங்கற்பட்டு மாவட்டங்களில், வாரங்கல் காகத்தியர்களுக்குக் கடமைப்பட்டவராகிய, இப்போது "தெலுகு சோட" (Telugu Coda) எனத் திரிந்து வழங்கும். தெலுங்குச் சோழ அரச குடும்பங்கள் வளம் பெற்றிருந்தன. (Madras Ep. Report for 1900 Page : 17) காகத்தியர் தாமும், தங்கள் கால்வழியினைக் சூரியனிலிருந்து கண்டு, கரிகால சோழ அரசனை, அவர்களின் புராண வழி முன்னோர் வரிசையில் வைத்து எண்ணுகின்றனர் (Madras Ep. Report for 1900 : Page : 106 : Page : 44) அனந்தபூர் மாவட்டத்திலும், கன்னட நாட்டு எல்லைப் பகுதிகளிலும் கூட, இச் சோழரின் ஒரு கிளை சிறப்புற்றிருந்தது. கி. பி. பதினாறாம் நூற்றாண்டு போலும் பிற்பட்ட காலத்திலும், வழிவழி வந்த காதுவழிச் செய்தியாம் கரிகாலன் வழிவந்தவர், பழைய பெருநகராம் உறையூரின் ஆட்சியாளர் என்ற பெருமையோடு, சோழர்குலப் படைத்தலைவர் சிலர், விஜய நகர அரசின் கீழ், மண்டலப் தலைவர்களாகப் பணிபுரியக் காணப்படுகின்றனர் (Ep. India Vol. XI Page : 344) தெலுங்கு மக்களின் வரலாற்றுத் தொடக்காலத்தில், அத்தெலுங்கு மக்கள் சிந்தனை மீது, கரிகாலன் பொறித்துவிட்ட நல்லெண்ண முத்திரை, பெரும்பாலும், அனைத்துத் தெலுங்கு அரச இனங்களுமே, அவன் வழியில் வந்தவையாகவே உரிமை கொள்ளுமளவு, அத்துணைப் பெருமை வாய்ந்ததாம்.

கரிகாலனும் காவிரியும் :

இத்தெலுங்குச் செப்பேட்டு ஆவணங்கள், "கவேரன்மகளின்" (கா-ஏரி எனும் ஆறு) கரை கடந்து ஓடும் வெள்ளப் பெருக்கைத் தடுத்து நிறுத்திய" கரிகாலன் பெருஞ்செயலைக் குறிப்பிடுகின்றன. (IP. India Vol. XI Page : 339). காவிரி ஆற்றுக்குக் கரை கட்டினான் கரிகாலன் எனக் கூறும், முதலாம் ராஜேந்திர சோழ தேவனின் ஆறாம் ஆண்டுத் திருவாலங்காட்டுச் செப்பேட்டுத் தொடர்களில், இத்தொடர்ப் பொருள் விளக்கப்படுகிறது. (S. I. I. III : III Page : 386). காவிரி ஆற்றின் கடைமுகப் பகுதி, பண்டை நாட்களில், புனல் நாடு, அதாவது வெள்ளத்தில் நாடு எனப் பெயர் பெறுமளவு, காவிரியாறு நாடு முழுவதையும், ஆண்டு தோறும் தவறாமல், வெள்ளக்காடாக்கி வந்துள்ளது. உயர்ந்த வெள்ளத் தடுப்புக் கரைகளைக் கட்டியதன் மூலம், ஆண்டுதோறும் தவறாமல் நிகழும் இயற்கை விளைவிக்கும் அழிவினின்றும், நாட்டைத் தெளிவுறக் காத்தான். குளம் வெட்டினான், வளம், பெருக்கினான் ("குளம் தொட்டு வளம் பெருக்கி" பட்டினப்பாலை : 284) என்று மட்டுமே கூறும் பட்டினப்பாலையில், கரிகாலனின் இப்பெரும்பணி, சிறப்பிட்டுக் கூறப்படவில்லை. இப்பெரும் பணி, பிற்கால மக்களின் சிந்தனையைக் கவர்ந்த அளவு (உதாரணத்திற்கு : கலிங்கத்துப் பரணி ஆசிரியர் : பாட்டு : 184) அவனுடைய சமகாலப் புலவர்களின் சிந்தனைகளைக் கவர்ந்ததாகத் தெரியவில்லை. ஆனால், ஒன்றற்கொன்று தொடர்பிலவாய, தெலுங்கு, தமிழ்ச் சிலா சாஸனங்களின் வரிசைகள் பலவும், இக்காது வழிச் செய்தியைச் சிறப்பாகக் குறிப்பிட்டிருப்பதால், காவிரிக்குக் கரை கட்டியது, கரிகாலனின் தொடக்க காலத்திய சிறிய பணியாம் என நாம் நம்பலாம். (பொருநராற்றுப்படையில், நுரைத்து ஒலிஎழுப்பிப் பாயும் புனலில், அது, வரைப்பகத்தே பாயும் பகுதியில், மகளிர் நீராடுவர் எனும் பொருள் தருவதான, "நுரைத்தலைக் குரைப்புனல், வரைப்பகம் புகுந்தொறும் புனலாடு மகளிர்" (240 - 241) என்ற தொடர் வருகிறது. கடைசித் தொடருக்கு,

உரையாசிரியர், குளமும், குட்டையும் எனப் பொருள் கொண்டுள்ளார். ஆனால், மகளிர், புது வெள்ளம் வரும் போது, ஆற்றில் தான் குளித்தனரேயல்லது, குளத்திலும், குட்டையிலும் குளிக்கவில்லையாகவே, "வரைப்பகம்" என்ற தொடர், ஆறு கரைகட்டித் தடுக்கப்பட்ட இடம் எனும் பொருள் உடையதாகக் கொண்டு, அத்தொடரில், மேலே விவாதிக்கப்பட்ட உண்மைச் செய்தியின் குறிப்பீட்டினைக் காணும் கருத்துடையேன் நான்.) முடத்தாமக் கண்ணியார், தம்முடைய பொருநராற்றுப் படையின் கடைசிவரிகளில், "குனிந்துநின்று அரிவாளின் கூரிய வாயால், நெற்கதிர்களை அரிந்து, கதிர்க்கட்டுக்களை, மலைபோல அடுக்கி, நாள்தோறும் கடாவிட்டு, மேருமலை போல் குவிந்த நெல், நெருங்கி அடுக்கிய மூட்டைகள் இல்லாத வெற்றிடம் சிறிது இல்லையாம்படி, எங்கும் கிடப்பதற்குக் காரணமாம்படி, செந்நெல் விளையும் வரப்பு கட்டின ஒருவேலி பரப்புள்ள நிலம், ஓராயிரம் கலம் விளையுமாக" எனக் கூறியுள்ளார்.

"கூனிக் குயத்தின் வாய்நெல் லரிந்து,
சூடு கோடாகப் பிறக்கி, நாள்தோறும்
குன்றெனக் குவைஇய, குன்றாக் குப்பை
கடுந்தெற்று மூடையின் இடம்கெடக் கிடக்கும்
சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட் டாக".

- பொருநராற்றுப்படை : 242 - 247.

மிகப் பெரிய இவ்விளைவு, கரிகாலன், காவிரியின் வெள்ளத்தைத் திட்டமிட்டு முறைப்படுத்தியிருந்ததினாலேயே பெறப்பட்டிருக்க முடியும். எடுத்துக்காட்டுகளை எடுத்தாளும்போது, சில இடங்களில், பொருத்தமற்றனவற்றைக் காட்டிவிடும். திரு. வி. கனகசபைப்பிள்ளை அவர்கள், "காவிரியிலிருந்து பாசனத்திற்கான தண்ணீர் வழங்கக் கரிகாலன், மதகுகளையும், கால்வாய்களையும் கட்டினான் எனக்கூறி, (ஆயிரத்து எட்டு நூறு ஆண்டுகளுக்கு முந்திய தமிழர் : பக்கம் : 68) அதற்கு ஆதாரமாக, சிலப்பதிகாரம்,

காதை : 10, வரிகள் 108 - 111 ஐக் கொடுத்துள்ளார். அவர் குறிப்பிடும் அவ்வரிகள் "கடல் அலைகள் பொங்கி எழுவது அதிகமாகும் போது, காவிரியின் புதுவெள்ளம், அது கடலோடு கலக்கும் வாய்த்தலையிலிருந்து பின்னோக்கி எழத் தண்ணீர், பாசனக் கால்வாய்களுள். ஓயாது ஒலித்தவாறே உட்புகும்" என்ற பொருளைத் தான் தருகின்றனவேயல்லது, கரிகாலனின் பெருஞ்செயல் எதையும் குறிப்பிடவில்லை.

"கடல் வளன் எதிரக், கயவாய் நெரிக்கும்
காவிரிப் புதுநீர்க் கடுவரல் வாய்த்தலை
ஓவிறந்து ஒலிக்கும்." - சிலம்பு : 10 : 107 - 109.

இத்தொடர்கள், அப்பாடல் பாடப்பெற்றபோது, அதாவது, கரிகாலன் காலத்துக்குச் சிறிது பிற்பட்ட காலத்தில், காவிரியிலிருந்து வெட்டப்பட்ட பாசனக் கால்வாய்கள் இருந்தன என்பதை மட்டுமே உறுதி செய்யும்.

திருவாளர் வி. எ. சிமித் அவர்கள், கரிகாலன் ஈழத்தின் மீது படையெடுத்துச் சென்று ஆயிரமாயிரம் கூலியாட்களைக் கொண்டுவந்து, காவிரி ஆற்றிற்குத் தான் கட்டிய நூறு மைல் நீளக் கரைகட்டும் பணியில் ஈடுபடுத்தினான். காவிரிப் பட்டினத்தைத் தோற்றுவித்தான் எனப் பழந்தமிழ்ப் புலவர்களால் கூறப்பட்டுள்ளார்" எனக் கூறியுள்ளார் (The Early History of India. 4th Edition. Page : 481) பொய்க்கூற்றின் ஒரு சிறு கூறு இது; கரிகாலனின் ஈழப் படையெடுப்பு குறித்தோ, சிறை கொண்ட வீரர்களைக் கொணர்ந்தது குறித்தோ, பழந்தமிழ்ப் புலவர் எவரும் குறிப்பிடவில்லை. இவ்வறிவிப்புகள், மிகவும் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்த ஈழநாட்டுக் கற்பனைக் காலச் கணிப்புகளிலேயே (Ceylonese legendry chronicles) காணப்படுகின்றன. அதுவுமல்லாமல், நூறுமைல் நீளக்கரை பற்றிய குறிப்பு எங்கும் காணப்படவில்லை. கரிகாலன் கட்டிய கரை, எத்துணைக் குறுகியது, எவ்வளவு நீண்டது என்பதைக் கண்டறிவது அறவே இயலாது. காவேரிப்பட்டினம் ஜாதகக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளமையாலும், அக்கதைகள் எழுவதற்கு

நெடுங்காலத்திற்கு முன்பிருந்தே, அது துறைமுகப் பட்டினமாக இருந்தது ஆதலால் அது, கரிகாலனுக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இருந்தது; ஆகவே காவிரிப் பட்டினத்தைக் கரிகாலன் தோற்றுவிக்கவில்லை.

கரிகாலனும் திரிலோச்சன பல்லவனும் :

தெலுங்குக் கல்வெட்டுக்கள், இப்பெரும்பணி, (காவிரிக்குக் கரை கட்டியது) கரிகாலன் ஆணைப்படி, தம் கண்களை, அவனுடைய தாமரைத்தாள் மீது வைக்கும் திரிலோசன னாலும், மற்றும் பிற அரசர்களாலும் செய்து முடிக்கப் பட்டது என்ற உண்மையான சான்றுகளைக் கொண்டுள்ளன. திரிலோசனன், திரிநேத்திரன், திருநயனன், முக்கண்டி, என்பவை பல்லவ என்ற பின் இணைப்போடு, தெலுங்குக் கல்வெட்டுகளில் பெருமளவில் காணப்படும், ஒரு பொருள்குறிக்கும் பல சொற்களாம். (Ep. Ind. Vol. XI P. 340). பல்லவர் வரலாறு, தனித்து உணரத்தக்க, மூன்று கால கட்டங்களாகப் பிரிக்கத் தக்கதாம். 1) காஞ்சியைத் தலைநகராகவும், கிருஷ்ணா ஆற்றங்கரையில் உள்ள தனகடகத்தை இரண்டாம் தலைநகராகவும், கொண்டு ஆண்ட வேதச் சடங்குகளைப் பேணி வளர்த்த, தங்கள் அரச ஆவணப்பட்டயங்களைப் பிராகிருத மொழியில் வெளியிட்ட, சமுத்திர குப்தனின் அலகாபாத் "ப்ரஸஸ்தி" (Prasasti) யில், குறிப்பிடப்பட்டுள்ளவாறு, விஷ்ணுகோபன் என்பான் ஒருவன், ஆட்சி புரிந்திருந்த கி. பி. 350-இல், தங்கள் ஆட்சி அழிநிலைக்கு ஆளாக்கப்பட்டுவிட்ட பல்லவர் காலம், 2) தங்களுள் ஒருசிலர் வெறும் பெயரளவில் மட்டுமே காஞ்சித் தலைவர்களாக இருந்த, காஞ்சியில் அல்லாமல் கிழக்குக் கடற்கரைக்கண் உள்ள தெலுங்கு மாவட்டங் களிலிருந்து கொண்டு தங்கள் பட்டயங்களைச் சமஸ் கிருதத்தில் வெளியிட்ட, கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த பல்லவர்கள், 3) மீண்டும் காஞ்சியிலிருந்து ஆட்சி புரிந்த, சமஸ்கிருதம் தமிழ் ஆகிய இரு மொழி களிலுமான பட்டயங்களைக் கொண்ட, எண்ணற்ற கோயில் களைக் கட்டிய, கி. பி. 600க்கு முன்பே, தமிழர்களோடு

இரண்டற ஒன்றுபட்டுவிட்ட பல்லவர். இப்பல்லவர்கள், கி. பி. ஆறாம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து, ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதிவரை சிறப்புற்றிருந்தனர். இரண்டாவது காலகட்டம், அதாவது, நான்காம் நூற் றாண்டின் இடைக்காலத்திலிருந்து ஆறாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரையான காலகட்டந்தான், காஞ்சிமீது, பல்லவர்களுக்கு அதிகாரப் பிடிப்பு இல்லாத காலம். அவர்களைக் காஞ்சியிலிருந்து துரத்தியவன், பெரும்பாலும், கரிகாலன் ஆதலும், அவனால், காஞ்சியில் இடமில்லாமல் செய்யப்பட்டு, சோழப் பேரரசனுக்குத் திறை செலுத்தும் சிற்றரசனாகத், தெலுங்கு நாட்டில் அரசு கண்டவன், பெரும்பாலும், திரிலோசன பல்லவனாதலும் கூடும். கிழக்குக் கடற்கரைப் பல்லவர்களின் சமஸ்கிருதப் பட்டயங்களில் உள்ள, குடிவழிப் பட்டியலில், திரிலோசனப் பல்லவன் பெயர் இடம் பெறவில்லை. ஆனால், கோவாக் கதம்பர்களும் ஹேமாவதி நொளம்பர்களும், திரிலோசனக் கதம்பனையும், திரிலோசன நொளம்பனையும், முறையே, தங்கள் அரச இனங்களைத் தோற்றுவித்த குல முதல்வர்களாக உரிமை கொண்டாடுகின்றனர். (Ep. India XI Page : 340 X Page : 58) கடப்பா மாவட்டத்தில், இடம் பெற்றுள்ள, இப்போது, 'பெத்தமுடியம்' என வழங்கும் திரிலோசனபுரம் என்ற நகரைத் திரிலோசன பல்லவன் நிறுவினான். திரிலோசன பல்லவன், புராணத் தொடர்பான கற்பனை மனிதன் அல்லன்; தெலுங்கு நாட்டின் சில பகுதிகளை ஆண்ட உண்மையான அரசனே என்பதை உறுதி செய்ய மேலும் பல உண்மை நிகழ்ச்சிகளும் உள. தெலுங்குச் சோழர் கல்வெட்டொன்று, (1907 ஆம் ஆண்டு 580 ஆம் எண்) முக்கண்டிகாடுவெட்டி என்பான், அதாவது திரிலோசன பல்லவன், "வெருகண்டூர்" என்ற சிற்றூரை, 52 பிராமணர்களுக்கு வழங்கியதைக் குறிப்பிடுகிறது. இந்த அரசன், ஸ்ரீபர்வதத்திற்குக் கிழக்கில் 70 அக்ராகரங்களை நிறுவுவதும் செய்தான் (Madras Epc. Report 1908. P. 82, 83).

கரிகாலனும் காஞ்சியும் :

தெலுங்கு சோட ஆவணங்களின்படி காவிரியை, இருகரைகளுக்குள்ளே அடக்கியதோடு, கரிகாலன் காஞ்சியிலிருந்தும் ஆட்சி புரிந்தான் (Madras Ep. Report 1900. Page : 17). திருவாலங்காட்டுச் செப்பேடுகள், அவன், காஞ்சிக்குப் பொன் வேய்ந்தான் எனக் குறிப்பிடுகின்றன. (காஞ்சிம் யஸ்க நவீசகார கனகைஹ்" V 42 S.I.I. Vol. III part Page : 395). இதற்கு, அவ்விடத்துக் கோயில் கோபுரத்தைப் பொன் தகடுகளால் மூடினான் என்பதே, பெரும்பாலும் பொருளாகும். இக்கோயில், தென்னிந்தியாவில் ஆகம வழிக் கடவுள்களுக்குக் கட்டப்பட்ட கோயில்களில் முதல்கோயில் ஆதல்கூடும். தென்னிந்தியக் கல்வெட்டுகளில் கோயிலுக்கு வழங்கப்பட்ட நன்கொடை பதிவுபெற்ற பழங்கோயில், கூளி மஹாதாரக தேவகுல (கோயில்)த்துப், பகவான் நாராயண னுக்குக் கட்டி அளிக்கப்பட்ட, தாலூரத்தில் உள்ள கோயிலாம் (Ep. Ind. VIII P. 143). இக்கல்வெட்டு, பெரும்பாலும், கி. பி. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. காஞ்சீபுரத்தில் எண்ணற்ற கோயில்கள், விஷ்ணுவுக்குப் பெரும்பாலும் சிவனுக்கும் கூடக் கட்டப்படுமளவு, காஞ்சீபுர மாவட்டம் அப்பழைய பல்லவர் காலத்திலேயே ஆரிய மயமாக்கப்படுவது, தெளிவுறத் தெரியுமளவு முழுமை பெற்றுவிட்டது. கரிகாலன் பொன் வேய்ந்த கோயில், சிவன் கோயிலா, விஷ்ணுகோயிலா என்பதை உறுதி செய்ய எந்த வழியும் இல்லை.

கரிகாலன் வாழ்க்கை ஆற்றிய பெரும்பணிகள் பற்றி இதுகாறும் கூறியவை, அவன் காலப் புலவர்களாலும், அவன் காலம் தொட்டு வழங்கி வந்து, பின்னர் எண்ணற்ற கல்வெட்டுகளில் இடம்பெற்றுவிட்ட மரபுவழிச் செய்தி களாலும் உறுதி செய்யப்பட்டனவாம். இனி, பிற்காலப் புலவர்கள் கூறிய செய்தி விளக்கங்கள், கரிகாலன் காலத்துக்குப் பிற்பட்ட காலத்தவராய பரணர், அக நானூற்றில் தொகுக்கப்பட்ட ஒரு செய்யுளில், அவ்வரசன், வெண்ணியில் மேற்கொண்ட முதல் போரை விளக்கி,

இவ்வாறு கூறுகிறார். "கடும்சினமும் பெருவலியும் வாய்ந்த பெரிய புகழ் வாய்ந்த கரிகாலன், போர் ஆரவாரம் மிக்க கள்வளம் வாய்ந்த வெண்ணிவாயில் என்ற இடத்தில், சிறப்பு வாய்ந்த பகையரசர்கள் படைகொண்டுவந்து போரிட்ட களத்தில், பேரொலி எழுப்பும் அவர்களின் வீரமுரசும் அழிய வேளிர் குலத்தலைவர்கள் பதினொருவருடன் இரண்டு பெருவேந்தர்களையும் அழித்தனன்.

"காய்சின மொய்ம்பின் பெரும்பெயர்க் கரிகால்
ஆர்கலி நறவின் வெண்ணி வாயில்
சீர்கெழு மன்னர் மறலிய ஞாட்பின்
இமிழிசை முரசம் பொருகளத்து ஒழியப்
பதினொரு வேளிரொடு வேந்தர் சாய".

- அகம் : 246 : 8-12.

வெண்ணிப் போர்க்களத்தில், இருபெருவேந்தர்களோடு குறுநிலத் தலைவர்கள் பதினொருவர் இருந்தது, கரிகால் சோழனின் சமகாலப் புலவர்களால் குறிப்பிடப்பட வில்லையாயினும் (அடிக்குறிப்பு:- பரணர் குறிப்பிடும் இவ்வெண்ணிப் போர், கரிகாலன் சமகாலப்புலவர்களால் குறிப்பிடப்படவில்லை என்பது தவறு. போர் நடந்த அவ்வெண்ணிவாயிலில், அப்போர்க்காட்சியைக் காணும் வாய்ப்பினைப் பெற்ற, அவ்வூர் குயவர் குலத்து வந்த பெண் பாற்புலவர், அப்போரில் வெற்றி கண்ட கரிகாலனினும், அவனால் பெற்ற புறப்புண்ணுக்கு நாணி வடக்கிருந்து உயிர்விட்ட சேரலாதனே நல்லன் எனக் கரிகாலன் கேட்கப் பாடிய பாட்டு ஒன்று புறநானூற்றில் (66) இடம்பெற்றுளது. அப்பாட்டை, இவ்வதிகாரத்தின் தொடக்கத்தில் எடுத்து ஆண்டு இருக்கும், திருவாளர் பி. டி. எஸ் அவர்கள், இங்கு இவ்வாறு கூறுவது ஏனோ? -மொழிபெயர்ப்பு ஆசிரியர்), அது காதுவழிச்செய்தியின் ஒரு சிறு உண்மைக்கூற்று ஆகும். கரிகாலன், தமிழ்நாட்டைத் தன் ஆட்சிக்கீழ்க் கொண்டுவந்த பெருநிகழ்ச்சிகளில், ஒரு சிறு நிகழ்ச்சியான, சேரநாட்டைச் சேர்ந்த வாகைப் போர்க்களத்து ஒருநாள் போரில், ஒன்பது

குறுநிலத் தலைவர்களின் தோல்வி பற்றிய செய்தியும், காதுவழிச் செய்தியின் ஒருசிறு உண்மைக்கூற்று ஆகும். இப்போர் பரணரால் இவ்வாறு விளக்கப்பட்டுள்ளது. "சிறந்த வளம் கொழிக்கும் கரிகால்வளவன்முன் நின்று போரிடமாட்டாது, வானகப் பறந்தலை என்ற போர்க் களத்தில், அவன் வெற்றிபெறத் தங்கள் ஒன்பது வெண் கொற்றக் குடைகளையும் நல்ல யாற்பொழுதிலேயே களத்தில் கைவிட்டுவிட்டு ஓடிவிட்ட பெருமையில்லாத அரசர்கள்".

"பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லார்
சூடா வாகைப் பறந்தலை, ஆடுபெற,
ஒன்பது குடையும் நண்பகல் ஒழித்த
பீடில் மன்னர்".

- அகநானூறு : 125, 18 - 21.

வாகை எனும் சொல், ஒரு மலரையும் குறிக்கும். ஓர் இடத்தையும் குறிக்கும் ஆகவே, சூடும் வாகைமலரின் வேறுபடுத்தி, வாகை எனும் இடத்தை உணர்த்தச் சூடா வாகை என்ற சிலேடை வழங்கப்பட்டுளது.

கரிகாலன் பற்றிய பழங்கதைகள் :

காலப்போக்கில், நம்புதற்கியலாப் பல கட்டுக் கதைகள், கரிகாலன் பெயரை வளைத்துக் கொண்டு, இலக்கியங்களிலும் இடம் பெற்றுவிட்டன. கரிகாலன் இறப்பிற்குப் பின்னர், (எவ்வளவு காலத்திற்குப் பின்னர் என்பது சொல்ல இயலாது) இயற்றப்பட்ட, கணக்கிலாக்கட்டுக் கதைகளின் களஞ்சிய மான சிலப்பதிகாரக் காப்பியம், இந்திர விழாவையொட்டி நடைபெற்ற ஊர்வலத்தின்போது, காவிரிப்பூம்பட்டினத்துக் கடவுள்களுக்குப் பலிகொடுக்கும் பல்வேறு இடங்களுள், கொற்றப்பந்தர், பட்டிமண்டபம், தோரணவாயில் ஆகியன வைக்கப்பட்டிருந்த இடங்களை விளக்கிக் கூறுகிறது. இப்பகுதி, நம்புதற்கியலா வெற்றிச் செயல்கள் சிலவற்றைக் கரிகாலனுக்கு ஏற்றிக் கூறுவதால், அஃது, ஈண்டு எடுத்துக் காட்டப்படுகிறது. "பரந்த இவ்வுலகில், தன்னோடு எதிர்த்துப்

போரிடும் அரசர் எவரும் இலராகவே, போர் ஆர்வம் மிக்க திருமாவளவன், வாள், குடை, மயிர்நீக்காத் தோல் போர்த்த முரசுகளோடு நல்ல நாளில், தலைநகரின் நீங்கி, வடதிசைக் கண், எதிர்க்க வல்ல பகைவரைப் பெறலாம் என்ற வேட்கையால், வடநாடு நோக்கிச் சென்ற போது, இமையவர் இருக்கும் இமயப் பெருமலை, அவன் ஆசை அழியுமாறு இடை நின்று தடுத்து, அவன் ஊக்கத்தை உருக்குலைத்து விடவே, அம்மலை மீது சினம் கொண்டு அதன் பிடரியில், தன் புலிச் சின்னத்தைப் பொறித்துவிட்டு, எண்ணிச்சென்றது ஈடேறாதாக, மனம் சலித்து மீள்பவனுக்குக், கடல் அரண்கொண்ட வச்சிர நாட்டு அரசன் திறையாகக் கொடுத்த முத்துப் பந்தர். வாட்போர் வல்ல மகதத்து மன்னன், போரில் தோற்றுக் கொடுத்த பட்டி மண்டபம், அவந்தி வேந்தன் உவந்து அளித்த தொழில் நலம்மிக்க வாயில் தோரணம், என்ற பொன்னும், மணியும் கொண்டு தொழில் வல்ல கம்மியனால் பண்ணப்படாத, இவர்களின் குல முன்னோர், தனக்கு இடர் வந்துற்றபோது, ஒரொரு கால் செய்த உதவிகளுக்குக் கைம்மாறாக, மயனால் செய்து கொடுக்கப் பட்ட இம்மூன்றையும் வைத்து, உயர்ந்தோர் ஒன்று கூடிவந்து ஏத்தும் மண்டபம்".

"இருநில மருங்கில் பொருநரைப் பொறா அச்
செருவெங் காதலின் திருமா வளவன்,
வாளும், குடையும் மயிர்க்கண் முரசும்,
நாளொடு பெயர்ந்து, "நண்ணார்ப் பெறுக, இம்
மண்ணக மருங்கின்என் வலிகெழு தோள்", என்ப
புண்ணிய திசைமுகம் போகிய அந்நாள்,
அசைவில் ஊக்கத்து நசை பிறக்கு ஒழியப்,
பகைவிலக் கியதுஇப் பயங்கெழு மலை என,
இமையவர் உறையும் சிமையப் பிடர்த்தலைக்
கொடுவரி ஏற்றிக் கொள்கையின் பெயர்வோற்கு,
மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்

கோன் இறை கொடுத்த கொற்றப் பந்தரும்,
மகத நன்னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைபுறத்துக் கொடுத்த பட்டிமண் டபமும்,
அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த
நீவந்தோங்கு மரபின் தோரண வாயிலும்,
பொன்னினும் மணியிலும் புனைந்தன வாயிலும்,
நுண்வினைக் கம்மியர் காணா மரபின
துயர்நீங்கு சிறப்பின் அவர் தொல்லோர் உதவிக்கு
மயன் விதித்துக் கொடுத்த மரபின இவைதாம்
ஒருங்குடன் புணர்ந்து, ஆங்கு, உயர்ந்தோர் ஏத்தும்
அரும்பெறல் மரபின் மண்டபம்".

- சிலம்பு : 5 : 89 - 110.

அடிக்குறிப்பு :

(பரந்த இவ்வுலகில் எனும் பொருள்பட, மூலத்தில், "இருநில மருங்கின்" என்ற தொடர் வந்துளது. ஆனால், உரையாசிரியர், "இருநில மருங்கின்" என்றது மேற்கும், தெற்கும் எனக்கொள்க; என்றது, சேர, பாண்டியருடைய நாடுகளை" என விளக்கம் அளித்துள்ளார். இது, வலிந்து கொண்ட பொருளாம்.)

(இப்பகுதியில், கரிகாலன் என்ற பெயர் இடம் பெறவில்லை. ஆனால், திருமகள் அருள்பெற்ற சிறந்த சோழ மன்னன் எனப் பொருள்படும் திருமாவளவன் என்பதுதான் இடம் பெற்றுளது. பட்டினப்பாலையில், (299) கரிகாலனுக்கு, இச்சிறப்புப் பெயர்தான் கொடுக்கப் பட்டிருப்பதால், இதில் வரும் அத்தொடர் (திருமாவளவன்) கரிகாலனைக் குறிப்பதாகக் கொள்ளலாம். 58ஆம் எண் புறநானூற்றுச் செய்யுளின் கொளு "அப்பாட்டு, "சோழன், குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனும், பாண்டியன் வெள்ளியம் பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் ஒருங்கிருந்தாரைக் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார் பாடியது"

என்கிறது. அப்பெருந்திருமாவளன் யாவன், அப்பெருவழுதி யாவன் என்பதை உணர்ந்த மூலத்தில் எதுவும் இல்லை. அவர்கள் உயிர் நீத்த இடங்கள் அவர்கள் இன்னார் என்பதை உணர்த்தும் குறியீடாகக் கூறப்பட்டுள்ளமையால் அவர்கள், கரிகாலன் அல்லாத, பிற்காலத்தைச் சேர்ந்த வேறு மனிதராவர். தம்முடைய கூற்றுக்கும் அரண்செய்யும் சான்று எதுவும் காட்டாமலே, அச்சோழன், கரிகாலனாவன் எனக் கொண்டார் திருவாளர் கனகசபை அவர்கள் (1800 ஆண்டுகளுக்கு முந்திய தமிழர்: பக்கம் : 68). சமஸ்கிருதப் புராணக் கதைகளில் வரும் தெய்வதச்சன் மயன் குறிப்பிடப்பட்டிருப்பது, இப்பாட்டிற்குக் கரிகாலன் காலத்திற்குப் பிற்பட்டது என்ற முத்திரையினைப் பொறிக்கிறது. "அந்நாள்" என்ற சொற்றொடர் ஆட்சியும் அத்தகையதே.

கரிகாலன் வரலாறு எழுதிய பண்டைய, இன்றைய வரலாற்று ஆசிரியர், மதிப்பளித்து இந்திய அரசர்கள் அனைவரையும் வெற்றிகொண்ட, தன்படையொடு, இமயத்தின் உச்சிக்கே அணி வகுத்துச் சென்ற, தன் அரச சின்னத்தை அம்மலைமீது பொறித்த, மீண்டு வருங்கால், போராட்டத்தின் பின்னரோ, அல்லது வேறு வகையிலோ, வடஇந்தியப் பேரரசர்கள் மூவரிடமிருந்து திறைப் பொருள் பெற்ற பெருமைகளை, இம்மன்னனுக்கு ஏற்றியுள்ளனர். இந்தியாவின் தென் கோடியிலிருந்து, இமாலயத்தின் உச்சி வரையான, ஒரு நெப்போலியப் படையெடுப்பு, இந்திய வரலாற்றின் எந்தக் காலத்திலும், எண்ணிப் பார்க்கவும் இயலா ஓர் அருஞ்செயலாகும். மேலும், பிற்காலக்கட்டுக் கதை ஒன்றின்படி, தம்முடைய பாட்டுக்குப் பதினாறு நூறாயிரம் பொற்காசுகள் பரிசளிக்கப்பட்டவரும் (கலிங்கத்துப்பரணி : பாட்டு : 185) தம் தலைவனின் அருஞ்செயல்களை மிகைப்படுத்திக் கூற முழு உரிமை பெற்றவரும் ஆன, கரிகாலன் புகழ்பாடிய, அவன் சம காலப்புலவராம் உருத்திரங் கண்ணனார், இதைக் குறிப்பிடவில்லை ; ரேனாடுக்கு அப்பால், கரிகாலனின் அத்துணை அருஞ்செயல்களையும், முறைப்படுத்திக் கூறும்

தெலுங்குக் கல்வெட்டுக்கள், இதை மறைமுகமாகவும் குறிப்பிடவில்லை. ஆகவே, சிலப்பதிகார ஆசிரியரின் இக்கூற்று, சோழ அரசர்களுக்குச், சூரியன் வரை செல்லும் குடிவழிப் பட்டியல் உரிமை தரப்பட்ட, வடக்கத்திய தேவ வீரர்களோடும், மானுட வீரர்களோடும் தொடர்பு படுத்தும் அருஞ்செயல்களும், தெய்வ வரப்பிரஸாதங்களும் அளிக்கப் பட்ட காலத்திய கற்பனைக் கண்டுபிடிப்புகளாம் என்றே நான் மதிக்கின்றேன். அம்மூன்றும் பொருட்களை, அன்பளிப்பாக, யாரோ சிலரிடமிருந்து, கரிகாலன் பெற்றான் என்பது நம்பக்கூடாத ஒன்று அன்று; ஆனால், இமயம் வரை, படையெடுத்துச் சென்றான் என்பது, தெளிவாக, ஒரு பிற்காலக் கட்டுக் கதையே அல்லது வேறன்று.

பிற்காலத் தமிழ்ப் பாக்களில் காணப்படும், ஒரு யானை, அவனைத் தேடிக்கண்டுபிடித்து, அரச மாலை சூட்டிற்று; நெருப்பிலிருந்து தப்பித்தபோது, கால் தீப்புண் பெற்றுக் கருகிவிட்டதால், அவன் கரிகாலன் என அழைக்கப்பட்டான் என்பன போலும் கட்டுக் கதைகள், ஆராய்தற்கு அருகிய தகுதிப்பாடுடையவாம். அண்மைக்கால, இலங்கை வரலாற்றுச் செய்திப் பட்டியல்கள், கரிகாலன் கட்டுக் கதைகள் குறித்த தம்பங்கையும் வழங்கியுள்ளன. அவற்றுள் ஒன்று, அதாவது, அவன், இலங்கையிலிருந்து எண்ணற்ற அடிமைகளைக் கைப்பற்றிக் கொணர்ந்து, காவிரிக்குக் கரை கட்டும் பணியில் ஈடுபடுத்தினான் என்பது ஏற்கெனவே குறிப்பிடப்பட்டது. இக்கட்டுக்கதைகள், திரு டொனால்டு பெயெசெகொர (Donald Obeyesekere) என்பவரால், தம் முடைய, இலங்கை வரலாற்று வரைவு (Sketches of Ceylon's History) என்ற நூலில் ஏற்ற வகையில் தொகுக்கப்பட்டுள்ளன. அவை ஈண்டு எடுத்துக் காட்டப்பெறும். "வங்க நஸிக திஸ்ய (Wanka nasika tissa) என்பான் ஆட்சிக் காலத்தில் (கி. பி. 113 - 116) தஞ்சாவூர் அரசன், பெரும் படையோடு இலங்கை மீது படையெடுத்து, அத்தீவின் வடமேற்குப் பகுதியைப் பாழ்செய்து, அநுராதபுரம், கண்ணுக்குப் புலனாகும் வரை ஊடுருவிச் சென்று, மிகப்பெரிய கொள்ளைப் பொருள் களோடும், 12000க்குக் குறையாத சிங்களச் சிறைக்கைதி

களோடும் திரும்பினான்; வங்க நஸிகனின் மகன் கஜபாகு, தன் தந்தையின் அரியணையில் அமர்ந்ததும், சிங்கள மக்களுக்கு இழைக்கப்பட்ட இழிவிற்குப் பழிவாங்கி விட்டான். நேல - யொத்ஹயன் (Nela Yodhaya) என்பான் படைத்தலைமையின் கீழ்ப் பெரிய படையோடு, ஆதம் பாலத்தின்மீது அணிவகுத்துச் சென்று, நாட்டைச் சூறையாடி, தஞ்சாவூர் அரசன், 12000 சிங்களவர்களைத் தரவும், அத்துடன் அதற்கு இருமடங்கு எண்ணிக்கையான தமிழர்களைச் சிறைக் கைதிகளாக, இலங்கைக்குக் கொண்டு செல்லத் தரவும், மறுத்தால் தஞ்சை மாநகரைத் தரைமட்டமாக்கித் தகர்த்துவிடுவதாக அச்சுறுத்தினான். அவ்வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. கஜபாகுடி போர்க் கைதிகளோடும், பண்டு கொண்டு செல்லப்பட்ட சிங்களவர்களோடும் மட்டுமல்லாமல், பத்தினிக் கடவுளின் காற்சிலம்பு, கஜபாகுவின் படை கொள்ளையடித்த, நான்கு தெய்வத் திருமேனிகளின் கைகளோடு கஜபாகு இலங்கை திரும்பினான்". (Sketches of Ceylon's History Page : 26) மகா வம்ஸம், இதைக் குறிப்பிடவே இல்லை என்ற உண்மையாலும், இது, பிற்காலத்திய, நம்புதற்கு இல்லாத கட்டுக்கதை என்பது உறுதி செய்யப்பட்டது. தஞ்சாவூர், சோழ அரசின் தலைநகராக, கி.பி. 850-இல் ஆயிற்று. இக்கட்டுக் கதை, அத்தேதிக்குப் பிறகே கட்டிவிடப்பட்டிருக்க வேண்டும்.

மற்றொரு கருத்தும், ஈண்டுக் குறிப்பிடல் தகும். பெயர் குறிப்பிடப்படாத ஒரு சோழ அரசன், சிலப்பதிகாரத்தில் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளான். ஐந்நூறு ஆண்டு களுக்கு முற்படாத காலத்தில் வாழ்ந்திருந்தவராகிய உரையாசிரியர் அடியார்க்கு நல்லார், உண்மைச் சான்றின் நிழல் ஒரு சிறிதும் இல்லாமல், இச்சோழனைக், கரிகாலனாகக் கொண்டுள்ளார். சிலப்பதிகார நிகழ்ச்சிகள், நடைபெற்றபோது, காவிரிப்பூம்பட்டினத்தில், ஆண்டு கொண்டிருந்த சோழனைப் பற்றிப் பேசும்போது, சிலப்பதிகாரம் பாடிய புலவன், இக்கரிகாலனைத்தான் மனதில் கொண்டிருந்தார் என நம்மை நம்பத் தூண்ட,

அப்பாட்டின் மூலத்தில் எதுவும் இல்லை. அதற்கு மாறாகக் கரிகாலன், தெளிவாகப் பெயர் சுட்டிக் குறிப்பிடப் பட்டிருக்கும் இரு இடங்களிலும், அவன் பெருஞ் செயல்கள், இறந்த காலத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளன. அவன், இமயத்திற்குப் படையெடுத்துச் சென்று மீண்டதாகிய கட்டிவிடப்பட்ட பெருஞ்செயலைக் குறிப்பிடும் ஒரு பகுதி ஏற்கெனவே எடுத்துக் காட்டப்பட்டது. மற்றொன்று, வானளாவும் பெரும்புகழ் கொண்ட கரிகால் வளவன், புதுப் புனலில் புகுந்தாடும் விழாவின் முதல் நாளன்று, புதுப்புது ஆடைகளால் தன்னை அணி செய்து கொள்வது போல, நகர மக்கள் வேறுவேறு ஆடைகளை அணிந்து கொண்டனர் எனப் புனலாட்டு விழா பற்றிய விளக்கங்களைக் கூறும் பகுதியில் இடம் பெற்றுளது.

"விண்பொரு பெரும்புகழ்க் கரிகால் வளவன்,
தண்பதம் கொள்ளும் தலைநாள் போல".

- சிலம்பு : காதை : 6, பக்கம் : 159 - 160.

இக்காப்பியம் இயற்றப்படுவதற்குச் சிலகாலம் முற்பட்ட காலத்தில், புதுப்புனலில் புகுந்தாடும் விழாவினைக் கரிகாலன் தொடங்கி வைத்தான் என்பதே இதன் பொருள்.

இப்பொருள் பற்றி ஆராய்ந்த இன்றைய எழுத்தாளர்கள், மூலத்தையும், உரையையும் ஒன்றாகக் கொண்டு குழம்பி, நூல் ஆசிரியரின் கூற்றும் நூலாசிரியர்க்கு ஆயிரம் ஆண்டுகள் பிற்பட்டவராகிய உரையாசிரியரின் கூற்றும் வரலாற்றுச் சான்றாம் தன்மையில் ஒத்த மதிப்புடைய எனக் கருதி யுள்ளனர். இம்மூன்று அரச இனங்களின் பழைய வரலாறு குறித்து, அண்மையில் எழுதப்பட்டனவற்றில், பெரும் பகுதி, அவ்விலக்கியம் எழுந்த காலத்துச் சமகாலச்சான்றுகள், உரையாசிரியர்கள், இன்றைய எழுத்தாளர்கள், வரலாற்றுச் சான்றுகளின் விதிமுறை களின் பெரும் புறக்கணிப்போடு கற்பித்துக் கொண்ட கற்பனைகளின் கூட்டுச் சரக்காகும்.

கரிகாலன் காலம் :

கரிகாலனுக்கும் செங்குட்டுவனுக்கும் இடையில் உறவு கற்பிக்கும் தவறான கொள்கை :

கரிகாலன் சிறப்புற வாழ்ந்திருந்தது எந்தக் காலம் என்ற வினா, விடையளிக்கப்படாமல் உளது. இன்றைய வரலாற்று ஆய்வாளர், கி. பி. இரண்டாவது நூற்றாண்டை அவனுக்கு உடையதாக்குகின்றனர். பேராசிரியர் சேஷகிரி சாஸ்திரியார், கடந்த நூற்றாண்டு என்பதின் முற்பகுதியில், தமிழ் இலக்கியம் பற்றிய தம்முடைய ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றில் (கி. பி. 1884), இந்தக் காலத்தைத் தம் கருத்தாகக் கூறியுள்ளார். அவருக்கு முற்பட்ட ஆராய்ச்சியாளர்களைப் போலவே, இவரும், நூலின் மூலம் அளிக்கும் சான்றுகளின் மதிப்பிற்கும், ஆயிரம் ஆண்டுகள் கழித்து எழுதப்பட்ட உரையாசிரியர் களின் பொருள் விளக்கம் அளிக்கும் சான்றுகளின் மதிப் பிற்கும் இடையிலான வேறுபாட்டினை உணராமல், கரிகாலனைச் சிலப்பதிகார மூன்றாம் காண்டத்தின் பாட்டுடைத்தலைவனாகிய சேரவேந்தன் செங்குட்டுவனின் சம காலத்தவனாக மதித்துள்ளார். ஏற்கெனவே குறிப் பிட்டதுபோல, கரிகாலனை, அக்கதை நிகழ்ந்தகாலத்திற்கு முற்பட்ட காலத்தவனாக, நூலின் மூலமே கொண்டுளது. அதற்கு மாறாக, உரையாசிரியர், கரிகாலனை, அக்கதை தொடங்கிய காலத்தில் ஆட்சி புரிந்திருந்தவனாகக் கொண்டுள்ளார், திரு. சேஷகிரி சாஸ்திரியாரின் கொள்கைக்கு மீண்டும் சென்றால், கயவாகு (பாலிமொழியில் கஜபாகு), செங்குட்டுவன் சம காலத்தவன், ஆகவே, கரிகாலனுக்கும் சம காலத்தவன் ஆகிறான். திரு. சேஷகிரி சாஸ்திரியார் சிலப்பதிகாரக் காதை முப்பதாவது வரியில் குறிப்பிடப்பட்டிருக்கும் கயவாகுவையும், இலங்கை வரலாற்றுப் பட்டியலில், கி. பி. 113 - 115 காலத்தில் வாழ்ந்தவனாகக் கூறப்பட்டிருக்கும், அப்பட்டியலின் முதலாம் கஜபாகுவையும் ஒருவராகக் கொண்டுள்ளார். (Essay on Tamil literature 1884 Page : 30).

திரு. குமாரசாமி அவர்கள், இக்கருத்தை ஏற்றுக் கொண்டு, பழந்தமிழ் இலக்கிய வரலாறு பற்றிய தம்முடைய கருத்துக்கினிய கட்டுரையில், மதிப்பிற்குரிய குமாரசாமி அவர்கள், கரிகாலனைக் கி. பி. முதல் நூற்றாண்டிற்குக் கொண்டு செல்கிறார். ("பழந்தமிழ்ப் புலவர் இருவரோடு அரைமணிநேரம்", [A half - hour with two Ancient Tamil poets J.R.A.S. Ceylon Branth 1894. Hultson in S. I. I. II. III Page : 372]. இக்கருத்து, சிலப்பதிகார உரைகள், கரிகாலனை, இலங்கை கஜபாகுவின் சம காலத்தவனாக சேர அரசன் செங்குட்டுவனின், தாய்வழிப்பாட்டனாகக் கூறுவதை அடிப்படையாகக் கொண்டுளது. திருவாளர் குமாரசாமி, இந்தக் சுயவாகுவை, மகாவம்சம் என்ற இலங்கை வரலாற்று நூலின்படி, கி. பி. 113 முதல் 135 வரை அரசாண்ட முதலாம் கஜபாகுவர்கக் கொண்டுள்ளார் [S. I. I. II. III. Page : 373]. இக்கருத்தின் மீது, சிலப்பதிகார உரைகள், கரிகாலனைச் செங்குட்டுவனின் தாய்வழிப் பாட்டனாகக் குறிப்பிடவில்லை என்பது நினைவில் கொள்ளப்படல் வேண்டும். நூலாசிரியரால் தான் பாடப்பட வேண்டும் என்ற இன்றியமையாமையில்லாத, நூலில் கூறப்படும் கதையின் சுருக்கத்தைக் கூறும், நூலின் முன்னுரையாம் பதிகத்திற்கு அடியார்க்கு நல்லார் எழுதும் உரைக்கான முன்னுரையில், செங்குட்டுவன் பேரொளி வாய்ந்த ஞாயிற்றினுடைய ஏழ்குதிரைகள் பூட்டப்பட்ட பெரிய தேருடைய சோழன் மகள் நற்சோணையின் மகன் எனக்கூறப்பட்டுளது. இது, செங்குட்டுவன், கரிகாலன் பெயரன் எனும் பொருளை நிச்சயமாகத் தருவதாகாது. இருபத்தொன்பதாவது காதையின் தொடக்கத்தில் அச்சிடப்பட்டிருக்கும் உரைநடைப்பகுதியில், திகழ் ஒளி ஞாயிற்றின் சோழன், அதாவது சூரிய குலத்துச் சோழன் மகளுக்குப் பிறந்த மகன் என்ற தொடர் மட்டுமே இடம் பெற்றுளது. அதற்குமேல் எதுவும் இல்லை (மொழி பெயர்ப்பு ஆசிரியர் குறிப்பு : "நூலாசிரியர் திரு. சீனிவாச அய்யங்கார் காட்டியிருக்கும், சிலப்பதிகார கதைப்பகுதிகள் இரண்டிலும், செங்குட்டுவன் சோழன் மகள், நற் சோணையின் மகன் என்று மட்டுமே குறிப்பிடப்படாமல்,

கரிகாலனுக்கு நற்சோணை ஈன்ற மகன் என்றும் கூறப் பட்டுள்ளான். "குமரியொடு வடவிமையந்து ஒரு மொழி வைத்து உலகாண்ட சேரலாதற்குத் திகழொளி ஞாயிற்று ஏழ்பரி நெடுந்தேர்ச் சோழன் தன் மகள் நற்சோணை ஈன்ற மக்கள் இருவர்". (பதிகம் : அடியார்க்கு நல்லார் உரை) "குமரியொடு வடவிமயத்து ஒரு மொழி வைத்து உலகாண்ட சேரலாதற்குத் திகழ் ஒளி ஞாயிற்றுச் சோழன் மகள் ஈன்ற மைந்தன்" (இருபத்தொன்பதாவது, வாழ்த்துக் காதை, உரைப்பாட்டுமடை), ஆகவே, அவ்வுரைக் கூற்றுக்கள், வரலாற்றுச் சான்றுகளாக ஏற்கத் தக்கனவாயின், கரிகாலன், செங்குட்டுவனின் தாய்வழிப் பாட்டன் என்பது உறுதி செய்யப்பட்ட ஒன்று ஆகிறது)".

நான் தேடிப்பார்த்த அளவில், பழைய, புதிய பாடல் எதுவும், எந்த ஒரு பழைய பாட்டுக்கான உரை எதுவும், கரிகாலனுக்கும், செங்குட்டுவனுக்கும் இடையிலான உறவு எதையும் கூறவில்லை. ஆகவே, செங்குட்டுவன், கரிகாலனின் பெயரன் (சோழ மன்னனோடு யாதேனும் ஓர் உறவுடையான்) என்பது, கரிகாலன் குறித்த, நவீனக் கட்டுக் கதையே, அதைக் கட்டிவிட்டவர் யார் என்பதை நான் அறியேன். திரு. கனகசபை அவர்கள், "கரிகாலன் மகள், சேர அரசன் இரண்டாம் ஆதனுக்கு மணம் செய்து கொடுக்கப்பட்டுச், சேரன் செங்குட்டுவனுக்குத் தாய் ஆனாள்" என முடிந்த முடிபாகக் கூறுகிறார். (ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முந்திய தமிழர், பக்கம் : 72) இதற்கு ஆதாரமாகச், சிலப்பதிகாரம் முப்பதாவது காதை 173 - 183 வரிகளை அவர், சான்று காட்டுகிறார். தேவந்திமேல் தெய்வமுற்று வந்த இமையோர் இளங்கொடி உரைத்ததையே, சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகளாரும் திரும்பக் கூறுவதை மட்டுமே, இப்பகுதி கூறுகிறது. அது கூறியது இது : "உன் தந்தையின் தாள் நிழலில் இனிது இருந்தோனே!. "அரியணையில் அமரும் ஊழ், மூத்தோனாம் செங்குட்டு வனுக்கு இல்லை. உனக்கே உண்டு" என, வருவது உரைக்கும் நிமித்தின் கூற, அவனைச் சினந்து நோக்கிச், கொங்கவிழும் கடிமணமலர் களால் ஆன மாலை அணிந்த, வெற்றிக்

கொடியசையும் தேர் முதலாம் நாற்படைகளைக் கொண்ட மூத்தோன் செங்குட்டுவன், நிமித்திகள் உரை கேட்டு உற்ற பெருந்துயர் இல்லாமல் போக, பகலோன் எழும் பக்கமாம் கிழக்கு வாயிற்கண் இருக்கும், துறவிகளுள் ஒருவனாகிப் பரந்து அகன்ற பேரிடமாம் உலகைத்தாங்கும் துயர்ப்பாரம் நீங்க, அது கைவிடுத்துச் சிந்தையால் சிந்தித்துப் பார்க்கவும் இயலாத, வான்போல் உயர்ந்த, அழிவிலாப் பேரின்பத்தை ஆட்சி கொண்ட பேரரசே".

"நுந்தை தாள் நிழல் இருந்தோய்! நின்னை,
அரசுவீற்றிருக்கும் திருப்பொறி உண்டென்று,
உரைசெய் தவன்மேல், உருத்து நோக்கிக்
கொங்கவிழ் நறுந்தார்க் கொடித்தேர்த் தானைச்,
செங்குட் டுவன்தன் செல்லல் நீங்கப்
பகல்செல் வாயில் படியோர் தம்முன்
அகலிடப் பாரம் அகல நீக்கிச்,
சிந்தை செல்லாச் சேணெடும், தூரத்து
அந்தமில் இன்பத்து அரசாள் வேந்து"

- சிலப்பதிகாரம் : 30 : 174 - 182.

தமிழிலக்கிய உலகம், பெருமித உணர்வோடு மேற் கொண்டிருக்கும், கரிகாலன் நனிமிகப் பழங்காலத்தைச் சேர்ந்தவன் என்ற கொள்கைக்கு அடிப்படை நிலைக்களமாம் நற்சோணை என்ற பெயரையும், கரிகாலனுக்கும், அவருக்கும் உள்ள உறவினையும், இப்பாடற்பகுதியிலிருந்து, திரு. கனகசபை அவர்கள், எப்படி கண்டெடுத்தார் என்பதைக் கற்பனைச் செய்து பார்க்கவும் இயலவில்லை.

கரிகாலன் காலத்துப் புலவர்கள் பாடிய பாக்களுக்கும், சிலப்பதிகாரத்துக்கும் இடையில், அதிகம் இல்லை என்றாலும், குறைந்தது ஒரு நூற்றாண்டு காலமாவது கடந்திருக்க வேண்டும். முன்னவற்றில், சமஸ்கிருதச் சொற்கள் அருகியே ஆளப்பட்டிருக்கும். பின்னதில்,

அவற்றின் ஆட்சி வழக்கமாகிவிட்டது. முன்னவற்றில், ஆரியக் கருத்துகள் பற்றி, ஒரு சில குறிப்புகளே உள்ளன. அவையும், ஆரிய நாகரிகம், தமிழர் வாழ்வின் ஊடுறுவ வில்லை என்பதை உணர்த்திவிடும். சிலப்பதிகாரத்தில், விளக்கப்பட்டிருக்கும் வாழ்க்கை முறை, அதற்கு மாறாக, முழுக்க முழுக்க ஆரியக் கருத்துகளாலும், ஆரியச் சமயக் கொள்கையாலும் ஊடுறுவப்பட்டிருக்கும், அடிக்கொரு தரம் எனப் பரவலாகக் கூறப்பட்டிருக்கும், இசை, நாடகம், நாட்டியம், மற்றும் கற்பனைக் கதைகள் அனைத்துமே ஆரியத் தன்மை வாய்ந்தன. இலக்கியத் திறனாய்வுத் துறையில் ஓரளவே பயிற்சி பெற்றவரும் கூடப், சிலப்பதிகாரக் காப்பியம், தமிழர் சிந்தனைகள், ஆரிய நாகரிகத்தோடு கலப்பதற்கு இனி இடமில்லை எனக்கூறுமளவு இரண்டறக் கலந்துவிட்ட காலத்தைச் சேர்ந்தது. ஆனால், கரிகாலனைப் பற்றிய, அவன் காலப் பாடல்கள், தமிழ்நாடு ஆரியமயமாக் கப்படுவதற்கு முந்திய காலத்தைச் சேர்ந்தவை என்பதை எளிதில் உணர்ந்து கொள்ளத் தவறமாட்டார்.

கரிகாலன் காலம் : கஜபாகு, சம காலத்தன் :

மேலும், கஜபாகுவைச், செங்குட்டுவன் சம காலத் தேவனாகக் கொள்வது, மிகவும் வலுவற்ற அடிப்படை மீது அமைந்துளது. சிலப்பதிகாரக் கயவாகுவை, மகாவம்ச முதலாம் கஜபாகுவாகக் கொள்வது பற்றித் திருவாளர் ஹல்ட்ஸ் (Hawltsch) என்பார், "திரு. குமாரசாமி அவர்களின் மதிநலத்திற்கு மதிப்பளிக்கும் அதே நிலையில், இரண்டு கஜபாகுகளையும் அடையாளம் காட்டுவது, வெறும் பெயர் ஒற்றுமையால் மட்டுமே உறுதி செய்யப்படாமல், அகச்சான்றுகளாலும் உறுதி செய்யப்படும் வரையும், இலங்கையின் பண்டைய வரலாற்றுக் கால வரிசைப் பட்டியல், நுண்ணிய திறனாய்வுக்கு உள்ளாக்கப்படும் வரையும் இக்கொள்கையை ஏற்றுக்கொள்ள முன்வர மாட்டேன்" எனக் கூறியுள்ளார்; (S.I.I. III : III. Page : 378). ஹல்ட்ஸ் அவர்களின் திறனாய்வு முடிவினைச் சந்திக்கத், திரு. கனகசபை அவர்கள் முயலவில்லை. திரு. எஸ். கிருஷ்ணசாமி

அய்யங்கார் அவர்கள், திரு. சேஷகிரி சாஸ்திரியார், திரு. குமாரசாமி ஆகியோர் சித்தாந்தங்களை ஒப்புக்கொண்டு, திரு. ஹல்ட்ஸ் அவர்களால் வேண்டப்பட்ட அகச்சான்றுகள் மூலம், இரு கஜபாகுகளையும் அடையாளம் காட்ட முயன்றுள்ளார். "சிலப்பதிகாரக் காப்பியத்து முதல் காண்டத்தின் கருத்தோடு மேற்கொள்ளப்படும் திறனாய்வு, பாட்டுடைத்தலைவன் வாழ்க்கையின் தொடக்க காலத்தில், புகார் அதாவது, காவிரிப்பூம்பட்டினத்து அரசன், கரிகாற்சோழன் என்பதை உணர்த்தும், ஆளும் அரசன் பற்றிய குறிப்பீடுகள் அனைத்தையும், உரையாசிரியர், கரிகாலனுக்கே பொருந்துமாறு ஒரே நிலையினதாகப் பொருள் கண்டுள்ளார் என்ற உண்மை ஒருபுறம் இருக்க, (எடுத்துக்கொண்ட பணிக்கு முழுவதும் தகுதி வாய்ந்தவர் உரையாசிரியர். ஆகவே, தம்முடைய உரையில், உண்மையான காதுவழிச் செய்தியைத் தவிர்த்து, வேறு எதையும், ஆண்டிருக்க மாட்டார் என எதிர்பாக்கலாம். ஆதலால், இது ஒன்றே போதுமானதாகும்). பெயர் மூலமாகவும், இமயத்தின் மீது புலிச் சின்னத்தை நாட்டியது அவனுக்கே உரித்தாகும் உண்மை மூலமாகவும் அவனைக் குறிக்கும் எண்ணற்ற, நேரிடைக் குறிப்பீடுகளும் உள்ளன" எனக் கூறுகிறார் (Ancient India. Page : 350) உரையாசிரியர். ஆயிரம் ஆண்டுகள் கழித்து உரை செய்துள்ளார் என ஏற்கெனவே கூறியுள்ளேன். ஒரு கதை, ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குக் கைம்மாறி வருவதே காதுவழிச் செய்தி என்பதன் பொருள். உரையாசிரியரின் விளக்கங்கள், அவருடைய கண்டு பிடிப்புக்கள் ஆகா; மாறாகப், பழைய உரையாசிரியர் தலை முறைகளிலிருந்து, இடையறவு படாமல், வரிசையாகக் கைம்மாறிக் கைம்மாறி வந்தனவே என்பதை உணர்த்தும் சான்று எதுவும் இல்லை. ஆகவே, அவருடைய கற்பனைகள் எல்லாம் காதுவழிச் செய்திகள் ஆகிவிடா. உரையாசிரியர், சிறந்த தமிழ்ப்புலவர், பொருள் விளங்காப் பகுதிகளுக்கு விளக்கம் அளிக்கும் தகுதி வாய்ந்தவர்; அதில் ஐயம் இல்லை; ஆனால், அதுவே, மேலே எடுத்தாண்டிருக்கும் எடுத்துக் காட்டின் அடைப்புகளுக்கிடையில் கூறப்பட்டிருக்கும்

வாக்கியத்திலிருந்து பெறப்படுவது போல, அவர் காலத்திற்கு, ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதான, விவாதத்திற்குரிய நிகழ்ச்சிகளுக்கு விளக்கம் அளித்து உறுதி செய்யும் உரிமையை அவருக்கு வழங்கிவிடாது. சிலப்பதிகாரக் காப்பியத்தில், கரிகாலனைக் குறிப்பிடும் நேரிடைக் குறிப்பீடுகள் அனைத்தையும், கீழ்வரும் பகுதியில், திரு. கிருஷ்ணசாமி அய்யங்கார் குறிப்பிட்டுள்ளார். 1) "முதற் காதையின் கடைசி நான்கு வரிகள், இமயத்துச்சியில், புலிச் சின்னத்தை நிறுவிய அரசனை வாழ்த்துகிறது. "இது, உண்மையன்று, ஒன்று, அரச சின்னத்தை (கல், செங்கல், மரம், இரும்பு ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் செய்யப்பட்ட) கரிகாலன் நாட்டினான் எனப் புலவர் கூறவில்லை என்பது குறிப்பிடப்படல் கூடும். ஆண்டிருக்கும் சொல், "பொறித்து", வெட்டுதல் அல்லது செதுக்குதல், முதற்காதையின் கடைசி நான்கு வரிகள், "போர்க்களம் பலவற்றில் வெற்றி கண்ட கொடிய வேற்படையுடைய செம்பியன் (அதாவது சோழ அரசன்,) ஓப்பற்ற தன் அரச ஆணை ஒன்றே, உலகெங்கும் நடைபெறப் பேரரசு செலுத்துவோனாக! இமயத்தின் இப்பகுதியில் பொறித்த புகழ் ஒளிமிக்க புலிச்சின்னம், இமயத்துப் பொன்முடிக்கு அப்பாலும், தன் ஆணையைச் செலுத்துமாக!" எனக் கூறுகிறது.

"இப்பால் இமயத்து இருத்திய வாள் வேங்கை
உப்பாலைப் பொற்கோட்டு உழையதா, எப்பாலும்,
செருமிகு சினவேல் செம்பியன்,
ஒருதனி ஆழி உருட்டுவோன் எனவே!"

- சிலம்பு : காதை : 1, 65 - 68.

ஓர் அரசனின், உண்மையான, அல்லது கற்பனையான அருஞ்செயல், அவன் வழிவந்தவர் அனைவர்க்கும் உரியதாக்கப்படும் என்பது எல்லோரும் அறிந்த ஒன்று; அவ்வகையில், ஓர் அரசன் அசுவமேத யாகம் செய்திருந்தால், அது, அவன் வழி வந்தவர்களுக்கும் ஏற்றி உரைக்கப்படும். ஒருவன் சோமயாகம் செய்திருந்தால், அவன் வழிவந்தவர்

அய்யங்கார் அவர்கள், திரு. சேஷகிரி சாஸ்திரியார், திரு. குமாரசாமி ஆகியோர் சித்தாந்தங்களை ஒப்புக்கொண்டு, திரு. ஹல்ட்ஸ் அவர்களால் வேண்டப்பட்ட அகச்சான்றுகள் மூலம், இரு கஜபாகுகளையும் அடையாளம் காட்ட முயன்றுள்ளார். "சிலப்பதிகாரக் காப்பியத்து முதல் காண்டத்தின் கருத்தோடு மேற்கொள்ளப்படும் திறனாய்வு, பாட்டுடைத்தலைவன் வாழ்க்கையின் தொடக்க காலத்தில், புகார் அதாவது, காவிரிப்பூம்பட்டினத்து அரசன், கரிகாற்சோழன் என்பதை உணர்த்தும், ஆளும் அரசன் பற்றிய குறிப்பீடுகள் அனைத்தையும், உரையாசிரியர், கரிகாலனுக்கே பொருந்துமாறு ஒரே நிலையினதாகப் பொருள் கண்டுள்ளார் என்ற உண்மை ஒருபுறம் இருக்க, (எடுத்துக்கொண்ட பணிக்கு முழுவதும் தகுதி வாய்ந்தவர் உரையாசிரியர். ஆகவே, தம்முடைய உரையில், உண்மையான காதுவழிச் செய்தியைத் தவிர்த்து, வேறு எதையும், ஆண்டிருக்க மாட்டார் என எதிர்பாக்கலாம். ஆதலால், இது ஒன்றே போதுமானதாகும்). பெயர் மூலமாகவும், இமயத்தின் மீது புலிச் சின்னத்தை நாட்டியது அவனுக்கே உரித்தாகும் உண்மை மூலமாகவும் அவனைக் குறிக்கும் எண்ணற்ற, நேரிடைக் குறிப்பீடுகளும் உள்ளன" எனக் கூறுகிறார் (Ancient India. Page : 350) உரையாசிரியர். ஆயிரம் ஆண்டுகள் கழித்து உரை செய்துள்ளார் என ஏற்கெனவே கூறியுள்ளேன். ஒரு கதை, ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குக் கைம்மாறி வருவதே காதுவழிச் செய்தி என்பதன் பொருள். உரையாசிரியரின் விளக்கங்கள், அவருடைய கண்டு பிடிப்புக்கள் ஆகா; மாறாகப், பழைய உரையாசிரியர் தலை முறைகளிலிருந்து, இடையறவு படாமல், வரிசையாகக் கைம்மாறிக் கைம்மாறி வந்தனவே என்பதை உணர்த்தும் சான்று எதுவும் இல்லை. ஆகவே, அவருடைய கற்பனைகள் எல்லாம் காதுவழிச் செய்திகள் ஆகிவிடா. உரையாசிரியர், சிறந்த தமிழ்ப்புலவர், பொருள் விளங்காப் பகுதிகளுக்கு விளக்கம் அளிக்கும் தகுதி வாய்ந்தவர்; அதில் ஐயம் இல்லை; ஆனால், அதுவே, மேலே எடுத்தாண்டிருக்கும் எடுத்துக் காட்டின் அடைப்புகளுக்கிடையில் கூறப்பட்டிருக்கும்

வாக்கியத்திலிருந்து பெறப்படுவது போல, அவர் காலத்திற்கு, ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதான, விவாதத்திற்குரிய நிகழ்ச்சிகளுக்கு விளக்கம் அளித்து உறுதி செய்யும் உரிமையை அவருக்கு வழங்கிவிடாது. சிலப்பதிகாரக் காப்பியத்தில், கரிகாலனைக் குறிப்பிடும் நேரிடைக் குறிப்பீடுகள் அனைத்தையும், கீழ்வரும் பகுதியில், திரு. கிருஷ்ணசாமி அய்யங்கார் குறிப்பிட்டுள்ளார். 1) "முதற் காதையின் கடைசி நான்கு வரிகள், இமயத்துச்சியில், புலிச் சின்னத்தை நிறுவிய அரசனை வாழ்த்துகிறது. "இது, உண்மையன்று, ஒன்று, அரச சின்னத்தை (கல், செங்கல், மரம், இரும்பு ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் செய்யப்பட்ட) கரிகாலன் நாட்டினான் எனப் புலவர் கூறவில்லை என்பது குறிப்பிடப்படல் கூடும். ஆண்டிருக்கும் சொல், "பொறித்து", வெட்டுதல் அல்லது செதுக்குதல், முதற்காதையின் கடைசி நான்கு வரிகள், "போர்க்களம் பலவற்றில் வெற்றி கண்ட கொடிய வேற்படையுடைய செம்பியன் (அதாவது சோழ அரசன்,) ஓப்பற்ற தன் அரச ஆணை ஒன்றே, உலகெங்கும் நடைபெறப் பேரரசு செலுத்துவோனாக! இமயத்தின் இப்பகுதியில் பொறித்த புகழ் ஒளிமிக்க புலிச்சின்னம், இமயத்துப் பொன்முடிக்கு அப்பாலும், தன் ஆணையைச் செலுத்துமாக!" எனக் கூறுகிறது.

"இப்பால் இமயத்து இருத்திய வாள் வேங்கை
உப்பாலைப் பொற்கோட்டு உழையதா, எப்பாலும்,
செருமிகு சினவேல் செம்பியன்,
ஒருதனி ஆழி உருட்டுவோன் எனவே!"

- சிலம்பு : காதை : 1, 65 - 68.

ஓர் அரசனின், உண்மையான, அல்லது கற்பனையான அருஞ்செயல், அவன் வழிவந்தவர் அனைவர்க்கும் உரியதாக்கப்படும் என்பது எல்லோரும் அறிந்த ஒன்று; அவ்வகையில், ஓர் அரசன் அசுவமேத யாகம் செய்திருந்தால், அது, அவன் வழி வந்தவர்களுக்கும் ஏற்றி உரைக்கப்படும். ஒருவன் சோமயாகம் செய்திருந்தால், அவன் வழிவந்தவர்

அனைவரும், அவர்கள் வ்ராத்யர் வாழ்வு மேற்கொண்டிருந்தாலும், எக்காலத்தும் சோமயாஜிகள்தாம். அதாவது, கரிகாலன் இமயம் வரை பரப்பிய ஆட்சியை, ஆண்டு கொண்டிருக்கும் சோழன், இமயத்திற்கு அப்பாலும் பரப்பு வானாகுக என்பதாம். இப்பகுதி ஏதேனும் உதவியிருக்குமாயின், அது, கரிகாலனைச் சிலப்பதிகார நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு முன்னர் அரசாண்ட அரசனாக ஆக்கியதே ஆகும். 2) "பதிப்பாசிரியர் பார்வையிட்ட ஒரு கையெழுத்துப் படிவத்தில், கரிகாலன் பெயர், பட்டினப்பாலை ஆசிரியர்க்கு, அவன் பரிசளித்தது ஆகியவற்றின் நேரிடைக் குறிப்பீடு உளது. "ஏனைய உரையாசிரியராலும், பதிப்பாசிரியராலும், உண்மையானவை என ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில் சிலப்பதிகார மூலம், உரை ஆகியவற்றின் கையெழுத்துப் படிகள் சிலவற்றில், அவன் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பது, அந்த அரசன், அப்பாட்டில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் நிகழ்ந்த காலத்தைச் சேர்ந்தவன் என்பதை எவ்வகையிலும் உறுதி செய்துவிடாது. 3) "மேலும், ஆறாம் காதையின் 158-60 வரிகள், ஒருவர் எத்துணைத் தெளிவாக விரும்பு வாரோ, அத்துணைத் தெளிவாகக், கரிகாலன் அந்த நாட்களில் ஆண்டு கொண்டிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளன". "விண்பொரு பெரும்புகழ்க் கரிகால் வளவன், தண்பதம் கொள்ளும் தலை நாட்போல" - இவ்வரிகள், அதற்கு மாறான ஒன்றையே குறிப்பிடுகின்றன. இவை ஏற்கெனவே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. அப்பாட்டில் விழாவின் சில நிகழ்ச்சிகள், முந்தைய காலத்தில், புனல் விளையாட்டின் போது, கரிகாலன் மேற்கொண்ட விழா நிகழ்ச்சிகளை ஒத்துள்ளன என்பதே, அவற்றிலிருந்து பெறக் கூடியதாம். 4) "உரையாசிரியர், அப்பகுதிக்குத் தேவையான பொருள் விரிவைத் தரும் வகையில், அதை விளக்கியுள்ளார்." உரையாசிரியர் கூறியது இதுதான்.

அடிக்குறிப்பு :

("விண்ணிலே சென்று பொரும், பெரிய புகழையுடைய இக்கரிகால் வளவன், புதுப்புனல் விழவு கொண்டாடும்,

தலைநாட் போலவே, இவ்விழாவின் இறுதிக் கண் புனலாடிடங்களும் வீறுபெறத் தோன்றா நிற்க". (சிலம்பு : காதை : 6 வரிகள் : 159 - 160. அடியார்க்கு நல்லார் உரை) அது நிகழ்ந்த காலத்தில் கரிகாலன் ஆண்டுகொண்டிருந்தான் எனக் கூறுவதற்குப் பதிலாக, இது, கரிகாலனுடைய புனலாட்டுவிழா, அப்பாட்டில் கூறப்படும் புனலாட்டு விழாவிற்குக் காலத்தால் முற்பட்டது என்ற பொருளையே உணர்த்துகிறது. 5) "குறிப்பு மொழிகளால் (மறைமுகமாக) உணர்த்துதலைக் குறிப்பிடத் தேவை இல்லை ; காதை", வரிகள் 95-8-இல், அப்பாட்டுடைத் தலைவனைப் பற்றிய, ஐயத்திற்கிடமில்லாக் குறிப்பே உளது".

"அசைவில் ஊக்கத்து நசைபிறக்கு ஒழியப்
பகைவிலக் கியதுஇப் பயங்கெழு மலையென
இமையவர் உறையும் சிமையப் பிடர்த்தலைக்
கொடுவரி ஒற்றிக் கொள்கையிற் பெயர்வோன்".

இவ்வரிகளை எடுத்தாண்டு மொழி பெயர்த்தும் உள்ளேன். அது, இந்திரவிழா ஊர்வலத்தின் போது, பண்டொரு காலத்தில் கரிகாலனால் பெறப்பட்ட சில பொருட்களுக்குப் பலி தூவி விழா செய்யப்பட்டது என்று மட்டுமே குறிப்பிட்டு, அப்பொருட்களை, அவன் கைக் கொண்டது, பாட்டு கூறும் நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு முற்பட்ட ஒரு காலத்தில் ஆகும் என்பதையே உறுதி செய்கிறது.

அடிக்குறிப்பு :

(புலவர் ஆண்டிருக்கும் உண்மையான "புண்ணிய திசை முகம் போகிய அந்நாள்" என்ற தொடர் அப்பாட்டு கூறும் நிகழ்ச்சிகளுக்கு மிக மிக முற்பட்ட காலத்தே வாழ்ந்த ஓர் அரசனாவன் அவன் என்ற பொருளை உணர்த்துகிறது).

6) "17 ஆம் காதையில் மூவேந்தர்களைப் பாராட்டும் பாக்களில், ஒரு பாட்டில் கரிகாலனின் இமய வெற்றி குறிப்பிடப்பட்டுளது. குறிப்பிடப்பட்ட அவன், கடைசிக் சோழனாவன்."

"பொன்னிமயக் கோட்டுப் புலிபொறித்து மண்
ஆண்டான்,
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்."

ஈண்டு கூறப்பட்ட அப்பாட்டின் பகுதி, கரிகாலன் பெயரை ஈற்றில் கொண்ட சோழ அரசர் பட்டியலைக் கொடுக் கவில்லை; அது, உள்வரி வாழ்த்து என்ற தலைப்பில் வரும் மூன்று பாக்களில், வறிதே இரண்டாவதாக இடம்பெற்ற ஒரு பாட்டு. இப்பாக்களில், இந்திரனுக்குரிய (ஒரு புராணக் கடவுள்) மாலையை அணிந்துகொண்ட பாண்டியன், இமயத்துப் பொன் முடியில் புலிச்சின்னம் பொறித்த சோழன், கடலிடையே நடப்பட்டிருந்த கடம்ப மரத்தை வெட்டி வீழ்த்திய சேரன், ஆகிய மூவரும், கடவுளாம் கிருஷ்ணனுக்கு ஒப்புடையவராகப் பாராட்டப் பெற்றுள் ளனர். செங்குட்டுவன் காலத்துக்கு முன் வாழ்ந்தவர்களாய, குறிப்பிடப்பட்ட அரசர்களின் மிகைப்படுத்தப்பட்ட பாராட்டினைக் கூறும், இச்சிறு பகுதி, எவ்வாறு, அவர்களை அச்செங்குட்டுவனின் சம காலத்தவராக ஆக்கும்? அது காண்பது அறவே இயலாது. 7) "21ஆம் காதை, 11 முதல் 15 வரையான வரிகள், கரிகாலன் மகள், அக்காலைச் சேர அரசனை மணந்திருந்தாள் எனத் தெளிவாக அறிவிக்கிறது.

"மன்னன் கரிகால் வளவன் மகள், வஞ்சிக்கோன்
தன்னைப் புனல் கொள்ளத், தான் புனலின் பின்சென்று
கன்னவில் தோளாயோ என்னக் கடல் வந்து
முன்நிறுத்திக் காட்ட அவனைத் தழீஇக் கொண்டு
பொன்னங் கொடிபோலப் போதந்தாள்".

கரிகாலனின் இச் சேரமாப்பிள்ளையின் பெயர் ஆட்டன் அத்தி என்பது ஆதலாலும், செங்குட்டுவனுக்கு அடுத்த முன்னோர், முறையே அவன் தந்தை சேரலாதனும், அவன் பாட்டன் உதயஞ்சேரலும் ஆவர் ஆதலாலும், ஆட்டன் அத்தி, ஆண்டிருந்தான், செங்குட்டுவனுக்கு நெடுங் காலத்துக்கு முன்னர் ஆண்டிருக்க வேண்டும். கூறிய

அப்பகுதியில், தான் பிறந்த காவிரிப்பூம்பட்டினத்தில், தனக்கு முன் பிறந்து, கணவர் காட்டும் நெறிபிறழாக் கற்பு நெறியால் புகழ் பெற்ற பத்தினிப் பெண்டிர் எழுவரை வரிசைப்படுத்திக் கூறிக், கரிகாலன் மகளும், ஆட்டனத்தியின் மனைவியுமான ஆதிமந்தியை, அவர்களுள் இரண்டாவதாகக் கூறியுள்ளாள், கண்ணகி. ஆகவே, இப்பகுதியில், உண்மையில் கரிகாலன், இறந்த காலத்தவனாகவே காட்டப்பட்டுள்ளான். ஆகக், கூறிய இவற்றால், கரிகாலனைப் பெயர் சுட்டியோ, மறைமுக வகையிலோ குறிப்பிடும் சிலப்பதிகாரப் பகுதிகள் அனைத்தும் அவன் காலம் (எத்தனை ஆண்டு என்பதை நம்மால் சொல்ல இயலாது). அக்கதை நிகழ்ச்சிகள் தொடங்கிய காலத்திற்கு முற்பட்டது. ஆகவே, கரிகாலன் காலத்தைச் செங்குட்டுவன் காலத்தைக் கொண்டு கணிப்பது இயலாது என்பதையே உறுதி செய்கின்றன.

செங்குட்டுவன் காலமும், சம காலத்தவன் கஜபாகு என்பதிலிருந்து உறுதி செய்வது இயலாது. திருவாளர் ஹல்ட்ஸ் அவர்களின், "அகச் சான்றுகளால் துணை செய்யப்படும்வரை, பெயர் ஒற்றுமை பொருளற்றது" என்ற தடைக்கு இன்னமும் விடையளிக்கப்படவில்லை. மேலும், காலத்தால் அவனுக்கு நெருங்கியதான மகாவம்சத்தில் கஜபாகு, உணர்ச்சிமிக்க பௌத்தனாகவே படைத்துக் காட்டப்பட்டுள்ளான். புத்த மடங்களைக் கட்டும் அவன் செயல்கள் விளக்கிக் கூறப்பெறும் அந்நூலில், இந்தியாவிலிருந்து, பத்தினி வழிபாடு, வந்து இடம் பெற்றதற்கான குறிப்பு எதுவுமே இல்லை என்பது மட்டுமன்று, கஜபாகு வாழ்க்கை நிகழ்ச்சிகளின் பெரும்போக்கு, வேறு சமயம் எதையும் பொருட்படுத்தா அளவு, அவன் ஒரு வெறிபிடித்த பௌத்தன் என்ற முடிவிற்கே எவரையும் கொண்டு செல்லும். பத்தினித் தேவியின் காலணிகலன்களைக் கஜபாகு தஞ்சாவூரிலிருந்து எடுத்துச் சென்றான் என்பது கூறப்பட்டு, அதனால், பத்தினி, ஒரு பெண் தெய்வமாக, அவன் காலத்திற்கு முன்பே வழிபடப்பட்டாள் என்பது குறிப்பாக உணர்த்தப்படுவதால், கஜபாகுவின், சோழநாட்டு வெற்றியைக் குறிப்பிடும் இலங்கையின் பிற்காலக் கட்டுக்கதைகள்,

பத்தினிவழிபாடு, அவன் காலத்திற்கு முற்பட்டது எனக் கொண்டுள்ளன. சிலப்பதிகாரத்தில், மாளுவ நாட்டு மன்னன் போலும் மற்றவர்களும், கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும், கண்கள் கண்டுகொண்டிருக்க வானுலகம் புக்குத் தெய்வமாகிவிட்ட கண்ணகிக்குச் செங்குட்டுவன் எடுத்த விழாவிற்கு வந்தான் எனக் கூறப்பட்டுளது.

அடிக்குறிப்பு :

"மாளுவ வேந்தரும்,
கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்
எந்நாட் டாங்கண் இமைய வரம்பனின்
நன்னாள் செய்த நாளணி வேள்வியில்"

- சிலம்பு : காதை : 30 வரி : 159 - 162.

அக்காப்பியத்தின் உரையப்பாயிரமாம், உரைபெறு கட்டுரை, மேற்படி கூற்றொடு ஒருபகுதி மாறுபட்டுக் கண்ணகியின் வியத்தகு கதையைக் கயவாகு கேட்டு, பற்பல முறை விழா எடுத்தான் எனக் கூறுகிறது.

அடிக்குறிப்பு :

("அது கேட்டுக் கடல் சூழ் இலங்கைக் கயவாகு வென்பான், நங்கைக்கு நாட்பலி பீடிகைக் கோட்டம் முந்துறுத்து, ஆங்கு அரந்தை கெடுத்து வரந்தரும் இவள் என, ஆடித்திங்கள் அகவையின் ஆங்கோர் பாடி விழாக்கோள் பன்முறை எடுப்ப"). இவ்வுரைப்பாயிரம், பெருங்கிள்ளி என்ற சோழன், பத்தினித் தெய்வத்திற்கு, உறையூரில் கோயில் கட்டினான் என்றும் கூறுகிறது. "அது கேட்டுச் சோழன் பெருங்கிள்ளி, கோழியகத்து, எத்திறத்தானும் வரந்தரும் இவளோர் பத்தினிக் கடவுள் ஆகுமென நங்கைக்குப் பத்தினிக் கோட்டமும் சமைத்து நித்தல் விழா நிகழ்வித்தோனே" - ஆனால், சிலப்பதிகாரக் காப்பிய முதல் நூலில், இது குறிப்பிடப்படவில்லை. ஏற்கெனவே குறிப்பிட்டது போல, இலங்கை வரலாற்றுக் காலவரிசைப் பட்டியல், கஜபாகுவுக்கு

முன்பே, பத்தினிக் தேவிக்குத் தஞ்சாவூரில் கோயில் இருந்ததைக் குறிப்பாக உணர்த்துகிறது. பத்தினித் தெய்வவழிபாட்டின் தோற்றம் குறித்த பழங்கதைகள் நுண்ணிய திறனாய்வுக்குத் தாங்கமாட்டா அளவு, ஒன்றோடொன்று பெரிதும் முரண்படுகின்றன.

செங்குட்டுவனும், கஜபாகுவும் சமகாலத்தவர் என்பதைச் சிலப்பதிகாரத்திலிருந்து முடிவு செய்வதற்கு மற்றொரு தடையும் உளது. கஜபாகு சம காலத்தவன் என்ற வாதத்தின் அனைத்து முடிவிற்கும் அடிப்படையாய் அமைந்து, சிலப்பதிகாரத் தொடரில் இடம் பெற்றிருக்கும் கயவாகு என்ற சொல்லுக்கு, வேறு ஒரு பாடபேதமும் உளது. அது, "கயவாகு" என்பதற்குப் பதிலாகக் "காவல்" என்பதாம். இரண்டனுள் எது சரியான பாடம் என்பதைக் கண்டறிய வழியில்லை. "காவல்" என்பதே சரியான பாடமாய்விடின், கஜபாகு சமகாலத்தவன் என்ற கூற்றை அடிப்படையாகக் கொண்டு கட்டப்பட்ட மாளிகை அனைத்தும், தரைமட்ட மாகத் தகர்ந்துவிடும். அந்துப் பூச்சாலும், கரையான்களாலும் தின்னப்பட்டு, ஒடிந்து நொடுங்கிப்போன, பழைய தமிழ்ப்பனையோலைச் சுவடிகளைக் கண்டவர் எவரும், இப்பாட்டு, தலைமுறை தலைமுறை வழியாக, முந்தைய சுவடியிலிருந்து பார்த்துப், படி எடுத்து எழுதப்பட்டு வந்தது. அல்லது நினைவிலிருந்து எழுதப்பட்டு வந்தது என்பதை மறவாதவர் எவரும், ஐயப்பாட்டிற்குரிய அப்பாடபேதச் சொல்லுக்கு, அதைத் தென்னிந்திய வரலாற்றுக்கால வரிசைப் பட்டியலுக்கு உள்ள ஒரே ஒரு சான்றாக ஆக்குமளவு முக்கியத்துவம் அளிப்பதற்கு முன்னர், ஒரு முறைக்கு இருமுறை சிந்திக்கவே செய்வர்.

பழங்காலம் தருவதற்கு வேறுபலத் தடைகள் :

கரிகாலனுக்குப் கி. பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டை உரியதாக்குவது, வேறு காரணங்களாலும் மறுக்கப்படுகிறது. பெரிபுளூஸ் ஆசிரியரோ, அல்லது தாலமியோ, கரிகாலச் சோழப் பெருவேந்தனைவிடக்

குறைந்த புகழே கொண்ட சிற்றரசர்களையும் குறிப்பிடு கின்றனர். என்றாலும், கரிகாலனைக் குறிப்பிடவில்லை. அதற்கு மாறாகத் தாலமி அவர்களின் தமிழ்நாட்டுக்கு கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் நில இயல் ஏடு, அந்நாட்டின் படத்தைத் தமிழ் இலக்கியங்கள், கரிகாலனைப் பாராட்டி யிருப்பதுபோல், தமிழ்நாடு முழுவதும், ஒரு பேரரசின் ஒரு குடைக் கீழ்க் கொண்டுவரப்பட்டு இருந்தது போல் அல்லாமல், பற்பல சிற்றரசர்களால் ஆளப்பட்டிருந்த நாடாகவே காட்டுகிறது. மேலும், பட்டினப்பாலையில் குறிப்பிட்டிருக்கும், தங்கள் தங்கள் கூடாரங்கள் மீது வாதிட்டழைக்கும் கொடிகளை ஏற்றி வைத்துக்கொண்டு வாதிடுவார் செயல், வாதமுறை நன்கு வளர்ந்தவிட்ட ஒரு காலத்தையே, நிச்சயமாகக் சார்ந்ததாகும். இது, கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்னர், வடஇந்தியாவிலும், நிச்சயமாக இடம் பெறவில்லை.

கரிகாலனுடைய உண்மையான காலம் :

கல்வெட்டுச் சான்றுகள், கரிகாலன் சிறப்புற்றிருந்த காலமாகக் கி.பி. நான்காம் நூற்றாண்டைக் குறிப்பிடுகின்றன. அவன், காஞ்சியைப் பல்லவர்களிடமிருந்து கைப்பற்றி, அதைப் பொன்வேய்ந்தான். காஞ்சிப் பல்லவர் ஆட்சி, கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலும், அதற்கு முற்பட்ட காலத்திலும், மிகப் பெரும் வலிவோடு இருந்தது. சமுத்திரகுப்தனின் பிராஸஸ்தி குறிப்பிடும் விஷ்ணு கோபன், (ஒரு பல்லவப் பெயர் ; தமிழ்ப் பெயர் அன்று) காஞ்சிக் காவலனாக இருந்த கி.பி. 350 வரை, அப்பேராற்றல் தொடர்ந்து இருந்து வந்தது. இக்கால கட்டத்தில், பாணாவாசிக் கதம்ப அரச இனத்தைத் தோற்றுவித்த மயூரசர்மன், அரசுக்கு எதிராக எழுப்பிய கலகத்தால், அது பலவீனப்பட்டது. ஆகவே, கரிகாலன், திரிநயன பல்லவனை வென்று, காஞ்சியை அடுத்த தெலுங்கு, மாநிலத்தில், தனக்குத் திறை செலுத்தும் சிற்றரசனாக, ஒரு சிறிய நாட்டைக் காணத் துரத்தியது, நான்காம் நூற்றாண்டின் இறுதியில் நிகழ்ந்திருக்கக் கூடியதே ; தெலுங்குக் கல்வெட்டுகளும், தெலுங்கு இலக்கியங்களும் திரிநயனப்

பல்லவன் குறித்துக் குறிப்பிடும் பல்வேறு குறிப்பீடுகளுக்கு, இது ஒன்றே பொருந்தும் விளக்கமாகும். பிறிதொரு ஒருமைப்பாடும் இதை உறுதி செய்கிறது. கீழைச் சாளுக்கியக் கல்வெட்டுகளில், அச்சாளுக்கிய குலத்தை ஆதிகாலத்தில் தோற்றுவித்தவன், தக்ஷிண பரதத்தின் அரசனான திரிலோசனன் என்பவனால், அல்லது திரிலோசன பல்லவனால், ஒரு போரில் தோற்கடிக்கப்பட்டவனும், அயோத்தியாவிலிருந்து போர் மேற்கொண்டு வந்தவனுமாகிய, ஒரு விஜயாதித்தியன் ஆவன் எனக்கூறும் ஒரு பழங்கதையினைக் கொண்டுளது. இந்த விஜயாதித்தியன், கி.பி. ஏழாம் நூற்றாண்டில், பாதாமி அரசனான, இரண்டாம் புலிகேசிக்கு ஐந்து தலைமுறை முன்னே தள்ளப்படுகிறான். இவ்வகையால், கரிகாலன் திரிலோசனன், விஜயாதித்தியன் ஆகிய மூவரும், பெரும்பாலும் ஒரு காலத்தவராகின்றனர். ஆகவே, கரிகாலன் சிறப்புற்றிருந்த காலம், பெரும்பாலும், நான்காம் நூற்றாண்டின் இறுதியும், ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கமுமாம்; அவன் ஆட்சியின் உச்ச காலம், கி.பி. 400.

அடிக்குறிப்பு :

கரிகாலன் காலம் பற்றி நூலாசிரியர் கொள்ளும் முடிவு பற்றி, மொழிபெயர்ப்பாசிரியர் கருத்து, இவ்வதிகாரத்தின் ஓர் இணைப்பில் விளக்கப்பட்டுள்ளது.

கரிகாலன் : திரிலோசனப் பல்லவன் காலத்தவனா?

(இக்குறிப்பு, ஆந்திரப் பல்கலைக் கழக ஆட்சிமன்ற உறுப்பினர், திரு. குண்டூர். கே. ஆர். சுப்பரமணிய அய்யர் அவர்களால் தரப்பட்டது)

திரிலோசனப் பல்லவன் என்ற பெயருடைய அரசன் ஒருவன், தெலுங்கு நாட்டில், பண்டை நாட்களில் இருந்தான் எனக்கூறும், வலுவான, நிலையான பழங்கதைகள் உள்ளன. அவன், திரிநயனப் பல்லவன், முக்கண்டி பல்லவன், முக்கண்டிக் காடுவெட்டி என்றும், ஒரே பொருளுடைய சொற்களால் அழைக்கப்பட்டான். (M.E.R. 1908 Page : 82,

Also 109, 10, 153, 244 and 251 of 1893; and 293 of 1892 Nellore Inscriptions D. 69 K, g 24 and also 150 of 1899 and 837 of 1922) இப்பழங்கால அரசனைப் பற்றிக் கூறும் மிகப் பிற்பட்ட காலத்து ஆவணங்களாம், நன்கு தெரிந்த மக்கெனிஸ் (Mackenzie) கையெழுத்துப் படிகள் அல்லாமல், (Wilson Catalogue Mss. Introd. P. P. ivii-ixii, Cl. cxix and also Taylor, Cat, of Mss. iii 486 Nellore Manual 1436 687, See also fowlkes Pallavas) பத்து பதினாறம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தனவும், சிறிதே அறியப்பட்ட, ஆனால், நன்கு தெரிந்து கொள்ளவேண்டிய தகுதிவாய்ந்த இப்பேரரசின் வரலாற்று நிலையில், நம்மை, எந்த ஐயப்பாட்டு நிலைக்கும் கொண்டுபோய் நிறுத்தாதளவு மாகிய, கல்வெட்டுக்களும், இலக்கியக் குறிப்பீடுகளும் கூட உள்ளன. (கலிங்கத்துப்ப பரணி : See Chr. Coll, May, April, and july 1927 for the Literary references in the articles, by Venkataramanayya, also T.G. Aravamudhan's Kaveri and the Sangam Age.)

திரிலோசனன், இன்றைய குண்டூர், கிருஷ்ணா, மற்றும் நெல்லூர் மாவட்டங்களோடு மட்டுமே, முக்கியமாகத் தொடர்பு கொண்டிருந்தான்; ஆனால், சாளுக்கியர் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர், தக்கணம் முழுவதற்கும், அவனை அரசனாக்கும் ஆவணங்களுக்கும் குறைவு இல்லை. (Ep. Ind. vi. 147, 156) வெல நாடு (Ep. Ind. iv 34, 48) கொண்ட பத்மதி (M.E.R. 1, 16, Page. 136 Also 146 of 1897 and 251 of 1893 : Also Ep. Ind. 111, 95) ஆகிய அரச இனங்கள், தங்களுடைய கல்வெட்டுகளில், தங்கள் அரச இனங்களைத் தோற்றுவித்த தந்தையர்க்கு, அவர் அளித்த படைத்துணைக்கு ஈடாகச் சிறுசிறுநாடுகளை ஆளும் உரிமை வழங்கி ஆதரித்தமைக்குத் திரிலோசன பல்லவனுக்குத் தங்கள் நன்றியினைத் தெரிவிக்கின்றன. தெலுங்குச் சோழக் கல்வெட்டுகள், தங்கள் குல முன்னோன், காவிரிக்கரை புகழுக் கரிகாலன் புகழ் பாடாமல் தொடங்குவது மிக மிக அரிது. அது போலவே, தெலுங்குப் பல்லவக் கல்வெட்டுகளும் (M.E.R. 1916, 138, S. 1157) தங்கள் குல முதல்வன், புகழ்பெற்ற திரிலோசனனைக் "காடுவெட்டி" என்றும், "பிராணமர்களுக்குத் தானம்

வழங்கி" என்று அழைக்க என்றும் தவறியதில்லை. திரிலோசனப் பல்லவன் மீது கரிகால் வெருவேந்தன் பெற்ற வெற்றியைத் தெலுங்குச் சோழக்கல்வெட்டுக்களில், பல குறிப்பிடாமல் விட்டுவிடு வதில்லை. பிற்பட்ட காலத்தைச் சேர்ந்தன என்பது ஒருபுறம் இருப்பினும், கணக்கற்ற கல்வெட்டுகள், இயல்புக்கு மேலும் ஒரு கண்கொண்ட, ஒரு பழைய அரசனைக் குறிப்பிடும் போது, அவை அனைத்தை யும் பயனற்றவை என, எளிதாக அழித்து விடுவது இயலாது.

திரிலோசனன் செய்துமுடித்த நிலையாய பணி, பாஞ்சாலத்து அஹிச்சத்திரத்திலிருந்து கொண்டுவந்து, ஸ்ரீபர்வதத்துக்குக் கிழக்கில் குடி அமர்த்திய பிராமணர் களுக்கு நிலதானம் செய்ததாகும். (247 of 1897, S. 1092. Also 109-110 of 1893. S. 1057 and 779 1922). குண்டூர் மாவட்டத்து ஏழு சிற்றூர்களின் தானத்தை, ஒரு கல்வெட்டு கூறும்போது, 261 of 1897) பிறிதொரு கல்வெட்டு, மொத்தத்தில் எழுபது சிற்றூர்களைக் குறிப்பிடுகிறது (M.E.R. 1908 P. 82-84 Also 580/ 1907 which curiously enough assigns a second Trilochana to S-723). பதின்மூறாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஓர் அரசன், பழைய தானத்தின் உண்மைமையைப் பெரும்பாலும், எழுத்தாவணங்கள், அல்லது வாய்மொழி விசாரணை மூலம் அறிந்து, மன நிறைவு கொண்டபின்னர்த், திரிலோசன பல்லவனின் பாபட்லா வட்டத்து நிலதானம் ஒன்றை உறுதிப்படுத்துகிறான் (803 of 1922.5.1131). அவன் பெயர், நன்றிமறவாப் பெருமக்களால், தங்கள் பின் தலைமுறை யினர்க்குத் தொடர்ந்து கூறப்பட்டு வருமளவு, அவன் செய்த அறக்கொடைகள், எண்ணால் பெரியனவும், பலரும் அறிந்த பெருமையும் உடையவாம்.

திரிலோசனப் பல்லவன் எப்பொழுது வாழ்ந்தான்? (See Ep. Ind. X P. 340 for Krishna Sastrie's opinion) விமலாதித்தியனின் ரணஸ்த பூண்டித் தானமும் (S. 933, Ep. Ind. vi. P. 351; 111 P. 95, See also M.E.R. 1916 P. 136 and 1915 P. 393 Also Ep. Ind. iv P. 239). ஏழாம் விஜயாதித்தியனின் பாமுலவாக்கச் செப்பேடுகளும் (Andhra Hist. Jour Rajamundry 111 P. 278)

வீரசோழனின் செல்லூர்ச் செப்பேடுகளும், அவனைச் சாளுக்கிய இனத்து முதல் அரசன், விஜயாதித்தியனின் காலத்தவனாக ஆக்குகின்றன. தக்கிணத்து அரசன், திரிலோசனன், தன் நாட்டின் மீது படையெடுத்து வந்த சாளுக்கியனை வென்று கொன்றான். அப்போது கருவுற்றிருந்த சாளுக்கிய மன்னன் மனைவி, முடிவெழு (பெத்த முடியம்) வைச் சேர்ந்து, விஷ்ணுவர்த்தனன் எனப் பெயரிடப் பட்டான். அவன் வயதுக்கு வந்ததும், அவன் தந்தை தோல்வி கண்டவிடத்தில், தன் அரசை நிறுவினான். இக்கதை, திரிலோசனப் பல்லவன் காலத்தை அறிய, நமக்கு ஒரு குறிப்பினைத் தருகிறது. ஜம்மலமடுகு வட்டத்தில், பிறிதொரு கல்வெட்டில், திரிலோசனபுரம் என அழைக்கப்படுவதும், (350 of 1905) விஷ்ணுவர்த்தனின் பிறப்பிடமாகக் கூறப்படுவதுமாகிய, பெத்தமுடியன் என்ற, அச்சிற்றூரில், கன்னட மொழிக் கல்வெட்டு ஒன்று உளது (S. 1046, See, M.E.R.1904.5. P. 32-42). வெண்ணு பட்டனை (விஷ்ணுபட்டனை) சாளுக்கிய அரசிக்கு அடைக்கலம் தந்த சோமயாஜியாக, வெளிப்படத் தெரிந்த திரிலோசனப் பல்லவனிடமிருந்து நிலதானம் பெற்றவனாகக் காட்டுவதும், பிற்காலத்தைச் சேர்ந்ததுமான பிறிதொரு கல்வெட்டும் உளது (S. I. I. iv P. 927).

விஜயாதித்தியனின் படையெடுப்பும், திரிலோசனனுடனான போரும், கோணக் கல்வெட்டொன்றில், கூறப்பட்டும் உளது. (5.1117) (Ep. Ind. iv. P. 94, 239). விஜயாதித்தியன், கீழைச் சாளுக்கிய முதல் அரசன் விஷ்ணுவர்த்தனனிலிருந்து, ஐந்து தலை முறைக்கு அப்பால் தள்ளப்படுகிறான். ஆகவே, அக்கதையில் ஏதேனும் உண்மை இருக்குமாயின், திரிலோசனன், கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்திருக்க வேண்டும். (E/Ind. xi. P. 337 1899 ஆம் ஆண்டு 175 ஆம் எண் கல்வெட்டில்) ருத்ரபட்ட அஹிச்சத்ரன் என்பான் ஒருவன், திரிலோசனனிடம் பெற்ற நிலதானத்தால் பயனடைந்ததாகக் கூறப்பட்டுளது. நிலதானம் பெற்றவன் குடும்பத்தில், பெரிய அரச குலத்து உடன் பிறப்புகளாம் சத்யாஸ்ரயன், விஷ்ணுவர்த்தனன் ஆகியோரால், அது போலவே நிலதானம் பெற்ற சூரியனும், குப்பனும் பிறந்தனர்.

மேற்கூறிய குறிப்புகளிலிருந்து, திரிலோசனன், இரண்டாம் புலிகேசிக்கு முன்னர் வாழ்ந்தான் என்பது உறுதியாகிறது என்றாலும், ருத்ரனுக்கும், சூரியனுக்கும், இடையிலான தலைமுறைகளின் எண்ணிக்கை கொடுக்கப்படவில்லை யாதலின், திரிலோசனின் சரியான காலத்தைக் கண்டறிவதில், நாம் இன்னமும் இருட்டிலேயே உள்ளோம். வெலநாடு ஆண்ட பிரித்வேஸ்வரனின், பித்தாபுரம் கல்வெட்டுகளில் (5.1108) (Ep. Ind. P. 34, 48) பிரித்வேஸ்வனிலிருந்து பதினெட்டு அரசர்கள், அல்லது பதினமூன்று தலைமுறைகளுக்கு முன்னே வைக்கப்படும், அவ்வரச குலத்தைத் தோற்றுவித்த முதலாம் மல்லன், திரிநேத்திரனோடு நட்பு கொண்டிருந்தாகக் கூறப்பட்டுளது. ஆனால், இதுவும் நமக்கு மேற்கொண்டு உதவவில்லை.

தெலுங்குச் சோடக்கல்வெட்டுக்களில், திரிலோசன பல்லவன், கரிகாலச் சோழனின் சம காலத்தவனாகக் காட்டப்பட்டுள்ளான் (4469 of 1919 S. 1153 M.E. R. 1920 P. 111 - 117). அவர்களின் கணக்கிலாக் கல்வெட்டுக்கள் அனைத்தும், தங்களின் புகழ்வாய்ந்த குலமுன்னோனைக் குறிப்பிடுகின்றன. அவற்றுள் சில, உண்மையில், பிற்கால சோழர்களின் தென்னாட்டுக் குடிவழிப் பட்டியல்கள், குண்டூர் மாவட்டத்தில் கல்வெட்டுகளை வெட்டியவனாகத் தெரியவரும் விஷ்ணுவாகு பிறந்த ஒரு பிரிவினராகிய, அயோத்தியாவைச் சேர்ந்த சூரிய குலத்தவனாகத் தங்கள் குல முதல்வனைக் கொள்வது போலவே, அவனுக்கு வட இந்தியப் பிறப்புரிமையை அளிக்கின்றன. அவை, அவனைப் பல்லவத் தலைநகர் காஞ்சியோடு தொடர்பு படுத்துவதும் செய்கின்றன. அப்பட்டியல்களில் நீண்ட இடைவெளி நிரப்பப்படாமல் விடப்பட்டிருப்பதால், இக்கல்வெட்டுகளிலிருந்து, தொடர்பு படுத்தும் குடிவழிப்பட்டியில் ஒன்றை உரு வாக்குவது இயலாது. அக்கல்வெட்டுகள் சிலவற்றில், இடம் பெற்றிருக்கும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி, திரிலோசனனோடு, கரிகாலன் கொண்ட தொடர்பு ஆகும். ஒரே காலத்தைச் சேர்ந்த தெலுங்கு, தமிழ் இலக்கியங்களில், இது, முறையாக, வரலாற்று நிகழ்ச்சியாக ஆக்கப்பட்டுளது. மெக்கனிஸ்

(Machenzie) அவர்களின் கையெழுத்துப் படிகளில் ஒன்று, இது குறித்த தனிக்கவனத்தை ஈர்க்கிறது. இவ்வரலாற்றுச் சான்றுகளின் பெருங்குவியலிலிருந்து, கரிகாலனும், திரிலோசனனும் சமகாலத்தவர் என்ற கருத்து, மக்களிடையே பதினோறாம் நூற்றாண்டில், மிகப் பெருமளவில் இடம் பெற்றுவிட்ட நம்பிக்கையாக இருந்தது எனக்கொள்ளலாம். பிற்காலக் கல்வெட்டுகளிலும், இலக்கியங்களிலும், இடம் பெற்றிருக்கும் கதைகளில், திரிலோசனன், சோழர்க்குத் திறை செலுத்தும் சிற்றரசனாகக் காவிரிக்குக் கரை அமைக்கும் பணியில், அச் சோழர்க்குத் துணை புரிய மறுத்தவனாகக் காட்டப்பட்டுள்ளான். சம காலத்தவனான சோழப் பேரரசன் கையில், தன் தனியாட்சி உரிமையை அண்மையில் இழந்துவிட்டதனால், தன் பேரரசன் ஆணைக்கு அடிபணிய மறுக்கும் பெருமிதம் உடையவனாகி விட்டான்; அடிப்பணியாமைக்குத் தென்னாட்டுச் சோழர் தலைநகரிலிருந்து அவனைப் பிரித்து வைக்கும், நெடுந்தொலைவு காரணமாதலும் கூடும். எவ்வாறாயினும், கரிகாலன் அவனை விட்டு வைக்கவில்லை. தன்னுடைய சிற்றரசனை விரைவில் தன்தாள் பணியச் செய்துவிட்டான் என்பதில் ஆவணங்கள் ஒத்துள்ளன. இலக்கிய மொழியில், உருவகப்படுத்திக் கூறின், தேவைக்குமேல் இருந்ததான கண், கரிகாலனால் பிடுங்கப்பட்டது.

இக்கதைகளில் அடிப்படையில் அமைந்திருக்கும் கருத்துகளை நம்பித் திரிலோசனன், விஜயாதித்தியன், கரிகாலன் ஆகிய மூவரும் சம காலத்தவர் என்பதை நிலை நாட்டலாம்.

♦ ♦ ♦

I

கரிகால் பெருவளத்தான் சிலப்பதிகாரக் காலத்தவனா ?

(மறுப்பு)

சிலப்பதிகாரத்தில், சோழ அரசரைப் பற்றிய குறிப்பு பதினான்கு இடங்களில் வந்துள்ளன என்றாலும், அவற்றுள், கரிகாற் பெருவளத்தான் பெயர், மூலத்தில், மூன்று இடங்களில் மட்டுமே வந்துளது. அவ்விடங்களிலும், கரிகாலன், சிலப் பதிகார நிகழ்ச்சியோடு தொடர்பு படுத்தும் நிலையிலும் கூறப்படவில்லை. சிலப்பதிகார நிகழ்ச்சி நடைபெற்ற காலத்தவனாகவும் கூறப்படவில்லை.

> "இருநில மருங்கில் பொருறரைப் பெறாஅச்
> செருவெங் காதலின் திருமா வளவன்,
> வாளும், குடையும், மயிர்க்கண் முரசும்
> நாளொடு பெயர்த்து நண்ணார்ப் பெறுக, இம்
> மண்ணக மருங்கின்என் வலிகெழு தோள்எனப்
> புண்ணிய திசைமுகம் கோகிய அந்நாள்".
>
> - இந்திர விழவூர் எடுத்த காதை : 89 - 94.

இது, திருமாவளவனுடைய வடநாட்டுப் படையெடுப்புப் பற்றிக் கூறுகிறது. அது, சிலப்பதிகாரக் காலத்துக்கு முந்திய நிகழ்ச்சி என்பதைப், "புண்ணிய திசைமுகம் போகிய அந்நாள்" என்ற தொடரில் வரும் "போகிய" என்ற இறந்த காலவினையும், "அந்நாள்" என்ற சேய்மைச் சுட்டும் உறுதி செய்வது காண்க. ஆக, இத்தொடரில் இடம் பெற்றிருக்கும் திருமாவளவன், சிலப்பதிகாரக் கதை நிகழ் காலத்தவன் அல்லன் என்பது உறுதியாகிறது.

"அரசிளங் குமாரரும் உரிமைச் சுற்றமும்,
பாரத குமரரும், பல்வேறு ஆயமும்,
ஆடுகள மகளிரும், பாடுகள மகளிரும்,
தோருகொள் மருங்கின் சூழ்தரல் எழினியும்,
விண்பொரு பெரும்புகழ் கரிகால் வளவன்
தண்பதம் கொள்ளும் தலைநாட் போல
.....
கோவலன் தன்னொடும் கொள்கையின் இருந்தனள்
மாமலர் நெடுங்கண் மாதவி தானென்"

- கடலாடுகாதை : 155 - 174.

இதில் கரிகாலனைப் பற்றிவரும் குறிப்பு, அரசிளங் குமாரர், அவர்தம் உரிமை மகளிர், வணிகர் குலச் செல்வங்கள், அவர்தம் ஏவல் மகளிர், ஆடவும், பாடவும் வல்ல மகளிர் ஆகிய பெருங்கூட்டம் உடன் வரச்சென்று, கடற்கரைக் கண்ணே, திரைச் சீலைகளை நாலவிட்டு, ஆரவாரப் பேரொலி எழக் கரிகாலன் புனலாட்டு விழா மேற்கொள்ளும் நிகழ்ச்சி, கோவலன் அத்திரிமீது அமர்ந்ததும் மாதவி வையம் ஏறியும் கடலாடச் சென்ற நிகழ்ச்சிக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளதேயன்றிச், சிலப்பதிகார நிகழ்ச்சி நடைபெற்ற நிகழ்ச்சியாகவோ, அச்சிலப்பதிகார நிகழ்ச்சியோடு தொடர்புடைய நிகழ்ச்சியாக வோ, காணப்படவில்லை. மாறாக, இதில் கூறப்பட்டிருக்கும், கரிகாலன் கடலாடல் நிகழ்ச்சி என்பதை உறுதிசெய்யும், வலுவான அகச்சான்று ஒன்றும் சிலப்பதிகாரத்திலேயே இடம் பெற்றுளது.

"மன்னன் கரிகால் வளவன் மகள், வஞ்சிக்கோன்
தன்னைப் புனல் கொள்ளத், தான் புனலின் பின்சென்று
கன்னவில் தோளாயோ, என்னக், கடல்வந்து
முன்னிறுத்திக் காட்ட அவனைத் தழீஇக்கொண்டு
பொன்னங் கொடிபோலப் போதந்தாள்".

- வஞ்சினமாலை : 11 - 15.

வஞ்சினமாலையில் வரும் இவ்வரிகளில், கணவன் கள்வன் அல்லன் என்பதைக் காவலன் முன் காட்டிவிட்டு வெளிப் போந்த கண்ணகி, "என் காதலனைக் கொன்ற கோன் நகர் இது. ஆகவே, இந்நகரை அழிப்பது தவறன்று ; அழிப்பேன்" எனக் கூறியவள், தான் பிறந்த புகார் நகரில் பிறந்து கற்பு நெறிகாத்த காரிகையர் எழுவரை நிரலே எடுத்துக்கூறி, "அவர்போல் யானும் ஒருபத்தினியேயாயின், அரசோடு மதுரையையும் அழிப்பேன்" எனக்கூறும் வஞ்சின உரையில், எடுத்துக் கூறிய அவ்வேழு பத்தினிப் பெண்டிருள் ஒருத்தியாக, புனல் விளையாட்டின் போது, வெள்ளம் அடித்துச் சென்றுவிட்ட கணவனாம் ஆட்டனத்தியைப் புனலோடு பின் சென்று கரைமீட்ட கற்பரசியாம் ஆதிமந்தியின் வரலாறு கூறும்போது, அவளை, "மன்னன் கரிகால் வளவன் மகள்" என அறிமுகப்படுத்தியுள்ளாள். அவ்வாறு அழைத்ததன் மூலம், அந்நிகழ்ச்சி சிலப்பதிகார நிகழ்ச்சிக்குக், காலத்தால் முந்தியதே என்பதை உறுதி செய்துவிட்டாள்.

ஆக, இம்மூன்று இடங்களிலும் கூறப்பட்ட திருமாவள வனோ, கரிகால் வளவனோ, சிலப்பதிகார நிகழ்ச்சி காலத்தவன் அல்லன் என்பதைத் தெளிவுபட உணர்த்தி விட்டார் சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகளார் என்பது உறுதிசெய்யப்பட்டது.

முடிகெழுவேந்தர் மூவர்க்கு உரியதான பாட்டுடைச் செய்யுளாம் சிலப்பதிகாரத்தைப் பாடிய இளங்கோவடிகளார், தம் காப்பியத்துக் கருப்பொருளில் புகார் நகரத்து நிகழ்ச்சிகளைப் பாடும்போது, அப்புகார் நகரைத் தலைநகராகக் கொண்ட சோழப் பேரரசுக்கும் பெருமை சேர்த்தவன் கரிகாற் பெருவளத்தான் ஆதலாலும், அவன், தம் காலத்துக்குச் சிறிதே முற்பட்டவனாகவே, அவனுடைய வாழ்க்கையொடு தொடர்பு கொண்ட அருஞ்செயல்கள், அவர் மனத்தில் பசுமையாகவே இருந்தாலும், அச்செயல்கள் சிலவற்றை ஏற்புடைய இடங்களில் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு குறிப்பிடும் நிலையில், அவன் இயற்பெயர் கூறாது,

வரும் தொடர்களில், வணிகர் குலத்தைக் குறிக்கும் போதெல்லாம், "வணிகர்" என, அவர் குலப் பெயரிட்டுக் குறிப்பிடாமல், அரசகுலத்தவர்க்கு அடுத்து வைத்து மதிக்கத்தக்க இனத்தவர் என்ற அவர் குலப்பெருமை தோன்றக் குறிப்பிடுவதையே இளங்கோவடிகளார் மரபாகக் கொண்டு உள்ளார் என்பது தெளிவு. ஆகவே, "அரைசு விழை திருவின் பரதர்" என்ற தொடரில் வரும் "அரைசு" என்ற சொல்லோ, "அரைசர் பின்னோர்" என்ற தொடரில் வரும் "அரைசர்" என்ற சொல்லோ, பொதுவாக, அரசர் என்ற பொருளில் ஆளப்பட்டுள்ள சொல்லேயன்றிக், குறிப்பிட்ட அரசன் ஒருவனைச் சுட்டிக் கூறப்பட்ட சொல் அன்று : மங்கல வாழ்த்துப் பாடலில் வரும், "பெருநிலம் முழுதாகும் பெருமகன் தலைவைத்த ஒரு தனிக்குடி" (31-32) என்ற தொடரின் நிலையும் அஃதே. பெரிய நாட்டை முழுமையாகத் தனியொருவனாக நின்று ஆளும் பேரரசனால், முதற்குடியாக வைத்து மதிக்கத்தக்க ஒப்பற்ற குடி" எனும் பொருள் உடையதாய் வணிகரைக் குறிக்கும், அத்தொடரில் வரும் "பெருநிலம் முழுதாளும் பெருமகன்" என்ற தொடரும், ஒரு பெரிய நாட்டை முழுமையாக ஆளும் ஒரு பேரரசன் என்ற பொதுப் பொருள் உணர்த்தவல்லதேயல்லது, உரையாசிரியர் கொண்டதுபோல், கரிகாலனைத் தனித்துக் குறிக்க வழங்கப்பட்ட சொற்றொடர் அன்று.

பழந்தமிழ் மக்கள், அவர்கள் எந்நிலத்து மக்களே ஆயினும், அந்நிலத்துக்குரிய கடவுளர்க்கு விழா எடுத்து, அக்கடவுளர்தம் பெருமைகளைப் பாராட்டிப் பாடிமகிழும் நிகழ்ச்சிகளின் முடிவிலும், அதேபோல் கடலாடல்போலும் இன்ப விளையாடல்கள்போதும், அகத்துறை நலம் சிறக்கப்பாடிக் களிக்கும்போதும், இறுதிப்பாட்டு, அந்நாடாளும் மன்னன் பெருமை கூறி வாழ்த்தும் பாட்டாகவே அமையும்; அவ்வாறு பாராட்டப் பெறும் அரசன், அப்போது அரியணையில் இருப்போனாக இருக்கவேண்டும் என்று கொள்ளாமல் அக்குல முன்னோனாகவும் இருப்பன்; இது மரபு.

இந்திர விழா மேற்கொள்ளும் புகார் நகரத்து மக்களோடு கடற்கரைக்குச் சென்று, கானல்வரி பாடி மகிழுங்கால், பாட்டின் கருப்பொருளாக அமைந்துவிட்ட அகப்பொருள் காரணத்தால் கருத்து வேறுபாடுற்றுக் கோவலன், மாதவியை விடுத்துப் போய்விட, மாதவியும் தனித்தே தன் மனைபுகுந்த கொடுமையைப் பாடி முடித்த இளங்கோவடிகளார், இறுதியாகச் சோணாட்டு வேந்தன் வெண்குடைச் சிறப்பைப் பாடி வாழ்த்துங்கால், அக்காலை அரசாண்டிருந்த சோழ அரசனின் இயற்பெயர் கூறிப்பாராட்டாது, "செம்பியன்" எனச் சோழர் குலத்தவரைக் குறிக்கும் பொதுப் பெயரே கூறிப் பாராட்டியிருப்பது காண்க.

"மாயிரும் ஞாலத்து அரசுதலை வணக்கும்
சூழி யானைச் சுடர்வாள் செம்பியன்
மாலை வெண்குடை கவிப்ப
ஆழி மால்வரை அகவையான் எனவே".

- கானல்வரி.

அதேபோல், பாண்டிநாட்டு வேட்டுவர், தம் நிலத் தெய்வமாம் கொற்றவையை வழிபடப் பாடிய வரிப் பாட்டின் இறுதியில் தங்கள் நாடாளும் பாண்டியனை வாழ்த்துங்கால், பெயர்கூறி வாழ்த்தாது, பாண்டியர் குலத்தவர்க்கு உரிய மலையாம் பொதிகைமலை கூறி, அதற்கு உரியோன் என்ற தொடரால் குறிப்பிட்டு வாழ்த்தி இருப்பது காண்க.

"பொறை உயர் பொதியில் பொருப்பன், பிறர் நாட்டு
கட்சியும் கரந்தையும் பாழ்பட
வெட்சி சூடுக விறல்வெய் யோனே".

- வேட்டுவ வரி.

அதேபோல், மதுரை மாநகரத்து ஆயர்குல மகளிர், பால் உறையாமை போலும் உற்பாதத்தால், தங்கள் ஆயர்பாடியில் அடைக்கலம் புகுந்திருக்கும் கண்ணகிக்கும் கோவலனுக்கும் கேடு வராமை வேண்டி ஆடிய குரவைக் கூத்தின் இறுதியில், மன்னனை வாழ்த்தும் மரபையொட்டி மாநகரத்து மன்னனை

அப்பாலும் நிற்குமாக" என்பதே, பொருளாக, அந்நிகழ்ச்சி, கண்ணகி மணவிழா நிகழ்ச்சிக்கு முற்பட்ட காலத்தே நிகழ்ந்த ஒன்று என்பது உறுதியாவது காண்க. இமயத்தே பொறித்த என்னும் பொருள்தரும். "இமயத்து இருத்திய" என்ற தொடரில் வரும், "இருத்திய" என்ற பெயரெச்சம் இறந்த காலப் பெயரெச்சமாய் அமைந்திருப்பதும், அந்நிகழ்ச்சி கடந்தகால நிகழ்ச்சி என்பதையே உறுதி செய்கிறது. ஆகவே, அது செய்தவனாக, இளங்கோவடிகளார் கூறும் "செம்பியன்", புகார் நகரைக் கடந்த காலத்தே காவல் புரிந்த வனேயல்லது, கண்ணகி திருமணம் நிகழ்ந்த காலத்துக் காவலன் அல்லன் என்பது தெளிவாம்.

மேலே கூறிய விளக்கங்களால், சிலப்பதிகார நூலாசிரி யராகிய இளங்கோவடிகளார், கரிகால் வளவனை அறிந்தவர் அவனுக்குக் கரிகாலன் என்பதோடு, திருமாவளவன் என்ற பெயர் உண்மையையும் அறிந்தவர்; தென்னகத்தில் தன்னால் வெற்றி கொள்ளத்தக்க வேந்தர் யாரும் இல்லாமையால், போர் விரும்பி வடநாடு சென்ற காலை, இமயப் பெருமலை அவன் முயற்சிக்குத் தடையாக நிற்பது பொறாது, அதன்மீது, தன் புலிக்கொடி பொறித்து மீள்கையில், வச்சிர நாட்டுக் கோன் கொடுத்த பட்டிமண்டபம் ; அவந்திவேந்தன் அளித்த தோரணவாயில், ஆகியவற்றைப் பெற்றுக் கொணர்ந்து, புகார் நகரத்தில் அமைத்து, நகரை அழகு படுத்திய அருஞ்செயல் களை அறிந்தவர் (இந்திரவிழவூர் காதை : 89 - 104) என்பதும், அதேபோல், அரசிளங்குமரர், வணிகர்குலச் சிறார், ஆடல் பாடல் வல்ல இளமகளிர் சூழ்ந்துவரச் சென்று கடலாடி மகிழ்வதில் ஆர்வமுடையவன் கரிகால்ன் என்பதையும் (கடலாடுகாதை : 155 - 160) அத்தகைய புனலாடல் விழா ஒன்றில், புதுப்புனலால் அடித்துச் செல்லப்பட்ட அவன் மருகன் ஆட்டனத்தியை, அவன் மகள் ஆதிமந்தி மீட்ட அருஞ்செயலையும் (வஞ்சினமாலை : 9-150) அறிந்தவர் என்பதும் தெளிவாக உறுதி செய்யப்பட்டன.

கரிகாலனின் இவ்வரலாறுகளை அறிந்திருந்தமையால் தான், இளங்கோவடிகளாரால், அவற்றை எடுத்துக் கூறிப்

பாராட்ட முடிந்தது; அவ்வாறு பாராட்டுங்கால், அச்செயல்களோடு தொடர்புடையவன், திருமாவளவன், கரிகாலன் என அவன் இயற்பெயரையே கூறவும் முடிந்தது.

கரிகால் வளவனை, இத்துணைத் தெளிவாக உணர்ந்திருந்த இளங்கோவடிகளார், மாதவி அரங்கேறியது கரிகாலன் அரசவையில், மாதவிக்குத் தலைக்கோல் அளித்து ஆயிரத்தெண் கழஞ்சு பொன் பரிசு அளித்து விழுச் சிறப்புச் செய்தது கரிகாலன் என்பன உண்மையாயின், அவ்விடங்களில் முறையே "திருமாவளவனுக்கு அல்லது கரிகாலனுக்குக் காட்டல் வேண்டி என்றும், "கரிகால்வளவன் பால் தலைக்கோல் எய்தி" என்றும், கரிகாலனால் விழுச்சீர் எய்திய மாதவி" என்றும், கரிகாலன் பெயர் கூறியே பாடியிருப்பர். "சூழ்கழல் மன்னர்க்குக் காட்டல் வேண்டி" (அரங்கேற்று காதை : 11)" என்றும், "காவல் வேந்தன்", "தலைக்கோல் எய்தி" (ஒழி : 158 - 161) என்றும், "வேந்துறு சிறப்பின் விழுச்சீர் எய்திய மாந்தளிர் மேனி மாதவி" (அடைக்கலக் காதை : 21 - 22) என்றும் வேறு வேறு தொடர் வாய்பாட்டால் கூறியிருக்க மாட்டார். ஆகவே, மாதவி அரங்கேறிப் பரிசு பெற்றது கரிகாலன் அவையில் அன்று; அக்காலை அரசாண்டிருந்த வேறு ஒரு சோழன் அவையில் தான், ஆகவே, அத்தொடர்களில் வரும் "சூழ் கழல் மன்னன்", "காவல் வேந்தன்", "வேந்து" என்ற சொற்களுக்குக் "கரிகாலன்" என உரையாசிரியர்கள் பொருள் கொண்டது பொருந்தாது.

தம்மைக் காணும் ஆடவர் உயிரைக் கவர்ந்து கொள்ளும் பேரழகு வாய்ந்தவர் புகார் நகரத்துப் பெண்டிர் என்ற அம் மாநகரத்து மகளிர் நலம் பாட வந்த இளங்கோவடிகளார், மக்கள் உயிரைக் கவரும் தன் தொழிலைப் புகார் நகரத்தே ஆற்ற முடியாது அப்புகார் நகரத்து மன்னனுக்கு அஞ்சிய கூற்றுவன், தன் ஆண் உருவைக் கைவிட்டுப் பெண் உருக்கொண்டு உலாவருகிறான் போலும் "மன்னவன் செங்கோல் மறுத்தல் அஞ்சிப் பல்லுயிர் பருகும் பகுவாய் கூற்றில் ஆண்மையில் திரிந்து...பெண்மையில் திரியும்".

(இந்திர விழவூர் எடுத்த காதை : 218 - 223) என்ற பகுதி, எவ்வாறு புகார் நகரத்துப் பெருமையைப் பொதுவாகப் பாராட்ட வந்ததோ அது போன்றதே, சோழப் பெருநாட்டை ஆளும் அரசனுக்கு, வளங்கொழிக்கும் பெருநகரமாம் புகார் நகரின் வளப் பெருக்கத்தை உணர்த்த திருமகளே அந்நகருள் புகுந்து விட்டாள் என்ற பொருள்பட வரும் "இருநில மன்னர்க்குப் பெருவளம் காட்டத் திருமகள் புகுந்தது இச் செழும்பதி" (இந்திரவிழவூர் எடுத்த காதை : 212-213) என்ற வரிகளும் ஆதலின், அத்தொடரில் இடம் பெற்றிருக்கும் "மன்னன்" என்ற சொல்லுக்கு அடியார்க்கு நல்லார் "கரிகாலன்" எனப் பொருள் கொண்டதும் பொருந்தாது

புலிக்கொடி பறக்கும் தேர் ஊர்ந்து செல்லும் உரிமை, சோழர் குலத்தவர் அனைவர்க்கும் உரிய ஒன்று; ஆகவே நாடுகான் காதையில் வரும் "உழைப்புலி கொடித்தேர் உரவோன்" என்ற தொடரில் வரும் அத்தொடருக்கு அடியார்க்கு நல்லார், கரிகாலன் எனப் பொருள் கொண்டதும் பொருந்தாது.

ஆக, மேலே கூறிய விளக்கங்களால், திருமாவளவன், கரிகாலன் என்ற அவன் இயற்பெயர் விளங்கவே கூறப்பட்ட, அவன் வடநாட்டுப் படையெடுப்பு, அவன் கடல் விளையாட்டு, அவன் மகள் ஆதிமந்தி வரலாறு ஆகிய அம்மூவிடம் தவிர்த்துச், சிலப்பதிகார நிகழ்ச்சிகளோடு தொடர்புபடுத்தி வழங்கியிருக்கும், சோழர் குலத்தவரைக் குறிக்கும் சென்னி, செம்பியன் போலும் பெயர்கள் கரிகாலனைக் குறிப்பதாக, உரையாசிரியர் பொருள் கொண்டது தவறு. அப்பெயர்களால் குறிப்பிடப்படுவோன் கரிகாலன் அல்லன். அவன் சிலப்பதிகாரக் காலத்துக்கு முந்தியவனே அல்லது சிலப்பதிகாரக் காலத்தவன் அல்லன் என்பன தெளிவாகின்றன.

மேலும், சிலப்பதிகாரத்து நிகழ்ச்சிகளில், சோழநாட்டில் நிகழ்ந்தன கூறும் புகார்க் காண்டத்து இறுதியில் வரும் கட்டுரையின் தொடக்கத்திலும், பாண்டிய நாட்டில்

நிகழ்ந்தன கூறும் மதுரைக் காண்டத்து இறுதியில் வரும் கட்டுரையின் தொடக்கத்திலும், சேரநாட்டில் நிகழ்ந்தன கூறும் வஞ்சிக் காண்டத்து இறுதியில் வரும் கட்டுரையின் தொடக்கத்திலும், முறையே.

"முடியுடை வேந்தர் மூவ ருள்ளும்
தொடிவிளங்கு தடக்கைச் சோழர் குலம்".

"முடியுடை வேந்தர் மூவ ருள்ளும்"
படைவிளங்கு தடக்கைப் பாண்டியர் குலம்".

"முடியுடை வேந்தர் மூவ ருள்ளும்
குடதிசை ஆளும் கொற்றம் குன்றா
வார மார்பிற் சேரர் குலம்"

என, அந்நாடுகளை ஆண்ட அரச குலத்தவர் பொதுவாகக் கூறப்பட்டிருந்தாலும், வஞ்சிக் காண்டத்துக் கட்டுரை இறுதியில், "செங்குட்டுவனோடு ஒரு பரிசா நோக்கிக் கிடந்த வஞ்சிக்காண்டம்", என்றும், மதுரைக் காண்டத்துக் கட்டுரை இறுதியில், "நெடுஞ்செழியனோடு ஒரு பரிசா நோக்கிக் கிடந்த மதுரைக் காண்டம்" எனச் சிலப்பதிகாரத்து நிகழ்ச்சிக் காலத்துக் காவலர்கள் பெயர்கள் கூறப்பட்டிருப்பது போல், புகார்க் காண்டத்துக் கட்டுரை இறுதியில், கரிகாலன் பெயர் கூறப்படாமையும் காண்க.

♦ ♦ ♦

II

செங்குட்டுவன் காலம் :

(மறுப்பு)

"கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனைத் தொடர்பு படுத்திச் செங்குட்டுவன் காலத்தை உறுதி செய்வது கூடாது. "Nor Can Senguttuvan's date be fixed by the so called Gajabahu Synchorism" என்கிறார் திருவாளர் சீனிவாச அய்யங்கார் (History of the Tamils Page : 379).

இதற்கு அவர் காட்டும் காரணங்களுள் தலையாயது, கண்ணகி வழிபாடு குறித்து, உரைபெறுகட்டுரையும், வாழ்த்துக் காதையும் கூறும் செய்திகளில் காணப்படுவதாக அவர் கருதும் முரண்பாடு.

செங்குட்டுவன் கண்ணகிக்கு எடுத்த விழாக்காண மாளுவ மன்னன் போலும் பலவேந்தர்களோடு கயவாகுவும் வந்திருந்தான் என்கிறது சிலப்பதிகாரம்.

"குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும்
கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்
எம்நாட் டாங்கண், இமைய வரம்பனின்
நல் நாள்செய்த நாளணி வேள்வியில்
வந்தீகு என்றே வணங்கினர் வேண்ட"

- சிலம்பு : 30 : 159 - 163.

ஆனால், உரைபெறுகட்டுரையோ, "அது கேட்டுக் கடல் சூழ் இலங்கைக் கயவாகு என்பான். – பாடிவிழாக் கோள் பன்முறை எடுப்பு" என்கிறது.

மேலும், சோழன் பெருநற்கிள்ளி, கண்ணகி தேவிக்கு உறையூரில் கோயில் கட்டி விழா எடுத்தான் எனக் கூறுகிறது. உரைபெறுகட்டுரை; ஆனால், இது வாழ்த்துக் காதையில் கூறப்படவில்லை என்றெல்லாம் அவர் கூறுவது காண்க.

"In the Silappadigaram, it is said, that among others such as the king of Malva, Kayavagu King of Lanka, surrounded by the sea, attended the sacrifice performed, by Senguttuvan in honour of Kannagi's visible elevation to the god head, "The "Urai peru Katturai" a prose prologue to the Epic, Partly contradicts the above statement and says, "Kayavagu heard of the marvellous story of Kannagi and --- frequently celebrated the festival of Kannagi, This prologue also says that Perungilli, the Solan, built a temple to the Chaste - goddess (Pattini Davi) at Woraiyur, but the Epic does not refer to this" (History of the Tamils Page. 380).

வஞ்சியில், செங்குட்டுவன் எடுத்த விழாவிற்கு வந்திருந்தார், தங்கள் தங்கள் நாடுகளில் விழா எடுக்க வரங்கேட்டுப் பெற்றனர் என்றாலும், வந்திருந்த அவர் அனைவரும் விழா எடுத்தார் அல்லர். விழா எடுக்க வேண்டிய தேவைக்கு உள்ளானார் மட்டுமே விழா எடுத்தனர். அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னர், பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னர்; குடகங்கொங்கர்; மாளுவ வேந்தர், கயவாகு ஆகிய ஐவர் விழாவிற்கு வந்திருந்தவர்; இவர்களுள், கொங்கர், கயவாகு ஆகிய இருவர் மட்டுமே தங்கள் நாட்டகத்தே விழா எடுத்தவர் என்கிறது உரைபெறுகட்டுரை.

அது போலவே, மழைவளம் வேண்டித் தங்கள் தங்கள் நாட்டகத்தே, கண்ணகிக்கு விழா எடுத்தவர் அனைவரும், வஞ்சியில், செங்குட்டுவன் எடுத்த விழாவில் பங்கு கொண்டவர் அல்லர். கொற்கைக் காவலன் வெற்றி வேற்செழியன், கொங்கிளங்கோசர், கயவாகு, சோழன் பெருங்கிள்ளி, ஆகிய இந்நால்வரும், கண்ணகிக்கு விழா எடுத்தனர் ஏனக் கூறுகிறது உரைபெறுகட்டுரை. இந்நால்வருள், கோசரும், கயவாகுவும் மட்டுமே, வஞ்சி விழாவிற்கு வருகை தந்தவர் ; கொற்கைச் செழியனும், கோழிப் பெருங்கிள்ளியும், வஞ்சிக்கு வராதவர்கள்.

கயவாகு வஞ்சிக்கு வந்திருந்தான். விழாவில் பங்கு கொண்டான். தன்னாட்டில் தான் எடுக்கும் விழாவிற்கு வருகை தரவேண்டிக் கண்ணகி தெய்வத்தின் ஒப்புதல் பெற்றான் என்பதெல்லாம் உண்மை. ஆனால், அவன் நாடு திரும்பியதுமே, விழா எடுத்தான் அல்லன். தன் இலங்கை நாட்டில், மழைவளம் குறைந்து வறட்சி மிகுந்து விட்டதாக, அது தீர்க்க எண்ணியிருந்தபோது, அதுபோல் வறட்சிக்கு ஆளான தென்பாண்டிநாடும், கொங்குநாடும் முறையே, வெற்றிவேற்செழியனும், கோச்சரும், கண்ணகிக்கு விழா எடுக்க மழைவளம் பெற்ற செய்தியும் கிட்டவே, கண்ணகிக்கு விழா எடுத்தான்.

உரைபெறுகட்டுரையில், கொற்கைச் செழியன் விழா எடுக்க மழை பெய்து வளம் கொழித்த செய்தியைப் பாண்டிய நாடு போலவே, மழை வறண்டு போன கொங்கு நாட்டுக்கோசர் அறிந்து, தங்கள் நாட்டிலும் கண்ணகிக்கு விழா எடுக்க மழைவளம் மிக்கது. அச்செய்தி கயவாகு காதுகட்கும் எட்டவே, தன்னாட்டு அரந்தை போக்க, அவனும், அவன் நாட்டகத்தே விழா எடுத்தான். ஆக, உரைபெறுகட்டுரையில், "அது கேட்டு", எனவரும் தொடர்களில் இடம்பெற்றிருக்கும் "அது" என்ற சுட்டு, விழா எடுக்க மழை பெய்த செய்தியைக் குறிப்பதாகக் கொண்டால், உரைபெறுகட்டுரையில் கூறப்பட்டிருக்கும் செய்திக்கும், வரந்தரு காதையில் கூறப்பட்டிருக்கும் செய்திக்கும் இடையில் எவ்வித முரண்பாடும் இல்லையாதல் உறுதியாம்.

செங்குட்டுவன் காலத்தை, அவன் கஜபாகுவின் சம காலத்தவன் என்பது கொண்டு முடிவுசெய்தல் இயலாது, என்பதற்குத் திருவாளர் அய்யங்கார் காட்டும் பிறிதொரு காரணம் பின்வருமாறு : இலங்கை வரலாற்று நூலாகிய அம்மகாவம்சம், கஜபாகுவை, வெறிபிடித்த பௌத்த சமயத்த வனாகவே காட்டுகிறது. பௌத்தப் பள்ளிகளைக் கட்டும் அவன் செயல்களை விளக்கிக் கூறும், அந்நூல், பத்தினி வழிபாட்டு நெறியினை இந்தியாவிலிருந்து கொண்டுவந்தது பற்றிய குறிப்பு எதையும் கூறவில்லை" என்பது.

செங்குட்டுவன் காலம், சமயப் பூசல் இல்லாச் சமரச சமய உணர்வு நிலை பெற்ற காலம். தமிழகத்துப் பேரூர்களில், பிறவாயாக்கைப் பெரியோன், அறுமுகச் செல்வேள், வால்வளை மேனி வாலியோன், நீலமேனி நெடியோன் ஆகியோர்க்காம் கோயில்களோடு, அறவோர்பள்ளிகளும் ஒரு சேரக் கட்டியிருக்கும், சமயக் காழ்ப்பில்லா சமரச நிலை யினைச் சிலப்பதிகாரம் உணர்த்துவது காண்க. சிலம்பு : 5 : 169-179. செங்குட்டுவன் குலவழி, சைவன்; ஆயினும் திருமாலை வழிபட வெறுப்பவன் அல்லன்; சிவன்முன் சிரம் தாழ்த்தித் திருமால் சேடத்தைப் புயத்தே தாங்கிக் கொள்ளும் அவன், கற்பு நிறைமகளிர்க்குக் கோயில் கட்டி வழி பாடாற்றும் மனப்பக்குவம் பெற்றிருந்தான். ஒருதாய் வயிற்று மக்களே எனினும், மூத்தவன் செங்குட்டுவன் வைதீக நெறியினனாக, இளையவன் இளங்கோ, சமண நெறி ஏற்றான். அத்தகைய சமய ஒற்றுமையுணர்வு நிலவிய காலத்தவன் கஜவாகு, ஆகவே, பௌத்தனாகிய அவன், கண்ணகி வழிபாட்டு நெறி யினை ஏற்றிருக்கமாட்டான் என்ற வாதத்தில் வலுவில்லை.

மகாவம்சம், கஜபாகு கால நிகழ்ச்சிகள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் தொகுத்துக் கூறிய வரலாற்றுத் தொகுப்பு நூல் என்று கூறிவிட முடியாது. அது, ஒருசிலவற்றைக் கூறாமல் விட்டிருக்கவும் கூடும். மேலும், ஒன்று கூறப்பட வில்லை என்பதினாலேயே அது இல்லை என்ற முடிவுக்கு வருவது பொருந்தாவாதம் என்பதைத், திரு. அய்யங்கார் அவர்களும் ஒப்புக்கொண்டுள்ளார். "இருக்கு வேதத்தில் ஆலமரம் குறிப்பிடப்படவில்லை என்பதால், அவ்வேதம் எழுதப்பட்ட காலத்தில் ஆலமரம் என்பதே இந்தியாவில் இல்லை என்ற வாதம் சரியானவாதம் ஆகாது எனத் திரு. அய்யங்கார் காட்டும், திரு. பர்கிதா அவர்களின் மேற் கோளினைக் காண்க.

"Speaking of the argument, from silence Pargiter remarks, "one might argue, with more force, that because, the banyan, the most characteristic tree of India, is not mentioned in the Rg. Veda. there were none in India, when the hymus were composed." (History of the Tamils : Page : 124, Foot Note).

ஆகவே, கண்ணகி வழிபாடு, மகாவம்சத்தில் கூறப்பட வில்லை. ஆகவே, கஜபாகுவை வைத்துச் செங்குட்டுவன் காலத்தை முடிவு செய்வது கூடாது என்ற வாதமும் வலுவற்றுப் போவது காண்க. கஜபாகுவை முன்னிறுத்திச் செங்குட்டுவன் காலத்தை உறுதி செய்வது முறையாகாது என்ற தம் வாதத்திற்குத் திரு. அய்யங்கார் அவர்கள், சோழ நாட்டை வெற்றிகொண்ட கஜபாகு, தஞ்சையிலிருந்து, பத்தினித் தெய்வத்தின் காலணியாம் சிலம்பைக் கைப்பற்றிக் கொணர்ந்தான் எனக் கூறும் இலங்கை வரலாற்றுச் சான்றிலிருந்து, பத்தினி வழிபாடு அவன் காலத்தில் எழுந்த ஒன்று அன்று; அவன் காலத்திற்கு முன்பே வழக்கத்தில் இருந்த ஒன்றாம் என்பது புலப்படுகிறது என்பதையும் ஒரு காரணமாகக் கொண்டுள்ளார்.

கண்ணகிக்குச் செங்குட்டுவன் எடுத்த விழாதான், பத்தினி தெய்வ வழிபாட்டு நெறியின் தொடக்கம் என்று யாரும் கூறவில்லை; யாண்டும் கூறப்படவில்லை. கண்ணகிக்கு முன்னர்ப், பத்தினிப் பெண்டிரே இல்லாமல் இல்லை. சோழ நாட்டில், அதிலும் புகார் நகரில் மட்டும் வாழ்ந்து மறைந்து மாண்புற்ற பத்தினிப் பெண்டிர் எழுவர்க்குக், கண்ணகியே வாயுரை வாழ்த்துக் கூறி வணங்கியுள்ளான்; சிலப்பதிகாரம் வஞ்சினக்காதை வரிகளைக் காண்க (5-34).

செங்குட்டுவன், கண்ணகி சிலைக்காகக் கனகவிசயர் முடிமீது கொணர்ந்த கல்லைக், கங்கையில் நீராட்டி, அக்கங்கையின் தென்கரையில் பாடி கொண்டிருந்த காலை, கங்கையாடப் போந்த மாடலன், கொற்கைக் கோமான், கண்ணகிக்கு விழா எடுத்த செய்தியைக் கூறினான்.

"கொற்கையில் இருந்த வெற்றிவேற் செழியன்
பொன் தொழில் கொல்லர் ஈரைஞ் நூற்றுவர்
ஒரு முலை குறைந்த திருமாபத்தினிக்கு
ஒரு பகல் எல்லை உயிர்ப்பலி ஊட்டி".

- சிலம்பு : 27 : 127 - 130.

ஆகவே, செங்குட்டுவன், வஞ்சியில் கோயில் எடுத்து விழாக்காண்பதற்கு முன்னரே, தமிழ் நாட்டவர், கண்ணகிக்கு விழா எடுத்து விட்டனர் என்பது தெளிவாகிறது.

தமிழகத்துப் பேரூர்களில், பத்தினிப் பெண்டிர்க்குக் கோயில் கட்டி வழிபடும் வழக்கம் பண்டே இருந்தது என்பதை, மணிமேகலையில் வரும் பின்வரும் வரிகளே உணர்த்துகின்றன.

"ஒருங்குடன் மாய்ந்த பெண்டிர்க்காயினும்,
இறந்தோர் மருங்கில் சிறந்தோர் செய்த
சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டம்".

- மணி : 6 : 55 - 59.

இவ்வகையால், சோணாட்டுத் தஞ்சையில் இருந்த பத்தினிக் கோட்டம் ஒன்றிலிருந்து, அத்தெய்வத்துக் காலணியாம் சிலம்பினைக், கயவாகு, கொணர்ந்திருத்தல் கூடும்.

மேலும், கயவாகு, சோணாட்டின் மீது படையெடுத்துச் சென்று வென்று திரும்பிய அச்செய்தியைக் கூறும் அதே இலங்கை வரலாற்று நூல், அப்படையெடுப்பிற்குக் காரணமாம் முன் நிகழ்ச்சி ஒன்றையும் கூறியுள்ளது.

கரிகாலன், இலங்கை மீது படையெடுத்தச் சென்று, ஆங்குப் போரில் தோற்ற பல ஆயிரம் வீரர்களைக் கைப்பற்றிக் கொணர்ந்து அவர்களைக் கொண்டு காவிரிக்குக் கரை அமைத்தான் எனவும், இலங்கை அரசன் கயவாகு, நள்ளிருள் யாமத்து நகர் சோதனை செய்துவருகின்றபோது, நரைத்த முதுமகள் ஒருத்தி, பெருங்குரற் பாய்ச்சி அழுக்கண்டு, அன்னவள் இன்னலுக்கு எது, பன்னெடு நாளைக்கு முன்னர்ப் படையெடுத்துப் போந்த கரிகால் வளவன் சிங்களக் குடிகள் பலவற்றைச் சிறைப்படுத்திச் சென்றானென்று, தன் குடிக்கு ஒரு மகளையும், கொண்டு போயினமையே எனக் கேட்டுச் சோணாட்டின் மீது படையெடுத்து வந்து, தன் நகர்க் குடிகளைச் சிறையினின்றும் விடுவித்தனன் என்றும் கூறுகிறது (Wpham's Mahavamsum Vol. 1 Page : 228).

செங்குட்டுவன் வழிபட்ட கண்ணகி, போற்றிய கற்புடை மகளிர் எழுவரில், கரிகாலன் மகளும் ஒருத்தி. ஆகவே, செங்குட்டுவனுக்குக் காலத்தால் முற்பட்டவன் கரிகாலன், செங்குட்டுவன் - காலத்தவன் கயவாகு, ஆகவே, கரிகாலன் இலங்கைப் படையெடுப்பு, கயவாகு காலத்திற்கு முற்பட்ட தாதல் வேண்டும். அப்படையெடுப்பால் இலங்கை நாட்டவர்க்கு ஏற்பட்ட இழுக்கைத் துடைக்கவே, சோணாட்டின் மீது கயவாகு படையெடுத்தான். அப் படையெடுப்பு, செங் குட்டுவன் காலத்திற்குப் பின்னரே நிகழ்ந்திருக்க வேண்டும். செங்குட்டுவன் காலத்தில், சோணாட்டு அரியணையில் இருந்தவன் அவன் மைத்துன னாகிய கிள்ளி வளவன். அவன் அரசுரிமையைப் பொறாது, அவனோடு மாறுபாடு கொண்ட, சோழர் குலத்து இளவரசர் ஒன்பதின்மரைச் செங்குட்டுவன் வென்று அடக்கினான் என்கிறது சிலம்பு.

"மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா
ஒத்த பண்பினர் ஒன்பது மன்னர்
இளவரசு பொறாஅர் ஏவல் கேளார்
வளநாடழிக்கும் மாண்பினராதலின்
ஒன்பது குடையும் ஒருபகல் ஒழித்து, அவன்
பொன்புனை திகிரி ஒரு வழிப் படுத்தோய்!"

- சிலம்பு : 27 : 118 - 123.

செங்குட்டுவன் நண்பனாகிய கயவாகு அச்செங்குட்டுவன் காலத்திலேயே அவன் மைத்துனன் மீதே படையெடுத்துச் சென்றிருக்கமாட்டான். சோணாட்டில், செங்குட்டுவன் காலத்திலேயே ஏழுந்து, அவனால் அடக்கி வைக்கப்பட்ட ஆட்சி உரிமைப்போர், அவன் காலத்திற்குப் பின்னர் உரம் பெற்றிருக்கும் ஆதலின், அக்காலமே, அந்நாட்டின்மீது படையெடுப்பதற்கு வாய்ப்புடைய காலமாம் ஆதலின், கயவாகுவின் சோணாட்டுப் படையெடுப்பு, செங்குட்டுவன் காலத்திற்குப் பின்னரே நிகழ்ந்திருக்க வேண்டும். அக்காலை, வஞ்சியில், செங்குட்டுவனால் தொடங்கப்பட்ட கண்ணகி

வழிபாடு, அவள் பிறந்த மண்ணாம் சோணாட்டிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கக் கூடும். ஆகச் செங்குட்டுவன் காலத்திற்குப் பின்னர்ச், சோணாட்டின் மீது படையெடுத்துச் சென்ற கயவாகு, ஆங்குப் பத்தினித் தெய்வத்தின் காலணியைக் கைக்கொண்டதில் வியப்பு இல்லை. ஆகவே, அச்செயல், செங்குட்டுவனைக் கயவாகுவின் காலத்தவன் எனக் கொள்வதற்குத் தடையாக நிற்கிறது என்பதில் நியாயம் இல்லை.

செங்குட்டுவனைக் கயவாகுவின் காலத்தவனாகக் கொள்வதற்குத் தடையாகத் திரு. அய்யங்கார் எடுத்து வைக்கும் கடைசி வாதம், கயவாகு என்பதற்குப் பிறிதொரு பாடமாகக் "காவல்" என்பது சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டிருப்பது.

"கயவாகு காலத்தவன் என்ற முடிவு மேற்கொள்வதற்கு ஆதாரமாக இருக்கும் கயவாகு என்ற சொல்லிற்குச் சிலப்பதிகாரத்தில் பிறிதொரு பாடமும் கொடுக்கப்பட்டுள்ளது. அது, கயவாகுவிற்குப் பதில் "காவல்" என்பதாம். "காவல்" என்பதே பாடமாயின், கயவாகுவின் சமகாலம் என்ற முடிவின் மீது கட்டப்பட்ட, கருத்து மாடங்கள் அனைத்தும் அடியோடு சரிந்து மண்ணாகிப் போய்விடும்.

"There is an alternative reading to the word kayavagu in the passage of the Silappadigaram, on which all this contention about the "Gajabahu synchronism" is based. That reading is "Kaval" instead of Kayavagu. If Kaval is the correct reading, down falls to the ground all the edifice of the theories based on the "Gajabahu Synchronism", (History of the Tamils, Page : 381) என அவர் கூறுவது காண்க.

தமிழக வரலாற்றுக் கால எல்லையை உறுதி செய்யும் ஒரே சான்றாகப் பாடபேதத்திற்கு உள்ளான ஒரு சொல்லை மேற்கொள்வது ஏற்புடையதாகாது என்பது அவர் வாதம்.

"கயவாகு", "காவல்" இவ்விரண்டனுள் உண்மையான பாடம் எது? சிலப்பதிகாரப் பதிப்பாசிரியர் திரு. உ. வே.

சாமிநாத அய்யர் அவர்களால், இப்பாடபேதம் குறிப்பிடப் பட்டிருப்பது வரந்தரு காதையில், கயவாகுவின் நிகழ்ச்சி, சிலப்பதிகாரத்தில், வரந்தரு காதையில் மட்டுமல்லாமல், உரைபெறு கட்டுரையிலும் இடம் பெற்றுளது. அது கூறும் அவ்வுரைபெறு கட்டுரையில், அவன் பெயர் "கயவாகு" என்றே வந்துளது. பாடபேதம் எதுவும் குறிப்பிடப் படவில்லை. தஞ்சையிலிருந்து பத்தினித் தெய்வத்தின் காலணிகளைக் கொண்டு வந்த இலங்கை வேந்தன் பெயரை, மகாவம்சம் "கயவாகு" என்றே குறிப்பிட்டுளது. காட்டிய இச்சான்றுகளால், "கயவாகு" என்பதே சரியான பாடமாம் என்பது ஐயத்திற்கு இடமின்றி உறுதி செய்யப்படுகிறது. ஆகவே, எங்கோ ஓரிடத்தில் கூறப்பட்டிருக்கும் பாடபேதத்தை, வலுவான ஒரு முடிவைத் தகர்த்தெறியும் ஆயுதமாகக் கொள்வது வாத நெறியாகாது.

ஆகக் கூறிய இவ்விளக்கங்களால், செங்குட்டுவன், கயவாகுவின் காலத்தவன்தான் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை என்பதும், ஆகவே, அக்கயவாகுவின் காலமாம் கி. பி. 177-199 காலமே, செங்குட்டுவன் காலமாம் என்பதும் உறுதி செய்யப்படுகின்றன.

♦ ♦ ♦

12. இளந்திரையன்

அவன் தலைநகர்க்குப் போகும் வழியில் :

பட்டினப்பாலையில், கரிகாலன் புகழ்பாடிய புலவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார், பத்துப்பாட்டு வரிசையில் பிறிதொரு பாட்டாகிய பெரும்பாணாற்றுப் படையில், தொண்டைமான் இளந்திரையன் எனும் பெயருடைய காஞ்சிபுரக் காவலன் ஒருவனையும் பாடியுள்ளார். பாட்டின் தலைப்பு, "புலவர்களுக்குப் பெரிய வழிகாட்டி" என்பதாம்.

அடிக்குறிப்பு :

(மொழிபெயர்ப்பு ஆசிரியர் குறிப்பு : பாணர்களில், ஒரு சில நரம்புகளைக் கொண்ட சிறிய யாழில் வல்லவர், பற்பல நரம்புகளைக் கொண்ட பெரிய யாழில் வல்லவர் என இருவகையினர் உள்ளனர். அவர்களுள் பெரிய பாணனுக்குக் கூறிய வழிகாட்டு உரை என்பதே இதன் பொருளாம்.) இது, தன் புகழ்பாடும் இரவலர்க்கு வாரிவழங்கும் பெரிய வள்ளலாம் இளந்திரையன்பால், பரிசில் பெறச் செல்வீர் களாக எனப் புலவர்களுக்கு அழைப்பு விடுக்கிறது. பட்டினப்பாலையில் உள்ளதுபோலவே, இப்பாட்டிலும், புலவர், இப்புரவலன் ஆட்சிக்குக் கீழ் உள்ள நாட்டின் பல்வேறு இயற்கை நிலப் பிரிவுகளிலும் உள்ள மக்களின் வாழ்க்கை குறித்த விரிவான, நனிமிகு வியத்தகு விளக்கங்களைக் கொடுத்துள்ளார். பாட்டைப் படிப்போரை, இளந்திரை யனுக்கு உரிய பற்பல மாவட்டங்களூடே, அழைத்துச் சென்ற பின்னர்ப் புலவர், காஞ்சிக்கு வெகு தொலைவில் இல்லாத பார்ப்பனக் குடியிருப்பு ஒன்றைக் காட்டுகிறார். "மனையின் முற்றத்தில் போடப்பட்டிருக்கும் பந்தரின் சிறிய கால்களில், வளமான பசுங்கன்றுகள்

கட்டப்பட்டிருக்கும். வீடுகள், ஆவின் சாணத்தால் மெழுகப்பட்டிருக்கும். வளர்ப்புக் கோழிகளோ, நாய்களோ இம்மனைகளை அணுகா. வளைந்த வாயினை உடைய கிளிகளும், கேட்டுக் கற்ற மறைகளை உரைக்குமளவு, வேதங்களைக் கற்பிக்கும் வேதியர்கள், வாழும் ஊர் அது. பாணர்காள் ! நீவிர் ஆங்குச் செல்வீராயின், அகன்ற பெரிய நல்ல வானில், வடதிசைக்கண் கிடந்து, ஒளிவீசும் விண்மீனாகிச் சிறப்புற்ற அருந்ததிக்கு நிகரான கற்பும், அழகிய நெற்றியும், வளை அணிந்த கைகளும் உடைய பார்ப்பனமகளிர், ஞாயிறு மறைந்த பின்னர்ப் பதம் பார்த்து ஆக்கி முடித்த, கருடன் என்ற பறவையின் பெயரைப் பெற்ற கருடன் சம்பா அரிசியிலான சோற்றையும், சிவந்த பசுவின் நல்ல மோரில் கடைந்து எடுத்த வெண்ணெயில் வேகவைத்து, மிளகுப் பொடியும், கருவேப்பிலையும் தூவி எடுத்த மாதுளங்காய்க் கறியையும், நெடிய மாமரத்தில் கொத்துக் கொத்தாகக் காய்த்த இளங்காய்களைப் பிளந்து போட்டுப் பண்ணிய ஊறுகாயோடும் பெறுகுவீர்". எனக்குத் தெரிந்த வரை, தமிழ்நாட்டில் உள்ள ஒரு பார்ப்பனச் சிற்றூர் பற்றிய மிகப் பழைய விளக்கம் இதுதான்.

"செழுங்கன்று யாத்த, சிறுதாள் பந்தர்ப்,
பைஞ்சேறு மெழுகிய படிவ நன்னகர்,
மனையுறை கோழியொடு ஞமலி துன்னாது;
வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்
மறைகாப் பாளர் உறைபதிச் சேப்பின்,
பெருநல் வானத்து வடவயின் விளங்கும்
சிறுமீன் புரையும் கற்பின், நறுநுதல்,
வளைக்கை மகடூஉ, வயின்அறிந்து அட்ட,
சுடர்க்கடைப், பறவைப் பெயர்ப்படு வத்தம்,
சேதா நறுமோர் வெண்ணெயின், மாதுளத்
துருப்புறு பசுங்காய்ப் போழொடு, கறிகலந்து,
கஞ்சக நறுமுறி அளைஇப், பைந்துணர்,

நெடுமரக் கொக்கின் நறுவடி விதிர்த்த,
தகைமாண் காடியின் வகைபடப் பெறுகுவிர்".

- பெரும்பாணாற்றுப்படை : 297 - 310.

இச்சிற்றூர்க்கு அப்பால் உள்ளது நீர்ப் பெயற்று. இச்சொல், நீரால் பெயர் பெற்ற ஊர் எனும் பொருள் உடையது. இது, பெரும்பாலும், காஞ்சி அரசர்களின், தலையாய துறைமுகமும், பிற்காலத்தில், மாமல்லபுரம் என அழைக்கப்படுவதுமாய கடல்மல்லையைக் குறிப்பது ஆகும். இந்நகரிலும் பிராமணர்கள் சிறக்க வாழ்ந்திருந்தனர். "விளையாடும் இளம்பருவத்து மகளிர், உண்ணுநீர்த் துறையில், அறியாதே போட்டுவிட்டுப்போன, பொன்னால் செய்த, மகரமீன் வடிவிலான காதணியை, அந்நீர்த்துறையில், இரைதேடிக் கொண்டிருக்கும் மீன்குத்திப்பறவை, தான்தேடும் இரையாக எண்ணி எடுத்துக் கொண்டு, பறவைக் கூட்டம் இருக்கும் பனைமரத்து ஓலைக்கண் சென்று தங்களது, கற்றுவல்ல அந்தணர்கள், செய்தற்கு அரிய கடனாகச் செய்து முடித்த வேள்விச் சாலையில் நட்ட கம்பத்தின் உச்சியில் சென்று அமர்ந்து, யவனர் இயற்றிய மரக்கலத்துக் கூம்பின் மேல் அமைத்த அன்னவிளக்குப் போலவும், உயர்ந்த வானத்தில், வைகறைப் போதில் தோன்றும் வெள்ளியாகிய விண்மீன் போலவும் தோன்றும் நீர்ப்பெயற்று" எனக் கூறப்பட்டிருப்பது காண்க.

"வண்டல் ஆயமொடு உண்துறைத் தலைஇப்
புனலாடு மகளிர் இட்ட பொலங்குழை,
இரைதேர் மணிச்சிரல், இரைசெத்து எறிந்தெனப்,
புள்ஆர் பெண்ணைப் புலம்புமடல் செல்லாது,
கேள்வி அந்தணர் அருங்கடன் இறுத்த
வேள்வித் தூணத்து அசைஇ, யவனர்,
ஓதிம விளக்கின் உயர்மிசைக் கொண்ட
வைகுறு மீனின் பைபயத் தோன்றும்."

- பெரும்பாணாற்றுப்படை : 311 - 318.

இக்கடற்கரைப் பட்டினம், காவிரிப்பூம்பட்டினம் அளவு பெரிது அல்லவாயினும், வாணிக வளங்கொழிக்கும் மையமாக இருந்தது. "அதன் பெருமை மிக்க கடற்கரையில், பால்போலும் வெண்ணிற உடலும், ஆடிக்கொண்டே இருக்கும் வெள்ளிய பிடரி மயிரும் தலையாட்டத்தினையும் உடைய குதிரைகளோடு வடநாட்டு, வளங்கொழிக்கும் பொருட்களைக் கொண்டுவந்து தரும் மரக்கலங்கள் வரிசை வரிசையாக நிற்கும். மணல் பரந்த தெருக்களில் பண்டக சாலைகளைக் காவலர் காத்துக் கிடப்பர்; வேறு வேறுபட்ட தெருக்களில், வானளாவ உயர்ந்த மாடமாளிகைகளில், வணிக மக்கள் வாழ்ந்திருப்பர்".

"நீர்ப்பெயற்று எல்லைப் போகிப், பால்கேழ்
வால்உளைப் புரவியொடு, வடவளம் தருஉம்
நாவாய் சூழ்ந்த நனிநீர்ப் படப்பை,
மாடம் ஓங்கிய மணல்மலி மறுகின்
பரதர் மலிந்த பல்வேறு தெருவின்
சிலதர் காக்கும் சேணுயர் வரைப்பு."

- பெரும்பாண் : 319 - 324.

அது வாணிக வளம் அல்லாமல், வேறுபல வளங்களையும் கொண்டது. "வீடுகளில், உணவுப் பண்டங்கள் மலிந்து கிடக்கும், நெல்விளைய உழும் எருதுகளும், பால்வளம் தந்து கொண்டே இருக்கும் நினைவால் காளைகளைக் கருதாக் கறவைகளும், ஆட்டுக்கிடாய்களும், காவல் நாய்களும் திரிந்து கொண்டிருக்கும். வளைந்து வளைந்துப் பண்ணப்பட்ட பொன் அணிகள் அணிந்த மகளிர், கொன்றை மரத்து, மலர்ந்து கிடக்கும் மெல்லிய கொம்புகளில், பனித்துளிகள் படர்ந்திருக்கும் காட்சிபோல பசிய மணிகள் கோத்த வடங்களால்ஆன அணிமேலேகிடந்து அணிசெய்ய, இடையில் கட்டிக் கொண்டிருக்கும் மெல்லிய ஆடை அசைய, பெரிய மலைச்சாரலில் மகிழ்ந்து ஆடும் மயிற் கூட்டம் போல, கால்களில் அணிந்திருக்கும் பொற்சிலம்பு ஒலிக்க, வானளாவ உயர்ந்த மாளிகைகளில் மேல்மாடத்தில்,

பந்தாடி இளைத்ததும், மாளிகையின் முற்றத்தில் முத்தைப் பரப்பி வைத்தாற் போலும், புது மணல்பரப்பில் அமர்ந்து, கைகளில் அணிந்திருக்கும் பொற்றொடி, மேலும் கீழுமாக அசையப் பொன்னால் ஆன கழங்குக் காய்கள் கொண்டு, மெல்ல மெல்லக் கழங்காடி மகிழ்வர்".

"நெல்லுழு பகட்டோடு, கறவை துன்னா;
மேழகத் தகரொடு எகினம் கொட்கும்,
கூழ்உடை நல்இல் கொடும் பூண் மகளிர்
கொன்றை மென்சினைப் பனிதவழ் பவைபோல்
பைங்காழ் அல்குல் நுண்துகில் நுடங்கு,
மால்வரைச் சிலம்பின் மகிழ்சிறந்து ஆலும்,
பீலி மஞ்சையின் இயலிக், கால,
தமனியப் பொற்சிலம்பு ஒலிப்ப, உயர்நிலை
வான்தோய் மாடத்து வரிப்பந்து அசைஇக்,
கைபுனை குறுந்தொடி தத்தப், பைபய,
மூத்த வார்மணல் பொற்கழங்கு ஆடும்".

- பெரும்பாண் : 325 - 335.

காஞ்சிமாநகர் :

முருக வழிபாடு போலும் பழந்தமிழ் வழிபாட்டு நெறிகள் சிறப்புற்றிருக்கும். மேலும், பல சிற்றூர்களைக் கடந்து சென்ற பின்னர், வழிப் போவார், மலைச்சாரலில், காந்தள் மலர்க்காட்டில் களிறு வீழ்ந்துகிடப்பதுபோல், பாம்பணைப் பள்ளி மீது இறைவன் அமர்ந்திருக்குங் காஞ்சியை (சரியாகச் சொல்வதாயின், புறநகராம் திருவெஃகாவை) அடைவர்.

"நாடுபல கழிந்த பின்றை, நீடுகுலைக்
காந்தளம் சிலம்பிற் களிறுபடிந் தாங்குப்
பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன் ஆங்கண்."

- பெரும்பாண் : 371 - 373.

பாம்பணைப் பள்ளிமீது படுத்திருக்கும் விஷ்ணு வழிபாடு, தமிழ் இலக்கியத்தில் முதன்முதலில் குறிப்பிடப்படுவது இதுவே, விஷ்ணுவின் இத்தெய்வத் திருமேனி, முதன்முதலில் கருத்தில் உருப்பெற்றது எப்போது என்பதை நாம் அறியோம். ஆனால், இந்தியாவில் நாம் பெற்றிருக்கும், அனந்தசாயிச் சிற்பங்கள், குப்தர் காலத்திற்கு முற்பட்டனவாகா.

திருவெஃகாவின் சோலைகளையும், நீரோடைகளையும் கடந்த பின்னர்க் காஞ்சி அல்லது அச்சொல் தமிழாகி வழங்கும் கச்சிப் பெருநகரை அடையலாம். சோலைகளில், நிலம் நோக்கித் தொங்கும் துதிக்கைகளையுடைய யானைகளுக்காக, நெய்கலந்து ஆக்கிவைத்திருக்கும் சோற்றுக் கட்டிகளைச் களிறு ஓட்டும் கோல்களைக் கையில் கொண்டிருக்கும் யானைப்பாகர்கள், ஏமாறும் சமயம் பார்த்துக் கருவுற்றிருக்கும் மந்திகள் கவர்ந்து செல்லும்; அச்சோலைகளில், களிறுகளின் கடுஞ்சினத்தை அடக்கி வைக்க, அவற்றைப் பிணித்திருக்கும், வயிரம் பாய்ந்த வலிய கட்டுத்தறிகள் வரிசை வரிசையாக நடப்பட்டிருக்கும். நகரின் நீண்ட தெருக்கள், நெடிய பெரிய தேர்கள் ஓடிஓடிப் பண்ணிய குழிகளால் நிறைவுண்டிருக்கும். போர்க்களத்தில் படைக்கலம் இழந்து தோற்றுப்போதலை அறியாத, மிக்க வலியும் பெரிய புகழும் வாய்ந்த மறக்குடி மக்களைக் கொண்டிருக்கும், நகரைக் காத்து நிற்கும் நாற்படை; வாங்குவதும் விற்பதுமாகிய வாணிகத்தொழில், அவ்வணிகத் தொழில், அவ்வணிக வீதிகளில் இயங்குவாரை, எளிதே இயங்கவொட்டாது தடுக்குமளவு பெருக நடைபெறும். அந்நகர்வாயில், பரிசில் வேண்டி வரும் இரவலர்க்கு அடைத்தல் அறியாது என்றும் திறந்தே கிடக்கும்: காவற்காட்டால் அரண் செய்யப்பட்டிருக்கும் அந்நகர், நான்முகனைப் பெற்ற நீலவண்ண நெடியோனாம் திருமாலின் திருவுந்தியிலிருந்து எழும், பல்லிதழ்த் தாமரை மலரின் நடுவண் கொட்டை போலப் பேரழகுப் பெட்டகமாய்க் காட்சி அளிக்கும். நகரைச் சுற்றி, உயர்ந்த மதில்கள் செங்கல்லால் கட்டப்பட்டிருக்கும். இழும் எனும் ஒலி இடையறவுபடாது எழப் பறவைக்கூட்டம் மொய்த்துக்

கிடக்கும், பருத்தனவும், சிறுத்தனவுமாகிய கொம்புகளைக் கொண்ட, பூவாமலே காய்க்கும் பல்வேறு மரங்களுள்ளும், பருத்த, இனிய பழங்களை உடைமையால், சிறந்ததாக மதிக்கப்படும் பலாமரம் போல, புலால் நாறும் கடலால் சூழப்பட்டு, வானத்தால் மூடப்பட்ட, பரந்து அகன்ற பேருல்கில் உள்ள நகரங்கள் அனைத்திலும் பல்வேறு சமயத்தவரும் வந்து, வழிபாடு ஆற்றுவதற்கு ஏற்பப் பல்வேறு கடவுள்களுக்கான விழாக்கள் எடுக்கப்படுவதால், பழம்பெரும் சிறப்புற்றது, அக்கச்சிப் பெருநகர். அழகிய வளர்பிறைத் திங்கள், காட்சி அளிக்கும், அந்திப்போதின் செவ்வானத்தில், கார்முகில் கூட்டம் அசைவதே போலச் செங்குருதி ஆற்றில், வெண்ணிறத் தந்தங்களைக் கொண்ட கரிய களிறுகளின் பிணங்கள் ஈர்த்துச் செல்லப்படுமாறும், துரியோதனனும், அவன் உடன்பிறந்தாருமாகிய நூற்றுவரும் அழிந்து போகுமாறும் கொடிய போர் செய்து வெற்றி கொண்ட, நெடிய பெரிய தேர்ப்படையினையுடைய, ஓயாது போர் மேற்கொண்டிருக்கும் பாண்டவர் ஐவர் போல, ஓர் எண்ணுக்குள் அடங்கமாட்டாப் பெரும்படை தம்மிடத்தே உளது என்ற செருக்கால், தன்மீது போர் தொடுத்து வந்த, தன்னோடு ஒத்துப்போகாத பகைவர், தோல்வியுற்றதும், வெற்றிக்களிப்பால், ஆரவாரிப்பவனும், பொருள் வேண்டி வந்து, புகழ்பாடி நிற்பார்க்கு வாரி வாரி வழங்குவோனுமாகிய தொண்டைமான் இளந்திரையன், அக்கச்சிப் பெருநகரில் உள்ளான்.

"காழோர் இகழ்பதம் நோக்கிக், கீழ
நெடுங்கை யானை, நெய்ம்மிதி கவளம்,
கடுஞ்சூல் மந்தி கவரும் காவின்,
களிறு கதன் அடக்கிய வெளிறுஇல் கந்தின்
திண்தேர் குழித்த குண்டுநெடுந் தெருவின்,
படைதொலைவு அறியா, மைந்துமலி பெரும்புகழ்
படைகால் யாத்த பல்குடி கெழிஇக்,
கொடையும் கோளும் வழங்குநர்த் தடுத்த,

அடையா வாயில், மிளைசூழ் படப்பை,
நீல்நிற உருவின் நெடியோன் கொப்பூழ்,
நான்முக ஒருவன் பயந்த, பல்லிதழ்த்
தாமரைப் பொகுட்டின் காண்வரத் தோன்றிச்
சுடுமண் ஓங்கிய நெடுநகர் வரைப்பின்,
இழும் என் புள்ளின் ஈண்டுகிளைத் தொழுதிக்
கொழுமென் சினைய கோலி யுள்ளும்,
பழம் மீக்கூறும் பலாஅப் போலப்,
புலவுக் கடவுள் உடுத்த, வானம் சூடிய
மலர்தலை உலகத் துள்ளும், பலர்தொழ
விழவுமேம் பட்ட பழவிறல் மூதூர்,
அவ்வாய் வளர்பிறை சூடிச் செவ்வாய்
அந்தி, வானத்து ஆடுமழை கடுப்ப,
வெண்கோட்டு இரும்பிணம் குருதி ஈர்ப்ப,
ஈரைம் பதின்மரும், பொருது களத்து அவியப்,
பேரமர்க் கடந்த கொடிஞ்சி நெடுந்தேர்
ஆராச் செருவின் ஐவர் போல,
அடங்காத் தானையொடு உடன்றுமேல் வந்த
ஒண்ணாத் தெவ்வர் உலைவிடத்து ஆர்த்துக்
கச்சி யோனே, கைவண் தோன்றல்."

- பெரும்பாண் : 393 - 420.

மேலே எடுத்துக்காட்டிய பகுதியில், காஞ்சியில், பல்வேறு மக்களும், விழாவெடுத்து வழிபாடு செய்வர் எனக் குறிப்பிடப்பட்டிருப்பதன் பொருள், இரண்டு நூற்றாண்டுகள் கழித்து யுவான்சாங், அந்நகருக்கு வருகை தந்தபோது இருந்ததுபோலவே, வட இந்திய ஆகமநெறி வழிபாட்டுச் சமயங்களின், அதாவது வைஷ்ணவ, சைவ, சமண, புத்த சமயங்களின் வாதிகள், ஆங்கு வாழ்ந்திருந்தனர் என்பது ஈண்டுக் குறிப்பிடப்படல் வேண்டும். பாரதப் போர் பற்றிய

விளக்கத்தில், பண்டைத் தமிழ்ப் புலவர்களுக்குத் தெரியாத, அளவுக்கு மீறிய உயர்வு நவிற்சி அணிக்கு இயல்புடைய தாகிவிட்ட சமஸ்கிருத இலக்கியச் செல்வாக்கின் அடிச்சுவடுகளைக் காணலாம். பாட்டின் ஆசிரியர், ருத்திரன் மகன் கண்ணனார், (உருத்திரங்கண்ணனார்) ஒரு பார்ப்பனர் ஆதலும், பாடற்பொருள், முன்னரே குறிப்பிட்டவாறு, இந்நூலாசிரியர் காலத்துக்கு ஏறத்தாழ ஆயிரம் ஆண்டு களுக்கு முன்பே, ஆரியமயமாக்கப்பட்டுவிட்ட காஞ்சியாம் ஆதலுமே காரணங்களாம். ஆகவே, ஆரியக் கொள்கைகள் இடம் பெற்றிருப்பதில், இப்பாட்டிற்கும், பழைய தொகைப் பாக்களுக்கும் இடையில் உள்ள மிகப்பெரிய வேறு பாட்டினை உணர்த்துவதற்காக, இப்பாட்டிலிருந்து, ஆரியச்சார்பான, மேலும் சில, குறிப்பீடுகளைக் காட்டு கின்றேன். "இளந்திரையனின் குலமுதல்வனாகவும், பரந்த இப்பேருலகை அளந்து கொண்டவனாகவும், மார்பில் அழகிய மறுவுடையனாகவும், கடல்நிற மேனியுடைய வனாகவும்," விஷ்ணு கூறப்பட்டுள்ளார்.

"இருநிலம் கடந்த, திருமறு மார்பின்,
முந்நீர் வண்ணன்".

- பெரும்பாண் : 29 - 30.

பிராமணர்கள் வேதம் ஓதுவது, வேள்வித்தூண் ஆகியவற்றை விளக்கும் பாட்டின் பகுதிகள், முன்னரே எடுத்துக் காட்டப்பட்டன. இளந்திரையனின் பேராற்றல் பாண்டவர் ஆற்றலோடு ஒப்பு கூறப்பட்டுளது. இளந்திரையன் அரண்மனை முற்றத்தில், திறைப் பொருள்களோடு காத்துக் கிடக்கும் அரசர்கள், தேவர்கள் வாழும் இமயமலையில், வெள்ளிய அலைகளைக் கொண்ட நீரைக் கிழித்துக் கொண்டு ஓடுதலால், ஒளிவீசும் உச்சியிலிருந்து, பொன்னைக் கொழித்துக் கொண்டு குதித்தோடிவரும், கடத்தற்கரிய கங்கையாற்றில், அப்பெரு வெள்ளத்தைக் கடந்து, மறு கரைக்குச் செல்ல, அவ்வாற்றில் விடப்படும் ஒரே தோணியை எதிர்நோக்கிக் காத்துக் கிடக்கும் மக்களோடு ஒப்பு கூறப்பட்டுள்ளனர்.

"இமையவர் உறையும் சிமையச் செவ்வரை
வெண்திரை கிழித்த விளங்குசுடர் நெடுங்கோட்டுப்
பொன் கொழித்து இழிதரும், போக்கரும் கங்கை,
பெருநீர் போகும் இரியல் மாக்கள்,
ஒருமரப் பாணியில் தூங்கியாங்குத்
தொய்யா வெறுக்கையோடு துவன்றுபு குழிஇ".

- பெரும்பாண் : 429 - 434.

தன்னைச் சூழ்ந்து நின்று துணங்கைக் கூத்து ஆடப் படுவோளாகிய பெண்தெய்வம், இப்பாட்டில், வெண்திரை வீசும் கடல் பரப்பில் சென்று, கொடிய சூரனைக் கொன்ற, அழகிய புதிய அணிகளை அணிந்து, சேயோனாம் முருகனைப் பெற்ற ஆரியத் தாய்க் கடவுளாக மாற்றப்பட்டாள்.

"வெண்திரைப் பரப்பின் கடுஞ்சூர் கொன்ற
பைம்பூண் சேஎய் பயந்த மாமோட்டுத்
துணங்கையம் செல்வி."

- பெரும்பாண் : 457 - 459.

உலகம், நாவல் என்ற கனியால் பெயர் பெற்ற, அழகிய குளிர்ந்த சோலையாக, அதாவது ஜம்புத்தீபமாகக் கூறப்பட்டுளது. ("நாவலந்தண் பொழில்", பெரும்பாண் : 465) குதிரை இலக்கணம் பற்றிய குறிப்பும் அதில் உளது. ("நூலோர் புகழ்ந்த புரவி" - பெரும்பாண் : 487). இறுதியாக, வெண்கோடுடையவாய களிறுகள், கொண்டுவந்து கொடுக்கும், விறகு கொண்டு, முனிவர்கள் வேள்வி வேட்பதும் கூறப்பட்டுளது.

"செந்தீப் பேணிய முனிவர், வெண்கோட்டுக்
களிறுதரு விறகின் வேட்கும்."

-பெரும்பாண் : 408 - 409

ஆரியக் கருத்துகள் மட்டுமல்லாமல், சமஸ்கிருதச் சொற்களும், பழைய தொகைப் பாக்களில் காணப்படு

வதிலும், அதிகமாக இதில் இடம் பெற்றுள்ளன. சமஸ்கிருதத்தி லிருந்து வேண்டுமென்றே கடன் வாங்கப் பட்ட சொற்களாவன. "சகடம்" (50), "நாடகம்" (55), "தெய்வம்" (104) "பூதம்" (285), "எந்திரம்" (260), "தருப்பை" (264) மற்றும் "அமுது" (475). இப்பாட்டு, தன் காலச் செய்யுட் படைப்புகளைக் காட்டிலும், ஆரியக் கருத்துகளைத், தங்கு தடையின்றி மேற்கொண்டிருக்கும் அதேநிலையில், ஆரிய இலக்கிய நெறி எதனாலும் ஆட்சி கொளப்பட்டுவிடவில்லை. ஆற்றுப் படைச் செய்யுளுக்கு ஒரு முன்மாதிரியான செய்யுளாகிப், பழந்தமிழ் இலக்கிய மரபுகளை, முழுமையாக மேற்கொண்டு உளது. தமிழகத்தில், ஆரிய நாகரிகத்தின் மையமாகத் திகழ்ந்த காஞ்சியில் பாடப்பட்டு, ஆரியச் செல்வாக்கிற்கான அடிச் சுவட்டினை அளவின்றிக் கொண்டுளது என்றாலும், அது, பழங்காலத்தைச் சேர்ந்த பிற தமிழ்ப் பாக்களைப் போலவே, ஐந்திணை நிலத்து வாழ்க்கை முறைகளையும், அக்காலைத் தமிழ் மக்களின் பழக்கவழக் கங்களையும் விரித்துரைக்கிறது.

பெரும்பாணாற்றுப்படைப் பாட்டுடைத் தலைவனான இளந்திரையன், எந்தப் போர்க்கள வெற்றியாலும் புகழ் பெற்றவனல்லன். அவன் வீரம், பெரும்பாணாற்றுப் படைப் போலும் பாக்களின் வழக்கமாதல் போல, மிகைப் படுத்தப்பட்ட வெறும் புகழ் உரைகளாகக் கூறப்பட் டுள்ளனவே யல்லாது, குறிப்பிட்ட போர்க்களத்தில் பெற்ற எந்த ஒரு வெற்றியோ, பிற நாடுகளைக் கைக்கொண்ட எந்த ஒரு வெற்றியோ, அவனுக்கு உரியதாகக் கூறப்படவில்லை. "பகைவர் அரண் மதிலை அழித்து, அப்பகைவரின் மணி முடிகளைக் கைக்கொள்வதல்லது, அவரோடு சமாதானம் செய்துகொள்ள விரும்பான்" என்பது போலும் பொருள் தெளிவில்லாச் சொற்றொடர்கள், பிரெஞ்சு நாட்டில், ஓவ்வொரு அங்குல நிலத்தையும் இழந்து நெடுங்காலம் கழிந்த பின்னரும், பிராத்தானிய நாட்டுப் பேரரசர்கள், விடாமல் மேற்கொண்டிருந்த பிரெஞ்சு நாட்டு அரசுரிமைப் பட்டயங்கள் போலவே, பொருள் தெளிவு அற்றனவாம்.

"கடிமதில் எறிந்து குடுமி கொள்ளும்
வென்றியல்லது வினை உடம்படினும்
ஒன்றல் செல்லா".

- பெரும்பாண் : 450 - 453.

ஆகவே, இளந்திரையன், காஞ்சி நாட்டை ஆண்டு கொண்டிருந்த காலம், எவ்வித வரலாற்று முக்கியத்துவமும் வாய்ந்ததாக அமையவில்லை. ஆனால், கரிகாலன் புகழைப் பாடிய புலவராலேயே, இளந்திரையனும் புகழப்பட்டுள்ளான். ஆகவே, கரிகாலனோடு, இளந்திரையனுக்கு உள்ள உறவு, ஆய்வுக்குரிய முக்கியப் பொருளாகிறது. இளந்திரையன் காஞ்சி அரியணையைக் கரிகாலன் பிள்ளைப் பருவத்தில் கைப்பற்றிக் கொண்டதாகத், திரு. கனகசபை அவர்கள், கருதுகிறார். ஆனால், அதற்கான அடிப்படை அகச்சான்று சிறிது கூட இல்லையாகவே, அது, ஆய்வுக்குத் தகுதியற்றது. அது, ஒரு தவறான கற்பனையல்லது, வேறு அன்று. இளந்திரையன், கரிகாலன் காலத்தவனாதலின், கரிகாலன், காஞ்சி நாட்டை வென்று கைக்கொண்டதும், இளந்திரையன் காஞ்சிக் காவலனாக நியமிக்கப்பட்டுக், கரிகாலனுக்குப் பின்னரும், அதே நிலையில் தொட்டர்ந்து இருந்தவனாக வேண்டும்.

தெலுங்கு நாட்டுச் சோடக் கல்வெட்டுக்கள், கரிகாலனுக்குத் தொண்டைமான் என்ற பெயரன் ஒருவன் இருந்ததாகக் கூறுகின்றன. [No. 123 and 205 of 1899 Referred to in Madras Epic. Reports 1900 - 17. இப்பட்டயங்கள், கரிகாலன் மக்களில், சேர நாடாண்ட மக்களைப்பற்றிப், பொதுவாக அக்கறைகாட்டுவதில்லை] அக்காலகட்டத்தில், தெரிந்த தொண்டைமான், இளந்திரையன் ஒருவனே ஆதலின், கல்வெட்டுக் கூறும், அத்தொண்டைமான், பெரும்பாலும் இளந்திரையனே ஆகும். பெரும்பாணாற்றுப் படையில், இளந்திரையன், தொண்டையர் வழிவந்தவன் எனக் கூறப்பட்டுள்ளான். ("தொண்டையோர் மருக!"- பெரும்பாண் : 454). தொண்டையோர், அல்லது தொண்டையர் என்ற சொல் திரையர் என்ற பெயராலும்

அழைக்கப்படும் ஓரினத்து மக்களைக் குறிக்க வழங்கப் பட்டுளது. வேங்கட மலையைக் குறிப்பிடுங்கால், காட்டூர் கிழார் மகனார் கண்ணனார் என்ற புலவர், அது, திரையர்க்கு உரியதாகக் கூறியிருக்கும் நிகழ்ச்சியால், இது உறுதி செய்யப்படுகிறது. ("வென்வேல் திரையன் வேங்கட நெடுவரை" - அகம் : 45.9) இளந்திரையன், பெரும் பாணாற்றுப்படையில், பலவேற் படைகளுக்கு உரிய திரையன், "பல்வேல் திரையன்" (37) என அழைக்கப்பட்டுள்ளான் என்பதும் ஈண்டுக் குறிப்பிடல் நலம். அதே காலத்தைச் சேர்ந்த, மற்றொரு புலவராகிய எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார், "மழைமேகங்கள் தழுவிக் கிடப்பதும், புகழ் எல்லைக்கு அப்பாற்பட்டதும், எளிதில் ஏறி அடையலாகா, உயர்ந்த உச்சியினையுடையதும், வெண்ணுரை தெரிக்கும் மலையருவிகளைக் கொண்டது மாகிய வேங்கடம், கடும்போர் புரியப் பழக்கப்பட்ட யானைப் படையுடைய தொண்டையர்க்கு உரியது" எனக் கூறியுள்ளார்.

"வினைநவில் யானை விறல் போர்த் தொண்டையர்,
இனமழை தவழும் ஏற்றரு நெடுங்கோட்டு,
ஓங்கு வெள்ளருவி வேங்கடம்".

- அகம் : 213 : 1-3.

"திரையன்" என்ற சொல் "கடல்", "அலை" எனப் பொருள்படும் "திரை" என்ற சொல்லிலிருந்து மட்டுமே பெறப்படுமாகவே, "ஒருகடலோடி", "கடற்கரை நிலத்தைச் சார்ந்த இனத்தவன்", "அவ்வினத்தலைவன்" என்று மட்டுமே பொருள்படும். திரையர் என்பார், பெரும்பாலும் இன்று செங்கற்பட்டு, பகுதியில் பண்டு வாழ்ந்திருந்த பழங்குடி யினராவர். "தொண்டையர்" என்ற சொல், "தொண்டை" என்ற ஒரு கொடிப் பெயரிலிருந்து பெறப்பட்டதாம். ஆகவே, தொண்டையர் என்பார், தொண்டைக் கொடியைத் தங்கள் சின்னமாகக் கொண்ட, போர் மற்றும் பிற நிகழ்ச்சிகளின் போது, அதை அடையாள மாலையாக, அணியும் அரச இனத்தவர் அல்லது பழங்குடியினரைக் குறிப்பதாகும். தொண்டையர், திரையர் என்ற இரண்டுமே, ஒரே

இனத்தவரைக் குறிக்க வழங்கப்படுதலின், திரையர் என்ற இனத்தவர், தங்கள் சின்னமாகத் தொண்டைக் கொடியைக் கொண்டனர் எனக்கொள்ளலாம். தொண்டைமான் என்பது, இளந்திரையன் பட்டப்பெயர்; தொண்டை மாலைக்கு உரியவன் என்றுமட்டுமே அது பொருள்படும். இத்திரையன், தொண்டையர் குலத்தலைவனாயின், அவன், கரிகாலன் பெயரனும் ஆகல் எவ்வாறு இயலும்? அவனுடைய தாய், ஒரு திரையர் குலப்பெண்ணாய் இருந்தால் மட்டுமே அது இயலும், சோழர், திரையர் ஆகிய இரு குலத்தவரின் வழிவந்தவன் இளந்திரையன் என்பது, பெரும்பாணாற்றுப் படையில் குறிப்பிடப்பட்டுளது. "இப்பெரிய உலகை அளந்து கண்டவனும், திருவாகிய அழகிய மறு விளங்கும் மார்பினை உடையவனும், கடல் போலும் நிறத்தினை உடையவனுமாகிய விஷ்ணுவின் வழிவந்த, பரந்த இப்பேருலகில் வாழும் உயிர்களைக் காக்கும், வெற்றி முரசு முழங்கும் மூவேந்தர்களுள்ளும் சிறந்த, சோழர் குடியில் வந்தவன் நீ! பரந்தகடலில் பிறக்கும் சங்குகளில், உலகத்தவர் அனைவராலும், குற்றம் தீர்ந்து சிறந்தது எனப் புகழப்படும் வலம்புரிச் சங்கு போலக், குற்றம் இலனும், குணநலன் உடையனும் ஆகுவை! நாட்டில் அறம் அல்லனவற்றை அறவே அழித்து, அறமே சிறக்க ஆளும் ஆட்சி நலன் உடையை! திரைவழிவந்த மரபில் பிறந்தவனும் ஆகுவை!"

"இருநிலம் கடந்த, திருமறு மார்பின்,
முன்னீர் வண்ணன் பிறங்கடை; அந்நீர்த்
திரைதருமரபின் உரவோன் உம்பல்!.
மலர்தலை உலகத்து மன்னுயிர் காக்கும்,
முரசு முழங்குதானை மூவருள்ளும்
இலங்கு நீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்
வலம் புரியன்ன வசைநீங்கு சிறப்பின்
அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்
பல்வேல் திரையன்."

- பெரும்பாண் : 29 - 37

பத்துப்பாட்டின் உரையாசிரியர் நச்சினார்க்கினியர், மேலே காட்டிய பாடற்பகுதியில் வரும் "திரைதரு" என்ற தொடருக்குத் தெரிந்த ஒரு கட்டுக் கதைமூலம், அதற்கு விளக்கம் காண முற்பட்டுள்ளார். அவர் கூறியது; "நாகப்பட்டினத்துச் சோழன், பிலத்துவாரத்தால், நாகலோகத்தே சென்று, நாக கன்னியைப் புணர்ந்த காலத்து, அவள், யான் பெற்ற புதல்வனை என் செய்வேன் என்றபொழுது, தொண்டையை அடையாளமாகக் கட்டிக் கடலிலேவிட, அவன் வந்து கரையேறின், அவற்கு, யான் அரச உரிமை எய்துவித்து நாடாட்சி கொடுப்பன், என்று அவன்கூற, அவளும் புதல்வனை அங்ஙனம் வரவிடத் திரைதருதலின், திரையன் என்று பெயர் பெற்ற கதை கூறினார்," என்பது, முன்பே காட்டியவாறு, திரையர் என்பார், ஓருபழங்குடியினராதலின், இவ்விளக்கம் பொருந்தாது. (பவத்திரி என்ற நகருக்கு உரியவனும், பொன்னணிகள் பூண்டவனுமாகிய மற்றொரு திரையர் தலைவனும் உள்ளான். "செல்லா நல்லிசைப் பொலம் பூண் திரையன், பல்பூங்கானல் பவத்திரி" - அகம் : 340 : 6-7). ஆயினும், இன்றைய எழுத்தாளர் சிலர், இக்கட்டுக் கதையை, வரலாற்று உண்மையாக ஏற்றுக் கொள்வது மட்டுமல்லாமல் இளந்திரையனைப் பிறிதொரு காதல் கட்டுக்கதைக் குழந்தையாக, இந்த இடத்தில், நாகப்பட்டினத்துச் சோழன் மகன் அல்லாமல், வேறு ஒரு காவிரிப்பூம் பட்டினத்துச் சோழன் மகனாகத், திரைவழி மிதந்து வாராமல், கலம் ஏற்றி அனுப்பப்பட்டு, அக்கலம், கடும் சூறாவளியால் தாக்குண்டு மூழ்கிப் போக, அதன் பின்னர், அவன் குறித்து யாதும் - அறியவாராமகனாகக் கொண்டு, அக்கட்டுக் கதையை மேலும் பொருளற்றதாகச் செய்தும் உள்ளனர். இக்கதை மணிமேகலையில் இடம் பெற்றுளது. காவிரிப்பூம் பட்டினத்துச் சோழன், நாகப்பட்டினத்துச் சோழன் போலல்லாமல், தன் மகனைப் பார்த்தும் அறியான் ஆதலின், அவன் தன் மகனுக்கு நேர்ந்து விட்ட கதியைக் காண்பதில் ஈடுபாடு கொண்டுவிட்டது, அக்காலை, வழக்கம்போல் கொண்டாட வேண்டிய இந்திர விழாவைப் புறக்கணிக்க

நேர்ந்து, அக்கதையில் விளக்கியுள்ளவாறு, அப்பழைய துறைமுகப் பட்டினத்தைக் கடல் கொள்வதில் கொண்டு போய் விடுவதும் செய்தது. இருகதைகளுமே நம்புதற்கு இயலாதன; அவை இரண்டையும் ஒன்றாக இணைத்துக் காண்பது, அவற்றின் மீது நம்பிக்கையை உண்டாக்கிவிடாது.

புறநானூற்றுப் பதிப்பாசிரியர் அல்லது தொகுப்பாசிரியர், 185 ஆம் எண் பாட்டு, தொண்டைமான் இளந்திரையன் பாடியது என்றும். 95 ஆம் எண் பாட்டு, தொண்டைமான் படைக்கலப் பெருமை குறித்துப் பாடுகிறது என்றும் கூறியுள்ளார். "தொண்டைமான்" என்ற சொல், "தொண்டை" என்ற சொல்லும் சமஸ்கிருத விகுதி "மான்" (மத்) என்பதும் இணைத்து, தொண்டைக்கு உரிய தலைவன் எனும் பொருள் உணர்த்தும் ஒரு தொகைச் சொல், "தொண்டையர்" எனும் சொல், தொண்டைக் கொடியை அடையாளச் சின்னமாகக் கொண்ட பழங்குடியினர் எனும் பொருள் உடையது. தொண்டை என்பது, இன்றைய நாட்களில், பொதுவாகக், கோவை என அழைக்கப்படுகிறது. ஆனால், தெலுங்கில், "தொண்டே" என்பது, அச்செடியின், பொதுவான பெயராகும். பிற்காலப் பல்லவர்கள், அதாவது, காஞ்சியைக் கி. பி. 550க்கு முன்னரே மீண்டும் கைக்கொண்டு, அந்நாள் முதல் கி.பி. 900 வரை, அதைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவர்கள், தங்கள், தமிழ்க் குடிமக்களாம் தொண்டையரோடு, பழைய பல்லவர்களினும் நெருக்கமாகக் கலந்துவிட்டனர்; உண்மையில், முழுக்க முழுக்க, தமிழர்களாகவே ஆகிவிட்டனர். அவர்கள், தங்களைத் தொண்டையர் குல அரசன் எனும் ஒரு பொருளே தருவதான, "தொண்டைமான்" (சுந்தரமூர்த்தி நாயனார் வடதிருமுல்லை வாயில் பதிகம் 10), "தொண்டையர்கோன்" (திருமங்கை ஆழ்வார் பெரிய திருமொழி : 8 : 10 : 1) "தொண்டை மன்னவன்" (திருமங்கை ஆழ்வார் பெரிய திருமொழி : 5 : 8 : 9 : 1) என்றெல்லாம் பெயர் சூட்டிப் பாராட்டும் புலவர்களைப் பேணும் புரவலர்களும் ஆயினர். நாடும், "தொண்டைநாடு அல்லது "தொண்டை மண்டலம்" (துண்டக விஸயம் "துண்டிர விஸயம்" எனச் சமஸ்கிருத

மாக்கப்பட்டது) என அழைக்கப்படவும் ஆயிற்று. ஆனால், இவை அனைத்தும் எட்டாம் நூற்றாண்டில் நடைபெற்றன. இந்நிலையிலும், இன்றைய எழுத்தாளர் சிலர், தொண்டையர் என்ற சொல் பல்லவ என்ற சொல்லின் மொழிபெயர்ப்பு, அல்லது, இதன் மொழிபெயர்ப்பு அது, எனக் கூறி வாதிடுகின்றனர். "பல்லவ" என்பது, இளம்தண்டு, சிறுகம்பு அல்லது இளம்தளிர் எனும் பொருள் உடையதாகத் தொண்டை என்பது, ஒருவகைக் கொடி எனும் பொருளே உடையதாதலின், அவ்விரு சொற்களும், ஒன்றின் பெயர்ப்பு ஒன்று ஆதல் அறவே இயலாத ஒன்று. ஆறாம் நூற்றாண்டிற்குப் பின்னர்ப் பல்லவ அரசர்கள், தமிழில், "போத்தரையர்" என அழைக்கப்பட்டனர். போத்து என்பது இளம் கொம்பு எனும் பொருள் உடையது ஆதலின், போத்தரையர் என்ற சொல், "பல்லவராஜா" என்பதன் மொழிபெயர்ப்பதால் கூடும். ஆகவே, ஒரு தமிழ்ப் பழங்குடியினர் பெயராகிய தொண்டையர் என்ற சொல்லை வட இந்தியாவிலிருந்து வந்து குடியேறிய, ஆரிய மயமாகிவிட்ட, ஓர் அரச குலத்தவர் பெயராகிய "பல்லவர்" என்ற சொல்லிலிருந்து கொள்வதும் மாறாக, இச்சொல்லை, அச்சொல்லிலிருந்து கொள்வதும் ஆகிய அனைத்து முடிவுகளும், வாதங்களின் முன் நிலைத்து நிற்பன ஆகா.

இளந்திரையன், ஒரு தமிழர் தலைவன் ஆதலின், அவன், தமிழ்ப் புலவர்களைப் பேணிப் புரந்தான். அவனே, ஒரு தமிழ்ப் புலவனும் ஆவன். அவனுடைய பாடல் ஒன்று புற நானூற்றில் இடம் பெற்றுளது. அது, ஏனைய குடிமக்கள் பாக்களிலும், சிறந்த செய்யுள் நயம் வாய்ந்தது என்பதற்காக அல்லாமல், காவல பாவலன் பாடிய பாட்டினுக்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகுக என்பதால் ஈண்டு மொழி பெயர்க்கப்பட்டுளது. அது இது; "உருளையும் பாரும் தன்கு காக்கப் பெற்று உலகின்கண் ஓட விடப்படும் நாடுகாவலாகிய நல்ல வண்டி, அதனைச் செலுத்துவோன், நாடாளும் மாண்பு நிறையப் பெற்றவனாயின், ஊறுபாடு இல்லாமல், இனிதே நன்கு ஓடும்; அவன், அதனை நன்கு செலுத்த அறியானாயின், அது, நாள்தோறும், பகையாகிய பெரும் சேற்றில் சிக்குண்டு மிகப்பெரிய துன்பத்தைத் தந்துவிடும்"

"கால்பார் கோத்து, ஞாலத்து இயக்கும்
காவற் சாகாடு உகைப்போன் மாணின்,
ஊறு இன்றாகி, ஆறு இனிது படுமே;
உய்த்தல் தேற்றான் ஆயின், வைகலும்
பகைக்கூழ் அல்லற் பட்டு
மிகைப் பஃல் தீ நோய் தலைத்தலைத் தருமே".

- புறம் : 185.

அரசியல் வானில், இவ்வாறு சிறக்கச் சிறகடித்துப் பாடிய இப்பாட்டை அடுத்து, இளந்திரையன், நற்றிணையில் இடம் பெற்றிருக்கும், நெய்தல் திணை சார்ந்த பாடல்கள் இரண்டும், முல்லைத் திணை சார்ந்த பாடல் ஒன்றுமாக, மூன்று பாடல்களைப் பாடியுள்ளான். அவற்றுள் முதலாவது வருமாறு : "ஒருத்தி, காதல் நோய் நிலைகுலையப் பண்ணுதலால், உளம் கலங்கி, உடல்வலியிழந்து போகும் போது, அன்போடு வந்து, அருகில் இருந்து, இன்மொழிகூறி, அந்நோயைத் தணிவித்தல் ஆண்மகனுக்கு உரிய சிறந்த கடமையாகும். ஆனால், காம நோயால் நாம் வருந்திக் கிடக்கும்போது நம் காதலன் வந்து அது தீர்த்தான் அல்லன். கைத்தொழில் வல்ல கம்மியன், அழகுறக் கழுவித் தூய்மை செய்யாத முத்து, தன் பேரொளியை மறைத்துக் காட்டுவது போல், நானும், அவனொடு கொண்ட புணர்ச்சியால் பெற்றுவிட்ட என் புதுநல அழகைப் பிறர் கண்டுகொள்ளா வாறு, என் பெண்தன்மையால் மறைத்து, மனத்துயர்மிக்குக் கிடக்கப் புலால் நாறும் கடல்நீர் நெரித்தலால், அதுகாரும் மலராதிருந்த பேரரும்புகளெல்லாம் மலர்ந்து மணக்கும் புன்னை மரங்கள் நிறைந்த கடற்கரைத் தலைவனாகிய நம் காதலன், அவன்பால் அன்புகொண்டு, அவன் மார்பு தந்த நோயால் வருந்தும் என் நிலையினை அறிந்திலனே; என்ன காதலனோ அவன்?"

"நோயலைக் கலங்கிய மதனழி பொழுதில்
காமம் செப்பல், ஆண் மகற்கு அமையும்;

யான் என் பெண்மை தட்ப, நுண்ணிதின் தாங்கிக்,
கைவல் கம்மியன் கவின் பெறக் கழாஅ
மண்ணாப் பசுமுத்து ஏய்ப்பக், குவியினர்ப்
புன்னை அரும்பிய புலவு நீர்ச் சேர்ப்பன்,
என்ன மகன் கொல் தோழி! தன் வயின்,
ஆர்வம் உடையராகி,
மார்பு அணங்குறுநரை. அறியாதோனே".

- நற்றிணை : 94

அடுத்த செய்யுள், பிரிவால் வருத்தும் தலைவியைத் தோழி ஆற்றுவிப்பதைக் கூறுகிறது. "தண்ணீர் அறவே இல்லயாம் படி வறண்டுபோன, கடக்கமுடியாவாறு நீண்டுகிடக்கும் பெருவழியில், வெண்ணிற ஆடையை விரித்துப் போட்டாற்போல், வெயில் காய்வதால், வெப்பம், மிகுந்து, நினைத்தாலும் நடுங்கப் பண்ணும் கொடுமை வாய்ந்ததான பாலைக் காட்டைக் கடந்து சென்ற காதலன், தான் திரும்பிவரும் காலமாகத் தெளிவாகக் கூறிய பருவம் இதுவல்லவோ எனக் கேட்கின்றன; இஃது, அப்பருவம் அன்று; பருவகாலம் அன்று என்பதை மறந்து கடல் நீரைக் குடித்துக் கருவுற்றுவிட்ட கார்மேகம், அது தாங்கமாட்டாது பெய்து ஒழிய மழை பெய்து விடவே, அதைப் பருவ மழை யென்றே கருதிவிட்ட அறியாமையால், பிடவும், கொன்றையும், காந்தளும் மலர்ந்துவிட்டன. ஆகவே, அது கொண்டு, நீயும், இது கார்காலந்தானோ என எண்ணிக் கலங்கி விடாதே ; இது கார்காலம் அன்று".

"நீர் அற வறந்த நிரம்பா நீளிடைத்,
துகில் விரித்தன்ன வெயிலவிர் உருப்பின்,
அஞ்சுவரப் பனிக்கும் வெஞ்சுரம் இறந்தோர்,
தாம் வரத்தெளித்த பருவம் காண்வர,
இதுவோ என்றிசின்; மடந்தை ! மதியின்று
மறந்து கடல்முகந்த கமஞ்சூல் மாமழை

பொறுத்தல் செல்லாது இறுத்த வண்பெயல்
கார் என்று அயர்ந்த உள்ளமொடு, தேர்வில
பிடவும், கொன்றையும், கோடலும்
மடவ ஆகலின், மலர்ந்தன பலவே".

- நற்றிணை : 99.

"பாக ! காதலியைப் பிரிந்து வந்து, இப்போது வருந்து கின்ற நான், பரந்த கடலின், கரையை மோதும் பெரிய அலைகள் கொண்டு வந்து குவித்த மணல்மேட்டில், கடல் அலைகளோடு வந்து மொய்க்கும் நண்டுகளைப் பிடிக்க, தன்னிடமிருந்து வெளிப்படும் தான் செல்லுமிடமெல்லாம் வீசாநிற்க, அந்நண்டுகள் ஓடுமிடமெல்லாம் தொடர்ந்து ஓடி ஓடி விளையாடிக் களைப்புற்றுப் போக, விளையாட்டில் விருப்பம் ஒழிந்து இருந்த இளையளாம் அவள்பால் சென்று, வினைமேற் செல்லத் துடிக்கும் என் உள்ளத்துக் கவற்சியைக் கூறியவுடனே பிரிவறிந்து கலக்க முற்றமையால் மறுமொழி கூற நா எழாமல் போக, அப்பிரிவினைப் பொறமாட்டாத தன் மனக்கலக்கத்தைத், தனக்கு அணித்தாக வளர்ந்திருந்த ஞாழல் மரத்துத் தாழ்ந்த கிளையில், மலர்ந்து மணம் வீசிக் கொண்டிருந்த மலர்க் கொத்தை, இளந்தளிரோடு கொய்து அவற்றை ஒரு சேரக் கசக்கிப் பிசைந்து உதிர்த்ததன் மூலம் வெளிப்படப் பண்ணி அறிவு மயங்கிவிட்ட அவள் துயர் நிலையினை அறிந் திருப்பை அல்லவோ? அறிந்திருக்கும் நீ, அத்துயர் தீர்க்க வேண்டின், அதற்கேற்பத் தேரை ஓட்டுவாயாக!"

"அறிதலும் அறிதியோ ! பாக ! பெருங்கடல்
எறிதிரை கொழீய எக்கர் வெறிகொள,
வாடுவரி அலவனோடு ஓடுவயின் ஆற்றாது
அசைஇ, உள்ளொழிந்த வசைதீர் குறுமகட்டு,
உயவினென் சென்றுயான் உண்ணோய் உரைப்ப,
மறுமொழி பெயர்த்தல் ஆற்றாள், நறுமலர்
ஞாழல் அஞ்சினைத் தாழிணர்க் கொழுதி

முறிதிமிர்ந்து உதிர்த்த கையள்
அறிவு அஞர் உறுவி ஆய்மட நிலையே"

- நற்றிணை : 106.

இம்மூன்று பாடல்களில், முன்னவை இரண்டும், இளந் திரையன் பாடியனவாகவும், இறுதிப்பாட்டு, தொண்டை மான் இளந்திரையன் பாடியதாகவும் கூறப் பட்டுள்ளன; இருவரும் பெரும்பாலும் ஒருவரே ; தானே உணர்ந்து உணர்ந்து பெற்ற உணர்வால் உந்தப்படாமல், பண்டே இருந்துவந்த கவிமரபுத் தொடர்களே, திரும்பத் திரும்ப எடுத்துக் கூறப்பட்டுள்ளன என்பதை வெளிப் படுத்தும் வகையில், இப்பாடல்களில், இயற்கைக்கு மாறான வலிந்து மேற்கொண்ட செயல்பாட்டு நிலையும், சமஸ்கிருதப் பாக்களின் சூழ்நிலைச் சாயலும் கலந்து காற்று வீசுவதாகவே நான் கருதுகின்றேன். இளந்திரையன் பாடல்களும், பெரும் பாணாற்றுப் படைப் பாடலும் சமஸ்கிருத ஆசிரியர்களால் மலிந்த திராவிட நாட்டுக் காஞ்சீபுர மாவட்டத்தில் பாடப்பெற்ற முதல் தமிழ்ப் பாக்களாகும். ஒன்று, அவனால் இயற்றப்பட்ட, அல்லது அவனுக்குப் பெருமைசேர்க்க, அவன் பெயரில், யாரோ ஒருவரால் இயற்றப்பட்ட இளந்திரையம் என்ற நூல், பிற்கால உரைகளில் குறிப்பிடப்பட்டுளது. இது இப்போது வழக்கிறந்து போனதாகத் தெரிகிறது. இளந்திரையனுக்குப் பலநூறு ஆண்டுகளுக்கு முன்னர்ப் பிராகிருத மொழியை ஆட்சி மொழியாகக் கொண்ட ஆரியராஜாக்கள் அல்லது ஆரியமயமாக்கப்பட்ட ராஜாக்கள், காஞ்சி நாட்டை ஆண்டு வந்தனர். வழிவழியாக வந்த சேர, சோழ, பாண்டிய அரசவைகளோடும், தமிழ் நாட்டுக் குறுநிலத் தலைவர்களின் அரசவைகளோடும் மட்டுமே தொடர்பு கொண்டிருந்த தமிழ்ப் புலவர்களை, அக்காஞ்சி நாட்டுக் காவலர்கள் பேணிப் புரக்கவில்லை. கரிகாலனின் காஞ்சிவெற்றி, அவ்விடத்தைத் தமிழ் இலக்கிய வளைவுக்குள் முதன்முதலில் கொண்டுவந்து சேர்த்தது. இன்றும் அழியாமல் வழக்கில் இருக்கும் பழந்தமிழ் இலக்கியங்களில், பல்லவர் பற்றிய குறிப்பு அறவே இல்லாமல்

இருப்பதை இது விளக்கும். பல்லவர்கள், தமிழர்களாக ஆகிவிட்ட பின்னர்த், தமிழிலக்கியங்களில், அவர்களைப் பற்றிய குறிப்புகள் மிகப் பலவாம்.

பல்லவ குமார விஷ்ணு கி. பி. ஆறாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் கைப்பற்றும் வரை, காஞ்சீபுரம், சோழப் பேரரசிக்கு அடங்கிய சிற்றரசாகவே இருந்து வந்தது. அவன் வழிவந்தவருள் ஒருவனான சிம்ம விஷ்ணு, சோழ நாட்டையும், தன் ஆட்சியோடு இணைத்துக் கொண்டான். அது, எடுத்துக் கொண்ட ஆய்வுப் பொருளின் எல்லைக்கு அப்பாற்பட்டதான மிகப் பெரிய வரலாற்று மாறுதலுக்கு வழிவகுத்துவிட்டது.

♦ ♦ ♦

13. கரிகாலனுக்குப் பிற்பட்ட சோழ அரசர்கள்

தொகை நூல்களிலிருந்து பெறலாகும், சிறு அளவிலான வரலாற்றுச் செய்திகள் :

பழைய தொகை நூல்களைச் சேர்ந்த ஆயிரத்து ஆறுநூறு பாடல்களும் அரசர்கள், குறுநிலத்தலைவர்களின் செயல் பாடுகள் பற்றிய ஒருசில குறிப்பீடுகளையே இங்கொன்றும், அங்கொன்றுமாகக் கொண்டுள்ளன. அக்குறிப்பீடுகள் தாமும், அப்பாக்கள் பாடப்பெற்றபோது வாழ்ந்த தமிழரசர்களின் தொடர்ச்சியான வரலாற்றினை வகுக்கவோ, அவற்றில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஒரு சிலரின் வாழ்க்கை வரலாற்றினைக்கூட வகுக்கவோ இயலாத அளவு, அருகியுமே இடம் பெற்றுள்ளன. கரிகாலன் வாழ்க்கை பற்றிக் கூறியது போலவே, அரசர்கள் மேற்கொண்ட போர்க்களப் பெயர்கள். போரிடப்பட்ட இடங்கள், தோற்ற அரசர்களின் பெயர்கள் ஆகிய இவற்றை மட்டுமே, அம்மூலங்களிலிருந்து பெறலாம். பெரும்பாலான இடங்களில், அப்பாக்கள், அரசர்களின், குறிப்பிட்ட வீரச்செயல்களின் புகழ் உரைகளாக அமையாமல், தெளிவிலாப் பொதுநிலப் புகழ் உரைகளாகவே உள்ளன. அவற்றின் உண்மையான ஒரு சிறப்பு, சிலப் பதிகாரம் மற்றும் பிற்கால இலக்கியங்கள் போல் அல்லாமல், தாம் பாடும் அரசர்களுக்கு மிகைப்படுத்தப்பட்ட புகழ் உரைகளையோ, செய்வதற்கு இயலா அருஞ்செயல்களையோ உரிமையாக்காமல், அத்துணை இயல்பினை, உண்மையோடு பட்ட உரைகளாய் அமைந்திருத்தலே ஆகும். பாடிப்புகழ் பரப்பும் புலவர்களும் இரவலர்களும் கறி உண்ணுவது, கள் குடிப்பது ஆகிய நிலைகளில் ஒரு கட்டுப்பாட்டினைக்

கொண்டாரல்லர். தங்களோடு இணைந்துவிட்ட, இரவலர், விறலியர், போலும் சுற்றத்தார் நலனில் பெரிதும் கருத்துடையராயினர்; என்றாலும், தேவைப்படும் போதெல்லாம் அரசர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டி இடித்துரைப்பதிலும் பொருள்செறிந்த அறிவுரைகளை எப்போதும் அளிப்பதிலும், அவர்கள் கண்மூடிச் செயல்பட்டனர்.

கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக்குமரனார் என்ற புலவர் குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவளவன் அரசவையில் நெடிது நாட்கள் காத்திருந்தும், பெறவேண்டிய பரிசில் பெறமாட்டாமையால், அவளை இவ்வாறு கடிந்துரைக்கிறார்: "காற்றென விரையும் குதிரைகள் பூட்டப்பெற்ற, வெற்றிக்கொடி பறக்கும் தேர்ப்படை உடையவர் எனவும், கடல்போல் பரந்த படைக்கலம் ஏந்திய படைவீரர்களோடு, மலையையும் மோதி அழிக்கும் களிற்றுப்படையும் உடையவர் எனவும், இடியென முழங்கிப் பகைவர்க்கு அச்சம் ஊட்டும் போர் முரசோடு, பெரும் வெற்றிச்சிறப்பும் உடையவர் எனவும் எண்ணிப் பெரும்படையும் பொன் அணியும் உடைய பேரரசர்களின், வெண்கொற்றக்குடைக் கீழ்க்குவிந்து கிடக்கும் பெருஞ்செல்வத்தை மதிப்போம் அல்லோம். முள் வேலியிட்டு அடைக்கப்பட்ட தோட்டத்தில், ஆடுதின்று கழிந்த முன்னைக்கீரையைப் புன்செய் நிலத்தில், விளைந்த வரகரிசிச் சோற்றோடு கலந்து உண்ணும், செல்வ வளம் சிறவாச் சிற்றூர் அரசரே ஆயினும், எம்மை மதித்து, எமக்கு செய்யவேண்டிய முறைமைகளை அறிந்து செய்யும் பண்புடையாரே எம்மால் மதிக்கப்படுவோர் ஆவர். யாம் மிகப் பெரிய துன்பத்தில் ஆழ நேரினும், சிறிதும் அறிவில்லாதார் செல்வத்தைச் சிந்திப்பதும் செய்யோம். நல்லறிவுடையார், வறுமையுற்றுக்கிடப்பினும், அவ்வறுமை யிலும் பயன்படுவர் ஆதலின் அன்னார் வறுமையையே பெரிதும் நினைப்போம்.

"வளிநடந்தன்ன வாஅய்ச்செலல் இவுளியொடு
கொடிநுடங்கு மிசைய தேரினர் எனாஅக்,

கடல் கண்டன்ன ஒண்படைத்தானையொடு
மலைமாறு மலைக்கும் களிற்றினர் எனாஅ,
உருமுரற்றன்ன உட்குவரு முரசமொடு
செரு மேம்படூஉம் வென்றியர் எனாஅ,
மண்கெழுதானை ஒண்பூண் வேந்தர்
வெண்குடைச் செல்வம் வியத்தலோ இலமே;
எம்மால் வியக்கப்படூஉ மோரே,
இடுமுள் படப்பை மறிமேய்ந்து ஒழிந்த
குறுநறு முஞ்ஞைக் கொழுங்கண் குற்றடகு
புன் புலவரசின் சொன்றியொடு பெறூ உம்
சீறூர் மன்னர் ஆயினும் எமவயின்
பாடறிந்தொழுதும் பண்பினாரே;
மிகப்பேர் எவ்வம் உறினும், எனைத்தும்
உணர்ச்சி இல்லோர் உடைமை உள்ளேம்;
நல்லறிவுடையோர் நல்குரவு
உள்ளுதும்; பெரும்! யாம் உவந்து நனி பெரிதே"

- புறம் : 197.

இவ்வாறு கடிந்துரைக்கப்பட்ட அரசன், கரிகாலனாவன் எனக் கருதுகிறார் திரு. கனகசபை அவர்கள். அத்தகைய கண்டனத்திற்கு உரியனல்லனாமளவு புலவர்கள்பால் பெருங் கொடையாளனாவன் கரிகாலனாதலின், அது சரியன்று; அவ்வாறு கொள்வதற்குத் திரு. கனகசபை அவர்கள் காட்டும் காரணம், இரு அரசர்களுமே "திருமாவளவன்" என்ற சிறப்புப் பெயரைக் கொண்டிருப்பதே ஆகும். ஆனால், "மாவளவன்" என்பது இயற்பெயரன்று ஆதலின், சோழ அரசன் எவனும் மாவளவன் என அழைக்கப்படல் கூடும்.

புறநானூறு 45ஆம் எண் செய்யுளில், சோழர் குலத்து உடன் பிறந்தார் இருவர் ஒருவரோடு ஒருவர் போரிட்டுக் கொண்டிருக்கும்போது, மூத்தவன், கோவூர் கிழாரால், இவ்வாறு நயமாகக் கண்டிக்கப்பட்டான். "நலங்கிள்ளி! நீ

எதிர்த்துப் போரிட்டுக்கொண்டிருக்கும் உன் தம்பி பனந்தோட்டு மாலை அணிந்திருக்கவில்லை; ஆகவே அவன், உங்கள் குலப் பகைவனாகிய சேரன் அல்லன்; கரிய கொம்புகளைக் கொண்ட வேப்பம் மாலையையும் அவன் அணிந்திருக்கவில்லை. ஆகவே, உங்கள் குல மற்றொரு பகைவனாகிய பாண்டியனும் அல்லன் அவன்; உன்தலை மாலையும் சோழர்க்குரிய ஆத்தி மாலையாக உளது; உன்னோடு போரிடுவான் தலை மாலையும் ஆத்தியாகவே உளது. ஆகவே, இருவீரும் சோழர் குடியில் வந்தவர்; உங்கள் இருவரில் யார் ஒருவர் தோற்பினும், தோற்பது சோழர் குடியே; போரில் இருவரும் வெற்றி பெறுவது என்பது இயலாது. சோழர் குடி தோற்றது என்ற பழிச்சொல் எழ, நீங்கள் நடந்து கொள்வது உங்கள் குடிக்குப் பெருமை சேர்ப்பதாகாது. மேலும், போர்க்கொடி பறக்கும் தேர்ப்படைகளோடு விளங்கும் உம்பகையரசர்கள் எள்ளி நகையாட இடம் வகுப்பதும் ஆகும்; ஆகவே, போரைக் கைவிடுக."

"இரும்பனை வெண்தோடு மலைந்தோன் அல்லன்;
கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்;
நின்ன கண்ணியும் ஆர் மிடைந்தன்று; நின்னொடு
பொருவோன் கண்ணியும் ஆர் மிடைந்தன்று;
ஒருவீர் தோற்பினும், தோற்பதும் உம் குடியே;
இருவீர் வேறல் இயற்கையும் அன்றே; அதனால்
குடிப் பொருள் அன்று நும் செய்தி; கொடித்தேர்
நும் மோரன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி உவகை செய்யும் இவ்விகலே".

- புறம் : 45.

இப்பாக்கள், இனிய நயம் வாய்ந்துள்ளனவாயினும், அவை அளிக்கும் செய்தி வறுமையால், அவை, வரலாற்று மூலங்களாகப் பயன்படுவ அல்ல.

இப்பாக்களைப்பாடிய புலவர்கள் பற்றிய ஆராய்ச்சியினை மேற்கொள்ளும், இன்றைய வரலாற்று ஆசிரியர்கள், பெயர்களில் காணப்படும் ஒருமைப்பாடு, அகப்புறச் சான்றுகளால் உறுதி செய்யப்படாது போயினும், தனிமனிதர்களின் ஒருமைப்பாட்டை உறுதி செய்வதாகக் கொள்கின்றனர். அஃது ஒரு பொருளற்ற கற்பனை ஊகமே. நக்கீரர் என்ற பெயரில், தனித்தனி மனிதர் நால்வர் உள்ளனர். ஒருவர், பழைய தொகை நூல்களில் பல பாடல்களையும், பத்துப்பாட்டில், திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை ஆகிய இருபாடல்களையும் பாடியவர் : இரண்டாமவர், நாலடி நாற்பது என்ற யாப்பிலக்கண ஆசிரியர் : மூன்றாமவர், கற்பனைக் கதை மூலம் கூறப்படுபவராகிய அகப்பொருளுக்கு முதலில் உரை கண்டவர் : நான்காமவர் பிற்காலத்தைச் சேர்ந்த சில சைவ சமய வழிபாட்டுப் பாடல்களைப் பாடியவர். ஆனால், தமிழ்ப் பேராசிரியர்கள், இந்நால் வரையும், ஒருவராகவே இணைத்துக் கொள்கின்றனர். இம்முறை, தமிழ்ப்பாக்களின் முறையான வளர்ச்சி குறித்த ஆராய்ச்சிக்குப் பெருந்தடையாக நின்று, தமிழ்ப்புலவர்கள், சமஸ்கிருதப் பாடல்களைக் கற்றறிந்த பின்னரே, தமிழ்ப் பாக்கள் தோன்றின என முடிவு கொண்டு அகச்சான்று, புறச் சான்றுகளை அறவே புறக்கணித்துவிட்டுப், பிற்காலப்பாக் களை, முற்காலப்பாக்களின் முன்னே கொண்டுபோய் வைத்துத் தங்கள் முடிவினை உறுதிசெய்ய முனைவார்க்குத் துணைபுரியவும் செய்கிறது.

புறநானூற்றுச் செய்யுட்களின் கீழ்க் கொடுக்கப் பட்டிருக்கும் கொளுக்கள் நம்பிக்கைக்கு உரியன ஆகா :

கி. பி. ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டுகளில், நான்கு தொகை நூல்களும் தொகுக்கப் பெற்றபோது, ஒவ்வொரு பாட்டுக்கும் அதற்குரிய திணை, துறை, பாடிய ஆசிரியர் பெயர் ஆகியன கொடுக்கப்பட்டன. அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகிய இவ்வகையிலேயே நமக்குக் கிடைத்துள்ளன. ஆனால், இப்போது நமக்குக் கிடைத்திருக்கும் புறநானூற்றுப் பதிப்பு,

இவற்றோடு 1) முதல் இருநூற்று அறுபத்து ஆறு பாடல்களும், அவை ஒவ்வொன்றும் பாடப்பெற்ற சூழ்நிலையை விளக்கும் கொளுக்கள். 2) அந்த இருநூற்று அறுபத்தாறு பாடல்களுக்கான பொழிப்புரை, இலக்கணக் குறிப்பு, மற்றும் பிற பொருள் விளக்கக் குறிப்புக்களையும் கொண்டுள்ளன. பொழிப்புரை எந்தப் பாட்டோடு முடிகிறதோ அந்தப்பாட்டோடு கொளுவும் முடிகிறது. இவ்விரண்டும் பெரும்பாலும், பழந்தமிழ்ப்பாக்களுக்கு உரை எழுதத் தொடங்கப்பட்ட காலத்தை, அதாவது கி. பி. பன்னிரெண்டுக்கும் பதினாலுக்கும் இடைப்பட்ட நூற்றாண்டுகளைச் சேர்ந்த ஒரு பதிப்பாசிரியரால், இயற்றப்பட்டன வாதல் வேண்டும். உரை இல்லாமல், கொளுக்கள் மட்டும், முன்னூற்று ஐம்பத்தொன்பதில் மீண்டும் தொடங்கி, இறுதிவரை தொடர்கின்றன.

பெரும்பாலான தமிழ்ப் பேராசிரியர்கள், இக்கொளுக்களுக்கு, நம்புதற்கியலாக் கண்மூடித்தனமான பெருமதிப்பு அளித்துள்ளனர். அக்கொளுக்களில் இடம் பெற்றிருக்கும் செய்திகளைச் சான்றாக மேற்கொள்ளும்போது, புறநானூற்றுச் செய்யுட்கான கொளுவில் கூறப்பட்டுளது என்றோ, புறநானூற்றுச் செய்யுட்கான உரைநடையில் கூறப்பட்டுளது என்றோ சொல்ல வேண்டுவதற்குப் பதிலாக, இது, புறநானூற்றுச் செய்யுளில் கூறப்பட்டுளது என்றே கூறுகின்றனர். செய்யுளின் மூலங்களையும், ஆயிரம் ஆண்டுகட்குப் பிற்பட்டனவாய அவற்றின் உரைகளையும், ஒன்றாக மதித்துக் குழம்புவதைப் புலவர்கள் கைவிட வேண்டிய இனியும் காலம் கடத்தலாகக் காலம் இது. மேலும், புறநானூற்றைத் தொகுத்தவர் அவர் காலத்தில் நினைவில் இருந்த அனைத்துக் காதுவழிச் செய்திகளையும் குறித்துள்ளார் என்பதும், அப்படியே ஏற்றுக்கொள்ளப் பட்டுளது. அவரால் கொடுக் கப்பட்டிருக்கும் அனைத்துச் செய்திகளையுமே, காதுவழிச் செய்தியாக வழிவழி வந்தனவே என்பதை ஏற்றுக் கொள்வதாயினும், காதுவழிச் செய்திகள், பனித்திரள் போல் நூற்றாண்டுக்கு நூற்றாண்டு, ஒன்று பலவாகப் பெருகி, வகைவகையான வியத்தகு கட்டுக்

கதைகளையும் கொண்டு பருத்துவிடுமாதலின், அவற்றை நன்கு ஆர்ந்து அமர்ந்து சிந்தித்தே ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

கொளுக்களின், சிற்சில, நம்புதற்கு உரிய அல்லவாம் தன்மை :

தொகுப்பாசிரியரால், பாக்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் கொளுக்களில், சில கொளுக்கள், வழி வழியாக வந்த காதுவழிச் செய்திகளைக் கொண்டிருப்பதில்லை. ஆனால், வெறும் ஊகங்களைச் சிற்சில இடங்களில் கண்மூடித்தனமான ஊகங்களையே, கொண்டுள்ளன என்பது நன்கு தெரிந்த ஒன்று. எடுத்துக்காட்டுக்கு : புறநானூற்று 76, 77 ஆகிய பாக்கள், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை, இடைக்குன்றார்க்கிழார் புகழ்ந்து பாடியனவாகக் கூறப்பட்டுளது. 76 இவ்வாறு கூறுகிறது. "ஒருவனை ஒருவன் வெற்றிகொண்டு கொல்வதோ, ஒருவனுக்கு ஒருவன் தோற்றுப்போவதோ புதுமையான ஒரு செயல் ஆகாது : இது, உலகில், தொன்று தொட்டு இருந்துவரும் இயல்பான நிகழ்ச்சி ஆகும் : ஆனால் ஊர்ப்பொதுவிடத்தே நிற்கும் பருத்த அடிமரத்தையுடைய வேம்பின் பெரிய கிளைகளில் உள்ள இளந்தளிரை, நீண்ட உழிஞைக் கொடியோடு கலந்து கட்டிய தேன்சொட்டும் மாலையைச் சிறக்கச் சூடிக்கொண்டு, தெளிந்த ஓசையை வெளிப்படுத்தும் போர்ப்பறை ஒலிக்க, நாடு நிறைந்த செல்வத்தையுடைய, பசும்பொன்னால் பண்ணப்பட்ட அணிகளை அணிந்த நெடுஞ்செழியன் பெருமையையும், தலைமையையும் அறியாமையால், ஒன்றுகூடிப் போரிடவந்த இருபெருவேந்தர், ஐம்பெரும் வேளிர் ஆகிய ஏழரசர்களின் கொற்றம் அடங்கத் தான் ஒருவனாகவே நின்று போரிட்டு, அவர்களை வென்று அழித்த நிகழ்ச்சியை உலகம் தோன்றிய நாள் தொட்டு, இந்நாள்வரை யாம் கேட்டறியோம்."

"ஒருவனை ஒருவன் அடுதலும், தொலைதலும்
புதுவதன்று: இவ்வுலகத்து இயற்கை;
இன்றின் ஊங்கோ கேளலம் ; திரள்அரை

மன்ற வேம்பின் மாச்சினை ஒண்தளிர்
நெடுங்கொடி உழிஞைப் பவரோடு மிடைந்து
செறியத்தொடுத்த தேம்பாய் கண்ணி,
ஒலியில் மாலையொடு பொலியச் சூடிப்
பாடின் தெண்கணை கறங்கக் காண்தக
நாடுகெழுதிருவின் பசும்பூண் செழியன்
பீடும் செம்மலும் அறியார், கூடிப்
பொருதும் என்று தன்தலை வந்த
புனைகழல் எழுவர் நல்வலம் அடங்க,
ஒரு தானாகிப் பொருது களத்து அடலே"

- புறம் : 76.

அடுத்த பாட்டு இவ்வாறு கூறுகிறது : "காலில், குழந்தைப்பருவத்தில் அணிந்த சதங்கையைக் கழற்றி அகற்றி விட்டு, வீரர் அணியும் கழல் அணிந்துகொண்டு பிள்ளைப் பருவம் கழிந்ததை உணர்த்த, பிறந்த மயிர் நீக்கப்பெற்ற தலையில், வேம்பின் தளிரோடு, நெடிய உழிஞைக்கொடி கலந்து கட்டிய தலைமாலையைச் சூட்டிக்கொண்டு, சிறு பிள்ளைகள் அணியும் வளை கழற்றப்பட்ட கைகளில் வில்லும் அம்பும் ஏந்தி, நெடிய தேர் மீது பொலிவு தோன்ற நிற்கின்றான்; மாலை அணிந்திருக்கும் மார்பிலிருந்து, பிள்ளைப்பருவத்தே அணியும் ஐம்படைத்தாலி அணியை இன்னமும் அகற்றினானல்லன்; பால் உணவு விடுத்துச் சோற்றுணவை இன்றுதான் உண்டான். தன்மேல் சினங்கொண்டு சாரி சாரியாக வரும் புதிய வீரர்களைத் தன்னினும் எளியராக எண்ணி இகழ்வதும் செய்திலன். வந்து மோதினாரைக் கைக்கொண்டு வானோக்கி ஓச்சி எறிய, அவர்தம் உயிரிழிந்த உடலம் நிலத்தின் கண்ணே வீழ்ந்து உயிர் போகக் கண்டும், கொண்ட வெற்றியைக் கண்டு மகிழ்வதோ, மனச்செருக்கு உறுவதோ செய்திலன். இத்தகு நலம் வாய்ந்த இவ்விளையோன் யாவனோ? யாவனே ஆயினும் வாழ்க அவன் கண்ணி".

"கிண்கிணி களைந்த கால், ஒண்கழல் தொட்டுக்
குடுமி களைந்த நுதல் வேம்பின் ஒண்தளிர்,
நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மிலைந்து,
குறுந்தொடி கழித்த கைச்சாபம் பற்றி,
நெடுந்தேர்க் கொடுஞ்சி பொலிய நின்றோன்,
யார்கொல்? வாழ்க அவன் கண்ணி! தார்பூண்டு
தாலி களைந்தன்று மிலனே! பால்விட்டு
அயினியும் இன்று அயின்றனனே ! வயின்வயின்
உடன்றுமேல் வந்த வம்ப மள்ளரை
வியத்தன்றும் இழிந்தன்றும் இலனே ! அவரை
அழுந்தப் பற்றி அகல்விசும்பு ஆர்ப்பெழக்
கவிழ்ந்து நிலம் சேர அட்டதை
மகிழ்ந்தன்றும் மலிந்தன்றும், அதனினும் இலனே!"

- புறம் : 77.

கொளுக்களின் ஆசிரியர், இவ்விரு பாடல்களும், ஒரே அரசன் குறித்து, ஒரே புலவரால் பாடப்பட்டன எனக் கூறுகிறார். புலவருக்குத் தெரிந்த தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும், புலவருக்குத் தெரியாத இளைய வீரனும், வேறு வேறு அல்லர் ஒருவரேயாதல் நம்புதற்கு இயலாதது. இருவரும் பாண்டியர் குலத்தைச் சேர்ந்தவர் என்பது ஒன்றை மட்டுமே நாம் உறுதியாகக் கொள்ளலாம். புறநானூற்று 77 ஆம் எண் பாட்டின் கொளு ஒரு ஊகம் ; அதிலும் ஒரு தவறான ஊகம் ; அவ்வளவே.

மற்றொரு பாட்டு, புறநானூறு 74, அரசர்குலத்து வந்தாரின் மானஉணர்வின் மாண்பினைப் புகழ்கிறது, "குழந்தை பிறந்தபோதே இறந்து போயினும், உயிரற்ற வெறும் தசைப் பிண்டமே பிறந்தாலும், ஆள் அல்ல என்று விட்டுவிடாது, அவற்றையும் வாளால் வெட்டிப் புதைப்பதைத் தவறாது செய்வார். சங்கிலியால் பிணிக்கப் பட்ட நாய் போலப் பிணித்துச் சிறைசெய்து, துன்புறுத்தும்

பகைவர், விருப்பம் இன்றி, வெறுப்போடு கொடுக்கும் தண்ணீரை இரந்து பெறுநீரைக் குடியேம் என்னும் மனவலி இல்லாமல், தம் வயிற்றுப் பசித்தீயைத் தணிப்பான் வேண்டித், தாமே இரந்து கேட்டு உண்ணுவாரை, இவ்வுலகில் பெறுவரோ?"

"குழவி இறப்பினும், ஊன்தடி பிறப்பினும்,
ஆள் அன்று என்று வாளில் தப்பார்;
தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய,
கேளல் கேளிர், வேளாண் சிறுபதம்,
மதுகை இன்றி, வயிற்றுத் தீத்தணியத்,
தாம் இரந்து உண்ணும் அளவை
ஈன்மரோ இவ்வுலகத்தானே?"

- புறம் : 74.

புறநானூற்றுத் தொகுப்பாசிரியர், "சேரமான் கணைக்கால், இரும்பொறை சோழன் செங்கணானோடு, திரும்போர்ப் புறத்துப் பொருது, பற்றுக் கோட்பட்டுக் குடவாயிற் கோட்டத்துச் சிறையில் கிடந்து, தண்ணீர் தா என்று பெறாது, பெயர்த்துப் பெற்றுக் கைக்கொண்டிருந்து உண்ணான், சொல்லித் துஞ்சிய பாட்டு" இது எனக் கூறியுள்ளார். இது, நடக்கக் கூடாததொன்றன்று; இப்பழங் கதையில் நம்புவதற்கு இயலாத எதுவும் இல்லை; ஆனால், இதில் தொடர்புபடுத்தப்பட்ட அரசர்கள் யாவர் என்பது பற்றி, மூலம் எவ்விதக் குறிப்பையும் தரவில்லை; தொகுப் பாசிரியர், அப்பழங்கதையைக் கேட்டறிந்து, அதை, அச்செய்யுளோடு இணைத்துவிட்டார் என்ற கருத்தை மறுக்க எதுவும் இல்லை. இப்பழங்கதை குறித்து ஐயப்பாடுகளும் உள்ளன. "தமிழ் நாவலர் வரலாறு" என்ற, உண்மையில் அது அல்லாத, அரிய பெயரால் அழைக்கப்படும். கி.பி. 16 ஆம் நூற்றாண்டிற்கு முன்னர்த் தொகுக்கப்பெற்ற, சிலவற்றிற்குச் சுருக்கமான உரை விளக்கத்தோடு கூடிய தமிழ்ப்பாக்களின் தொகை நூல் ஒன்று உளது. அத்தொகை

நூலில், இப்பாட்டு, 158ஆம் எண் பாட்டாக வருகிறது. அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்பு, "சேரமான் கணைக்கால் இரும்பொறை, சோழன் செங்கணானால் சிறைபிடிக்கப்பட்டுத் தன் கோட்டைக் குடவாயில் கோட்டத்துச் சிறையில் அடைக்கப்பட்டபோது, சேரன், இப்பாட்டைப் பாடித், தன் புலவ நண்பர் பொய்கை யார்க்கு அனுப்பினான். பொய்கையார் இது கேட்டதும், செங்கணான் புகழ்கூறும் களவழி நாற்பது என்ற பாக்களைப் பாடினார். அது கேட்ட செங்கணான், சேரனை விடுதலை செய்து, அவன் அரியணையையும் திருப்பித் தந்தான்" எனக் கூறுகிறது. (தமிழ்நாவலர் வரலாறு : பக்கம் : 57). இருகட்டுக் கதைகளும், ஒன்றோடொன்று மாறுபடும் இவ்வுண்மை நிலை, தமிழ்ப் பேராசிரியர்களால், தெய்வத் தன்மை வாய்ந்து, மாற்றொணா மாண்புடையதாகக் கருதப்படும் அம்மரபு வழிச் செய்திகள், வரலாற்று ஆய்வு நிலையில், ஊன்று கோலாகக் கொள்வதற்கு உதவா, எளிதில் ஒடிந்து உருக்குலைந்து போகும் வெறும் நாணற்புல்லாகும் என்பதை உணர்த்துகிறது.

பாக்களின் பொருள், அவற்றோடு இணைந்திருக்கும் கொளுக்களில் கூறப்பட்டிருக்கும் கதைகளோடு, எவ்விதத் தொடர்பும் கொள்ளாத, இவைபோலும் வேறு சில பாடல்களும் உள ; மேலும் ஓர் எடுத்துக் காட்டினை, ஈண்டுத் தருகின்றேன்; "வரையாது வழங்கும் உள்ளம் உடையாரை உள்ளத்தில் கொண்டு, பழமரம் தேடிச் செல்லும் பறவை போலக், கடந்து செல்ல வேண்டிய வழி, நெடிது, கொடிது எனக் கருதாமல், கடந்து சென்று, தம் நாவால், தம் வன்மை தோன்றப் பாடிப் பார்ராட்டி, ஆங்குப் பெற்ற பரிசிலால் தாமும் மகிழ்ந்து, தம் சுற்றத்தையும் பேணிப் பெற்ற பொருளைப் பயன்கொள்ளாதே பேணிக் காப்போம் என எண்ணி விடாது, தாமும் உண்டு, தம்பால் வந்து வறுமை கூறுவார்க்கும் வழங்கித், தம்மைப் பேணிப் புரப்பவர் தரும் பெரும் பரிசில் பொருட்களை இவ்வாறு பயன் கொள்வதில் பெறும் சிறு தொல்லையோடு வாழும், இப்பரிசிலர் வாழ்க்கை, பிறர்க்குச் செய்யும் கொடுமையை எப்போதும்

அறிந்ததில்லை. புலமைத் துறையில், தம்மோடு மாறுபட்டு வருவார், தோற்று நாணும் வண்ணம், அவரைத் தம் புலமையால் வென்று, தலைநிமிர்ந்து நின்று செருக்குற்று வாழ்வதல்லது, வேறு மாறுபாடு அறியா அந்நிலையால், சிறந்த புகழும், நாடாளும் நலமும் நன்கு வாய்க்கப் பெற்ற நின் தலைமைக்கு நிகரான தலைமையையும் உடையராவர்."

"வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி
நெடிய என்னாது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்,
பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி
ஓம்பாது உண்டு கூம்பாது வீசி,
வரிசைக்கு வருந்தும் இப்பரிசில் வாழ்க்கை,
பிறர்க்குத் தீது அறிந்தன்றோ இன்றே; திறப்பட
நண்ணார் நாண அண்ணாந்து ஏகி
ஆங்கினிது ஒழுகின் அல்லது ஓங்குபுகழ்
மண்ணாள் செல்வம் எய்திய
நும்மோர் அன்ன செம்மலும் உடைத்தே".

- புறம் : 47.

இச்செய்யுளுக்கு இணைத்திருக்கும் கொளு இவ்வாறு கூறுகிறது :- "சோழன் நலங்கிள்ளியுழை நின்று, உறையூர் புகுந்த இளந்தத்தன் என்னும் புலவனைக் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி ஒற்றுவந்தான் என்று கொல்லப் புக்குழிக், கோவூர் கிழார் பாடி உய்யக் கொண்டது." ஒற்று வந்த நிகழ்ச்சியை மறைமுகமாகவாவது குறிப்பிட, மூலத்தில் எதுவும் இல்லை என்ற தடை ஒருபுறம் இருக்கக் கோவூர் கிழார், நெடுங்கிள்ளியின் பகைவர்கள்பால், அதாவது நலங்கிள்ளி, கிள்ளிவளவன்கள்பால் மிக்க செல்வாக்குடையவராவர். ஆகவே, அவருக்கு, நெடுங்கிள்ளிபால் எவ்விதச் செல்வாக்கும் இருந்திருக்க முடியாது என்ற மேலும் ஒரு தடையும் உளது.

புறநானூறு 173 ஆம் எண் பாட்டின் கொளு, "சிறுகுடி கிழான் பண்ணனைச் சோழன், குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் பாடியது" என்கிறது. பாட்டு கூறுவது இது :- "என் வாழ்நாளையும், தன் வாழ் நாளோடு கொண்டு பண்ணன் நெடிது வாழ்வானாக ! பாணர்காள் ! இப்பரிசிலனது சுற்றத்தின் வறுமைக் கொடுமையைக் காணுங்கள். புதிது புதிதாகப் பழங்களை ஈன்றிருக்கும் மரத்தின்கண், பறவைக் கூட்டம் எழுப்பும் பேரொலிபோலப் பண்ணன் அட்டிற் சாலையில் உணவு உண்பார் எழுப்பும் பேரொலியும், கேட்கத்தான் செய்கிறது. காலம் தப்பா மழை பெய்யும் காலத்தை எதிர்பார்த்திருந்து, தம்முட்டைகளைக் கவ்வி யவாறே மேட்டு நிலம் நோக்கி வரிசை வரிசையாகச் செல்லும் எறும்புக் கூட்டம்போலப் பண்ணன் அட்டிற் சாலையில் பெற்ற சோறு நிறைந்த தட்டேந்திய கையினராய், இளம் சிறார்கள், தங்கள் உறவினரோடு வரிசை வரிசையாகச் செல்வதையும் பார்க்கத்தான் செய்கிறோம். அதனால் பண்ணன் இல்லம் அணித்தாகிவிட்டது என்பதையும் அறிந்துள்ளோம். இருந்தும், பசிக் கொடுமையால், மனம் விதுப்புற, எதிர்ப்படுவாரையெல்லாம் அணுகி, பசி தீர்க்கும் மருந்துவனாம் பண்ணன் இல்லம், அண்மையில் உள்ளதா? இன்னமும் சேய்மைக்கண் உள்ளதா சொல்லுங்கள், சொல்லுங்கள்" எனக் கேட்கலாயினோம்."

"யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய!
பாணர்! காண்கு, இவன் கடும்பினது இடும்பை;
யாணர்ப் பழுமரம் புள் இமிழ்ந்தன்ன
ஊண் ஒலி அரவம் தானும் கேட்டும்;
போய்யா எழலி பெய்விடம் நோக்கி
முட்டைகொண்டு வன்புலம் சேரும்
சிறுநுண் எறும்பின் சில்ஒழுக்கு ஏய்ப்பச்
சோறுடைக் கையர், வீறு வீறு இயங்கும்
இருங்கிளைச் சிறாஅர்க் காண்கும்; கண்டும்
மற்றும் மற்றும் வினவுதும்; தெற்றெனட்

பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே".

- புறம் : 173.

பசிக்கொடுமையால் வருந்தி, அப்பசி தீர்க்கும் புரவலனைத் தேடி அலையும் ஓர் இரவலன் பாடியதாக அல்லாமல், வேறு வகையில் இப்பாட்டை மதிப்பது இயலவே இயலாது. ஆனால், புறநானூற்றுத் தொகுப்பாசிரியரால், அது, நாடாளும் ஓர் அரசனுக்கு உரியதாக ஆக்கப்பட்டுளது. இத்தொகை நூலில், இவைபோலும் பல கொளுக்களை, எளிதில் கண்டு கொள்ளலாம். ஆகவே, பாக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கொளுக்கள் எல்லாம் நம்புதற் குரியனவாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா எனக் கருதுகின்றேன்.

எனினும், இதற்கு நேர்மாறாகப் பெரும்பாலான புலவர்கள், கொளுக்களில் கூறப்பட்டிருக்கும் செய்திகளை வேதவாக் கியங்களாக மதித்து, பாடிய புலவர்கள், பாட்டுடை அரசர் களின் சமகால நிகழ்ச்சிகளுக்கான திட்டங்களை வகுத்து விட்டனர்; அவற்றில் குறிப்பிடப்பட்டிருக்கும் அரசர்களின் குடிவழிப் பட்டியல்களையும், அக்கால அரசியல் வரலாறு களையும் வகுக்கும் முயற்சியினையும் மேற்கொண்டு விட்டனர். ஆனால், அத்தகைய திட்டங்களுள் எந்த ஒரு திட்டமும், பிறிதொரு திட்டத்தோடு ஒத்துப் போகவில்லை. திருவாளர் கனகசபை அவர்களாலும், பிறராலும், இக்கொளுக்களிலிருந்து பெற்ற செய்திகளி லிருந்து, உருவாக்கப்பட்ட, ஒன்றொடொன்று முரண்படும் ஒன்பது குடிவழிப் பட்டியல்கள், எந்த நிலையிலும் ஏற்றுக் கொள்ளக் கூடியவாகக் கொள்ளப்படா. இவை அனைத் திற்கும் மேலாக, முடிந்த முடிபாக, அவ்வாறு கொள்வதற்குக் காரணம், அத்தகைய புனர் அமைப்பின் விளைவாக, அரசர்கள், புலவர்களின், இருக்க முடியாத மிக நீண்ட பட்டி யல், ஒரு குறுகிய கால கட்டத்துக்குள், அதற்கு முன்னரும் பின்னரும் இருளடைந்து கிடக்கத் திணிக்கப்படுகிறது.

மேலும், இக்கொளுக்கள் அளிக்கும் சான்று, இன்றைய இத்திறனாய்வாளர்களை, அப்பாக்கள்தாம் தம்மளவில் அளிக்கும் அகச்சான்றுகளுக்கு மாறாகப் பழந்தமிழ் இலக்கியத்தில், அழிந்ததுபோக எஞ்சியிருக்கும், பல்வேறு நூற்றாண்டிற்கு உரியவாக, அல்லது அரை நூற்றாண்டிற்கு உரியவாக, ஒதுக்கச் செய்துவிடுகிறது. இது, தமிழ் இலக்கியம், விரிவாக்க விதிமுறைகளுக்கு மாறாக, முன் வரலாறு ஏதும் இல்லாமலே, ஒரு காலகட்டத்தில், திடுமெனப் பேரொளிப் பிழம்பாக ஒளிவிட்டுப் பெருகி, அடுத்துத் தமிழ்ப்பாக்கள், பல நூற்றாண்டுகளுக்கு ஊமையாகி வாயடைத்துப் போகச் செய்துவிடுகிறது. ஆதலால், இது, வரலாற்றை முட்டாள் நிலைக்கு இறக்கி விடுகிறது. மற்றவர்களோடு நானும் சேர்ந்து கொண்டு, இக்கொளுக் களிலிருந்து, நம்புதற்குரிய வரலாற்றினைத் துருவிக் காணும் முயற்சியில் பல ஆண்டுகளை வினாக்கிவிட்ட பின்னர், அவை, மெய்ம்மை, பொய்ம்மைகளின், மரபுவழிச் செய்திகள், கற்பனை யூகங்களின், சிக்கறுத்துக் காணலாகாக் கருத்துக் குழப்பம்; ஆகவே, அரசர்களின் குடிவழிப்பட்டியலை வகுப்பது பயனற்றவை என்ற முடிவிற்கு வந்தேன். முடிந்தவரை, இப்பாக்களிலிருந்து, சில அரசர்களின் வாழ்க்கை பற்றிய ஒருசில குறிப்புகளைக் கண்டு கொள்ளலாம்.

நலங்கிள்ளி :

கரிகாலன் இறப்பிற்குப் பின்னர், அவன் கண்ட பேரரசு, சிறுசிறு நாடுகளாகப் பிளவுண்டு போயின. ரேனாடு, தங்களைச் "சோடர்" (டகரம், தமிழ் ழகரத்திற்கு ஈடான தெலுங்கு எழுத்து ஆதலின்) என அழைத்துக் கொள்ளும் தெலுங்குச் சிற்றரசர்களால் ஆளப்படலாயிற்று. அவர்கள் ஆட்சிக் காலத்தில், தெலுங்கு, கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்பட்டு, மெல்ல மெல்ல எழுத்துருவ மொழி யாகிவிட்டது; சில நூற்றாண்டுகளில், அது இலக்கிய மொழியாகவும் ஆகிவிட்டது. சோழர் அரியணையில், பெரும்பாலும், கரிகாலனை அடுத்து அமர்ந்தோனாகிய நலங்கிள்ளி (இதற்கான அகச்சான்று இல்லை ஆயினும்), சேர,

பாண்டியர்களிலும், தான் உயர்ந்தவனாம் என்ற நிலையினை நிலைநாட்டுவதற்காக, அவர்களோடு அடிக்கடிப் போர் மேற்கொள்ள வேண்டி நேர்ந்ததற்கேற்ப, அவ்விரு அரசுகளும், தங்கள் ஆட்சியுரிமையை மீண்டும் பெற்று விட்டன. புலவர் கோவூர் கிழார் இவ்வாறு கூறுகிறார் :- "மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதனவற்றுள், பொருளும், இன்பமும், அறத்தைப் பின் தொடர்ந்து வருவதுபோல."

அடிக்குறிப்பு :

[இத்தொடர், ஆரியக் கருத்துகள், தமிழ்நாட்டில், நன்கு இடம்பெறத் தொடங்கிவிட்டன என்பதை உணர்த்துகிறது. வாழ்க்கையின் குறிக்கோள் பற்றிய ஆரியக் கருத்துகளை உள்ளடக்கிய, உருவப் பொருள்களை, அருவப் பொருட்களோடு ஒப்பு காட்டும், இவைபோலும் உவமைகள், கரிகாலனுக்கு முற்பட்ட காலத்துத் தமிழ் இலக்கியங்களில் காண்பது இயலாது.]

சேர பாண்டியர்களுடைய இரு குடைகளும் பின்னாக, முன்னே உயர்த்திய உன் வெண் கொற்றக் குடை, கலைகளால் நிறைந்த வெண்திங்கள் போலச் சிறந்து, சேய் நாடுகளிலும் சென்று நிழல் செய்யவல்ல பெரும்புகழ்பால் வேட்கை கொண்டு, அதை முடித்துக் கொள்வான் வேண்டி, எப்போதும், வெல்லும் போர்க்கு வாய்ப்பாகப் பாசறைக் கண்ணே இருப்பதல்லது, தலைநகரின் கண் இருத்தலை நீ விரும்பாய். காவல் மிக்க பகைவர் அரண்மதில்களை மோதி மோதி அழித்ததனால், முனை மழுங்கிய கொம்புகளை உடையவாகிவிட்ட உன் போர்க்களிறுகளும் ஓய்வு கொள்ளா. போர் என்ற சொல் கேட்டதுமே பூரிக்கும் உள்ளம் உடையவராகிய, வீரக்கழல் அணிந்த உன் வீரர்கள், வென்று கைப்பற்றக் கருதிய நாடு, காடுகள் இடைப்பட்டுக் கிடக்க, நெடுந்தொலைவில் உளதே, எவ்வாறு செல்வேம் எனக் கலங்குவது செய்யார்; இத்தகு படைநலம் உடைமையால், பகைப்புலம் தோறும் வெற்றித் திருவிழா மேற்கொண்டு

சிறிதே இருந்துவிட்டுக் கீழ்க்கடல் பின்னிட்டுப் போக, உன் படையைச் சேர்ந்த குதிரைகளின், குளம்புகளை வெண்ணுரை தெறிக்க வீசும் மேற்குக் கடலின் அலைகள், அலைப்புறும் வண்ணம், நீ வெற்றித்திருவுலா மேற்கொள்வதும் செய்குவையே என்ற நினைவு அலைகள் அலைக்க, நெஞ்சு நடுநடுங்கக் கண்ணுறக்கம் பெறமாட்டாது கிடப்பர், வடபுலத்து அரசர்களெல்லாம்".

"சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல,
இருகுடை பின்பட ஓங்கிய ஒருகுடை,
உருகெழு மதியின் நிவந்து சேண்விளங்க,
நல்லிசை வேட்டம் வேண்டி, வெல்போர்ப்,
பாசறை அல்லது நீ ஒல்லாயே;
நுதிமுகம் மழுங்க மண்டிட ஒன்னார்
கடிமதில் பாயும் நின் கவிறு அடங்கலவே;
போர் எனில் புகலும் புனைகழல் மறவர்
காடிடைக் கிடந்த ; நாடு நனிசேய,
செல்வேமல்லேம் என்னார் ; கல்லென்
விழவுடை ஆங்கண், வேற்றுப் புலத்து இறுத்துக்
குணகடல் பின்னதாகக், குடகடல்
வெண்தலைப் புணரி நின்மான் குளம்பு அலைப்ப,
வலமுறை வருதலும் உண்டு என்று அலமந்து
நெஞ்சு நடுங்கு அவலம் பாயத்
துஞ்சாக் கண்ண வட புலத்து அரசே".

- புறம் : 31.

இவ்வரிகளைப் படிப்பதில், நலங்கிள்ளி, தன் அரியணையை இழக்காமல் காத்துக் கொள்ளுதற்கு இடைவிடாது போரிட நேர்ந்தது என்பது பொருளாகிறது. இம்முடிவு சோழ நாட்டில் உள்நாட்டுப் போர் குறித்துப் பேசும் பிற பாக்களால்

உறுதி செய்யப்படுகிறது. நெடுங்கிள்ளி என்பான் ஒருவன், இவனால், உறையூரில் முற்றுகை இடப்பட்டுள்ளான். (புறம் : 45 முன்பே எடுத்தாளப்பட்டுளது). நலங்கிள்ளியின் தலைநகர் காவிரிப்பூம்பட்டினம்.

அடிக்குறிப்பு :

"கூம்பொடு
மீப்பாய்களையாது மிசைப்பரம் தோண்டாது
புகாஅர்ப் புகுந்த பெரும்கலம், தகாஅர்
இடைப்புலப் பெருவழி சொரியும்
கடல் பஃல் தாரத்த நாடுகிழவோயே".

- புறம் : 30 : 10 - 14.

கொளுவின் கூற்றுப்படி, இது நலங்கிள்ளி புகழ்பாடப் பாடப்பட்டுளது. கொளுவில் கூறப்படும் செய்திகள் மறுக்கப்படா நிலையில், அவற்றை ஏற்றுக் கொண்டுள்ளேன். நெடுங்கிள்ளி, உறையூர் அரியணையைக் கைப்பற்றிச் சோழ நாட்டின் உள்நாட்டுப் பகுதிகளைத் தன் ஆட்சிக் கீழ்க் கொண்டுவிட்டான். அதை மீட்டுக் கொள்ள நலங்கிள்ளி அவனோடு போரிட்டான்.

பிற அரசர்களைப் புகழ்ந்து பாடும் பாக்களிலும், நலங்கிள்ளியைப் புகழும் பாடல்கள், எண்ணிக்கையில் அதிகமாம்.

நலங்கிள்ளி வாழ்ந்திருந்த துன்பச் சூழல், இரவலர் உள்ளத்தில், பெருங்கவலையை வளர்ப்பதாய் இருந்தது. அத்தகைய புலவர்களில் ஒருவர் பாடிய பாட்டு ஒன்றில், பழம்பாடல்களில் காணக்கூடாத நிலையினைத் தெளிவுறக் கொண்டதான, நிலையாமைக்குறிப்பு, தமிழ்ப் பாட்டில் முதன்முதலாக, இடம் பெற்றுளது. உறையூர் முது கண்ணனார், அவனுக்காக, இவ்வாறு பாடியுள்ளார். "சேற்றில் வளரும் தாமரைக் கொடியில் மலர்ந்த, சிறந்த நிறம் காட்டும் நூறு இதழ்களைக் கொண்ட மலர்க்காட்டைக்

கண்டாற்போலும், ஏற்றத் தாழ்வில்லாச் சிறந்த குடியில் பிறந்து பெருக வாழ்ந்திருக்கும் வேந்தர் பலரே ஆயினும், அவர்களின் பண்பு நலங்களை எண்ணிப் பார்க்குங்கால் பாக்களாலும், பாநிகர் உரைகளாலும் பாராட்டப் பெற்றவர், ஒருசிலரே ஆவர் ; அத்தாமரையின் இலைகளைப் போல, எதற்கும் பயன்படாது, மாய்ந்து மறைந்துபோனவரே மிகப் பலராவர்; புலவரால் பாராட்டப்பெறும் புகழ் உடையார், பாகனால் செலுத்தப்படாது, தானே இயங்கவல்ல வானவூர்தி ஏறி வானுறையும் தெய்வமாகிவிடுவர் எனக் கூறக் கேட்டுளேன் யான். சேட்சென்னி! நலங்கிள்ளி ! எம் இறைவா! வளர்ந்த ஒன்று, பின் குறைந்துபோதலும், குறைந்த ஒன்று பின் வளர்ந்து நிற்றலும், பிறந்த ஒன்று பின் இறந்துபோதலும், இறந்த ஒன்று, பின் பிறந்து உளவாதலும் உலகியல் என்பதைக், கற்றுணராக் கல்லாதார்க்கும், கண்ணெதிரில் காட்டித் தெளிவிப்பான் வேண்டித், தேய்வதும் வளர்வதுமாகித், திங்கள் உலாவரும் இவ்வுலகில், நின்பால் பரிசில் வேண்டி வருவாரின் பரிசில் பெறும் தகுதி, தகுதியின்மைகளை ஆராய்வது விடுத்து, வறுமைக் கொடுமையால், உண்ணுவது ஒழிந்து வாடிக் கிடக்கும் அவர் வயிற்றினை மட்டுமே பார்த்து, அவர்க்கு வாரி வழங்கும் வள்ளண்மை உடையை ஆகுக ! நீ ! அழிக்கலாகா ஆற்றல் வாய்ந்த உன்னொடு, பகைகொண்டு கிடப்பார், அத்தகு அருள் உள்ளம் இன்மையால், வருவார்க்கு வழங்கமாட்டா வன்கணாளர் ஆகுக".

"சேற்று வளர் தாமரை பயந்த, ஒண்கேழ்
நூற்றிதழ் அலரின் நிரை கண்டன்ன,
வேற்றுமை இல்லா விழுத்திணைப் பிறந்து
வீற்றிருந்தோரை எண்ணுங்காலை
உரையும் பாட்டும் உடையோர் சிலரே,
மரைஇலை போல மாய்ந்திசினோர் பலரே;
புலவர் பாடும் புகழ் உடையோர், விசும்பின்
வலவன் ஏவா வான ஊர்தி

எய்துப என்ப, தம் செய்வினை முடித்து' எனக்
கேட்பல் ; எந்தை ! சேட்சென்னி ! நலங்கிள்ளி !
தேய்தல் உண்மையும், பெருகல் உண்மையும்,
மாய்தல் உண்மையும், பிறத்தல் உண்மையும்,
அறியாதோரையும் அறியக் காட்டித்
திங்கட் புத்தேள் திரிதரும் உலகத்து,
வல்லார் ஆயினும், வல்லுநர் ஆயினும்
வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி
அருளவல்லை ஆகுமதி ! அருளிலர்,
கொடாமை வல்லுநர் ஆகுக !
கெடாத துப்பின் நின் பகை எதிர்ந்தோரே."

- புறம் : 27.

குளமுற்றத்துத் துஞ்சிய சோழன் :

கிள்ளிவளவன் என்ற பெயருடைய மற்றொரு சோழன், சோழச் சிற்றரசர்கள் எனும் பொருளுடையவாய கிள்ளி, மற்றும் வளவன் என்ற பெயர்களால் அழைக்கப் படுவார்களைக் காட்டிலும், மிகுதியான பாக்களாலும், மிகுதியான புலவர்களாலும் பாராட்டப் பெற்றுள்ளான். இவன், இறப்பிற்குப் பின்னர்க் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் என்ற சிறப்புப் பெயரிட்டு அழைக்கப்பட்டுள்ளான். புறநானூற்றுக் கொளுக்களின்படி, இவன், தன்பெருமை குறித்துப் பாக்கள் புனைந்த பத்துப் புலவர்களைப் புரந்தவனாவன். இவன் புலவர்களைப் பேணும் பெருஞ் செயலையே புலவர்களும் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளனர். சேரர் தலைநகராம் வஞ்சியை முற்றியிருந்த இவன் செயல், இரு பாக்களில் பாடப்பெற்றுளது ஆதலின், ஒரு சேர அரசனோடு, இவன் பகைகொண்டிருந்தான் எனத் தெரிகிறது. "பகைவரை அழிப்பை ஆயினும், அழிக்காது பிழைத்துப் போக விடுவையாயினும், அதனால் உனக்கு வரும் பயனை, நான் சொல்லத் தேவையில்லை; அதை நீயே, அளந்து அறிந்து கொள்வை; உள்ளிடுபரல்கள், மிகவும் செறிக்கப்பட்ட

காற்சிலம்பினையும், நீண்ட கோல்தொழில் அமைய செய்யப்பட்ட, குறுகிய கைவளைகளையும் உடைய இளம் மகளிர், மணல் மேட்டில் அமர்ந்து, பொன்னால் செய்யப் பட்ட காய்களைக் கொண்டு கழங்காடி மகிழும் அத்துணை அணித்தாக ஓடும் ஆன்பொருநை ஆற்றின் வெண்மணல் சிதறுமாறு, உரம் வாய்ந்த கரங்களையுடைய கொல்லன், வடித்து, அரந்கொண்டு கூர்மைசெய்து கொடுத்த, நெடிய காம்பு செருகப்பட்ட கோடாலி வெட்டுதலால், மணல் நாறும் மலர்க் கொத்துக்களைக் கொண்ட காவற்காட்டு மரங்கள், அடியற்று விழ, வெட்டும் ஓசை, தன்னுடைய பேரூர் வீதிகளிலும், நெடிய மதில் சூழ்ந்த காவல் மிக்க தன் அரண்மனையகத்தும் சென்று ஒலிக்கவும், அது கேட்டும், வந்து எதிர்க்கும் எண்ணம் இல்லாமல், இனிதே இருக்கும் அந்த அரசனோடு, வானவில் போலும் வண்ணமலர்மாலை அணிந்து கொண்டு, போர் முரசு முழங்கப் போரிடுகின்றனை என்பது நினக்குப் புகழினைத் தாராது, நாணித்தலை குனியத்தக்கது நின் செயல் ; ஆகவே, அது கைவிடுக".

"அடுநை ஆயினும், விடுநை ஆயினும்,
நீ அளந்து அறிதி; நின் புரைமை ; வார்கோல்,
செறிஅரிச்சிலம்பின், குறுந்தொடி மகளிர்
பொலஞ்செய் கழங்கின் தெற்றி ஆடும்
தண் ஆன்பொருநை வெண்மணல் சிதையக்,
கருங்கைக் கொல்லன் அரம் செய் அவ்வாய்
நெடுங்கை நவியம் பாய்தலின் நிலை அழிந்து
வீகமழ் நெடுஞ்சினை புலம்பக், காவு தொறும்
அடிமரம் தடியும் ஓசை, தன் ஊர்
நெடுமதில் வரைப்பின் கடிமனை இயம்ப,
ஆங்கு இனிது இருந்த வேந்தனொடு, ஈங்கு, நின்
சிலைத்தார், முரசம் கறங்க
மலைத்தனை என்பது நாணுத்தகவு உடைத்தே"

- புறம் : 36.

மாறோக்கத்து நப்பசலையார் (கொற்கையை அடுத்த சிற்றூராம் மாறோக்கத்தைச் சேர்ந்த, பசலை படர்ந்த நெற்றியினளான ஒரு பெண்) என்ற பெண்பாற்புலவர், கிள்ளிவளவனுக்கும், அவன் காலச் சேர அரசனுக்கும் இடையில் நிலவும் அதே பகைமை குறித்து, இவ்வாறு பாடியுள்ளார். "தன்பால் அடைக்கலம் புகுந்த ஒரு புறாவின் துயரைத் தீப்பான் வேண்டிப் பகைவிலங்குகளை அழித்துக் கறைபடிந்த கால்களையுடைய யானையின் வெள்ளிய தந்தத்தைக் கடைந்து செய்த நிறைகோல் துலாத்துத் துலைத்தட்டில் அமர்ந்து தன்னையே தந்த சோழன் மரபில் வந்தவன் நீ; ஆதலின் வறியோர்க்கு வழங்குதல் உனக்கு இயல்பாய் அமைந்த ஒன்றேயல்லது, உனக்கே உரிய தனிச்சிறப்பு உடையதன்று; அசுரர்க்குப் பகைவராகிய தேவர்களால் அணுகவும் மாட்டாத் திண்ணிதாய் வானத்தில் உலாவந்திருத்த கோட்டையை அழித்து ஒழித்த உன் முன்னோன் ஒருவனின் புகழ்ப் பெருமையை நோக்கின், ஈண்டுள்ள பகைவரை அழித்தல், புகழ் சேர்ப்பதாகாது. அழிக்கலாகா மறம் செறிந்த சோழர் தலைநகராம் உறையூரில் உள்ள அறங்கூர் அவையில், அறம், என்றும் நின்று நிலைபெறுமாதலின், முறைகோடாது ஆட்சி புரிதலும் உனக்குப் புகழ் தருவதாகாது. ஆகவே, வீரம் செறிந்த பல போர்க்களங்களில் வெற்றி கண்டு, கணைய மரம் எனத் திரண்ட தோள்களையும், அழகிய தலைமாலையினையும் போர்ச் செருக்கு மிக்க குதிரையினையும் உடைய வளவ! அளந்து காணலாகா உயரமும் பொன்வளமும் பொருந்திய, நெடிய முடிகளைக் கொண்ட இமயத்து உச்சியில், நாட்டப்பட்ட விற்கொடியினையும், பல்லாற்றானும் மாண்புற்ற தேரினையும் உடைய சேரன் அழிந்துபோக, அழிதல் அறியா அவன் தலைநகராம் கருவூரை அழிக்கும், உன் பெருமைமிகு வீரத்தாள்களை எவ்வாறு பாடவல்லேன்!"

"புறவின் அல்லல் சொல்லிய, கறையடி,
யானை வான் மருப்பு எறிந்த வெண்கடைக்
கோல் நிறைதுலாஅம் புக்கோன் மருக!

ஈதல், நின் புகழும் அன்றே; சார்தல்
ஒன்னார் உட்கும் துன்னரும் கடுந்திறல்
தூங்கெயில் எறிந்த நின் ஊங்கணோர் நினைப்பின்,
அடுதல், நின் புகழும் அன்றே; கெடுவின்று
மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து
அறம் நின்று நிலையிற்று ஆகலின், அதனால்,
முறைமை நின் புகழும் அன்றே; மறம்மிக்கு
எழுசமம் கடந்த எழுவு ஊறழ் திணி தோள்
கண்ணார் கண்ணிக், கலிமான் வளவ !
யாங்கனம் மொழிகோ! யானே, ஓங்கிய
வரை அளந்தறியாப் பொன்படு நெடுங்கோட்டு
இமயம் சூட்டிய எம விற்பொறி,
மாண்வினை நெடுந்தேர் வானவன் தொலைய
வாடா வஞ்சி வாட்டும் நின்
பீடுகெழு நோன்தாள் பாடுங்காலே?" -புறம் : 39

அடிக்குறிப்பு :

("வஞ்சி" என்ற சொல், நகர் ஒன்றின் பெயராகவும், மலர் ஒன்றின் பெயராகவும் வழங்கப்படும் ஆதலின், மலர் வாட, நகர் வாடாது ஆதலின், நகரைக் குறிக்க "வாடாவஞ்சி" எனக் குறிப்பிடப்பட்டுளது. இத்தகு சிலேடைச் சொல்லாட்சி, பழந்தமிழ்ப் பாக்களில் பலவாம்)

கரிகாலன் இளையோனாக இருந்தும், தீர்த்தற்கரிய ஒரு வழக்கை, நன்கு தீர்த்துவைத்த அந்நாள் தொட்டே, உறையூர், அறங்கூர் அவையால் நாடறியப் புகழ்பெற்றுத் திகழ்ந்தது. (அதிகாரம் 20 : "கரிகாலன் இளமை" என்ற தலைப்பு காண்க) அதுபோலவே மதுரை, தமிழ்க் கல்வியால் சிறப்புற்றுத் திகழ்ந்தது. புறம் : 58, அறம் நின்று நிலைபெறும் உறையூரையும் "அறந்துஞ்சு உறந்தை" (வரி : 9) தமிழுக்கு உரியு மதுரையையும், "தமிழ்கெழு கூடல்" (வரி : 13) குறிப்பிடுகிறது.

கடைசியாக எடுத்துக் காட்டிய செய்யுற்கண், சோழர் முன்னோர் குறித்த இருபழங்கதைகள், முதன்முதலாக இடம் பெற்றிருப்பது காணப்படுகிறது. அவற்றுள் ஒரு பழங்கதை, அசுரர், சிலர் வானத்தில் தொங்கிக்கொண்டிருந்த கோட்டையில் வாழ்ந்திருந்தவாறே தேவர்களை அழித்து வந்தனர். பழைய சோழ அரசன் ஒருவன், அக்கோட்டையை அழித்து அதன் மூலம், ஏழைத் தேவர்களின் துயர் துடைத்தான் என்பது. சோழர்களைப் பற்றிய இக்கதை மட்டும் அல்லாமல், பாண்டியர்களைப் பற்றிய இதுபோலும் கதைகளும், அக்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுத் தமிழர் உள்ளத்தை ஆரியமயமாக்கத் துணைபுரிந்தன. மற்றொரு பழங்கதை, சோழர் குல முன்னோர்களில் ஒருவன் சிபி என்பவனாம். புறா ஒன்று, தன்னைக் காப்பாற்றுமாறு வேண்டிக் கொண்டதனால், தன் தொடையிலிருந்து, ஒரு துண்டு தசையை வெட்டி எடுத்துப் புறாவைத் துரத்தி வந்த பருந்துக்குக் கொடுத்த சிபியின் கதை நன்கு தெரிந்த ஒன்று, சிபி வழி மரபினைச் சோழ அரசர்க்கு உரித்தாக்குதல், புறம் : 37-இல், நப்பசலையாராலும், புறம் : 46-இல் கோவூர் கிழாராலும், இடம் பெற்றுளது.

"புள்ளுறு புன்கண் தீர்த்த வெள்வேல்
சினங்கெழு தானைச் செம்பியன் மருக !"

(பறவை ஒன்றின் துயர் தீர்த்த, வெள்ளிய வேல் ஏந்திய, சினம் மிக்க பெரும்படைக்கு உரிய, சோழன் வழியில் வந்தவனே - புறம் : 37 ; 5-6.)

"நீயே, புறவின் அல்லல் அன்றியும், பிறவும்
இடுக்கண் பலவும் வீடுத்தோன் மருகனை"
புறாவின் துயர் தீர்த்தோன் வழியில் வந்தவனே!"

(பெரும்பாணாற்றுப்படையில், அப்பாட்டுடைத் தலைவனான சோழன், விஷ்ணுவின் வழிவந்தவனாகவே அழைக்கப்பட்டுள்ளான் என்பது நினைவு கூரற்கு உரியது. அதிகாரம் : 21 காண்க)

நலங்கிள்ளி எனக்கூறப்படும், சிறந்த தேர் வீரனாகிய திருவில் தேர் வண்கிள்ளி என்பானின் தம்பியை நோக்கிக் கூறுவதான புறம் : 43 லும் இது கூறப்பட்டுளது.

"கொடுஞ்சிறைக்
கூருகிர்ப் பருந்தின் ஏறுகுறித்து ஓரீஇத்
தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
தபுதி அஞ்சிக், சீரை புக்க
வரையா ஈகை உரவோன் மருக!"

- புறம் : 43 : 4-8.

(வளைந்த சிறகுகளையும், கூரிய உகிரினையும் உடைய பருந்தின் தாக்குதலுக்குத் தப்பித் தன்னிடம் அடைக்கலம் புகுந்த, தத்தித் தத்தி நடக்கும் புறாவின் அழிவிற்கு அஞ்சித் தன் அழவிற்கு அஞ்சாது, துலாத் தட்டில் புகுந்த, வரையாது வழங்கும் வள்ளலாம் வண்மையோன் வழியில் வந்தவனே!)

பிற்காலத்தில், சோழர்கள், சூரிய மரபிற்கு உரியவராகக் கூறப்பட்டுள்ளனர். இதற்கான குறிப்பு எதையும், புற நானூற்றில் என்னால் காண இயலவில்லை. ஆனால், அவர்கள் சிபியின் மரபில் வந்தவர்களாயின், அவர்கள், திங்கள் மரபில் வந்தவராதல் வேண்டும்; காரணம், உஷிநரனின் மகனான சிபி, திங்கள் மரபைச் சேர்ந்த யாயாதியின் குடிவழியில்ன வந்தவனாதலின், மிக்க பாராட்டினுக்குரிய இராமாயண காப்பியத்தை இயற்றிய கம்பரும், இம்முரண்பாட்டினை உணர்ந்ததாகத் தெரிய வில்லை; காரணம், சிபியை, சூரிய மரபினனான ராமனின் முன்னோனாகத் துணிந்து கொண்டுள்ளார். பத்ம புராணம், இம்மூன்று தமிழரசர் குலங்களையும் சூரிய வம்சத்துத் துர்வாசு வழியில் வந்தவராகக் கொள்கிறது. (Padma Puranam VI 250 : 1-2. referred to by Pargiter. Anc. Ind. History Trad. Page : 108). தமிழர்களுக்கு, ஆரியத் தகுதிப் பாட்டினைக் கற்பித்துக் கொண்டவர்கள், புராணங்கள் பற்றித் தெளிவான அறிவிற்கு மாறாகக் குறைந்த அறிவினையே பெற்றுள்ளனர், பெண்பாற்புலவர், சிபியைச் சோழர்குலச் சிற்றரசன் எனத் துணிந்து கொண்டுள்ளார்.

கரிகாலன், எத்துணைப் பாவலர்ப் பெரும்புரவலனோ அத்துணைப் பெரும் புலவனாகக் காணப்படுகிறான் கிள்ளிவளவன். அவன் புகழ்பாடிய புலவர், "தேன்போலும் இனிய ஒலி எழுப்பும் நரம்பு தொகுக்கப் பெற்ற சிறிய யாழுக்கு உரியபாண ! குளத்து வாழ் யாமையைப் பற்றுக் கோலில் கோத்து எடுத்தாற்போல, நுண்ணிய கோலில் பிணிக்கப்பட்ட, தெளிந்த ஓசை எழுப்பும் கண்ணுடைய, பெரிய உடுக்கையின் ஓசை இனிதாக எழுவது காண்க; இவ்விடத்தே சிறிது இளைப்பாறிச் செல்வேமாக என்றெல்லாம் பலப்பல கூறிக் கேள்விமேல் கேள்விமேல் கேள்வியாகக் கேட்டு நிற்கும், மூத்த, வாய்மையில் வழுவால் இரவலனே! நான் கூறுவது கேட்பாயாக! தைத்திங்களித தண்ணெனைக் குளிர்ந்திருக்கும் குளத்து நீர் போலக் கொள்ளக் கொள்ளக் குறைதல் அறியாத பெருஞ்சோற்று மலைய யுடைய பெரியநகரத்தில், சோறு ஆக்கும் நெருப்பல்லது, பகைவர் மூட்டிய நெருப்பினைக் காண்பது இயலாவாறு சோற்றையும், உண்ணீரையும் விளைவிக்கும் அத்தகு நாட்டின் வேந்தனாம் கிள்ளிவளவன் நல்ல புகழை நினைந்து செல்வீராக!"

"தேஎம் தீந்தொடைச் சீறியாழ்ப் பாண!
கயத்துவாழ் யாமை காழ்கோத்தன்ன,
நுண்கோல் தகைத்த தெண்கண் மாக்கினை,
இனிய காண்கு இவண் தணிகெனக் கூறி
வினவல் ஆனா முதுவாய் இரவல!
தைஇத் திங்கள் தண்கயம் போலக்
கொளக் கொளக் குடைப்படாக் கூழுடை வியன் நகர்
அடு தீ அல்லது சுடுதீ அறியா
திருமருந்து விளைக்கும், நன்னாட்டுப் பொருநன்
கிள்ளி வளவன் நல்லிசை உள்ளி." -புறம் : 70 : 1-10

இப்பாட்டின் இறுதியில் ஆளப்பட்டிருக்கும் உவமை, சிறப்பினைக் குறிப்பிடத்தக்கது. என்னால் காண முடிந்த

அளவில் மாதங்களின் ஆரிய முறையிலான வரிசைப்பாடும், அவற்றின் சமஸ்கிருதப் பெயர்களும், தமிழர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான, மிகப் பழைய குறிப்பு, இதுதான். நற்றிணையில், பெரும்பாலும், இறைவழிபாட்டுக் கடனாகத் தைத்திங்களில், குளிர் நீர்க்குளத்தில் நீராடும் மகளிர் பற்றிய குறிப்பு ஒன்று உளது. ("தைஇத் திங்கள் தண்கயம் படியும்" - நற்றிணை : 80 : 7). குறுந்தொகை, தைத்திங்களின் குளிர் போலும், குளிர்ந்த சுனைநீர் பற்றிப் பேசுகிறது. ("சுனைத் தெண்ணீர், தைஇத் திங்கள் தண்ணிய" - குறுந்தொகை : 194 : 3-4). இது போலும், தொடர் இடம் பெறும் பாக்கள், கி. பி. ஐந்தாம் நூற்றாண்டை விடப் பழைய காலத்தைச் சேர்ந்தனவாகா. புறநானூற்றுத் தொகை நூலில், பெரும்பாலும் பிற்பட்ட பாக்களில் ஒன்று ஆன, சேரமான், யானைக்கண்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொரை என்பானைப் பாராட்டும் புறம் : 229, ஒரு விண் வீழ்கொள்ளி வீழும் அந்நாளன்று, ஞாயிறு திங்கள் போலும் கோள்களும், அசுவனி, பரணி போலும் விண்மீன்களும் இடங் கொண்டிருந்த நிலைகளைத் தெரிவிக்கிறது. அச்செய்தி, அவ்வுற்பாதம் எப்போது இடம் பெற்றது என்பதை நாம் கண்டு கொள்ள, நமக்குப் போதுமான வையோ, அத்துணைத் தெளிவுடையவையோ அல்ல. ஆனால், அந்த அரசன், நாம் ஆய்ந்து கொண்டிருக்கும் பிற்காலத்தைச் சேர்ந்தவருள் ஒருவன் என்பதைக் கொண்டு காணின், அது. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிற்கு முன்னர் ஆதல் இயலாது.

கிள்ளிவளவன் புகழ்பாடும் பாட்டு ஒன்றில், அரசர் களிடையேயான ஓர் அரிய வழக்கம் குறிப்பிடப்பட்டுளது. பழைய தமிழரசர்கள், பகைவர்களை வெற்றி கொண்டபோது அப்பகைவரிடம் கொள்ளும் ஏனைய பொருள்களோடு, அவர்களின் முடிகளையும் கைக்கொண்டு, பகைவர்களின் அம்முடிகளை அழித்துக் கொண்ட பசும் பொன்னால், வீரக்கழல் பண்ணித் தம் கால்களில் அணிந்து கொள்வர். அரசர்களின், வெற்றிப் பெருமிதத்திற்கும், பகைவர்களின் தோல்விப் பேரிழிவிற்கும், இதுவே தமிழர் இலக்கணமாம். புலவர் ஒருவர் இவ்வாறு பாடியுள்ளார். "பகைவர்

பாதுகாத்து வந்த, வீரம் செறிந்த அழிக்கலாகா அரண்களை அழிக்காது விடுத்துப் பேணிக்காப்பது செய்யாது, எதிர் சென்று அழித்து, அரணகத்தாரைக் கொன்று, அவர்தம் மகுடங்களை ஆக்க உதவிய பசும்பொன்னால், வீரக்கழல் செய்து, உன் கால்கள், பொலிவு பெறப் புனைந்து கொண்ட பேராண்மையாளன் நீ".

"நீயே, பிறர் ஓம்புறு மறமன் எயில்
ஓம்பாது, கடந்து, அட்டு, அவர்
முடிபுனைந்த பசும்பொன்னின்
அடிபொலிக் கழல் தைஇய
வல்லாளனை; வயவேந்தே!"

- புறம் : 40 ; 1-5.

சோழன், தன் பகைவனுக்குத் தோற்று வழங்கிய நாகட்தக நெறியல்லா நனிமிகக் கொடிய தண்டனை, அவன் அரணைத் தலைமட்டமாக அழித்ததும், தன் பகைவனாம் சேரனுக்கு உரிய தலைநகரை, நண்பகல் போதிலேயே தீயிட்டு அழித்தும் ஆம்.

"குட்டுவன்
அகப்பா அழிய நூறிச், செம்பியன்
பகல் தீ வேட்ட ஞாட்பு"

- நற்றிணை : 14 : 3-5.

பண்டை நாட்களில் இருந்ததுபோல், போர், ஒருவீர விளையாட்டாக, இல்லாமல், கொடிய காட்டுமிராண்டிச் செயலாகி விட்டது. பிற்காலத்தைச் சேர்ந்த மற்றொரு சேர அரசனாம், தொண்டித் தலைவன் இரும்பொறை என்பான், மூவன் என்பான் ஒருவனை வெற்றி கொண்டு அவனுடைய, முள்போல் கூரிய, வலிய பற்களைப் பிடுங்கி, அவற்றைத் தன் கோட்டை வாயிற் கதவில் பதித்து வைத்தான்.

"மூவன்
முழுவலி முள்ளெயிறு அழுத்திய கதவின்
கானலம் தொண்டிப் பொருநன்."

- நற்றிணை : 18 : 2-4.

அடிக்குறிப்பு :

கிள்ளி வளவன் புகழ்பாடிய புலவர்களுள், இருவர், நலங்கிள்ளியையும் பாடிய கோவூர்கிழாரும், ஆலத்தூர் கிழாருமாவர். 'கிழார்' என்பதன் பொருள், ஒன்றை உரிமையாகக் கொண்டவர், அல்லது ஒன்றிற்கு உரிமை உடையவர் என்பது பொருளாம். ஆகவே, புலவர்கள், ஆலத்தூர் கிழார் அல்லது கோவூர் கிழார் எனப் பெயரிடப் படக்காணின், அச்சொற்களை, முறையே, ஆலத்தூர்ப்புலவர் அல்லது கோவூர்ப் புலவர் என்பதாகப் பொருள் கொள்ளுதல் வேண்டும். இத்தொகை நூல்களில் இடம் பெற்றிருக்கும் பாக்களைப் பாடிய பல புலவர்கள், இயற்பெயர் உடையராகார்; ஊர்ப் பெயரினாலேயே பெயரிடப் பட்டுள்ளனர். ஆரியக்கடவுள் பெயர்களை மக்களுக்குச் சூட்டும் வழக்கம் நடைமுறைக்கு வந்த கி. பி. ஆறாம் நூற்றாண்டிற்கு முன்னர், இயற்பெயர்கள் அருகி இடம் பெற்றதாகவே தெரிகிறது. அக்காலத்திற்கு முன்னர் எப்பெயர் சூட்டப்பட்டிருந்தாலும், அவை, "இரும்பிடர்த் தலையார்" என்பது போலச் சிறப்பு குறித்து இடப்பட்ட பெயராகவும், 'மாங்குடி கிழார்' என்பது போல, ஊர்ப்பெயராகவும், 'இளநாகனார்' என்பது போலச் சிறப்பு அடை அடுத்த சாதிப் பெயராகவுமே இருக்கும். அரசர்கள் பெயர்களிலும் இதுவே நிலையாம். இன்றும், சிற்றூர்களில், மக்கள் இயற்பெயர் உடையராயினும், பழங்கால வழக்கமாம், சிறப்புப் பெயரிட்டு அழைக்கப் பெறுதல் பெருவழக்காம். ஆகவே, இவ்விரு சோழர்களும், ஒருவர்பின் ஒருவராகவோ, அல்லது, ஒரே காலத்தில் வேறு வேறு பகுதிகளில் ஆட்சிபுரிந்த நெருங்கிய உறவினராவர்; பெரும்பாலும், உடன் பிறந்தவராவர். ஆனால், அவர்கள் உறவு முறைகுறித்த எவ்விதக் குறிப்பும், பாக்களில் இடம் பெறவில்லை.

சிலப்பதிகாரம், சேரவேந்தன் செங்குட்டுவனின் மைத்துனனாகிய வளவன் கிள்ளி என்பான் ஒருவனைக் குறிப்பிட்டு, அவ்வளவன் கிள்ளியின் பகைவர்களாகிய சோழ

இளவரசர்கள் ஒன்பதின்மரைச் செங்குட்டுவன் ஒரே நாளில் வெற்றி கொண்டான் எனக் கூறுகிறது.

"ஆர்புனை தெரியல் ஒன்பது மன்னரை
நேரிவாயில் நிலச்செரு வென்று".

- சிலம்பு : 28 : 116 - 117.

(நேரிவாயில் போர்க்களத்தில், ஆத்திப்பூ மாலை அணிந்த ஒன்பது சோழ இளவரசர்களை வென்று).

"மைத்துனவளவன் கிள்ளியொடு பொருந்தா
ஒத்த பண்பினர் ஒன்பது மன்னர்,
இளவரசுபெறாஅர், ஏவல் கேளார்
வள நாடழிக்கும் பண்பினராதலின்
ஒன்பது குடையும் ஒருபகல் ஒழித்தவன்."

- சிலம்பு : 28 : 118 - 122.

"தன மைத்துனன் வளவன் கிள்ளியொடு ஒத்துவராத, அவன் பெற்ற இளவரசு உரிமையை ஏற்றுக் கொள்ளமறுத்த, அது காரணமாக, நாட்டுவளம் அழித்த ஒன்பது சிற்றரசர்களின் ஒன்பது குடைகளையும், ஒருநாள் போரில் அழித்த செங்குட்டுவன்.

இவ்வளவன் கிள்ளி, இன்றைய எழுத்தாளர் சிலரால், கிள்ளிவளவனாகக் கொள்ளப்பட்டுள்ளான். மேலே எடுத்துக் காட்டிய பாக்கள் உறுதி செய்வதுபோலக் கிள்ளிவளவன் மிகப் பெரிய போர்வீரன், சேரர் தலைநகரை, ஒரேபகலில் அழித்துத் தரைமட்டம் ஆக்குமளவு அச்சேரரோடு கொடும்பகை உடையவன் என்பதைக் கண்டிருந்தும், அவன், சேரன் செங்குட்டுவனின் துணை நாடினான், அல்லது பெற்றான் என்பதை நம்புவது நம்மால் இயலாது. கிள்ளி, வளவன் என்ற இருசொற்களும், வறிதே, சேர அரசர்கள் என்று மட்டுமே பொருள்பட்டுச் சோழ நாட்டின் எந்த அரசனைக் குறிக்கவும் வழங்கப்பெறும். ஆகவேதான், நாம் ஆய்ந்து கொண்டிருக்கும் அக்குறிப்பிட்ட சோழன்

குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என அழைக்கப்பட்டுள்ளான்.

செங்குட்டுவன் படைத்துணையை வேண்டிப் பெற்றவன், இளவரசனே அல்லது ஆட்சியில் இருக்கும் பேரரசன் அல்லன்; ஆகவே, நெடுமுடிக்கிள்ளி, ஒரு பட்டத்து இளவரசன் அல்லன். ஆகவே, திருவாளர், கிருஷ்ணசாமி அய்யங்கார் கொண்டது போல, இந்தச் சோழனை, நெடுமுடிக் கிள்ளியாகக் கொள்வது தவறு.

Manimekalai in its Historical Setting என்ற நூலின் ஆசிரியர், பக்கம் 35-இல் நெடுமுடிக்கிள்ளி, என்பானைக் செங்குட்டுவனின் சமகாலச் சோழனாகக் கொண்டுள்ளார். இது, செங்குட்டுவனின் சம காலத்தவன், சோழன் பெருநற்கிள்ளி எனக் கூறும் சிலப்பதிகார உரை பெற கட்டுரைக் கூற்றுக்கும், அவன், இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியாவன் எனக் கூறும், உரைபெரு கட்டுரையின் இப்பகுதிக்கான அடியார்க்கு நல்லார் உரைக் கூற்றுக்கும் முரண்பாடாக உளது. திருவாளர் கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள், மரபு வழிச்செய்திக்கு மதிப்பளிப்பவராய் இருந்தும், உரைபெருகட்டுரையும், அதற்கான அடியார்க்கு நல்லார் உரையும், தெளிவாக உணர்த்தும் செய்திகளைக் காட்டிலும், சிலப்பதிகாரமும், மணிமேகலையும் சம காலத்தவை என்ற தன் கொள்கைக்கே, முதலிடம் தருகிறார்.

மணிமேகலை அழகுக்கு அடிமைப்பட்டு, அதனாலேயே உயிரிழந்துபோன சோழஇளவரசன் உதயகுமாரனின் தந்தையாவன், இக்கிள்ளிவளவன் எனக் கூறுவதன் மூலம், மிகப்பெரிய தவறு செய்கிறார், திரு. கனகசபை அவர்கள். (1800 ஆண்டுகளுக்கு முந்திய தமிழர் : பக்கம் : 77) மணிமேகலை, முழுக்க முழுக்க, ஒரு கட்டற்ற கற்பனைக் கதை. வரலாற்று மூலமாகக் கொள்வதற்கு அறவே தகுதி அற்றது. அதில், நாகபுரத்தைச் சேர்ந்த புண்ணியராசன் என்பான், கிள்ளிவளவன் நட்பைப் பெறுவான் வேண்டி, ஒருமுறை, கலம் ஏறிக் காவிரிப்பூம்பட்டினம் சென்றிருந்த போது, ஆங்கு, மணிமேகலைக்கு ஒப்பார், நாவலந்தீவாம்

இப்பேருலகில் ஒருவரும் இலர் எனக் கூறக்கேட்டதாகவும் கூறுகிறான்.

"நாவலந் தீவில் இந்நங்கையை ஒப்பார்
யாவரும் இல்லை ; இவள் திறம் எல்லாம்
கிள்ளிவளவனொடு கெழுதகை வேண்டிக்
கள்ளவிழ் தாரோய் கலத்தொடும் போகிக்
காவிரிப் படப்பை நன்னகர் புக்கேன்".

- மணிமேகலை : 25 : 12 - 16.

இந்தப் பகுதியிலிருந்தே, திரு. கனகசபைப் பிள்ளை அவர்கள், நாம் ஆய்ந்து கொண்டிருக்கும் கிள்ளிவளவன், மணிமேகலை காலத்துப் புகார்க் காவலன் ஆவன் எனக் கொண்டுள்ளார். கிள்ளி, வளவன், என்ற சோழ இளவரசர் எனும் பொருள் உடைய மேலும், புறநானூறு பாராட்டும் கிள்ளிவளவன் உறையூர் அரசனே அல்லது புகார் அரசன் அல்லன் ஆதலின், மணிமேகலை கூறும் கிள்ளிவளவனுக்கும், புறம் பாராட்டும் கிள்ளிவளவனுக்கும் எவ்வித உறவும் இல்லை.

இக்காலத் தமிழ்ப்புலவர்களின் பாக்களில், ஆரியக் கருத்துகள், மிகப் பெருமளவில் இடம் பெற்றிருக்கவேண்டும் என எதிர்பார்க்க வேண்டியதே; ஆலத்தூர் கிழார், பார்ப்பனர்க்குக் கொடுமை செய்வதால் உளவாகும் பாவம் குறித்துப் பேசுகிறார் ; தர்ம சாஸ்திர ஆணைகளைக் குறிப்பிடுகிறார்.

"பார்ப்பார்த் தப்பிய கொடுமை", "அறம் பாடிற்று",

- புறம் : 34 : 3-7.

இக்கிள்ளிவளவன் காலத்தில், ஆரியக் கருத்துகள் பரவியது மட்டுமல்லாமல், அவன்தானும் எரிக்கப்படாமல் புதைக்கப்பட்டுள்ளான். அவன் இறப்பு, புலவர் மூவரால் வருந்திப் பாடப்பட்டுளது. அவர்களுள் ஒருவர், அம்மன்னன் அடக்கம் செய்யப்படவேண்டிய தாழியைச் செய்து தரவேண்டிய குயவனை விளித்து, மன்னனை அடக்கம்

செய்வதற்கு வேண்டும் மிகப் பெரிய தாழி பண்ணவேண்டின், இப்பேருலகையே திகிரியாகக் கொண்டு, பெருமலையையே, உரையாசிரியர் மேருமலை எனப் பொருள் கொண்டுள்ளார். மண்ணாகக் கொள்வாயாக எனக் கூறியுள்ளார்.

"அன்னோன் கவிக்கும் கண்ணகன் தாழி
வனைதல் வேட்டனையாயின், எனையாதூஉம்
இருநிலம் திகிரியாப், பெருமலை
மண்ணா வனைதல் ஒல்லுமோ நினக்கே".

- புறம் : 228 : 12 : 15

பெருநற்கிள்ளி :

புறநானூறு விளக்கம் அளிக்கும், பழைய சோழர் குலத்தில் வந்து சிறப்பு வாழ்ந்த கடைசிக் காவலன் பெருநற்கிள்ளி என அழைக்கப்பட்டான். சோழ நாடுமுழுவதையும், தன் ஆட்சிக் கீழ்க்கொண்டுவருவதன் முன்னர்க் கீழ்ப்படிய மறுத்த சோழச் சிற்றரசர்களையெல்லாம், அவன் வெற்றி கொள்ள வேண்டியிருந்தது. அத்தகு போர் ஒன்று பின்வருமாறு கூறப்பட்டுளது. "போர்த்தொழில்" மாட்சிமைப்பட்டு, விரைந்து பாயவல்ல குதிரைப் படையோடும், கார்முகில் போலும் நிறம் வாய்ந்த தோலால் ஆன பரிசை ஏந்திய படைவீரர்களோடும், பகைவர் போர் முனைகள், பாழ்பட்டுப் போகச் சென்று, அவர்தம் உண்ணுநீர்க் குளங்களில் போர்க்களிறுகளை நீராட்டி, அப்பகைவர் நாட்டில், மூட்டிய நெருப்பின் ஒளி, கதிர்காயும் ஞாயிற்றின் செந்நிறம் போல் தோன்றி நிற்க, இடம் இல்லை எனக் கூறுமளவு சென்றுதங்கும் பெரிய படையினையும், பிறர் படைத்துணை வேண்டாதே பெறலாகும் வெற்றியினையும் பகைவர் குருதிக் கறைபடிந்து புலால் நாறும் வாளினையும், பூசிப் புலர்ந்த சந்தனச் சாந்தினையும் உடைய, பகைவர்க்கு அச்சம் தரும் தலைவ! வள்ளையும், ஆம்பலும், பகன்றையும், பழம் நிறைப் பாகலும் உடையதாகிக், கரும்புக் காடல்லது, பிறகாடறியாச், சிறந்தவயல் வளம் பாழுற்றுப் போகக் காவல் செறிந்த

பகைவர் நாட்டை, ஒள்ளி தீயூட்டிப், பகைவர் அஞ்சத்தக்க கடும்போர், நின்கருத்திற்கேற்பப் புரிந்தன, பெருமை ! உன் போர்க்களிறுகள்".

"வினைமாட்சிய விரை புரவியொடு
மழை உருவின தோல் பரப்பி
முனை முருங்கத் தலைச் சென்று, அவர்
விளைவயல் கவர்பூட்டி,
மனைமரம் விறகாகக்,
கடிதுறைநீர்க் களிறுபடி இ,
எல்லுப்பட இட்ட சுடுதீ விளக்கம்,
செல்சுடர் ஞாயிற்றுச் செக்கரில் தோன்றப்,
புலம் கெட இறுக்கும் வரம்பில் தானைத்,
துணைவேண்டாச் செருவென்றிப்,
புலவுவாள், புலர் சாந்தின்,
முருகன் சீற்றத்து உருகெழு குருசில்!
மயங்கு வள்ளை, மலர் ஆம்பல்,
பனிப்பகன்றைக், கனிப்பாகல்,
கரும்பல்லது காடறியாப்,
பெருந்தண்பணை பாழாக,
ஏம நன்னாடு ஒள்ளெரி ஊட்டினை,
நாம நல்லமர் செய்ய,
ஓராங்கு மலைந்தன, பெருமை! நின் களிறே".

- புறம் : 16.

பின்னர் அவன் ராஜசூய யாகம் செய்து, முடிசூட்டு விழாவை ஆரிய முறையில் மேற்கொள்வதும் செய்தான். அதனால், அவன், ராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என அழைக்கப்பட்டான். தஞ்சாவூரைச் சார்ந்த, பிற்காலச் சோழர்களால், கரிகாலனோடு ஒருங்குவைத்து, மிகப் பழைய குலமுதல் வனாக நினைவு கூரவும் பட்டான். [Vide the Leydan

Grant and Thriuvalangadu Inscription : also S. I. I. Vol. II Part III. These later Inscriptions however confuse the order of sequence of these two early Solas]. ராஜசூயம் வேட்ட ஒரேயொரு பழைய சோழன், பெருநற்கிள்ளி ஆவன்; ஆகவேதான், அப்பெருஞ் செயலைச் சிறப்புடைய தன் அடையாளமாகக் கொண்டான். இப்பெருஞ்செயல், தமிழ் நாட்டு மக்களின் கலாச்சாரத்தில் ஆரியக் கலப்பு பெருமளவில் வளர்ந்துவிட்டது என்பதையும் உணர்த்துகிறது. இது அவன் புகழ்பாடும் பாக்கள் ஒன்றில், பொருள் வேண்டி வந்து நிற்கும் பார்ப்பனரின் ஈரம்பட்ட கையில், பூவையும், பொன்னையும், புனலொடு சொரிந்த அவன் செயல் பாராட்டப் பெற்றிருப்பதாலும் உறுதி செய்யப்படுகிறது.

"ஏற்ற பார்ப்பார்க்கு ஈரங்கை நிறையப்
பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து"

- புறம் : 367 ; 4 - 5.

மூவேந்தர்களும், புலவரால் விளிக்கப்படும்போது, ஆரியக் கொள்கையின் அடிப்படையில் கொள்ளப்பட்ட ஓர் உவமையும், அப்பாட்டில் இடம் பெற்றுளது. அத்தொடர் இது: இருபிறப்பாளராம் பார்ப்பனர் வளர்க்கும், முத்தீப் போல, அழகுற வீற்றிருக்கும், வெண்கொற்றக் குடைகளையும், வெற்றிக் கொடி பறக்கும் தேர்களையும் உடைய மூவேந்தர்காள்!"

"முத்தீ புரைய, காண்தக இருந்த
கொற்ற வெண்குடைக், கொடித்தேர் வேந்தீர்!"

- புறம் : 367 : 13 - 14.

இப்பாடற் பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் மூன்று அரசர்கள், கொளுவில் இருந்து நாம் தெரிந்து கொள்ளும் வகையில், புறநானூறு, தொகை நூலாகத் தொகுக்கப்பட்ட காலத்துக்கு, அதிகம் முற்படாத காலத்து, தமிழரச குலங்களின் கடைசி அரசர்களாம் சேரமான் மாரிவெண் கோவும், பாண்டியன் உக்கிரப்பெருவழுதியும், சோழன்

பெருநற்கிள்ளியுமாவர். இம்மூன்று அரசர்களின் காலத் திற்குப் பின்னர், பின்வரும் அதிகாரத்தில் விளக்க இருக்கும், ஓர் அரசியல் பெருமாற்றம் இடம் பெற்றதாகத் தெரிகிறது.

மேலே கூறிய அரசர்களுக்கு மட்டுமேயல்லாமல், வேறு பிற பன்னிரண்டு சோழர்களுக்கும் கொளுக்களின் ஆசிரியரால், பாக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அவர்கள் அனைவரும், சோழ நாட்டில் ஆட்சி செலுத்தியிருக்க இயலாது. ஒரு நிகழ்ச்சியில் ஒன்பது சோழர்கள், பத்தாவது சோழன் ஒருவனோடு போரிட ஒன்று கூடியிருந்தனர் எனக் கேள்வியுற்றோம் ஆதலின், சோழர் அரியணையில் அமர்ந்து, ஆட்சி புரியாத சோழகுல இளவரசர்களே, அக்கொளுக்களில் கூறப்பட்டுள்ளனர் எனக் கொள்ளுதல் வேண்டும்.

♦ ♦ ♦

I

புறநானூற்றுப் பாக்களுக்குப் பொருள் விளக்கம் அளிக்கும் கொளுக்கள் :

"நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு என்ற தொகை நூல்களில் உள்ள அனைத்து அகத்துறைப் பாடல்களுக்கும், திணையும், துறையும், பாடிய புலவர் பெயரும் கொடுத் திருப்பது போல், புறநானூற்றுப் பாடல்கள் நானூறுக்கும் திணையும், துறையும், பாடிய புலவர் பெயரும் கொடுத் திருப்பதால், அது செய்தது, அப்பாடல்களைத் தொகுத்தவர் செயலாகும்.

"புறநானூற்றுப் பாக்களில், முதல் 266 பாக்களுக்குத் திணை, துறை, பாடிய புலவர் ஆகிய விளக்கங்களுக்கு மேலாக, அப்பாக்கள் பாடப்பெற்ற சூழ்நிலை, அப்பாக்களின் பாட்டுத் தலைவர்கள் ஆகிய விளக்கம் அளிக்கும் கொளுவும், அதை அடுத்துப் பொருள் விளக்கமும் கொடுக்கப் பட்டுள்ளன".

"எந்தப் பாட்டோடு பொருள் விளக்கம் நின்று விடுகிறதோ, அந்தப் பாட்டோடு கொளுவும் நின்று விடுகிறது; ஆகவே, கொளு, பொருள்விளக்கம் ஆகிய இரண்டையும் செய்தவர் ஒருவரே; அவர் அந்நூலைத் தொகுத்தவரினும் காலத்தால் பிற்பட்டவராதல் வேண்டும். நூலைத் தொகுத்தவர் கி. பி. ஆறாம் நூற்றாண்டினராயின், கொளுவும், விளக்கமும் அளித்தவர், கி. பி. 12ஆம் நூற்றாண்டிற்கும், கி.பி. 16ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தவராதல் வேண்டும்" என முடித்து விட்டு (பக்கம் : 409 - 410) அக்கொளுக்கள், வரலாற்றுச் சான்றுகளாக ஏற்கும் தகுதியுடையவல்ல என முடிந்த முடிவாக முற்றுப்புள்ளியும் வைத்துவிட்டார் திருவாளர். பி. டி. சீனிவாச அய்யங்கார் அவர்கள் (பக்கம் : 417)

கொளுவிற்கும், விளக்க உரைக்கும், அவர் விதித்த காலத்திற்கான அடிப்படைச் சான்று எதுவும் காட்டாத அவர், கொளு, வரலாற்றுச் சான்று ஆகாது, என்ற தம் முடிவிற்கு ஆதாரம் காட்டத் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை இடைக்குன்றூர் கிழார் பாடும் புறம், 76, 77 பாக்களையும், சோழன் செங்கணானோடு திருப்போர்ப் புறத்துப் பொருது பற்றுக் கோட்பட்டுக் குடவாயில் கோட்டத்துச் சிறையில் கிடந்து தண்ணீர் தா என்று பெறாது பெயர்த்துப் பெற்றுக் கைக் கொண்டிருந்து உண்ணாது பாடியதான சேரமான் கணைக்கால் இரும்பொறையின் புறம் 74 பாட்டையும், சிறுகுடிகிழான் பண்ணனைப் பாராட்டும் கிள்ளிவளவன் பாடிய புறம். 173 பாட்டையும், சோழன் நலங்கிள்ளியுழை நின்று உறையூர் புகுந்த இளந்தந்தன் என்னும் புலவனைக் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி, ஒற்று வந்தான் என்று கொல்லப்புக்குழிப் பாடியதாகக் கூறும், கோவூர்கிழாரின் புறம். 147 பாட்டையும், எடுத்துக்கொண்டு திறனாய்வு செய்துள்ளார். (பக்கம் : 411 - 416)

திருவாளர் அய்யங்கார் அவர்கள் கூறுவது போல், புறநானூற்றுக் கொளுக்கள், வரலாற்றுச் சான்றுகளாக ஏற்கும் தகுதியுடையவல்ல எனத்தள்ளி விடத்தக்கன அல்ல; மாறாக, நற்றிணை, குறுந்தொகை, நெடுந்தொகை, புறநானூறு ஆகிய நான்கு தொகை நூல்களிலும் உள்ள 1600 பாக்களிலும் கிடைக்கும் வரலாற்று மூலங்கள் அனைத்தையும் நுண்ணிதின் ஆராய்ந்து கொண்ட உண்மை முடிவுகளின் தொகுப்பே அவை ஆகும்.

கொளுக்கள் ஏற்கத் தக்கன அல்ல என்பதை உறுதி செய்யத் திரு. அய்யங்கார் அவர்கள் எடுத்து விளக்கம் அளிக்கும் அந்நான்கு நிகழ்ச்சிகளுள், ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் என்பதற்கினங்க, ஒன்றை மட்டும் ஆய்ந்து, அவர் காட்டும் ஆதாரத்தின் பொருளின்மையை உறுதி செய்வோமாக.

திரு. அய்யங்கார் அவர்கள் காட்டும், சான்றுகளுள் முதலாவதான சான்று, புறம், 76, 77, பாக்களுக்குப் "பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனை இடைக்குன்றூர் கிழார் பாடியது" என்ற கொளுவாகும்.

பாண்டியன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் வென்ற தலையாலங்கானப் போர்குறித்து அறிய வேண்டிய செய்திகள்; 1) போர் நிகழந்த இடம் ஆலங்கானம் என்பது , 2) போரில் வெற்றி பெற்றவன், பாண்டியர் குலத்தவன் என்பது; 3) அவன் செழியன் என அழைக்கப்பட்டான் என்பது; 4) போர் மேற்கொண்ட போது அவன் நனி இளையன் என்பது ; 5) போர் மேற்கொண்டு சென்ற அவன், இனமாலையாம் வேம்பும்; பகைவர் அரணை முற்றுகையிடச் செல்வதை உணர்த்தும் உழிஞை மாலையும் அணிந்து கொண்டான் என்பது, 6) அவன் பகைவர், சேரனும், சோழனும் ஆகிய வேந்தர் இருவரும், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மாண், பொருநன் என்ற வேளிர் ஐவரும் என்பது, 7) வென்று அவர் முரசு கவர்ந்தான் என்பது, 8) இறுதியாகக் களவேள்வி செய்தான் என்பது.

தலையாலங்கானப் போர் குறித்துப் பாடிய புலவர்கள், அப்போரின் வெற்றித் திருமகனாம் நெடுஞ்செழியன், இடைக்குன்றூர் கிழார், கல்லாடனார், நக்கீரர், பொதும்பில் கிழார் மகனார், ஆலம்பேரி சாத்தனார், குடபுலவியனார், மாங்குடி மருதனார், ஆகப் புலவர் எண்மர் ஆவர்; இவர்தம் பாடல்களில் ஆலங்கானப்போர் குறித்த விளக்கங்களைத் தரும் பாடல்கள் பதினாறு. இப்பதினாறு பாக்களில் எந்த ஒரு பாட்டிலேனும், பெறவேண்டிய எட்டு விளக்கங்களையும் ஒருசேரப் பெற்றுவிட முடியுமா என்றால் இயலாது.

தலையாலங்கானத்துப் பெருவீரன் நெடுஞ்செழியன் பாடியபாட்டு புறம் : 72, "நகு தக்கனரே நாடு மீக்கூறுநர்" எனத் தொடங்கும் அப்பாட்டில், மேலே கூறிய விளக்கங்கள் எட்டும் கிடைக்கின்றனவா என்றால் இல்லை. அது

மட்டுமன்று, அப்பாட்டில் வரும் "மாங்குடி மருதன் தலைவனாக" என்று அந்த ஒரு சிறுதொடர் மட்டும் இல்லாமல், இருந்தால் அதைப் பாடியவனை, மூவேந்தர் குலத்தில், எக்குலத்து வந்த எந்த ஒரு பேரரசனாகவும் கொண்டுவிடலாம்.

அது அவன் பாட்டுதான் என்பதை உறுதி செய்ய மாங்குடி மருதன் பாடிய மதுரைக் காஞ்சியின் துணையினை நாடவேண்டும். அதில் வரும் "பொருப் பிற்பொருந" (40 - 43) "நெடியோன் உம்பல்" (60 - 61) "நற்கொற்கையோர் நசைப் பொருந" (138) என்ற வரிகள் எல்லாம், அப்பாட்டுடைத் தலைவன், பாண்டியர் மரபில் வந்தவன் எனப் பொதுவாகத் தான் உணரத்துணை புரிகின்றன; "இரு பெரு வேந்தரொடு வேளிர் சாய" (55) "ஆலங்கானத்து அஞ்சுவர இறுத்து, அரசுகெட அமர் உழக்கி, முரசு கொண்டு களம் வேட்ட" (127 - 130) என்ற வரிகள், அப்பாட்டுடைத் தலைவனின் பகையரசர்கள், மூவேந்தருள் பாண்டியர் அல்லாத, சேர, சோழ வேந்தர்களும், வேளிர் சிலருமாவர் என்பதையும், அவன் அவர்களை ஆலங்கானத்துப் போரில் வெற்றி கொண்டான், பகையரசர்களின் முரசினைக் கைக் கொண்டான்; களவேள்வி செய்து புகழ் கொண்டான் என்பதையும் உணர்த்துகின்றன என்றாலும், தன்னுடைய பாட்டுடைத் தலைவன் செழியன் என்பதை உணர அது துணை புரியவில்லை ; அதற்கு, அவர் பாடிய, புறநானூற்றுப் பாக்களின் துணை நாட வேண்டியுளது ; அவ்விரு பாக்களில், 24ஆம் எண் பாட்டு, அவன் செழியன் தான் என்பதையும், 26ஆம் பாட்டு, அவன் பெயரை உணர்த்துவதோடு, அவன் களவேள்வி செய்தான் என்பதையும் தான் உணர்த்து கின்றனவே ஒழியப் போர்க்களம், ஆலங்கானம் என்பதையோ, பிற விளக்கங்களையோ தரவில்லை.

அவ்விளக்கம் பெறக் கல்லாடனார், துணையினை நாடவேண்டியுளது. அவன் புகழ்பாடும் கல்லாடனார் பாக்கள் இவை.

"செழியன்
நேரா எழுவர் அடிப்படக் கடந்த
ஆலங்கானம்" - அகம் : 209.

"ஆலங்கானத்து அமர் கடந்து அட்ட
கால முன்ப"

"ஒன்று மொழி வேந்தரை
அணங்கரும் பறந்தலை உணங்கப் பண்ணி,
பிணியுறு முரசம் கொண்டகாலை
நிலைதிரிபு எறியத் திண்படை கலங்கிச்
சிதைதல் உய்ந்தன்றே நின்வேல் செழிய"

"அரைசுபட அமர் உழக்கி
உரைசெல முரசவெளவி
முடித்தலை அடுப்பாகப்
புனல் குருதி உலைக் கொளீஇத்
தொடித்தோள் துடுப்பின் துழந்த வல்சியின்
அடுகளம் வேட்ட அடுபோர்ச் செழிய"

- புறம் : 23, 25, 26.

இவற்றுள், எடுத்துக்காட்டு ஒன்றில், செழியன் என்ற அவன் பெயரும், அவன் பகைவர் எழுவர் என்பதும், போர்க்களம் ஆலங்கானம் என்பதும் உணர்த்தப்பட்டன. எடுத்துக்காட்டு இரண்டில், களம், ஆலங்கானம் என்பது மட்டுமே உணர்த்தப்பட்டது. எடுத்துக்காட்டு மூன்றில், பகைவர், வேந்தர் என்பதும், அவன், செழியன் என்பதும் உணர்த்தப்பட்டன. எடுத்துக்காட்டு நான்கில், பகைவர் முரசு கைப்பற்றப்பட்டதும், அவன் களவேள்வி செய்ததும் அவன் செழியன் என்பதும் உணர்த்தப்பட்டன.

ஆக, அப்பாக்கள் நான்கினையும் ஒருங்கு வைத்து நோக்கிய வழியே, ஆலங்கானத்துப் போர் வீரன் செழியன்,

அவன் பகைவர், வேந்தர் உள்ளிட்ட எழுவர், களம், ஆலங்கானம், அவன், பகையரசர் முரசு கொண்டு, களவேள்வி செய்தான் என்ற செய்திகளை அறிய முடிந்தது. அவன் இளையோன்; பகைவருள் வேந்தர் இருவர் ஒழிந்த ஐவர் யார்; அவன் களம் நோக்கிச் சென்ற கோலம் ஆகியவற்றை இவைதாமும் அறிவிக்கவில்லை; பகைவர் எழுவருள், வேந்தர் இருவர் ஒழிந்த ஐவர், வேளிர் என்பதை உணர, மாங்குடி மருதனாரையும், (மதுரைக்காஞ்சி : 55 - 56) அந்த ஐவர் இன்னின்னார் என்பதை உணர,

"செழியன்,
ஆலங்கானத்து அகன் தலை சிவப்பச்,
சேரல், செம்பியன், சினங் கெழுதிதியன்,
போர்வல் யானைப் பொலம்பூண் எழினி,
நாரரி நறவின் எருமை ஊரன்;
தேங்கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின்
இருங்கோவேண்மான் இயல்தேர்ப் பொருநன் என்று
எழுவர் நல்வலம் அடங்க, ஒருபகல்
முரசொடு வெண்குடை அகப்படுத்து உரைசெலக்
கொன்று களம் வேட்ட ஞான்று"

- அகம் : 36.

என்ற நக்கீரனாரின் இப்பாடலை நாடவேண்டியுளது.

போரில் புண் பெற்ற படைகளின் நிலைகண்டு, அதன் நலம்பேணும் கடமையுணர்வால், வாடைப்பருவம் வந்துறவும், கணவன் வாரானாக வருந்தும் கோப்பெருந் தேவியையும் மறந்து, போர்க்களத்துப் பாசறை வாழ்க்கையை மேற்கொண்டிருக்கும் செழியனின் பேராண்மை நலம் பாராட்டும் நெடுநல்வாடையில், அவனுடைய வேப்பர்தார் தவிர்த்து வேறு அடையாளம் காட்டாத நக்கீரர், மேலே கூறிய அகப்பாட்டுச் சில வரிகளில், செழியன் என்ற அவன்பெயர், ஆலங்கானம் என்ற அவன்போரிட்ட களம்,

சேரன், செம்பியன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன் என்ற அவன் பகைவர் எழுவர், முரசு கொண்டு, களவேள்வி செய்த அவன் செயல் ஆகிய இத்தனை விளக்கங்களை ஒருசேரத் தந்துள்ளார். என்றாலும், அவன், தன்பாட்டில் தானே கூறிய, அவன் இளையோன் என்ற விளக்கத்தையோ, நனிமிகப் பெரிய படையுடையேம் என்ற செருக்கால் போர் மேற்கொண்டுவந்த பகைவர்தம் அறியாமையினையோ, நக்கீரரின் இப்பாட்டிலும் காணமுடியவில்லை.

"ஆலங்கானத்து அஞ்சுவர இறுத்த, வேல்கெழுதானைச் செழியன்" (நற்றி : 387) என்ற பொதும்பில் கிழார் மகனார் பாட்டும், "செழியன் ஆலங்கானத்து அமர் கடந்து உயர்த்த வேல்" (அகம் : 175) என்ற ஆலம்பேரி சாத்தனார் பாட்டும் செழியன் என்ற அவன் இயற்பெயர், ஆலங்கானம் என்ற அவன் வென்றகளம் ஆகிய இவ்விரண்டை மட்டும் உணரத்தான் துணை புரிகின்றனவேயல்லது, அவன் இளையன் என்பதை உணரத் துணை புரியவில்லை.

அதுபோலவே, "தமிழ் தலைமயங்கிய தலையாலங் கானத்து மன்னுயிர்ப் பன்மையும், கூற்றத்து ஒருமையும், நின்னொடு தூக்கிய வென்வேல் செழிய! எழுவர் நல்வலம் கடந்தோய்" என்ற (புறம் : 19) வட புலவியனார் பாட்டும் ! செழியன் என்ற அவன் பெயர், ஆலங்கானம் என்ற போர்க்களம் ஆகிய இவ்விரு விளக்கங்களோடு, அவன் பகைவர் எழுவர் என மேலும் ஒரு விளக்கத்தை மட்டும் தான் தருகின்றதே அல்லது, அவன் இளையன், தாம் படையாலும் எண்ணாலும் பெரியவர் என்ற செருக்கே ஆலங்கானப் போருக்குக் காரணம் ஆயிற்று என்பதை உணர்த்தவில்லை.

"செழியன்
பீடும் செம்மலும் அறியார் கூடிப்
பொருதும் என்று தன் தலைவந்த
புனைகழல் எழுவர்"

"கிண்கிணி களைந்தகால், ஒன்கழல் தொட்டு...

.....

பால் விட்டு அயினியும் இன்று அயின்றனன்."

"விழுமியம்; பெரியம் யாமே; நம்மில்
பொருநனும் இளையன்; கொண்டியும் பெரிது என
எள்ளிவந்த வம்ப மன்னர்"

- புறம் : 76, 77, 78.

என்ற இடைக்குன்றூர்க் கிழாரின் பாக்களில்தான், வென்றோன் செழியன் என்பதும், தோற்றோர் எழுவர் என்பதும் கூறப்பட்டிருப்பதோடு, வேறு எப்புலவர் பாட்டிலும் வெளிப்படாத அவன் இளையோன் என்பது கூறப்பட்டுளது. அதுமட்டும் அன்று, "இளையன் இவன் என உளையக்கூறி...படையமை மறவரும் உடையம்யாம் என்று, உறுதுப்பு அஞ்சாது உடல்சினம் செருக்கிச் சிறுசொல் சொல்லிய சினங்கெழுவேந்தர்" (புறம் : 72) என்ற பாட்டுடைத்தலைவன் குரலை "விழுமியம் பெரியம் ? யாமே; நம்மில் பொருநனும் இளையன்; கொண்டியும் பெரிது என எள்ளிவந்த வம்ப மன்னர்" (புறம் : 78) என அப்படியே எதிர் ஒலிக்கவும் செய்துள்ளது.

ஒருவன் பால் அமைந்துவிடும் கல்வி, செல்வம், வீரம், விழுப்புகழ்களின் அளக்கலாகா மிகுதி, கண்டவழி, வியப்புற்று நிற்கும் நிலையில், "இத்துணை உயர்ந்து நிற்பான் யாவனோ?" என வினா எழுப்புவது இயல்பு ; அது பாட்டின் மரபும் கூட. அது, வியப்பு அடிப்படையாக எழும் வினாவே அல்லது, அறியாமையின் அடிப்படையில் எழும் வினா அன்று.

வல்வில் ஓரியின் வில்லாற்றல், கொடைவளங்களை அறிந்து, வன்பரணர், புறப்பாட்டு ஒன்றில் (152) "கொலைவன் யார் கொலோ?... ஓரி கொல்லோ? அல்லன் கொலோ?" என வியந்து வினா எழுப்பி வாய்பிளந்து நிற்பதும், பெயர் அறியாப் படைமறவன் ஒருவனின் பேராண்மை கண்டு

வியக்கும் பெயர் அறியாப் புலவர் ஒருவர், "யார்கொலோ? அளியன்!" எனப் பிறிதொரு புறப்பாட்டில் (257) வியப்பு அடிப்படையாக எழும் வினா எழுப்பி நிற்பதும் காண்க.

இம்மரபை யொட்டிப் புலவர் இடைக்குன்றூர் கிழார், புறம் : 77ல், "யார்கொல்" என வினா எழுப்பியுள்ளார். இம்மரபு உணராத காரணத்தால், புறம் : 76-இல் அவன் ஒருவன், அவன் பகைவர் எழுவர் என்பதையும், அவன் ஆற்றலும் பெருமையும் அறியாது வந்துவிட்ட அப்பகைவர்களின் அறியாமையினையும், அவன், வேப்பந்தாரோடு உழிஞை மாலையும் அணிந்து சென்று, அப்பகைவர் எழுவரையும், ஒரு தானாகி நின்று வென்றதையும் விளங்கக் கூறியிருப்பதையும், புறம் 77-இல் போர்க்களம் நோக்கிப் போகும் அப்போதும், அவன் இளமை மாறா நிலையினினைக் கண்ணுற்று "யார்கொல்" என வினா எழுப்பி நிற்பதையும் கண்டு, "புலவருக்குத் தெரிந்தவனான, 76ஆம் புறப்பாட்டுத் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும், புலவருக்குத் தெரியாதவனான 77ஆம் புறப்பாட்டுடு நனி இளையோனும், வேறுவேறுபட்ட இருவர் அல்லர், இருவரும் ஒருவனே என்பது நம்பக் கூடாத ஒன்று".

It is possible to believe. that the hero - victor of Talayalanganam, known to the poet, and the boy-hero, unknown to the poet, were one and the same "person" (Page : 413)

எனக் கூறி எள்ளி நகையாடியுள்ளார், திருவாளர் அய்யங்கார் அவர்கள்.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் புகழ்பாடும் புலவர் எண்மரும், அவனும், அப்போர் குறித்துப் பாடியிருக்கும் நற்றிணை, நெடுந்தொகை, புறநானூறு ஆகிய வற்றில் கலந்து கிடக்கும், பதினாறுக்கும் மேற்பட்ட அப்பாக் களை அரிதின் முயன்று தேடிப்பிடித்து, நுணுகி ஆய்ந்து, அப்போர் குறித்த பல்வேறு செய்திகளையும் அறிந்து கொண்டு தெளிவுற்ற நிலையில் அமைத்திருக்கும் கொளுக்கள், முழுக்க முழுக்க உண்மை வாய்ந்தவை; பழந்

தமிழர் வரலாற்றை வரைவார்க்கு, வலுவான சான்றாக அமைய வல்லவை ; ஆகவும், அக்கொளுக்களை வரைந் தார்தம் ஆழ்ந்த அறிவினையும், அரு முயற்சியினையும், அருஞ்செயலையும் பாராட்ட மனமில்லையாயினும், அவை ஏற்கதக்கன அல்ல என இழிவுபடுத்துவது, நல்ல வரலாற்றுத் திறனாய்வு நெறி ஆகாது.

திருவாளர் நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள், தம்முடைய சோழர் வரலாறு மற்றும் ஆட்சி முறைபற்றிய திறனாய்வு நூலில், (Studies in Chola History and Administration) கொளுக்கள் குறித்த, திருவாளர் பி. டி. எஸ். அவர்களின் இம்முடிவை விரிவாக ஆராய்ந்து, அது தவறான முடிவு என உறுதி செய்து, பின்வரும் தீர்ப்புகளை வழங்கியுள்ளார்.

"தொகை நூலைத் தொகுத்த ஆசிரியர், அப்பாக்களைப் படித்தும், மரபு வழிச் செய்திகளை ஏற்றும், அந்நூலைத் தொகுத்தபோதே, அக்கொளுக்களைத் தாமே எழுதியிருக்க இயலாதா, ஒவ்வொரு பாவிற்கான கொளுக்கள், அப் பாக்கள், தொகை நூலாகத் தொகுக்கப்படுவதற்கு முன்னரே, அப்பாக்களோடு இணைந்திருக்க இயலாதா என்ற வினாக் களுக்கு விடைகாண வேண்டியது இன்றியமையாதது என்பது திருவாளர் பி. டி. எஸ். அவர்களுக்குத் தெரியவில்லை".

Why the author of the anthology could not have himself read the poems and accepted traditional information at the time the anthology was made, and supplied the colophons; Further, Why the colophons might not have been added to individual poems earlier than their entry in to an anthology are matters which are apparently not deemed worthy of consideration by Mr. Srinivasa Aiyangar. Page : 9.

கொளுக்கள் வரலாற்றுச் சான்றுகளாக ஏற்கத்தக்கன அல்ல என்ற தம்முடிவிற்கு அரண்செய்ய "எல்லாப் பாக் களுக்கும் கொளுக்கள் கொடுக்கப்படவில்லை. புறம் 226-ஆம் எண் பாட்டோடு அது நின்றுவிடுகிறது" என்ற திரு. பி. டி. எஸ். அவர்களின் வாதத்திற்கு, "உண்மையில் எல்லாப் பாக்களுக்குமே கொளுக்கள் கொடுக்கப்பட்டிருந்தன. சில

வற்றிற்குக் கிடைக்காமைக்குப் பழைய ஏட்டுச் சுவடிகளின் சீர்கெட்ட நிலையே காரணம். இது, அந்நூல் பதிப்பாசிய ரால், அவருடைய முகவுரையில் (14 - 15) தெளிவாக உணர்த்தப்பட்டுளது" என விளக்கம் அளித்திருப்பதின் மூலம், அவர் வாதத்தின் வலிவின்மையை உணர்த்தியுள்ளார்.

"In reality, the colophons were furnished for all the odes and as already stated, it is only the decayed state of the manuscripts, that is responsible for the gaps in our knowledge. This is sufficiently indicated by the learned editor of the work in his preface" Page : 12.

பலநூறு ஆண்டு கால இடைவெளியில் தொகை நூல்களில், பிழைபடு இடைச்செருகல்களே இடம் பெறாது தம் பண்டைய வடிவிலேயே பாக்கள், கிடைத்திருக்க வேண்டும் என எதிர்பார்ப்பது அரிதினும் அரிதாம். ஆகவே, அத்தகு குறைபாடு ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு, அப்பாக்களையும், அப்பாக்களோடு கொடுக்கப்பட்டிருக்கும் கொளுக்களையும் வரலாற்றுச் சான்றுகளாக ஏற்க இயலாது. என அறவே மறுப்பது வரலாற்று நூல்கள் எழுவதை, இயலாததாக ஆக்கிவிடும், ஒரு தவறான வழிகாட்டு நெறியைக் காட்டுவதாகும்".

"We can hardly expect that in the course of long centuries, the anthologies have been transmitted to us without errors in details have crept in. But for this reason, to cast a doubt on the accuracy of the whole groups of poems and their colophons and to reject them wholesale is to apply standards of criticism, which would render all historical writings impossible" Page : 18.

புறநானூற்றுக் கொளுக்கள் வரலாற்றுச் சான்றுகளாக ஏற்றுக்கொள்ளத்தக்கன அல்ல எனக் கூறும் திரு. பி. டி. எஸ். அவர்களின் கொள்கைக்கு மேலும் ஒரு படி மேலே சென்று, கல்வெட்டுகளும், செப்பேடுகளும் அளிக்கும் சான்றுகளை வலுவான சான்றுகளாக ஏற்றுக்கொண்டு, புறநானூறு போலும் தொகை நூல்களையும், அவற்றின் கொளுக்களையும் ஏற்க மறுக்கும் வரலாற்றுப் பேராசிரியர் சிலரும் உள்ளனர்.

அத்தகையோரின் தவறான வழிகாட்டு நெறியினையும் வன்மையாக மறுத்துள்ளார், திருவாளர் நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள். இதோ அவர் கூறுவன காண்க:-

திரு. வெங்கையா அவர்கள், "புறநானூறு எண்ணற்ற சோழ அரசர்களின் பெயர்களை....அறிவிக்கின்றன....ஆனால், அவை தரும் வரலாற்றுச் சான்றுகளையும் குறிப்பிட்ட ஒரு சோழ அரசனோடு தொடர்புபடுத்தும் செய்திகளையும் ஏற்றுக்கொள்வதில் பெரிதும், விழிப்புடையவராக இருக்க வேண்டும்." எனக் கூறுகிறார் எனக் கொளுக்கள் பற்றிய அவர் கொள்கையை அறிவித்துவிட்டு, அதைக் கீழ்வரும் வரிகளால் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

"தொகை நூல்கள் தரும் செய்திகள்பால், இத்தகு கட்டுப்பாட்டினை விதிக்கும் திரு. வெங்கையா அவர்கள் அந் நிகழ்ச்சிகள் நிகழ்ந்ததற்கு, அதிகம் இல்லை என்றாலும், ஐந்து நூற்றாண்டு காலம் கழித்து, பதினொன்றாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட கல்வெட்டுகளில் கூறப்பட்டிருக்கும் செய்திகளைச் சிறிதும் தயங்காமல் ஏற்றுக்கொள்கிறார்.

"ஏதேனும் ஒரு செய்தி, பனையோலை ஏடுகளிலோ, அதனினும் எளிதாகப் பாழ்பட்டுப் போகும் ஒரு பொருள் மீதோ எழுதப்படாமல், கல்லின் மீதும், செப்புத் தகட்டின் மீதும் பொறிக்கப்பட்டிருக்கிறது என்பதனாலேயே, அது முழு நம்பிக்கைக்கு உரியதாம் தகுதியைப் பெற்றுவிடுமா என்ற வினாவையும், அத்தகு கல்வெட்டுச் செப்பேடுகளில், மிகப்பெரிய பொய்யான இடைச்செருகல்கள் இடம் பெற்றுவிடவும், இலக்கிய ஆவணங்களைப் பெயர்த்து எழுதும் படிவங்களில் உண்மையான மரபு வழிச் செய்திகள், அப்படியே இடம் பெற்று விடவும் இயலாத என்ற வினாவையும் எவர் ஒருவரும் எழுப்பக் கூடும்...

"கல்வெட்டுத் திறனாய்வாளர்களின், இலக்கியச் சான்றுகளை அணுகும் நிலையில் மேற்கொள்ளும் தேவையில்லா விழிப்புணர்வும், கல்வெட்டுச் செப்பேடுகளில் இடம் பெற்றிருக்கும் மிகப்பெரிய பொய்ச் சான்றுகள்பால் காட்டும் சிறுபிள்ளைத்தனமான நம்பிக்கையும், அவர்களின் போக்கு குறித்த முறையான ஐயப்பாட்டினை எழுப்புகிறது.

Mr. Vengayya remarks: "The Tamil anthology Purananuru, for instance, furnishes the names of a number of Chola kings.. But the evidence furnished by these documents and the tradition connecting then with particular Chola kings have to be received with caution" (Archaological Survey of India : 1905 - 6 P-174 N. 7.)

But then, having imposed this reserve on himself in accepting the evidence of literary tradition, Mr. Venkayya proceeds forth with to accept unreservedly all the statements made in eleventh century inscriptions about events that happed, if at all, five centuries before their date...Now, one may ask whether any statement gains in trust worthiness merely because, it is engraved on copper or stone and not written on palm leaf or other more perishabile material, and whether it is not possible for a deliberate inventom to get in to an epigraph, or for a correct tradition to be transmitted in successive copying of literary documents. The exaggerated caution assumed by some epigraphists in their approach to literary evidence, and the childish faith they occasionally exhibit in hugging the most palpable lies set down on stone and copper, may raise, a legitimate doubt". Page : 5.

புறநானூற்றுக் கொளுக்கள், வரலாற்றுச் சான்றுகளாக ஏற்றுக்கொள்ளத் தகுதியில்லாதன என்ற தம் கொள்கையில் திருவாளார் அய்யங்கார் அவர்களும் விடாப்பிடியாக இருப்பவர் அல்லர்.

367 ஆம் எண் புறநானூற்றுப் பாட்டின் கொளு இது; "சேரமான் மாரி வெண்கோவும், பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதியும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஒருங்கிருந்தாரை ஔவையார் பாடியது".

இது குறித்துத் தம் கருத்திணைக் கூறும் திரு. அய்யங்கார் அவர்கள், கொளுவில் கூறப்பட்டிருக்கும் மூவேந்தர் பெயர்கள், பாட்டில் இடம் பெறவில்லை எனினும் கொளு கூறும் செய்தி நம்புதற்கு உரியதே என நான் கருதுகின்றேன்" என அவரே கூறுவது காண்க. (பக்கம் : 461)

♦ ♦ ♦

14. பாண்டிய அரசர்கள்

முதுகுடுமிப் பெருவழுதி :

தொகைப் பாக்களிலிருந்து விளக்கம் பெறக் கூடிய முதல் பாண்டிய அரசன், முதுகுடுமிப் பெருவழுதி...அவன், பிராமண வேள்வியாசிரியர்கள் செய்த யாகங்களுக்குப் பேராதரவு தந்து பெரும்புகழ் கொண்டான். யாகங்கள் பலவற்றிற்குத் துணை நின்றவன் எனும் பொருளுடைய, "பல்யாக சாலை" என்ற சிறப்பினைத் தன் பெயர் முன் பொள்ளுமளவு, யாகங்களுக்கு ஆதரவு அளித்தான். வேத யாகம் செய்ய, ஓர் அரசன், முதற் கண் சத்திரிய கோத்திரம் சிலவற்றோடு இணைக்கப்பட வேண்டும். பண்டைய பாண்டிய மன்னர், அவ்வகையில் முழுமையாகவும், முறையாகவும் ஆரிய வளையத்துக்குள் உட்படுத்தப்பட்டு, ஒரு கோத்திரத்துக்கு உரியவராக ஆக்கப்பட்டனர் என்தற்கான அகச்சான்று எதுவும் இல்லையாகவே அத்தொடர், பற்பல வேதயாகங்களைச் செய்த ஒருவன் எனும் பொருள் உணர்த்துவதாகக் கொள்ளத் தேவை இல்லை. புறம் : 15-இல் இவ்வாறு கூறப்பட்டுளது : "குற்றம் இல்லாத நல்ல தரும நூலிலும், நான்கு வேதங்களிலும் சொல்லப்பட்ட, பெறுதற்குரிய புகழ் வாய்ந்த இரு பொருள்களோடு, நெய்யை நிறையப் பெய்தலால், புகை, பெருக எழுந்து படரப் பல்லாற்றானும் மாண்புற்ற, கெடலறியாத் தலைமை வாய்ந்த யாகங்களை முடித்துத் தூண் நடப்பெற்ற அகன்ற வேள்விச் சாலைகள்."

".....புரையில்
நற்பனுவல், நால் வேதத்து
அருஞ்சீர்த்திப் பெருங் கண்ணுறை

நெய்ம்மலி ஆவுதி பொங்கப், பன்மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி
யூபம் நட்ட வியன்களம் பல."

- புறம் : 15 : 16 - 21.

இப்பாண்டியனால் போற்றிப் புரக்கப்பட்ட ஒரு யாகம், வேள்விக்குடிச் செப்பேட்டில் (Ep. Ind. 18 : P. 291) குறிப்பிடப்பட்டுளது. பல்யாக சாலை முதுகுடுமிப் பெரு வழுதியால் வழங்கப்பட்டுப் பின்னர்க் களப்பிர அரசன் ஒருவனால் திரும்ப எடுத்துக்கொள்ளப்பட்ட ஓர் உடைமையின் உரிமையை, மீட்டு அளித்தல் காரணமாக, இக்கொடைப்பட்டயம், பெரும்பாலும், எட்டாம் நூற்றாண்டின் நாற்கூறுகளில், மூன்றாவது கூற்றின்போது வெளியிடப்பட்டதாகும். இந்நன்கொடை முதன்முதலாக, எந்தச் சூழ்நிலைகளில் வழங்கப்பட்டதோ, அந்தச் சூழ்நிலைகள், எட்டாம் நூற்றாண்டில் வெளியிடப்பட்ட, இந்நன்கொடை ஆவணத்தில் இவ்வாறு விரித்துரைக்கப் பட்டுள்ளன : [இந்தியக் கல்வெட்டுக்கள் (Epigraphia India) என்ற நூலில், கொடுக்கப்பட்டிருக்கும், அப்பட்டயத்துக்கான மொழிபெயர்ப்பு பிழையுடையதாக இருப்பதால், என்னுடைய மொழி பெயர்ப்பைக் கொடுத்துள்ளேன்.] "வண்டுகள் மொய்த்து ஓலமிடும் குளிர்ந்த அரும்புகளைக் கொண்ட நாகமரங்களும், மாமரங்களும் செறிந்த மலர்ச்சோலைகள் சூழ்ந்த பாகனூர்க்கூற்றம் என்ற நிலவளமும், நீர்வளமும் மிகுந்த நாட்டில் வாழும், கற்று வல்ல வேள்வியாசிரியர்கள் சொல்லித் தந்த சுருதி-மார்க்கம் தவறாத, கொற்கைக்கிழான், நற்கொற்றன் என்பான், வேள்வி ஒன்று செய்யத் தொடங்கினான். "வேள்வியை முற்றுவிக்கத் துணைபுரிவான் வேண்டிக் கொல்லும் போர் வல்ல களிறுகள் எண்ணற்றன போக்கிப் பகை மன்னர் குலங்களை அழித்து ஒழித்த பல்யாக - முது குடுமிப் பெருவழுதி [அரசன் பட்டப் பெயரில் "சாலை" எனும் சொல், காலவெள்ளத்தால் கைவிடப்பட்டுளது.] என்னும் பாண்டியாதிராசன் ["அதிராஜர்" என்ற பட்டம், பாண்டிய அரசர்களாலும், பிற

தமிழ் அரசர்களாலும், ஆறாம் நூற்றாண்டு முடிவுற்ற பின்னர்த் தமிழ் நாடு, முழுமையாக ஆரிய மயமாக்கப் பட்டுவிட்ட பின்னரே மேற்கொள்ளப்பட்டது. பழங்காலப் பாண்டியர், அப்பட்டத்தை எந்நிலையிலும் மேற்கொண் டிருக்கவில்லையென்றாலும், இக்கல்வெட்டு ஆசிரியரால், ஈண்டு, அப்பட்டம், அவனுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டது.] துணையை வேண்டுவாயாக என, வேதங்களில் வல்ல வேள்வியந்தணர் நற்கொற்றனிடம் கூற, அவனும் அவ்வாறே வேண்ட, வெற்றிமாலையணிந்த வேந்தன், அப்போதே, வேள்விச்சாலை முன் நின்று, அவ்வூரை, வேள்விக்குடி எனும் பெயர்சூட்டி, அந்நகர்க்கு அழகும், திருவும் பெருக. வழி செய்து, நீர் வார்த்துக் கொடுத்துவிட்டான் : அவ்வகையில், அவ்வூர், நெடுங்காலம், தானம் பெற்றவரால் அனுபவிக் கப்பட்டு வந்தது. பின்னர், எண்ணற்ற அதிராசர்களை வென்று துரத்தி, அவர் நாட்டைக் கைக்கொண்டுவிட்ட களப்பிரர் எனும் கலி அரசன், அவ்வூரின் தான உரிமையை அழித்துத் தானே எடுத்துக்கொண்டான்."

[களப்பிரரால் வென்று துரத்தப்படுவதன் முன்னர், நாட்டை நெடுங்காலம் ஆண்டு வந்த பண்டைய அரசர்களின் வழிவந்தவர் போலும், இவ்வதிராஜாக்கள்.]

[கொல்யாளை பல ஓட்டிக் கூடாமன்னர் குழாம் தவிர்த்துப் பல்யாக முதுகுடுமிந் பெருவழுதி எனும் பாண்டியாதிராஜன் நாகமா மலர்ச்சோலை நளிர்சினை மிசை வண்டுஅலம்பும் பாகனூர்க்கூற்றம் என்னும் பழனக்கடக்கை நீர் நாட்டு சொற்கண்ணாளர் சொலப்பட்ட சுருதி மார்க்கம் பிழையாத, கொற்கைக்கிழான் நற்கொற்றன் கொண்ட வேள்வி முற்றுவிக்க கேள்வி யந்தணாளர் முன்பு கேட்க என்று எடுத்துணர்த்த வேள்விச் சாலை முன் நின்று, வேள்விகுடி என்ற பதியைச் சீரொடு திருவளரச் செய்தார், வேந்தன் அப்பொழுதே நீரோட்டிக் கொடுத்தமையான நீடுபுக்கி துய்த்தபின், அளவரிய ஆதிராஜனா அகல நீக்கி, அகல் இடத்தைக் களப்ரன் என்னும் கலிஅரசன் கைக்கொண்டு அதனை இறக்கிய பின்.]

நன்கொடை ஆவணங்களைக் கல்லின் மீதோ, செப்புத் தகடுகள் மீதோ செதுக்கிப் பொறிக்கும் வழக்கம், கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முன்னர், அதாவது, தமிழ்நாடு, முழுமையாக ஆரிய நாகரிகச் செல்வாக்கிற்கு ஆட்பட்டுக் கோயில் களுக்கும், பிராமணர்களுக்கும் தானங்கள் செய்வது முறையான வழக்கமாகிவிட்ட அந்தக் காலத்துக்கு முன்னர்த் தொடங்கப்படவில்லையாகவே, முதுகுடுமி, தன் தானத் தோடு, செப்புப் பட்டயத்தை உடன் வழங்கவில்லை. ஆகவேதான் கி.பி. 600 வரையான தமிழக வரலாற்றிற்கு ஒளி காட்ட, எந்தக் கல்வெட்டும் முன்வரவில்லை. நற்கொற்றன் வழிவந்த, காமக்காணி நற்சிங்கன் என அழைக்கப்படும் ஒருவனுக்கு, இம்முறை, தெய்வத்துக்குப் படைக்கப்படும் புனித தீர்த்தமாம் நிலைபேறில்லாத் தண்ணீர் வார்த்து அளிப்பது மட்டுமல்லாமல், செப்புத்தகட்டில் செதுக்கிப் பொறிக்கப்பட்ட, அழிக்கலாகா, நன்கொடை ஆவணமும் தொடர, நெடுஞ்சடையன், அச்சிற்றூரை மறுவலும் தானம் செய்த சூழ்நிலைகள் பின் வருமாறு: "இவன் (நெடுஞ்சடையன்) ஆட்சியின் மூன்றாம் ஆண்டு நடை பெற்றுக்கொண்டிருக்கும் போது ஒரு நாள், மாடங்களையும், மதில்களையும் கொண்ட மதுரையில், சிலர் கூடியிருந்து, உரத்த குரலில் முறையிட்டுக் கொண்டிருந்தனர். அரசன், அவர்களைத் தன் அருகில் அழைத்து, உம் முறை யாது எனக்கோட்டான். அவர்கள், "பலம் வாய்ந்த பெரும்படைக் குரிய ஆற்றல் மிகு அரசே! வெல்லற்கரிய தன் வேற்படை வீரர் துணையால், கடல்சூழ் உலகைக் காத்துவந்த பேரரசனாம், பல்யாக முதுகுடுமிப் பெருவழுதியாம் உன் குல முன்னோனால், வானளாவும் மலர்ச்சோலைகள் மலிந்த பாகனூர்க் கூற்றத்தைச் சேர்ந்த ஒரு சிற்றூர், வேள்விக்குடி எனப் பெயரிடப்பட்டு, அறநெறி மாறுபடா நிலையில் தானமாக அளிக்கப்பட்டது. அவ்வாறு நின் முன்னோனால் அளிக்கப்பட்ட அவ்வூர், பின்னர், அழிக்கலாகாக் கடல் போதும் பெரும்படையுடைய களப் பிறரால் எடுத்துக்கொள்ளப்பட்டது; இதுவே எம் முறை" என்றனர். அரசன், சிறிதே முறுவலித்து, "நல்லது தங்களுடைய பழைய

உரிமையை மக்கள் மன்றத்து நிலை நாட்டி, மீட்டுக் கொள்வீராக" எனப் பணிக்க, முறையீட்டாளனும், அது செய்ய, வில்லேந்திய தடந்தோளனாகிய வேந்தன், "எம் குல முன்னோரால், முறைப்படி வழங்கப்பட்டது என்றாலும் தரப்பட்டதாக் கொள்க" எனச் செம்மாந்து கூறி, நெடிய தேரும், கடல்போலும் பெரிய தானையும் கொண்ட அக்காவலன், முறையீட்டாளனாகிய, கொற்கைக்கிழான் காமக்காணி நற்சிங்கர்க்கு நீர் வார்த்துக் கொடுத்தான்.

"மற்றவன்தன் ராஜ்யவத்ஸரம் மூன்றாவது செலாநிற்ப,
ஆங்கொரு நாள்
கூடமாமதில் கூடற்பாடு நின்றவர் ஆமோதிக்கக்,
கொற்றவனே, மற்றவரைத் தெற்றென நன்கு கூவி,
"என்னேய் நுங்குறை" என்று முன்னாகப் பணித்தருள,
"மேனாள் நின்குரவரால் பான்முறையின் வழுவாமை
மாகந்தோய் மலர்ச்சோலைப் பாகனூர்
கூற்றப்படுத்துவது,
ஆள்வதர்னை அடல்வேந்தே! வேள்விக்குடி எனும்
பெயருடையது
ஒல்காத வேல்தானை வூடாதவேலி உடன் காத்த,
பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி எனும் பரமேசுரனால்
வேள்விகுடி எனப்பட்டது கேள்வியில் தரப்பட்டதனைத்
துளக்கமிலாக் கடல்தானையாய கலிப்பரரால்
இறக்கப்பட்டது"
என்று நின்றவன் விஜ்ஞாப்யம் செய்ய
"நன்று நன்று" என்று முறுவலித்து
"நாட்டான் நின் பழமையாதல்
காட்டி நீ ("கொள்க" வென்)ன
நாட்டால்தன் பழமையாதல்
காட்டினான் அங்கு அப்பொழுதெய்

காட்ட, "மேனாள் எம்குரவரால் பன்முறையில்
தரப்பட்டதளை
எம்மாலும் தரப்பட்டது" என்று
செம்மாந்து அவன் எடுத்தருளி.
விற்கைத் தடக்கை விறல்வேந்தன்
கொற்கைகிழான் காமாக்காணி நற்சிங்கர்க்குத்
தேரோடும் கடல்தாளையன் நீரோட்டிக்
கொடுத்தமையின்"

நெடுஞ்சடையன் வேள்விக்குடியை மறுபடியும் தானம் செய்வதை வாய்மொழிச் சான்றுகளைக் கொண்டே உறுதி செய்தான். ஆகவே, முதுகுடுமி, அவனுக்கு மூன்று நூற்றாண்டு காலத்துக்கு மேற்பட்ட காலத்தில் வாழ்ந்திருக்க முடியாது என்பதும் இடையில் குறிப்பிடத்தக்கதாம்.

பிறிதொரு புறநானூற்றுப் பாட்டில் புலவர் முதுகுடுமிப் பெருவழுதியைப் பார்த்து. "நெடிது வாழ்க!" என வாழ்த்தும் அவ்வாறு வாழ்த்தும் அறிகுறியாகத் தங்கள் கைகளை உயர்த்தும் நான்கு வேதங்களையும் கற்றறிந்த பார்ப்பனர்கள் எதிரில் வணங்கி நிற்பாயாக." எனக் கூறுகிறார்.

"இறைஞ்சுக! பெரும! நின்சென்னி, சிறந்த
நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே"

- புறம் : 6 : 19-20.

முக்கண் இறைவன் கோயிலை வலம் வரும்போது மட்டுமே, அரசர்களின் வெண்கொற்றக் குடை தாழ்த்தப் படுமாக என்று அவர் கூறுகிறார்.

"பணியியரத்தை, நின்குடையே, முனிவர்
முக்கண் செல்வர் நகர்வலம் செயற்கே".

- புறம் : 6 : 17 - 18.

எனக்குத் தெரிந்த வரையில், தமிழிலக்கியத்தில், முக்கண் இறைவனைப் பற்றிய குறிப்பு, இதுவே பழமையானது.

[அடுத்தது, பண்டைப்புலவர் வரிசையில், கடைசியில் இருப்பவராகிய பரணரால், அகம் : 181ல் கூறப்பட்டிருப்பதும் "நான்மறை முதுநூல் முக்கண் செல்வன்"]

அரசன் புகழ், நிலம், ஆகாயம், சுவர்க்கம் என்ற மூன்றும் ஒன்றுகூடிய ஒரு கூட்டமாக அடுக்கப்பட்ட வரிசைக்கண், முதற்கண்ணதாகிய நீர்நிலைக்கண் நிற்கும் உலகின் கீழும், மேலதாகிய ஆன் உலகத்தும் வாழ்வாரை அச்சுறுத்த வல்லதாம் என்றும் அப்பாட்டில் கூறப்பட்டுளது.

"முப்புணர் அடுக்கிய முறைமுதல் கட்டில்
நீர்நிலை நிவப்பின் கீழும், மேலது
ஆனிலை உலகத்தானும் ஆனாது
உருவும் புகழ்". - புறம் : 6 : 5 - 6.

இவை அனைத்தும் ஆரியக் கருத்துகள். அவை, இப்பாட்டில் இடம் பெற்றிருப்பது, ஆரியக் கலாச்சார வெள்ளம், கரிகாலன் காலம் தொட்டுத், தமிழ் மக்கள் உள்ளத்தில், கடுவேகமாகப் பெருக்கெடுத்துப் பாயத் தொடங்கிவிட்டது என்பதைக் காட்டுகிறது. மேலும், வடக்கில் இமயத்தையும், தெற்கில் குமரியையும், கிழக்கிலும், மேற்கிலும் இரு கடல்களையும் எல்லையாகக் கொண்ட ஒரே நாடு இந்தியா என்ற கொள்கை, இப்பாட்டில், தமிழ் இலக்கியத்தில் முதன் முறையாக இடம் பெற்றுளது. அப்பகுதி "முதுகுடுமியின் புகழ், வடக்கில், பனி தவழும் பெருமலைக்கு அப்பாலும், தெற்கில், அச்சம் தரும் குமரிக்கு அப்பாலும், கிழக்கில், சகரரால் தோண்டப்பட்ட கீழ்க்கடலுக்கு அப்பாலும், மேற்கில் நனிமிகப் பழைய கடலுக்கு அப்பாலும் பரவியிருந்தது" எனக்கூறுகிறது :-

"வடாஅது, பனிபடு நெடுவரை வடக்கும்;
தெனாஅது, உருகெழு குமரியின் தெற்கும்;
குணாஅது, கரைபொரு தொடுகடல் குணக்கும்;
குடாஅது, தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்"
- புறம் : 6 : 1-4.

[புறநானூற்றில், இக்கருத்தில், வேறு இருகுறிப்புகளும் உள்ளன. முதலாவது, தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் காலத்தது :- "தென்குமரி வடபெருங்கல்" (புறம் : 17 ; 1). இரண்டாவதாக, மிகவும் பிற்பட்ட காலத்த வனாகிய, பெரும்பாலும் 6 வது நூற்றாண்டைச் சேர்ந்த வனாகிய, பெருங்கோக்கிள்ளிக் கோப்பெருஞ் சோழனைக் குறிப்பது: அதில், ஓர் அன்னப்பறவை, குமரிக்கரையில் அயிரை மீன் அருந்திச், சோழ நாட்டைக் கடந்து, வட நாட்டுப் பெருமலைக்குச் செல்வதாகக் கூறப்பட்டுளது :-

"குமரியம் பெருந்துறை அயிரை மாந்தி,
வடமலைப் பெயர்குவை யாயின், இடையது
சோழ நன்னாட்டுப் படினே". - புறம் : 67 : 6-8]

நால்வேத நாகரிக வளர்ச்சிக்குப் பேராதரவு நல்கும் பெருஞ்செயல்கள் அல்லாமல், முதுகுடுமிப் பகையரசர் களோடு போர் மேற்கொள்வதும் செய்திருந்தான். குறிப்பிட்ட ஒரு சோழ, அல்லது பாண்டிய அரசனோடு போரிட்டதாகக் கூறப்படவில்லை. சில குறுநிலத்தலைவர் களை அவன் வென்றிருக்கக் கூடும். புலவர் இவ்வாறு கூறுகிறார் : "பகைப்படையைச் சேர்ந்த தேர்கள் விரைந்து ஓடி ஓடிப் பண்ணிய குழிகளைக் கொண்ட, அப்பகைவரின் பேரூர்த் தெருக்களில், வெள்ளிய வாயையுடைய கழுதைகளை, ஏர்களில் வரிசை வரிசையாகப் பூட்டி உழுது, அப்பகைவரின், அகன்ற பெரிய அரண்களைப் பாழ் படுத்தினை; பகைவர் நாட்டின் பறவைக் கூட்டம் ஓயாது கூடியிருந்து ஒலிக்கும் வண்ணம் வளம் கொழிக்கும் விளை நிலங்கள், வெள்ளிய தலையாட்டம் கொண்ட, போர்ச் செருக்குமிக்க குதிரைகளின் குளம்புகளால் பாழுற்றுப் போமாறு, போர்த் தேர்களை விரைந்து போக்கினை; ஆடும் இயல்பும், பெரிய கழுத்தும், பருத்த கால்களும், சினம் கொழிக்கும் சிறு கண்களும், ஒளி விளங்கும் தந்தங்களும் உடைய நின்படைக் களிறுகளை, அப்பகைவரின், காவல் மிக்க உண்ணு நீர்க்குளங்களில் குளிப்பாட்டினை-" அவன்

வெற்றி கொண்ட போர்க்களம், இது எனத் தெளிவாகக் குறிப்பிடப் படாத நிலையில், இது அவ்வரசனைப் பற்றிய பொதுவான புகழ் உரைகளேயல்லது வேறு அன்று என்றே கோடல் வேண்டும்.

"கடுந்தேர் குழித்த ஞெள்ளல் ஆங்கண்,
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப்,
பாழ்செய்தனை, அவர் நனந்தலை நல்எயில்;
புள்ளினம் இமிழும் புகழ்சால் விளைவயல்
வெண்டளைக் கலிமான் கவிகுளம்பு உகளத்
தேர்வழங்கினை, நின் தெவ்வர் தேஎத்து;
துளங்கு இலையான், பனை எருத்தின்,
பாஅடியான், செறல் நோக்கின்
ஒளிறு மருப்பின் களிறவர
காப்புடைய கயம்படியினை." - புறம் : 15 : 1-10.

தலையாலங்கானத்துச் செருவென்றான் :

இவ்வரசன் (முதுகுடுமிப் பெருவழுதி) இறந்த பின்னர்த் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் ஆட்சி புரிந்தான். பத்து புறநானூற்றுப் பாடல்களிலும், ஒன்பது அகநானூற்றுப் பாடல்களிலும், வேறுசில சிறு பாடல் களிலும் குறிப்பிடப்பட்டிருப்பது மட்டுமல்லாமல், பத்துப் பாட்டில், மிக நீண்ட பாட்டாகிய மதுரைக்காஞ்சி, அதனினும் சிறிய பாட்டாகிய நெடுநல்வாடை ஆகிய இரு பாடல்களின் பாட்டுடைத் தலைவனும் அவன் இவன். அக்காலத்திய பாண்டிய அரசர்களின், இவனே மிகச்சிறந்த வனாதலின் போலும், இவனைப் பற்றிய பாடல்கள், இத்துணைப் பெருமளவில் கிடைக்கலாயின. இவன், நனி இளையனாக இருக்குபோது, இவன் காலத்திய சோழ, சேர அரசர்கள் இவனை எதிர்த்துப் படைதொடுத்து வந்தபோது, இவன், பண்டியர் அரியணையில் அமர்ந்தான். இவன் பகைவர்கள், "நாமோ சிறந்தவர்கள்; மேலும் அனைத்து

நிலையாலும் பெரியவர்கள்; நம் பகைவனாகிய இவனோ நனிமிகச்சிறியவன் : ஆனால், வென்று கொள்ளலாம் பொருளோ அளப்பரியன்" என எண்ணினர்.

"விழுமியம்; பெரியம் யாமே; நம்மில்
பொருநனும் இளையன்; கொண்டியும் பெரிது"
- புறம் : 78 ; 5-6.

படையெடுத்து வந்தாரை, நெடுஞ்செழியன், மதுரையி லிருந்து துரத்தி அடித்தான். புலவர் இவ்வாறு கூறுகிறார்:- "மலர்மாலையினையும், தலையில் மை பூசப்பட்ட யானைப் படையினையும் உடைய, வீரம் செறிந்த போரில் வல்ல பாண்டியன், எக்காலத்தும் நின்று போகாது தொடர்ந்து நடைபெறும் விழாக்கள் மலிந்த, தன் மதுரை மாநகர்க்கு, அணித்தாக நடைபெற்ற போர்க்களத்தில், தம்முள் ஒன்றுகூடி வந்து போரிட்ட, சேர, சோழர்களாம் இரு பெருவேந்தர் களின் கடல் போல் பரந்த பெரும்படையினை, நிலை குலைந்து போகுமாறு தாக்கி ஒலிக்கும் அவர் முரசுகள், ஒலி அவிந்து போர்க்களத்தில் வீழ்ந்து கிடக்கத் தோற்று ஓடும் அவர் புறமுதுகைக் கண்டான்".

"மலர்தார்,
மையணி யானை, மறப்போர்ச் செழியன்,
பொய்யா விழவின் கூடற் பறந்தலை
உடன்இயைந்து எழுந்த இருபெரு வேந்தர்
கடல்மருள் பெரும்படை கலங்கத் தாக்கி,
இரங்கிசை முரசம் ஒழியப், பரந்து அவர்
ஓடு புறம் கண்ட"
- அகம் : 116 : 12 : 12-18.

இது, அவன் காலத்தில் பாடப்பட்ட பாட்டு அன்று; நெடுஞ்செழியன் காலத்திற்குப் பின்னர்ப் பரணரால், அவருடைய நினைவில் நின்ற நிகழ்ச்சியாகப் பரத்தையர் ஒழுக்கம் மேற்கொண்டுவிட்ட ஒரு கணவன், அப்பரத்தை யோடு புதுப்புனல் ஆடினான் என்பத குறித்து ஊரில் பலர்

கூறும் அலர் உரை, கூடற்பறந்தலைப்போரில் எழுந்த பேரொலியிலும் அதிகமாம் எனக் கூறப்பட்டுளது.

இப்போர், புறநானூற்றுப் பாட்டு ஒன்றில், இன்னமும் தெளிவாக விளக்கப்பட்டுளது : "விண்மீன்கள் ஒளிவீசும் வானத்தில், உலகில் பரந்திருக்கும் இருள் நீங்க, உயர்ந்து செல்லும் ஒழுக்கமாம் தன் இயல்பில் தவறாது, கொடிய வெப்பத்தால், மிக்க அச்சத்தைத் தரும் ஞாயிறு, ஒளி விளங்கும் திங்களோடு நிலவுலகில் வந்துவிட்டாற்போல பகைகொள்ள எவரும் அஞ்சத்தக்க பேராற்றலோடு இன்னது செய்து முடிக்கேமாயின் இன்னது ஆமேம் என்பது போலும் வஞ்சினம் கூறிப் போரிட வந்த, சேர, சோழராம் இரு பெருவேந்தர்களும், களத்தில் இறந்து போகப் போரிட்டு, வார்கொண்டு வலித்துப் பண்ணப்பட்ட, அப்பகைவரின் போர் முரசையும் கைக்கொண்டு, தன்னைச் சூழ்ந்துகொண்டு போரிடும் பகைவீரர்களின் தகுதியும் திறமும் அறிந்து, அதற்கேற்பப் போரிட்டு அழிக்க, அந்நிலையில், களத்தில் உயிரிழந்தாரின் மனைவியர், கருந்துயர் மிக்குத் தம் மார்பில் அறைந்து கொள்வதால், அறிவும் பிறிதாகி அழுவது ஓயாது. கைம்மை நோன்பு மேற்கொண்டு, அதன் அறிகுறியாக, ஆற்று அறல் போல, அடர்ந்து நீண்டு, இளமை அழகு காட்டிடும் கரிய கூந்தலைக் கொய்து கொள்ளும், அக்கொடு நிலையைக் கண்ணுற்ற பின்னரே, தன் போர்த் தொழிலைக் கைவிட்டது, செழிய! நின் கை வேல்!

"மீன்திகழ் விசும்பில், பாயிருள் அகல,
ஈண்டுசெல்ன் மரபின் தன்இயல் வழாஅது,
உரவுச்சினம் திருகிய உருகெழு ஞாயிறு,
நிலவுத்திகழ் மதியமொடு நிலம்சேர்ந் தாஅங்கு,
உடலரும் துப்பின் ஒன்றுமொழி வேந்தரை
அணங்கரும் பறந்தலை உணங்கப் பண்ணிப்,
பிணியுறு முரசம் கொண்ட காலை,
நிலைதிரிபு எறியத் திண்மடை கலங்கிச்

சிதைதல் உய்ந்தன்றோ நின்வேல்! செழிய!
முலைபொலி ஆகம் உருப்ப நூறி,
மெய்ம்மறந்து பட்ட வரையாப் பூசல்
ஒண்ணுதல் மகளிர் கைம்மை கூர
அவிர் அறல் கடுக்கும் அம்மென்
குவைஇருங் கூந்தல் கொய்தல் கண்டே".

- புறம் : 25.

இப்போருக்குப் பிறகு (கூடற் பறந்தலைப்போர்) வென்ற பாண்டியன், குறுநிலத்தலைவர் ஐவர் படைத்துணை பெற்றுத் தலையாலங்கானம் எனும் இடத்தில் பாடி கொண்டிருந்த பகைவரைத் தொடர்ந்து சென்று தாக்கினான். பகைவர் எழுவரையும், பாண்டியன் வெற்றி கொண்டான். சேர, சோழ வேந்தர்களோடு, அக்களத்தில் தோல்வி கண்ட குறுநிலைத்தலைவர் ஐவரின் பெயர்கள், அப்போர் நிகழ்ச்சிக்குப் பிறகு பாடப்பட்ட அகநானூற்றுப் பாடல் ஒன்றில் கொடுக்கப்பட்டுள்ளன. "பிடரிமயிர் கொய்யப்பட்ட குதிரைகள் பூட்டப்பட்டு, வெற்றிக்கொடி பறக்கும் தேரினையுடைய பாண்டியன் நெடுஞ்செழியன், தலையாலங் கானம் எனும் இடத்தில் நடைபெற்ற போர்க் களம், பகைவர் குருதி வெள்ளத்தால் செந்நிறம் பெறச், சேரன், சோழன், சினம் மிக்க திதியன், போரில் வல்ல யானைகளைக் கொண்ட பொன் அணிகள் பூண்ட எழினி, பன்னாடையால் அரித்து எடுக்கப்பெறும் கள்ளால் களிப்புறும் எருமையூரன், மாலை மலர்களின் தேன் மணக்கும் மார்பில் பூசிப்புலர்ந்த சாந்தினை யுடைய இருங்கோவேண்மான், இலக்கண வகையில் இயற்றப் பட்ட தேரினைக் கொண்ட பொருநன் என்ற இவ்வேழரசர் களின், அதுகாறும் அவர்கள் பெற்றிருந்த வெற்றிப் புகழெல்லாம் அழிந்துபோக, ஒரே பகலில், அவர்களின் போர் முரசுகளோடு, வெண்கொற்றக் குடைகளையும் கைக் கொண்டு, தன் வெற்றிப்புகழ் உலகெலாம் சென்று பரவும் வண்ணம், அவர்களையும், அவர்தம் படைவீரர்க்களையும் கொன்று, களவேள்வியும் செய்து முடித்த அந்நாள்,"

"கொய்கவல் புரவிக், கொடித்தேர்ச் செழியன்,
ஆலங் கானத்து அகன்தலை சிவப்பச்,
சேரல், செம்பியன், சினங்கெழு திதியன்,
போர்வல் யானைப், பொலம்பூண் எழினி,
நார்அரி நறவின் எருமை யூரன்,
தேம்கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின்,
இருங்கோ வேண்மான், இயல்தேர்ப் பொருநன், என்று
எழுவர் நல்வலம் அடங்க, ஒருபகல்
முரசொடு, வெண்குடை அகப்படுத்து உரைசெலக்
கொன்று களம் வேட்ட". - அகம் : 36 : 13 - 32.

[இதுவும் மேலே கூறியவாறு ஓர் உவமையாகவே இடம் பெற்றுளது.]

இப்போர்க்கள நிகழ்ச்சிக்குப் பிறகு, அவன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என அழைக்கப்பட்டான்; அப்போர்க்கள நிகழ்ச்சிகளை, உவமைகளாக மேற்கொள்ளும் அளவிற்கு, அப்போர், அவன்காலப் புலவர்களைப் பெரிதும் கவர்ந்துவிட்டது. ஆலம்பேரி சாத்தனார் என்ற புலவர், காற்றென விரையும் நெடிய தேரினையும், வழங்கத் தவறா வண்மையினையும் உடைய, பாண்டியன் நெடுஞ்செழியன், தலையாலங் கானத்துப் போரை வென்று உயர்த்திய வேற்படை குறித்துப் புகழ்ந்து பேசுகிறார் :-

"காலியல் நெடுந்தேர்க், கைவண் செழியன்
ஆலங் கானத்து அமர்கடந்து உயர்த்த,
வேல்." - அகம் : 175 : 10 - 12.

பழந்தமிழ்ப் புலவர்களாம் பேரறிஞர் குழாத்தின், பிற்கால உறுப்பினராம் கல்லாடனார், "பொன்னால் அணி செய்யப்பட்ட, நெடிய தேர்ப்படையினையுடைய பாண்டியப் பேரரசனாம், கணைய மரம் போலும் திண்ணிய வலிய தோளினையும், தன் விருப்பிற்கேற்ப இயங்கவல்ல

பரந்த கடலில், காற்றால் உந்தப்படும் மரக்கலம், அந்நீரைக் கிழித்துக்கொண்டு ஓடுவதுபோலக் போர்க்களிறுகள், போர்க்களத்துள் புகுந்து பிளவுபடுத்தி இடம் உண்டாக்கி விட, அவ்வகையால் இடம் அகன்ற களத்தில், வேலேந்திப் புகுந்து, இருபெரும் வேந்தர்களும் இறந்து போகக் கடும் போரிட்டு, அவ்வெற்றிப் புகழ் பரவ, அவர் போர் முரசுகளைக் கைக் கொண்டதோடு அமையாது, அப் பகையரசர்களின் முடித்தலைகளை அடுப்பாக அடுக்கிப் பகைவரின் செங்குருதியாம் உலையில், தசையையும், மூளையையும் இட்டு, வெட்டுண்டு வீழ்ந்து கிடக்கும் வீரவளை அணிந்த தோள்களைத் துடுப்பாகக் கொண்டு துழாவிச் சமைத்த உணவு கொண்டு, களவேள்வி செய்து முடித்த, கொல்லும் போர்வல்ல செழிய! ஆன்று அமைந்த கேள்வி நலத்தையும், ஐம்புலம் அடக்கிய கோட் பாட்டினையும், நான்கு வேதங்களை உணர்ந்த அறிவு மேம்பாட்டினையும் உடைய அந்தணர்கள், சுற்றமாக இருக்க, உன் ஆட்சிக்கு அடக்கிய வேந்தர்கள் எல்லாம், ஏற்ற ஏவல்களை இனிதே முடிக்க நிலைபேறுடைய வேள்வியைச் செய்து முடித்த அதற்குத் துணையாக வாய்த்த வாள் வலியுடைய பெருவேந்தே! பாண்டியன் பகைவர் எனும் பெயர்பெற்று, உன்னோடு போரிடமாட்டாது உயிரிழந்து, துறக்கம் புகுந்து வாழும் நின் பகைவர்கள், தவஞ் செய்வார் யாவரினும் நளி மிகச் சிறந்தோரே ஆவர்."

"நளிகடல் இருங்குட்டத்து,
வளிபுடைத்த கலம் போலக்,
களிறுசென்று களன் அகற்றவும்,
களன் அகற்றிய வியல் ஆங்கண்,
ஒளிறு இலைய எஃகு ஏந்தி,
அரைசுபட அமர் உழக்கி,
உரைசெல முரசு வௌவி,
முடித்தலை அடுப்பாகப்,
புனல்குருதி உலைக்கொளீஇத்,–

தொடித்தோள் துடுப்பின் துழந்த வல்சியின்,
அடுகளம் வேட்ட அடுபோர்ச் செழிய!
ஆன்ற வேள்வி, அடங்கிய கொள்கை,
நான்மறை முதல்வர் சுற்ற மாக,
மன்னர் ஏவல் செய்ய, மன்னிய
வேள்வி முற்றிய வாய்வாள் வேந்தே!
நோற்றோர் மன்ற, நின் பகைவர், நின்னொடு
மாற்றார் என்னும் பெயர் பெற்று,
ஆற்றார் ஆயினும், ஆண்டு வாழ் வோரே"

- புறம் : 26.

புறம் 24, நெடுஞ்செழியன் மழலைக் கூற்றம், முத்தூற்றுக் கூற்றங்களை இணைத்துக்கொண்டதாகக் கூறுகிறது. [முத்தூறு வெற்றி, அடியார்க்கு நல்லாரால் முத்தூர் என வழங்கப்பட்டு, அவ்வுரையாசிரியரால், பாண்டிய முன்னோன் ஒருவன் செயலாகக் கூறப்பட்டுளது. "அங்ஙனமாகிய நிலக்குறைக்குச் சோழ நாட்டெல்லையிலே முத்தூர்க் கூற்றமும், சேரமானாட்டுக் குண்டூர்க் கூற்றமும் என்னும் இவற்றை, இழந்த நாட்டிற்காக வாண்ட தென்னவன்" சிலம்பு : 11 : 17 - 22 உரை - அது ஒரு பழங்கதை ; ஆனால், நெடுஞ்செழியன் வெற்றி, அவன் காலத்தே வாழ்ந்த - ஒருவரால் உறுதி செய்யப்பட்ட ஓர் உண்மை நிகழ்ச்சி.] "வரையாது வழங்கும் பெரிய கொடை வள்ளலாம் வேளிர் தலைவனாம் எவ்வி என்பானுக்குரிய, வயல்களுக்கு நீர் வழங்கும் எண்ணற்ற மதகுகளைக் கொண்ட மழலைக் கூற்றத்தோடு, நெல்வயல்களின் கயல்மீன்களைக் கவர்ந்து உண்ணும் நாரைக்கூட்டம், வயல்களின் அயலிடத்தாவான நெற்போர்களின் உறங்கும், நெல் வளம் மிக்க, பொன்னால் ஆன முகபடாம் அணிந்த யானைகளைக் கொண்ட பழம் பெரும் குடியினராம் வேளிர்க்கு உரிய முத்தூற்றுக் கூற்றத்தையும் கைக்கொண்டே வெற்றிக்கு உரிய, வெண்கொற்றக் குடையினையும், வெற்றிக்கொடியால் அழகு பெறும் தேரினையும் உடைய செழிய!"

"ஓம்பா ஈகை மாவேள் எவ்வி
புனலம் புதவின் மிழலையொடு, கழனிக்
கயல்ஆர் நாரை போர்வில் சேக்கும்
பொன்அணி யானைத் தொன்முதிர் வேளிர்
குப்பை நெல்லின் முத்தூறு தந்த,
கொற்ற நீண்குடைக், கொடித்தேர்ச் செழிய!"

- புறம் : 24 : 18 - 23.

பிற பாக்களால் கொடுக்கப்படும் செய்தியை, மதுரைக் காஞ்சி உறுதி செய்கிறது. அவை கொடுக்கும் செய்திகளோ, மேலும் சில செய்திகளை இணைக்கிறது. நெடுஞ்செழியனின் மேற்கூறிய வெற்றிகளோடு, அவன் நெல்லால் பெயர் பெற்ற நெல்லின் ஊர் எனும் ஊரைக் கைக் கொண்டதையும். "சீர் சான்ற உயிர் நெல்லின் ஊர் கொண்ட உயர் கொற்றவ" - மதுரைக்காஞ்சி : 87 - 88. சேரப் பேரரசுக்கு அடங்கிய குட்டநாட்டு மக்களை வெற்றி) [இது. உறுதியாகத் தமிழ்நாட்டு எல்லைக் கண் உள்ள பேரூரும், பழங்காலத்தில் தமிழ் நாட்டின் துறைமுகமும் ஆன நெல்லூரே ஆகும். நச்சினார்க்கினியர், இந்நகரை, மதுரைக்கு வடக்கில் நெடுந் தொலைவில் இல்லாத, சோழநாட்டுக் கடற்கரை ஊராம் சாலியூராகக் கொள்வதையே விரும்புகிறார். நெடுஞ் செழியன், இதைத் தன் கப்பற் படைத்துணையால் கைப்பற்றினான்"] கொண்டதையும் ["பல்குட்டுவர் வெல்கோவே" -ஷை : 105] செல்வவளம் கொழிக்கும் முது வெள்ளிலை என்ற நகரையும் அழும்பில் என்ற நாட்டினையும் கைப்பற்றியதையும், ["முதுவெள்ளிலை...தொழில் கேட்ப"- ஷை : 119 - 124 : "அரும்பில் அண்ண நாடிழிந்தனரும்"] - ஷை : 345.) அது, குறிப்பிடுகிறது.

நெடுஞ்செழியன் குறித்த பாடல்களில், மதுரைநாட்டை, ஆரிய மயமாக்கும் நிலை, விரைந்து முன்னேறுகிறது என்பது காணப்படும். மேலே எடுத்துக்காட்டிய ஒரு பாட்டில், நான்கு வேதங்களிலும் வல்ல பிராமணர்களின் வழிகாட்டு நெறியின் கீழ், வேந்தன் வேள்வி யாகம் செய்தான் என்பது கூறப்

பட்டுளது. ஒருவன் பிறந்த நாண்மீன் குறிப்பிடப்பட்டு, "நீ, நீடு வாழ்க!" என வாழ்த்துதற்கு மாறாக, "நீ பிறந்த நாண்மீன் நிலைமேலுடையதாக நிற்குமாக!" எனும் வாழ்த்தும் நிலைபற்றிய ஒரு குறிப்பும் உளது. ["நின்று நிலைஇயர் நின் நாண்மீன்". -புறம் : 24 : 24.] இது, பெரும்பாலும், தென்னாட்டில் இடம் பெற்று விட்ட ஓர் ஆரிய முறையாகும். பொதுவாக, அமைப்பு முறையில், பாட்டினப்பாலை போன்றதான மதுரைக்காஞ்சி, முன்னது, காவிரிப்பூம் பட்டினத்தை விளக்கிக் கூறுவது போலவே, மதுரை மாநகர் அமைப்பை விரித்து உரைத்து, அந்நகரில் உள்ள இறைத்தன்மை வாய்ந்த இடங்களையும் குறிப்பிடுகிறது.

மதுரையில் ஆகம வழிபாட்டு நெறிகள்:

ஆகம வழிபாட்டு நெறிகள், மதுரை மாநகரில் விரைந்து பரவியதற்கான அகச்சான்றுகளை மதுரைக் காஞ்சியில் நாம் பெறுகிறோம். அப்பாட்டின் ஆசிரியர் இவ்வாறு விளக்கியுள்ளார்:- "நீர், நிலம், நெருப்பு, காற்று, நால்வேறு திசைகளைக் கொண்ட வான்வெளி ஆகிய ஐம்பெரும் பூதங்களையும் ஒருசேரப் படைத்த, மழுவாகிய வாட் படையுடைய பெரியோனாம் சிவனை முதல்வனாகக் கொண்டு, தெய்வத் தன்மையால், நிறைந்த ஒளியினையுடைய, வாடாத மலர்களையும், இதழ்குவியாக் கண்களையும், அவியாகிய உணவினையும் உடைய, ஆக்கம் தரும் மாயோன், முருகன் முதலாம் தெய்வங்கட்டு, அகத்தும், புறத்தும் அழுக்கற்றுத் தூய்மையுடையராய், மாற்றுதற்கரிய இயல்பினதான உயர்ந்த பலிகளைக் கொடுத்து வழிபடுவதற்கு, அந்திப் போதில், விழாக்குறித்து இசைக்கருவிகள் முழங்கும்."

"நீரும், நிலனும், தீயும், வளியும்
மாக வீசும்போடு ஐந்து உடன் இயற்றிய
மழுவாள் நெடியோன் தலைவனாக,
மாசற விளங்கிய யாக்கையர், சூழ்சுடர்
வாடாப்பூவின், இமையா நாட்டத்து,

நாற்ற உணவின் உருகெழு பெரியோர்க்கு
மாற்றரு மரபின் உயர்பலி கொடுமார்
அந்தி விழவின் தூரியம் கறங்க"

- மதுரைக்காஞ்சி : 453 - 460.

அவ்விளக்கம், இன்றைய நடைமுறையில் இருக்கும், எந்த வழிபாட்டு முறையோடும் இனம்காண மாட்டா அளவு, தெளிவற்றதாக அமைந்துளது. உறுதியாக வரையறுக்கப்பட்ட, பிற்காலத்திய வழிபாட்டு நெறி எதனோடும், இனம் காட்டமாட்டா அளவு, வழிபாட்டு முறையும், பெரும்பாலும் நெகிழ்ச்சி உடையதாகவே அமைந்துளது.

இதுவல்லாமல், விஷ்ணு வழிபாடும் இடம்பெற்றிருந்தது. பேரொளி வீசும் சிறந்த அணிகலன்களையுடைய, அறிவு நன்மை வாய்ந்த சிறு பிள்ளைகள், கூட்டத்தில் பிரிந்து போய்விடாவாறு காத்தற்பொருட்டுத் தம் கைகளால், இறுக அணைத்து, அவர் மேல் கொண்ட அன்புப் பெருக்கால் ஆரத் தழுவிக் கொண்டு, மகரந்தம் செறிந்த, தாமரை மலரைப் பற்றினாற் போன்று, அப்பிள்ளைகளின் கைகளைத் தம் கைகளால் பற்றிக் கொண்டு, தாமும் அவரும் ஓரிடத்தே இருக்கக், கண்டார் விரும்பும் அழகு வாய்ந்த பேரிளம் பெண்டிர், வழிபாட்டுக்கு வேண்டும், பூவும், புகையும் கொண்டு நாவார வாழ்த்துதலால் சிறப்புற்று, அவர்களைக் காக்கும் கடவுளாம் விஷ்ணு இடங்கொண்டகோயில்."

"திண்கதிர் மதாணி ஒண்குறுமாக்களை
ஓம்பினர்த் தழீஇத், தாம் புணர்ந்து முயங்கித்,
தாதுஅணி தாமரைப் போது பிடித்தாங்குத்
தாமும் அவரும் ஓராங்கு விளங்கக்,
காமர் கவினிய பேரிளம் பெண்டிர்,
பூவினர், புகையினர், தொழுவனர், பழிச்சிச்
சிறந்து புறம் காக்கும் கடவுள் பள்ளி."

- மதுரைக்காஞ்சி : 461 - 467.

வைதீக வழிபாட்டு முறையும், சிலரால் பின்பற்றப்பட்டது. "சிறந்த வேதங்களை, அவற்றின் பொருள் விளங்குமாறுபாடி, அவை கூறும் மிகச் சிறந்த ஒழுக்க நெறியில் வாழ்ந்து, நால்வகை நிலவளமும் வாய்ந்த இந்நில உலகில் சிறந்த தலைமையுடையார் தாம் ஒருவரே ஆகுமாறு உயர்ந்து, உயர்ந்த நிலையுடையதான வீட்டுலக இன்பத்தை, இவ்வுலகில் இருந்தவாறே அடைவதற்கு வழியாக, அற வழியில் திரியாது நின்று, உயிர்கள் மாட்டு அன்பு செலுத்தும் உயர்ந்த உள்ளம் வாய்ந்த பெரியார்கள், விரும்பி இனிதே வாழும் மலையைக் குடைந்து ஆக்கினாற்போலும், அந்தணர் குடியிருப்புக்கள்."

"சிறந்த வேதம் விளங்கப் பாடி,
விழுச்சீர் எய்திய ஒழுக்கமொடு புணர்ந்து,
நிலம்அமர் வையத்து ஒருதாம் ஆகி,
உயர்நிலை உலகம் இவண் நின்று எய்தும்,
அறநெறி பிழையா, அன்புடை நெஞ்சின்
பெரியோர் மேஎய் இனிதின் உறையும்
குன்று குயின்றன்ன அந்தணர் பள்ளி."

- மதுரைக்காஞ்சி : 468 - 474.

சமண, பௌத்த முனிவர்கள், அடுத்த நூற்றாண்டில் நகரத்தே மடங்களில் வாழ்வது போல் அல்லாமல், நகர்ப்புறத்தே பூம்பொழில்களில் வாழ்ந்தனர்: "வண்டுகள் வந்து மொய்க்குமாறு, மலரும் பருவம் வந்துற்ற, தேன் நிறைந்திருக்கும் தோற்றத்தை உடைய மலர்களையும், மணம் தரும் புகைகளையும் ஏந்தி, இரவு உண்ணாவிரதம் கொண்டோர், வாழ்த்தாநிற்ப, இறந்த காலத்தையும், இந்நிலவுலக நிகழ்ச்சிகளையும் முழுமையாக உணர வல்லாரும், தமக்கு ஏற்புடைய விரதங்களையும், அவ் விரதங்கள் மேற்கொள்வதால் தளர்ந்துவிடாயாக்கை நலத்தையும், கல்வி கேள்விகளால் நிறைந்தும் செருக்குதல் அறியா அடக்கத்தையும் உடைய ஆன்றோர் பெருமக்கள், ஒன்று கூடியிருந்து நோற்பதற்குக் கல்லைப் பொளிந்தாற்

போன்ற ஒடுங்கிய வாயையுடைய நீரிநிறை குண்டிகையைப் பல வடங்களைக் கொண்ட நூல் உறியில் ஏந்தி, உலகத்து உயிர்களுக்கு அருளுதலையே செய்ய இருந்து அறம் நோற்கும், கண்டார் வியக்கும் கவின்மிகு பூஞ்சோலைகளாம் அமண் பள்ளிகள்."

"வண்டுபடப் பழுநிய, தேன்ஆர் தோற்றத்துப்,
பூவும், புகையும் சாவகர் மழிச்சச்,
சென்ற காலமும், வரூஉம் சமயமும்,
இன்று இவண் தோன்றிய ஒழுக்கமொடு நன்கு உணர்ந்து,
வானும், நிலனும், தாம் முழுதுணரும்,
சான்ற கொள்கைச், சாயா யாக்கை,
ஆன்று அடங்கு அறிஞர், செறிந்தனர் நோன்மார்,
கல்பொளித்தன்ன இட்டுவாய்க் கரண்டைப்
பல்புரிச்சிமிலி நாற்றி, நல்குவரக்,
.....
இறும்பூது சான்ற நறும்பூஞ் சேக்கை"

- மதுரைக்காஞ்சி : 475 - 483 : 487.

மேலே எடுத்துக்காட்டிய நான்கு பகுதிகளுக்கும் பொருள் விளக்கம் காண்பதில், உரையாசிரியர் பொருள் விளக்கத்தி லிருந்து முழுவதும் மாறுபட்டுள்ளேன்.

இவ்வடநாட்டு வழிபாட்டு நெறிகள், பழைய தமிழர் வழிபாட்டு நெறிகளை, இடங்கொண்டு விடுவதோ, அழிந்து விடுவதோ செய்யவில்லையாதலாலும், ஏழாவது முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரையான காலத்தில், அவை நடந்து கொண்டதுபோல், தமக்குள்ளே கடுமையான போர் மேற்கொண்டு விடாமல் அடுத்தடுத்து இயங்கி வந்தன.

மதுரை மாநகர் : ஒரு விளக்கம் :

திருவாளர் சுந்தரம்பிள்ளை அவர்கள், மதுரைக் காஞ்சியின் பெரும் பகுதியை, மதுரை மாநகரின் விளக்க

உரையாக வடித்துத் தந்துள்ளார். மிகுத்தெளிவாக உளது என்றாலும், அஃது ஒரு கற்பனைக் காட்சி அன்று: மாறாக, இப்பாட்டில் இடம் பெற்றிருக்கும் செய்திகளையே அடிப்படையாகக் கொண்டது. அது, சென்னைக் கிறித்துவக் கல்லூரி 1901 ஆம் ஆண்டு மலரில் வெளியிடப்பட்டது. ஈண்டு, அது எடுத்தாளப்பட்டுளது; "கதவில் பொறிக்கப் பட்டிருக்கும் காவல் தெய்வத்திற்கு, வழிபடு முறையாக, நாள்தோறும் எண்ணெய் வார்ப்பதால் கறுத்துக் காணப்படும் கதவுகள் பொறுத்தப்பட்ட, மழைமேகங்கள் தவழும், உயர்ந்த மலைபோலக் காட்சி தரும் வாயிலை அடைகிறோம். புதுவெள்ளம் பெருக்கெடுத்தோடும் வையைபோல, மக்கள் வெள்ளம் வழங்கும், அவ்வாயில் ஊடே, நெருக்கித் தள்ளிக் கொண்டு உட்புகுகிறோம். தெருக்கள் ஆறுபோல் அகன்று உள்ளன. தெருவின் இருமருங்கிலும் உள்ள வீடுகள், காற்றும் ஒளியும் நன்கு உட்புகுவதற்கு ஏற்பக் கணக்கிலாக் காலதர் களைக் கொண்டுள்ளன. தெருவுகளில் போக்குரவரவும் இடையற்றுப் போகா : எழும் பேரொலியும் இடையற்றுப் போவதில்லை. அத்தகு தெருவுகளில், நாளின் இருபத்து நான்கு மணிகளிலும் நிகழும் பல்வேறு சிறப்புகளைப் புலவர், மீண்டும் நினைவில் கொண்டு எண்ணிக் காண்கிறார்.

"பெரும்பாலும், விடியற்போதை உடன் கொண்டே, வைகை ஆற்றின் பக்கம் இருந்து நகரை நோக்கிச் செல்லத் தொடங்குகிறோம். ஏறத்தாழ ஏழுமணி அளவில் தெருவுகளை அடைகிறோம். என்றாலும் அவை, அப்போதே நிறைந்து, விரைந்து தொழில்படத் தொடங்கிவிட்டன.

கடல் அலைபோல் மோதும் மக்கள் பெருங்கூட்டம், வருவதும் போவதுமாக எங்கும் அலைந்து கொண்டிருந்தது. பல்வேறு மொழியினரும் ஒரு சேர எழுப்பும் பேரொலிக் கலவையில், காற்றால் போதுண்ணும் கடலின் பெருமுழக்கே போலும் முழக்கினைக் கேட்பதல்லது. எதையும் தெளிவாகக் கேட்பது நம்மால் இயலவில்லை. நால்வேறு திசைகளிலும், நிகழும் முரசு முழக்கமும், பாட்டும், ஆட்டமும், வாணிகத்திலும், இன்ப நுகர்ச்சிகள் எழுப்பும் பேரிரைச்சலே

பெரிதாம் என்பதை உணர்த்துவதாக இருக்கும். நம் காதுகள், இவ்வாறு, எல்லாத் திசைகளிலிருந்தும் எழும் பல்வேறு ஒலிகளால் தாக்குற்றிருக்க, சூழ இருப்பனவற்றைக் கண்டுகளிப்பதில், நம்மை, மீண்டும் ஒப்படைத்துக் கொள்கிறோம். முதன் முதலில் நம் கண்ணில் படுவன எங்கு நோக்கினும், நம் கண்களை மறைக்கும் கொடிக் காடுகள். நகரில், காலம் தவறாமல் முறையாக நடைபெறும் விழாக்கள் குறித்து ஏற்றிய கொடிகள் காற்றில் பறக்கவிடப்பட்டிருக்கும் ஒருபால்; பெரும் படைத்தலைவர்கள், நாட்டிற்காக ஆற்றிய அரும்பணிகளைப் பாராட்டி எழுப்பிய கொடிகள், அலை அலையாகப் பறந்து கொண்டிருக்கும் மற்றொரு பால்; இங்கும், அங்கும் காணும் இடம் எங்கும் விற்கும் கள்ளின் இணையிலா நலம் நவிலக் கள்கடைகள் தோறும் கட்டிவிடப்பட்டிருக்கும் இன்பத் துகிற்கொடிகள் களிநடம் புரியும் ஒவ்வொரு வாணிகம் அல்லது வணிகக் குழுவும், தத்தமக்கே உரிய தனித்தனிக் கொடிகளையும் கொண்டிருந்தன. நாலாப் பக்கங்களிலும் அலைந்து கொண்டிருக்கும் நம் கண்களை, ஆங்கிருந்து மீட்டு, நமக்கு அணித்தாக உள்ளனமீது போக்கின், நம்மைச் சூழ இருக்கும் மக்கள் கூட்டம், பண்ணியம், பன்னிறமலர்கள், மண மாலைகள், மணம் தரு பொருகள். வெற்றிலை, பாக்கு, மற்றும் இன்ன பிற பொருட்களை ஏந்திவிற்கும் சிறுவணிகர்களை மையமாகக் கொண்டு, சின்னம் சிறு வட்டங்களாகத் தனித்தனியே சுழன்று சுழன்று வருவது காணலாம். மதுரை, ஒருபடைத்தல நகரமும் ஆம் ஆதலின். மாநகர் வீதிகளில் போக்குவரத்து, அவ்வப்போது, அரசனின் நாற்படை நடமாட்டத்தால் நிலைகுலைந்து போவதும் உண்டு. கொடிய சுழற்காற்றால் மேலுண்டு நங்கூரக் கல்லோடு பிணிக்கப்பட்ட வலியகயிறு அறுபட்டுப் போகக் கடலின் நெடுஞ்சுழியில் அகப்பட்டு அலையும் கலங்கள் போலப் போர்க்களிறுகள், கட்டுத் தறிகளோடு பிணிக்கப்பட்ட கயிறுகளை அறுத்துக்கொண்டு, கூடத்தினின்றும் வெளிப்பட்டு, வீதிகளில் புகுந்து விடும். தேர்கள், காற்றென விரையும் : படைப் பயிற்சி குறித்துக் குதிரைகள் விரைந்து நடைபோட்டுச் செல்லும். இவை

அனைத்திலும் கேடாகக் கள்ளுண்டு களிக்கும் படைவீரர் கூட்டம். இடையூறு விளைக்கும் இவை, வீதிகளின் ஊடே செல்லுங்கால், மக்கள்கூட்டம், உயிருக்கே ஊறுநேர்ந்து விட்டாற்போல் அஞ்சி விதப்புற்று, இங்கும் அங்கும் ஓடிச் சிதறுண்டு போவர். இவ்வமளி அடங்கி, அமைதி நிலவ சிறிது நாழிகை ஆகும். அதன் பின்னர்ப் பண்டங்களைத் தலையில் சுமந்து விற்பாரும், சின்னம் சிறு வணிகர்களும், வீதியின் இருமருங்கிலும் உள்ள பலவடுக்கு மாளிகைகளின் நிழல்களில், தம் வாணிகத்தை மீண்டும் தொடங்கிவிடுவர். தங்கள் மகளிரினத்துப் பலவீனத்தைத் தெரிந்துவைத்திருக்கும் முதிய பெண்டிர் சிலர், மனைகளின் அகத்தே வாழ்வார். வெளிப்போந்து, தவறாது வாங்கிச்செல்லத் தூண்டும் வகையில், தாம் விற்கும் இனிய பணியாரங்கள், மணம்நாறும் மலர்கள் ஆகியவற்றின் நலங்களை நாவாரக் கூறியவாறே, வீடு வீடாகச் செல்வது, களிப்பூட்டும் கண்கொள்ளாக் காட்சி ஆகும். கார்மேகம் குடித்து விடுவதால் குறைவதோ, கடுமழைவரவால் மிகுவதோ செய்யாது, என்றும் ஒரு படித்தாகவே இருக்கும் கடல்போல, மக்கள் வாங்கி விடுவதால் குறைந்து போவதோ, புதுவரவால் மிகுந்து போவதோ இல்லாமல், வாணிகம், என்றும் ஒரே படித்தாக, இரவு பகல் எப்போதும் நடைபெற்றுக் கொண்டேயிருக்கும்.

நகரில், காலம் விரைந்து கடந்து கொண்டே உளது, நாட்பொழுது பையப் பையக் கழியக் காட்சியும் மாறுகிறது. மாலைப் பொழுது கழியும் அக்காலத்தில், அந்நகரத்துப் பெருநிதிக்கிழவர்கள், காலாட்கள் சூழ்ந்துவரத் தேர் மீதும், குதிரைகள் மீதும், வீதிகளில் உலாவருவர். அந்திவானத்தைச் செந்நிறத்தை நினைவூட்டும், செந்நிறம் வாய்ந்து, ஒள்ளிய பூத்தொழில் செய்யப்பட்ட மேலாடை அணிந்திருப்பர். பொற்பிடி வாய்ந்த வாள், அவர் இடையில் கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும்: இறவாப் புகழ் வாய்ந்த வெற்றி மாலைகள் அவர் மார்பில் கிடந்து புரளும் மிகப்பெரும் செல்வர் ஆதலின், நாளின் வெப்பம் மிகு நாழிகைப் போதினை, இவர்கள், தங்கள் இல்லத்தே, இன்பச் சூழ்நிலைகளில், இனிதே கழிப்பர். வானுலக மாதர்கள் வந்து

குதித்து விட்டனரோ என எண்ணி வியக்கத்தகும் அவர்களின் மகளிர், வானளாவ வரிசை வரிசையாக உள்ள மாடங்களின் நிலா, முற்றங்களிலே காட்சி அளிப்பர்: அவர்கள் மீதிருந்து எழும் நறுமணம், நகரின் நால்வேறு தெருக்களிலும் சென்று மணக்கும். அவர்தம் முகங்கள், மலைமுகட்டில் கூட்டப் பட்டுக் காற்றில் ஆடிக் கொண்டிருக்கும் கொடிகளால் அவ்வப்போது மறைக் கப்படுவதால், முகிலால் மறைப்புறம் முழுமதி போல் காட்சி அளிக்கும்.

வலியரான் மெலிவுற்று முறை கேட்டு வருவார், நீதி கிடைக்குமோ, கிடைக்காதோ என்ற அச்சமோ, தோல்வி உற நேர்ந்து உள்ளத்தில் நடுக்கமோ கொள்ளாவாறு, ஒருவர் மீது வெறுப்போ, பிறிதொருவர் பால் விருப்போ கொண்டு விடாமல், துலாக் கோல்போல், நடுநிலை பிறழாது, நின்று தீர்ப்பு வழங்கும் அறங்கூர் அவை, அண்மையில் அமைந்திருக்கும். நன்மை தீமைகளைக் கண்டறியவல்ல அறிவாற்றலால் சிறந்து, உள்ளத்தைத் தீதின்பால் செல்லவிடாது அடக்கித் தம்மை விட்டு அகன்றுவிடாவாறு. அன்பையும், அறனையும் தம்மகத்தே அடக்கிப் பழியொடு பட்டன தம்மை அண்டாவாறு அகற்றிப் பெரும்புகழ் வாய்ந்து, காவிதிப்பட்டம் வழங்கப்பெற்ற அமைச்சர் பெருமக்களின் பெருமனைகள் அடுத்து அமைந்திருக்குக் கொடுப்பது குறைபடாக் கொள்வது மிகைகொளா, வணிக அறம் பிழையாப் பெருஞ்செயலாலும், மாநிதி உடைமை யாலும் புகழ் வாய்ந்த, மலைபடு பொருட்கள், நிலந்தரு பொருட்கள், கடல்படு பொருட்களாம் பல்வகைப் பண்டங்களில் வாணிகம் நடாத்தும், நாடாளும் மன்னர் நிகர். வணிகப் பெருமக்களின் வாழிடங்கள், அடுத்து இடம் பெற்றிருக்கும். அரசியல் அங்கமாம், ஐம்பெருங்குழுவில், அமைச்சர் நீங்க உள்ள நால்வராம், புரோகிதர், படைத் தூதுவர், ஒற்றர் ஆகியோர் குடியிருப்புக்கள் அடுத்து வரும். இவ்விடங்களை அடுத்து, சங்கறுத்து வளையல் முதலியன வனைவார், முத்து மணிகளுக்குத் துளையிடுவார், பொன்னணி புனையும் தட்டார், செப்புக்கலங்கள் செய்வார்,

ஆடைகள் நெய்வார், அழகிய உடைகள் தைப்பார், மணப்பொருளும், மலர்களும் விற்பார், எத்தகு நிகழ்ச்சியையும், இனிய உவமைகள் மூலம், வண்ணக்கலவையில் வரைந்து காட்டவல்ல ஓவியர் போலும் கைவினைஞர்கள் வாழும் குடியிருப்புக்கள் வரிசை வரிசையாக இடம் பெற்றிருக்கும். இவர்களும், இவர் போலும் பிறருமாகிய மாநகரத்து மக்கள், வாணிகம் கருதியும், வளமார் இன்ப நாட்டம் கொண்டு, வீதிகளில், இயங்குதற்கு இனி இடம் இல்லையாமாறு வந்து குவிந்துவிடுவதால், நாம், ஒருவர் காலோடு, ஒருவர் கால் வந்து நிற்க வேண்டியதாகிறது. அம்மக்கள் கூட்டம் எழுப்பும், காது செவிடு படுத்தும் பேரொலிகள் ஒருபால் இருக்க, நகரின் நால்வேறு தெருக்களிலும், பலாச்சுளை, மாங்கனி, மற்றும் பல்வேறு கனிவகைகள், காய்கள், கீரைகள், கற்கண்டு, உண்டற்கினிய வள்ளிக்கிழங்கு, உண்பார் அனைவரும், புகழப்பண்ணப் பட்ட, இறைச்சி கலந்த இனிய சோறு ஆகியவற்றை, வருவார்க் கெல்லாம் விருந்தாகப் படைப்பது நிகழும் அந்தி அங்காடியின் ஆரவாரம், நாளங்காடி ஆரவாரத்திலும் மிக்க ஒலிக்கும். ஆங்குக்காணலாம் அத்துணைக் காட்சிகளும், காற்றால் கொண்டு வரப்பட்டு கரை சேர்ந்திருக்கும் கலங்கள், பண்டங்கள் இறக்கப்பட்டும், ஏற்றப்பட்டும், பாய்விரித்த, எழுந்து அடங்கும் கடல் நீரில் மீண்டும் புகுந்து ஓடும் கடற்கரைக் காட்சியைக் காட்ட வல்லவாம்.

ஞாயிறு வீழ்ந்து விட்டது; திங்கள் எழுந்து விட்டது. என்றாலும், நகரம், இன்னமும் ஓய்வு காணவில்லை. மனைகளில் விளக்கேற்றல், மாநகரத்து அழகிய மகளிர், தங்களை, இன்ப நாட்டங்களுக்குத் தயார் செய்து கொள்ளும் அறிகுறியாய் அமைந்தது. அதுபோலவே, ஆடவர், மகளிர் என்ற இரு சாராரிலும், நாணித்தலைகுனியவைக்கும் பழிமிகு இழிகுணம் வாய்ந்தார், புறம் போந்து திரிவதற்கும், அவருள்ளும் ஒரு சிலர், பாகனையே கொன்று வீழ்த்துமளவு, களிறுகள் மதங்கொண்டு விடும்போது, அவை, மேலும் ஓடாவாறு, அவற்றின் கால்களைக் குத்திப் புண்ணாக்கித்

தடுக்கும் வண்ணம், அவற்றைச் சுற்றிக் கொட்டப் பட்டிருக்கும் ஆணிகள், தம் கால்களை உறுத்தி ஊறு விளைப்பதையும் உணர்ந்து கொள்ள இயலாவாறு, கள்ளை மிகக்குடித்து மயங்குவதற்கும், அதுவே ஏற்புடைக் காலமாம். ஆனால், பிறரால் பெரிதும் மதிக்கத் தக்க பெருமக்களும், அத்தெருக்களில் காணப்படுவர், அண்மையில் முதல் மகவு ஈன்ற இளமகளிர், ஈன்ற புனிறு தீர்ந்து புனிதம் பெறக் குளத்தில் சென்று நீராடப் போவர். முதற் கருவுற்ற இளமகளிர் இனிதே மிகப்பெற்று, அவரொப்ப வாழ்வு பெறுவான் வேண்டித் தேவராட்டியைப் பணிந்து வழிபடப் புறம் போவர், நடந்தனவும், நடக்க இருப்பனவும் அறிந்து உரைக்கும் வெறியாடு வேலன் குலத்து வந்தார், காதல் நோயுற்று வருந்திக் கிடக்கும் இளமகளிர் மனைகளில் வந்து குழுமி, அந்நோய், எந்தக் கடவுளால் வந்தது எனக் கண்டு கொள்வரோ. அக்கடவுள் புகழ்பாடும் பாக்களைக் காதுசெவிடுபடப் பாடி, அக்கடவுளின் சினத்தைத் தணிவிப்பர். இவையல்லாமல், ஒவ்வொரு தெருவும், அவற்றிற்கே உரிய ஆடல்களாலும். ஆரவாரம் மிக்க களியாட்டங்களாலும் நிறைவுற்றிருக்கும்.

ஆடலும் பாடலும், படிப்படியாக உரம் இழந்து அடங்கிப் போகும். நடுயாமம் வரையும், இரவு இவ்வாறு கழிந்தது. சிறுகடையாளர்கள், மூங்கிலிலான படல்களைக் கால் இறக்கித் தாழ்த்திக் கொண்டு உறங்கலாயினர். இனிய தின்பொருள்களை விற்கும் எளிய வணிகர். அக்கடைகள் முன்னரே கிடந்து உறங்கலாயினர்; கூத்தாடுவாரும், வேறுபல இன்பக் களியாட்டம் காட்டுவாரும், அவ்வாறே ஓய்வு கொள்வாராயினர். அலை யோசை அடக்கிய கடலே போல், மாநகரம், உறக்க மயக்கத்தால் போர்க்கப்பட்டுவிட்டது. மதுரை மாநகர், மீண்டும், கடலே போல் நிரந்தர ஓய்வு கொண்டு விடவில்லை. காரணம் : ஒழுக்க நெறி நிற்பார் உறங்கச் சென்று விட்டனர் என்றாலும், பேயும், பேய் நிகர் மாந்தரும், அணங்குகளும், தங்கள் அழிவுச் செயல்களை ஆற்றுவான் வெளிப்பட்டுவிட்டனர். நம்புலவர் ஆவியுலகக்

கோட்பாட்டாளர் அல்லர்; அதனால், அணங்குகள், ஆவியுருவப் பேய்கள் பற்றிய விளக்கங்களைக் கூறத் தவறிவிட்டார், அதற்கு மாறுகத் தொட்டுத் தொடர்பு கொள்ளத்தகு இனமக்கள் குறித்து, அவர் மிகமிகத் தெளிவாக உணர்த்திருப்பதாகத் தெரிகிறது. தம் காலத்துக் கள்வர்களின் ஆடைவகைகள் அவர் கையாளும் படைக்கல வகைகளை, மிகவும் நுணுக்கமாக விளக்கியுள்ளார். அவற்றை அப்படியே மீண்டும் உருவாக்கும் வாய்ப்பினை வழங்குவது நம்மால் இயலாது. தற்காத்துக் கொள்ளவும், தாக்கவும் உதவும் படைக்கலங்களே அல்லாமல், அக்கொடியவர்கள், மாளிகைகளின் மேற்கூரைகளையும், மதில்களையும் ஏறி உட்புக நூலேணிகளையும் உடன் கொண்டு செல்வர். என்றாலும், இரவின் நகர்க்காவல், நனி மிகப்பெரிதாம் ஆதலின் அப்படைக்கலங்கள் பயன்படுவ அல்ல. தம் காலத்திய நகர்க் காவலர்தலைவர் பற்றிய, புலவர் விளக்கம் நம்பக் கூடியதாயின், அவர்கள், வியத்தகு வகையில், திறமை வாய்ந்த, ஒப்புயர்வற்ற ஓர் அமைப்பினராவர். கள்வரையும், அவர்தம் வழிமுறைகளையும். சூழ்ச்சித் திறனையும் கண்டு கொள்ளவல்ல களவியில் அறிவினை முழுமையாகப் பெற்றவராவர். இவை அனைத்திலும் மேலாக அவர்தம் உயர்ந்த கடமையுணர்ச்சி மிகப்பெருமளவில், பாராட்டிற் குரியது. வீதிகளெல்லாம் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடப் பெருமழை பெய்யும் இரவின் நடுயாமத்தும், நகர்க்காவலாம் தம் கடமைமறந்து, செல்லாதிருப்பதோ, இமைப்போதேனும் உறக்கம் கொள்வதோ செய்யார். அத்தகு நகர்க்காவலர் படைத் தொகுதியால் காக்கப்பட்டு வந்தமையால், நகரம் கவரையறியாக் கடுந்துயிலில் ஆழ்ந்து விடுவதில் வியப்பேதும் இல்லை.

ஆனால், அவ்வினிய அமைதிச் சூழ்நிலை, நெடும் பொழுது நிலைத்திருக்கவில்லை. பொழுது விடிவதற்கு நெடு நாழிகைக்கு முன்னரே, மலரும் பருவத்துப் பேரரும்புகளை மெய்த்துக் கொண்டு, வண்டுக்கூட்டம் முரல்வதுபோல், பிராமணர்கள் வேதம் ஓத, நாம் கேட்கிறோம். இசைச்

கருவிகள் இனிய இசையெழுப்பும் நிலையினவாக உள்ளனவா என்பதை உணர, இசைவாணர்கள், அக்கருவிகளில் எழுப்பும் இன்னோசை அடுத்துக் கேட்கத் தொடங்கிவிட்டது. இனிய கணவரோடு இன்பம் கண்டு உறங்கிய இல்லறத் தலைவியர், விழித்து எழுந்து தங்கள் மனைகளை, மாட்டுச் சாணங் கொண்டு மெழுகித் தூய்மை செய்யலாயினர்; கள்விலை யாளர், கணப்பொழுதும் பின் தங்கி விடுவாரல்லர்; வழக்க மான வாடிக்கையாளர் கூடியிருந்து குடிக்கும், கள் வழங்கு மிடங்களை நோக்கிக் களிப்போடு செல்லாயினர்; வீடுகள் தோறும், வாயிற்கதவுகள் திறக்கப்படுங்கால் எழும் கிரீச் எனும் ஒலி, நகரம், ஆழ்ந்த உறக்கத்திலிருந்து விரைந்து விழித்துக் கொள்கிறது என்பதை அறிவிப்பதாய் அமைந்தது. நெடுந்துயில் கொள்ளும் இயல்பினவாய கோழிச் சேவல் களின் கூலலோடு, அதிரமுழங்கும் முரசுகளின் முழக்கம், பல்வெறு பறவைகளின் பாட்டொலி, மயில்களின் அகவல், விலங்குப் புகலிடங்களில் அரசு வைத்து வளர்க்கும், களிறுகளின் பிளிறல், புலிகளின் முழக்கம் ஆகியனவும் பங்கு கொண்டன. செல்வர்களின் மாளிகை முற்றங்கள், பேணப்படும் பொருளாக முன்னாள் கருதப்பட்டு, இன்று குப்பையாகிவிட்ட, சூடிக்கழித்து உதிர்த்த மலர்வாடல்கள் அகற்றப்பட்டுத் துப்புரவு செய்யப்பட்டன. பொழுது, விரைந்து புலரவும், பல்வறே போர்க்களங்களிலிருந்து மீளும் வேந்தன் நாற்படை. களிறுகள், குதிரைகள், கைப்பற்றிய கோட்டைகளின், அணி நலம் சிறந்த அழகிய வாயிற்கதவுகள், பகைவர் நாட்டை எரியூட்டிக் கவர்ந்து, பகைகொல்லும் வேற்படைக் காம்புகளையே, கோலாகக் கொண்டு ஓட்டி வந்த பசுநிரைகள் ஆகிய திறைப் பொருள்களையும் உடன் கொண்டு வருவவாயின, வெற்றி கொள்ளப்பட்ட சிற்றரசர் கூட்டம், மதுரை மாநகரத்து வேந்தன் விழித்து எழுந்ததும், அவன்பால் சமாதானத்தை இரந்து பெறுவான் வேண்டி, அவ்வெற்றிப் படைகளின் அணி வகுப்பைத் தொடர்ந்து வரலாயினர். வெற்றி, கொண்டு மீளும் நாற்படைகளின் பேரணி, அதைத் தொடர்ந்து, தோற்ற அரசர்கள், திறை தந்து பணிந்து போக வருவது ஆகிய இவை, மதுரை மாநகர்க்கு

நாம் சென்ற அற்றைக் காலைப்போதில் மட்டுமே நிகழ்ந்த நிகழ்ச்சிகளாகக் கருதி விடுவதைத் தடுப்பான் வேண்டி, கங்கைப் பேராறு, தான் கொண்டு வரும் அரும் பொருட்குவியல்களையெல்லாம் கடலில் சேர்ப்பது போல, உலகத்துப் பொருட்கள் எல்லாம், இன்று போலவே, ஒவ்வொரு நாளும், அம்மாநகருள் வந்து பாயும் என்பதையும், புலவர், சேர்த்துக் கூறியுள்ளார். ஊர்வலம், நம்மைக் கடந்து கொண்டிருக்கும்போதே, வானத்தில் ஞாயிறு எழுந்து விடுகிறான்; மதுரை மாநகரும், முன்னாள் காலையில், அம்மாநகருள் நுழைந்தபோது, நாம் கண்ணுற்ற, மக்களின் ஆரவாரப் பெருங்கூட்டத்தையும், குழப்பத்தையும் மீண்டும் காட்டத் தொடங்கி விட்டது. Madras Christian College Magazine 1901. P. 120 - 124.

புலவர்களைப் புரத்தல் :

பழைய தமிழரசர்கள் பலரையும் போலவே, நெடுஞ்செழியனும், புலவர்களைப் பேணிகாக்கும் மிகப்பெரிய புரவலனாவன். புகழ் பெற்ற தலையாலங்கானப் போர் நிகழ்வதற்கு முன்னர்ப் பதினெட்டு வரிகளைக் கொண்ட ஒரு பாடலை அவனே பாடியுள்ளான். அதில் அவன் இவ்வாறு கூறுகிறான்; "இவன் ஆளும் நாட்டைப் புகழ்ந்து கூறுவார் நம்மால் எள்ளி நகையாடற்குரியர் என்றும், இவனோ நனிமிகு இளையன் என்றும், நான் வெறுக்கப் பழித்துரைத்து, ஒலிக்கும் மணிகள், இருபக்கமும், ஒன்றோடொன்று மாறி ஒலிக்க, எடுத்துவைக்கும் பெரிய கால்களைக் கொண்ட நெடிய களிற்றுப் படையினையும், தேர்ப்படையினையும், குதிரைப்படையினையும், படைக்கலப் பயிற்சி வல்ல வீரர்களையும் உடையேம் யாம் எனக்கூறிச் செருக்குற்று, என் பேராற்றல் கண்டும் அஞ்சாது, ஆணவம் மிகக் புல்லிய சொற்களைச் சொல்லிய அப்பகையரசர் களைப் போரில் சிதைந்தோடப் போரிட்டு வென்று, அவர்களின் போர் முரசுகளோடு அவர்களையும் கைக்கொள்ளேனாயின், என்குடை நிழற்கீழ் வாழும் என் நாட்டு மக்கள், தாங்கள் வாழத் தகுதி வாய்ந்த நிழல்தரு நிலம்

காண மாட்டாது, கொடியன் எம் காவலன் என, என் அரசைப் பழிதூற்றும் கொடுங்கோலன் ஆவேனாகுக நான்; சிறந்த தலைமையும் பரந்த கேள்வியும் வாய்ந்த மாங்குடி மருதன் முதலாக உள்ள, உலகெலாம் புகழும் புலவர் பெருமக்கள், என்னையும் என் நாட்டையும் பார்ராட்டுவதைக் கைவிடுவாராக! என்னால் புரக்கப்பட வேண்டிய என் சுற்றத்தாரின் வறுமைத் துயர்க் கொடுமை பெருமளவு, நான் வறுமையுற்றுப் போவேனாகுக."

"நகுதக்கனரே, நாடுமீக்கூறுநர்;
இளையன் இவன் என உளையக் கூறிப்,
படுமணிஇ ட்டும் பாவடிப் பனைத்தாள்
நெடுநல் யானையும், தேரும், மாவும்,
படையமை மறவரும் உடையம்யாம் என்று,
உறுதுப் பஞ்சாது உடல்சினம் செருக்கிச்
சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை,
அகுஞ்சமம் சிதையத் தாக்கி, முரசமொடு
ஒருங்கு அகப்படே எனாயின், பொருந்திய
என்நிழல் வாழ்நர், செல் நிழல் காணாது
கொடியன் எம் இறை எனக் கண்ணீர் பரப்பிக்,
குடிபழிதூற்றும் கோலேனாகுக!
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி,
மாங்குடி மருதன் தலைவனாக,
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாதுவரைக என் நிலவரை!
புரப்போர் புன்கண்கூர
இரப்போர்க்கு ஈயா இன்மை யான் உறவே!"

- புறம் : 72.

தன் அரசவைப் புலவர் குழாத்தின், மாங்குடி மருதனாரின் தலைமை பற்றிய நெடுஞ்செழியனின் நற்சான்றிதழ்,

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் புகழ் பாடுவதாக் கூறப்படும், பத்துப்பாட்டில் ஒன்றாகிய, நெடுநல்வாடையின் ஆசிரியராகிய நக்கீரர், மதுரையில் நிலவிய தமிழ்ச் சங்கத்திற்குத் தலைவராவர் என்பது ஒரு கட்டுக் கதையே என்பதை உணர்த்துவதாகும் என்பது ஈண்டு, இடையில், குறிப்பிடல் ஆகும். நக்கீரர், சிவனைப் பற்றிப் பாடியுள்ளாராதலின், இக்கட்டுக்கதை சைவர்களால் கட்டிவிடப்பட்டதாகும். இன்றைய எழுத்தாளர் சிலரால், இக்கதை, நெடுஞ்செழியன் தானே அளிக்கும் அகச்சான்றுக்கும் மாறாக, வேதவாக்காகக் கொள்ளப்படுகிறது.

இக்காலத்திய கடைசி பாண்டிய மன்னன் :

இப்பழைய பாண்டியர் குலத்துக் கடைசி மன்னன், உக்கிரப் பெருவழுதி, அல்லது உக்கிரபாண்டியன் ஆவன். சமஸ்கிருதப் பட்டப்பெயரோடு, பழைய தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஒரே பாண்டியன் இவன் ஒருவனே என்பது குறிப்பிடல் தகும். ஆகவே, இவனைப் பழைய சோழர்குலத்தில், இராசசூயம் வேட்ட என்ற சமஸ்கிருதப் பட்டத்தைத் தன் பெயரிலே கொண்டவனின் சமகாலத்தவனாக, நண்பனாகக் கண்டுகொள்வதில் ஏதும் வியப்பு இல்லை. உக்கிர பாண்டியன் புகழுக்கு உரிய ஒரே போர்க்கள நிகழ்ச்சி. வேங்கை மார்பன் என்ற ஒரு குறுநிலத் தலைவனுக்குரிய கானப்பேரெயில் என்ற கோட்டையைக் கைப்பற்றியது மட்டுமே; ஒரே ஒரு புறப்பாட்டு (எண் : 21) இவன் புகழ் பாடுகிறது. பழந்தமிழ்ப் புலவர்களில், கடைசி புலவரும், புகழ் பெற்ற பெண்பாற் புலவருமான ஔவையாரால் பாடப்பெற்ற மற்றொரு புறப்பாட்டு, (எண் : 377) கொளுவின் கூற்றுப்படி, உக்கிரபாண்டியன், பெருநற்கிள்ளி, சேரர் குலத்தலைவன் மாரிவெண்கோ ஆகிய மூவரும் ஒருங்கிருந்தவழிப் பாடப்பட்டதாகும். மூலம், அப்பெயர்களைக் குறிப்பிடவில்லை என்றாலும், கொளுவில் உள்ள செய்தி நம்புதற்குரியது என்றே நான் கருதுகின்றேன்.

செவிவழிச் செய்தி, உக்கிர பாண்டியன், அகநானூற்றுப் பாடல்களை, ஒரு தொகை நூலாகத் தொகுக்க ஆணை யிட்டான் எனக் கூறுகிறது. இக்கூற்று, மூன்றாம் சங்கம் இவனோடு முடிவுற்றது என்ற இறையனார் அகப்பொருள் உரைக் கூற்றோடு பொருந்தியுளது. அங்ஙனமாயின், இப்போது, நாம் பெற்றிருக்கும் அகநானூற்றில் உள்ள ஒவ்வொரு பாட்டும், காலத்தால், உக்கிரப் பெருவழுதிக்கு முந்தியது என்பது பொருளாகாது. தற்காலிக முதல் தொகுப்பு அவன் காலத்தில் செய்யப்பட்டது : அத்தொகை நூல், நானூறு என்ற முழு எண்ணைப் பெறும் வரை அது, பிற்காலத்தே பெருகியிருக்க வேண்டும். உக்கிரபாண்டியன், கடைசி பாண்டியனாக, அகப்பொருள் உரையாசிரியரால் குறிப்பிடப்பட்டிருப்பது, தமிழகத்துச் சிறந்த வரலாற்றின் பெரும்பகுதியை மறைத்துவிட்ட ஒரு பேரழிவு தமிழகத்தை மேற்கொண்டு விட்டது என்பதைக் குறிப்பிடுவதாம். அயபேரழிவு என்ன என்பது, பின்வரும் அதிகாரம் ஒன்றில் விவாதிக்கப்படும்.

இவ்வதிகாரத்தில் குறிப்பிட்ட அரசர்களே அல்லாமல், புறநானூற்றுக் கொளுக்கள், ஒவ்வொன்றும் பாண்டியர் என்னும் பொருளே உடையதான, செழியன் பஞ்சவன், தென்னவன், வழுதி, மாறன் மீனவன், கௌரியன் என்ற பட்டப் பெயர்களில், ஒன்றையோ ஒன்றுக்கு மேற்பட்டன வற்றையோ கொண்டுள்ள, வேறுசில அரசர்களையும் குறிப்பிடுகின்றன. அவர்கள் ஒவ்வொருவரும் தமக்குள்ளே என்ன உறவுடையர் என்பதைக் கண்டறிவது இயலாது; பாண்டியப் பேரரசன் தலைநகரில் இருந்து ஆட்சி புரிவது இயல்புடையதே. பாண்டியர், ஆரியமயமாக்கப்பட்ட பின்னர், அவர்கள், திங்களின் வழிவந்தவர். பாண்டியர் அரச குமாரி சித்ராங்கதா வழி பிறந்த அர்ச்சுனன் மகன், சித்ராங்கதாவின் தந்தைக்குப் பிறகு பாண்டியர் அரியனை ஏறினான். அதன் பின்னர்ப், பாண்டவர்களைப் போலவே, பாண்டியருள் ஒரு காலத்தே ஐவர் ஆயினர் என்ற பழங்கதைகள் எழலாயின. அன்றுதொட்டு அவர்களுக்குப் பஞ்சவர் என்ற பட்டம்

வழங்கப்பட்டது. (வெள்ளியம் பலத்துத் துஞ்சிய பாண்டியன், புறநானூற்று செய்யுள் ஒன்றில், "பஞ்சவர் ஏறு" (ஐவருள் கொல்லேறு போன்றவன்) என அழைக்கப்பட்டான். "செருமான் பஞ்சவர் ஏறே" (58 : 8.). பாண்டவர் வழி வந்தவர் என்ற மரபு தோற்றுவிக்கப்பட்ட பின்னர், இம்மரபின் பெருமையைக் காத்தற்பொருட்டு, பாண்டிய அரசர்களும், கி. பி. 13ஆம் நூற்றாண்டில் நடைபெற்றதாகக் காணப்படுவதுபோலவே, ஒரே காலத்தில் ஆட்சி புரிந்த, ஐந்து சிற்றரசர்களாவே கணக்கிடப்பட்டனர்.

♦ ♦ ♦

15. சேர அரசர்கள்

பெருஞ்சேரல் ஆதன் :

இவ்வேந்தன் வெண்ணிப் போர்க்களத்தில் கரிகாலனால் தோற்கடிக்கப்பட்டு, அப்பழி துடைத்தற்பொருட்டு அப் போர்க்களத்திலேயே வடக்கிருந்து உயிர்துறந்தான். ஆகவே, இவன், கி.பி. 400க்கு முன்னர் அதாவது, கரிகாலன் சோழ நாட்டின் மரபுவழி எல்லைக்கு அப்பாலும் தன் பேரரசை விரிவாக்கியதற்கு முன்னர் வாழ்ந்திருக்க வேண்டும். இவ்வாதன் அவ்வப்போது பாடப்பட்ட பல்வேறு பாக்களில் குறிப்பிடப்பட்டுள்ளான். ஆனால், ஐந்து ஆறாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த பேரரசர்கள் குறுநிலத்தலைவர் களின் புகழ் பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து போலும் பெயரிய பாக்கள் எவையும், இவன் புகழ்பாட இயற்றப்படவில்லை. அவன் வாழ்க்கையில் அறியப்பட்ட ஒரே நிகழ்ச்சி, மேலே குறிப்பிட்ட ஒரே பொருள் குறித்த, கீழே வரும் கையறு நிலைச் செய்யுட்பொருள் ஒன்றே. முழவு மார்ச்சனை இடுதல் ஒழிய, அதாவது முழங்குவதைக் கைவிட, யாழ் பண்ணிசை எழுப்புவதைக் கைவிட அகன்ற பெரிய பால்பானை, பால் இன்மையால் கவிழ்த்துப் போடப்பட்டு நெய்கடை தலை இழக்க, பாணர் பொருநர், புலவர் போலும் இரவலர், வண்டுகள் மொய்க்கும் புதுமதுவை உண்ணுவதை மறக்க, உழவர், உழவுத் தொழில் ஓசைகளைக் கேளாது ஒழிய அகன்ற நெடிய தெருவுகளையுடைய சீறூர்கள் விழக்களை இழந்துபோக, முழு நிலா வந்து கூடிய நாளின் மாலைப் போழ்தில், ஞாயிறும் திங்களும் ஆகிய இரு சுடர்களும் தம் முன் எதிர் நின்று பார்த்து, இறுதியில், அவற்றுள் ஒரு சுடர், புல்லிய மாலைப் போதில், மலையுள் புகுந்து மறைந்தாற் போலத், தன்னையொத்த பேரரசன், வெற்றியாக எண்ணி

உண்டாக்கிய புறப்புண்ணுக்கு நாணி, மறம்செறிந்த வேந்தன் வாளோடு வடக்கிருந்து உயிர்துறந்தான். இனி, ஞாயிறு காயும் பகல், அவனை இழந்து தனித்து வாழும் எமக்கு, முன்பு கழிந்த நாட்கள் போல, இனிமையுடையவாகக் கழியா."

"மண்முழா மறப்ப ! பண் யாழ் மறப்ப;
இருங்கண் குழிசி கவிழ்ந்து இழுது மறப்பச்
சுரும்பு ஆர் தேறல் சுற்றம் மறப்ப,
உழவர் ஓதை மறப்ப, விழவும்
அகல்உள் ஆங்கண் சீறூர் மறப்ப,
உவவுத்தலை வந்த பெருநாள் அமையத்து
இருசுடர் தம்முள் நோக்கி ஒருசுடர்,
புன்கண் மாலை மலை மறைந்தாங்குத்,
தன் போல் வேந்தன் முன்பு குறித்து எறிந்த
புறப்புண் நாணி, மறந்தகை மன்னன்
வாள்வடக் கிருந்தனன்; ஈங்கு
நாள்போல் கழியல, ஞாயிற்றுப் பகலே".

- புறம் : 65.

பாட்டின் கொளுவிலிருந்து, வாள் வடக்கிருந்து உயிர் பிறந்த வேந்தன் சேரமான் பெருஞ்சேரலாதன் என அறிகிறோம்.

இதே நிகழ்ச்சி, அல்லது அதன் விளைவுகள் அக நானூற்றில் விளக்கப்பட்டுள்ளன. "கரிகால் வளவனொடு வெண்ணிப் போர்க்களத்தில் போரிட்டுப் புறப்புண் பட்டமைக்கு நாணிய பெருஞ்சேரலாதன், போரிட்டு அழிந்த அக்களத்தின் ஒருபால், வாளோடு வடக்கிருந்து உயிர் துறந்தான் என்ற, இன்னாமையும் இனிமையும் கலந்த செய்தியைக் கேட்ட சான்றோர்கள், பெறுதற்கரிய துறக்கத்திற்கு, அவனோடு செல்லும் பொருட்டுத் தாமும் உயிர் விட்டனர்."

"கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்,
பொருது புண்நாணிய சேரலாதன்,
அழிகள மருங்கின் வாள் வடக்கு இருந்தென
இன்னா இன்னுரை கேட்ட சான்றோர்
அரும் பெறல் உலகம் அவனொடு செலீஇயர்".

- அகம் : 55 : 10 -14.

இப்பாட்டு, பிற்காலப்புலவராகிய மாமூலனாரால் பாடப்பெற்றது. ஆகவே, அது, வீர சுவர்க்கம் அடைய வடக்கிருந்து உயிர்துறக்கும், ஓர் ஆரியக் கோட்பாட்டைப் பேசுவதன் பொருத்தத்தை விளக்குகிறது. இப்பாட்டு, அவ்வரசனைச், சேரலாதன் என்கிறது ; புறம் 65ன் கொளு, "பெரும்" என்ற அடையினை, முன்னே கொடுத்துப், பிற சேரலாதன்களினின்றும் வேறுபடுத்துகிறது. மற்றொரு பாடம், அவனைப் "பெருந்தோள் ஆதன்" "பெரிய தோள்களையுடைய ஆதன்" ஆக்குறிது.

பெருஞ்சோற்று உதியன் :

வரலாற்றுச் செய்திகள் சில, நமக்குத் தெரியவிருக்கும் முதல் சேரப்பேரரசன், பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் ஆவன். இவன் பெயருக்கு முன்னால் இகாடுக்கப் பட்டிருக்கும், பெருஞ்சோறு என்ற அடைமொழி அவன் சமகாலப்புலவர் முரஞ்சியூர் முடிநாகராயர், அவனைப் புகழ்ந்து பாடிய ஒரு புறப்பாட்டு, முழுமையாக எடுத்துக் கூறப்பட்டு, வரிக்கு வரி ஆராய்ந்து நோக்க வேண்டுமனவு, பண்டைக்காலத்திலிருந்தே, பெரிதும், தவறாகப் பொருள் கொள்ளப்பட்டு வந்துளது; பொருளற்ற கற்பனைக் கதைகள் எழச்செய்துவிட்டது. அது இவ்வாறு கூறுகிறது ; "அணுத்திரள்களால் செறிந்த நிலமும், அந்நிலத்தை அடிப் படையாக் கொண்டு ஓங்கிய ஆகாயமும், அவ்வாகாயத்தைத் தழுவி வரும் காற்றும், அக்காற்றின்கண் தலைப்பட்ட தீயும், அத்தீயோடு மாறுபட்ட நீரும் எனக்கூறப்பட்ட ஐம்பெரும் பூதங்களின் தன்மைபோலப், பகைவர் பிழை செய்தால்

அப்பிழையைப் பொறுத்துக்கொள்ளுதலும், அவர் செய்த பிழை, பொறுத்துக் கொள்ளலாகாப் பெரியதாயின், அவரை அழித்தற்காம் வழிமுறைகளை ஆராய்ந்து நேக்கும் பரந்த ஆராய்ச்சி உணர்வும், அவரை அழித்து ஒழித்தற்கேற்ற மனவலி, படைவலிகளும், அவற்றால் அவரை அழித்தலும், அவர் பணிந்து வழிபட்டால் அவர்பால் காட்டும் அருளும் ஆகிய இவ்வகைப் பண்புகளையும் உடையோய்! நினக்கு உரிமையுடைய கீழ்க்கடலில் காலையில் தோன்றும் ஞாயிறு, மீண்டும் உனக்கு உரிமையுடையதான, வெள்ளிய தலை களையுடைய அலைகளைக் கொண்ட மேல் கடலில் மூழ்கு தற்கு ஏற்ப, இடையறாப் புதுவருவாய்களைக் கொண்ட ஊர் களையே கொண்ட, மிகப்பரந்த நல்ல நாட்டின் வேந்தே! வானவரம்பன் எனும் பெயர் உடையாய்! பெருமானே! அசையும் தலையாட்டம் அணிந்த குதிரைப்படையுடைய பாண்டவர் ஐவருடன், சினங்கொண்டு, அவர் நிலத்தைத் தமதாகக் கொண்டுவிட்ட, பொன்னால் ஆன தும்பை மாலை யுடையோனாகிய துரியோதனன் முதலாகிய நூற்றுவரும் போரிட்டு போர்க்களத்தின்கண் அழியும் வரை, பெரும் சோறு ஆகிய மிக்கஉணவை, அவ்விருவர் படைக்கும் வரை யாது வழங்கியவனே! பால், தன் இனிமைப் பண்பை இழந்து புளிப்பினும், ஞாயிறு, ஒளிதரும் தன் இயல்பு கெட்டு இருளினும், நான்கு வேதங்களில் ஒழுக்க நிலைகெட்டு வேறுபடினும், தம் இயல்பில் வேறுபாடு இல்லாத, சூழ்ச்சித் திறம் மிக்க மந்திரச் சுற்றத்தாருடன், அழியாது நெடுங்காலம், புகழ்மிகவாழ்ந்து, நடுக்கம் இன்றி நிலைத்து நிற்பாயாக! பக்கமலைக்கண், சிறிய தலைகளையுடைய குட்டிமான்களைக் கொண்ட, பெரிய கண்களையுடைய பெண் மான் கூட்டம், அந்திக்காலத்தில், அந்தணர்கள், தாம் ஆற்றவேண்டிய செயற் கரிய கடனாகிய, ஆவுதி அளித்து எழுப்பும் முத்தீ அளிக்கும் பேரொளியின்கண், அச்சம் ஒழிந்து இனிதே உறங்கும் பொற்சிகரங்களையுடைய இமயமலையும், பொதிய மலையும் போல, உயர்ந்து நின்று, நடுக்கின்றி, நெடிது வாழ்க!"

"மண் திணிந்த நிலனும்,
நிலன் ஏந்திய விசும்பும்,

விசும்பு தைவரு வளியும்,
வளி தலைஇய தீயும்
தீ முரணிய நீரும் என்றாங்கு,
ஐம்பெரும் பூதத்து இயற்கை போலப்,
போற்றார்ப் பொறுத்தலும், சூழ்ச்சியது அகலமும்,
வலியும், தெறலும், அளியும் உடையோய்!
நின்கடல் பிறந்த ஞாயிறு, பெயர்த்தும் நின்
வெண்தலைப் புணரி குடகடல் குளிக்கும்,
யாணர் வைப்பின் நன்னாட்டுப் பொரு நர்!
வான வரம்பனை ! நீயோ, பெரும!
அரங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ,
நிலந்தலைக் கொண்ட, பொலம்பூந் தும்பை,
ஈரைம்பதின்மரும், பொருது களத்து ஒழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்!
பாஅல் புளிப்பினும், பகல் இருளினும்,
நாஅல் வேத நெறி திரியினும்,
திரியாச் சுற்றமொடு முழுது சேண் விளங்கி.
நடுக்கின்றி நிலியரோ! அத்தை ; அடுக்கத்துச்
சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை,
அந்தி அந்தணர் அருங்கடன் இறுக்கும்
முத்தீ விளக்கில் துஞ்சும்
பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்றே".

- புறம் : 2.

பதினைந்து பதினாறாம் வரிகள் பொருள் தெளிவில்லாமல் உள்ளன. "போர்க் களத்தில் ஈரைம்பதின்மர் வீழ்ந்து ஒழிய பெருஞ்சோற்றினை வரையாது வழங்கின" என்கின்றன அவ்வரிகள். "ஒழிய" என்ற வினையெச்சம், பல் பொருள் தரவல்லது : 1) அவர்கள் வீழ, அதன் காரணத்திற்காக, 2) அவர்கள் வீழ்ந்த போது என்ற இவ்விரு பொருள்கள்,

அவற்றுள் முக்கியமானவை. இவ்விரண்டனுள், பின்னது, அவர்கள் வீழ்ந்த அந்தக் காலம், அல்லது, அவர்கள் வீழ்ந்த பின்னர், (அது, எவ்வளவு காலத்திற்குப் பின்னர், நாம் அறியோம்) என, இவ்விருவகையாலும் பொருள் படுமாதலின், அது, தவறான பொருள் கொள்ளவும் இடந்தரவல்லதாம். வீழ, அதன் காரணமாக என்ற முதற்பொருளே, பொருந்தும் பொருள் ஆகும். ஆனால், தொடக்க நாட்களிலிருந்தே, தமிழ்ப் பேராசிரியர்கள், உதியஞ்சேரலாதன். அப்போர்க் களத்தில் இருந்தான் என்ற யூகத்தைத் தேவையுடையதாக்கும் வகையில், அத்தொடர்க்கு, அவர்கள் வீழ்ந்த அந்தக் காலம் என்ற பொருளே கொண்டுள்ளனர். அவர்களைப் பின்பற்றிப் புறநானூற்று உரையாசிரியரும், தம்முடைய உரையில், மூலத்தில் காணப்பெறாத, ஆனால், தம்முடைய பரந்த நூலறிவு, நுண்ணிய ஆராய்ச்சிகளின் பயனாகக்கண்டு கொண்ட பலசெய்திகளைக் கொண்டு வந்து இணைத்து, இச்சேர வேந்தன், போரிடும் இருதிறப் படைகளுக்கும், பெரும்பாலும் அப்போர் முடியுங்காறும், வரையாது உணவு பழங்கினான் என்று கூறியுள்ளார். (உணவை இரு படைக்கும் வரையாது வழங்கினோய்!" -புறம் : இரண்டாப்பதிப்பு : பக்கம் : 7) இப்புதுக் கருத்தைத், தம் உரையில் நுழைப்பதில், இவ்வுரையாசிரியர், பழந்தமிழ் அரசர்கள் பற்றிய கற்பனைக் கதைகளின், வரைந்து காணமாட்டாக் கருவூலமாய சிலப்பதிகாரக் காப்பியத்தையே பெரிதும் துணைகொண்டு உள்ளார். அப்பாட்டில், "உதியஞ்சேரல் , ஐவர்க்கும், நூற்றுவர்க்கும் இடையில் நடைபெற்ற போரில், பெரிய அளவிலான சோற்றை வரையாது வழங்கிய சேரன், பொறையன்," என அழைக்கப்பட்டுள்ளான்:

"ஓர்ஐவர், ஈர்ஐம்பதின்மர் உடன்று எழுந்த
போரில் பெருஞ்சோறு போற்றாது தான் அளித்த
சேரன், பொறையன், மலையன்"

- சிலம்பு : 29 : ஊசல்வரி : 2.

உதியன் இருதிறப் படையினர்க்கும் உணவளித்தான் எனக் கூறுவதன்மூலம், இந்தியாவின் தென்கோடி முனையைச் சேர்ந்த ஓர் அரசன், கோதுமை உணவுண்ணும், துரியோதனன், யுதிஷ்டிரர் படைவீரர்களுக்கு உணவு படைக்க, அரிசியையும், அறுசுவையூட்டும் உணவுப் பொருட்களையும் குருக்ஷேத்திரத்திற்குச் சுமந்து சென்றான் எனக் கூறுவதில் உள்ள பொருத்தமின்மையை உணராமலே, உரையாசிரியர், அம் மூலவரிகளில் குறிப்பாக உணர நின்ற ஒன்றை, வேறு வகையில் விரித்துணர வைத்துள்ளர்.

(இந்தியாவின் தென்கோடி முனையைச் சேர்ந்த ஓர் அரசன், அரிசி முதலாம் உணவுப் பொருட்களைக், குருக்ஷேத்திரத்திற்குச் சுமந்து சென்றான் என்பது பொருத்தமில்லாக் கூற்று என்ற இந்நூலாசிரியர் கருத்து பற்றி, மொழிபெயர்ப்பு ஆசிரியரின் விளக்கத்தைச் "செங்குட்டுவன் வடநாட்டுப் படையெடுப்பு உண்மை நிகழ்ச்சி அன்று; வெறும் கட்டுக் கதை" என்பது சரிதானா? என்ற தலைப்புள்ள கட்டுரையில் கண்டுகொள்க.)

நான் கூறியதுபோல், மக்களுக்கு உணவு படைப்பதன் மூலம், உதியன், கௌரவர்கள் இறந்த நாளைக் கொண்டாடினான் என்பதே, அவ்வரிகளில் பொருந்தும் பொருளாம். இக்கொண்டாட்டம், பெரும்பாலும், சிரார்த்தம் என்பதன் இயல்புடையதாகும். அல்லது, ஒருகால், பாரதப்போர் குறித்த நாடக நிகழ்ச்சிகளின் இறுதி நாள் விழா ஆதலும் கூடும். ஏனைய நிகழ்ச்சிகளைப் போலவே, மகாபாரத நிகழ்ச்சிகளில் உள்ள கதாபாத்திரங்களைப்போல ஒப்பனை செய்து கொண்டு, இசையும் பாட்டும் தொடர, நடிகர்கள் ஆடிக்காட்டும் ஊமை நாடகமாம், அந்நாட்டிற்கே உரியதான, கதகளி என அழைக்கப்படும் நாடகத்தால், சேரநாடு, பண்டைக் காலந்தொட்டே புகழ் வாய்ந்தது. அதுபோலும் நிகழக் கூடியதே. ஆண்டாண்டு காலத்திற்கு முன்னரே இறந்துபட்ட வீரர்களுக்கு, இவைபோலும் இறுதிச் சடங்காம் பலியுணவு வழங்குதல் தமிழ் நாட்டில் பரவிய வழக்கமாகும். படைக்கும் இவ்வழக்கப் "பட்டவர்குறி" என

அழைக்கப்படும். பண்டைப் பெருவீரர்களின் அருஞ் செயல்கள், நாடகமாக நடிக்கப் பெறுவதும், நாடகமுடிவில் பெரியவிருந்து நடைபெறுவதும், தமிழ்நாட்டில், தொன்று தொட்டு நடைபெற்று வரும் பெருவழக்கமாம். அது, இப்பொழுது, "கம்பசேர்வை" அல்லது "கம்பக்கூத்து" அல்லது "கழைக் கூத்து" என அழைக்கப்படுகிறது. அதன் முடிவில், அக்களியாட்டத்தில் பங்கு கொள்ளும், பண்ணையாட்களாம் "கம்பஞ்செய்மக்கள்", அவ்வூரின் விளை நிலங்களுக்கு உரியவராகிய பெரும் பண்ணை முதலாளி களால், விருந்து படைக்கப்பெறுவர்.

பெருஞ்சோறு குறிக்கும் பிறபாக்கள் :

அகநானூற்றில் காணப்படும் இரண்டு குறிப்புகளும் கூட, இவ்வுண்மையையே கூறுகின்றன : அதிலும் ஐயத்திற்கு இடமில்லா வகையில். ஆகவே, பெருஞ்சேரலாதனின், பெரிதும் பாராட்டிற்குரியதாகி விட்ட பெருஞ்சோறு படைப்பு, இறந்தார் நினைவாக மேற்கொள்ளும் நிகழச்சி, அல்லது ஓர் ஊரின் விழாநாள் இறுதி நிகழ்ச்சி யாம் என்ற முடிவிற்கு வர, முழுக்க முழுக்க அனுமானம் ஒன்றையே நாம் சார்ந்திருக்கத் தேவை இல்லை. ஒரு பாட்டு, கோட்டம் பலத்துத்துஞ்சிய சேரமான் என்ற சேரர்குலச் சிற்றரன் பாடிய, நல்ல ஆனிரைச் செல்வங்கள் மலிந்த குழுமூர் என்னும் ஊரில், வருவார்க்கு வழங்குதலாம் கொடையாகிய கட்டமையினை ஏற்றுக் கொண்டவனும், நடுநிலை பிறழா நெஞ்சுடையனுமாகிய உதியன் என்பானின் அட்டிற் சாலையில் எழும் ஆரவாரப் பேரொலியை உவமையாகக் கொண்டுளது ;

"நல்லான் பரப்பின் குழுமூர் ஆங்கண்
கொடைக்கடன் என்ற, கோடா நெஞ்சின்
உதியன் அட்டில் போல"

- அகம் : 168 : 5 - 7.

இப்பாட்டு, புகழ்பெற்ற அப்பெருவிருந்து நடைபெற்ற இடமாக, பெரும்பாலும், அதே பெயரில் கோவை மாவட்டத்தில் உள்ள குழுமூரைக் குறிப்பிடுகிறதேயல்லது. குருக்ஷேத்திரத்தை அன்று. மற்றொரு பாட்டு, "இறந்து துறக்கலோகம் அடைந்த இறவா நற்புகழ் வாய்ந்த முன்னோர்கட்குத் தென்புலக் கடன் ஆற்றுவான்வேண்டி உதியன் சேரலாதன் பெருஞ்சோறு படைத்தபோது, கரிய பெரிய பேய்க் கூட்டம் கூடியிருந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறது.

"துறக்கம் எய்திய தொய்யா நல்லிசை
முதியர்ப் பேணிய, உதியஞ் சேரல்,
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை, இரும்பல்
கூளிச்சுற்றம் குழீஇ இருந்தாங்கு",

- அகம் : 233 : 7 - 10.

இப்பாட்டு அப்பெருஞ்சோறு வழங்கல் போர் நிகழ்ந்த போது நடைபெறவில்லை. அதற்கு மாறாக, அதற்கு மிக மிகப் பிற்பட்டகாலத்தே அப்போர் நினைவாக மேற் கொள்ளப்பட்ட விழாவின் போதே நடைபெற்றது என்பதைத் தெளிவாக உணர்த்துகிறது. அவ்விழா குழுமூர் என்னும் இடத்தில் நாடகமுடிவில் நடிகர்களும், நாடகம் காண வந்தவர்களும் பெருஞ்சோறு படைக்கப்பட்ட நாடக விழாவாக அல்லது வேறு எதுவாக இருக்க இயலும்?

இப்பாட்டு பழைய தொகை நூல்களில் இடம்பெற்ற பாக்கள் சிலவற்றைப் பாடிய, காலத்தால் பிற்பட்ட புலவர்களுள் ஒருவராய மாமூலனாரால் பாடப்பெற்றுளது. ஆகவே, உதியஞ்சேரலாதனின் காலம், நனிமிகப்பழைய காலத்தது ஆதல் இயலாது.

(இக்கருத்து ஏற்புடைய தன்று என்பது, மொழிபெயர்ப்பு ஆசிரியரின் "மாமூலனார் காலம்" என்ற திறனாய்வில் விளக்கப்பட்டுளது.)

இந்த உதியஞ்சேரல், பெருவீரனாகக் காணப்படுகிறான். நற்றிணை "உதியஞ்சேரலாதன், கடுஞ்சினம் மிக்குப் புகுந்த, ஒலி அடங்கா அகன்ற போர்க்களத்தில் களம்பாடு ஓர் பாட்டிற்கு ஏற்ப, கருவிஇசை எழுப்புவார், ஆம்பல் என்னும் பண்எழ விரைவாக ஊதுகின்ற புல்லாங்குழல், இனிய இசை எழுப்பினாற் போல" என்ற ஓர் உவமையினைக் கொண்டுளது :

"உதியன் மண்டிய ஒலிதலை ஞாட்பின்
இம்மென் பெருங்களத்து இயவர் ஊதும்
ஆம்பலங் குழலின்"

- நற் : 113 : 9 - 11.

அகநானூறு, "பிறர் நாடுகளை வென்று, தன் நாட்டின் எல்லையை விரிவாக்கிக்கொண்ட உதியஞ்சேராலாதனைப் பாடிச் சென்ற பரிசிலர், பெரும் பொருள் பெற்று மகிழ்வது போல" என்ற உவமையினைக் கொண்டுளது.

"நாடு கண் அகற்றிய உதியஞ்சேரற்
பாடிச் சென்ற பரிசிலர் போல"

- அகம் : 65 : 5 - 6.

ஆகவே, இவ்வுதியன் பெரியவீரன் ; புலவர்களையும், பிற இரவலர்களையும் மேலும் பெரியவள்ளல். ஆனால் குருக்ஷேத்திரத்தில், போரிட்ட இருதிறப் படையினர்க்கும் உணவு ஆக்கிப் படைக்கும் சமையல்காரனாதல் அரிதிலும் அரிதாம்.

பெருஞ்சோறு படைத்த காலம் :

இப்புறப்பாட்டிற்கும், அது பாடிய புலவனுக்கும், அப்பாட்டுடைத் தலைவனுக்கும், கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற்கும் முற்பட்ட காலத்தை வகுத்தல், பிறிதொரு வகையில் நோக்கிலும் நனிமிகப் பொருத்தமில் செயலாம். அப்பாட்டின் முதல் ஆறுவரிகள், கட்புலனுக்கு உள்ளான இந்நிலவுலகை, சாங்கியத்தத்துவம் எந்த அடிப்படைக்கு

உட்படுத்தி ஆய்வுசெய்யுமோ, அந்த அடிப்படையினவாய, ஐவகைப்பட்டநிலைபேறுடைய உணர்வுகளின் இயற்கை களாம். ஐம்பெரும் பூதங்களின், கற்பனைவளம் சார்ந்த எண்ணிக்கை வகைப்படுத்தி அளிக்கின்றன. இது போலும் குறிப்பீடுகள், தமிழர் உள்ளங்களை, ஆரியக் கருத்துகள் முழுமையாகக் கவர்ந்துவிட்ட பின்னரே இடம் பெறக்கூடும். அதுபோலவே, பிற்காலப் பாக்களில் மட்டுமே இடம் பெறும் பொன்முடி சூடிய இமயமலை பற்றிய குறிப்பும் இடம் பெற்றுளது. அகச்சான்றுகளைக் கொண்டு மதிப்பிடும் நிலையில், பெருஞ்சேரலாதன் குறித்து, அவன் காலப் புலவர் ஒருவர் பாடியபாட்டினும், காலத்தால் முற்பட்டதாம் ஆதலின், பெருஞ்சேரலாதனுக்குப் பிறகு வாழ்ந்தவன் உதியன், என நாம் முடிவு செய்யலாம்.

பதிற்றுப் பத்து :

இவ்வுதியனுக்குப் பிறகு அரசு கட்டில் ஏறிய அரசர்கள் பற்றிய செய்திகளைப் பதிற்றுப் பத்திலிருந்து பெறலாம். ஒவ்வொன்றும் வேறுவேறுபட்ட நீளம் உடையவாய, பொதுவாகச், சராசரி இருபது அடிகளைக்கொண்ட பத்துப்பத்துப் பாடற்றொருதிகளாகப் பத்துத் தொகுதிகளைக் கொண்ட தொகைநூல் பதிற்றுப்பத்து, தனிப்பாடல்களாக அல்லாமல் ஒவ்வொரு தொகுப்பும், குறிப்பிட்ட ஒரு பேரரசன் அல்லது ஒரு குறுநிலத்தலைவன் பற்றி விரிவாகப் பாராட்டும், வரையறுக்கப்பட்ட காரணம் குறித்துப் பாடப்பட்டடி பத்துப்பத்துப் பாடல்களைக் கொண்ட பத்து தொகுப்புக்களைக் கொண்ட முதல் தொகை நூல் இது. இவற்றுள் முதல் பத்தும், இறுதிப் பத்தும் கிடைக்கவில்லை. ஒவ்வொரு பத்தும், ஒரு சேரவேந்தன் அல்லது, சேரர்குலத்தலைவனைப் பற்றியது. ஒவ்வொரு பத்தும், பாக்கள் மட்டுமே இடம்பெற்ற, கையெழுத்துப் படிகளில் அல்லாமல், பாடல்களோடு, அவற்றிற்கான உரைகளும் இடங்கொண்ட கையெழுத்துப் படிகளில் மட்டுமே, இடம் பெறும் பதிகங்களைக் கொண்டுளது. அப்பதிகங்கள், அப்பாடல்களின் பாட்டுடைத் தலைவர்கள் பற்றிய,

மூலங்களில் காணப்படாத வரலாறு அல்லது கற்பனைக் கருத்துக்களைக் கொடுத்து உதவுகின்றன. வழக்கம் போலவே இன்றைய எழுத்தாளர்கள், பதிகங்களையும், பாக்களையும் ஒன்றாகவே கொண்டு மயங்கி, அவை அனைத்துமே பதிற்றுப் பத்துத்தான் எனக்கூறுவதோடு, அகச்சான்றாக எடுத்து ஆளக்கூடிய தகுதியை, மூலம், பதிகம், உரை ஆகிய மூன்றிற்குமே ஒரு படித்தாக வழங்குகின்றனர்.

பதிற்றுப்பத்து ஆசிரியர்களெல்லாம், கி. பி. ஐந்து, ஆறாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த பிராமணர்கள். ஆகவேதான், அப்பாக்கள், ஆரியக்கருத்துகள், ஆகமப் பழக்க வழக்கங் களால் பொங்கி வழிகின்றன. ஆகவே, அவை தமிழ் நாட்டில் ஆகமநெறிக் கோயில்வழிபாடுகள் பரவியதற்குப் பின்னர்ப் பாடப்பட்டனவாதல் வேண்டும். அவ்வகையில், இரண்டாம் பத்தின் நான்காம் பாடலின் தொடக்கவரிகள், அப்பாட்டு டைத்த தலைவன், "நிலம், நீர், காற்று, விசும்பு என்ற இந்நான்கினையும் போல் அளந்து காணமாட்டாப் பெருமையும், நாண்மீன்களும், கோள்களும், திங்களும், ஞாயிறும், ஊழிப்பெருந்தீயும் ஒருங்கு கூடி நின்ற வழிப் பிறக்கும் பேரொளி போலும், புகழ்ப்பேரொளியும் உடையவனாகப் புகழப்பட்டுள்ளான். இப்பகுதியில், கிரேக்க வானியல்கலையிலிருந்து பெறப்பட்ட கருத்தான நாண்மீன் களுக்கும், கோள்களுக்குமிடையிலான வேறுபாடு மட்டுமல்லாமல், வானிடை நாண்மீன்களும், கோள்களும் ஒருயுகத் தொடக்கத்தில் ஓரிடத்தே ஒன்றுகூடும் என்ற இந்திய, பிற்காலக் கோட்பாடு பற்றிய குறிப்பும் இடம் பெற்றுளது.

"நிலம் நீர் வளி விசும்பு என்ற நான்கின்
அளப்பு அரியையே;
நாள் கோள் திங்கள் ஞாயிறு கனைஅழல்
ஐந்து ஒருங்கு புணர்ந்த விளக்கத்து அனையை"

- பதிற்று : 14 : 1 - 4.

21ஆம் பாட்டின் முதல் இருவரிகள் அரசர்களின் நல்லாட்சிக்கு, ஐம்பெரும் துணைகளாக, சொல்இலக்கணம் பொருள்இலக்கணம், சோதிடம், வேதம், ஆகமம் ஆகிய ஐந்திணைக் குறிக்கின்றன.

"சொல், பெயர், நாட்டப், கேள்வி
நெஞ்சம் என்று ஐந்து"

- பதிற்று : 21 : 1 - 2.

சேர அரசர்கள், ஆண்டாண்டு காலமாக நிலைபேறு கொண்டிருந்த பழம்பெரும் மரபுகளை உடைத்து உட்புகுவதற்கு வேண்டுமளவு, ஆரிய மயமாக்கப்பட்டு விட்டனர். ஆனால், அதே நிலையில், ஐம்பெரும்துணைகள், சமஸ்கிருத்தின் தனித்ததமிழ் மொழிபெயர்ப்புச் சொற்களாலேயே அழைக்கப்பட்டுள்ளன. அவற்றுள்ளும், "நாட்டம்" "கேள்வி" ஆகிய இருசொற்களும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன என்பதை நோக்க மொழியாட்சி நிலையில், பழைமை போற்றும் உறுதிப்பாடு இன்னமும் ஆட்சிபுரிந்து கொண்டிருந்தது என்பதை இவ்வரிகள் உணர்த்துகின்றன. அக்காலகட்டம், ஒன்றிலிருந்து ஒன்றிற்கு நிலைபெயரும் ஒன்றாம் என்பதைக் காட்டும் வகையில், அரசர்களின் உள்ளங்களிலிருந்து பண்டைமரபுகள் மெல்ல மெல்லப் பிடிப்பிழந்து போகப் பிராமணர்களின் போதனைகள் வலுவாக இடம் பெறலாயின. அரசின் ஒழுக்க நெறிகளைக் காக்கும் காவலர்களாகப் பிராமணர்கள் உயர்வு பெற்று விட்டனர் என்பது, "மறை ஓதுதல், வேள்விவேட்டல், அவை இரண்டையும் பிறரைச் செய்வித்தல், வறியார்க்கு ஈதல், பிறர் தமக்குக் கொடுப்பதை ஏற்றல் என்ற ஆறு தொழில்களையும் செய்து ஒழுகும், எக்காலமும் அறநூற் பயனையே விரும்பும் அந்தணர்களை வழிப்பட்டு ஒழுகி" என அரசர்கள் புகழ்ப் படும் அப்பாடற் பகுதியால் உறுதி செய்யப்பட்டுவிட்டது :

"ஓதல், வேட்டல், அவை பிறர்ச் செய்தல்,
ஈதல், ஏற்றல் என்று ஆறு புரிந்து ஒழுகும்
அறம்புரி அந்தணர் வழிமொழிந்து ஒழுகி"

-பதிற்று : 24 : 6-8.

புதிய வழிமுறைகள், தமிழ் நிலத்தில் பரவத் தலைப் பட்டுவிட்டன என்பதற்கான பிற எடுத்துகாட்டுகள், ஓர் அரசன், கோயில்களுக்கும் பொன் அணிகளை வழங்கினான் என்பதற்கான குறிப்பிடும்- "புரைவயின் புரைவயின் பெரிய நல்கி." (பதிற்று : 15 - 37); காடுகளை அழித்து ஆங்கே கோயில்கள் கட்டப்பட்டதற்கான குறிப்பீடும் "காடே கடவுள் மேன" (பதிற்று : 13 : 20) ஆம். இக்கோயில்களில் ஆகம நெறி வழிபாடே பின்பற்றப்பட்டது; பின்வரும் பாடற்பகுதியைக் காண்க : "உயர்ந்த மிக்த்தெளிந்த ஒலி எழுப்பவல்ல மணியை இயக்குவார், அம்மணியிடையே கல் எனும் ஒசை எழுமாறு இயக்க, உண்ணா நோன்பு மேற்கொண்டிருக்கும் விரதியர், குளிர்ந்த நீர்த்துறைக்குச் சென்று நீராடித் திருமகள் வீற்றிருக்கும் மார்பில் அணிந்துள்ள, வண்டுகள் வந்து மொய்க்குமளவு, புதுமை பொலியும் மாலையாம், மணம் கமழும் கொத்துகளால் தொடுக்கப் பெற்ற துளசி மாலையும், காண்பவர் கண்களைக் கூசப் பண்ணும் பேரொளி வீசும் ஆழிப்படையும் உடைய, செல்வப் பெருமகனாம் திருமாலின், சிறந்த திருவடிகளில் வணங்கி வாழ்த்தி, நெஞ்சம் நிறைந்த மகிழ்ச்சி உடையராய்த் தாம் இனிது வாழும் தத்தம் ஊர்களுக்குத் திரும்பச்செல்ல."

"தெள்ளுயர் வடிமணி எறியுநர் கல்என,
உண்ணாப் பைஞ்ஞிலப் பனித்துறை மண்ணி,
வண்டூது பொலிதார்த் திருஞெமர் அகலத்துக்
கண்பொரு திகிரிக் கமழ்குரல் துழாஅய்
அலங்கல் செல்வன் சேவடி பரவி,
நெஞ்சுமலி உவகையர் துஞ்சுபதி பெயர"

- பதிற்று : 31 : 5-10.

என்றாலும், பழந்தமிழ்ப் பழக்க வழக்கங்கள், ஆரியப் புதுவரவுகளால், இன்னமும் வெளியேற்றப்பட்டுவிடவில்லை. காரணம், போர்க் களங்களில் அரசர்களால் ஆடப் பெறும் துணங்கை ஆட்டம் பற்றிய நான்கு குறிப்புகள் இடம் பெற்றுள்ளன: அவற்றுள் பின் வருவது ஓர் எடுத்துகாட்டு:

"பிணங்கள் குவிந்து கிடக்கும் கொடிய போர்க்களத்தின் இடையே நின்று பகைவர் நாடுகளைக் கைக்கொண்டு கைக் கொண்டு, வலிமை பெற்ற தின் எனத்திரண்ட தோள்களை உயரத்தூக்கி வீசித் துணங்கைக் கூத்து ஆடு."-

"நிலம்பெறு திணதோள் உயர ஓச்சிப்
பிணம்பிறங்கு அழுவத்துத் துணங்கை ஆடி."

- பதிற்று : 45 : 11-12.

துணங்கைக் கூத்து பற்றிய ஏனைய குறிப்புகள், பதிற்று : 13 : 5 ; 52 : 14 ; 57 : 4; மற்றும் 77 : 4 ஆகிய அடிகளில் இடம் பெற்றறுள்ளன. பிறதொரு பழமை வாய்ந்த கூத்தாம் குரவைக் கூத்துப் புகாரில் நிகழ்ந்ததாகக் கூறப்பட்டுளது. "குரவை அயரும் புகார்" (பதிற்று : 73 : 7- 9) போர்க்களத்தில் நிகழும் பண்டைத் தமிழ் வெற்றித் திருக்கூத்தும் விளங்கக் கூறப்பட்டுளது : "வெற்றி முரசம் ஓங்கி ஒலிக்க, வாளை உயர ஓச்சி, ஒளிவீசும் பொன் அணிகளை அணிந்து, பொன்னாற் பண்ணப்பட்ட உழிஞைக் கொடிசூடிப் போர்க்களத்தில் ஆடும் பேரரசன்."

"வலம்படு முரசம் துவைப்ப, வாள் உயர்த்து,
இலங்கும் பூணன், பொலங்கொடி உழிஞையன்,
.....போர்க்களத்து ஆடும் கோவே."

- பதிற்று : 56 : 4-8.

இறந்தோர் உடல்கள், அவை, அரசர் உடல்களே ஆயினும், மண்ணுள் புதைக்கப்படும் வழக்கம் தொடர்ந்து நிகழ்ந்து வந்திருப்பது, தமிழ்ப் பழக்க வழக்கங்கள் அழிவுற்றுப் போகாமல் நிலைகொண்டிருந்தமைக்கான பிறிதோர் அகச்சான்றாம். "மன்னர்களை இட்டுப் புதைக்கும் பெருமக்கள் தாழிகளைக் கொண்ட, வன்னிமரங்களால் ஆன மன்றங்களால் பெருமை பெற்ற இடுகாடு"

"மன்னர் மறைத்த தாழி
வன்னி மன்றத்து விளங்கிய காடே."

- பதிற்று : 44 : 22 - 23.

தம்மைப் புரந்தார் மறைவு குறித்து இரங்கி அழுவார். ஓர் அவையில் கூடியிருந்தாற் போல, அம்மரத்தடியில் அமர்ந்திருந்தனர் என விளக்கம் தருவர் உரையாசிரியர்கள். ஆரியப் புதுக்கடவுள்களுக்கு எதிராகப், பண்டைய தமிழ்க் கடவுள்களும், தங்கள் இடங்களை உறுதியாகத் தக்க வைத்துக்கொண்டு இருந்தன. அதற்கேற்ப, வெற்றிப்போர் முரசின் கடவுள் பாராட்டப் பெற்றுளது : ஆனால், மந்திர வழிபாட்டுடன் கலந்தே பாராட்டப் பெற்றுளது. "முழங்கு மந்திரத்து அருந்திறல் மரபின் கடவுள் பேணியர்" (பதிற்று : 30 : 33 - 34). அம்மந்திரங்கள், வடமொழி மூலமந்திரங்களாக அல்லாமல், புதிதாக ஆரிய மயமாக்கப்பட்ட அரசர்களின் பயன்கருதிப், புதிதாக உருவாக்கிய வடமொழி மந்திரப் போலிகளாதல் கூடும். வெற்றித் திருமகள் இன்னமும் வாகை மரத்திலேயே குடிகொண்டுள்ளான். "கடவுள் வாகை." (பதிற்று : 66 : 15).

ஆகவே, ஆரியத் தலையீடுகள், சென்ற நூற்றாண்டைக் காட்டிலும், மிகமிக நெருக்கமாம் என்றாலும், அப்பாக்களில் தமிழ் இலக்கிய மரபுகள் தொடர்ந்து இருந்து வரலாயின என்பது தெளிவு. அப்பாக்கள் ஒவ்வொன்றிற்கும், தொல்காப்பிய இலக்கண முறை வகுத்த துறை, திணைகள் அளிக்கப்பட்டு உள்ளன. பாணர்களுக்கும், விறலியர்க்கும், கறிஉணவும் கள்ளுமல்லாமல், பொன்னணிகள், பரி, கரி, தேர் முதலாம் பரிசில் பொருட்களை வழங்குவது போலும் மிகப் பழைய விளக்கச் செய்திகள் பதிற்றுப்பத்தில் நிரம்ப இடம் பெற்றுள்ளன. பதிற்றுப்பத்தின், ஒவ்வொரு பத்தின் அடிப்படைக் குறிக்கோள், சேரப் பெருவீரன் ஒருவன் புகழ்பாடுவதாகும். முதல் பத்து அழிந்துவிட்டது; அது, உதியஞ்சேரல் புகழ்பாடுவதாக இருக்கக் கூடும் எனக் கருதப்படுகிறது. இரண்டாம்பத்து, அவன் மகன் நெடுஞ் சேரல் பற்றியது ; ஏனைய பத்துகள், இச்சேரர் குலத்துத் தூரத்து உறவினர், அல்லது இளைய பிரிவினர் பற்றியன. அச்சேரப் பெருவேந்தர் இருவரின் பெருஞ்செயல் குறித்த ஆய்வு இனி மேற்கொள்ளப்படும்.

திருவாளர் இராகவையங்கார் அவர்கள் "சேரன் செங்குட்டுவன்" என்ற தம் நூலில், பதிற்றுப்பத்தில் இப்போது கிடைக்கும் எட்டுப் பத்துகளிலும் பாராட்டப் பெற்றிருக்கும் சேர அரசர்களின் வீரப்பெருஞ்செயல்களைத் தேர்ந்தெடுத்துச் சுருக்கமாக எடுத்துக் கூறியுள்ளார். அவர் பதிற்றுப் பத்தின் சமகாலப்புலவர்கள் கூறும் செய்திகளையும், சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் பிற்காலச் செய்தி களையும் பதிற்றுப்பத்துப் பாக்கள் பாடிய காலத்தினும், பல நூறு ஆண்டுகள் பிற்பட்ட காலத்தே பாடப்பெற்றனவும், பாடற்பகுதிகள் நம்புதற்கும் ஒண்ணாநிலையில், பெருமளவில் திருத்தப்பட்டிருப்பனவுமாகிய பதிகங்களில் கூறப் பட்டிருக்கும் செய்திகளையும், பதிகங்களில் கூறப் பட்டிருக்கும் சேர அரசர்கள் பற்றிய செய்திகளைப் பதிற்றுப்பத்துப் பாடல்கள் ஓரளவேனும் உறுதி செய்யு மாயின் ஏற்றுக்கொள்ளக்கூடும் என்ற நிலை இருக்கவும், ஒத்த வரலாற்றுச் சிறப்புடையவாகக் கொண்டுள்ளார். அத்தகைய உறுதிப்பாடு ஏதும் கிடைக்காத போது, அப்பதிகங்களில் கூறப்பட்டிருக்கும் செய்திகளை, உண்மையானவை என ஏற்றுக்கொள்ளுதல் அரிதாம். அவற்றில் அரசர் சிலரின் ஆட்சிக்கால அளவிற்கு, நம்புவதற்கு இயலாத மிக நீண்டகாலம் கொடுக்கப்பட்டுளது. மேலும், அப்பாடல்கள் தாமும், முந்தைய தொகை நூல்களில் காணப்படாத அளவு கலப்படங்களையும் கொண்டுள்ளன. இப்பகுதி, அடுத்து வரும் பகுதியில், ஆராயப்படும் அரசர் குறித்த ஆய்வில், இதற்கான ஓர் எடுத்துக் காட்டு கொடுக்கப்படும். இம்மிகைப் படக்கூறல், பட்டாங்கு கூறும் பழைய இயல்புநிலை, மெல்ல மெல்ல இடம் இழந்து போகச் சமஸ்கிருத காவியம் போலும் கற்பனை முறைகள், தமிழ்ப் புலவர்களை ஆளத்தொடங்கி விட்டது என்பதையே காட்டுகிறது.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் :

பதிகத்திலிருந்து, வெளியன் வேண்மான் மகள் நள்ளினி வழி பிறந்த உதியஞ்சேரலாதனின் மகன் நெடுஞ்சேரலாதன் என அறிகிறோம். பகையரசன் ஒருவனின் அரசுரிமைச்

சின்னமாகக் கடம்பமரம் வளர்க்கப்பட்டிருந்த கடலிடை நாடு ஒன்றிற்குக் கலத்தில் சென்றதே, இவ்வரசர்களின் மிகப்பெரும் வீரச்செயலாம். இவை போலும் மரங்கள், காவல் மரங்கள் எனப்படும். ஒவ்வொரு தமிழ் வேந்தனும், அல்லது குறுநிலத்தலைவனும், தன்னுடைய ஆட்சித்திறனின் அடையாளமாக, ஒருகால், அவன் அரசகுலச் சின்னமாக, அவன் பேராண்மையோடு தொடர்புடையதாக்கிக் குறிப்பிட்ட ஒரு மரத்தை வளர்த்து வந்தான். அம்மரத்தை வெட்டி வீழ்த்துவது, அவ்வரசனின் ஆட்சிக்கொடியைக் கைப்பற்றியது போலாம். இக்கடம்பமரமும், பானவாசிக் கடம்ப அரசர்கள் தங்கள் அரசகுலப் பெயரைப் பெறுவதற்குக் காரணமாம் கடம்ப மரமும் ஒன்றாம் எனக் கருதப்படுகிறது. நெடுஞ்சேரலாதன் சிறப்பு விளங்கிய கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில், இக்கடம்பர் உயர்நிலை பெற்றிருந்தமையால், மேலே கூறிய ஒருமைப்பாடு, இயலக்கூடாத ஒன்றன்று. இப்பெருஞ்செயலின் பாராட்டே, இரண்டாம் பத்து முதற்பாட்டின் பொருளாகும். அது, அப்பத்தின் இரண்டு, ஏழு, பத்து ஆகிய பாக்களிலும் குறிப்பிடப்பட்டுளது. வெட்டப் பட்ட அம்மரத்துண்டைத் தன் கலத்தில் ஏற்றிச்சென்று, தங்கள் பகையரசர்களின் காவல் மரத்துண்டங்களை ஏனைய அரசர்கள் பயன்படுத்துவது போலவே, அம்மரத்துண்டங்களிலிருந்து, போர்முரசு செய்துகொண்டான். "மிகப்பெரும் நாற்படையினைக் கொண்ட நெடுஞ்சேரலாதன் பெரிய கடலின்கண் பகைவர்களை வென்று ஓட்டி, அவர்தம் காவல் மரமாம் கடம்பினை அறுத்துச்செய்த, முரசின் கண் முழங்கினாற் போல" எனக் கூறும் அகநானூற்றுப் பாடல் ஒன்றில், ஓர் உவமையில், நெடுஞ்சேரலாதன் அவ்வாறு செய்தான் என, மாமூலனாரால் கூறப்பட்டுளது.

"சால்பெரும் தானைச் சேர லாதன்
மால்கடல் ஓட்டிக் கடம்பு அறுத்து இயற்றிய
பண்ணமை முரசின் கண் அதிர்ந்தன்ன".

- அகம் : 847 : 3 - 5.

நெடுஞ்சேரலாதனும் வேதவேள்விகளும் :

பதிற்றுப்பத்தின் இப்பாடல்கள், பெரும்பாலும் பேரரசர்கள், குறுநிலத் தலைவர்களின், பொதுவான புகழுரைகளையே கொண்டுள்ளன; என்றாலும், நம் வீரன் குறித்த, மேலும் சில செய்திகளையும், அவற்றிலிருந்து திரட்டக்கூடும். அவ்வகையில், அவன், காடுகளை அழித்து நாடுகண்டான். கோயில்கள் பல கட்டினான்; அக்கோயில் களுக்குப் பல்வேறு வழிபாட்டு நன்கொடைகளை வழங்கினான். "காடே கடவுள்மேன" (பதிற்று : 13 : 20), "புரைவயின் புரைவயின் பெரிய நல்கி" (பதிற்று : 15 : 37) என்ற தொடர்களைக் காண்க. ஆகவே, இவ்வரசனின் ஆட்சிக் காலத்தில், அரசவையில், பிராமணர்கள் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தனர் எனக் கொள்ளலாம். பெரும் பாலும், இதனாலேயே இந்நெடுஞ்சேரலாதனின் தம்பியாம் பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாடிய புலவர் கௌதமனார், அவ்வரசன் துணையால் பல வேள்விகளைச் செய்தார்; பத்தாவது வேள்வி செய்திருக்கும் போது, மனைவியோடு சுவர்க்கம்புகுந்தார் என்ற கட்டுக்கதை, பிற்காலத்தில் எழவும் ஆயிற்று.

(இவ்வருஞ்செயல் குறித்த, மிகப்பழைய குறிப்பு, வழக்கம் போலவே, கற்பனைக் கதைக் களஞ்சியமாம் சிலப்பதி காரத்தில் இடம் பெற்றுளது. "நான்மறையாளன் செய்யுள் கொண்டு மேனிலைஉலகம் விடுத்தோன்" (சிலம்பு : 28 ; 137 - 138)

நெடுஞ்சேரலாதனின் வெற்றிகள் :

பதிற்றுப்பத்து இரண்டாம்பத்தின் முதல்பாட்டு, "முருக்கமரங்கள் நிறைந்த மலையிடத்தே உறங்கும் கவரிமான்கள் பகற்போதில் தாம் மேய்ந்த நரந்தம் புல்லையும், பரந்து விரிந்த அருவி நீரையும் கனவில் கண்டு மகிழ்வதற்கு இடமான, ஆரியர் நிறைந்து வாழும், பெரும்புகழ் வாய்ந்த இமயம், தென்குமரி ஆகிய இவற்றிற்கு இடைப்பட்ட நாட்டில் உள்ள, செருக்குற்றுத் தம் புகழைஉயர்த்திக்கூறும்

அரசர்களின் வீரம் கெட்டழியுமாறு அவர்களை வென்று மார்புமாலை, ஓடையளவும் தாழ்ந்து விளங்கும், பகைவர் கோட்டைகளை அழிக்கும் வெற்றிப்புகழ் வாய்ந்த தந்தங்களைக் கொண்ட, குற்றமில்லாத யானையின் பொன்னரி மாலை அணிந்த பிடரி மீது அமர்ந்து உலாவரும் பலரும்புகழும் உன் செல்வச் சிறப்பினை இனிதே காண்கிறோம்."

"மார்புமலி பைந்தார் ஓடையொடு விளங்கும்
வலன்உயர் மருப்பின் பழிதீர் யானைப்
பொலன் அணி எருத்தம் மேல்கொண்டு பொலிந்தநின்
பலர்புகழ் செல்வம், இனிதுகண் டிகுமே;
கவிர்தளை சிலம்பில் துஞ்சும் கவரி
பரந்து இலங்கு அருவியொடு நரந்தம் கனவும்,
ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்
தென்னங் குமரியொடு ஆயிடை"

- பதிற்று : 11 : 17 - 25.

வெறும் வெற்றுப் புகழுரைகளாம் வைக்கோற் போரிலிருந்து உண்மைச்செய்தியாம் மணியினைத் தேடிக் காண்பது அத்துணை எளிதன்று. நெடுஞ்சேரலாதன் சேரநாட்டின் எல்லைக்கு வடக்கில் சில மைல் வரை (கடம்பர் நாட்டிலும், கொண்காளத்திலும்) படையெடுத்துச் சென்று சில வெற்றிப் பொருட்களைக் கொண்டு வந்திருக்கக்கூடும் : புலவர்கள், பரிசில் பெறும் வேட்கை மிகுதியால், அச்செயலை இந்தியப் பெருநாடு முழுவதும் அவன் பேரரசின் விரிவாகக் கொண்டு பாராட்டவும், அதன் காரணத்தால் இமயத்தை எல்லையாகக் கொண்ட பொருநாட்டுக்குரியவன் எனும் பொருளுடையதான "இமயவரம்பன்" என்ற பட்டப் பெயரைச் சூட்டியிருக்கவும் கூடும். (இப்பட்டப் பெயர் சிலப்பதிகார, மூன்றாம் காண்டம் வஞ்சிக் காண்டத்துப் பாட்டுடைத் தலைவன் செங்குட்டுவனுக்கும் வழங்கப்பட்டுளது. (இமையவரம்ப ! சிலம்பு : 26 : 23 : 30 : 161).

பெரும்பாலும், இவ்வெற்றியின் பயனாய்த் தன் பகையரசர் எழுவரின் முடிகளைக் கவர்ந்து, அவற்றை உருக்கிக் கழுத்தாரமாக ஆக்கிப் புனைந்துகொண்டான் என்பதை அறிவுறுத்தும், "எழுமுடி கெழீஇய திருஞெமர் அகலத்து" (பதிற்று : 14 : 11 ; 16 : 17) எனும் சிறப்புப் பெயரினைப் பெற்றான். இப்பட்டப்பெயர் அவன் மகனால் வழிவழி மேற்கொள்ளப்பட்டு அவனும் "எழுமுடி மார்பின் எய்தியசேரல்" (பதிற்று : 45 : 6) என அழைக்கப்பட்டான்.

நெடுஞ்சேரலாதன் காலத்தே பாடப்பட்ட பாட்டில், குமட்டூர்க் கண்ணனார், அவருடைய தலைவன், "ஆரியர்கள் நிறைந்த இமயம் வரையான நாடுகளில் உள்ள வட அரசர்களின் ஆற்றல் அழிய வென்றான்" எனப் பொதுப் படையாகவே கூறியுள்ளார் (பதிற்று : 11 ; 23-25) மழை பொய்யாது பெய்து காத்தலால் வளம் சிறந்து, ஆரியர் வாழும் பொன்வளம் மிக்க பெரிய இமய மலையை ஒக்கும் "மாரிபுறந்தர நந்தி, ஆரியர் பொன்படு நெடுவரை புரையும்" (அகம் : 398 : 18 - 19) என வேறு ஒரு பாடற்பகுதியும் கூறுவதால், இமையமலையை ஆரியரின் வாழிடமாகக் கூறுவது ஒரு மரபு வழித்தொடராகும். ஆனால், நெடுஞ் சேரலாதனின் மகன் குட்டுவன் புகழ்பாடிய பாணர், இக்கதையை மேலும் வரிவுபடுத்திவிட்டார். இச்சேரலாதன், ஆரிய அரசர்கள் அலறுமாறு அவர்களைத் தாக்கிப் பெரும் புகழ் வாய்ந்த, நனிமிகப் பழையதான இமைய மலையின் மீது, வளைந்தவில்லாம் தன் இலச்சினையைப் பொறித்துக் கொடிய சினம் மிக்க அப்பகை வேந்தரைச் சிறை செய்தவன். "ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசைத் தொன்று முதிர் வட வரை வணங்கு வில் பொறித்து வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்" (அகம் : 396 : 16 - 18).

குமட்டூர்க் கண்ணனாரின், வடஅரசர்களை "மறந்தபக் கடந்தது" ஒரே தலைமுறையில், "வேந்தரைப் பிணிப்பதாக" வளர்ந்து விட்டது.

தம்முடைய பாக்களில், தமக்கு முன் வாழ்ந்த எண்ணற்ற அரசர்கள், குறுநிலத்தலைவர்களைக் குறிப்பிடும், பிற்காலப்

புலவராம், மாமூலனார், நெடுஞ்சேரலாதனின், வெற்றிச் செயல்களையெல்லாம், "வெற்றி தரும் போர் முரசினை யுடைய நெடுஞ்சேரலாதன், கடலிடையே சென்று, அங்கு அரசு செய்திருந்த கடம்பரின் காவல் மரத்தை வெட்டி, இமையமலையில், தனது முன்னோரைப் போலவே வளைந்த வில்லாம் தன் இலச்சினையைப் பொறித்து, மாந்தை எனும் ஊரில் உள்ள தன் அரண்மனை முற்றத்தே, பகைவர் பணிந்து வந்து திறையாகக் குவித்த பெருமை மிக்க நல்ல அணிகலன்கள், பொன்னால் செய்யப்பட்ட பாவையினையும், வயிரங்களையும் கொண்டவன்" எனத் தொகுத்துக் கூறியுள்ளார்.

"வலம்படு முரசின் சேர லாதன்,
முந்நீர் ஓட்டிக், கடம்பு எறிந்து, இமயத்து
முன்னோர் மருள வணங்குவில் பொறித்து
நன்னகர் மாந்தை முற்றத்து ஒன்னார்
பணி திறை தந்த பாடுசால் நன்கலம்
பொன் செய் பாவை வயிரமொடு"

- அகம் : 127 : 3-8.

நெடுஞ்சேரலாதனின் தந்தை, வானத்தையே நாட்டு எல்லையாகக் கொண்டவன் எனும் பொருள் உடையதான "வானவரம்பன்" : அவன்மகன். இமையத்தையே நாட்டு எல்லையாகக் கொண்ட, "இமையவரம்பன்" ஆகிவிட்டான்.

நெடுஞ்சேரலாதன் குறித்த கற்பனைகள் :

நெடுஞ்சேரலாதனின் இமயம் வரையான வெற்றி, குறித்துப் பதிற்றுப்பத்தில் காணப்படும், முரட்டுக்கண் மூடித்தனமான, தெளிவில்லாத கூற்று, இவ்வாறு, அம்மலை உச்சியில் தன் வில் இலச்சினையைப் பொறித்த உண்மையான நிகழ்ச்சியாக உறுதிப்பட்டு விட்டதைக் காண்கிறோம். ஆரியக் கோட்பாடுகள் தமிழகத்தில் விரைந்து பரவியதன் விளைவாகத் தமிழ்ப் புலவர்கள், "சேது முதல் இமயல்வரை" என்ற ஆரியச் சொற்றொடரை நன்கு அறிந்துகொண்ட ஐந்தாம் நூற்றாண்டில், அவர்கள் தம் பாக்களில் பனிதவழும்

இமயத்தைக் குறிப்பிடத் தொடங்கினர். இந்தியப் பெரு நிலப்பரப்பு அனைத்தையும் வெற்றி கொண்ட தமிழ் அரசர் ஒவ்வொருவரும், தத்தம் கொடிகளை நாட்டுவதினும், வெற்றியின் நிலையான நினைவுச் சின்னமாம் தம் அரச இலச்சினைகளை இமயத்தின் மீது பொறித்ததாகக் கற்பனைக் கதைகளைக் கண்டுபிடித்தனர். இவ்வெற்றிச் செயல், முதன் முதலில் கரிகாலனுக்கு உரிமையாக்கப்பட்டது : பின்னர்ப் பிறர்க்கும் விரிவாக்கப்பட்டது. தமிழர் ஆட்சியைத் தமிழ் நாட்டு எல்லைக்கு அப்பாலும் விரிவாக்கிய முதல் தமிழரசன், கரிகாலன் ஆவன். தமிழ்ப் புலவர்களின் நில இயல் பற்றிய கொள்கை தெளிவற்ற ஒன்றாதலின், தமிழ் நாட்டு எல்லைக்கு அப்பாற்பட்டது எதுவாயினும் அவர்களுக்கு, அது, (சாதாரண ஆங்கிலேயன் ஒருவனுக்குத் தன் தாய்நாடு அல்லாத அனைத்தும், கடலுக்கு அப்பாற்பட்டதாதல் போல், பீகிங்போலவே பாரிசும் கடலுக்கு அப்பாற் பட்டதாதல் போல்) கங்கை வெளியையும், இமயச் சாரலையும் சார்ந்த தாகிவிடும். ஆகவே, ஒரு தமிழ் நாட்டு எல்லைக்கு அப்பால் ஆட்சியாதிக்கம் பெற்றிருந்தால், அவன் இமயத்தில் அரச இலச்சினையைப் பொறித்துவிடுகிறான். அவ்வகையில், கரிகாலன், தன் புலியைப் பொறித்தான். நெடுஞ்சேரலாதன் வில்லைப் பொறித்தான், பெயர் அறியாப் பாண்டியன் ஒருவன் மீனைப் பொறித்தான். சிலப்பதிகாரம், "முத்து மாலை அணிந்த, வெண் கொற்றக் குடையின் கீழ் அமர்த்திருந்த பாண்டியன், இமயத்து உச்சியில் தான் பொறித்த கயலுக்கு அயலில், புலியையும் வில்லையும் பொறித்த சோழனும், சேரனும், நாவலந்தீவின்கண் உள்ள ஏனைய அரசர்களும் தன் ஏவல் கேட்டு நிற்க நிலம் முழுவதும் ஆண்டான்" எனக் கூறுகிறது.

"கயல் எழுதிய இமய நெற்றியின்
அயல் எழுதிய புலியும் வில்லும்
நாவலந் தண்பொழில் மன்னர்
ஏவல் கேட்பப் பார்அர சாண்ட
மாலை வெண்குடைப் பாண்டியன்."

-சிலம்பு : 17 : 1-5.

அந்த இமயத்தை, (அம்மலைத் தொடர்க்கு அவர் இட்டு அழைத்த பெயர்) எல்லாவற்றினும் உயர்ந்த மலைமுகடு, வானவெளியின் காற்றழுத்த மண்டலத்தை எட்டிப்பிடித்துத் தன்னை ஏறி அடைய முயலும் மனித முயற்சியை இரக்க மற்று நகைத்த வாறே நிற்க, ஒன்று, தன்கீழ் உள்ளதைவிட உயர்ந்து, ஒன்றன் மேல் ஒன்றாக. எண்ணிக்கையால் பெருகி நிற்கும் வரிசை வரிசையான மலை முகடுகளாவன, நிலத்துப் புறப்பகுதியின் வரிசை வரிசையான மடிப்புக்களாகக் கருதாமல் தனித்த ஒரு பெரும் கல்லாம் - ("பெருங்கல்" - புறம் : 17 : 1 ; "நெடுவரை" -புறம் : 6 : 1) என அப்புலவர்கள் கருதினர். தமிழ்ப் புலவர்கள்பால் பொருந்திவிட்ட, இமாலயத்து நிலஇயல் கூறுபாடு பற்றிய அறியாமையே, கரிகாலனை, மிகப்பெரிய அம்மலைத் தொடரின் உச்சியை அடையவும், திபேத்து வரை செல்ல அம்மலையை ஊடுறவும், பிற தமிழ் அரசர்கள், அவன் முன் மாதிரியைப் பின்பற்றவும் செய்தமைக்குக் காரணமாம்.

நெடுஞ்சேரலாதன் பெயரைச் சுற்றி எழுந்த பிறிதொரு கட்டுக்கதை ஒன்றையும், புலவர் மாமூலனார் பதியவைத்து உள்ளார். அவன் காலத்தே பாடப்பட்ட பாட்டாம் பதினொன்றாம் பதிற்றுப்பத்துப் பாடல் அளிக்கும் சான்றுப்படி, யானைமீது அவன் கொணர்ந்த செல்வம் ("யானைப் பொலன் அணி எருத்தம் மேல் கொண்டு பொலிந்த நின் பலர்புகழ் செல்வம்."), மாமூலனார் காலத்தில், அழகிய அணிகலக்குவியல்களாகவும், பொன்னால் ஆன பாவை யாகவும், வைரக்குவியலாகவும் பெருகிவிட்டது. ("பாடுசால் நன்கலம், பொன் செய்பாவை, வைரமொடு" - அகம் : 127). ஏழுஞ்சேரலாதன் குறித்த பதிற்றுப்பத்து இரண்டாம் பத்தின் பதிகத்தில், அக்கற்கனை மேலும் பலசெய்திகளைக் கொண்டதாகி அளவிலும் பெரிதாகி விட்டது. "அழகாக உருண்டோடி வரும் அருவிகளைக் கொண்ட இமையத்தே வில் பொறித்தான். அலை ஒலிக்கும் கடல்களை எல்லை யாகக் கொண்ட தமிழகம் முழுவதும் தன் செங்கோல் செல ஆட்சி நடத்தினான். தக்க பெரிய புகழ் பெருகப் பெரிய புகழ் வாய்ந்த ஆரிய அரசர்களை வெற்றி கொண்டான். நயம்

இலாச் சொல் வழங்கும் யவணர்களைச் சிறை கொண்டு, அவர்தம் கைகளைப் பின் புறமாகப் பிணித்து, அவர்தம் தலையில் எண்ணெய் வார்த்து, அவர்பால் இருந்து அரிய நன்கலன்களோடு வைரங்களையும் கைக்கொண்டான்" என்றெல்லாம் அது கூறுகிறது. புலவர்களின் கற்பனை வளம், வரலாற்றோடு வருந்தத் தக்க விளையாட்டை உண்மையில் விளையாடிவிட்டது.

"அமைவரல் அருவி இமையம் வில் பொறித்து,
இமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்கத்
தன்கோல் நிறீஇத், தகைசால் சிறப்பொடு
பேரிசை மரவின் ஆயர் வணக்கி,
நயனில் வன்சொல் யவனர்ப் பிணித்து
நெய்தலைப் பெய்து கைபின்கொளீஇ
அருவிலை நன்கலம் வயிரமொடு கொண்டு"

- பதிற்று : இரண்டாம்பத்து : பதிகம்.

62, 63 மற்றும் 368 எண்ணிட்ட புறநானூற்றுப் பாடல்களில் கொளுக்கள், அம்மூன்று பாடல்களும் ஒருவரோடொருவர் போரிட்டு, இருவருமே போர்க்களத்தில் உயிர்துறந்து போன சேரமான் குடக்கோ நெடுஞ் சேரலாதனையும், சோழன் வேற்பஃறடக்கைப் பெரு நற்கிள்ளிளையும் பாடுவனவாகக் கூறுகின்றன. இந்நெடுஞ் சேரலாதன், குட மாநிலம் ஆளும் அரசனாம் குடக்கோ எனப்படுவதால், இவன், பதிற்றுப்பத்தின் பாட்டுடைத் தலைவனின், வேறுபட்டவனாவன் என்பது தெளிவு, ஆனால், அக்கொளுக்களில் உள்ள குறிப்பு நம்பக் கூடியதா என்பது ஐயப்பாட்டிற்கு உரித்து.

தமிழ் அரசர்கள், ஆரியர்களோடு நடத்திய போர்கள் மீதான, வரம்பிலாப்பொருளில் கூற்று :

சேரலாதன், பனவாசி அல்லது கொண்கானத்து ஆரியர்களோடு நடத்திய போர்கள் அல்லாமல், பிற்காலப்

பாடல்கள், ஆரியர்களோடு நடைபெற்ற மேலும் சில போர்கள் பற்றியும் கூறுகின்றன : அவை பற்றிய ஆய்வினை, ஈண்டு எடுத்துக் கொள்வோம். அவற்றுள் இரண்டு, மருதத் திணை தழுவிய பாடல்களில் உவமைகளாக இடம் பெற்றுள்ளன. அழகுறத்தைத்த தழையாடை உடுத்துத் தனக்கு ஒப்பார் இல்லாதவளாய் விழாக்களமெல்லாம் தன் வரவால் பொலிவு எய்த வந்து நிற்கும் விறலி. கணவனைப் பரத்தையர் உறவு கொண்டு விடாவாறு காத்து நிற்கும் தோழியர் மீது கொண்ட வெற்றிக்குப்புகழ் வாய்ந்த முள்ளூர்ப் போர்க்களத்தில் உறை கழித்த வாளோடு களம் புகுந்த மலையமானது வேற்படை, அக்களத்தில், ஒன்றுகூடி நின்று போரிட்ட ஆரியரை வென்று ஓட்டிப் பெற்ற வெற்றியை உவமையாகக் கூறுகிறது அவ்விரண்டில் ஒரு பாட்டு.

"பிணையல் அந்தழைத் தைஇத், துணையிலள்,
விழவுக்களம் பொலிய வந்து நின்றனளே;
எழுமினோ எழுமின் ; எம் கொழுநன் காக்கம்;
ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்ப்
பலருடன் கழித்த ஒள்வாள் மலையனது
ஒருவேற்கு ஒடியாங்கு, நம்
பன்மையது எவனோ? இவள் நன்மைதலைப் படினே."

- நற்றிணை : 170.

முள்ளூர், மலையமான் திருமுடிக் காரியின் தலை நகராகும். மலையன், மலையமான் என்ற சிறப்புப் பெயர்கள், அவன் சேர அரச இனத்தில் வந்தவன் என்பதைக் காட்டுகின்றன. "சிவந்த வேற்படையினையும், வீரக்கழலினையும் உடைய முள்ளூர்க்கு அரசனாகிய காரி என்பான், அழியா நற்புகழை நிலைநாட்டிய வல்வில் ஓரி என்பானைக் கொன்று, தெய்வதச்சனால் இயற்றப்பட்ட, பலரும் புகழும் பாவை நிற்கும் ; சிவந்த வேர்ப்பலா மரங்கள் நிறைந்த கொல்லி மலையைச் சேரர்க்குக் கொடுத்தான் என்கிறது பிறதொரு பாட்டு :

"செவ்வேல்
முள்ளூர் மன்னன் கழல் தொடிக் காரி,
செல்லா நல்லிசை நிறுத்த வல்வில்
ஓரிக் கொன்று, சேரலர்க்கு ஈத்த
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி
நிலைபெறு கடவுள் ஆக்கிய
பலர் புகழ் பாவை."

- அகம் : 209 : 11 - 17.

காரி, ஓரியைக் கொல்வதற்கு முன்னர்க் கொல்லி மலைப்பகுதி ஓரியால் ஆளப்பட்டு வந்துளது. காரி, ஓரியைக் கொன்ற நிகழ்ச்சி, பழங்காலத்தவர் கருத்தை மிகவும் ஈர்த்துளது என்பது தெளிவு. காரி மற்றும் சேரர்களைப் புகழ்ந்து பாடும் புலவர் கபிலர், "இளையாள் ஒருத்தி, தெருவின்கண் ஒருநாள் சென்றது காரணமாக, வழிவழி வந்த வெற்றிச் சிறப்பினையுடைய கொல்லிமலைத் தலைவனாகிய வல் வில் ஓரியைக் கொன்ற மலையமான் திருமுடிக்காரி, அவ்வோரிக்கு உரிய ஒப்பற்ற தலைநகர்த் தெருவில் புகுந்ததைக் கண்ட, காரியின் பகைவராகிய அவ்வோரியைச் சார்ந்தவர் ஒன்றுகூடி எழுப்பிய பேரிரைச்சல் போல, இவ்வூரிலும் பேரொலி எழுந்துவிட்டது எனக் கூறுகிறார்.

"இளையோள் இறந்த அனைத்தற்குப், பழவிறல்
ஓரிக் கொன்ற ஒரு பெரும் தெருவில்
காரிபுக்க நேரார் புலம் போல்
கல்லென் றன்றால் ஊரே."

- நற்றிணை : 320 : 4-7.

காரி, முள்ளூர் மன்னன் என அழைக்கப்படுதல் போலவே, பெண்ணையாற்றை அடுத்த நிலப்பரப்பின் மன்னனாகவும் அழைக்கப்பட்டுள்ளான் - "பெண்ணையம் படப்பை - நாடு கிழவோனே!" (புறம் : 126 : 23.) (முள்ளூர் பண்டை அருவா நாட்டின் தென் எல்லைக்கண் செஞ்சிக்கு அணித்தாக உளது)

ஆகவே, அவனோடு போரிட்ட ஆரியர்கள் கி. பி. ஆறாம் நூற்றாண்டில், காஞ்சியைத் திரும்பப் பெற்றுக் கொண்டதன் பின்னர்த் தம் நாட்டு எல்லையை விரிவாக்க முயன்ற பல்லவர்களாதல் வேண்டும்.

பிறிதொரு உவமையில், "வெல்லும் வேற்படையினையும், மாரிபோல் சென்று பாயும் அம்புகளையும், மழை மேகம் போலும் தோலால் ஆன கிடுகினையும் உடைய சோழர்க்கு உரிய, விற்படை மலிந்த காட்டரணைக்கொண்ட வல்லத் துக்குப் புறத்தே உள்ள காவற்காட்டின்கண் நடைபெற்ற போரில், தோற்று உடைந்து ஓடிப் போன ஆரியர் படை போல், என் கைவளை உடையதாக" எனக் கூறப் பட்டுள்ளான்.

"வென்வேல்,
மாரி அம்பின், மழைத்தோல் சோழர்
வில் ஈண்டு குறும்பின் வல்லத்துப் புறமிளை
ஆரியர் படையின் உடைக என்
நேரிறை முன்கை வீங்கிய வளையே."

- அகம் : 336 : 19 - 23

ஈண்டுக் குறிப்பிடப்பட்ட ஆரியர்களும் பல்லவர்களே ஆதல் வேண்டும். தன் காவற்காடு தஞ்சையைக் காத்து நின்றதான வல்லம், ஈண்டு முதல் முறையாகக் குறிப்பிடப் பட்டுளது. இவ்விரு இடங்களும், மிகவிரைவில் முறையே முத்தரையர், மற்றும் ஒன்பதாம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட, பிற்காலச் சோழர்களின் தலைநகர்களாக வகுக்கப்பட்டன.

மதுரை ஆண்ட ஒரு சிற்றரசன் ஆரியப்படை கடந்த (அல்லது தந்த) நெடுஞ்செழியன் என அழைக்கப் பட்டுள்ளான். இது, பெரும்பாலும், ஆரியர் படைகளை வென்ற நெடுஞ்செழியன் எனப்பொருள் படுவதாகும். ஆனால், ஆரியப்படையொடு அவன் போரிட்டது எங்கும் குறிப்பிடப்படவில்லை ; ஆகவே, அது வெறும் பட்டப் பெயரே ஆதல் வேண்டும். சிலப்பதிகாரம் இரண்டாம்

காண்டத்து இறுதிக்கண் வந்துள்ள கட்டுரையில், இவன், கோவலனைக் கொலை புரியுமாறு ஆணையிட்டு, அதனால் கண்ணகியால், சபிக்கப்பட்டு, அதன் விளைவால் உயிர் துறந்தவனாக குறிப்பிடப் பட்டுள்ளான்.

"வடவாரியர் படைகடந்து
தென் தமிழ்நாடு ஒருங்கு காணப்
புரைதீர் கற்பின் தேவி தன்னுடன்
அரைசு கட்டிலில் துஞ்சிய பாண்டியன்
நெடுஞ்செழியன்."

சிலம்பு : காண்டம் : 2 : கட்டுரை : 14 - 18.

ஆனால், சிலப்பதிகாரம் மூலம், அவன் பெயரைக் குறிப்பிடவில்லையாகவே, கட்டுரைக் கண்வரும் இச் செய்திக்கு முக்கியத்துவம் கொடுப்பது இயலாது. அவன் பாடியதாக ஒருபாட்டு வருகிறது. "தன் ஆசிரியனுக்கு ஓர் இன்னல் வந்துபோது, அது தீர முன்சென்று உதவியும், மிக்க பொருளை வாரிக்கொடுத்தும், ஆசிரியனை வழிபடும் நிலையில் பெறுப்பு காட்டாது விரும்பி வழிபட்டும் கற்பது ஒருவனுக்கு அழகு. ஒரே தன்மையான பிறப்புடையராய், ஒரு தாய் வயிற்றில் பிறந்தாருள்ளும் அவர்களின் கல்வி - உடைமை இன்மைகளுக்கு ஏற்பத், தாயின் அன்பும் வேறுபாடும் ; ஒரே குடியில் பிறந்த பலருள்ளும், கல்லாமையால் மூத்தோனை வருக என்றும் அழைக்காத அரசன் அவருள் அறிவுடையோன் சொல்வழி கேட்டுத் தன் அரசை நடத்துவன். பிறப்பால் வேறுபாடு காணும் நான்கு குலத்தினுள்ளும் கீழ்க்குலத்தில் வந்தான் ஒருவன் கற்று வல்லனாயிருப்பின், மேற்குலத்தில் பிறந்தவன், இவன் கீழ்க்குலத்தான் என எண்ணாது அவன் பால் சென்று அவனை வழிபட்டு வாழ்வன்" எனக் கூறுகிறது அப்பாட்டு.

"உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்,
பிற்றைநிலை முனியாது, கற்றல் நன்றே;
பிறப்போரன்ன உடன் வயிற்றுள்ளும்

சிறப்பின்பாலால் தாயும் மனம் திரியும்;
ஒரு குடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக ! என்னாது, அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்;
வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன் கண் படுமே"

- புறம் : 183.

வரலாற்று ஆசிரியனுக்கு, இது, வரலாற்றுச் சிறப்பில்லா ஓர் எளியபாடல் ; காவல பாவலனாம், இப்பாடலாசிரியர், தமிழ்நாட்டு அரசர்கள், மக்கள் ஆகியோர் உள்ளத்தில், ஆரிய நாகரிகம் நன்கு இடங்கொண்டு விட்டதற்குப் பிற்பட்ட காலத்தே வாழ்ந்தவராவர் என்பதொன்றே, இப்பாடலி லிருந்து நாம் உணர்ந்து கொள்ளக் கூடியது. பிராமண இனத்தவர், தாழ்ந்த இனத்தவரிடம் கல்வி கற்பது என்பதிலிருந்து, நாம் யூகிக்கக் கூடியது, பிராமணர்கள், தமிழ்ப்புலவர்களிடமிருந்து, தமிழ் இலக்கிய இலக்கணங் களைக் கற்றதை, இவ்வாசிரியர் ஒரு வேளை குறிப்பிடுகிறார் போலும் என்பதே.

இயற்பெயர் அறிய மாட்டாத, கூடகாரம் எனும் இடத்தில் உயிர் நீத்த, மாறன் வழுதி என்ற மற்றொரு பாண்டியனும், வடபுலத்து அரசர்களை வாடச்செய்தான் எனக்கூறப் பட்டுளது. "வடபுல மன்னர் வாட அடல் குறித்து இன்னாவெம்போர் இயல் தேர்வழுதி" (புறம் : 52 : 5-6); அவன் வடபுல அரசர்களை வெற்றி கொண்ட போர்க்களம் எது என்பது குறிப்பிடப் படாமையால், இது வெறும் தற்பெருமையேயாம். இவனைப் பாடியபுலவர், ஆரியக் கருத்துகள் பெருமளவில் இடம் பெற்றிருக்கும் மருதக்கலி பாடிய, மருதன் இளநாகனாராதலின், இவன் மிகவும் பிற்பட்ட காலத்தவனாதல் வேண்டும்.

ஈண்டுக் காட்டிய எடுத்துக் காட்டுகள், இனிவரும் பகுதிகளில் ஆராயப்போகும் எடுத்துக் காட்டுகளின்

அடிப்படையில், திருவாளர் கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள் ஆரியர்களின் குடியேற்றத்திற்கு அப்பாலும், மௌரியர்கள், அவர்களுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த ஆந்திரர்களின் கீழ், எண்ணற்ற ஆரியப்படையெடுப்பும் நிகழ்ந்தன என்ற உறுதியான முடிவினை உருவாக்கியுள்ளார் ஆதலின் இப்பொருள், இத்துணை விரிவாக ஆராயப்பட்டது.

கடலோட்டிய வேல்கெழு குட்டுவன் :

கடலைப் புறங்காட்டி ஓடப்பண்ணிய வேலுக்கு உரியவனாகிய குட்டுவன், அதாவது கடலோட்டிய வேல்கெழு குட்டுவன். அவன் புகழ்பாடும் பதிற்றுப் பத்து ஐந்தாம் பத்தின் பதிகத்தின்படி, நெடுஞ்சேரலாதன் மகனாவன். ஆனால், இக்குட்டுவனின் தாயின் பெயரைக் குறிப்பிடும் வரி, நம்புதற்கு இயலாவாறு பிழைபட்டுளது. வடவரை அஞ்சப் பண்ணும், வானளாவ உயர்ந்த கொடி உடையவனும் குடவர் கோமானும் ஆகிய நெடுஞ் சேரலாதனுக்குச் சோழன் மணக்கிள்ளி என்ற மகன்" என்கிறது. (ஐந்தாம் பத்து : பதிகம் : 1 - 3)

"வடவர் உட்கும் வான்தோய் வெல்கொடிக்
குடவர் கோமான் நெடுஞ்சேரலாதற்குச்
சோழன் மணக்கிள்ளி ஈன்ற மகன்".

ஒரு ஆண், பிறிதொரு ஆணுக்கு மனைவியாதல் இயலாது ஆதலின். ஆம்மூலம் பிழைபட்டுளது என்றே நாம் கோடல் வேண்டும். இப்பாட்டைப் பதிப்பித்த ஆசிரியர் அந்த வரிகளை எந்தக் கையெழுத்துப் படிவத்திலிருந்து எடுத்தாரோ, அந்தப் படிவத்தை நம்மால் பார்வையிட முடியாத வரை, அந்த வரிகளின் உண்மை வடிவம் யாது என்பதை ஊகிக்கவும் இயலாது. மேலும், பழந்தமிழப் பாக்களின் அழிந்து போன, செல்லரித்துப்போன பனை ஓலையிலான ஏட்டுப் பிரதிகள் காக்கப்பட்டிருக்கும் இழிந்த நிலையினை அறிந்த எவன் ஒருவனும், அவ்வரிகளில், அப்பிழை எவ்வாறு இடம் பெற்றுவிட்டது என்பதை ஆராயத் துணியமாட்டான். திருவாளர் எம். சீனிவாச அய்யங்கார் அவர்கள், மணக்

கிள்ளியை, நெடுஞ்சேரலாதனின் தங்கை கணவனாகக் கொள்வதன் மூலம், அச்சிக்கலான் முடிச்சை அவிழ்க்கத் தைரியமாக முயன்றுள்ளார் [Tamil Studies : P. 287]. மலையாள நாட்டில், இன்று நடைமுறையில் இருக்கும் அரியணைக்கான உரிமை, மாமனிடத்திலிருந்து மருமகனுக்கு என்ற முறைமை, பண்டைக் காலத்திலும் இருந்ததாக அவர் கருதுகிறார். பழைய சேர அரசர்கள், தமிழர்கள் மருமக்கள் தாயத்தைப் பின்பற்றும் மலையாள அரச இனங்கள், கி. பி. பத்தாம் நூற்றாண்டிற்குப் பின்னரே உரிமையைத் தன் முன்னோர்க்கு மகன் என்ற முறையில் பெற்றானேயல்லது, மருமகன் என்ற முறையில் பெற்றவனல்லன்.

குட்டுவன் வீரச்செயல்கள் :

குட்டுவன் புகழ்பாடும் பரணரின் கூற்றுப்படி, அவன் வெற்றிச்செயல்கள், அவன் தந்தையின் வெற்றிச்செயல்கள் போலவே ஒரு சிலவாம். அரசவைப் புலவர்கள் செய்வது போலவே இப்புலவரால், தந்தையின் வெற்றிகள் எல்லாம் இவனுக்கும் ஏற்றி உரைக்கப்பட்டுள்ளன. "கற்களால் உயர்ந்த நெடிய மலையாகிகய இமயம் வடஎல்லையாக, தெற்கு எல்லை குமரியாக, அவற்றின் இடையே உள்ள நாட்டில், பகையரசர்களின், முரசுமுழங்கச் செய்யும் போர்கள் எல்லாம் கெட்டு அழிய, வெற்றி ஆரவாரம் உண்டாக, அப்பகையரசர் களின் புகழ் மிக்க நாடுகளுள் புகுந்து, அவற்றின் பண்டை நலங்களைக்கெடுத்து அழித்த, போரில் எதிர்ப்படுவாரை அழித்து வெற்றி கொள்ளும் நாற்படையினையும், பொன்மாலையினையும் உடைய குட்டுவனே?" என அவன் அழைக்கப்பட்டுள்ளான். பகையரசர் எழுவரின் மணிமுடி களை அழித்துப் பண்ணிய பொன்மாலையை மார்பில் அணிந்த எனும் சிறப்பும், தந்தையிடமிருந்து மகனுக்கு மாற்றப்பட்டுளது.

"கல்லோங்கு நெடுவரை
வடதிசை எல்லை இமயமாகத்,
தென்னங் குமரியொடு ஆயிடை அரசர்

முரசுடைப் பெருஞ்சமம் ததைய, ஆர்ப்பு எழச்
சொல்பல நாட்டைத் தொல்கவின் அழித்த
போரடுதானைப், பொலந்தார்க் குட்டுவ!"

- பதிற்று : 43 : 6 - 11.

"எழுமுடி மார்பின் எய்திய சேரல்"

- பதிற்று : 45 : 6.

இவ்வரசனைப் பற்றிய பிறிதொரு பராட்டு, அவன் பெயரோடு, வேல் எறிந்து கடலைப் புறங்காட்டச் செய்த எனும் பொருள் தருவதான, "கடல் பிறக்கு ஓட்டிய வேல் கெழு" எனும் சிறப்பு அடைமொழியினை இணைக்க உதவிய ஒன்றாம். கடல் மீது கொண்ட இவ்வெற்றி அடுத்தடுத்துக் கூறப்பட்டுளது. "வெள்ளிய தலையாட்டத்தினையும், விரைந்த செலவினையும் உடைய குதிரையூர்நது செல்லும் நின்கால்கள், ஓவென ஒலிக்கும் அலைகளைக் கொண்ட குளிர்ந்த கடல் காற்றால் அலைப்புண்டு சிறுசிறு திவலைகளாக உடையுமாறு அக்கடலிடையே சென்று போரிட்டன."

"கால் உளைக் கடும் பிசிர் உடைய, வால்உளைக்
கடும்பரிப் புரவு ஊர்ந்த நின்
படுந்திரைப் பனிக்கடல் உழந்த தாளே."

- பதிற்று : 41 : 25 - 27.

பகைவரின் வில்லிலிருந்து தொடுக்கப்படும் அம்புகளின் கடுமையைக் கெடுத்த வலிய வெண்மையான தோலால் ஆன கேடகத்தையும், அவற்றிற்கேற்ற மறப் பண்பு படைத்த படையினையும் உடைய வேந்தர் உள்ளே, மேகம் படிந்து குடித்தலால் குறையாமலும், ஆறுகள் வந்து புகுவதால் மிகாமலும், எதிர்த்து வீசும் காற்று எழுப்பும் அலைகளால் அசைதலையுடைய, மிகநிறைந்த நீரை உடைய முழங்கும் அலைகளோடும் கூடிய குளிர்ந்த கடலில், மணிபோலும் ஒளியினையுடைய வேற்படையை எறிந்து, அக்கடல் மீது வெற்றி கொண்டவர், நின்முன்னோருள்ளும் ஒருவரும் இல்லை : இப்பொழுதும் ஒருவரும் இல்லை."

"தெவ்வர்,
சிலைவிசை அடக்கிய மூரி வெண்தோல்
அனைய பண்பின் தானை மன்னர்
இனி யார் உளரோ? நின்முன்னும் இல்லை ;
மழைகொளக் குறையாது, புனல்புக நிறையாது
விலங்குவளி கடவும் துளங்கிருங் கமஞ்சூல்
வயங்குமணி இமைப்பின் வேல் இடுபு
முழங்குதிரைப் பனிக்கடல் மறுத்தி சினோரே."
- பதிற்று : 45 : 15 - 22.

புலவர், அடுத்தபாட்டிலும், அப்பொருளுக்கே வந்து, "சங்கு முழங்கும் கடல் கலங்குமாறு, வேற்படையை ஏவி, உடைந்து தலைமடங்கும் அலைகளைக் கொண்ட நீர்ப் பரப்பாகிய ஒலிக்கும் கடலைத் தோற்று ஓடப் பண்ணிய வெல்லும் புகழ் வாய்ந்த குட்டுவ!" என அழைக்கிறார்.

"கோடுநரல் பௌவம் கலங்க வேலிட்டு
உடைதிரைப் பரப்பின் படுகடல் ஓட்டிய
வெல்புகழ் குட்டுவன்" - பதிற்று : 46 : 11 - 13.

புலவர், அவனை, "அழிக்க இயலாத புகழை நிலைநாட்டி, கடலிடையே புகுந்து, அக்கடலோடு பெரும்போர்புரிந்த குளிர்ந்த கடற்றுறைகளைக் கொண்ட பரதவேன!" என மேலும் ஒருமுறை அழைக்கிறார்.

"கெடலரும் பல்புகழ் நிலைஇ நீர்புக்குக்
கடலொடு உழந்த பனித்துறைப் பரதவ !"
-பதிற்று : 48 : 3-4.

அடுத்து அடுத்துத் திரும்பத்திரும்பக் கூறப்படும் இப்பாராட்டு உணர்த்தும் பொருள் யாது என்பதை யூகித்து அறிதல் கடினம். குட்டுவன் வேல், அவ்வாறு வீசப்பட்டதால் கேன்யூட் (Canute) என்பாரின் உரத்துக்குரல் எழுப்பி இட்ட ஆணை சாதிக்காத எதைச் சாதித்துளது? வேல் எறிதல்,

குட்டுவனின் கடலாதிக்கத்தை உணர்த்தும் சின்னமாகவே, பெரும்பாலும் உள்ளுணர்வோடு நடைபெற்றுளது. பரணர், அகத்துறைப் பாடல் ஒன்றில் அப்பொருள் குறித்து மீண்டும் கூறியுள்ளார். "குட்டுவன், தன்னுடன் போரிடவல்ல பகைவரை, நில எல்லைக்குள் காணாமையால், பொங்கி எழும் சினம் மிகுந்து, போர் புரியும் தன் ஆற்றலால், கடலை வளைந்து ஓங்கி எழும் அலைகளையுடைய கடல் பின்னிட்டு ஓடுமாறு ஓட்டிய, வெற்றி மாண்பு மிக்க வேல்"

"குட்டுவன்
பொருமுரண் பெறாஅது, விலங்கு சினம் சிறந்து
செருக்செய் முன்பொடு முந்நீர் முற்றி
ஓங்குதிரைப் பௌவம் நீங்க ஓட்டிய
நீர்மாண் எஃகம்." - அகம் : 212 : 16 - 20.

கடல்மீது வேல் எறிந்து, அதைப் பின்னடையச் செய்யும் இவ்வீரச்செயல், பிற்காலத்தில், ஒரு பாண்டியன் ஒருவனுக்கும், அதன் காரணத்தால் வடிம்பலம்ப நின்ற பாண்டியன் எனும் பெயர் பூண்டானுக்கும் ஏற்றி, உரைக்கப் பட்டுளது. (புறநானூற்று 9ஆம் எண் பாடலையும், அப் பாடலின் 10ஆம் வரிக்கு, இன்றைய பதிப்பாசிரியரின் குறிப்பையும் காண்க.) ஈண்டு எடுத்துக் காட்டிய எடுத்துக் காட்டுகள், ஓர் எளிய கடல்விழா, எத்துணைப் பெரிய வெற்றிச் செயலாக உருப்பெற்று விட்டது என்பதைக் காட்டுகின்றன.

நெடுஞ்சேரல் காலத்தில், சேரநாடு ஆரிய ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டு வரப்பட்டு விடவே நெடுஞ்சேரலாதன், கடல் ஒதுங்கி இடம் அளிக்கக் கடல்மீது வேல் எறிந்த பரசுராமன் கதையால் ஊக்கம் பெற்று, அப்பிராமணப் பெருவீரன் செயலை முன்மாதிரியாகக் கொண்டு விட்டது நடந்திருக்கக் கூடியதே. பிற்காலத்தே, மதுரைத்தலபுராணம் உருவாகவே, இவ்வெற்றிச் செயல், பாண்டியன் ஒருவனுக்கும் ஏற்றி உரைக்கப்பட்டது. மதுரையில் கோயில் கொண்டிருக்கும் சிவனிடம் தெய்வத்தன்மை வாய்ந்த வேல் ஒன்றைப் பெற்று,

அதை எறிந்ததன் மூலம், தன் கால்களைத் தழுவி நின்ற கடலை வற்றச் செய்த உக்கிரபாண்டியன் கதை திருவாலவா யுடையார் திருவிளையாடற்புராணத்தில் (20 : 6) விளங்க உரைக்கும் வகையில் உருவாகிவிட்டது. இக்காலத் தமிழறிஞர் பலரும், வடிம்பலம்ப நின்ற பாண்டியன், புறநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளான் என்கின்றனர். புறம் : 9ல் வரும் 10வது வரியாகிய, "முந்நீர் விழவின் நெடியோன்" என்ற தொடர்க்கான விளக்கமாகப், பதிப்பாசிரியர் டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர்தாம், "முந்நீர்க்கண் வடிம்பலப்ப நின்றான் என்ற வியப்பால் நெடியோன் என்றார்" எனக் கூறுகிறார் ஆதலின் இக்காலத் தமிழறிஞர்கள் கூறுவது தவறு.

குட்டுவனும் மோகூரும் :

குட்டுவனின் உண்மையான போர்க்கள வீரச்செயல் பின்வருமாறு விளக்கப்பட்டுளது : "பகைவர் அரண் கொள்ளச் செல்வார் அணியும், மெல்லிய உழிஞைக் கொடியின் மலர் அணிந்து, வெல்லும் போரே அறிந்த அறுகை என்பான். சேணிடத்தே இருந்தானாயினும், நண்பன் எனப் பலரும் கேட்க அறிவித்து, மோகூர் மன்னன் பழையனுக்கு அஞ்சித் தன் நாட்டை விட்டு ஓடி ஒளிந்து கொண்டதனால் உண்டாகிய அழியாப் பெரும் பழியைத் தாக்கி, வருத்தும் தெய்வமே அழித்தாற்போல அழித்து, அவன் காவல் மரமாம் வேம்பை வெட்டி வீழ்த்தி, அதை முரசு செய்தற்கேற்ற சிறுசிறு துண்டங்களாக்கி, அத்துண்டங்கள் ஏற்றிய வண்டியை யானைகளைக் கொண்டு ஈர்க்கச் செய்தவனே! கொழுப்பு குறைந்த இறைச்சித் துண்டை வைத்த இடத்தை மறந்துவிட்ட, உச்சிக் கொண்டை உடைய கூகையைக் கவலையுறுமளவு வருத்தும் கூகைப் பெடைகள் நிறைந்த சுடுகாட்டில், வெற்றி முரசும், வழிவழியாக வந்த அரசுரிமையும் பெற்ற அரசர் பலரை வென்று, ஓயாது ஆடும் கடல் சூழ்ந்த பரந்த நாட்டை ஆண்டு, நம் வாழ்நாளை இனிதே கழித்த மன்னர்களை இட்டுப் புதைக்கும், வன்னி மரங்கள் நிறைந்த இடுகாட்டில்,

பெருமக்கட்டாழி, உன்னுடைய நோயற்று வலியுற்ற உடலினைக் காணாது ஒழிக !"

"நுண்கொடி உழிஞை, வெல்போர் அறுகை
சேணன் ஆயினும், கேள் என மொழிந்து
புலம் பெயர்ந்து ஒளித்த களையாப் பூசற்கு,
அரண் கடாவுறீஇ, அணங்கு நிகழ்ந்தன்ன
மோகூர் மன்னன் முரசம் கொண்டு
நெடுமொழி பணித்து அவன் வேம்பு முதல் தடிந்து
முரசுசெய முரச்சிக், களிறுபல பூட்டி
ஒழுகை உய்த்தோய்! கொழுவில் பைந்துணி
வைத்தலை மறந்த துய்த்தலைக் கூகை
கவலை கவற்றும் குரால் அம்பறந்தலை
முரகடைதாயத்து அரசுபல ஓட்டித்
துளங்கு நீர் வியலகம் ஆண்டு இனிது கழிந்த
மன்னர் மறைந்த தாழி
வன்னி மன்றத்து விளங்கிய காடே."

- பதிற்று : 44 : 10 - 23.

மோகூர் மன்னனுக்குப் பல குறுநிலத்தலைவர்கள் துணை புரிந்தனர் என்பது தெளிவாகத் தெரிகிறது. "வேற்படையைச் செலுத்தி எழும் பகைவர் முன்னணிப் படையின் இரு பக்கங்களிலும் வரும் பக்கப்படைகளைப் போரிட்டு வெல்லும் கொடிய தூசிப்படையினையும் வெல்லும் போரினையும் உடைய முடிவேந்தர்களும் குறுநில மன்னரும் ஒன்றுகூடித் துணைவர, அதனால், வலுவுற்றுச் செருக்கு கொண்டு அவரோடு கூடிவரும் மோகூர் மன்னனின், வலுவான படையின் நிலைகெட்டுத் தடுமாறுமாறும் நெருக்கித் தாக்கி, குருதி படிந்து கறைபட்ட கையினரான வீரர்களின் மார்புப் புண்களிலிருந்து ஒழுகும் குருதி, நிலத்தில் பாய்ந்தோடி, மழைவெள்ளம்போல் ஆங்காங்குள்ள பள்ளங்களை நிரப்பிப்பாய, இறந்து வீழும் பிணங்கள், குவியல்

குவியல்களாகக் குவியப், பற்பல பாழ் செய்து, ஒலி எழுப்பும் கண்ணை உடைய போர் முரசு வெற்றி எழுப்ப, அப் பழையனது செல்வம் அனைத்தும் அறவே கெட்டழிய, இருந்து வாழ வேண்டியவர் பலரும் இறந்து இலராகக், கரிய கொம்புகளைக் கொண்ட, அவனுடைய வலிய காவல் மரமாம் வேம்பினை வெட்டி வீழ்த்திய மிக்க சினமுடை யோனாகிய குட்டுவன்"

"எஃகு துரந்து எழுதரும் கைகவர் கடுந்தார்
வெல்போர் வேந்தரும் வேளிரும் ஒன்று மொழிந்து
மொய்வளம் செருக்கி, மொசிந்துவரு மோகூர்
வலம்படு குரூஉநிலை அதிர மண்டி
நெய்த்தோர் தொட்ட செங்கை மறவர்
நிறம்படு குருதி நிலம்படர்ந்து ஓடி
மழைநாள் புனலின் அவல் பரந்து ஒழுகப்
படுபிணம் பீறங்கப், பாழ்பல செய்து
படுகண்முரசம் நடுவண் சிலைப்ப
வளனற நிகழ்ந்து, வாழுநர் பலர்படக்
கடுஞ்சின விறல் வேம்பு அறுத்த
பெருஞ்சினக் குட்டுவன்." - பதிற்று : 49 : 6-17.

புறம் : 369ல், போர்க்கள நிகழ்ச்சி ஒவ்வொன்றையும், தொடர்பான பல்வேறு தொழில்களாக விளக்கிக் கூறும் உருவக அணியில், குட்டுவனைப் புகழ்ந்து பரணர் பாடியுள்ளார். அப்பாட்டு, இலக்கியச் சிறப்புடையதே யல்லது வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது அன்று, ஆகவே, அது, ஈண்டு எடுத்துக்காட்டப்படவில்லை.

குட்டுவன் குறித்த கற்பனைக் கதைகள் :

ஐந்தாம் பத்தின்பதிகம், குட்டுவன் போர்ச்செயல் குறித்து மூலத்தில் குறிப்பிடப்படாத பலவற்றின் குறிப்புகளைக் கொண்டுளது. "பத்தினிக் கடவுளுக்குப் படிமம் செய்வதற்

கான கல்லைக் கொள்வான் வேண்டிக், காற்று விரைந்து வீசும் காடுகளை அம்புபோல் விரைந்து கடந்து, ஆரிய அரசர்களை வென்று, பெரும் புகழ் வாய்ந்ததும், இனிய பல அருவிகளைக் கொண்டதும் ஆன கங்கையில் நீராடி, அந்நாட்டவர்க்குரிய ஆனிரை பலவற்றை, அவற்றின் கன்றுகளோடு கைக்கொண்டு, தோல்வி காணா வலிய விற்படையுடைய இடும்பில் எனும் இடத்தில் பாடிகொண்டு, வலிய புலியொத்த வீரர்கள வீழ்ந்து மடிய, சிறுசிறு கொத்துகளான நெய்தல் மலர் நிறைந்த வியலூரைத் தூள்தூளாக அழித்து, அடுத்த கரை அடைந்து, கொடுகூரை வென்று அழித்து, மோகூர்ப் பழையன் காத்து நிற்கும் அவன் காவல் மரமாம் கரிய கொம்புகளைக் கொண்ட வேம்பினை வெட்டி வீழ்த்தி, களத்தில் கணவரை இழந்தமையால், தம் அணிகலன்களைக் கழற்றி எறிந்துவிட்ட நல்ல பல மகளிரின் அடர்ந்து பெருகிய கூந்தலால் ஆன கயிறு கொண்டு, வேம்பு மரத்துண்டங்கள் ஏற்றிய வண்டியில் யானைகளைப் பூட்டி ஈர்த்துப் பேராண்மை வாய்ந்த பெரிய போர்க்களத்தில், சோழர் குடிவந்த ஒன்பதின்மர் வீழ்ந்தொழிவான் வேண்டி நேரிவாயில் எனும் இடத்தே பாடிக்கொண்டான்.

"கடவுள் பத்தினிக் கல்கோள் வேண்டிக்,
கால் நவில் காணம் கணையிற் போகி,
ஆரிய அண்ணலை வீட்டிப், பேரிசை
இன்பல் அருவிக் கங்கை மண்ணி,
இனம் தெரி பல்லான் கன்றொடு கொண்டு,
மாறா வல்வில் இடும்பில் புறத்திறுத்து,
உறுபுலி அன்ன வயவர் வீழச்,
சிறுகுரல் நெய்தல் வியலூர் நூறி,
அக்கதை நண்ணிக், கொடுகூர் எறிந்து,
பழையன் காக்கும் கருஞ்சினை வேம்பின்
முழாரை முழுமுதல் துமியப் பண்ணி,
வால் இழை கழிந்த நறும்பல் பெண்டிர்

பல்லிருங்கூந்தல் முரற்சியால்
குஞ்சர ஒழுகை பூட்டி, வெந்திறல்
ஆராச் செருவின் சோழர் குடிக்கும் உரியோர்
ஒன்பதின்மர்வீழ், வாயில் புறத்து இறுத்து."

- பதிற்றுப்பத்து : ஐந்தாம்பத்து : பதிகம் : 4-20.

ஈண்டு மேற்கோள் காட்டிய பகுதியின் முதல் நான்கு வரிகள், சேரன் செங்குட்டுவனின் வடஇந்தியப் படையெடுப்பு குறித்த சிலப்பதிகாரக் கூற்றிலிருந்து எடுத்த செய்திகளைக் கொண்டுள்ளன. பதிக ஆசிரியர், சிலப்பதிகார ஆசிரியரைப் பின்பற்றிச் செங்குட்டுவனைக் கடலோட்டிய வேல்கெழு குட்டுவனாக அடையாளம் கண்டுள்ளார். அடுத்த ஐந்து வரிகளும், கடைசி நான்கு வரிகளும், பழைய பாடல்கள் எதிலும் விரிந்துரைக்கப்படாத, ஆனால், சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, போர்களைக் குறிப்பிடுகின்றன. (சிலம்பு : 28 : 115 - 119 காண்க. சோழர்குல இளவரசர்களோடு நடத்திய போர், சிலம்பு : 27 : 118 - 123 லும் குறிப்பிடப்பட்டுளது.) இவ் வேறுபாட்டோடு, நிகழ்ச்சிகளின் வரிசையைத் தலைகீழாக மாற்றியுள்ளார். ஏனைய வரிகள், சேரவேந்தன், பழையனோடு மேற்கொண்ட போர்பற்றிக் கூறுகின்றன. ஆனால், வேப்ப மரத்துண்டங்களை மகளிர் கூந்தலால் ஆன கயிறு கொண்டு யானைகளை ஈர்க்கப் பண்ணிய கதையினை நுழைத்துள்ளார். அறிவிக்குப் பொருந்தா இவ்விளக்க நுழைவு, பிந்திய தலைமுறையைச் சேர்ந்த மக்கள், பழங்காலத்திலிருந்துவரும் கதையினை, எவ்வாறு, தங்கள் கற்பனைகளைக் கட்டவிழ்த்துவிட்டும், அறிவொடு பொருந்தா அணிகளைப் புதிதாக நுழைத்தும் பெரிதாக்கிக் காட்டுகின்றனர் என்பதைத் தெளிவாக உணர்த்துகிறது. இன்றைய அறிஞர்களும் கூட அவற்றிற்கு, வழிவழிச் செய்தி எனும் பெயர் சூட்டி, எள்ளி நகையாடத் தக்க, ஒவ்வொரு கட்டுக்கதையினையும் அவ்வாறே ஏற்றுக் கொள்ளத் துடிக்கின்றனர். பழம்பெரும் புலவர், இப் பொருள்களைத் தன் பாட்டிடைப் புகுத்தியிருந்தால், அதைப் பாட்டுடைத் தலைவனைப் புகழ்ந்துபாடும் வழக்கம் உடைய

அரசவைப் புலவரின், மன்னிக்கலாம் மிகைபடக் கூறலாக் கொள்ளலாம். ஆனால், பலநூறு அண்டுகளுக்குப் பிற்பட்ட காலத்தவராய ஓர் உரையாசிரியர், அதைப் புகுத்துவராயின், அது, கட்டுப்பாடற்ற விளையாட்டுக் கற்பனையின் விளைவேயாகும்.

தமிழ் நாட்டின் மீது மௌரியர் படையெடுப்பு - ஒரு மற்றொன்று விரித்தல் :

சில பல நூற்றாண்டுகளுக்கு முன்னர்த், திருவாளர் மு. ராகவ அய்யங்கார் அவர்கள், அகநானூற்றிலிருந்து, அது, அந்நிலையிலும் அச்சிடப் படாத நிலையில், மோரியர் என்ற சொல் இடம் பெற்ற மூன்று பாடற்பகுதிகளைக் கண்டு வெளிப்படுத்தினார். அதில் முக்கியப் பகுதி, "வெற்றிக் கொடியினையும், காற்றுப்போல்விரையும், அழகுறப்புனையப் பட்ட தேரினையும் உடைய கோசர். மிகப்பழைய ஆலமரத்தின் அரிய கிளைகளின் கீழான மன்றத்தில், இனிய இசை எழுப்பவல்ல முரசம், குறுந்தடியால் அடிக்கப்பட்டு ஒலிக்கக், பகைவர் போர்முனையை அழித்தபோது, மோகூர் மன்னன் பணிந்து வாராமையால், அவன் பால் பகை கொண்டு வந்த, குதிரைப் படைகள் நிறைந்த பெரிய சேனையினையுடைய புதிய மோரியர் என்பார் புனையப் பெற்ற தம் தேர்களின் உருளைகள், தடையின்றி உருண்டோடுவதற்காக, உடைத்து வழி செய்யப்பட்ட, ஒளி வீசும் வெண்ணிற அருவிகளைக் கொண்ட மலையிடை வழி" எனக்கூறுகிறது.

"வெல் கொடித்
துனைகால் அன்ன புனைதேர்க் கோசர்,
தொன்மூது ஆலத்து அரும்பணைப்பொதியில்
இன்னிசை முரசம் கடிப்பு இகுத்து இரங்கத்,
தெம்முனை சிதைத்த ஞான்றை, மோகூர்
பணியா மையின் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்

புனைதேர் நேமி உருளிய குறைந்த
இலங்குவெள் அருவிய அறைவாய்."

- அகம் : 251 : 6 - 14.

இறுமாப்பு மிகுந்த இம் மோகூர் என்பான், குட்டுவனால் தண்டிக்கப்பட்ட மோகூரான் தானா? அல்லது அவன் பெயரே பூண்ட வேறு ஒருவனா என்பதைத் தெரிந்து கொள்வதற்கான வழியேதும் இல்லை. ஆனால், யாரோ, சில மோரியர் என்பார், அவன் பகைவராய், அவனைப் பணிய வைக்கக் கோசர் என்பாரை, முன்னதாக அனுப்பிவைத்தனர் என்பது மட்டும் உறுதி. கோசர் என்பார் துளுநாட்டில் வாழ்ந்தவராவர்.

"வாய்மையால் சிறந்த பெரிய அணிகலன்களை உடைய கோசர்க்கு உரிய, குடுமி உடையதான திரண்ட பச்சைக்காய் முற்றிய பாகற்பழத்தைத் தின்ற, பறைபோலும் வட்ட வடிவமான கண்களைக் கொண்ட தோகைகளையுடைய மயில்கள் மிக்க சோலைகளை உடைய துளுநாடு"

"மெய்மமலி பெரும்பூண் செம்மல் கோசர்
கொம்மைஅம் பசுங்காய்க்க குடுமி விளைந்த
பாகல் ஆர்கைப் பறைக்கண் பீலித்
தோகைக் காவின் துளுநாடு"

- அகம் : 15 : 2-5.

"பொன் வளம் மிக்க, கொண்கானத்தின்கண் உள்ள, நன்னனுக்குரிய நல்ல நாட்டில் இருக்கும் அழகு பொருந்திப் ஏழில் மலை வளத்தைப் பெறுவதாயிலும், உன்னைவிட்டுய பொருள்வயின் பிரிபவர் யார்?

"பொன்படு கொண்கான நன்னன் நன்னாட்டு
ஏழில் குன்றம் பெறினும், பொருள்வயின்
யாரே பிரிகிற்பவரே?"

- நற்றிணை : 391 : 6-8.

(மேலே கூறிய இரு பகுதிகளையும் இணைத்துத் திருவாளர். எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள், துளு

நாடு அல்லது கொண்கானம், நன்னனுக்கு உரிய நாடாகும் : ஒரு போரில், நன்னன் தன் அரச யானையையும் இழந்து தோல்வியைத் தழுவியதன் விளைவால், அவன் நாடு கோசர் எனும் புதியவரால், அழிவுண்டு போயிற்று என்ற முடிவினைக் கொண்டுள்ளார் (Beginnings of South Indian History, Page : 84 - 85). இக் கூற்றின் பிற்பகுதிக்குச் சான்றாக, "நன்னனுக்கு உரிய காவல் மரமாம் நல்ல மாமரத்தை வெட்டி வீழ்த்தித் தம் நாட்டிற்குக் கொண்டு சென்ற, என்றும் வாய்மையே பேசும் கோசர் போலச், சிறிது, வன்கண்மை உடைய சூழ்ச்சியும் வேண்டும்."

"நன்னன்
நறுமா கொன்று நாட்டில் போக்கிய
ஒன்று மொழிக் கோசர் போல
வன்கண் சூழ்ச்சியும் வேண்டும்."

- குறுந்தொகை : 73 : 2-5.

எனவரும் பகுதியைக் கொண்டுள்ளார்.

குறுந்தொகைப் பதிப்பாசிரியர் ஒருவர், நல்ல மணங்கமழும் மாமரம் எனும் பொருள் உடையதான நறுமா என்பதற்குப் பட்டத்து யானை எனப்பொருள் கூறியுள்ளார். நல்ல மணம் எனும் பொருள் உடையதான் "நறு" என்ற சொல் இடம் பெற்றிருப்பதையும் இறந்த ஒரு யானையின் உடலைத் தம் நாட்டிற்குக் கொண்டு சென்றிருப்பராயின் கோசர் அறிவிலாதவராவர் என்பதையும் மறந்து, திருவாளர் கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள், அப்பொருளை ஏற்றுக் கொண்டுள்ளார்.

கோசர், துளு நாட்டில் இருந்தவாறே, கொங்கு நாட்டில், அடிக்கடிப் படையெடுத்துச் சென்று, கோசரின் புதிய ஊர் எனும் பொருள் உடையதான கோயம்புத்தூர் நகரைக் கண்டனர். கோசரின் துளு நாட்டிற்கு வடக்கில், மௌரியர்களின், பெரும்பாலும், பாடலிபுத்திரத்து மௌரிய இனத்து ஒரு பிரிவின் வழி வந்த சாளுக்கிய இனத்து முதலாம்

கீர்த்திவர்மனின் (கி. பி. 566 - 597) பகைவர்களாகிய மௌரியர்களின் நாடு இடம் பெற்றிருந்தது. கோசரோடு இணைந்து தமிழ் நாட்டின் மீது ஒரு படையெடுப்பை மேற்கொள்ள முயன்ற மௌரியர், இந்த மௌரியராதலே இயலும்.

மௌரியர் பற்றிக் குறிப்பிட்டிருக்கும் பாக்களைப் பாடிய புலவர்களின் கருத்தெல்லாம், கோசர், மௌரியர்களின், அத்துணை முக்கியததுவம் இல்லாத தனி படையெடுப்புப் பற்றியதாகாது, அவர்களின் தேர்ப்படை இனிது செல்லப், பாறைகளை அகற்றிப் பண்ணிய பாதைகளைக் கொண்ட மலைநாடு, இருக்கும் சேய்மை, பொருள் ஈட்டும் முயற்சி மேற்கொண்டு அதற்கப்பாலும் சென்றிருக்கும் காதலன் பற்றியதேயாம்.

இப்பொருள் பற்றிக்கூறும் இரண்டாம் பாடற் பகுதி இவ்வாறு கூறுகிறது : "வானளாவ நீண்டுயர்ந்த பெரு மலைகளில் செல்லத் தக்க தேர்ப்படையினையுடைய மோரியர், பொன்னால் பண்ணப்பட்ட தங்கள் தேர்களின் உருளைகள் இனிது இயங்க, வெட்டி வழிசெய்யப்பட்ட குன்றுகள்."

"விண்பொரு நெடுவரை, இயல்தேர் மோரியர்
பொன்புனை திகிரி திரிதரக் குறைந்த
அறை."

- அகம் : 69 : 10 - 12.

மூன்றாம் பாடற்பகுதி, முதற்பாடற் பகுதியின் ஆசிரியராகிய மாமூலனாரால் பாடப்பட்டது : அது இவ்வாறு கூறுகிறது. "அசைந்து அசைந்து நடைபோடும் இயல்பு வாய்ந்த இளம் மயில்கள் உதிர்த்து விட்ட தோகையை, நீண்ட வாரினால், வலிய வில்லில் வைத்துக்கட்டி, அந்த வலிய வில்லின் அழகிய நீண்ட நாணின் விளிம்பிற்குப் பொருந்திய விரைவுத் தன்மை வாய்ந்த, பேரொலி எழுப்பும் விரைந்த செலவினையுடைய கொடிய அம்புகளை உடையவராகிய, வலிமை வாய்ந்த

வடுகர் என்பார் தமக்குத் துணையாக முன் வரிசையில் வர, மோரியர் என்பார் தென்னாடுகளைக் கைப்பற்ற எண்ணி வந்த படையெடுப்பின்போது, வானளாவ உயர்ந்த பனி படர்ந்த பெரிய மலைகளில், பேரொளி வீசும் தேர்ச்சக்கரங்கள் தடையின்றிச் செல்லப் பிளந்து வழியாக்கிய மலைப்பாறை."

"ஒல்கியல் மடமயில் ஒழித்த பீலி
வான்போழ் வல்வில் சுற்றி, நோன்சிலை
அவ்வார் விளிம்பிற்கு அமைந்த, நொவ்வியல்
கனைகுரல் இசைக்கும் விரைசெலல் கடுங்கணை
முரண்மிகு வடுகர் முன்னுற, மோரியர்
தென்றிசை மாதிரம் முன்னிய வரவிற்கு
விண்ணுற ஓங்கிய பனிஇரும் குன்றத்து
ஒண்கதிர்த் திகிரி உருளியகுறைத்த
அறை." - அகம் : 281 : 4 - 12.

கோசர் ஈண்டு, வடுகர் என அழைக்கப்பட்டுள்ளனர்; வடநாட்டவர் எனும் பொருள் உடையதான வடுகர் என்ற அச்சொல், தமிழ்நாட்டிற்கு வடக்கே வாழ்ந்த, தெலுங்கர், கன்னடவர், துளுவர் ஆகியவர் போலும் அனைத்து மக்களையும் குறிக்க வழங்கப்படும்.

மோரியரைக் குறிப்பிடும் கடைசிப் பாடற்பகுதி புறநானூற்றில் காணப்படுகிறது. அது இவ்வாறு கூறுகிறது. "வெற்றிதரும் வேற்படையினையும், வானளாவ உயர்ந்த நெடிய குடையினையும், கொடியணிந்த தேரினையும் உடைய மோரியர், திண்ணிய ஆரக்கால் சூழ்ந்த சக்கரம், நன்கு இயங்குதற்பொருட்டு, வெட்டிக் குறைக்கப்பட்ட, உலக எல்லைக்கு அப்பாற்பட்ட இடத்திற்குச் செல்லும் இடைவழி."

"வென்வேல்,
விண்பொரு நெடுங்குடை, கொடித்தேர் மோரியர்

திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைந்த
உலக இடைகழி அறைவாய்"

- புறம் : 175 : 5 - 8.

சந்திரகுப்தன் அல்லது பிந்துசாரன் காலத்தில் மௌரியர் களின் இந்தியப் படையெடுப்பு என்ற கோட்பாடு, இந்நான்கு பாடற்பகுதிகளை அடிப்படையாகக் கொண் டுளது. இக்கோட்பாட்டிற்கு அரணாகத் திருவாளர் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள், இப்பாடற் பகுதிகள் கி. பி. முதல் நூற்றாண்டில் கொண்டு வைக்கத் தக்கனவாம் என்று கருதி [Beginnings of South Indian History. P. 8] மாமூலனார், சோழப் பேரரசன் கரிகாலனின் சமகாலத்தவர் என்பதற்கான அகச்சான்றும் உளது என்று கூறுகிறார் [Beginnings of South Indian History . Page : 87]. அந்த அகச்சான்று எது என்பதை அவர் அறிவிக்கவில்லை. கரிகாலனின் பகைவனாகிய பெருஞ்சேரலாதன் வடக்கிருந்து உயிர் துறந்தபோது, அது கேட்ட அவன் அவைக்களப் புலவர்களும் வடக்கிருந்து உயிர் துறந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறார். (அகம் : 55 : 10 - 14), இது, மாமூலனார் கரிகாலனுக்குப் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்தவர் என்பதை நிலைநாட்டும் ; எத்தனை ஆண்டு பிற்பட்டவர் என்பதைச்கூற இயலாது. உண்மையைக்கூறின், தம்முடைய பாக்கள் பலவற்றிலும், இந்நூல் 20, 21, 23, மற்றும் இந்த 25 ஆகிய அதிகாரங்களில் குறிப்பிடப்பட்ட எந்த அரசர்களின், சமகாலத்தவராகத் தம்மை மாமூலனார் குறிப்பிடவில்லை ; மாறாகக், கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில், சேர, சோழ, பாண்டியராகிய தமிழ் அரச இனம் மூன்றும் வீழ்ச்சி உற்ற பின்னர், ஆட்சிக்கு வந்துற்ற எண்ணற்ற குறுநிலத் தலைவர்களின் காலத்தவராகவே காட்டிக் கொண்டுள்ளார். ஆகவே, பழைய தொகை நூல்களில் தொகுக்கப்பெற்ற பாடல்களைப் பாடிய புலவர்கள் அடங்கிய கடைச்சங்ககாலப் புலவர்களில் கடைசியானவராவர்."

திருவாளர் கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள், மௌரியப் படையெடுப்பு அலையினை, மதுரை மற்றும்

பொதிகை மலைவரை நீண்ட சென்றதாகக் கொண்டுள்ளார். அகம் 251 ல் வரும் "பொதியில்" என்ற சொல்லைப் பிழை படப்பொருள் கொண்டு விட்டதே. அவரின் அம்முடிவுக்குக் காரணமாம் "பொதியில்" என்றசொல், கோசர் கூடியிருப்பதைச் சுட்டிக் காட்ட வந்திருக்கும் பாடற்பகுதி எதிலும், அது, பொதிகைமலை எனும் பொருள் தரும் வகையில் "பொதியில் இல்" என வந்திலது. அக்கோசர் காணப்படடும் இடமெல்லாம் சாகாவரம் பெற்ற அகஸ்தியரும் அவர் மாணவர்களும் இடங்கொண்டிருக்கும் மலையோடு இணைக்கக் கூடாத, முதிர்ந்து நன்கு தழைத்த ஆலமரத்து அடிகளே ஆகும்.

இப்பொருள் பற்றிய திறனாய்வில், கோசர்க்குச் சிறப்பான இடம் இருப்பதால், இத்திறனாய்வினை முடிப்பதற்கு முன்னர்ப் பழந்தமிழ் இலக்கியத்தில், கோசர் பற்றிக் குறிப்பிடப்படும் பலவற்றிலிருந்து இரண்டைமட்டும் ஈண்டு எடுத்துக்காட்டுகின்றேன். முதலாவதும் ஓர் உவமையே ; அதன் பொருள் வருமாறு. "முரசு முழங்கவும், சங்கு ஒலிக்கவும், நனிமிகப் பழமை வாய்ந்த ஆலமரத்து அடியில் உள்ள மன்றத்தில், தங்கித் தோன்றிய நாலூர்க் கோசரின் நன்மொழி போல."

"பறைபடப்", பணிலம் ஆர்ப்ப, இறைகொள்பு
தொன்மூது ஆலத்துப் பொதியில் தோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல"

- குறுந்தொகை : 15 : 1- 3.

ஈண்டு எடுத்துக் காட்டிய அனைத்தும், ஒரே ஒரு நிகழ்ச்சியைக் குறிக்கவே - அதாவது, மோரியரின் தூசிப் படையாகக், கண்மூடிக் கண்திறப்பதற்குள் நடந்து விடும் நாடகமேடைக் காட்சிபோல் கோசர் வந்து தோன்றும் அவ்வொன்றைக் குறிப்பனவே. அடுத்து வரும் பகுதி பின் வருமாறு கூறுகிது, "மழை பெய்வது இடையற்றுப் போகாமையால் தப்பாத விளைவினையுடைய பழையன் என்பானுக்குரிய மோகூரிடத்து அரசவை பெருமை பெற்று விளங்க, நான்மொழிக் கோசர் என்பார் வீற்றிருந்தாற் போல"

"மழை ஒழுக்கறாஅப் பிழையா விளையுள்
பழையன் மோகூர் அவையகம் விளங்க,
நான் மொழிக் கோசர் தோன்றி அன்ன"

- மதுரைக் காஞ்சி : 507 - 509.

நான்மொழிக் கோசர் என்பது அக்கோசர், துளு, கன்னடம், தெலுங்கு தமிழ் ஆகிய நான்கு மொழிகளைப் பேசவல்லவர் என்றே பொருள்படும். கோயம்புத்தூர் தெருக்களில், இந்நான்கு மொழிகளும் பேசப்படுவதை இன்றும் கேட்கலாம். உரையாசிரியர், "நால்மொழிக் கோசர்" என்பதை மொழி நால் கோசர் எனச்சொல் மாற்றிக் கொண்டு தாங்கள் கூறிய வாய்மையில் வழுவாது நிற்கும் நால்வகைக் கோசர் எனப்பொருள் கூறியுள்ளார், இது, வலிந்து பொருள்கொள்ளப்பட்டதாம். மேலும், கோசர், நால் வகையினராய் இருந்தனர் என்பது வேறு வகையில் அறியப் படாதது.

ஏனைய சேரச் சிறப்பாளர்கள் :

பதிற்றுப்பத்து, புகழ்பெற்ற சேரர் வேறு சிலர் பற்றியும் பாடியுள்ளது ; புறநானூறும் மேலும் சிலரைக் குறிப்பிடுகிறது. அவர்கள், பொறையன், மலையன், வானவன், இமயவரம்பன், குட்டுவன், கோதை, மற்றும் வில்லவன் எனும் பட்டப் பெயர்களைக் கொண்டுள்ளனர். அவர்கள் முடியுடை மன்னர்கள் அல்லர்; அவர் குறித்துப்பாடும் பாடல்களும், வரலாற்றுச் சிறப்பு குறித்தன அல்ல; வெறும் வாழ்க்கை வரலாற்றுச் சிறப்பு குறித்தனவே; ஆகவே, அக்குறுநிலத் தலைவர்கள், ஈண்டுக் குறிப்பிடத் தேவை இலர்.

♦ ♦ ♦

I

"மாமூலனார் ; தொகை நூல்களில் இடம் பெற்றுள்ள புவலர்கள் வரிசையில் கடைசியில் வைத்து எண்ணத் தக்கவர் : கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில் வாழந்தவர்" எனத் திரு. சீனிவாச அய்யங்கார் கூறுவர் (தமிழர் வரலாறு : பக்கம் : 525) ஏற்புடையதுதானா?

(மறுப்பு)

இதற்குத் திரு. அய்யங்கார் கூறும் காரணங்கள் இரண்டு. ஒன்று : அவர், தமிழர் வரலாறு என்ற தம் நூலின் 20, 22 ஆம் அதிகாரங்களில் ஆராயப் பெற்ற கரிகாலன் உள்ளிட்ட சோழர் குல அரசர்களையோ, 21ஆம் அதிகாரத்தில் ஆராயப்பட்டிருக்கும் முதுகுடுமிப் பெருவழுதி உள்ளிட்ட பாண்டியர்குல அரசர்களையோ, 25 ஆம் அதிகாரத்தில் ஆராயப்பட்டிருக்கும் பெருஞ்சேரலாதன் உள்ளிட்ட சேரர் குல அரசர்களையோ பாடினார் அல்லர் என்பது. இரண்டு மேலே கூறிய மூவேந்தர்களின் ஆட்சியின் அழிவுக்குபின்னர், கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஆளத் தொடங்கிய எண்ணற்ற குறுநிலத் தலைவர்களையே பாடியுள்ளார் என்பது.

As a matter of fact, Mamulanar speaks in many odes as the contemporary, not of any of the Kings referred to in chapters XX, XXI, and XXIII and in this chapter [XXV], but of the numerous chieftains that rose to power, after the decline of the three Tamil dynasties at the end of the V century A. D. and is hence the latest of the gallaxy of poets,whose poems are included in the early anthologies.

-History of the Tamils : Page : 524 - 25.

முதற்கண், அவர் கூறும் இரண்டாவது காரணத்தினை ஆராய்வோம். மாமூலனார், 1) அதியமான் நெடுமான் அஞ்சி; 2) அதியன்; 3) ஆவி; 4) எருமையூரன்; 5) எவ்வி; 6) எழினி; 7) கட்டி; 8) திதியன்; 9) நன்னன்; 10) பாணன்; 11) புல்லி; 12) மத்தி; 13) மோகூர்ப் பழையன் முதலாம் குறுநிலத்தலைவர்களைப் பாடியுள்ளார் என்பது உண்மை.

ஆனால், அவர்கள் அனைவரும், திருவாளர் அய்யங்கார் கூற்றுப்படி, மூவேந்தர் ஆட்சியின் மறைவுக்குப் பின்னர், அரசோச்சத் தொடங்கியவரல்லர். மாறாக, அம்மூவேந்தர் ஆட்சிநிலவிய காலத்திலேயே, அம்மூவேந்தர் ஆட்சிக்கு அடங்கிய சிற்றரசர்களாகவும், அவர்களுக்கு அடங்காது தனியரசு நடத்தும் சிற்றரர்களாகவும் இருந்தவர்களே. அவர்களின் ஒருசிலர், அம்மூவேந்தர்களின் பகைவர்களாகி, அவர்களோடு, போரிட்டும் வந்துள்ளனர். மாமூலனாரால் பாடப்பெற்ற இவர்களில் ஓரிருவர் தவிர்த்து, எஞ்சிய ஏனையோரெல்லாம், அம்மூவேந்தர் புகழ்பாடும், பரணர், நக்கீரர், ஔவையார் போலும் முதுபெரும் புலவர்களால், அம்மூவேந்தர்களோடு இணைத்தே பாடப்பட்டுள்ளனர்.

1) அதியமான் நெடுமான் அஞ்சி : தன்னைப்பாடிய அரிசில்கிழார்க்குத், தன் அரசு கட்டிலையும், பாட வந்து முதுமைத் தளர்ச்சியால் உறங்கிவிட்ட மோசிகீரனார்க்கு மருசு கட்டிலும் அளித்த பெருவேந்தனாம் பெருஞ்சேரல் இரும்பொறை பெரும்படை கொண்டு பல நாள் போரிட்ட பின்னரே கைக்கொள்ள முடிந்தது என்ற பெரும் பாராட்டினைக் தரவல்ல, அழிக்கலாகாத் திண்மை வாய்ந்த தகடூர்க் கோட்டைக்கு உரியவனும், சோழனும், பாண்டியனும் துணைவரத் தக்க பேரரசு செலுத்தியவனும் (பதிற்றுப்பத்து : 75) உண்டார் உயிரை நெடிது வாழவைக்கும் அரிய நெல்லிக்கனியைத் தான் உண்ணாது ஔவைக்கு ஈந்து அரும்புகழ் கெண்டவனும், (புறம் : 91), பாணனும் பாராட்டிய பெரியோன் என் ஔவையாரால் பாராட்டப்பெற்றவனும் (புறம் : 99) ஆவன் அதியமான் நெடுமான் அஞ்சி; இவனை, அகம் 372ல் பரணர் பாராட்டியுள்ளார்.

2) அதியன் : தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட, நெடுநல்வாடை பாடிய நக்கீரால், கொங்கரை வென்று நாடுபல கொண்டவனாகப் பராட்டப் பெற்றவன் பசும்பூண் பாண்டியன, ("கொங்கர் ஓட்டி நாடுபல தந்த பசும்பூண் பாண்டியன்" (அகம் : 253) அப்பசும்பூண் பாண்டியன் படைத்தலைவனாகவும், வாகைப் பறந்தலைப்போரில், பட்டத்து யானையோடு இறந்துபட்டான் எனவும், அதனால் பசும்பூண் பாண்டியனின் பகைவராம் கொங்கர் மகிழ்ச்சிப் பெருக்கால் ஆராவாரித்தனர் எனவும் பாராட்டிப் பாடியுள்ளார் பரணர் : (" வாகைப் பரந்தலைப் பசும்பூண் பாண்டியன் வினைவல் அதிகன், களிறொடு பட்ட ஒன்றை ஒளிறுவாள் கொங்கர் ஆர்ப்பினும் பெரிதே" (குறுந் : 393) ஆகப் பெருவீரர் புகழ்பாடும் கிணைப்பறை ஒலி அவிந்துபோக மறைந்த மேலோன் அதியன் ("அதியன் பின்றை வள்ளுயிர் மாக்கிணை கண் அவிந்தாங்கு" (அகம் : 325) என மாமூலனாரால் பாராட்டப்பெற்ற அதியன், நக்கீரரின் பாட்டு டைத் தலைவனாம் நெடுஞ்செழியனின் பகைவர்களாம் கொங்கர்க்கு மகிழ்ச்சியூட்டுதற்குக் காரணமாய், வாகைப் போர்க்களத்தில், போர்க்களிற்றின் மீதிருந்தே உயிர்நீத்த பெருவீரனாவன் எனப் பரணரால் பாராட்டப்பெற்ற பெரியோனாவன்.

3) ஆவி : "நெடுவேள் ஆவி, அறுகோட்டு யானைப் பொதினி" "நெடுவேள் ஆவி, பொன்னுடை நெடுநகர்ப் பொதினி" (அகம் : 1 : 61) என மாமூலனாரால் பாடப்பெற்ற நெடிவேள் ஆவி, சிறுபாணாற்றுப்படை ஆசிரியர், இடைக் கழிநாட்டு நல்லூர் நத்தத்தனாரால், "கால மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன் பெருங்கல் நாடன் பேகன்" (85 - 87) எனப்பாராட்டப் பெற்றவனும், கபிலர், பரணர், அரிசில்கிழார், பெருங் குன்றூர்கிழார் போலும் பழம்பெரும் புலவர்களால் பாராட்டப் பெற்றவனும் ஆகிய வையாவிக் கோப்பெரும் பேகனே ஆவன். ஆகவே, அவனும், அவனைப் பாடிய மாமூலனாரும், பரணரின் பாராட்டினைப் பெற்ற

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் (அகம் : 396) சேரன் செங்குட்டுவன் (பதிற்றுப்பத்து : ஐந்தாம் பத்து) சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி (புறம் : 4) கபிலர் பாராட்டிய, செல்வக் கடுங்கோவாழியாதன், (புறம் : 8 : பதிற்றுப்பத்து : ஏழாம் பத்து), வேள்பாரி (புறம் : 105...) போலும் பேரரசர்கள் வாழ்ந்த காலத்தவரே அல்லது, அவர்களுக்குப் பிற்பட்ட காலத்தவரல்லர்.

4) எருமை ஊரன் : "நுண்பூண் எருமை" (அகம் : 115) என மாமூலனாரால் பாராட்டப்பெற்ற எருமையூரன், தலையாலங்கானப் போர்க்களத்தில், பாண்டியன் நெடுஞ்செழியனை வந்து எதிர்த்த, அவன் பகைவர் எழுவரில் ஒருவனாவன். "செழியன், ஆலங்கானத்து அகன்றல்ல சிவப்பச், சேரல், செம்பியன், சினங்கெழுத்திதியன் போர்வல்யானைப் பொலம்பூண் எழனி, நாரரி நறவின் எருமை ஊரன். தேங்கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின் இருங்கோவேண்மாள், இயல்தேர்ப் பொருநன்", என்று எழுவர் நல்வலம் அடங்க" (அகம் : 36) என்றும். ஒப்புக் கூறமாட்டா வலிமிகு தோள் உடையவன்; வடுகர்களின் தலைவன்; பெரும்புகழ் வாய்ந்தவன், "நேராவன்தோள், வடுகர் பெருமகன்; பேரிசை எருமை" (அகம் : 253) என நக்கீரரால் பாராட்டப்பெற்றவன் ஆதலின், மாமூலனாரின் பாராட்டினைப் பெரும் அவ்வெருமையூரனும், மூவேந்தர் காலத்தவனே ஆவன்.

5) எவ்வி : திதியனொடு பகைகொள்வது அழிவுக்கே வழி கோலும் என்பதறிந்த எவ்வி, அது செய்ய முனைந்த, தன் நண்பன் அன்னிக்கு அறிவுரை கூறினானாகவும், அவன் அது கேளாதே சென்று, திதியன் காவல் மரமாம் புன்னையை அழித்து, அதனால் சினங்கொண்ட திதியனால் அழிவுற்ற அன்னியின் செயலைக் கூறுமுகத்தான் வருவது உரைக்கும் எவ்வியின் வளமார் அறிவைப் பாராட்டியுள்ளார் நக்கீரர். "எவ்வி நயம்புரி நன்மொழி அடக்கவும், அடங்கான். பொன்னிணர் நறுமலர்ப் புன்னை வெஃகித் திதியனொடு பொருத அன்னிபோல விளிகுவை" (அகம் : 126).

எவ்விக்கு உரிய நீழல் நாடு, மருதவளத்தையும் நெய்தல் வளத்தையும் ஒருசேரக் கொண்டது. மருத நிலத்து உழவர். தாம் அறுத்த நெல்லின் தாள்களைக் கடா விட்டுத் தூற்றுங்கால் எழும் துரும்புகள், அயலே உள்ள நெய்தல் நிலத்து உப்பு வயல்களில் சென்று படியுமாக, அதனால் சினங்கொள்ளும் நெய்தல் நிலத்தவர்க்கும், மருத நிலத்தவர்க்கும் இடையே மூளும் பகைமை, அவ்வூர் வாழ் முதுபெரும் மக்கள் தீர்த்து வைத்து, இரு திறத்தவர்க்கும் இனிய மது அளித்து மகிழ்ந்து போகச் செய்வர் என எவ்வியின் நாட்டு நலம் பாடியுள்ளார் குடவாயில் சீரத்தனார். "போர்பு அழித்துக் கள்ளார் களமர் பகடுதளை மாற்றிக், கடுங்காற்று எறியப் போகிய துரும்புடன், காயல் சிறுதடி கண்கெடப் பாய்தலின், இரு நீர்ப்பரப்பின் பனித்துறைப் பரதவர், தீம்பொழி வெள்ளுப்புச் சிதைதலின் கிணைஇக், கழனி உழவரொடு மாறெதிர்த்து மயங்கி, இருஞ்சேற்றள்ளல் எறி செருக்கண்டு, நரைமூதாளர் கைபிணி விடுத்து, நனைமுதிர் தேறல் நுளையர்க்கு ஈயும் பொலம் பூண் எவ்வி நீழல்" (அகம் : 366).

எவ்வியின் மிழலைநாடு நீர்வளம் மிக்கது : அவன் நாட்டு முத்தூர் போலும் பேரூர்கள் நெல்வளம் மிக்கது என்பதறிந்து தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், எவ்வியின் மீது படைபெயடுத்துச் சென்று, அவனையும் கொன்று, அவன் நாட்டையும் கைக்கொண்ட செயலைக் கூறியுள்ளார். அந்நெடுஞ்செழியனை, மதுரைக் காஞ்சி பாடிப் பாராட்டும் மாங்குடிகிழார் : "தாங்கா உறையுள் நல்லூர் கெழீஇய, ஓம்பா ஈகை மாவேள் எவ்வி, புனலம் புதவின் மிழலையொடு, கழனிக் கயல் ஆர் நானா, போர்வில் சேக்கும், பொன்னணி யானைத் தொன் முதிர் வேளிர், குப்பை நெலின் முத்தூறுதந்த கொற்ற நீள்குடைக் கொடித் தேர்செழிய!" (புறம் : 24).

பெருங்கொடை வள்ளலாம் எவ்வி இறந்து விட்டான். ஆனால், அவன் மறைவினைத் தாங்கிக் கொள்ளமாட்டாப் புலவர்வெள்ளெருச்சிலையார். "எவ்வி, மார்பில் வேல்

பாய்ந்து விழுப்புண் பெற்று வீழ்ந்து விட்டான்" என விடியற் போதில் பரவிய செய்தி ; பொய்யாகிப் போய் விடாதா? போய்யாகி விடுவதாக" என வாய்விட்டுப் புலம்பியுள்ளார். "பொய்யாகியரோ, பொய்யாகியரோ-போரடுதானை எவ்வி, மார்பின் எஃகுறு விழுப்புண் பல, என வைகுறு விடியல் இயம்பிய குரலே" (புறம் : 233).

ஆனால், எவ்வி இறந்து விட்டது உண்மையாகி விட்டது; அவன் அளிக்கும் பரிசில் பெற்று வாழ்ந்த இரவலர் வாழ்க் கையில் இருள் சூழ்ந்துவிட்டது : துயர் உள்ள அவர்கள். தங்களின் முடிகளில் பூச்சூடுவதையும் கைவிட்ட காட்சியைக் கண்டு கண் கலங்கியுள்ளார். பரணர், "எவ்வி இழந்த வறுமை யாழ்ப்பாணர், பூவில் வறுந்தலை." (குறுந் : 19).

வெற்றியே தரும் வாட்போர் வல்லவனாம் எவ்வி, ஒரு போரில், இறந்து போனானாக, அதுகாறும். அவன் புகழ் பாடிப் பரிசில் பெற்று வாழ்ந்த பாணர். அவனை, இனிப் பாடுவது இல்லாது போகவே, வழிபடுதெய்வம் போல் தங்களால் வழிபடப் பட்டு வந்ததும், வளம் மிக்க இனிய இசை எழுப்ப வல்லதும், வளைந்த தண்டினை உடையது மான தங்கள் யாழை ஒடித்துப் போட்டுவிட்டனர்" "எவ்வி வீழ்ந்த செருவில் பாணர், கைதொழுமரபின் முன் பரித்தீடுப் பழிச்சிய, வள்ளுயிர் வளர்மருப்பு" (அகம் : 115) எனப்பாடி இரங்கும் மாமூலனாரும், பரணரும் நக்கீரரும் வாழ்ந்த காலத்தவரே அல்லது, திரு. பி. டி. எஸ். அவர்கள் கூறுவது போல் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டகாலத்தே வாழ்ந்தவரல்லர்.

6) எழினி : சோழ வேந்தன் ஏவல் கேட்கும் குறுநிலத் தலைவனாய் இருந்தும், அச்சோழன் பணித்த யானை வேட்டைக்குச் சென்று துணைபுரியாமையால், சினங் கொண்ட சோழனால் சிறைபிடித்துப் பல் பறிக்கப்பட்டு, அப் பல்லை வெண்மணிவாயில் கதவில் பதித்துத் தண்டிக்கப் பட்டவனாக மாமூலனார் கூறும் எழினி, ("பிடிபடு பூசலின் எய்தாது ஒழியக், கடுஞ்சின வேந்தன் ஏவலின் எய்தி,

நெடுஞ்சேணாட்டில் தலைத்தார்ப்பட்ட கல்லா எழனி பல் லெறிந்து அழுத்திய வன்கண் கதவின் வெண்மணி வாயில்" (அகம் : 211), தலையாலங்கானப் போரில், நெடுஞ்செழியன் பால் தோல்வி கண்ட எழுவரில் ஒருவனாக, நக்கீரரால் கூறப்பட்டுள்ளான். ("போர்வல் யானைப் பொலம்பூண் எழினி" (அகம் : 36). ஆகவே, எழினியும், அவனுக்குத் தம்பாட்டிடை இடம் நல்கிய மாமூலனாரும், தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் காலத்தவரே ஆவர்.

7) கட்டி : தமிழகத்தின் வட எல்லையாம் வேங்கடத் திற்கு அப்பாற்பட்டதான, வேற்று மொழிவழங்கும், வடுகர் என்ற இனத்தவர்க்கு உரிய நாட்டைச் சேர்ந்தவன் ; வேற் படையால் வீறுபெற்றவன் என மாமூலனரால் கூறப்படும் கட்டி. ("வடுகர் முனையது, பல்வேல் கட்டி நன்னாட்டு உம்பர் மொழிபெயர் தேஎம்" (குறுந் : 11). உறந்தையில் வாழ்ந்து வந்த வீரனும், வள்ளலுமாகிய தித்தன் என்பானோடு போரிட்டு வெல்ல எண்ணிப், பாணன் எனும் மற்போர் வல்லானோடு தமிழகம் வந்து, உறையூரை அணுகிய காலை, தித்தன்பால் பெரும் பரிசில் பெற்ற மகிழ்ச்சியால், அவன் புகழ்பாடும் பாணர் எழுப்பும் இனிய கிணை இசையினைச் செவி மடுத்த அளவே, இத்துணைப் பெரும்புகழ் உடையானை வெல்வது இயலாது என உணர்ந்து போரிடும் எண்ணத்தையே கைவிட்டுப் பாணனோடு ஓடிவிட்டான் எனப்பரணரும், ("பாணனொடு மலிதார்த் தித்தன் வெளியன் உறந்தை நாளவைப் பாடின் தெண்கிணைப் பாடு கேட்டஞ்சிப், போரடு தானைக் கட்டிப் பொராஅது ஓடிய ஆர்ப்பு." (அகம் : 226), அவ்வாறு ஓடிய கட்டி, சேரமான் கணைக்கால் இரும்பொறையின் படைத்தலைவர்களுள் ஒருவனாக இடம் பெற்று வாழ்ந்திருந்த காலை, கழுமலம் எனும் இடத்தில் வந்து எதிர்த்த சோழன் செங்கணான் படைத்தலைவன் பழையனால் அழிவுற்ற, நன்னன், ஏற்றை, அத்தி, கங்கன், புன்றுறை என்ற அச்சேரர் படைத்தலைவர்களோடு கொல்லப் பட்டான் எனக் குடவாயில் கீரத்தனாரும், ("நன்னன் ஏற்றை, நறும்பூண்

அத்தி, துன்னரும் கடுந்திரல் கங்கன், கட்டி, பொன்னணி வல்வில் புன்றுறை என்றாங்கு, அன்றவர் குழீஇய அளப்பரும் கட்டூர்ப் பருந்துபடப் பண்ணியப் பழையன் பட்டென"... (அகம் : 44) பாடியிருப் பதால், அக்கட்டியைப் பாடிய மாமூலனார், பரணர் பேலும் பெரும் புலவர்களால் பாராட்டப் பெற்ற முவேந்தர் காலத்து முதியவரே அல்லது, கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர் அல்லர்.

8) திதியன் : பரணர் முதலாம் இரவலர்கள், பரிசில் பொருட்களாக எண்ணிலாப் பொன் அணிகளையே பெற்றுக் கொண்ட மகிழ்ச்சியால் புகழ்ந்து பாட, நாள்தோறும் நாட்காலைப் போதிலேயே அரசவைக்கு வந்து வீற்றிருக்கும் விழுச்சிறப்பு உடையவனும், தன் பகைவராம் வேளிரொடு மேற்கொள்ள வேண்டிய போருக்காக, வாளை எப்போதும் உறைகழித்தே வைத்திருக்கும் விழிப்புடையானும் ஆகிய திதியன் என்பான் ஒருவனைப் பாடியுள்ளார் மாமூலனார்.

"பாணர் ஆர்ப்பப் பலகலம்உதவி
நாளவை இருந்த நனைமகிழ் திதியன்
வேளிரொடு பொரீஇய கழித்த
வாள்" - அகம் : 331.

தாம் விளைவித்திருந்த பயற்றை, அன்னி மிஞிலி என் பாளின் தந்தை காத்திருந்த பசுநிரை மேய்ந்து விட்டது கண்டு சினங்கொண்ட கோசர், அவன் கண்களையே போக்கிவிட்ட ராகச், சினங்கொண்ட அவள், அக்கோசரை அழித்துப் பழிதீர்க்கும் வரை நல்ல உணவு உண்பதோ, நல்லஉடை உடுப்பதோ செய்யேன் என வஞ்சினம் உரைத்து விட்டு, அழுந் தூர்த்திதியன் பால்சென்று முறையிட, வீரம் செறிந்த வீரர்கள் நிறைந்த சிறுசிறு காட்டரண்களைக் கொண்டிருந்த வெற்றி வீரனாம் அத்திதியன் அக்கோசர் பலரைக் கொன்று தீர்த்த நிகழ்ச்சியைப் பரணர் பாடியுள்ளார்.

"பாசிலை அமன்ற பயறு ஆபுக்கென
வாய்மொழித் தந்தையைக் கண்களைந்து அருளா

ஊர்முது கோசர் நவைத்த சிறுமையின்
கலத்தும் உண்ணாள் ; வாலிதும் உடாஅள்;
சினத்திற் கொண்ட படிவம் மாறாள் ;
மறங்கெழு தானைக் குற்றக் குறும்பியன்
செருவியல் நன்மான் திதியற்கு உரைத்து அவர்
இன்னுயிர் செகுப்பக் கண்டு சினம் மாறிய
அன்னி மிஞிலி." - அகம் : 262.

தன் காவல் மரமாம் புன்னையை வெட்டி வீழ்த்த வேண்டும் என விரும்பி அது செய்யற்க என நண்பன் எவ்வி தடுக்கவும், அது கேளாதே வந்து தன்னை எதிர்த்த அன்னி என்பானைக் கொன்ற கொற்றமிகு திதியன் ஒருவன் புகழ் பாடியுள்ளார் நக்கீரர்.

"எவ்வி நயம்புரி நன்மொழி அடக்கவும் அடங்கான்
பொன்னிணர் நறுமலர்ப் புன்னை வெஃகித்
திதியனொடு பொருந அன்னி போல
விளிகுவை," - அகம் : 126.

குறுக்கைப் பறந்தலைப் போரில், திதியனின் புன்னையை வெட்டிவீழ்த்திய அன்னியின் செயல் கண்டு ஆரவாரப் பேரொலி எழுப்பினர் இரவலர் என்கிறார் வெள்ளி வீதியார்

"அன்னி குறுக்கைப் பறந்தலைத் திதியன்
தொன்னிலை முழுவதும் துமியப் பண்ணிப்
புன்னை குறைத்த ஞான்றை வயிரியர்
இன்னிசை ஆர்ப்பு." - அகம் : 45.

குறுக்கைப் பறந்தலைப் போரில், அன்னியால் வெட்டி வீழ்த்தப்பட்ட திதியனின் புன்னை நிலைகண்டு கண்கலங்கியுள்ளார் புலவர் கயமனார்.

"அன்னி குறுக்கைப் பறந்தலைத் திதியன்
தொன்னிலை முழுவதும் துமியப் பண்ணிய
நன்னர் மெல்லிணர்ப் புன்னை." - அகம் : 146

மாமூலனார் பாடிய திதியன் அன்னிமிஞிலியின் துயர் துடைத்தோனாகப் பரணரால் பாராட்டப்பெற்ற அழுந்தூர்த் திதியனே ஆயினும், எவ்வி அடக்கவும் அடங்காது வந்து புன்னையை வெட்டி வீழ்த்திய அன்னியை வெற்றி கொண்டவனாக, நக்கீரராலும், வெள்ளி வீதியாராலும், கயமனாராலும் பாடப்பெற்ற, குறுக்கைப் பறந்தலைப் போர்த் திதியனே ஆயினும், மாமூலனார் பரணர்காலத்தும், நக்கீரர் காலத்தும் வாழ்ந்த முதுபெரும் புலவரே ஆவர்.

9) நன்னன் : நன்னனுக்கு உரியது பாழி; அது பிறர் அணுகலாகாக் காவல் அமைந்தது. "நன்னன் பாழி அன்னகடியுடைவியன் நகர்" (அகம் : 15) : நன்னன், வேளிர் வழி வந்தவன்; வியலூர்க்கு உரியவன். "நன்னன் வேண்மாள் வயலைவேலி வயலூர்" (அகம் : 97) : நன்னன் ஏழிற் குன்றத்துக்கும் உரியவன். "நன்னன் நன்னாட்டு ஏழில் குன்றம்" (அகம் : 349). நன்னனைக்குறித்து மாமூலனார் கூறுவன இவை.

நன்னன் வேளிர் வழிவந்தவன்; அவனுக்குரிய பாழி, அரியகாவல் உடையது; அதனால், வேளிர், தங்கள் பொற் செல்வங்களை, அப்பாழிக்கண் வைத்துக் காத்து வந்தனர்." நன்னன் உதியன் அருங்கடிப் பாழித் தொன்முதிர் வேளிர் ஓம்பினர் வைத்த பொன்", "பாழிஆங்கண், வேண்முது மாக்கள் வியன்நகர்க் கரந்த அருங்கல வெறுக்கை" (அகம் : 258 : 372).

பாழி நகர்மீது போர்தொடுத்து வந்த, தேர்ப்படை முதலாம் படைவலம் மருந்த மிஞிலி என்பானைத் தன் பொருட்டு எதிர்த்துப் போரிட்டு உயர்நீத்த தன் நண்பன் ஆஅய் எயினனின் உடலைக் காணவும் வராது ஒளிந்து கொண்டு, பழி கொண்டான் நன்னன். "ஆஅய் எயினன் அளியியல் வாழ்க்கைப் பாழிப் பறந்தலை, இழையணி யானை இயல்தேர் மிஞிலியொடு, நண்பகல் உற்ற செருவில் புண் கூர்ந்து, ஒள்வாள் மயங்கமர் வீழ்ந்தென.....நன்னன் அருளான் கரப்ப." (அகம் : 208).

நன்னன் பற்றிப் பரணர் கூறியன இவை. ஆக, மா மூலனாரும் அவனால் பாடப்பெற்ற பாழிநகர் நன்னனும், பரணரும், அவரால் பாடப்பெற்ற மூவேந்தர்களும் வாழ்ந்த காலத்தவரே அல்லது, திருவாளர் அய்யங்கார் கூற்றுப்படி கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர் அல்லர் என்பது உறுதியாதல் காண்க.

10) பரணன் : தமிழகத்து வடக்கண் உள்ளதான நல்ல நாட்டைச் சேர்ந்தவன் என மாமூலனாரால் கூறப்பட்ட பரணன் ("வடாஅது, நல்வேல் பாணன் நன்னாடு" (அகம் : 325), தமிழகம் வந்து, கணையன்பால் பயிற்சி பெற்று, வெல்லற்கு அரியவன் எனச் சிறந்து விளங்கிய ஆரியப் பொருநன் என்ற மற்போர் வல்லானை மற்போருக்கு அழைத்து, அவ்வாரியப் பொருநனின், முடிவு போலும் தோள்கள், தன் கையகத்தே அகப்பட்டுக்கிடக்க, உடல் இரு கூறு ஆகிப்போக வெற்றி கொண்ட செய்திகளையும், ("பாணன் மல்லடு மார்பின் வலியுற வருந்தி, எதிர்தலைக் கொண்ட ஆரியப் பொருநன், நிறைந்திரள் முழவுத்தோள் கையகத்து ஒழிந்த திறன் வேறு கிடக்கை" (அகம் : 386) அவ்வெற்றிக் களிப்பால், கட்டி எனும் மற்றுமொரு வட நாட்டு வீரனையும் துணைகொண்டு, தித்தன் வெளியனையும் வெல்லக்கருதி, அத்தித்தனுக்கு உரிய உறந்தை நகரை அணுகிய போது, அந்நகர் எல்லையிலேயே, அத்தித்தன் புகழ்பாடும் இசைப் பேரொலி கேட்டு அஞ்சிப்போரிடும் எண்ணத்தையே கைவிட்டு ஓடிவிட்ட செய்தியையும் (அகம் : 226) பரணர் கூறியுள்ளார். ஆகவே, பாணனும் அப் பாணனைப்பாடிய மாமூலனாரும், பரணர் காலத்தவர் ; அப்பரணரால் பராட்டப் பெறும் மூவேந்தர் காலத்து வாழ்ந்த முதியவர் என்பது இதனாலும் உறுதியாயிற்று.

11) புல்லி : வேங்கட நாடுடையான் ; கள்வர் கோமான்; மழவரை வெற்றி கொண்டவன் ; காட்டில் பிடிகொண்ட களிறுகளின் கோடுகளையும், கள்ளையும் விற்று வாங்கும் நெல் உண்டு வாழும் நல்லவன். புல்லி குறித்து மாமூலனார் கூறுவது இதுவே. "அண்ணல் யானை வெண்கோடு

கொண்டு, நறவுநொடை நெல்லின் நாண்மகிழ் அயரும், கழல் புனை திருந்தடிக், கள்வர் கோமான் மழபுலம் வணக்கிய மாவண்புல்லி, விழவுடை விழுச்சீர் வேங்கடம்." (அகம் : 61.)

யானைகள் காட்டகத்தே நின்று அலறக், களிறுகளாம் அவற்றின் கன்றுகளைக் கைப்பற்றிக் கொண்ட உவகையோடு, அவற்றைக் கள்ளின் விலையாகக் கள் விற்கும் மனைகவின் முற்றத்தே பிணிக்கும் வீரர்களைக்கொண்டவன், வேங்கடத்திற்கு உரியவன் புல்லி, ["மடப்பிடி கானத்து அலறக் களிற்றுக் கன்று ஒழித்த உவகையர்-நறவு நொடை நல்லில் புதவு முதல் பிணிக்கும் கல்லா இளையர் பெருமகன் புல்லி, வியன்தலை நன்னாட்டு வேங்கடம்" (அகம் : 83)] எனக் கூறுவதன் மூலம், புல்லி குறித்து மாமூலனார் கூறியதை அப்படியே ஏற்றுக் கொண்டுள்ளார் கல்லாடனார்.

வேங்கட நாட்டில் கொண்ட களிறுகளால் வீறுகொண்ட படையுடையார் பாண்டியர் ["வேங்கடப் பயந்த வெண்கோட்டுயானை மறப்போர்ப் பாண்டியர்" (அகம் : 27)] தென்னாட்டகத்தே உள்ள கௌரியர்க்கு உரிய நல்ல நாட்டில், சிறுசிறு காட்டரண்களை அமைத்துக் கொண்டு, பண்டியர் தலைமைக்கும் பணிய மறுத்து வாழ்ந்திருந்த சிற்றரசுகளைக் கள்வர் கோமான் ஏவல் கேட்கும் வீரர் துணையால் வெற்றி கொண்ட தென்னவன். "தெனா அது வெல்போர்க் கௌரியர் நன்னாட்டு உள்ளதை...கள்வர் பெருமகன் ஏவல் இளையர், தலைவன் மேவார் அருங்குறும்பு எறிந்த ஆற்றலொடு பருந்துபடப் பல்செருக் கடந்த செல்லுறழ் தடக்கைக் கொடஅ நல்லிசைத் தென்னவன் (அகம் : 342)] எனக் கூறியதன்மூலம், புல்லிக்கும், பாண்டியர்க்கும் உள்ள நட்புறவினை நாட்டியுள்ளார் மதுரைத் தமிழ்ச்சங்கத் தலைவராம் நக்கீரரைப் பெற்றெடுத்த பெருமைக்குரிய மதுரைக்கணக்காயனார்.

ஆகப், புல்லியும், அம்மதுரைக் கணக்காயர் காலத்தவனே அல்லது பிற்பட்ட காலத்தவன் அல்லன் என்பது உறுதியாயிற்று.

12) மத்தி : கட்டியின் வாழ்வோடு விளையாடியவன்; கட்டியைக் பாடிய புலவர்களே இம்மத்தியையும், அக்கட்டியோடு இணைத்தே பாடியுள்ளனர்; ஆகவே, கட்டிக்குக் கூறியது மத்திக்கும் பொருந்தும்.

13) மோகூர்ப் பழையன் : கள்ளக்குறிச்சியை அடுத்திருந்த மோகூரில் வாழ்ந்திருந்த குறுநிலத்தலைவன் பழையன், மோகூர் மன்னன் எனவும் அழைக்கப் பெறுவன்; கோசர் படைத்தலைவனாகிய பழையன், பாண்டியர் படைத்தலை வனாகவும் பணிபுரிந்து வந்தான். இதைப் "பழையன் மோகூர் அவையகம் விளங்க நான்மொழிக்கோசர் தோன்றியன்ன" (மதுரைக்காஞ்சி : 508 - 509) : "மாறன் தலைவனாக, ஏந்தடு வாய்வாள் இளம்பல் கோசர் இயல்நெறி மரபின் நின்வாய் மொழி கேட்ப." (மதுரைகாஞ்சி : 771 - 776) என, மாங்குடி மருதனார் உரை தெளிவாக்குதல் காண்க.

பாண்டியர் படைத்தலைவனாய்ப் பணிபுரிந்திருந்த போது, வெள்ளம்போலும் பெரும்படையோடு வந்து, பாண்டியர் தலைநகர் கூடலை வளைத்துக் கொண்ட கிள்ளிவளவனை, அவன் பகைவனாம் கோதை மார்பன்" உவக்கும் வகையில் வெற்றி கொண்டு, அவனுக்குரிய குதிரைப்படை களிற்றுப் படைகளைக் கைப்பற்றிக்கொண்ட பழையன் பேராண்மை யை, நக்கீரர் பாராட்டியுள்ளார்.

"பழையன் மாறன்
மாடமலிமறுகின் கூடல் ஆங்கண்
வெள்ளத் தானையொடு வேறுபுலத்து இறுத்த
கிள்ளிவளவன் நல்லமர் சாஅய்க்
கடும்பரிப் புரவியொடு களிறுபல வவ்வி
ஏதில் மன்னர் ஊர்கொளக்
கோதை மார்பன் உவகையிற் பெரிதே."

- அகம் : 346.

கிள்ளிவளவனை வெற்றி கொண்ட களிப்பு மிகுதியால் பழையன் மோகூரில் வாழ்ந்திருந்த போது, மாறன் எனப்

பாண்டியர்க்குரிய குலப்பெயர் பூண்டும், அவர்க்கு உரிய மரமாம், வேம்பையே தன்னுடைய காவல் மரமாகக் கொண்டும், வாழ்ந்திருந்த பழையன் மீது சினங்கொண்ட செங்குட்டுவன், அம்மோகூர் மீது படையெடுத்துச்சென்று, பழையனை வென்று, அவன் காவல் மரமாம் வேம்பையும் வெட்டி வீழ்த்தித் துண்டுகளாக்கினான். இச்செயலைச், செங்குட்டுவன் அவைக்களப் புலவராம், பரணர் "மோகூர் மன்னன் முரசும் கொண்டு, நெடுமொழி பணித்து, அவன் வேம்பு முதல் தடிந்து" (பதிற்று : 44) என்றும், செங்குட்டுவன் உடன்பிறப்பு இளங்கோ அடிகளார் "பழையன் காக்கும் குழைபயில் நெடுங்கோட்டு, வேம்பு முதல் தடிந்த ஏந்துவாள் வலத்துப் போந்தைக் கண்ணிப் பொறைய" (சிலம்பு : 27 : 124 - 126) என்றும் பாராட்டியுள்ளனர்.

இல்வாறு முடியுடைய மூவேந்தர்களைப் பாடிய நக்கீரரும், பரணரும் பாடிய மோகூர் மன்னன் பழையன், தமிழகத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் கருத்தோடு நெடிய பெரிய தேர்ப்படைகளைக் கொண்ட மோரியர் என்ற கங்கைக் கரைப் பேரரசராம் மோரியர், தம் தேர்ப்படை இனிதே செல்ல, இடையில் தடையாக இருந்த மலைகளை யெல்லாம் வெட்டி வழிசெய்து கொண்டு, தமிழகத்துள் புகுந்து விட்டாராகத் தன் கோசர் படைத்துணையோடு அவர்களை வெற்றிக்கொண்டு, தன் மோகூரைத் தாண்டி அப்பாற் செல்லாவாறு துரத்திவிட்ட அருஞ்செயலை மாமூலனார் பாராட்டியுள்ளார்.

"கோசர்
தொன்மூ தாலத்து அரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசும் கடுப்பு இருத்து இரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை, மோகூர்
பணியாமையின் பகைதலைவந்த
மாகெழு தானை வம்ப மோரியர்" - அகம் : 251.

ஆக, நக்கீரரும், பரணரும் பாடிய மோகூர்ப் பழையனும், அவனைப்பாடிய மாமூலனாரும், அம்முதுபெரும் புலவர்

களும், அப்புலவர் பெருமக்களால் பாடப்பெற்ற நெடுஞ் செழியன், செங்குட்டுவன் போலும் மூவேந்தர்களும் வாழ்ந்த காலத்தவரே அல்லது, கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற்கும் பிற்பட்ட காலத்தவர் அல்லர்.

ஆக, மாமூலனார் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட காலத்தவர் என்பதற்குத், திருவாளர் பி. டி. எஸ். அவர்கள் காட்டிய இரண்டாவது காரணமாம், மாமூலனார் பாடிய எண்ணற்ற குறுநிலத் தலைவர்கள் எல்லாம், மூவேந்தர் ஆட்சி மறைவுக்குப் பின்னர், அதாவது கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற்குப் பின்னர்த், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டு அரசோச்சத் தொடங்கியவர்களாவர் என்ற வாதத்தில் வலுவில்லை என்பது உறுதி செய்யப்பட்டதாகிவிட்டது.

இனி, மாமூலனார் மூவேந்தர் வழி வந்தார் எவரையும் பாடவில்லை என்ற அய்யங்காரின் முதல் காரணத்திலாவது உண்மை இருக்கிறதா என்பதை ஆராய்வாம்.

மாமூலனார், தமிழகம் மூவேந்தர் ஆட்சிக் கீழ் முழுமையாக இருந்த காலத்தில் வாழ்ந்தவர்தாம். அதனால் தான், தமிழகத்துக்கு அப்பாற்பட்ட, வேற்றுமொழி வழங்கும் நாட்டைக் குறிப்பிடும் போது, "தமிழ் கெழு மூவர்காக்கும் மொழிபெயர் தேஎம்" (அகம் : 31) எனக்குறிப்பிட முடிந்தது.

இவ்வாறு பொது வகையால் கூறியதோடு அமையாது. தன்நாட்டு எல்லையை விரிவுபடுத்தி, மறைந்த தன் முன்னோர் நினைவாகப் பெருஞ்சோறு அளித்துக் கடம்பரை வென்று, இமயத்தே வில் பொறித்து அக்காரணங்களால், பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் என அழைக்கப் பெற்ற சேரர் குலம் பெருவேந்தன் ஒருவனைப் பாராட்டியுள்ளார்.

"நாடுகண் அகற்றிய உதயஞ்சேரல்" - அகம் : 65.

"துறக்கம் எய்திய தொய்யா நல்லிசை
முதியர்ப் பேணிய உதியம் சேரல்,
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை" - அகம் : 233.

"வலம்படு முரசின் சேரலாதன்
முந்நீர் ஓட்டிக் கடம்பு அறுத்து இமயத்து
முன்னோர் மருள வணங்கு வில் பொறித்து"

- அகம் : 12.

பெருஞ்சோற்று உதியன் சேரலாதனோடு, குடநாட்டை வளமிக்க நாடாக்கி ஆண்டு வந்த குட்டுவன் என்ற பிறிதொரு சேரர்குலக் காவலனையும் பாடியுள்ளார்.

"குட்டுவன் காப்பப்,
பசிஎன அறியாப் பணைபயில் இருக்கைத்
தடமருப்பு எருமை தாமரை முனையின்
முடமுதிர் பலவின் கொழுநிழல் வதியும்
குடநாடு" - அகம் : 19.

இவ்வாறு சேரர் சிலர் வரலாறு உரைத்த அவர், "சோழர் வெண்ணெல் வைப்பின் நன்னாடு" (அகம் : 201) எனச்சோழ நாட்டு நெல் வளத்தையும் கூறியுள்ளார். சோழ நாட்டு வளத்தைப் பொதுவாகப் போற்றிய புலவர், வேலி ஆயிரம் விளையுமளவு சோழநாட்டை வளப்படுத்திய கரிகால் பெருவளத்தானையும், வெண்ணிப் போரில் அவன்பால் தோற்றுப் பெற்ற புறப்புண்ணுக்கு நாணி வடக்கிருந்து உயிர் விட்ட ஆன்றோர்களையும் பாடியுள்ளார்.

"கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்,
பொருதுபுண் நாணிய சேர லாதன்
அழிகள மருங்கின் வ்ாள்வடக்கு இருந்தென
இன்னா இன்னுரை கேட்ட சான்றோர்
அரும்பெறல் உலகத்து அவனொடு செலீஇயர்
பெரும் பறிது ஆகியாங்கு" - அகம் : 55.

சேரர் குலத்துக் குட்டுவனுக்கு உரிய அகப்பாவை வென்று, அதைப் பகற் போதிலேயே தீயிட்டு அழித்த பெயர் அறியாச் சோழர்குலச் செம்பியன் ஒருவனையும் பாடியுள்ளார்.

"குட்டுவன்
அகப்பா அழிய நூறிச் செம்பியன்
பகல்தீ வேட்ட ஞாட்பு" - நற் : 14.

புல்லியின் பல்வேறு சிறப்புகளைக் கூறும் நிலையில் அவற்றோடு இணைத்துப் பாண்டியர் பெருமையையும் கூறிய தோடு அமையாது பாண்டியர்தம் யானைப்படைப் பெருமை ; அப்படையுடைமையால் போர்க்களம் எதுவே ஆயினும், ஆங்கு வெற்றியே பெறும் விழுச்சிறப்பு, உலகம் புகழ் அவர் தம் கொற்கைத்துறை, ஆங்குக் கொட்டிக்கிடக்கும் முத்து, வலம்புரிசங்கு ஆகியவற்றின் பெருமைகளையும் பாராட்டியுள்ளார்.

"வினைநவில் யானை விறற்போர்ப் பாண்டியன்
புகழ்மலி சிறப்பின் கொற்கை முன்துறை
அவிர்கதிர் முத்தமொடு வலம்புரி." - அகம் : 201.

ஆக, மாமூலனார், மூவேர்தர்களைப் பாடவில்லை என்ற திருவாளர் அய்யங்கார் அவர்கள் காட்டும் காரணத்திலும் உண்மையில்லை என்று தெளிவாகிறது.

மோரியரின் தென்னாட்டுப் படையெடுப்பைக் குறிப்பிட்டிருப்பவர் மாமூலனார் ஒருவர் மட்டும் அல்லர். மேலும் இருவர் குறிப்பிட்டுள்ளனர். ஒருவர், கள்ளில் ஆத்திரையனார்; மற்றொருவர் குமட்டூர்க்கிழார் மகனார் பரங்கொற்றனார்.

மோரியர் வருகையை, "வென்வேல், விண்பொரு நெடுங் குடைக் கொடித்தேர் மோரியர்" எனப்புறத்தில் (175) குறிப் பிடும் கள்ளில் ஆத்திரையனார், தம்முடைய குறுந்தொகைப் பாட்டு ஒன்றில் "ஆதிஅருமன்" (293) என்பானைக் குறிப் பிட்டுள்ளார். இதே ஆதிஅருமனை, நக்கீரர் நற்றிணைப் பாட்டு ஒன்றில் (367) "மூதில் அருமன்" எனக்குறிப் பிட்டுள்ளார்.

ஆகவே, மோரியர் வருகையைக் குறிக்கும் கள்ளில் ஆத்திரையனாரும், கடைச்சங்கத்துத் தலைவர்களுள் ஒருவராம் நக்கீரர் காலத்தவர் என்பது உறுதியாகிறது.

அதே போல், "விண்பொரு நெடுவரை இயல்தேர் மோரியர்" என மோரியர் வருகையைக் குறிக்கும் பிறிதொரு புலவராம் உமட்டூர்க்கிழார் மகனார் பரங்கொற்றனார். அதே பாட்டில் (அகம் : 69) "அரண்பல நூறி, நன்கலம் தறூஉம் வயவர் பெருமகன் சுடர்மணிப் பெரும்பூண் ஆஅய்" என ஆயையும் பாராட்டியுள்ளார். இந்த ஆயைப் பாடிய புலவர் பல்லோருள் பரணரும் ஒருவர். "சென்றோர்க்குச் சாலவிழ் நெடுங்குழி நிறைய வீசும் மாஅல் யானை ஆய்கானம்" (அகம் : 152), "ஆஅய் நன்னாட்டு அணங்குடைச் சிலம்பு." (அகம் : 198), ஆகவே, மோரியர் வருகைகூறும், உமட்டூர்க்கிழார் மகனார் பெருங்கொற்றனாரும், பரணர்காலமாம் கடைச் சங்கக் காலத்தவர் என்பது உறுதியாயிற்று.

ஆக, மோரியர் வருகையைக் குறிப்பிடும் மாமூலனார், கடைச்சங்க காலப் புலவரே அல்லது, கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற்கும் பிற்பட்டவரல்லர் என்பது இவ்வகையாலும் உறுதி செய்யப்படுகிறது.

மோரியர் வருகையைக் குறிப்பிடும் இரண்டு இடங்களில், ஓரிடத்தில் மாமூலனார், அம்மோரியரை, "வம்பமோரியர்" (அகம் : 251) எனக்குறிப்பிட்டுள்ளார்.

"வம்பமோரியர்" என்ற தொடருக்குத் திரு. அய்யங்கார் அவர்கள் புதிய மோரியர் ["Moriyar, who newly came" Page : 520.] எனப் பொருள் கொண்டு, "ஈண்டு மௌரியர் எனக் குறிப்பிடப்பட்டிருப்பவர், பாடலிபுத்திரத்தை ஆண்ட மௌரியர் இனத்து வழிவந்த ஒரு கிளையனராய்க் கி. பி. 597-இல் அரசாண்டிருந்த சாளுக்கிய இனத்து முதலாம் கீர்த்தி வர்மனின் பகைவர்களாக இருந்தவராதலே வேண்டும். கோசர் தொடர்போடு, தமிழ்நாட்டில் படையெடுத்தவர், மோரியருள், இந்தப் பிற்கால மோரியர் ஆதலே இயலக்கூடிய ஒன்று. [The Mauryas, perhaps, the descendants of some branch

of the Maurya dynasty of Padaliputra, and foes of Kirthivarman I of the Calukya dynasty (566-597 A.D.). These Mauryas were the only possible Moriyar, who in conjunction with the Kosar, could have attempted a raid in to the Tamil Country" (Page : 522)] எனக் கூறி, மோரியர் படையெடுப்பையும், அதுகூறும் மாமூலனாரையும், கி.பி. ஆறாம் நூற்றாண்டிற்குத் தள்ளிவிட்டுள்ளார்.

தொகை நூல்களில் பல இடங்களில் பயில ஆளப் பட்டிருக்கும் வம்பு என்ற அச்சொல், அங்கெல்லாம், நிலையில்லாத என்ற பொருளில்தான் ஆளப்பட்டுளதே அல்லது, புதுமை என்ற பொருளில் ஆளப்பட்டிலது. கார் காலத்து மழையே நிலைத்துநின்று பெய்யும் மழை; ஒரோ வழி, அக்கார்காலம் தொடங்குவதற்கு முன்பே, கணப் பொழுது கனமழை பெய்து விடுவதும் உண்டு. அம்மழை காணும் அகத்திணைத் தலைவியர், அதைக் கார்காலத்து மழையாகக் கொண்டு, காதலன் கூறிச்சென்ற கார்காலம் வந்துவிடவும், அவன் வந்திலனே என வருந்தும் நிலையில், அவர்களின் தோழியர், இது கார்காலத்தில் பெய்யும் நிலைத்த மழையன்று: கார்காலம் தொடங்குவதற்கு முன்பே, ஒரோ வழி வந்து பெய்து ஓய்ந்து விடும் நிலையில்லாத மழை எனத் தேற்றுங்கால், அம்மழையின் நிலையில்லாத் தன்மையை உணர்த்தக் கையாளும் சொல்லே, வம்பு என்ற இச்சொல். "வம்பமாரி" (குறுந் : 66); "வம்புப் பெய்யுமால் மழையே" (குறுந் : 382) என்ற தொடர்களைக் காண்க.

அதேபோல், உயிரிழக்கப் போவதை அறியாதே போரிட வந்த அரசர்களையும், வீரர்களையும் குறிப்பிடும் இடங்களில் மட்டுமே, வம்பு என்ற சொல்லைப், புலவர்கள் ஆண்டுள்ளனர், "வம்ப வேந்தன்"; "வம்ப வேந்தர்", "வம்ப மன்னர்." (புறம் : 287 ; 345 ; 78.) என்ற தொடர்கள் ஆளப் பட்டிருக்கும் அப்பாடல்களின் சூழ்நிலப் பொருளைக் காண்க.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, வம்பு, என்ற சொல்லுக்கு நிலையின்மை என்பதே பொருளாம் எனத்

தொல்காப்பியரும் இலக்கணம் வகுத்துள்ளார். "வம்பு நிலையின்மை" (தொல். உரி. 29). சூத்திரம் காண்க.

ஆக, "வம்பமோரியர்" என்ற தொடருக்குத் தமிழகத்தின் மீது போர்தொடுத்து வருவதன் விளைவாக, அழிந்து போகப்போகும், நிலையாமையினைத் தழுவப் போகும் மோரியர் என்பதே பொருந்தும் பொருளாகுமே அல்லது, புதிய மோரியர் என்பது பொருந்து பொருளாகாது.

ஆக, வம்ப என்ற ஒரு சொல்லுக்குப் பொருந்தாப் பொருள் கொண்டு விட்டு, அச்சிறு ஆதாரத்தைப் பிடித்துக் கொண்டு, தமிழகம் வந்த மோரியரையும், அவர்களைக் குறிப்பிடும் மாமூலனாரையும், சிலநூறு ஆண்டு காலத்திற்குப் பின் நோக்கித் துரத்திவிடுவது பொருந்தாது.

தென்னிந்திய வரலாறு எழுதிய வரலாற்றுப் பேராசிரியர்களுள், திருவாளர் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்களும் ஒருவர். அவர், தம்முடைய தென்னிந்திய வரலாற்றின் தொடக்கம் [Beginning of South Indian History, Page : 85]. என்ற நூலில், "மோரியர் வருகையைக் குறிக்கும் பாடற் பகுதிகள், கி. பி. முதலாம் நூற்றாண்டிற்கு உரியவாம் எனக் கொள்ளுதல் வேண்டும்." என்றும், "மாமூலனார், கரிகால் பெருவளத்தான் சமகாலத்தவர் என்பதற்குப் போதுமான அகச்சான்றுக்ள உள்ளன" என்றும் கூறிக் காரிகாலன் பகைவனும் பெருஞ்சேரலாதன், போரில் பெற்ற புறப்புண்ணுக்கு நாணி, வடக்கிருந்த உயிர் விட்டது கேட்ட சான்றோர்களும் வடக்கிருந்து உயிர்விட்ட செய்தியைக் கூறும் மாமூலனார் பாட்டைத் (அகம் : 55) தம் கூற்றிற்கு ஆதாரமாகவும் கொண்டுள்ளார்.

இதை எடுத்துக் காட்டியிருக்கும் திருவாளர் பி. டி. எஸ். அவர்கள், சந்திரகுப்தன் அல்லது பிந்துசாரன் காலத்தின் மௌரியரின் தென்னிந்தியப் படையெடுப்பு நிகழ்ந்தது என்ற கூற்று, இந்நான்கு பாக்களையே அடிப்படையாகக் கொண்டுளது, எனக் கூறிவிட்டுத், "திருவாளர் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார், தம் முடிவிற்குப் போதுமான

அகச்சான்று இருப்பதாகக் கூறினாரேயல்லது, அந்த அகச்சான்று யாது என்பதைக் கூறினார் அல்லர்" என்று கூறிவிட்டு, அவர் கூறிய முடிவை மறுக்கவல்ல எந்த வாதத்தையும், தாமும் எடுத்துவைக்காமல், மாமூலனார், கி. பி. 5ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தைச் சேர்ந்தவர் என்ற, தம்முடைய பழைய பல்லவியையே பாடிமுடித்துள்ளார். [The theory of the Mauryan invasion of Indian, in the reign of Chandragupta of Bindusara rests on these four passages. Possibly as a prop for the theory, S. Krishnasamy Ayyangar, assumes that these passages are, 'ascribable to the first century of the Christain era; "(Page : 85); and says that, "There is enough internal evidence to show that Mamulanar was the exact contemporary of the Chola ruler Karikala" (Page : 87). He does not tell us what that internal evidence is. He alludes to the fact that, when Peruncheraladan, the foe of Karikal committed suicide, his courtiers heard of it; and they also committed suicide." (History of the Tamils Page : 524.]

திருவாளர் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள் கரிகாலன் காலத்தவர் மாமூலனார்: ஆகவே, கி. பி. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்று கூறியிருக்கவும், அதற்கு அவர் எடுத்து வைத்திருக்கும் சான்றுகளை மறுக்க இயலாத திருவாளர் பி. டி. எஸ். அவர்கள், "தம் முடிவிற்கு உறுதி செய்யவல்ல போதிய அகச் சான்றுகள் உள்ளன எனக் கூறிய கிருஷ்ணசாமி அய்யங்கார், அந்த சான்று யாது என்பதைக் கூறவில்லை" என்று மட்டுமே கூறித் தம் வாதத்தின் வலுவின்மைக்கு, மறைமுகமாக ஒப்புதல் அளித்திருக்கும் நிலையில், மோரியர் தென்னாட்டுப் படையெடுப்பு, கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே நடைபெற்றிருக்க வேண்டும் என்ற கொள்கை, மேலும் சில வரலாற்றுப் பேராசிரியர் களிடையேயும் நிலவி வருகிறது என்பது ஈண்டுக் குறிப்பிடல் தகும்.

மதுரை நாயக்க மன்னர்கள் (Nayaks of Madura) சென்னைப் பல்கலைக்கழகச் சார்பில், 1944-இல், திரு. சத்தியநாத அய்யரால் நிகழ்த்தப்பட்ட இரண்டு சொற்பொழிவுகளின்

தொகுப்பாம் "தொண்டை மண்டலத்தின் பழைய வரலாறு" (The Ancient History of Tondaimandalam) என்ற நூல்களின் ஆசிரியரும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் வர லாற்றுத் துறையில் பணிபுரிந்தவரும் ஆகிய, ஆர். சத்தியநாத அய்யர், தம்முடைய நூல்களில், தென்னாட்டு மீதான படையெடுப்பு மேற்கொண்டவன் மௌரியப் பிந்துசாரனே எனக் கூறியுள்ளார்.

அவருடைய, இந்திய வரலாறு என்ற நூலின் நான்காம் அதிகாரத்தில், பிந்துசாரன் (கி. மு. 301 - 273) என்ற பெருந்தலைப்பின் கீழ் உள்ள, "தென்னிந்தி வெற்றி" என்ற குறுந்தலைப்பின் கீழும் பக்கம் : 121. தொண்டை மண்டலத்தின் பண்டைய வரலாறு" என்ற நூலில், "பிந்துசாரன்" என்ற தலைப்பில் கீழும் பக்கம் 10. பின் வருமாறு கூறியுள்ளார்.

"அசோகனின் பேரரசில், விந்தியத்திற்கு அப்பாற்பட்ட நிலப்பரப்பின் பெரும்பகுதியை இணைத்திருப்பது, அப்பகுதியின் வெற்றி குறித்துக் கேள்வி எழுப்பியுளது. கி. மு. மூன்றாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தவரான சந்திரகுப்தனுக்கு, அதுபோலும் வெற்றியை உரியதாக்கும் தெளிவான அகச்சான்று எதுவும் இல்லை. அசோகன் பெற்ற வெற்றி, கலிங்கம் ஒன்றே என மதிப்பிடலாம். திபேத்திய வரலாற்றுப் பேராசிரியர் தாரநாதன் என்பார், கௌடல்யன் துணையோடு, 16 பெருநாடுகளை அழித்துக் கிழக்கு மேற்குக் கடற்கரைகளுக்கு இடையிலான நாடுகளை இணைத்துக் கொண்ட நிகழ்ச்சியைப் பிந்துசாரனுக்கு உரியதாக்குகிறார். கௌடல்யனுக்கும் பிந்துசாரனுக்கும் உள்ள உறவு, "ஆரிய மஞ்சூரி முலகற்பா" என்ற நூலின் ஆசிரியரான ஏமச்சந்திரராலும் உறுதி செய்யப்பட்டுளது. "பிந்துசாரன் அரியணை ஏறும்போது நனிமிக இளையன்; ஆகவே அவனுடைய தென்னாட்டுப் படையெடுப்பு, அவன் ஆட்சிக்காலத்தில், அதாவது, கி. மு. 298க்கும், கி. மு. 278க்கும் இடையிலான காலத்தில் நடைபெற்றிருக்க வேண்டும் என்கிறார் ஏமச்சந்திரர். தாரநாதர் குறிப்பிடும் 16 அரசுகளின்

அழிவினை வடநாட்டில் எண்ணிப் பார்க்கவும் இயலாது. சங்க காலத் தமிழ் இலக்கியங்களில், மோரியர் படையெடுப்பு பற்றிய குறிப்புக்கள் (மாமூலனாரின் இரண்டையும் சேர்த்து) நான்கு உள்ளன. கரவேலனின் அதிகும்பா கல்வெட்டு, தன் கேட்டிற்குக் காரணமாய் இருந்த, தமிழ் நாட்டரசர்களின் மிகப்பெரிய கூட்டணி ஒன்றைக் குறிப்பிடுகிறது. அந்தக் கூட்டணி கி. மு. 278-இல் தோன்றியிருக்க வேண்டும். இந்த நாள் பிந்துசாரன் ஆட்சிக்கால எல்லைக்குள் அடங்குகிறது."

"தமிழ் அரசர்கள், ஆரியரை வென்ற நிகழ்ச்சி, தமிழிலக் கியங்களில் பரவலாகக் குறிப்பிடப்பட்டுளது. இது, கரவேலனின் அதிகும்பா கல்வெட்டு குறிப்பிடும் தமிழரசர்களின் கூட்டணியை உறுதிசெய்கிறது. கலிங்கம், பிந்துசாரனால் வெற்றி கொள்ளப்படாமல், அசோகனால் கொள்ளப்பட்டமைக்கும், தமிழரசுகள், அசோகனின் ஆட்சிக்கு அடங்காத் தனிநாடுகள் என, அசோகனால் குறிப்பிடப்பட நேர்ந்தமைக்கும் காரணம், பிந்துசாரன் தமிழகத்தில் பெற்ற தோல்வியே காரணம்," என்றெல்லாம் கூறியுள்ளார். திரு. சத்தியநாதய்யர்.

The inclusion in Asoka's empire of a substantial part of Cis-vindhyan Indian, raises the question of its conquest. There is no definite ascription of such a consequest to Chandragupta. (325 - 301. B. C.). We may regard Kalinga as the only region conquerred by Asoka. To Bindusara is ascribed by Taranatha, the Tibetan historian, the destruction, with the help of Kautilya, of the Kings and ministers of about sixteen towns, as well as the annexation of the territory, between the Eastern and Western oceans. The association of Kautilya with King Bindusara is supported by Hemachandra, the author of "Arya - Manjus Mulakalpa". Hemachandra says, that Bindusara was a "bala" (young boy), when he was crowned King and that after attaining manhood he became warlike. Therefore he must have invaded South India, a few years after his accession in 301 B.C., say in 293 B.C., and before 278 B.C., The destruction of sixteen Kingdoms mentioned by Taranatha, could not be thought of in Northern India. There are four references in the Tamil Literature of the Sangam age, including two

by Mamulanar to the invasion of South India by the Mauryas. The Hathigumpha inscription of Kharavela mentions a league must have originated in 278 B. C., and this date falls within the religion of Bindusara.

In the light of the victories claimed by the Tamil Kings over the Aryan forces, mentioned in Sangam literature where are justified in thinking, that the league of 278 B.C., must have expelled the Mauryan Army. The probable partial unsuccess for the fact that he did not attempt the consequest of Kalinga, so that Asoka could truly describe it as an unconquered country.

1) History of India Vol. I. Page 121, 122

2) Studies in the Ancient History of Tondaimandalam, Page No. 10, 11 Both by Thiru Prof. R. Sathianathaier.

ஆக, மாமூலனாரும், பிறரும் கூறும் மோரியர் படையெடுப்பு, கி. மு. மூன்றாம் நூற்றாண்டில், பிந்துசாரன் மேற்கொண்ட தென்னாட்டுப் படையெடுப்பையே குறிக்கும் என்பதும், ஆகவே, மாமூலனார், அப்படையெடுப்பு நிகழ்ந்த காலத்தை அடுத்து வாழ்ந்தவரே அல்லது, திருவாளர் பி. டி. எஸ். அவர்கள் கூற்றுப்படி, கி. பி. ஐந்தாம் நூற்றாண்டாம் நனிமிகப் பிற்பட்ட காலத்தவரல்லர் என்பதும், திருவாளர் சத்தியநாதராலும் உறுதி செய்யப்படுகிறது என்பது தெளிவாயிற்று.

♦ ♦ ♦

16. பழைய அரச இனங்கள் ஒளிகுன்றல்

கடைசி, பாண்டிய சோழ அரசர்கள் :

இறையனார் அகப்பொருள் உரையாசிரியர், தமிழ்ச் சங்கம் நிறுவிய உக்கிரப் பெருவழுதியைப் பாண்டியர்களில் கடைசி அரசனாகக் கொண்டது, குறிப்பிடத்தக்கது, தொடர்ந்து வந்துகொண்டிருந்த பண்டைய பாண்டியர் வழியை, ஏதோ சில அவப்பேறு துண்டித்து விட்டது என்பதை, இதிலிருந்து உய்த்துணர்ந்து கொள்ளலாம். புறநானூறு 367 ஆம் எண் செய்யுளுக்கு இணைத்திருக்கும் கொளுவின்படி, இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, இவ்வுக்கிரப் பெருவழுதியின் நண்பனாவன். இந்த அரசர்களின் காலத்திற்குப் பிறகு பாடிய புலவர்களெல்லாம், சிறு பாணாற்றுப் படை ஆசிரியரைப் போலவே, பாண்டிய அல்லது சோழ அரசர்களைப் பாராட்டிப் பாடாமல், இப்பழைய அரச இனங்களின் வீழ்ச்சிக்குப் பின்னர்ப் பெருமை பெற்ற குறுநிலத் தலைவர்களையே பாடியுள்ளனர் ஆதலாலும், சேர சோழ பாண்டிய அரசர்களைக் குறிப்பிடும் போதும், கலித் தொகை பாடிய புலவர்களைப் போலவே, ஆளும் அரசர்களைப் பெயர் சுட்டிக்குறிப்பிடாமல், பொதுவாகவே குறிப் பிட்டுள்ளனர் ஆதலாலும், இப்பெருநற்கிள்ளியோடு சோழ அரசு இனத்து வழியும், பெரும்பாலும் இடையறவு பட்டிருக்க வேண்டும். ஆகவே, இவ்விரு அரசர்கள் காலத்தில், இப்பழம் பெரும் அரச இனங்களின் செல்வாக்குச் சிறப்பில், ஏதோ ஒரு நிலைகுலைவு ஏறபட்டிருக்க வேண்டும் என நம்பலாம்.

சமண, புத்தசமயங்களின் செல்வாக்கு உயர்தல் :

நெடுஞ்செழியன் காலத்தில், மதுரைப்புறநகரில், ஆரிய சமயங்கள், குறிப்பாகப், புத்த சமணசமயங்கள் வழக்கத்தில் இருந்தன. [மதுரைக்காஞ்சி : 475 - 483, 487 வரிகளைக் காண்க.] அரசர்களால் பெரிதும் பேணப்பட்டவை, பழைய தமிழ்ச்சமயங்களே; என்றாலும் கி. பி. 470ல், சமணப் பேரவை ஒன்றும் மதுரையில் நிறுவப்பட்டது [தமிழ் வரலாறு பக்கம் : 247 அடிக்குறிப்பு காண்க]. இந்நிகழ்ச்சி, சமண எழுத்தாளர் ஒருவரால் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுளது. ஆகவே, தமிழ் நாட்டில், ஆரிய சமயம் ஒன்று ஆதரவைப் பெற்றுவிட்டது. தமிழகத்தில் உறுதியான ஓர் இடத்தைப் பெற்றுவிட்டது என்தற்கான ஒரு நிகழ்ச்சியாகவே, இதை எடுத்துக் கொள்ளலாம்.

இவ்வுண்மையோடு, இதே காலத்தில், காவிரிப்பூம் பட்டினத்தில், புத்தசமயத்திற்கும் இதுபோலும் சிறப்பிடம் அளிக்கப்பட்டிருந்த்து என்பதையும் இணைத்துக் கொள்ளலாம். கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் கடைசி நான்காம் பாகத்தின்போது, புத்தகோசருக்குக் காலத்தால் மூற்பட்டவராகிய, புத்த தத்தர் பௌத்த நூல்கள் பலவற்றைச் சோழ நாட்டிலிருந்து எழுதினார். அபிதம்மாவதாரம் என்ற தம் நூலின் இறுதியில் இவ்வாறு கூறியுள்ளார். "இழிந்த சாதியினராகாமல் உயர்ந்த சாதியினராகிய ஆடவர், மகளிரைப் பெருந்திரளாகக் கொண்டதும், ஒரு பெரு நகருக்குத் தேவைப்படும் அனைத்தையும் பெற்றிருப்பதும், ஆற்றிலிருந்து வந்து பாயும் பளிங்குபோல் தெளிந்த நீரைக் கொண்டதும், பல்வகை நவரத்தினங்களால் நிறைந்ததும், பல்வேறு வகை அங்காடிகளைக் கொண்டதும், பற்பல மலர்ச் சோலைகளால் அழகு பெற்றதும், சுற்றுக்சுவர்களில், பல்வேறு வகைப்பட்ட அழகிய கோபுரவாயில்களைக் கொண்டதாய்க் கண் ஹதாசர் என்பவரால் கட்டப்பெற்றதும், கைலாய மலைமுகடுக்கு நிகரான உயர்வுடைய மாளிகையால் அழகு பெற்றதுமாகிய அழகிய, இனிய தவப்பள்ளியினைக் கொண்டதுமாகிய அழகிய காவிரிப்பூம்பட்டினத்தில்,

ஆங்குள்ள ஒரு பழைய வீட்டில் வாழ்ந்திருந்த போது, நல்ல தலைப்புகளில் அழகாக எழுதுவது போலும் சிறந்த பண்புகளால் புகழ் பெற்றிருந்தவனும், சிறந்த அறிவுடையவனும், நல்லவனும் இரந்து உண்போனும் ஆகிய என்னால் இது எழுதப்பட்டு, விரிவாக விளக்க உரையும் செய்யப் பட்டது.

"நர நாரீகணாகிண்ணெ அசங்கிண்ண குலாகுலெ
பீதெ சப்பன்க கம்பன்னெ பகன்ன சரிதூதகெ
நாநாரதன சம்புண்ணெ விவிதாபண சங்கதெ
காவெரீ பட்டனெ ரம்மெ நாநாராமொ பசொப்ஹிதெ
கெலாச சிகராகார பாசாத பதி மண்டிதெ
காரிதெ கண்ஹதாசென தஸ்ஸநீயெ மனொரமெ
விகார விவிதாகாரசாரு பாகார கொபுரெ
தத பாசீன பாசாதெ மயா நிவசதா சதா
ரம்ம கல்லெக சாதல்ய சீலதி குண சொப்ஹினா
சுயம் சுமதினா சாது யாசிதென கதொ ததொ".

அபிதம்மாவதாரம் : சுலோகம் : 1409 - 1413.

வாழ்த்துப் பாக்களின் முடிவில், பிற்கால எழுத்தாளர் சிலர், "அபிதம்மாவதாரம் என்ற இந்நூல், உரகபுரத்தில் (உறையூரில்) வாழ்ந்திருந்த பஹ்தந்த புத்ததத்த ஆச்சாரியரால் இயற்றப்பட்டது" என்ற பின்னுரையினை இணைத்துள்ளனர். [உரகபுர நிவாசிகென ஆசிரியென ப்ஹதந்த புத்ததத்தென கதொ அவிதம்மாவதொரொ, நாமாயம்." உரகபுரத்தில் வாழ்வோன் என்பதன் பொருள் பெரும்பாலும் அந்நகரின் குடிமகன் என்பதே ஆம்.

விநய விநிச்சயம் என்ற நூலின் முடிவுரையில், புத்த தத்தர் இவ்வாறு கூறுகிறார், "அனைத்துவகை மக்களைக் கொண்டதும், சோழப் பேரரசின் கடற்றுறை நகரானதும், வாழைத் தோட்டங்களாலும், பனை தென்னைத் தோப்புகளாலும் நிறைந்ததும், தாமரை, அல்லி மலர்களால்

முழுவதும் மறைவுண்ட நீர்நிலைகளால் ஒளி பெற்றதும், காவிரி பாய்வதால் மண் வளம்பெற்றுத் தூய்மை பெற்றதும், வளம் கொழித்து, ஒரு நகரின் தேவை அனைத்தையும் கொண்டதுமாகிய, குழப்பம் இன்றி, அமைதிநிலவும் பூத மங்கலம் என்ற பெருநகரில், நன்கு கட்டப்பெற்ற வெளிப் புறச்சுவர் அகழ்களால் வெனுதாசன் என்பானுக்கு உரியதும், ஆற்றங்கரையில் வரிசையாக வளர்க்கப்பட்ட வாநீர மரங்களால் சிறப்புற்றதும், பல்வேறு இனப்பறவைகளைக் கொண்டு, மக்கள் உள்ளங்களுக்குக் களிப்பூட்டுவதும், இனிய தாமரை மலர்களால் முழுமையாக மூடப்பெற்ற குளங்களால் அழகு பெற்றதும், இனிய நீரால் நிறைந்த சிறந்த கிணறுகளால் சிறப்புற்றதும், பரந்து அகன்ற வான் சுதை தீட்டப்பெற்று ஒளி பெற்ற எண்ணிலா வீடுகளைக் கொண்டதும், கைலைமலை முகடுகளை வெற்றி கொண்டு எள்ளி நகையாடும் உயர்வுடையதும், கூதிர்ப் பருவத்து வான் முகில் போலும் ஒளிவுடையதுமான கோபுரங்களால் பிளவுண்ட மண் உடையதும் ஆகிய தவப்பள்ளியில் மக்கள் உள்ளத்தை ஐயத்தின் நீங்கித் தெளிவு பெறச் செய்யும் ஒரு மாளிகையில் வாழ்ந்திருந்த என்னால் என் மாணவர்களின் நலம் கருதியும், வினயம் என்ற நூலைக் குறுகிய காலத்தில் எளிதில் கற்றுக்கொள்ள விரும்பும் பிக்குகளின் ஒற்றுமைக்காவும், புத்தசிம்மர் போதித்த கொள்கைகளையொட்டி, இத்தொகுப்பு நூல், புத்தசிம்மரைப் பெருமை செய்வான் வேண்டித், தொகுக்கப் பெற்றது." இது, களப்பிரர் குலத்தைச் சேர்ந்த, குற்றத்தின் நீங்கிய, அச்சுத விகண்டன் காலத்தில் தொடங்கப் பெற்று முடிக்கப் பெற்றது.

"செட்டஹஸ்ஸ சொளரத்ஹஸ்ஸ நாம்ஹிழ்தெ நிராகுலெ
சப்பஸ்ஸ பன லொகஸ்ஸ காமெ சம்பிண்டிதெ விய
கடலீசாதாலுச்சுனா லிகெரவனாகுலெ
கமலுப்பலசஞ்சன்ன சலிலாசய சொய்ஹிதெ
காவெரி ஜலகம்பாத பரிபூதம் ஹீதலெ
இத்த்ஹெ சப்பங்க சம்பான்னெ மங்கலெ பூதம்ங்கலெ

பவராகார பாகாரபரி க்ஹா பரிவாரிதெ
விகாரெ வெண்ஹஶ தாசஸ்ஸ தஸ்ஸனீயெ மனொரமெ
தீரன்தரு ஹவானீர தருராஜி விராஜிதெ
நானாதிஜ கணாராமெ நாநாராம மனொரமெ
சாருபங்கஜ சங்கிண்ணதளர்க சமலங்கதெ
கரசொதக சம்புண்ண வர கூ பொபசொப் ஹிதெ
உக்கதென ச தூபென ப்ஹெத்வா வ தரனீ தலம்
ஜித்வா வ் அவஹசன் தென க்ஹெலாசசிக் ஹரம்கரம்
கரதம்புதசங்காஸெ தஸ்ஸநீயெ சம்முஸ் ஸிதெ
பஸாதஜனனெ ரம்மெ பாசாதெ வசதா மயா
வுத்தஸ்ஸ புத்த சீஹென வினயஸ்ஸ வனிச்ஹயொ
புத்தசீஹம் சமுத்திஸ்ஸ மம சத்ஹிவிஹாரிகம்
கதொ யம்பன பிக்கூனம் ஹிதத்ஹாய சமாசதொ
வினயஸ்ஸாவ பொத்ஹத்ஹம் சுக்ஹென் எவாசீரென ச
அச்சுத் அச்சுத விக்கண்தெ கலப்ஹகுலனன் தனெ
மஹிம் சமனுசாசன்தெ ஆரத்ஹொ ச கமாபிதொ"

விநயவிநிச்சயம் : 3165 - 3179.

புத்த தத்தரின் சான்றிலிருந்து உய்த்துணரக் கூடியன :

புத்த தத்தரின் பெயரைத் தன் பெயராகக் கொண்டிருக்கும் ஈழத்தைச் சேர்ந்த திருவாளர் ஏ. பி. புத்த தத்தரின் தலைமையில் இயன்ற பதிப்பாசிரியர் குழுஅச்சிட்ட புத்ததத்தரின் நூலிலிருந்து [முதல்பதிப்பு : 1915 இரண்டாம் பதிப்பு : 1928] எடுத்துக் காட்டப்பட்ட இவ்விரு பகுதிகளிலிருந்து, ஐந்தாம் நூற்றாண்டின் கடைசியில், மக்களால் நிரம்பி, விலை மதிக்கவொண்ணா அரும்பொருள்களைக் கொண்ட அங்காடிகளையுடைய வளமான நகரமாகவே காவிரிப்பூம் பட்டினம் இருந்து வந்துளது என்பதை அறிகிறோம். காவிரிப்பூம்பட்டினம் பற்றிய இவ்வருணனை மணிமேகலை இருபத்தைந்தாவது அதிகாரம், 199 - 204 வரிகளில்

கூறப்பட்டிருக்கும் புகார் நகரத்துக் கடல் கோளும் மக்கள் அந்நகர் விட்டுப்போனதும், ஒன்று வெறும் கற்பனைக் காவியக்கதையாதல், வேண்டும், அல்லது ஐந்தாம் நூற்றாண்டிற்குப் பின்னர் எப்போதாவது நிகழ்ந்திருக்க வேண்டும் என்பதையே உணர்த்துகிறது. கனகதாசன் போலும் ஆர்வலர்களால் அழகிய தவப்பள்ளிகள் பல கட்டப்பட்டுள்ளன ஆதலின் கரிகாலன் காலத்திலிருந்து, காவிரிப்பூம்பட்டினத்தில், பௌத்த சமய வளர்ச்சி, நனிமிக விரைவுடையதாகும். சோழப்பேரரசை அகற்றி விட்டு அரியணை ஏறிய அரசனும், பௌத்த சமயத்தின் பால் ஆர்வம் உடையவனும், பௌத்தத் துறவிகளுக்காகத் தவப்பள்ளிகள் நிறுவுவதை ஊக்கு வித்தவனும் ஆதல் வேண்டும். பூதமங்கலத்திலும் அது போலும் தவப்பள்ளிகள் காணப்படுகின்றன ஆதலின், விநய விநிச்சத்தில் அச்சுத விக்கந்தன் என அழைக்கப்படும் அவ்வரசன், சோழநாடு முழுவதிலும் கோலோச்சியதாகத் தெளிவர்கத் தெரிகிறது. திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள இன்றைய பூதலூரே, அப்பூத மங்கலம் ஆதல் வேண்டும். இச்சிற்றூரின் அணித்தாக வடக்கில் உள்ள பகுதிகள், புத்த தத்தரின் விளக்கங்களோடு ஒத்துள்ளன. தஞ்சை நாமக்கல் நெடுஞ்சாலையை அடுத்திருக்கும் இப்பகுதிகளில், பௌத்த, சமண சமயச் சார்புடைய பழம் பொருள்கள் அகழ்ந்து எடுக்கப் பட்டுள்ளன. அண்மைக்காலம் வரை, இப்பகுதி ஆரிய சமய விளக்க மையங்களைக் கொண்டிருந்தன.

அச்சுத விகண்டன், களப்பிரர் அரச இனத்தைச் சேர்ந்தவன். அந்நூலைப் பதிப்பித்த ஆசிரியர் களப்பிரர் அரச இனத்தைக் கேட்டறியாதவர்; கதம்ப இனத்தை அறிந்தவர் ஆதலின், களப்பிரர் என்பதற்குப் பதிலாகக் கதம்பர் என்பதையே பாடமாகக் கொண்டுள்ளார். ஆனால் கதம்பர்களோ, வெகுதொலைவில் உள்ள பனவாசேவை ஆண்டவர்; அவர்கள் பௌத்தர்களும் அல்லர். ஆய்வுக்குரிய இக்கால அளவில் களப்பர் இனத்துப் பேராசன் ஒருவன் ஆட்சி புரிந்தான் ஆதலாலும், களப்பன் என்ற தமிழ்ச் சொல், பாலி மொழியில் கலப்பஹ என ஆகும் ஆதலாலும், கலப்பஹா

என்ற பிறிதொரு பாடபேதச்சொல்லையே நான் கொண்டுள்ளேன்.

தமிழ் இலக்கியத்தில், பழைய களப்ப அரசர்களும், குறிப்பிடத்தக்க அண்மைக்காலம் வரை களப்ப மரபினரும் இருந்தமை பற்றிய குறிப்பு இருக்கிறது. பதின்மூன்றாம் நூற்றாண்டில், இக்காலச் சைவ சமய நெறிகண்ட மெய் கண்ட தேவரின் தந்தையார் அச்சுத களப்பாளர் என அழைக்கப்பட்டுள்ளார். இவ்வுண்மை, என் கருத்தைக் களப்பான இனத்தின் மீது போக்கிப் புத்ததத்தர் கூறும் அச்சுதகளப்பன், இந்தத் தமிழ் இனத்தைச் சார்ந்தவன் எனக் குறிப்பிடச் செய்தது.

தமிழ் நாவலர் சரிதையில் [அதிகாரம் 22-இல் தமிழ் நாவலர் வரலாறு குறித்துக் குறிப்பிட்டுள்ளேன். வரலாறு, சரிதை இரண்டும் ஒரு பொருள் குறித்த இருசொற்களாம் எனினும், தமிழ்நாவலர் சரிதை என்பதே அந்நூலின் வழக்கமான பெயராம்]. முதற்பாட்டு சேரனாலும், இரண்டாம் பாட்டு, சோழனாலும், ஏனைய இரண்டும் பாண்டியனாலும் பாடப்பெற்ற நான்கு வெண்பாக்கள் உள்ளன. அப்பாக்களின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் கொளுக்களின்படி, அம்மூவரும் அச்சுதகளப்பாளனால் விலங்கிடப்பட்ட வராவர். முதல்பாட்டு, "தினை விதைத்துப் பயிர் செய்தவர் முற்றங்களில் தினை உலரும்; செந்நெல் விளைத்துப் பயிர்செய்தார் முற்றங்களில் செந்நெல் உலரும்; போர்முரசும் சங்கும் ஒலிக்கும்; அச்சுதன் முற்றத்தில் பெரிய தேர்ப்படையுடையராகிய அச்சுதனின் பகையரசர் இருந்து உலர்வர்." என்கிறது.

"தினைவிளைத்தார் முற்றம் தினைஉணங்கும் ; செந்நெல்
தனைவிளைத்தார் முற்றம் அதுதானாம்-கனைசீர்
முரசுணங்கச் சங்கு உணங்கும் மூரித்தேர்த்தானை
அரசு உணங்கும் அச்சுதன் முற்றத்து."

சோழனால் பாடப்பெற்ற இரண்டாவது பாடல் இவ்வாறு கூறுகிறது; "அரசர்குல திலகனாகிய அச்சுதனுடைய

முற்றத்தில், அவன் பிறந்த நாள் விழா அன்று முரசுகள் அதிரக்கொட்டிவிடுவதால் எழும் ஓசையைக் காட்டிலும், அவன் பகை அரசர்களாம் பேரரசர்களின் உரிமைகளைத் திரும்பத் தந்து, அவர்களை நாட்டிற்குப் போக விடுவதற்கு முன்னர், அவர்களின் கால்களில் பண்டு இட்டிருந்த விலங்குகளை வெட்டி விடுவதால் எழும் பேரொலியே பெரிதாம்" என்கிறது.

"அரசகுலதிலகன், அச்சுதன் முற்றத்தில்
அரசர் அவதரித்த அந்நாள் - முரசுஅதிரக்
கொட்டிவிடும் ஓசையினும், கோவேந்தர் கால்தளையை
வெட்டிவிடும் ஓசைமிகும்."

பாண்டியன் பாடிய முதற்பாட்டு இவ்வாறு கூறுகிறது: "வாழ்க்கையில் குறையிலாதவர், உலகில் எங்கே இருக்கிறார்கள்: தன் மனைவியைப் பிரியவிட்டுக், கூரியவேல் உடையோனாகிய இராமனே, வாலியின் தம்பியாம் சுக்கிரிவன் மலைக்கு முன்பே, ஓர் ஆறு மாதம் முழுவதும் காத்திருந்தான் ; போர் எனக்கேட்டுப் பூரிக்கும் படையும் அசையும் மாலையும் உடையோனாகிய அச்சுதன் முற்றத்தின் முன் நான் காத்துக் கிடக்கின்றேன்."

"குறையுளார் எங்கிரார்? கூர்வேல் இராமன்
நிறையாறு திங்கள் இருந்தான் - முறைமையால்
ஆலிக்கும் தானை அலங்குதார் அச்சுதன்முன்
வாலிக்கு இளையான் வரை."

இப்பாட்டில், பாண்டியன், தன்னை இராமனாகவும், அச்சுதனை, இராமனை வழிபடும் குரங்கினத்தவனாகவும் கூறிவிடவே, கோபங்கொண்ட அச்சுதன், பாண்டியன் கால் விலங்கை இரட்டிப்பாக்கிவிட்டான். ஆகவே, பாண்டியன் மேலும் ஒரு பாட்டு பாடவேண்டி நேர்ந்தது அது :

"தென் தில்லைக்கு உரியோனாகிய அச்சுதா ! உன் முற்றத்தே முழங்கும் முரசொலி கேட்ட மேலைத்திசை

வாழ்வார், அது கீழ்க்கடல் ஒலியோ எனக்கொண்டு அஞ்சி ஆரவாரித்தனர்- கீழ்த்திசை வாழ்வார் அது மேலைக்கடல் ஒலியோ எனக்கொண்டு அஞ்சி ஆரவாரித்தனர்." என்கிறது.

"குடகர் குணகடல் என்று ஆர்த்தார்; குடநர்க்கு
இடவர் குடகடல் என்று ஆர்த்தார் - வடகடல்
தென்கடல் என்று ஆர்த்தார் தென்தில்லை அச்சுதா!
நின்தன்
முன் கடை நிற்றார்க்கும் முரசு"

சேர, சோழ, பாண்டியராகிய இவ்வரசர்கள் எல்லாம் திரண்டிருந்த தென்தில்லை, ஆரிய மயமாக்கப்பட்ட அந்நாள் தொட்டுத் தங்கள் முடிசூட்டு விழாவினைச் சோழர்கள் மேற்கொள்ளும் இடம் சிதம்பரமே ஆம். சிதம்பரம் பெரிய கோயில், அக்காலத்தில் தெய்வத்தன்மைக்காகப்புகழ் பெற்று விளங்கியதால், அச்சுதனும், அவ்வழக்கத்தை மேற் கொண்டான் போலும்.

பாண்டியர்கள், கி. பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் மீண்டும் செல்வாக்கு பெற்றுவிட்டனர் ஆதலாலும், பல்லவர்கள், அந்நூற்றாண்டின் இடைக்காலத்தில் காஞ்சியைக் கைப்பற்றிக் கொண்டனர் ஆதலாலும், தமிழ் நாடு முழுமைக்கும் பேரரசனான ஒரு களப்பாளனுக்குக் கி. பி. 450க்கும் 550க்கும் இடைப்பட்ட காலத்தில்தான் இடம் காண முடியும். ஆகவே, இந்த அச்சுத களப்பாளன், புத்ததத்தர் கூறும் அச்சுத் களப்பாளனே ஆதல் வேண்டும். ஒரே அரசன் சைவ, பௌத்த, சமண சமயங்களைப் புரந்திருக்க முடியாது என்றும், தில்லைச் சிவன் கோயிலில் முடிசூட்டு விழா மேற்கொண்டு, சோழநாட்டில் புத்த விகாரங்களை ஆதரிப்பதும், மதுரையில் திராவிட சமண சங்கத்தை ஆதரிப்பதும் செய்யஇயலாது என்றும் கூறும் தடை, மதிக்கத்தக்க தடையாகாது. தென்இந்தியாவில், ஆரிய சமயங்கள் பரவத்தொடங்கிய பழங்காலத்தில், அவர் களிடையே புறச்சமயவெறுப்பு சிறிதளவே குடி கொண்டிருந்தது. புறச்சமய வெறுப்பு முதன்முதலில்

தலைதூக்கிய கி. பி. 600க்குப் பிறகே அவர்கள் சண்டை தொடங்கலாயிற்று. மகேந்திர விக்ரம பல்லவன் சமணர்களுக்கும், சிவனுக்கும், விஷ்ணுவுக்கும், திரிமூர்த்திக்கும் கற்கோயில்கள் கட்டினான். அவனுடைய காலத்தில்தான். சமணர்களுக்கும் சைவர்களுக்கும் இடையில் எழுந்த முதல்வாய்ச்சண்டையினைக் கேட்கிறோம். ஒரு நூற்றாண்டிற்குப் பின்னர், வைஷ்ணவர்கள், சைவர்களை எள்ளி நகையாடுவதையும் சைவர்கள், விஷ்ணுவை மதிக்காது பழிப்பதையும் நாம் காணுகிறோம். ஆனால் கி. பி. 600க்கு முன்னர், ஆரியச் சமயநெறி நிற்போர், செல்வாக்கும் பெறத்தொடங்கியபோது, அவர்கள் ஒருவரையொருவர் எதிர்ப்பதை நாம் கேட்கவில்லை. ஆகவே, அச்சுதகளப் பாலனும், அச்சுதகளப்பனும் ஒருவரே என எடுத்துக் கொள்ளலாம்.

23வது அதிகாரத்தில் ஆராயப் பெற்ற கேள்விக்குடி செப்பேடு, களப்ரன் அதாவது, களப்ரா வழிவந்தவன் என்ற கொடுங்கோல் அரசன் ஒருவன் பல அதிராஜாக்களையும், பழையதமிழ் அரசர்களையும் வென்று, ஏனைய தமிழ் மாவட்டங்கள் அல்லாமல் மதுரையிலும் தன் ஆட்சியை நிறுவினான் எனக்கூறுகிறது. பாலிமொழி, "களப்ஹ", சமஸ்கிருதத்தில் "கலப்ர" என முறையாகத் திரியும் ஆதலின், வேள்விக்குடிச்செப்பேட்டின் களப்ர அரசன், அச்சுத களப்பன், மற்றும் அச்சுத களப்பாளனே ஆவன் என்பது தானே பெறப்படும். தமிழ்நாட்டினைத் தன் ஆட்சிக் கீழ்க் கொண்டு வருவது முழுமை பெற்றுவிட்டது எனக் கூறப்படும் நிலையிருந்தாலும், பழைய தமிழ் அரச இனங்கள், வேரொடு கல்லி எறியப்பட்டு விடவில்லை. பாண்டியர்கள், கடுங்கோன் ஆட்சியின் கீழ், கி. பி. 600-இல், தம் பெருமையை மீண்டும் நிலநாட்டிக் கொண்டனர்; சேர, சோழ, பாண்டியர் மற்றும் களப்பிரர், இரண்டு நூற்றாண்டு வரை, பல்வேறு கல்வெட்டுகளிலும், செப்புப்பட்டயங்களிலும், முதலில் பல்லவரின் பகைவர்களாகவும், பின்னர்ச் சாளுக்கியர் பகைவர்களாகவும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மூவேந்தர்களும், களப்பாளரைத் தமிழிலேயே பாடிப் பராட்டியுள்ளமையால் உறுதிப்படுவதால், களப்பாளர்கள், தமிழ்க் குறுநிலத் தலைவர்களே ஆவர். அவர்கள், ஆரிய சமயங்களைப் பேணிப்புரந்தமையால், அவர்கள், அறவே ஆரிய மயமாக்கப் பட்டுவிட்டனர். தமிழ் நாகரிகத்தைப் பல நூறு ஆண்டுகாலமாகச் சுற்றிவளைத்துக் கிடந்த, ஆரிய நாகரிகம், பழையதமிழ் மரபுகளைப் பேணிக்காத்துவந்த, பழந்தமிழ் அரச இனம் மூன்றும், அச்சுதன் ஆற்றலின் முன் நிலைகுலைந்து போன அந்நாள் தொட்டுத், தமிழர் சிந்தனைச் செல்வங்களை வியத்தகுநிலையில் கைப்பற்றிக் கொண்டது.

களப்பிரர், கள்ளரா?

திருவாளர் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார், களப்பிரர், பழந்தமிழ்ப்பாக்களில் இடம் பெற்றிருக்கும் கள்ளர் ஆவர் என்ற கொள்கைக்குத் துணை செய்கிறார். "கள்ளர்" என்பதற்குக் "கள்வர்" என்ற மாற்றுவடிவம் உண்டு; "களவர்" என்பது, பழைய ஓலைச்சுவடிகளில் "ள" என்பதன் கண் உள்ள புள்ளி இடப்பெறாமல் "களவர்" என ஆதலும் உண்டு. "களவர்" என்ற அது, "களபர்" "களபா" "களப்ஹர" என்றும் இறுதியாக "களப்ஹ்ர" என ஆகும். ஆனால், "களப்ஹ" என்ற சொல் பாலிமொழியிலிருந்து கண்டு கொண்டோம் ஆதலின், இதற்குத் தமிழில் சொல்லாக்க விதிகளைத் தேடி அலையத்தேவையில்லை. அது மட்டும் அல்லாமல் பண்டைக் காலத்தில், கள்வர், குறுநிலத் தலைவர்களுக்கு மேலாவர் என்பதற்கான அகச்சான்று எதுவும் இல்லை.

"கலப்பாளர்" என்ற சொல்குறித்து ஒரு வார்த்தை :

மெய்கண்ட தேவரின் தந்தையார் அல்லாமல் மேலும் பல களப்பாளர்கள், தமிழ்இலக்கியங்களில் காண்ப்படுகின்றனர். நெடுமாறன் கிழான் என்ற ஒரு களப்பான அரசன், பதினாறு ஆண்டுகளுக்கு முன்னர்த் தாம் கண்டு பிடித்த கல்வெட்டு ஒன்றிலிருந்து திரு. எஸ். சோமசுந்தர தேசிகர் அவர்களால், ம் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளான். [செந்தமிழ்

பகுதி : 12 பக்கம் : 268]. அறுபத்திமூன்று சைவ நாயன் மார்களில் ஒருவரான கூற்றுவநாயனார் ஒரு களப்பாளன் எனத் தம்முடைய திருத்தொண்டர் திருவந்தாதியில், நம்பியாண்டார் நம்பி அவர்களால் [பத்தாம் நூற்றாண்டு] அழைக்கப்பட்டுள்ளார். [செய்யுள் 47; வரி 4]. இவன் சேக்கிழாரால் [பதினொன்றாம் நூற்றாண்டு] "களந்தை முதல்வனார்" என்றும் "களந்தை வேந்தர்" என்றும் அழைக்கப்பட்டுள்ளான் [பெரியபுராணம்; கூற்றுவநாயனார் புராணம்] உமாபதி சிவம் அவர்களின் திருத்தொண்டர் புராணசாரத்திலும் அவ்வாறே குறிப்பிடப்பட்டுள்ளான். இவற்றிலிருந்து களப்பாளர், தொடக்க காலத்தில், தஞ்சை மாவட்டத்துப் புகழ் பெற்ற கோயில் ஊராகிய களந்தை என்ற ஊரைச்சேர்ந்தவராவர் என உணர்ந்த கொள்ளலாம். "ஆளர்" என்ற விகுதி, பிராமணர்களைக் குறிக்கும் தமிழ்ச்சொல்லாகிய அந்தணாளர் என்பதில் வரும் விகுதி போன்றதே ஆம். இச்சொல்லாக்கம் குறித்து ஒன்றும் ஏற்றுக் கொள்ளக் கூடாததான நகைப்பூட்டவல்ல சொல்லாக் கங்களை, உரையாசிரியர்கள் கண்டுபிடித்துள்ளனர். களப்பாளர் என்பது, பாலியில் "களப்ஹ" என்றும் தென்னாட்டுச் சமஸ்கிருதத்தில் "களப்ஹர" என்றும் உருவுதிரியும் "களப்ப" என்பதன் மறுவடிவமே ஆம்.

○ ○ ○



திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்

தலைமை நிலையம்:

154, டி.டி.கே. சாலை, ஆள்வார்பேட்டை, சென்னை – 18.

கிளை நிலையங்கள்:

79, பிரகாசம் சாலை, (பிராடுவே) சென்னை – 108.
91, கீழைத் தேர்த் தெரு, திருநெல்வேலி – 6.
18, ராஜவீதி, கோயமுத்தூர் – 1
28, நகர் உயர் பள்ளிச் சாலை, கும்பகோணம் – 1.
24, நந்திகோயில் தெரு, திருச்சி – 2
36, செர்ரி ரோடு, சேலம் – 1.
70/71, தானப்ப முதலி தெரு, மதுரை –